உ

கணபதி துணை

கொங்குவேளிர் இயற்றிய

பெருங்கதை மூலம்

இது

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரால்

பரிசோதித்து

நூதனமாக எழுதிய கதைச்சுருக்கம் அபிதானவிளக்கம்

அரும்பதவகராதி என்பவற்றோடு

சென்னை:

கேசரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

முதற் பதிப்பு

யுவஹு மார்கழிமீ

1935

Copyright Registered]

[விலை ரூ. 3—0—0

2/006
12-10-93

ஸ்ரீ

இப்புத்தகத்தில் அடங்கியவை.

1.	முகவுரை	vii
2.	பிழையும் திருத்தமும்	viii
3.	அபிதான விளக்கம்	1 - 24
4.	கதைச் சுருக்கம்	25 - 36
5.	**பெருங்கதை மூலம்** ...	க - ருருஉ
	முதலாவது உஞ்சைக்காண்டம்	க - களகூ

*   *   *   *   *

(நஉ) கரடு பெயர்த்தது க
(நந) மாலைப் புலம்பல் ரு
(நச) யாழ்கைவைத்தது கஉ
(நரு) நருமதை சம்பந்தம் உ௦
(நசு) சாங்கியத்தாயுரை உஅ
(நஎ) விழாக்கொண்டது ச௦
(நஅ) விழாவாத்திரை ரு௦
(நகூ) புனற்பாற்பட்டது சுஉ
(ச௦) உவந்தவை காட்டல் சுச
(சக) நீராட்டரவம் எஎ
(சஉ) நங்கை நீராடியது அஉ
(சந) ஊர் தீயிட்டது கூக
(சச) பிடியேற்றியது கூஎ
(சரு) படைதலைக் கொண்டது க௦உ
(சசு) உழைச்சனவிலாவணை க௦சு
(சஎ) உரிமை விலாவணை கககு
(சஅ) மருதநிலங் கடந்தது கஉசு
(சகூ) முல்லைநிலங்கடந்தது கநஉ
(ரு௦) குறிஞ்சிநிலங் கடந்தது கநசு
(ருக) நருமதை கடந்தது கநஅ
(ருஉ) பாலைநிலங் கடந்தது கசக
(ருந) பிடி வீழ்ந்தது கசரு
(ருச) வயந்தகனகன்றது கருஉ
(ருரு) சவரர் புளிஞர் வளைந்தது கருசு
(ருசு) வென்றி யெய்தியது கசுக
(ருஎ) படைவீடு கஎக
(ருஅ) சயந்தி புக்கது கஎரு

இரண்டாவது இலாவாண காண்டம் .... ௧௮௦ - ௨௮௯

(௧) நகர் கண்டது ௧௮௦
(௨) கடிக் கட்டிலே ௧௮௩
(௩) கட்டிலேற்றியது ௧௯௧
(௪) ஆருந் திங்கள் உடன்மயிர் களைந்தது ௧௯௯
(௫) மண்ணுநீராட்டியது ௨௦௩
(௬) தெய்வச் சிறப்பு ௨௦௯
(௭) நகர்வலங்கொண்டது ௨௧௫
(௮) யூகி போதரவு ௨௨௦
(௯) யூகி சாக்காடு ௨௨௬
(௧௦) யூகிக்கு விலாவித்தது ௨௩௫
(௧௧) அவலந் தீர்ந்தது ௨௪௧
(௧௨) மாசன மகிழ்ந்தது ௨௪௭
(௧௩) குறிக்கோட் கேட்டது ௨௫௨
(௧௪) உண்டாட்டு ௨௫௫
(௧௫) விரிசிகைமாலைசூட்டு ௨௫௭
(௧௬) ஊடலுணர்த்தியது ௨௬௨
(௧௭) தேவியைப்பிரித்தது ௨௬௬
(௧௮) கோயில் வேவு ௨௭௩
(௧௯) தேவிக்கு விலாவித்தது ௨௭௭
(௨௦) சண்பையுள் ஒடுங்கியது ௨௮௫

மூன்றாவது மகத காண்டம் .... ௨௯௦ - ௪௨௩

(௧) யாத்திரைபோகியது ௨௯௦
(௨) மகதநாடு புக்கது ௨௯௭
(௩) இராசகிரியம் புக்கது ௨௯௯
(௪) புறத்தொடுங்கியது ௩௦௩
(௫) பதுமாபதி போந்தது ௩௦௭
(௬) பதுமாபதியைக் கண்டது ௩௧௧
(௭) கண்ணுறு கலக்கம் ௩௧௮
(௮) பாங்கர்க் குரைத்தது ௩௨௧
(௯) கண்ணி தடுமாறியது ௩௨௬
(௧௦) புணர்வு வலித்தது ௩௩௨
(௧௨) அமாத்தியர் ஒடுங்கியது ௩௩௫
(௧௩) கோயில் ஒடுங்கியது ௩௩௮
(௧௪) நலனாராய்ச்சி ௩௪௨
(௧௫) யாழ்நலந் தெரிந்தது ௩௫௧
(௧௬) பதுமாபதியைப் பிரிந்தது ௩௫௪
(௧௭) இரவெழுந்தது ௩௫௫
(௧௮) தருசகனொடு கூடியது ௩௬௪
(௧௯) படைதலைக் கொண்டது ௩௬௮
(௨௦) சங்கமன்னர் உடைந்தது ௩௭௬
(௨௧) மகட்கொடை வலித்தது ௩௮௨
(௨௨) பதுமாபதி வதுவை ௩௮௬
(௨௩) படையெழுச்சி ௩௯௬
(௨௪) மேல்வீழ் வலித்தது ௩௯௭
(௨௫) அரசமைச்சு ௪௦௬
(௨௬) பாஞ்சாலராயன் போதரவு ௪௧௨
(௨௭) பறைவிட்டது ௪௧௬

நான்காவது வத்தவ காண்டம் .... ௪௨௪ - ௫௦௭

(௧) கோற்றங் கொண்டது ௪௨௪
(௨) நாடு பாயிற்று ௪௨௬
(௩) யாழ்பெற்றது ௪௨௯
(௪) உருமண்ணுவா வந்தது ௪௩௪
(௫) கணு விறுத்தது ௪௩௮
(௬) பதுமாபதியை வஞ்சித்தது ௪௪௩
(௭) வாசவதத்தை வந்தது ௪௪௬
(௮) தேவியைத் தெருட்டியது ௪௫௪
(௯) விருத்தி வகுத்தது ௪௫௮
(௧௦) பிரச்சோதனன் தூதுவிட்டது ௪௬௧
(௧௧) பிரச்சோதனற்குப் பண்ணிகாரம் விட்டது ௪௬௮
(௧௨) பந்தடி கண்டது ௪௭௧
(௧௩) முகவெழுத்துக் காதை ௪௮௦
(௧௪) மணம்படு காதை ௪௯௦
(௧௫) விரிசிகை வரவு குறித்தது ௪௯௭
(௧௬) விரிசிகை போத்தரவு ௫௦௨
(௧௭) விரிசிகை வதுவை ௫௦௩

ஐந்தாவது நரவாண காண்டம் ௫௦௮ ௫௫௨

(௧) வயாக்கேட்டது ௫௦௮
(௨) இயக்கன் வந்தது ௫௧௬
(௩) இயக்கன் போனது ௫௧௮
(௪) வயாத்தீர்ந்தது ௫௨௬
(௫) பத்திராபதி உருவு காட்டியது ௫௩௧
(௬) நரவாணதத்தன் பிறந்தது ௫௩௩
(௭) யூகி பிரச்சோதனனைக் கண்டு வந்தது ௫௩௮
(௮) மதனமஞ்சிகை வதுவை ௫௪௪
(௯) மதனமஞ்சிகை பிரிவு ௫௪௯

* * *

6. செய்யுட்களின் முதற்குறிப்பகராதி ௫௫௩
7. அரும்பத அகராதி .... ௫௫௪ - ௫௮௮

21006

விளம்பரம்.

	ரூ. அ. பை.
பெருங்கதை மூலமும் குறிப்புரை முதலியனவும் (இரண்டாம் பதிப்பு) ...	7—0—0
டிஷ இலாவாண காண்டம் ...	1—8—0
பெருங்கதையின் சரித்திரத் தலைவனாகிய உதயணன் சரித்திரச் சுருக்கம் ...	1—0—0
உதயண குமார காவியம்	0—6—0

முகவுரை

பெருங்கதையென்பது பெருங்கவிஞராகிய கொங்குவேளிரென்பவரால் இயற்றப்பெற்ற ஒரு தொடர்நிலைச் செய்யுள்; குருகுலத்திற் பிறந்தவனும் கௌசாம்பி நகரத்தரசனுமான சதானிகனுடைய புதல்வன் உதயணனது சரித்திரத்தை விரித்துக் கூறுவது; சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்தது; அருங்கலை விநோதர்களுக்கு நல்விருந்தாகிப் பலவகையான சுவைகளைப் புலப்படுத்தி அவர்கள் உள்ளத்தைப் பிணிக்கும் தன்மையையுடையது. பண்டைக் காலத்திய அருமையான பல செய்திகள் இந்நூலால் தெரியவரும்.

இது கொங்குவேண்மாக்கதையெனவும் கதையெனவும் உதயணன்கதையெனவும் வழங்கும். இதற்கு முதனூல் கங்க தேசத்தரசனாகிய **துர்விநீத**னென்பவனால் வடமொழியில் இயற்றப்பெற்ற **பிருகத்கதா** என்று தெரியவருகிறது.

உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் என்னும் ஆறு பேருறுப்புக்களும் ஒவ்வொரு காண்டத்திற்கும் பல சிற்றுறுப்புக்களும் இதில் உள்ளன. சிற்றுறுப்புக்களெல்லாம் காதையென வழங்கப்படும். அவையாவும் நிலைமண்டில ஆசிரியப்பாக்களாகும்.

இந்நூலில் இப்பொழுது கிடைத்துள்ள பகுதிகள் உஞ்சைக் காண்டத்தின் ௩௨-ஆம் காதைமுதல் நரவாண காண்டத்தில் ௯-ஆம் காதை வரையில் உள்ளனவே. இவற்றுள்ளும் முதலில்லாதன மூன்று; இறுதியில்லாதன மூன்று; முற்றுமில்லாததொன்று.

இந்நூலின் மூலம் மட்டும் தனியே பதிப்பிக்கப்பட்டால் அடிக்கடி படித்து இன்புறலாமென்று சில அன்பர்கள் விரும்பியபடி இதனை அபிதான விளக்கம், கதைச் சுருக்கம், அரும்பத அகராதி முதலியவற்றுடன் தனியே வெளியிடலானேன்.

பெருங்கதையைப்பற்றியும், அதன் நூலாசிரியரைப்பற்றியும் உள்ள விரிவான செய்திகள் மூலமும் குறிப்புரை முதலியனவும் அடங்கிய பெரிய புத்தகத்திற் காணலாம்.

'**தியாகராஜ விலாஸம்**'
திருவேட்டீசுவரன்பேட்டை,
30—12—35

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
உக	16	வாசவத்தையின் ...	வாசவதத்தையின்
கரு	5	கக்சினர் ...	கச்சினர்
அரு	5	கொடுத்த ...	தொடுத்த
கஉஎ	1	உஉஎ ...	கஉஎ
உ0எ	33	நாமரவளியுங் ...	நாமாவளியுங்
உஎஉ	8	யாக்கி ...	யரக்கி
உஅரு	25	முதற்புகுத்தலிற் ...	முதறபுத்தலிற்
௩கக	29	யுரூஅத் ...	யரூஅத்
௩௩க	25	புண்கண் ...	புன்கண்
௩ச௩	31	யிகற்குரல் ...	கயிற் குரல்
ருகஅ	29	கிளையின் மன்னர் ...	கிளையன் மன்னர்

உ

அபிதான விளக்கம்.

(அபிதானம்—பெயர்.)

அங்கநாடு :—விசயவரனென்னும் அரசனுடைய நாடு.

அச்சுவப்பெருமகன் :—கேகயநாட்டின் அரசன்; குற்றமற்ற புகழை யுடையவன்; முடியுடைமன்னன்; மிக்க வீரன்; பதுமாபதியை மணஞ்செய்யவிரும்பிக் கொடுத்தற்குரிய பரிச முதலியவற்றுடன்வந்து அவள் தமையனாகிய தருசகனைக்கண்டு தன் கருத்தைக்கூறி அவனது உடன்பாட்டைப்பெற்று உடனிருந்த காலத்தில் அவனோடு போர்செய்தற்கு வந்த பகைவருடன் யுத்தம்செய்தற்கு வலிந்துபோய்ப் பொருது எலிச்செவியரசனாற் கொல்லப்பட்டவன்.

அடவி நன்னாடு ஐம்பது:—இடவகனுக்குச் சீவிதமாக உதயணனாற் கொடுக்கப்பட்ட ஐம்பது நாடுகள்.

அத்தினபுரத்தரசர் :—தருசகனோடு போர்செய்ய வந்தவர்களுள் ஒருவனான எலிச்செவி யரசனுடைய முன்னோர்.

அமராபதி :—அமராவதி; இந்திரனது நகர்.

அமரிகை :—சாலிநாட்டிலிருந்த ஒரு கணிகை.

அயோத்தியரசன் :—தருசகனோடு போர் செய்தற்கு வந்து தோல்வி யுற்றுச் சென்ற அரசர்களுள் ஒருவன்.

அரிசிகன் :—உருமண்ணுவாவின் புதல்வன்.

அரிமான் :—தருசகனோடு பகைமைகொண்டொழுகிய அரசர்களுள் [ஒருவன்.

அருஞ்சுகன் :—உச்சையினிலிருந்த ஓர் அந்தணப் பிரமசாரி; வேத முதலியவற்றை ஓதியுணர்ந்தவன்; யாழ்வகையையும், பிறநூல்களையும் நன்கு அறிந்தவன்; கோடபதியென்னும் யாழைக் கண்டெடுத்து உதயணனிடம் கொடுத்தவன்.

அருட்டநகர் :—உச்சைனிக்கும் சயந்திநகருக்கும் இடையே யுள்ளது.

அவந்தி :—பிரச்சோதன அரசனது நாடு; இதன் தலைநகர் உச்சைனி.

அனங்கவிலாசனி :—கந்தருவபுரத்து அரசனான நீலவேகனது புத்திரி; நரவாணதத்தனால் மணஞ்செய்து கொள்ளப்பட்டாள்.

ஆதித்தியதருமன் :—ஒரு வீரன்.

ஆப்பியாயினி :—பதுமையின் பார்ப்பனத்தோழி; அவளோடு ஒருங்கு வளர்ந்தவள்; அவள் தனியே ஆலோசித்தற்குரிய உயிர்த் துணைவி; தோழமைக்குரிய இயல்புகளிற் சிறந்தவள்; இவளாற் பதுமையடைந்த பயன்கள் பல; உதயணனுடைய பார்ப்பனத் தோழனாகிய இசைச்சனென்பவனால் இவள் மணஞ்செய்துகொள்ளப்பட்டாள்; ஒழுக்கினும் குலத்தினும் விழுப்பமிக்கவள்; இப்பெயர் யாப்பியாயினியெனவும் வழங்கும்.

ஆப்பியை :—சாலங்காயனுடைய தங்கை; பிரச்சோதன அரசன் விரும்பியபடி யூகிக்கு மணஞ் செய்விக்கப்பட்டாள். யாப்பியை யெனவும் வழங்கப்படுவாள்.

ஆரியை :—பதுமையின் தோழி; அவளுடைய மனக்குறிப்பறிந்தே ஒழுகுபவள்; மிக்க மேன்மையையுடையவள்; பந்தடித்தலில் மிக்க ஆற்றல் வாய்ந்தவள்.

ஆருணியரசன் :—பாஞ்சாலதேயத்தரசன்; மிக்க பராக்கிரமமும் வீரியமுமுள்ள சேனையையுடையவன்; கோசல தேயத்தரசனை வென்று அவனது ஊரையழித்து அவன் மகள் வாசவதத்தை முதலியவர்களைப் பிடித்துவந்து தன் உரிமைமகளிர்க்குத் தாதியர்களாக அமைத்தனன்; இவனுக்குக் கார்த்தவீரியனை உவமை கூறியிருக்கின்றனர்; இவன் பட்டத்துயானைக்கு மந்தரமென்று பெயர்; ஏயர்குலத்தாரோடு குலப்பகைஞனாதலின், அக்குல அரசாட்சிக்கு உரியனான உதயணன் சிறைப்பட்டபொழுது, பெரும்படையோடு சென்று கோசம்பி நகரத்தைக் கைப்பற்றி முரசறைவித்துத் தன் கொற்றத்தை யாவர்க்கும் தெரிவித்து அந்நகரையே தனது இராசதானியாகக்கொண்டு பின்பு ஆட்சிபுரிந்தனன்; காளமயிடனென்னும் ஒற்றனாற் பகைப்புலத்தே நிகழும் செய்திகளை அறிந்து வந்தவன்; பூரணகுண்டலனென்பவன் இவனுக்கு முக்கியமான மந்திரி; பின்பு உதயணன் வந்துசெய்த பெரும்போரில் அவனாற் கொல்லப்பட்டான்; அவனால் வெட்டுண்டபோது இவன்பால் அச்சக்குறிகள் சிறிதும் நிகழவேயில்லை; இவன் பாஞ்சாலராசன், பாஞ்சாலராயனென்றும் வழங்கப்படுவான்.

ஆலங்கானம் :—இப்பெயருடையவை இரண்டு; ஒன்று விபுலகிரியின் பக்கத்தில் மிருகாவதியின் தந்தை தவஞ்செய்துகொண்டிருந்த இடம்; மற்றொன்று, பூக்கொய்தற்குவந்த பத்திராபதி

யென்னுந் தெய்வமகள் யானையின் சேர்க்கையைக்கண்டு மனம் வேறுபட்டுப் பெண்யானையாகப் பிறக்கும்படி குபேரனாற் சாபம் பெற்ற இடம்; இது விந்தமலையின் பக்கத்தே நருமதையாற்றங் கரையிலுள்ளது.

இசைச்சன் :—உதயணனுடைய பார்ப்பனத்தோழன்; அவனுடைய அமைச்சனாகவுங் கூறப்படுவன்; இளமையில் இருமுதுகுரவரையுமிழந்தோன்; வாசவதத்தையையும் யூகியையுமிழந்ததனால் மிகுந்த கவலையுற்று மெலிந்த உதயணனைத் தேற்றி அவனை வேற்றுவடிவங் கொள்வித்து மற்றைத்தோழர்களோடு இராசகிரியநகர்க்கு அழைத்துச் சென்றவன்; சென்றவிடத்துக்காமன் கோட்டத்தின் வாயிலிற்காணப்பட்ட பதுமாபதி தன்னை விரும்பினாளென்று வேட்கையுற்ற உதயணனுக்கு மகததேயத்துமகளிரது நிறையுடைமையைக்கூறி அவனது காமவேகத்தைத் தணிவித்தவன்; அவன் பதுமாபதியின் கன்னிமாடத்தில் வேற்றுவடிவங்கொண்டு மறைந்திருந்த காலத்தில் மற்றத் தோழர்களோடு தானும் வேற்றுவடிவங்கொண்டு அயலிடத்தேயிருந்து அவனைப் பாதுகாத்துவந்தான்; தருசகனோடு பெரும்போர் புரிதற்குவந்த பகைவரை எதிர்த்தற்குச் சென்ற உதயணனுக்குத் துணையாகச் சென்றவன்; ஆப்பியாயினியை மணஞ்செய்து கொண்டவன்; மிக்க வருவாயையுடைய பல ஊர்களைச் சீவிதமாக உதயணன்பாற் பெற்றவன்.

இடவகன் :—உதயணனுடைய மந்திரிகளில் ஒருவன்; அவனுடைய உயிர்த்தோழன்; சூழ்ச்சி, வாய்மை, நன்றியறிவு, வீரம் இவை இவனுடைய சிறப்புக்குணங்கள்; மனங்குளிர்ந்து உதயணனாற் பாராட்டப்பெற்ற பெருமை வாய்ந்தவன்; உஞ்சைநகரத்திலிருந்து பிறர் அறியாதபடி நேரே தன்பால் தனியேவந்து வினவிய யூகிக்கு உதயணன் செய்தி முழுவதையுங்கூறி மேலே ஆகவேண்டியவற்றை அவன் ஆராய்ந்து செய்யும்படி தூண்டியவன்; தருசகன் பொருட்டுப் பகைவரோடு போர்செய்தற்கு உதயணன் சென்றபொழுது அவனுக்குத் துணையாகப் பலவீரர்களுடன் சென்று போர் செய்து வெற்றியடையும்படி செய்தவன்; உதயணனால் இவன் சீவிதமாகப் பெற்றவை புட்பகமென்னும் நகரமும் சிறுநாடுகள் ஐம்பதும் பிறவருவாய்களும்; இவன் புட்பகத்தையே தலைநகராக்கி அரசாட்சி செய்து வந்தவன்; அழைத்தபொழுதுசென்று உதயணனுக்கு வேண்டியவைகளைச்

செய்து வருபவனாக இருந்தான்; பலதேயங்களையும் எளிதிற் பார்த்து வருதற்கு வாசவதத்தையோடு உதயணன் ஏறிச் சென்ற விமானத்திற் சென்றவர்களில் இவனும் ஒருவன்; இவன் பெயர் இடபகன் எனவும் வழங்கும்.

இரத்தினபுரம்:—காந்தாரநாட்டிலுள்ளதொரு நகரம்.

இராசகிரியம்:—புகழ்பெற்றதும் மிகப் பழமையானதுமான ஒரு பெரிய நகரம்; பலவகை நுகர்ச்சிகளையுடைமையாலும் அச்சத்தை விளைவித்தலாலும் பவணலோகத்தையும் செல்வமிகுதியால் அமராவதியையும் ஒப்பது; மகதநாட்டின் தலைநகர்; இதன்புறத்தே யவனச்சேரிகள் நூறும் எறிபடைப்பாடிகள் நூற்றறுபதும் தமிழவீரர்களின் சேரிகள் ஆயிரமும் கொல்லர் சேரிகள் பலவும் மிலேச்சச்சேரிகள் பலவும் சித்திரசாலைகள் முதலிய பலவகையிடங்களும் தண்ணீர்ப்பந்தல் முதலிய பல தருமத்தானங்களும் பலவகைத் தேவாலயங்களும் இருந்தன; அழகிய அகழிகளாலும் பல உறுப்புக்கள் வாய்ந்த மதில்களாலும் சூழப்பெற்ற இதன் அகநகரில் பெரும்படைச்சேரி, போகச்சேரி, உழவர்சேரி, வணிகர்சேரி, அந்தணர்சேரி, அமைச்சர்சேரி முதலியன அமைந்த வீதிகள் பலவற்றாற் சூழப்பெற்று இடையேவிளங்கும் இராசமாளிகை, ஒரு தாமரை மலரிற் பலவகை யிதழ்கள் சூழப்பெற்ற பூம்பொகுட்டைப்போல விளங்கியது; இதனரசன் தருசகனென்பவன்; உதயணன் பார்ப்பனப்பிரமசாரி வடிவங்கொண்டு தோழர் முதலியவர்களுடன் சில மாதங்கள் மறைந்திருந்து தருசகனுக்கு உதவிசெய்து பின்பு அவனுடைய நட்பைப் பெற்று அவன் தங்கையாகிய பதுமையை மணந்து சிலநாள் இதில் தங்கியிருந்தனன்; இஃது இராசகிரியெனவும் வழங்கும்.

இராசனை:—பதுமையின்தோழி; மிக்க அழகுடையவள்; உதயணனது விருப்பின்படி இவளை உருமண்ணுவா மணஞ்செய்துகொண்டான்; பந்தாட்டத்தில் தேர்ச்சியுள்ளவள்.

இலாமயன்:—ஓரந்தணன்; இனியமொழியையுடையவன். மந்திர வித்தையிற் சிறந்தவன்; உதயணனுக்கு இவன்பால் நன்கு மதிப்புண்டு; இவனிருந்த இடம் காளவனமென்பது; "வாசவதத்தை தீக்கிரையாயினளே! இனி யாது செய்வேம்" என்று மிக்க வருத்தமடைந்து செயலற்றிருந்த உதயணன் இவனிருந்த இடமும் தீக்கிரையாயிற்றென்று தோழர் கூறினமையால்

எந்தப்பொருளுக்கும் அழிவுண்டு என்பதையறிந்து சிறிது ஆறுதலையடைந்தான்.

இலாவாணகம்:—இஃது உதயணனுக்குரிய பெரியநகர்களுள் ஒன்று; பகைவர் வருதற்கு மிக அஞ்சும் பேரரண்கள் முதலியவற்றையும் இடையே மிக அழகிய ஓர் அரண்மனையையும் உடையது; இதன்பக்கத்தே பலவகைவளமுள்ள ஒருமலையுண்டு; அதன் சாரல் மிக்க இன்பம் பயப்பதாக இருந்தது; உண்டாட்டுக்குரிய பலவகைமரங்கள் கொடிகளையுடைய பூஞ்சோலைகளும் சுனைமுதலிய நீர்நிலைகளும் படமாடமுதலியன அமைத்தற்குரிய இடவிசேடங்களும் இச்சாரலில் இருந்தன; முனிவராச்சிரமங்களும் தேவாலயங்களும் மேற்கூறிய சோலைகளில் உண்டு; தவஞ்செய்துவந்த ஓர் அரசமுனிவருடைய புத்திரியாகிய விரிசிகையென்னுங் கன்னியின் வேண்டுகோட்கிரங்கி அவள்கொடுத்த பலவகை மலர்களைக் கண்ணிமுதலியனவாகக்கட்டி உதயணன் சூட்டியது அச்சோலைகளுள் ஒன்றிலேதான்; அக்கன்னி வேறொன்றையும் அணியாமல் அம்மாலையுடனேயிருந்து முயன்று உதயணனுக்குத் தேவியாயினள்; உருமண்ணுவாவிற்கு அவனாற்கொடுக்கப்பட்ட சீவிதங்களுள் இந்நகரம் ஒன்று; இஃது இலாவாணமென்றும் வழங்கும்.

உக்கிரகுலம்:—சைன நூல்களிற் காணப்படும் *ஐந்து குலங்களுள் ஒன்று; இக்குலத்திற் பிறந்தவன் சண்பை நகரத்தரசனான விசயவரனென்பவன்.

உஞ்சேனை:—உச்சைனிநகரம்; உஞ்சையெனவும் வழங்கும்; அவந்தி நாட்டிலுள்ளது; பிரச்சோதனனுடைய இராசதானி; மதில் முதலிய அரண்களாலும் சேனைகளாலும் பலவகைச் செல்வங்களாலும் சிற்ப அமைதிகளாலும் சிறப்புற்றது; குளிர்ச்சியும் பலவகை நுகர்ச்சியும் இதில் அதிகம்; அகநகர் புறநகர்களின் பாகுபாடுகளினால் மிக்கது; யாதொருகுற்றமுமில்லாதது; சத்துருபயம் இதற்கில்லை; இதில் வாழ்வோர் பெரும்பாலும் முருகக்கடவுளை வழிபடுவாரென்று தெரிகிறது; இது பெருநகர், மாநகரெனவும் வழங்கப்படும்; இதனயலில் மகாகாளவனம் அல்லது காளவனமென்ற ஒரு தவவனமும் அதில் ஒரு காளிகோயில் முதலியனவும் ஒரு நதியும் அந்நதி

---

* மற்ற நான்காவன; இக்ஷ்வாகு குலம், ஹரிகுலம், குருகுலம், நாதகுலம் என்பவை.

பாயப்பெற்று ஒருயோசனை அளவுள்ளதான ஒரு பொய்கையு முண்டு; அந்நதியின் இருகரையிலும் அப்பொய்கைக் கரையி லும் இந்நகரத்தார் வருடத்திற்கு ஒருமுறை நீர்விழா அயரா நிற்பர்; உதயணன், வஞ்சனையாற் பிடிக்கப்பட்டுச் சிறையிலிருந் ததுமுதல் வாசவதத்தையை அவன் பிடிமேலேற்றிச்சென்றது இறுதியாகவுள்ள கதைப்பகுதி இந்நகரில் நிகழ்ந்தது. இந்நகரம் அவந்தியென்றும் கூறப்படும்; இது முத்திநகரம் ஏழனுள் ஒன்று; பழைய நூல்களாலும் சிலாசாசனங்களாலும் இதிற் சைனமுனிவர் பலரிருந்ததாகத் தெரிகிறது; வடநூல்கள் பல வற்றிலும் சிலப்பதிகாரம், யசோதரகாவிய முதலிய தமிழ்நூல் களிலும் மிகப் பாராட்டப்பட்டுள்ளது; உச்சைனிமகாகாளமென் னும் ஒரு சிவக்ஷேத்திரம் இதில் உண்டு.

உதயணன்:—இவன் இந்நூற் கதாநாயகன்; குருகுலத்திற் பிறந் தவன்; சதானிகனுக்கு மிருகாவதிபாற்றோன்றியவன்; இவன் நாடு வத்தவநாடு; இராசதானி கோசம்பிநகர்; சூரியோதய காலத்திற் பிறந்ததுபற்றி இவனுக்கு இப்பெயர் அமைந்தது; தேவியர் வாசவதத்தை முதலிய நால்வர்; தன்னிகரில்லா தவனே தொடர்நிலைச் செய்யுட்குத் தலைவனாக இருத்தல் வேண் டுமென்று ஆன்றோர் கூறியதற்கேற்பக் கல்விமுதலிய சிறப்பியல் புகள் பலவற்றாலும் ஒப்பற்றுவிளங்கியவன் இவன்; அரசர்க் கரசனென்றும், ஏகச்செங்கோலினனென்றும் இவன் வழங்கப் படுவான்; இவனுடைய தாய்மரபு தந்தைமரபு இரண்டும் மிகப் புகழ் பெற்றவை; தந்தையின் குலம் குருகுலம்; தாயின் குலம் ஏயர் குலம்; இவன் இந்த இரண்டு குலத்திற்கும் உரிமை பூண்டு விளங்கினான்; ஏயர்குடிக்கும் சேதிநாட்டிற்கும் உரியவர் இவன் தாய்மரபினர்; வத்த நாட்டிற்கும் குருகுலத்திற்கும் உரியவர் இவன் தந்தை மரபினர்; இயற்கை யழகிலும் செயற்கையழ கிலும் சிறந்தவன்; மிக்க இளமைப்பருவத்திலேயே பலவகைக் கலைகளையும் பழம்பிறப்பிற் செய்த தவத்தால் முற்றக் கற்றுத் தேர்ந்தோன்; விற்படை முதலியவற்றிலும், யானையேற்றம் முதலியவற்றிலும், யாழ்விச்சையிலும் வல்லுநன்; விற்படை முதலிய வித்தைகளைக் கற்பித்தலிலும் சிறந்தவன்; இது பற் றியே ஆசான், தேசிகனென்னும் சிறப்புப் பெயர்களுக்கு உரிய னாக இவன் விளங்கினானென்றும், விச்சைவீரனென்று சிறப்பித் துப் பாராட்டுதற்கு உரியனாகவிருந்தானென்றும் தெரிகின்றன;

செல்வத்துட் செல்வமாகிய கேள்விச்செல்வம் இவன்பால் அமைந்திருந்தது; இவன் யானையை அடக்கும் ஆற்றலுடையானென்றும், யானையிலக்கணத்தை நன்கறிந்தவனென்றும், யானைப்பேச்சில் வல்லவனென்றும் கருதப்படுகிறான்; பிரச்சோதனனுடைய பட்டத்துயானையாகிய நளகிரி யென்பது மதவெறிகொண்டு திரிந்து ஒருவருக்கும் அடங்காமல் உஞ்சேனை நகரத்தைப் பாழ்படுத்தியபொழுது அவன் வேண்டுகோட்கிரங்கிச் சிறையினின்றும் சென்று அதனை மிக எளிதில் அடக்கியது பற்றியே அவனாலும் மற்றையோராலும் மிக மதிக்கப்பட்டு விளங்கினான்; அதனாலேதான் பிரச்சோதனன் உஞ்சேனை நகரிற் குஞ்சரச்சேரியிலுள்ள மாளிகையை இவனுக்கு இருப்பிடமாய் அமைத்தனன்; இவனுடைய யாழின் பெயர் கோடபதி என்பது; எக்காலத்தும் அது தன் தன்மை திரியாதது; இந்திரனாற் பிரமசுந்தர முனிவருக்கும், பின்பு அவரால் இவனுக்கும் அது கொடுக்கப்பட்டது; அதன்பால் இவனுக்கு மிக்க அன்பு உண்டு; யாழிற்குரிய மரங்களினியல்பையும் நரம்புகளின் இலக்கணங்களையும் இவன் நன்கு அறிந்தவன்; அதிவிசித்திரகரமான கண்ணி கட்டுதலிலும், வாழைக்குருத்தில் நகத்தினாற் பொய்கை முதலிய பலவகையான சித்திரங்கள் பொறித்தல் முதலியவற்றிலும் வல்லவனாக இருந்தான்; தன்னைச் சுமந்துவந்த பிடி இறக்குந்தருணத்தில் நற்கதியடையுமாறு பஞ்சமந்திரத்தை அதன்காதில் ஓதினமையாலும், பிறவற்றாலும் இவன் மந்திரவித்தையிலும் வல்லவனென்று தெரிகிறது; ஒவ்வொன்றையும் ஆராய்ந்தே தெளிபவன் இவன்; இடவகன், உருமண்ணுவா, யூகி, வயந்தகனென்னும் நான்கு முக்கிய மந்திரிகளும் வேறு பலமந்திரிகளும் இவனுக்கு உண்டு; அவர்கள் இவனுக்காகச்செய்த உதவிகள் மிகப்பல; இந்நால்வரும் இவனுடைய தோழர்களாகவும் விளங்கினார்கள்; அவர்களையன்றி இசைச்சன் முதலிய அன்புடைய தோழர்கள் பலர் இவனுக்கு இருந்தார்கள்; அறப்போரிலும் மறப்போரிலும் பேராற்றலுடையவன்; குறித்த இலக்கை ஊடுருவிக்கொண்டு அப்பாலுள்ளவற்றையும் துளைத்துருவும்படி எய்ய வல்ல இராமன் ஓரி என்பவர்களைப்போல் அம்புகளை எய்யும் வீரருள் வீரனாக இவன்விளங்கியதுபற்றி வல்வில்லியென்றும் பாராட்டப்படுவான்; நன்றியறிவிற் சிறந்தவன்.

உதயையோடை :—இவள் பதுமாபதியின் நற்றாய்; சிவமதியின் சகோதரி; காசியரசன் மனைவி.

உருமண்ணுவா :—பலவகைப் பெருமையும் வாய்ந்த உயர்குடியிற் பிறந்தவன்; உதயணனுடைய மந்திரிகள் நால்வருள்ளும் அவன் உயிர்த்தோழர்களுள்ளும் ஒருவன்; வயந்தகனுடன் சேர்த்தே பெரும்பாலும் வழங்கப்படுவான்; யூகிக்கு அடுத்த படியென்னும் பெருமைவாய்ந்தவன்; சேனைகளைப் போரில் நடத்துவதில் மிக்க ஆற்றலுள்ளவன்; எந்தச் சமயத்திலும் மன நடுக்கங் கொள்ளாதவன்; மிக்க புகழினன்; நட்பு, ஊக்கம், வீரம், பகைவர்க்கு அஞ்சாமை, காலம், இடம் முதலியவற்றை நன்கு ஆராய்ந்தே ஒவ்வொன்றையுஞ்செய்யத் துணிதல், நன்றியறிவு முதலியவை இவன்பாலுள்ள விசேடகுணங்கள்; வாசவதத்தையை வலிந்து கொண்டு வந்த உதயணனை மிக்க உபசாரத்துடன் வரவேற்று அழைத்துச் சென்று சயந்திநகரில் அவளை அவனுக்கு மணஞ்செய்வித்து வேண்டியவற்றைக் குறிப்பறிந்தளித்து அவனுக்கு யாதொரு கவலையுமில்லாதபடி பாதுகாத்து மகிழ்வித்து வந்தோன்; அவளைப் பிரிந்து வருந்திய அவனுக்கு அடிசில் உடை முதலியவற்றைக் கொடுக்கும்படி தோழர்களால் நியமிக்கப்பெற்ற உண்மையன்பினன்; இராசகிரிய நகரத்தில் உதயணன் மறைந்திருந்தபொழுது தாமும் மறைந்து அவனைப் பாதுகாத்துவந்தவர்களில் இவனுமொருவன்; உதயணனுடைய வாழ்வைக்கருதித் தன்னுடைய உயிர்க்குச் சிறிதும் இரங்காமற் போரில் அவனுக்கு முன்சென்று பகைவராற் சிறைப்படுத்தப்பட்டோன்; கோசம்பி நகரத்தைப் பெற்றபின்பு தன் பிரிவாற்றாமல் வருந்தி, "இருமணமெய்திய வின்பமெல்லா, முருமண்ணுவாவினை யுற்றதற்பின்னை" என உதயணனாற் கூறப்பெற்ற உத்தமசீலன்; மறைந்திருந்த யூகியின் கருத்தைத் தானறிந்துகொள்ளுதற்கும் தன்கருத்தை அவனுக்குத் தெரிவித்தற்குமாகச் சாதகனென்னும் ஓரன்பனை இடையே வைத்துக்கொண்டு சில முக்கியமான காரியங்களை முடித்தவன்; மிகவும் சிக்கலான வழக்கைத் தீர்த்தலில் வல்லவன்; உதயணன் விருப்பத்தின்படி பதுமாபதியின் தோழியாகிய இராசனையென்பவளை மணஞ்செய்து கொண்டோன்; பல பரிவாரங்களினிடையே உதயணன் தன்கையினால் அலங்கரித்து அளித்த ஏனாதிமோதிரமும் சேனாபதிப்பட்டமும்

பெற்றதன்றி, சயந்தி, இலாவாணகமென்னும் பெரிய நகரங்கள் முதலியவற்றையும் பல ஊர்களையும் சதுரங்கப்படைகளையும் பெற்றவன்; தவஞ்செய்து வந்த தன் தந்தைக்கு யாதொரு துன்பமும் நேராதபடி பாதுகாத்து ஒழுகியவன்; இவனுடைய புதல்வன் பூதியென்பான்.

எலிச்செவி :—தருசகனோடு பகைமைகொண்ட அரசர்களுள் ஒருவன்.

ஏயர்குலம் (ஹேஹயர்குலம்):— மிருகாவதியின் தந்தைகுலம்.

ஐராபதம் :—சிங்கச்சுவணம் என்னும் பொன் பிறத்தற்கிடமான ஒருமலை.

ஐராபதி :—பதுமாபதியின் செவிலித்தாயின்மகள்; அவள் உயிர்த்தோழி; கூனிய உருவமுடைமைபற்றிக் கூனியெனவும் வழங்கப்படுவள்; இராசகிரியநகரத்தில் காமன்கோட்டத்தயலில் பதுமாபதியைக்கண்டு மயங்கிய உதயணனுக்கு அவள் வரலாறுகளைச் சொல்லி அவனுக்கும் அவளுக்கும் இடையே நின்று இருவர் கருத்தையும் முற்றுவித்தவள்; கூர்த்த மதியினள்; பந்தடித்தலில் மிக வல்லவள்; இப்பெயர் அயிராவதி யெனவும் வழங்கும்.

கடகன் :—உதயணன் தம்பி; பிங்கலகடகர் என்பதைப் பார்க்க.

கபாலப்பள்ளி :—உஞ்சை நகரின் புறத்தேயுள்ள காளவனத்திலுள்ளதோர் ஆச்சிரமம்.

கருப்பாசம் :—ஒரு காட்டாறு.

கலிங்கசேனை :—கோசம்பிநகரிலுள்ள தலைக்கோற்பட்டம் பெற்ற 2500 கணிகைமார்களுள் கற்புடையவள்; மதனமஞ்சிகையின் தாய்.

கலிங்கத்தரசன் :—யூகியுடன் இவன் போர்செய்தபொழுது யானைக் கொம்பால் அவன் மார்பைக் குத்தியவன்.

காகதுண்டகன் :—இராசகிரிய நகரின் புறத்ததாகிய ஒரு சோலையிலிருந்த பெரியவன்; தோற்றப்பொலிவுள்ளவன்; உதயணனது கவலையை மாற்றியவன்.

காசியரசன் :—இப்பெயரினர் இருவர்; (1) பதுமாபதியின் தந்தை; உதயையோடை என்பவளுடைய கணவன்; மிக்க சேனையையுடையவன்; (2) நீலகேசியென்பவளுடைய தந்தை.

காஞ்சனமாலை:—வாசவதத்தையின் உயிர்ப்பாங்கி; பேரழகினள்; இனியமொழியினள்; தலைவியின் குறிப்பறிந்து நடப்பவள்; தலைவிக்கு மனக்கலக்கம் நேரும்போதெல்லாம் தக்க பரிகாரமொழிகளை மெல்லக்கூறித் தெருட்டியவள்; அவளுடைய இன்பக்காலத்தும் துன்பக்காலத்தும் பிரியாதவள் பந்து

விளையாட்டில் மிக்க பயிற்சி யுள்ளவள்; இவள் பெயர் காஞ்சனை, காஞ்சனமாலை யெனவும் வழங்கும்.

காந்தாரகன் :—பாஞ்சாலராசனுடைய பெரும்படைத் தலைவர்களுள் ஒருவன்.

காந்தாரநாடு :— இதில் இரத்தினபுரமென்று ஒரு நகரமுண்டு. சிறந்த குதிரைகள் பிறக்குமிடங்களுள் ஒன்று.

காம்போசம் :—சிறந்த குதிரைகள் பிறக்கும் தேயத்துள் ஒன்று.

காமன் கோட்டம் :—மன்மதனுடைய கோயில்; இராசகிரிய நகரத்தின் புறத்தேயுள்ள சோலையொன்றில் இருந்தது.

காளக்கடவுள்:—(1) மகாகாளேசுவரரென்னும் சிவலிங்கப்பெருமான்; (2) காள முனிவரென்ற ஒரு முனிவர்.

காளசமணன் :—ஐவகைச் சமயத்தாரைவென்று சாங்கிய சமயத்தைத் தாபித்தவன்.

காளமயிடன் :— ஆருணியரசனுடைய ஒற்றன்.

காளவனம் :— இப்பெயருடைய வனம் இரண்டு; (1) உஞ்சை நகரின் புறத்தேயுள்ளது; இது மகாகாளவனமென்று வேறு நூல்களிற் கூறப்படும்; (2) உதயணன்பால் அன்புடைய இலாமயன் இருந்த வனம்.

கும்பன் :—ஆருணியரசனுக்குக் கண்மணிபோன்றவனும் திண்ணிய அறிவையுடையவனுமாகிய ஒரு வீரன்; பாஞ்சாலராசன் இறந்த பின்பு கோசம்பி நகரத்தே கொல்லப்பட்டான்.

குருகுலம் :—சைன நூல்களிற் கூறப்படும் ஐவகைக்குலத்துள் ஒன்று.

கேகயத்தரசன் :—இவன்பெயர் அச்சுவப் பெருமகனென்பது.

கோசம்பி (கௌசாம்பி நகரம்) :— ஆதியிற் குசாம்பனென்னும் அரசனால் உண்டாக்கப்பட்டதென்பர்; வத்தவநாட்டின் தலைநகர்; யமுனையாற்றையுடையது; உதயணனது இராசதானி; இங்கே அரசுபுரிந்த உதயணன் சிறைப்பட்டு உஞ்சைநகர்க்குச் சென்ற பொழுது பகைவனாகிய பாஞ்சால தேசத்தரசனால் இது கைக்கொள்ளப்பட்டது; அப்பால் அவனைக்கொன்ற உதயணனால் ஆளப்பட்டது; இந்நகரிற் சிறந்த விழாவொன்று நடந்து வந்தது.

கோசலத்தரசன் :—இவனது இயற்பெயர் தெரியவில்லை; இவன் பிரச்சோதனனுடைய முதல் மனைவியின் சகோதரி கணவன்; ஒரு பொழுது பாஞ்சாலவேந்தன் படையெடுத்துவந்து இவனை வென்று வாசவதத்தையையும் அவள் ஆயத்தாரையும் கவர்ந்து சென்று தன் தேவிமார்களுக்குப் பணிப்பெண்களாக நியமித்தனன்; அவனைவென்ற உதயணன் அம்மகளிரைத் தன் தேவி

யர்க்குப் பங்கிட்டுக்கொடுத்துவிட்டு இவன்மகள் வாசவதத்தை (மானனீகை) யென்பவளை மணஞ்செய்துகொண்டனன்.

கோசலவளநாடு :—மிகவும் தூய்மையுள்ள நாடு.

கோசிகன் :—கோசம்பி நகரத்திருந்த ஒரு நிமித்திகன்; சாங்கியத் தாயைக் காப்பாற்ற நினைந்த உதயணன் வினவியபொழுது அவளுடைய வருங்காலச் செய்தியை நன்கு கூறியவன்.

கோடபதி :—உதயணனுடைய யாழ்; யாழ்வகையிற் பேரியாழின் பாற்படும்; பிரமசுந்தரரென்னும் முனிவரால் உதயணனுக்கு அளிக்கப் பெற்றது; தெய்வத்தன்மை வாய்ந்தது; அவன் இதனைக் கற்பிக்கும்பொழுதுதான் வாசவதத்தையின் அன்பைப்பெற்முன்.

கோபாலகன் :— பிரச்சோதனன் பட்டத்தேவிமாருள் ஒருத்தியின் புதல்வன்; வாசவதத்தையின் சகோதரன் அல்லன்; உதயணனுடைய விரோதிகளாகிய இருபதின்மரைவென்றவன்.

கோமுகன் :—இப்பெயருடையாரிருவர்; (1) இடவகனுடையமகன்; (2) உதயணனுக்குப் பதுமாபதியின்பாற் ளுேன்றியவன்.

கௌசாம்பி :—கோசம்பியைப் பார்க்க.

சகுனி கௌசிகன் :— ஆருணியரசனுடைய வீரன்.

சங்கமன்னர் :—தருசகனோடு போர்செய்தற்கு வந்த எலிச்செவியரசன் முதலியோர்.

சங்கரவூரசன் :—தருசகனுடன் போர்செய்தற்கு வந்த அரசர்களுள் ஒருவன்.

சண்பைநகர் :—அங்கநாட்டிலுள்ள பெரிய நகரம்; மிக்க வளமுள்ளது; விசயவரனென்பவனாற் பாதுகாக்கப்பட்டுவந்தது; இந்த நகரத்தில் மித்திரகாமனென்னும் வணிகர்பெருமான் வீட்டில் யூகியும், வாசவதத்தை, காஞ்சனமாலை, சாங்கியத்தாயென்னும் மூவரும் வேற்றுவடிவங் கொண்டு தங்கியிருந்தனர்.

சத்தியகாயன் :—தருசகன் மந்திரிகளுள் ஒருவன்; ஆருணி யரசனோடு போர்செய்தற்கு உதயணன் புறப்பட்ட காலத்தில் அவனுக்குத் துணையாகத் தருசகனுல் அனுப்பப்பட்ட வீரன்; அப்போரில் இவன் இறந்ததுபற்றி இவன் மக்களுக்கு உதயணன் சீவிதங்கள் அளித்தனன்.

சத்தியூதி :— தருசகனுடைய நண்பன்.

சதானிகன் :—குருகுலத்திற்பிறந்த அரசன்; உதயணன் தந்தை.

சயந்தி :—உதயணனுடைய ஆட்சிக்குட்பட்டதொரு பெரியநகரம்; இதனை உருமண்ணுவா பாதுகாத்துவந்தனன்; உதயணனுக்

கும் வாசவதத்தைக்கும் இந்நகரத்திலேதான் விவாகம் நடந்தது; மருதநிலவளத்தாற் சிறந்தது; இதன் பக்கத்தே மிக அழகியதான மலையொன்றுண்டு; இதுவும் வேறு சில இடங்களும் உருமண்ணுவாவுக்கு உதயணனாற் சீவிதமாக அளிக்கப்பட்டன.

சவரர் புளிஞர் :—வேட்டுவர் வகையைச் சார்ந்தவர்.

சாங்கியத்தாய்:—இவளது இயற்பெயர் தெரியவில்லை; கோசம்பிநகரத்திற் பார்ப்பன குலத்திற்பிறந்த இவளை மணந்த கணவன் இளமையில் நீங்கியதுபற்றி இவளுக்கு ஒழுக்கத்தவறு ஒருபொழுது உண்டாயிற்று; அது தெரிந்த அதிகாரிகளுடைய கட்டளையால் யமுனையாற்றில் இவளை வீழ்த்திவிடுவதற்குச் சிலர் கொண்டு செல்வதைக்கண்ட உதயணன் இரங்கி விடுவித்துத் தீர்த்தயாத்திரை செய்யும்படி அனுப்பினன்; அப்பால் இவள் கங்கையாடி இமயமலையிற்சென்று இரண்டு வருடம் அங்கே தங்கி ஆண்டுள்ள பெரியோரால் சமய விகற்பங்களையறிந்து கன்னியர்குமரியில் நீராடுவதற்கு அங்கிருந்து புறப்பட்டு உஞ்சைநகருக்கு வந்தபொழுது, இவளுடைய கல்வி, அறிவு முதலியவற்றை யறிந்த பிரச்சோதனன் தன் பட்டத்துத்தேவியாகிய ஸ்ரீமதிக்கு நீதிகள் முதலியவற்றைச் சொல்லும்படி இவளை நியமித்தனன்; இவள் அதனைச் செய்துவருகையில் ஒரு பிராயத்தினளாகவிருந்த வாசவதத்தை இவளிடத்து அன்பு வைத்ததை யறிந்த பட்டத்தேவி அவளுக்குச் செவிலித்தாயாயிருக்கும்படி வேண்ட இவள் அங்ஙனமே இருந்தனள்; சாங்கியசமயத்தை மேற்கொண்டமையாலும் வாசவதத்தையின் செவிலித்தாயாக இருந்தமையாலும் சாங்கியத்தாயென்று இவள் வழங்கப்படுவாள்; வாசவதத்தையினிடமும் உதயணனிடமும் இவளுக்கு மிக்க அன்புண்டு; வாசவதத்தையையும் உதயணனையும் அவனைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றுவதற்கு அவ்வப்பொழுது தன்வருத்தத்தைப் பாராட்டாமல் இவள் செய்துவந்த முயற்சிகள் மிகப்பல; தாயைக்காட்டிலும் அன்பு வைத்து உதயணன் இவளை ஆதரித்து வந்தான்; தாயெனவும் செவிலியெனவும் சாங்கியமுதுமகளெனவும் வழங்கப்படுவள்.

சாங்கியமுனி :—பல மாணாக்கர்களுடன் தீர்த்தயாத்திரை செய்த ஒரு பண்டிதன்; சாங்கியத்தாய்க்குப் பல சமயக் கொள்கைகளை அறிவுறுத்தி அவளை நல்வழிப்படுத்தியவன்.

சாண்டியன் :—காந்தாரநாட்டு இரத்தினபுரத்திலிருந்த ஓர் அந்தணன்; இது படைத்துக்கோட்பெயர்; அந்தண வடிவமுற்று மாணகனென்னும் பெயர்கொண்டு இராசகிரியத்திலிருந்த பொழுது உதயணன் இப்பெயரையுடையவன்மகனென்று தன்னைக் கூறிக்கொண்டனன்.

சாதகன் :—இவனுடைய ஊர் கோசம்பிநகரம்; சாதியாற் குயவன்; உதயணன் சிறைப்பட்டபொழுது அது பொறுமல் வேறு வடிவங்கொண்டு தானும் உடன்சென்று உஞ்சைநகரின் பக்கத்திலுள்ளதோரூரில் ஒரு வீட்டிலிருந்து உதயணனுக்கு அனுகூலங்களைச் செய்தனன்; மறைந்திருந்த யூகிக்கு உயிர்நட்பாளனாக இருந்தவன்; இராசவிசுவாசத்திற் சிறந்தவன்; யூகிக்கும் உருமண்ணுவாவுக்கும் இடையேநின்று பிறரறியாமல் ஒருவர் கூறுவனவற்றை மற்றொருவரிடஞ்சொல்லிக் காரியங்களை நிறைவேற்றியவன்; ஆருணியைக் கொன்று வெற்றியடைந்த பின்பு உதயணனால் இலாவாண நகரத்தில் பெருங்குயமென்னும் பட்டத்தையும் சீவிதமாக இரண்டூர்களையும் பெற்றான்.

சாயன் :—ஆருணி யரசனுடைய படைத்தலைவர்களுள் ஒருவன்.

சாலங்காயன் :— பிரச்சோதனனுடைய பதினறுபிர மந்திரிகளுள் முதல் மந்திரி; யாராலும் தணிக்கமுடியாத அரசன் கோபம் இவனுடைய சொற்களால் தணியும்; பேரமைச்சனென்றும் வழங்கப்படுவான்; அவனது கட்டளைப்படி மாய யானையைக்காட்டி உதயணனை வஞ்சித்துப் பிடித்துக்கொணர்ந்து உஞ்சைநகரிற் சிறைசெய்வித்தவன்; தருக்கநூல் முதலியவற்றில் தேர்ச்சியையுடையவன்; வாசவதத்தையை உதயணன் பிடிமீதேற்றிச்சென்றானென்பது கேட்டுக் கடுஞ்சினங்கொண்ட பிரச்சோதனனை நோக்கிச் சில நியாயங்களைக்கூறிச் சமாதானப்படுத்தினன்; பிரச்சோதனனுடைய விருப்பத்தின்படி யூகியோடு நூல்களில் வாதஞ்செய்து தோல்வியுற்றவன்; தன் தங்கை ஆப்பியை யென்பவளை அரசன் வேண்டுகோளால் யூகிக்கு மணஞ்செய்வித்தவன்.

சாலி :—இடபகன்மனைவி; ஒருநாட்டின் பெயராகவும் உள்ளது.

சிங்கச்சுவணம் :—ஒருவகை உயர்ந்த பொன்.

சித்திராங்கதன் :—எலிச்செவியரசன் தம்பி; தருசகனுக்குப் பகைவன்; மகதநாட்டில் நடந்தபோரிற் பிடித்து உதயணனாற் சிறையில் வைக்கப்பட்டுச் சிலநாள் சென்றபின் தருசகனால் விடுவிக்கப்பட்டவன்.

சிந்து :—இப்பெயருள்ள நதிகள் இரண்டு; ஒன்று இமயத்திலும் மற்றொன்று மேருவிலும் தோன்றும்.

சிவமதி :—தருசகன் தாய்; உதயையோடையின் சகோதரி; அவள் மகளாகிய பதுமாபதியை அன்புடன் வளர்த்தவள்.

சிவேதன் :—பிரச்சோதனன் மந்திரிகளுள் ஒருவன்; நளகிரி யென்னும் யானை வெறிகொண்டு நகரையழித்தபொழுது பிரச்சோதனன் கட்டளைப்படியே சென்று உதயணனை இரந்து அழைத்துவந்து அவனை அடக்குவித்து அவனுக்கும் அரசனுக்கும் பழக்கஞ் செய்வித்தவன்; அவன் குமாரர்களுக்கும் வாசவதத்தைக்கும் உரிய கல்விகளைக் கற்பிக்கும்படி அரசனது அனுமதியாற் சென்று சொல்லி உதயணனை இணங்குவித்தவன்; உதயணனுக்குரிய பணிகளையெல்லாம் பின்னர் அன்புடன் செய்துவந்தவன்; ஐராபதமென்னுமலையிற் பிறந்த பொன்னின் நாணயங்களிற் பதினாறாயிரம் நன்கொடையாக உதயணனால் இவன் பெற்றான்.

சின்னச்சோலை :—ஒருமலை; இதிலிருந்து உதயணன் சங்கேதமான ஒரு பண்ணைப்பாட அவன் வீரரெல்லோரும் வந்து கூடினர்.

சுமித்திரர் :—ஒரு முனிவர்; நீலவேகனுக்கு அவன் கண்ட கனவின் பயனைத் தெரிவித்தவர். [மிருகாபதிக்கும் தந்தை.

சேடகர் :—அரசாட்சியைத் துறந்த ஒரு முனிவர்; விக்கிரனுக்கும்

சேதிநாடு :—மிருகாவதியின் தந்தைக்குரிய நாடு; இந்நாடு யூகிக்கு உதயணனாற் சீவிதமாகப் பின்பு அளிக்கப்பட்டது.

சேனாபதிமகள் :—வாசவதத்தையின் உயிர்த்தோழி.

சோதமன் :—சௌதர்மேந்திரன்; சௌதர்மமென்பது கற்பலோகம் பதினாறனுள் முதலாவது; இந்த இந்திரன், பத்திராபதியின் வேண்டுகோளால் உதயணனுக்கு மகனாகச்சென்று பிறக்கும்படி சோதவனென்னும் முனிவனுக்குக் கட்டளையிட்டனன்.

சோதவன் :—ஒரு முனிவன்; இவன் சௌதர்மேந்திரனுடைய கட்டளையால் நரவாணனாக வந்து உதயணனுக்குப் பிறந்தவன்.

தண்டாரணியம் :—தண்டகாரணியம்.

தத்தை :—பிரச்சோதனன் மகளாகிய வாசவதத்தை.

தருசகன் :—மகததேயத்து அரசன்; இவனது இராசதானி இராசகிரியமென்பது; இவன் பதுமாபதியின் தமையன்; ஆருணியை வெல்லுவதற்கு இவனது நட்பைப்பெற எண்ணிய உருமண்ணுவா முதலிய மந்திரிகளுடன் உதயணன் மாணகனென்னும்

அந்தணப் பிரமசாரி வடிவங்கொண்டு அங்நகர்ப்புறச்சோலையிற் சிலகாலம் மறைந்திருந்தனன்; இவன் தந்தையாற் புதைத்து வைக்கப்பட்ட வைப்புத் திரவியங்கள் உதயணனால் எடுத்துக் கொடுக்கப்பட்டன; சில நீரூற்றுக்களும் அவனால் இவனுக்குக் காட்டப்பட்டன; பதுமாபதியைக் கேகய அரசனுக்குக்கொடுத் தற்கு இவன் எண்ணினனென்பதையறிந்து போர்செய்தற்கு வந்த அரசர் எழுவரையும் மந்திரிகளுடன் சென்று உதயணன் வென்றானென்பதுபற்றி அவனுக்குப் பதுமாபதியை மணஞ் செய்வித்தான்; தனக்கு உதயணன் செய்த உதவியை நினைந்து அவனுக்கு உதவியாகத் தன் மந்திரிகளையும் சதுரங்கசேனைகளை யும் அனுப்பி வெற்றியுண்டாகும்படி செய்தான்; எலிச்செவியர சனாற் சிறையில் வைக்கப்பட்டிருந்த உருமண்ணுவாவை விடு வித்து உதயணன்பால் அனுப்பினான்; உதயணனுக்கு இவனி டத்தில் மிக்க அன்புண்டு; இவன் தந்தையும் உதய ணன் தந்தையும் மிக்க நட்புடையோர்; இவன்பெயர் மகத மன்னன், தரிசகன், தருசககுமரனெனவும் வழங்கும். [வர்.

தருமச்சுருதி :—உதயணனுக்குச் சினதருமங்களை உபதேசித்த முனி

தருமதத்தன் :—தருசகனுடைய மந்திரிகளுள் ஒருவன்; ஆருணி யோடு போர் செய்யச் சென்றபொழுது உதயணனுக்கு உத வியாக அனுப்பப்பட்டு முற்படையில் நின்று பொருத வீரன்; நெய்த்தோர்ப்பட்டிகையும் பத்தூரும் உதயணனாற் பெற்றவன்.

தருமவீரர் :—சித்திபெற்ற சாரணர்களின் தலைவர்; இவருடைய உப தேசமொழிகளைக் கேட்ட விலங்குகளும் பறவைகளும் தத்தஞ் செயல்களை மறந்து அடங்கி நின்றன.

தவதி சயந்தம் :—ஓரிடத்தின் பெயர்.

தவந்தகன் :—வயந்தகனுடைய மகன்.

தனமித்திரன் :—சேடகராசன் புதல்வர்களுள் மூத்தோன்.

தாரகாரி :—தருசகன் மந்திரிகளுள் ஒருவன்; உதயணன் ஆருணி யோடு போர்செய்தற்குச் சென்ற காலத்தில் உதவியாக இருந் [தவன்.

திருநகர் :—வேசாலியென்னும் அரசனுடைய நகர்.

திலகசேனை :—பரதகனுடைய தங்கை; யூகியின் மனைவி.

துர்க்கையின் கோட்டம் :—துர்க்காதேவியின் கோயில்.

துல்லியன் :—பலநூற் பயிற்சியையுடைய ஓரரசன்.

துவராபதி :—பழையதொரு நகரம்; இதனரசன் சங்கரன்.

திலோத்தமை : நாடகத்தெய்வ மகளிர் ஒன்பதின்மருள் ஒருத்தி.

நஞ்சுகன் :—குபேரனுக்குத் தொண்டு செய்யும் ஓர் இயக்கன்.

நரவாணதத்தன் :—உதயணனுக்குப் பிரச்சோதனன் மகளாகிய வாசவதத்தையினிடம் பிறந்த புத்திரன்; குபேரனது அருளினால் உதித்தவனாதலின் இப்பெயர்பெற்றான் (நரவாகனன் - குபேரன்); வித்தியாதரசக்கரவர்த்தியாகப் பின்பு ஆயினன்.

நருமதை :—உஞ்சைநகரிலுள்ள 50,000 நாடகக்கணிகையருள் தலைக்கோற்பட்டம்பெற்ற ஒருத்தியின் மகள்; பிரச்சோதனனால் நன்கு மதிக்கப்பெற்றவள்; வாசவதத்தைபாலுள்ள அன்பின் மிகுதியால் தனக்குண்டான வேறுபாடும் இரவில் அரற்றுதலும் இவளாலுண்டாயினவென்று பிறர் எண்ணும்படி வயந்தகனைக் கொண்டு உதயணனால் வருவித்து மீட்டும் அனுப்பப்பட்டவள்.

நருமதையாறு :-விந்தமலையிலுண்டாவது; பத்திரையென்னுந் தெய்வ மகள் குபேரனாற் சாபம்பெற்றது இதன் கரையிலேதான்.

நளகிரி :—பிரச்சோதனனது பட்டத்து யானை; மதவெறிகொண்டு உஞ்சைநகரை அழித்துக்கலக்கிய இதன் கோபத்தை அடக்கியமையாலேதான் உதயணன் சிறையினின்றும் விடப்பெற்றான்.

நாகதத்தை :—கந்தருவபுரத்து அரசனாகிய நீலவேகன் மனைவி.

நீலகேசி :—காசியரசன்மகள்; மந்தரவரசன் மனைவி; விரிசிகையின் தாய்.

நீலவேகன் :—கந்தருவபுரத்து அரசன்.

பத்திராபதி :—ஒரு பெண்யானை; பிரச்சோதனனுக்குரியது; ஊர்ந்து செல்லும்படி உதயணனுக்குப் பிரச்சோதனனாற் கொடுக்கப்பட்டது; நீர் விழவில் இதன்மேலேதான் வாசவதத்தையை ஏற்றிக்கொண்டு உதயணன் தன்னகர் சென்றனன்; செல்லுகையில் காலகூடமென்னும் வியாதியால் இடையே இது வீழ்ந்து இறந்துவிட்டது; கோசம்பி நகரத்தை அடைந்து வாழ்கையில் உதயணன் இதன் ஞாபகார்த்தமாக இது வீழ்ந்த இடத்திலும் கோசம்பியிலும் கோயில்கள்சமைத்து அவற்றில் இதன்வடிவங்களையமைப்பித்து நித்தியபூசை முதலியவற்றை நடத்திவரச் செய்தனன்; இப்பெயர் பத்திராவதியெனவும் வழங்கும்; பத்திராவதியென்னும் தெய்வப் பெண் குபேரன் சாபத்தால் இந்த யானையாகப்பிறந்து இறந்த பின்பு பழைய உருவத்தை யடைந்தாளென்று ஒரு வரலாறு காணப்படுகின்றது.

பத்திரை :— ஒரு தெய்வமங்கை ; குபேரனுக்குப் பலவகைப் பணிபுரிந்தொழுகும் எண்பது நாடக மகளிருள் ஒருத்தி.

பதுமகாரிகை :— பிரச்சோதனனுடைய தேவிமார் பதினாறுயிர வருள் முதல்வி ; வாசவதத்தையின் நற்றாய்.

பதுமாபதி :—தருசக அரசன் தாயின் சகோதரியான உதயை யோடையின் மகள் ; இவள் தந்தை காசிராசன்; அபிமான புத்திரி யாகத் தருசகன் தாய் வளர்த்துவந்தமையின், இவள் தருசகன் தங்கையென்று கூறப்படுவாள் ; இராசகிரியத்தில் நடந்த காம னுடைய விழாவில் வழிபடுவதற்குக் காமன் கோட்டத்திற்குச் சென்றபொழுது மாணகனென்னும் பெயருடன் நின்ற உதயண னுக்கும் இவளுக்கும்நட்புண்டாகிக் காந்தருவமணம் முதலில் நடந்தது ; பிறகு அவனைத் தன் கன்னிமாடத்திற்கு ஒருவரும் அறியாதபடி அழைத்துவந்து பலநாள் வைத்திருந்தனள்; பகை வர் தருசகனோடு போர்செய்வதற்கு வந்தபோது உதயணன் புறத்தேயிருந்து வந்தவன்போல வந்து தன்னை இன்னானென்று பலருந் தெரிந்துகொள்ளச் செய்து தோழர்களோடு சேர்ந்து அப்பகைவரை வென்றனன் ; அதனால், பதுமாபதி உதயண னுக்கு மணஞ்செய்விக்கப்பட்டு இரண்டாம் பட்டத் தேவியாயி னள் ; சிறந்த குணத்தினள் ; கல்வி கேள்விகளிற் சிறந்தவள் ; வாசவதத்தைக்கு அனுகூலத்தையே தேடுபவள் ; இவள் பெயர் பதுமை, பதுமாவதியெனவும் வழங்கும்.

பதுமை :—இவள் ஒரு தூதி ; உதயணன் வெற்றிபெற்றுக் கௌசாம் பியில் வாசவதத்தையுடன் அரசாளுகையில் அவன் அன்பைப் பெறவேண்டி அவனுக்கும் அவளுக்குமாகப் பலவேலைக்காரர் களுடன் பல அரும்பொருள்களை அனுப்பிய பிரச்சோதனனால் சமாதானமாகப் பேசுதற்கு அவனிடம் அனுப்பப்பட்டவள் இவள் ; அங்ஙனமே உதயணனைப் பார்த்தபொழுது பேசித் தன் தலைவன்மீது அவனுக்கிருந்த மனவருத்தத்தைப் போக்கினள்.

பரதகன் :—பிரச்சோதனனுடைய மந்திரிகளுள் ஒருவன் ; சாலங் காயனுக்கு அடுத்தபடியென்னும் பெருமை வாய்ந்தவன் ; சிறந்த நூற்பொருள்களை அறிந்தவன்.

பரதன் :—ஒரு சக்கரவர்த்தி ; உதயணனுடைய குலமுதல்வன்.

பரமசுந்தரி :—பிரமசுந்தரயோகியின் மனைவி; யூகியின் தாய் ; கற்பிற் சிறந்தவள்.

பவணத்தரசன் :—யூகியின் வலப்பக்கத்துப் பற்களுள் ஒன்று முறிந்து விழும்படி வேலையெறிந்தவன்.

பவணம் :—நாகலோகம் ; செல்வத்திலும் போகத்திலுஞ் சிறந்தது.
பாகீரதி :—தேவராட்டி வேடம்பூண்ட ஒருத்தி ; உதயணனைச் சேனைகளுடன் பிரச்சோதனன் கௌசாம்பிக்கு அனுப்ப எண்ணியது தெரிந்து, அதனால் தன் சூளுறவு த்வறிவிடுமேயென்றெண்ணிய யூகியின் கட்டளையால் தெய்வாவேசங்கொண்டவள் போல் உஞ்சைநகரின் வீதியில் வந்து ஆடிச் சனங்களை அச்சுறுத்தி நீர்விழாச் செய்யும்படி செய்வித்தவள்.
பாஞ்சால தேயம் :—நீர்வளமுடையது ; ஆருணியரசனது நாடு.
பாஞ்சாலராசன் :—ஆருணியரசனென்பதைப் பார்க்க.
பாட்டகம் :—சத்தியூதி யென்பவனுடைய நகரம்.
பாடல் :—பாடலிபுத்திர நகரம்.
பாலகன்:—இப்பெயருடையாரிருவர் ; (1) முனிவர் வேடங்கொண்ட ஒரு சமணன் ; (2) பிரச்சோதனன் புதல்வர்களுள் ஒருவன்.
பாலகுமரன் :—பிரச்சோதனன் புதல்வன் ; உஞ்சைநகரில் உதயணன் நளகிரியை யடக்கியபின்பு தந்தையின் கட்டளைப்படி அவனுக்கு வேண்டியவைகளைக் குறிப்பறிந்து செய்து வந்தவன்.
பிங்கலகடகர் :—உதயணன் தம்பிகள் ; உதயணன் மாயயானையாற் பிடித்துக்கொண்டு போகப்பட்டபொழுது யூகியின் வேண்டுகோளால் தாய்மிருகாவதியையும் கோசம்பி நகரத்தையும் பாதுகாத்தார்கள் ; ஆருணியரசன் அந்நகரைக் கைப்பற்றியபொழுது அவனை வெல்லமாட்டாதவர்களாய்த் தம்முருவத்தை மறைத்துக் கொண்டு பலவீரர்களோடு வேறிடஞ்சென்றனர் ; அப்பால் உதயணன் ஆருணியோடு போர்செய்தற்குச் செல்லும்பொழுது அவனைக் கண்டு பணிந்து பலவாறு புலம்பி உடனிருந்து உதவிசெய்தவர்கள் ; கடகபிங்கலரெனவும் வழங்கப்படுவர்
பிங்கலசாரமாணி :—உதயணன் வீரர் பதின்மருள் ஒருவன்.
பிரச்சோதனன் :—ஒரு மகா சக்கரவர்த்தி ; வாசவதத்தையின் தந்தை ; இவன் நாடு அவந்தி ; இராசதானி உச்சைனிநகர் ; உதயணனை வஞ்சத்தாற்பிடித்துச் சிறையில்வைக்கும்படி செய்தவன் ; இவன் தேவியர் பதினாறுயிரவருள் வாசவதத்தையைப் பெற்ற நற்றாயாகிய பதுமகாரிகையென்பவள் முதன்மை வாய்ந்தவள் ; இவனுக்குப் பாலகன், பாலகுமரன், கோபாலகனென்பவர் முதலிய குமாரர்கள் பலர் உண்டு ; மந்திரிகள் பதினாறுயிரவர் ; இவனுக்குள்ள முரசம் பதினாறுயிரம் ; இவன் பிறர்க்குக் கொடுப்பனவும் பிறர் இவனுக்குக் கொடுக்குங் கையு

றைகளும் பதினாறாயிரம் ; இவனுக்கு இப்படியே ஒவ்வொன்றும் பதினாறாயிரம் பதினாறாயிரமாகப் பதினாறு பகுதிகளிருந்தன ; பெருவண்மையன் ; இவன்சொல் மிக்க பொருட்சிறப்பையுடையது ; ஆற்றலினும் வெற்றியினும் அறிவினும் நிகரற்றவன் ; ஆணையிற்சிறந்தவன் ; வீரியவேந்தன், அவந்திவேந்தன், ஏகத்திகிரியிறைவன், வெற்றி வேந்தன், மறமாச்சேனன், உஞ்சையர் பெருமகன், பெருவேந்தன், ஆற்றல்வேந்தனெனவும் இவன் பெயர்கள் வழங்கும்.

பிரமசுந்தரமுனிவர் :—பலபெரிய முனிவர்களுக்குத் தலைவர் ; தருமத்தைப் பரிபாலனஞ்செய்வதே இவர் கோட்பாடு ; இவர்மனைவி பரமசுந்தரியென்பாள் ; இவர் யூகியின் தந்தை ; உதயணனுக்கு யானையின் கோபத்தை அடக்கும் வித்தையையும் கோடவதியென்னும் யாழையும் இசைநூலையும் மற்றுமுள்ள பலவித்தைகளையும் அளித்தவர் ; யூகியை உதயணன்பால் அடைக்கலமாக ஒப்பித்தவர். [ஒருவன்.

பிரமசேனன் :—ஆருணியரசனுடைய பெரும்படைத்தலைவர்களுள்

புட்பகம் :—உதயணனுக்குரிய பெருநகரங்களுள் ஒன்று ; சேனைகளுடனிருந்து இதனைப் பாதுகாத்துவந்த இடவகனுக்கு உதயணனால் விருத்தியாகக் கொடுக்கப்பெற்றது.

புண்டரம் :—இது வாசவதத்தையும் சாங்கியத்தாயும் யூகியும் வேற்றுவடிவங்கொண்டு தங்கிய இடங்களுள் ஒன்று. [யுள்ளநாடு.

புன்றுளகம் :—இலாவாண நகரத்திற்கும் மகதத்திற்கும் இடையே

பூதி :—உருமண்ணுவாவின் புதல்வன்.

பூரணகுண்டலன் :—இவன் ஆருணியரசனுடைய அமைச்சன் ; உதயணனோடு போர்செய்தற்கு அவன்புறப்பட்டபோது நிமித்தம் நன்றாக இல்லாமையால், அவனுக்குப் புத்தி கூறியவன்

போதனபுரம் :—மிலேச்சனென்னும் அரசனுடைய நகரம்.

மகதநாடு :—தருசகனுடைய நாடு ; இதன் இராசதானி இராசகிரியம்; இதிற் பிறந்த இரத்தினவேலைக்காரர் பெரும்புகழினர்.

மதனமஞ்சிகை :—கலிங்கசேனையென்பவளுடைய புதல்வி ; நரவாணதத்தன் மனைவி ; பேரழகுடையவள் ; மானசவேகனென்னும் வித்தியாதரனால் விரும்பி எடுத்துச் செல்லப்பட்டுத் தன் கணவனால் மீட்கப் பெற்றவள். [சோலை.

மதுகாம்பீரவனம் :—கோசம்பிநகரத்தின் புறத்ததாகிய ஒரு பூஞ்

மந்தரம் :—ஆருணியரசன் பட்டத்துயானை ; நளகிரியை ஒத்தது.

மந்தரவரசன் :—வெள்ளிமலையிலுள்ள வித்தியாதர அரசருள் ஒருவன் ; இவன் வனத்தில்வந்து தவஞ்செய்கையில், உதயணனால் இளமையில் மாலைசூட்டப்பெற்ற தன்மகளுக்குப் பருவம் வந்தபொழுது அவளை அவனுக்கு மணஞ் செய்வித்துவிட்டு மனைவியைத் துறந்து தவஞ்செய்தற்குச் சென்றான்.

மருபூதி :—யூகியின் புதல்வன்.

மல்லன் :—தருசகனோடு போர்செய்யவந்த பகையரசர் எழுவர்களுள் [ஒருவன்.

மாகளவனம் :—உஞ்சைநகரின் புறத்தேயுள்ள ஒரு காடு ; இதில் ஒரு துர்க்கை கோயிலுண்டு ; அது யூகிக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் தனியேயிருந்து ஆலோசனை செய்தற்குரிய இடமாக இருந்தது ; இது மகாகாளவனமெனவும் வழங்கும்.

மாணகன் :—இஃது உதயணன் சிலநிமித்தம்பற்றித் தன்னைப் பிறரறிந்துகொள்ளாதபடி இராசகிரியத்திலிருந்தபொழுதுகொண்ட [வேறுபெயர்.

மாராட்டம் :—மகாராஷ்டிர தேசம்.

மானசவேகன் :—வெள்ளிமலையோரத்திலுள்ள 110-வித்தியாதர அரசர்களுள் ஒருவன் ; மதனமஞ்சிகையை விரும்பி எடுத்துச் சென்று நரவாணதத்தனால் வெல்லப்பட்டவன்.

மானனீகை :—இது கோசலத்தரசன் மகளதுவேறுபெயர்; இவளது இயற்பெயர் வாசவதத்தை யென்பது ; இவள் தாய் வசுந்தரி யென்பாள் ; கோசலதேசத்தரசனைவென்று அவனது அந்தப்புரத்திலிருந்து பாஞ்சாலராசன் கவர்ந்து சென்ற மங்கையர்களுள் இவள் ஒருத்தி ; பின்பு அவன் பட்டத்தேவியின் பணிப்பெண்ணாக இருந்து அவனைக்கொன்ற உதயணனால் கொண்டுவந்த மகளிரோடு இவளும் கொண்டுவரப்பட்டு வாசவதத்தையின் பணிப்பெண்ணாக இருந்து தன் பந்தாட்டத்தைக் கண்டு மோகித்த உதயணனுக்குப் பின்பு மனைவியாயினள்.

மித்திரகாமன் :—ஒருவணிகன் ; பெருஞ்செல்வமுடையவன் ; வேறு வேடங்கொண்ட வாசவதத்தை முதலிய நால்வரும் இவன் வீட்டிலேதான் சிலகாலம் மறைந்திருந்தனர்.

மிருகாபதி (மிருகாவதி) :—உதயணன் நற்றாய் ; இவளுடைய சகோதரன் விக்கிரன் ; இவள் தந்தை வயர்குலத்திற்குத் தலைவன்.

மிலேச்ச மன்னர் :—ஒருவகை வீரர்களின் தலைவர்.

மிலேச்சர் :—ஒருவகை வீரர்.

மிலேச்சன் :—போதன புரத்து அரசன் ; தருசகனோடு பகைமை கொண்டு போர்செய்ய வந்த அரசர்களுள் ஒருவன்.

முனையூர் :—இடவகனுக்கு உதயணன் கொடுத்த ஒரு நாட்டின் தலை நகரம்.

மேனகை :—தெய்வமகளிர் எண்பதின்மருள் ஒருத்தி; குபேரனுக்குப் பணி புரிபவள்.

யமுனை :—யமுனாநதி; இது கோசம்பி நகரத்தின் பக்கத்தே ஓடுவது.

யவனம் :—தச்சு வினையில் மேம்பட்ட ஒரு தேயம்; இதற்கென்றே தனியாக ஒரு பாஷை இருந்ததென்றும் அதில் உதயணனும் கோசலதேசத்தரசன் மகள் வாசவதத்தையும் நல்ல பயிற்சியுள்ளவர்களென்றும் தங்கள் கருத்தைப் பிறரறியாதபடி ஒருவர்க்கொருவர் அதில் தெரிவித்துக்கொண்டனரென்றும் சொல்வர்.

யாப்பியாயினி :—ஆப்பியாயினியைப் பார்க்க.

யாப்பியை :—சாலங்காயனுடைய தங்கை; யூகியால் மணஞ்செய்து கொள்ளப்பட்டவள்.

யூகி :—உதயணனுடைய மந்திரிகளுள் முதல்வன்; இவனுடைய குணவிசேடங்கள் எழுதியடங்குவனவல்ல; வில்வித்தை முதலிய எல்லாக்கலைகளையும் உதயணனுடன் கற்றுப் பயின்று உடன் வளர்ந்தவன்; அவனுக்கு உயிர்த்தோழன்; சிறைத் துன்பத்தினின்றும் அவன் நீங்கியது முதலியவற்றிற்கும் இழந்த அரசாட்சியை மீட்டும் பெற்றதற்கும் பிறநலத்திற்கும் காரணம் இவனுடைய பெருமுயற்சியே; பிரச்சோதனன் உதயணனை வஞ்சகச்செய்கையாற் பிடிப்பித்து வருவித்துச் சிறைப்படுத்தினனென்ற செய்தியை வயந்தகன் கூறக்கேட்டவுடன், “என் தலைவனைக் கடமாகப் பிடிப்பித்து வருவித்தவன் மகள் வாசவதத்தையை அவன் அறியாதவண்ணம் கொண்டுவரும்படி செய்வேன்” என்பது முதலிய சபதஞ்செய்துவிட்டுத் தான் இறந்துபோனதாக ஒரு செய்தியை எங்கும் பரவச்செய்து பிறரறியாமல் உஞ்சைநகரம் சென்று தான் கருதியதை நிறைவேற்றியவன்; பிரச்சோதனனாற் பிற்காலத்தில் வருவித்து நன்கு உபசரிக்கப்பெற்றவன்; பெருவிறற்றோழன், இடனறி சூழ்ச்சி யூகி, அரும்பெறற் சூழ்ச்சியவன், ஒழுக்கியறிரியா யூகியெனப் பாராட்டிக் கூறப்படுவான்; உதயணன் முதலிற்பெற்ற சேதிநாடு அவனால் இவனுக்குச் சீவிதமாகக் கொடுக்கப்பட்டது; ஊகி, யூகந்தராயணன், யூகந்தராயனெனவும் இவன் பெயர் வழங்கும்.

வசுந்தரி :—கோசலநாட்டரசன் தேவி; மானனீகையென்று வேறு பெயர் கொண்ட வாசவதத்தையின் தாய்.

வஞ்சகாந்தை :—இஃது ஓராறு.

வத்தவநாடு (வத்ஸதேசம்) :—இதன் தலைநகர் கௌசாம்பி ; இதற்குத் தலைவன் உதயணன் ; வச்சமெனவும், வத்தமெனவும் வழங்கும்.

வயந்தகன் :—உதயணனுடைய மந்திரிகளுள் ஒருவன் ; அவன் உயிர்த்தோழன் ; அந்தணன் ; அவனுடைய குறிப்பறிந்து நடந்து மதிப்புப்பெற்றவன் ; பகைவன் விடுத்த மாயயானையின் உள்ளேயிருந்தும் புறத்தேவந்தும் போர்செய்தற்கு வந்த வீரரோடு போர்செய்ததன்றி அவர்கள் கையில் அகப்பட்ட உதயணன் கொடுத்த ஓலையைக் கொண்டுபோய் யூகியிடங்கொடுத்து மேலே நிகழ்த்தவேண்டியவற்றை விரைவில் நிகழ்த்தும்படி அவனை ஊக்கியவன் ; உதயணனோடு இடைவிடாமலிருந்து உதவியவன்; அவன் உஞ்சைநகரஞ் சென்றபின் வேறு வேடம் பூண்டு அந்நகர்சென்று பிரச்சோதனனுடைய குமாரர்களுடன் சேர்ந்து வில்வித்தை முதலியவற்றைக் கற்கும் மாணாக்கன்போலிருந்து அங்கே நடப்பனவற்றை அறிந்தறிந்து அவ்வப்பொழுது யூகிக்குச் சொல்லியனுப்பியவன் ; உதயணனுக்குப் பணிபுரிந்து ஒழுகும்படி பாலகுமரனால் நியமிக்கப்பெற்றவன் ; யூகி சொல்லியனுப்புவனவற்றையும் அவ்வப்பொழுது உதயணனுக்குத் தெரிவித்து நிறைவேற்றியவன் ; பிடி வீழ்ந்த பின்பு காட்டில் வாசவதத்தையோடு உதயணன் தனித்துத் தங்கிய போது வேடர்களால் அவனுக்குண்டான துன்பத்தைப் போக்கிச் சயந்திநகரை அடையச் செய்தவன் ; வானசாஸ்திரத்திலும் வல்லவன் ; நல்ல பயனைத்தரும் நகரங்கள் பதினொன்றை இவனுக்கு விருத்தியாகக் கொடுத்ததன்றி உதயணன் நாடோறும் ஆயிரம்பொன்னுங் கொடுப்பானாகி எப்போதும் தன் உடனிருக்கும்படியும் செய்தான்.

வராகன் :—பிரச்சோதனனுடைய அந்தப்புர ஏவலாளனாகிய ஒரு வில்வீரன்; வாசவதத்தையைப் பிடிமீதேற்றி உதயணன் சென்றபொழுது சிலதூரம் தொடர்ந்துசென்று அதனை முதலில் பிரச்சோதனனுக்கு அறிவித்தவன்.

வருடகாரன் :—தருசகனுடைய முதல்மந்திரி ; மிகவும் கபடமான ஆலோசனையையும் தறுகண்மையையும் உடையவன் ; பாஞ்சாலராசனை வெல்லுதற்கு இவன்செய்த ஆலோசனைகளும் செயல்களும் பல ; அந்த அரசனைக் கொன்ற பின்பு உதயணன் மனமுவந்து இவனைத் தழுவித் தானணிந்த கலன்களையும் ஏறிய யானையையும் இவனுக்கு அளித்தனன்.

வருத்தமானன் :—புண்டர நகரத்திலிருந்த ஒருபகாரி.

வாசவதத்தை :—இவள் உதயணனுடைய தேவியர் நால்வருள் முதல்வி; பட்டத்தேவி; பதுமகாரிகையின் புதல்வி; இந்திரனருளால் உதித்தவளாதலின் இவள் இப்பெயர் பெற்றாள்; அழகிலும் குணத்திலும் சிறந்தவள்; பெண்பாலார்க்குரிய கலைகளில் மிகப்பயிற்சியுள்ளவள்; அவற்றுள் இசையையும் யாழையும் உதயணன்பாற் கற்றுத்தேர்ந்தவள்; மாலை தொடுத்தல் முதலிய கைத்தொழிலிற் சிறந்தவள்; சிற்பவேலையில் இவளுக்குப் பயிற்சியுண்டு; தந்தை முதலியவர்பால் அன்பு மிக்கவள்; மற்ற மகளிர் பலருள்ளும் பிரச்சோதனனுக்கு இவள்பால் அன்பு அதிகம்; தன்பாலுள்ள காதலால் உதயணன் இராசகாரியத்தை மறந்துவிட்டானென்று பிறர்சொல்லத் தெரிந்தமையால், இவள் தான் இறந்து போய்விட்டதாகப் பெயர்பண்ணிச் சிலகாலம் செவிலித்தாய் முதலியவர்களோடு வேற்றுருவங்கொண்டு மறைந்திருந்தனள்; அவனுடைய ஆக்கத்தைக்கருதி இவளடைந்த துன்பங்கள் பல; உதயணனுக்கு இவள்பால் அன்பு அதிகம்; இவ்விருவரும் ஒருவரை யொருவர் அடைந்தது தவப்பயனென்பர்; இவளுக்குத் தோழியர் பலரிருப்பினும் காஞ்சனமாலையிடத்தேதான் மிகுந்த அன்புண்டு; மிக்க தூய்மையை யுடையவளாயிருந்தது பற்றியே சோதவனென்னும் முனிவரன் இவளுடைய கருப்பத்திற்றங்கி நரவாணதத்தனாகப் பிறந்து வித்தியாதர சக்கரவர்த்தியாக ஆயினனென்பர்.

வாரணவாசி :—அடவியென்னும் அரசனது நகரம்; காசியுமாம்.

விக்கிரன் :—இவன் உதயணனுடைய அம்மான்; மிருகாபதியின் தமையன்; ஏயர்குலத்திற் பிறந்தவன்; தன் அரசாட்சியை உதயணனிடம் ஒப்பித்துவிட்டுத் தான் தவஞ்செய்யச் சென்றவன்.

விச்சுவலேகை :—இவள் வாசவதத்தையின் தோழிமார்களுள் ஒருத்தி; குறுகிய வடிவமுடையவள்; பந்தாட்டத்திற் சிறந்தவள்.

விசயவரன் :—இவன் உக்கிரகுலத்திற்பிறந்த அரசன்; இவனுடைய இராசதானி அங்கநாட்டிலுள்ள சண்பைநகர்.

விசயார்த்தம் :—வித்தியாதரர்களுக்கு உறைவிடமாகிய ஒரு வெள்ளிமலை.

விஞ்சையம்பெருமலை :—வெள்ளிமலை ; இது வித்தியாதரர்களிருத்தற்குரிய இடம் ; இதிலுள்ள வெள்ளி மிகச்சிறந்தது. விந்தியமலையும் இப்பெயரால் வழங்கப்படும்.

விண்ணுத்தராயன் :—இவன் பிரச்சோதனனால் அழைக்கப்பட்ட யூகி, உஞ்சைநகர் சென்றபொழுது அவனுக்குப் பாதுகாப்பாக உதயணனால் அனுப்பப்பட்டு அவனுடன் சென்றவன்.

விதையம் (விதேஹதேசம்) :—இது விமானத்திற்சென்ற வாசவதத்தையாற் பார்க்கப்பட்ட தேயங்களுள் ஒன்று.

விந்தம் :—விந்தியமலை ; இதிலுள்ள காடு புகழ்பெற்றது ; இதிலுள்ள யானைகள் மிக்க வீரியமுடையவைகள் ; இது விஞ்சமெனவும் வழங்கும்.

விபுலம் :—மிருகாபதியின் தந்தை தவஞ்செய்துகொண்டிருந்த ஒரு மலை ; உதயணன் பிறந்தது இம்மலைச்சாரலிலேதான்.

வியாதன் :—வியாஸமுனிவர்.

விரிசிகன் :—தருசகனுடைய பகையரசருள் முதல்வன்.

விரிசிகை :—இவள் ஓரிராசரிஷியின் மகள் ; தவஞ்செய்யவந்த அவருடன் இவளும்வந்து ஒருவனத்திலிருந்தபொழுது இளமைப் பருவத்தில் உதயணனால் மாலை சூட்டப்பெற்றுப் பின்பு அவனால் மணஞ்செய்து கொள்ளப்பட்டவள் ; கற்பிற்சிறந்தவள்.

வேகவதி :—வித்தியாதர அரசனாகிய மானசவேகன் தங்கை ; மதனமஞ்சிகையின் மனத்தை வேறுபடுத்தும்படி அவனால் அனுப்பப்பட்ட இவள் நரவாணதத்தனுடைய மேம்பாட்டைக் கேட்டு அவனிடம் விருப்பங்கொண்டு மதனமஞ்சிகையின் வடிவத்தையடைந்து அவனோடு இன்புற்றாள்.

வேசாலி :—தருசகனுடைய பகையரசருள் ஒருவன்.

வைசாலி :—விக்கிரனுடைய இராசதானி ; உதயணனுக்கு ஒப்பிக்கப்பட்டது.

வையாக்கிரம் :—உதயணன் யூகிக்குக் கொடுத்த தேர்.

ஸ்ரீதரர் :—விபுலமலையின் சாரலில் தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர்.

ஸாவ்ருதர் :—முக்காலவுணர்ச்சியுள்ள ஒரு முனிவர் ; மிருகாபதியைச் சரபப்புள் எடுத்துச்சென்று விபுலகிரியில் வைத்தது முதல் உதயணன் வைசாலியில் அரசாட்சி செய்ததுவரையிலுள்ள செய்திகளையும், சதானிகனுடைய பிற்காலச்செய்திகளையும் அவனுக்குத் தெரிவித்தவர்.

கதைச் சுருக்கம்

(1.—உஞ்சைக் காண்டம்.)

வத்தவ நாட்டிலுள்ள கௌசாம்பி நகரத்திலே குருகுலத்திற் பிறந்த சதானிகனென்னும் அரசன் சேதிநாட்டிலுள்ள வைசாலி நகரத்தரசனும் ஏயர்குலத்தவனுமாகிய சேடகனென்பவனுடைய புதல்வி மிருகாபதி என்பவளை மணஞ்செய்து இல்லறம் நடத்திவருகையில் மிருகாபதி கருவுற்றாள். கருவுற்ற பத்தாவது மாதத்தில் நிலாமுற்றத்திலே சிவந்த ஆடையைப் போர்த்துக்கொண்டு அவள் ஒரு மஞ்சத்தில் துயிலுகையில் ஒரு சிம்புட்பறவை தசைத்தொகுதியென்று நினைத்து அவளை மஞ்சத்தோடு எடுத்துச்சென்று விபுலகிரியின் பக்கத்தே வைத்தது. அப்பொழுது மிருகாபதி விழித்துக்கொள்ளவே பிராணவதம் பண்ணாத பறவையாதலின் அது பறந்து போய்விட்டது. பின்பு சூரியோதய காலத்தில் எல்லாக் கோள்களும் நல்ல நிலையில் அமைந்திருப்ப மிருகாபதிக்கு ஒரு குமாரன் பிறந்தான். அங்கே தவம் செய்துகொண்டிருந்த மிருகாபதியின் தந்தையின் பாதுகாப்பில் தாயும் மகனும் இருந்து வந்தனர்.

உதயகாலத்திற் பிறந்தவனாதலின் அப்புதல்வன் உதயணன் என்னும் பெயர் வைக்கப்பெற்றான். அவன் தன் தாயைப்பெற்ற பாட்டன் அருளால் வளர்ந்து பிரமசுந்தரரென்னும் முனிவருடைய குமாரனாகிய யூகியென்பவனோடு பலகலைகளை அம்முனிவர்பாற் கற்றுத் தேர்ந்தான்; அவர்பாற் பெற்ற கோடபதி என்னும் யாழை வாசிப்பதில் வல்லவனானான். ஒரு நாள் அவனுடைய யாழிசைக்கு வசமுற்ற ஒரு தெய்வயானை, "யான் உன்னிடமே இருப்பேன்; ஆனால் யான் உண்ணுமுன் நீ உண்பாயாயின் உன்னை நீங்குவேன்" என்று சொல்லவே அதற்கு உடன்பட்டு அவன் அதன் அன்பைப் பெற்றான்.

பின்பு அங்கேவந்த உதயணனுடைய மாமனாகிய விக்கிரனென்பவன் அவனைத் தன் மருகனென்றறிந்து தன் நாட்டிற்கு அழைத்துச் சென்று தன் அரசுரிமையை ஈந்தான். அப்பால் சதானிகன் தன்

குமாரனை அறிந்து தன் அரசுரிமையையும் வழங்கினான். அவ் விரண்டு நாடுகளையும் உதயணன் அரசாட்சி புரிந்துவந்தான்

ஒருநாள் உதயணன், மறந்து முன் உண்டமையால் அவன்பால் இருந்த தெய்வயானை அவனைப் பிரிந்து நீங்கியது. அதனால் வருத்த முற்ற அவன் அதனைத் தேடிக்கொண்டு யாழுங்கையுமாகக் காட்டில் தனியே திரிந்தனன்; அக்காலத்தில் திறை கொடுக்கவில்லையென்ற கோபத்தால் உச்சயினி நகரத்து மகா சக்கரவர்த்தியாகிய பிரச் சோதனனென்பவன் உதயணனை அகப்படுத்தும் பொருட்டு ஓர் எந்திர யானையைச் செய்வித்து அதற்குட் பல வீரர்களை மறைந் திருக்கச்செய்து அவ்யானையை விடுத்தான். உதயணன் தெய்வயானை யென்று நினைந்து தனியே அதனருகிற்சென்று யாழ் வாசித்தான். அப்பொழுது அதன் உள்ளிருந்த வீரர்கள் வெளியேவந்து உதயண னைச் சூழ்ந்துகொண்டனர். அவர்களோடு அவன் போர்செய்து, பிடி யுண்டு உச்சயினி நகரத்திற் சிறைவைக்கப்பட்டான்.

அச்செய்தியைக் கேட்ட உதயணனுடைய முதன் மந்திரியாகிய யூகி, "என் தலைவனை வஞ்ச யானையைக் காட்டிப் பிடிப்பித்த பகைவன் மகளை அவனறியாமற் பிடித்துவரச் செய்வேன்" என்று சபதங் கூறித் தான் இறந்து போய்விட்டதாக ஒரு பொய்யுரையை எங்கும் பரவச் செய்து பலவீரர்களுடன் வேற்று வடிவங்கொண்டு உச்சயினிக்குப்போய் மறைந்து அங்கே நிகழ்வனவற்றை அப்பொழு தப்பொழுது அறிந்துகொண்டிருந்தான். பிறகு சக்கரவர்த்தியின் பட்டத்து யானையாகிய நளகிரியை மதவெறிகொண்டு உச்சயினி நகரத்தை அழிக்கும்படி செய்தான். அதன் செயலை யறிந்து மனங் கலங்கிய பிரச்சோதனன் அதனை அடக்கும் வழிகளை ஆராய்ந்து உதயணனே அதனை வசப்படுத்தும் வன்மை யுடையவனெனத் தெளிந்து அவனைச் சிறையினின்றும் விடுவித்துத் தன்கருத்தைத் தெரிவித்தான்.

உதயணன் தன் யாழிசையால் நளகிரியை யடக்கி அதன்மேல் ஊர்ந்து சென்று பிரச்சோதனன்முன் நின்றான். நகரமாந்தர் யாவ ரும் உதயணனைப் புகழ்ந்து பாராட்டினர். அக்காலத்தில் பிரச்சோதன னுடைய குமாரியாகிய வாசவதத்தையென்பவள், 'இத்தகைய மகா வீரனைப்பார்க்கவேண்டும்' என்ற எண்ணத்துடன் மேல் மாடத்தில் நின்று உதயணனை நோக்கினாள். அவனும் அவளை நோக்கினான். ஊழின் வசத்தால் இருவரும் ஒருவரை யொருவர் விரும்பிக் காதல் பூண்டனர்.

பின்பு அரசனுடைய வேண்டுகோளின்படி உதயணன் அவ்வனுடைய புதல்வர்களுக்கு வில்வித்தை முதலியவற்றையும் புதல்வி வாசவதத்தைக்கு யாழ்வித்தையையும் கற்பித்து அவனால் நன்கு மதிக்கப்பெற்முன். பிரச்சோதனன் உதயணனைத் தக்க படைவலியுடன் கௌசாம்பி நகரத்துக்கு அனுப்ப எண்ணியிருந்தான்.

இடையே உச்சயினியில் யூகியின் ஏவலால் பாகீரதியென்பவள் தெய்வாவேசமுற்றவளைப்போல நடித்து, "முன்பு நீர்விழாச் செய்யாமையினால் யானையைக்கொண்டு ஊரை அழிப்பித்தவள் யானே; இனியேனும் அதனை மறவாதீர்கள்" என்று உச்சயினியிலுள்ளாரை நீர்விழாச் செய்யும்படி தூண்டினாள். ஆதற்காக நகரத்தார் புறத்தே சென்றிருந்தபொழுது யூகியின் ஏவலாளர் நகரில் தீ மூட்டினர். அதனால் நீர்விழாச்செய்தற்கு வந்திருந்த நகர மாந்தருள் கலக்கம் நேர்ந்தது. அப்பொழுது பிரச்சோதனன் வாசவதத்தையைப் பாதுகாக்குமாறு அவளை உதயணனிடம் ஒப்பிக்கச்செய்தான். வயந்தகனென்னும் தோழனால் யூகியின் கருத்தையறிந்த உதயணன் வாசவதத்தையை அவள் தோழி காஞ்சனமாலை யென்பவளுடன் பத்திராபதி யென்னும் பெண்யானையின்மேல் ஏற்றிக்கொண்டு பிரச்சோதனனுடைய நாட்டைக் கடந்து சென்றான். வழியிற் பாலைநிலத்தில் உள்ள வேட்டுவர்கள் சூழ்ந்துகொள்ளவே, தன் சேனையுடன் அங்கேவந்த இடபகனென்னும் தோழனால் ஆதரிக்கப் பெற்றுத் தனது பெரிய நகர்களுள் ஒன்றாகிய சயந்தியை அடைந்தான்.

(2.—இலாவாணகாண்டம்.)

உதயணன் வாசவதத்தையோடு சயந்தி நகரத்தை அடைந்த காலத்தில் அந்நகரமாந்தர்கள் அவர்களைப் பலவகையாக உபசரித்து வரவேற்றனர். அந்நகரத்தில் அவ்விருவர்களுக்கும் மிகவும் சிறப்பாக மணம் நிறைவேறியது. சில காலத்துக்குப் பின்னர் அவன் ஜினதேவன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தை வலம்வந்து அக்கடவுளை வழிபட்டான். அப்பால் நகரமாந்தர் கண்டுமகிழ வாசவதத்தையுடன் நகரத்தை வலங்கொண்டு இரவும் பகலும் அவளைப் பாராட்டிக்கொண்டு அந்நகரத்தில் இருந்தான்.

உதயணன் இங்ஙனம் இருப்ப, யூகி உச்சயினி முதலிய இடங்களிற் செய்விக்கவேண்டியவற்றைச் செய்வித்து அறியவேண்டுவனவற்றை அறிந்து விரைவாகச் செல்லும் ஓர் எந்திரத்

தேரிலேறி இடபகனிருந்த புட்பக நகரத்திற்கு வந்தான். அங்கே உதயணன் காமபரவசனாகி யிருத்தலை இடவகனால் அறிந்து அரசியலை மேற்கொள்ளும்படி உதயணனைச் செய்வித்தற்பொருட்டுச் சில காரியங்களை மறைந்திருந்து செய்யக்கருதினான்; தான் இறந்து போனதாக நடித்து அஃது உண்மையென்றே அயலாரை நம்பச் செய்தான்.

வாசவதத்தையின் செவிலித்தாயாகிய சாங்கியத்தாய் என்பவள் உதயணனையும் வாசவதத்தையையும் முறையே சார்ந்து அளவளாவி, அவன் முக்கிய மந்திரியாகிய உருமண்ணுவாவுடன் வயந்தகனென்னும் மற்றொரு மந்திரியைக்கண்டு யூகி கூறிய மந்தணச் செய்தியைச் சொன்னாள். பிறகு வயந்தகன் எழுதித் தந்த உதயணனது படத்தைக் கொண்டு சென்று உதயணனுக்குக் காட்டவும் அதில் உள்ள ஒரு சிறப்புக் குறிப்பால் யூகி இறந்தானென்றறிந்து அவன் மூர்ச்சித்தான். அப்பால் ஒருவகையாகத் தெளிந்து யூகியின் அருஞ்செயல்கள் பலவற்றைச் சொல்லிப் புலம்பினான்; அதுகண்ட தோழர்கள் அவனைத் தேற்றினர். உருமண்ணுவா உதயணனது துன்பத்தை நீக்குதற்கும் ஒரு முனிவர்பாற் குறிகேட்டற்குமாக இலாவாண நகரின் அயலதாகிய மலைச்சாரற் சோலையில் உண்டாடற்குச் சயந்திநகரத்தாருடன் அழைத்துச் செல்லுதற்கு உதயணனை உடன்படச்செய்வித்தான்.

சயந்தி நகரத்திலுள்ள ஆடவரும் மகளிரும் அரசன் கட்டளைப் படியே பலவகையான நுகர்பொருள்களுடன் இலாவாண நகரத்தின் அயலிலுள்ள மலைச்சாரலிற் சென்று உண்டாடினர். அங்கே சென்ற உதயணன் முனிவர் ஒருவரைத் தரிசித்து யூகி உயிருடனிருப்பதையும் அவனையடைதல் கூடுமென்பதையும் அவர் கூறக் கேட்டுத் துன்பம் நீங்கினான். அப்பால் உதயணனும் வாசவதத்தையும் அங்கே உண்டாடி மகிழ்ந்தனர்.

பின்பு உதயணன் ஓர் ஆச்சிரமத்தை யடைந்து வயந்தகனுடன் இருந்தான். அப்போது ஒரு முனிவருடைய மகளாகிய விரிசிகை யென்பவள் பலவகை மலர்களைப் பறித்து வந்து, "யானும் என் பாவையும் அணிந்து கொள்ளும்படி இவற்றை மாலையாகத் தொடுத்துத் தருக" என்று வேண்டினாள். உதயணன் அங்ஙனமே செய்தளித்தவுடன் அவள் அம்மாலையை அணிந்துகொள்ள அறியாமல் வருந்துவதையறிந்து அழைத்துத் தன் மடிமீதுவைத்து அவளுக்கு அதனைச் சூட்டிவிடுத்தான்.

அவன் விரிசிகைக்கு மாலைசூட்டியது முதலியவற்றைக் கண்டு வாசவதத்தை மிக ஊடினாள். அவளை அவன் பலவகையாகப் பாராட்டி உணர்த்தவும் அவள் சிறிதுஞ் சினந்தணியாதிருக்கையில் திடீரென்று விரைந்து வந்த ஒரு முசுக்கலையைக்கண்டு அஞ்சிய அவள் ஓடிவந்து அவனைத் தழுவிக் கொண்டு ஊடல் நீங்கினாள்.

உதயணன் வாசவதத்தையோடு இன்புற்று அரச காரியங்களை மறந்திருந்தான்; அவனை யூகி வாசவதத்தையினின்றும் பிரிக்கக் கருதினான்; மலைச்சாரலில் உலாவி இன்புறும் அவ்விருவரையும் சாங்கியத் தாயைக்கொண்டு இலாவாண நகரத்தில் இருக்கும்படி முதலிற் செய்வித்தனன். அப்பால் வாசவதத்தையின் வேண்டுகோளின்படி உதயணன் காடுசென்று வேண்டுவன கொண்டு மீளுவதற்குள் அரண்மனையில் தீப்பற்றச் செய்வித்து உள்ளேயிருந்த வாசவதத்தையைச் சாங்கியத்தாயுடன் அதிலிருந்த சுருங்கைவழியே தான் இருக்குமிடத்திற்கு வருவித்து உண்மை கூறி அவளைத் தேற்றினான். தோழர்கள் வாசவத்தையின் அணிகலங்களைமட்டும் தீப்பட்ட இடத்தில் ஓரிடத்தே அமைத்து வைத்திருந்தனர்.

வாசவதத்தைக்கு வேண்டுவனவற்றைக் கையிலேந்திக்கொண்டு காட்டிலிருந்து புறப்பட்டு வழியில் தீய நிமித்தங்களைக் கண்டு கவலையுற்றுவரும் உதயணன் அரண்மனை தீப்பற்றி எரிதலைக்கண்டு வாசவதத்தை இறந்திருப்பாளென்றெண்ணி மூர்ச்சித்து விழுந்தான்; பிறகு தோழர்தேற்ற ஒருவாறு தேறியெழுந்து மிக வருந்தி, 'யானும் இறப்பேன்' என்று சொல்லிக்கொண்டு அத்தீயில் விழச்சென்றான். தோழர் பல நியாயங்களைக் கூறித் தடுத்தனர். அதனால் தடையுண்டு அவன் வாசவதத்தையின் தலைக்கலன்கள் முதலியவற்றை வருவித்து ஒவ்வொன்றையும் நோக்கிப் புலம்பினான். தோழர்கள் சிற்றின்பத்தால் உளதாகும் பெருந்தீங்கை அவனுக்கு எடுத்துக் கூற அவன் ஆறுதலுற்றிருந்தான்.

அவனது நிலையை யறிந்த யூகி முதலிய மூவரும் வேறிடஞ் செல்லக்கருதி ஒருவகை மருந்தையுண்டு தம்மைப் பிறர் அறியாதபடி வேற்று வடிவமுற்று ஓர் ஆச்சிரமத்தை யடைந்து ஆங்குள்ளவனும் உருமண்ணுவாவின் தந்தையுமாகிய ஒரு முனிவனைக்கண்டு நிகழ்ந்தவற்றைக் கூறிச் சில நாள் இருந்தனர். அப்பொழுது அங்கே உருமண்ணுவாவால் அனுப்பப்பட்ட காஞ்சனமாலை வந்தடைந்தாள். அப்பால் அந்நால்வரும் அங்கிருந்து புறப்பட்டுச்சென்று அங்க நாட்டிலுள்ள சண்பை நகரத்தில் மித்திரகாமனென்னும் வணிகனுடைய வீட்டில் யாரும் அறியாதபடி மறைந்திருந்தனர்.

(3.—மகத காண்டம்.)

ஏயர் குலத்திற்குப் பழம்பகைவனும் அதுபற்றியே கௌசாம்பி நகரத்தைக் கைப்பற்றியவனுமாகிய பாஞ்சால அரசன் யூகி இறந்த செய்தியையும் வாசவதத்தையை இழந்தமையால் உதயணன் மெலிவுற்றிருத்தலையும் அறிந்து அப்பால் தனக்கு யாதொரு தீங்கும் உண்டாகமாட்டாதென்றெண்ணிக் கௌசாம்பி நகரத்தைப் பாதுகாவாமற் செல்வக்களிப்பால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருந்தனன். அக்காலத்தில் தோழர்கள், பகையை வெல்லுதற்கு முயல வேண்டுமென்று உதயணனை வற்புறுத்தினர். இறந்தவர்களை நினைந்து அவன் பின்னும் வருந்த, அவனை நோக்கி இசைச்சனென்பவன், "இறந்தோர்களைப் பண்டை வடிவத்துடன் தருபவரும் இராசகிரிய நகரத்தில் இருப்பவருமாகிய ஒரு முனிவரைச் சார்ந்து வேண்டிக் கொண்டால் அவரால் தேவி முதலியோரை மீட்டும் பெறுதல் கூடும்" என்றனன்; உடனே உதயணன் முதலியோரும் அறிவு முதலியவற்றிற் சிறந்த நூறுவீரர்களும் வேற்று வடிவும் செயலும் உடையவர்களாய்ப் புறப்பட்டுப் பல இடங்களைக் கடந்து மகதநாட்டை அடைந்தனர். அங்கே உருமண்ணுவா முதலியோர், வாசவதத்தையை மீட்டுத் தருவதாகக் காகதுண்டகனென்னும் முனிவரைக் கொண்டு கூறுவித்து உதயணனைத் தேற்றி அந்தணவுருவங் கொண்ட அவனோடும் இராசகிரிய நகரின்புறத்தே மறைந்திருந்தனர்.

அப்போது, இராசகிரிய நகரத்தார் மன்மதனுக்கு விழாச் செய்யத் தொடங்கினர். அதற்குரிய நாட்களேழனுள் முதல் நாளில் வழிபடுதற்கு மகதமன்னன் தங்கையாகிய பதுமாபதி யென்பவள் போந்து மன்மதனது ஆலயத்தை அடைந்தாள். அவளை உதயணனும் அவனை அவளும் கண்டு தம்முட் காதல் கொண்டனர். பதும்பதி அன்று செய்தற்குரிய தானங்களைச் செய்துவிட்டு அரண்மனையை யடைந்தாள். பிறகு உதயணன் அவள் தோழியாகிய அயிராபதி யென்பவளால் பதுமாபதியின் வரலாற்றை யறிந்து தன் தோழரை நோக்கி, "வாசவதத்தையால் வருந்தும் என் நெஞ்சினைப் பதுமாபதி தன்வயமாக்கியதோடு என்மனத்திற் புகுந்தனள்" என்று தன் கருத்தை உரைத்தான். பின்னும் அவன் வைத்த பூமாலை முதலியவற்றைப் பதுமாபதி கைக்கொள்ள அதனாலும் தோழர்கள் உண்மையை உணர்ந்தனர். பிறகு உதயணன் ஒருநாள் முதுமைவேடம் பூண்டு தானம் வாங்கிச் செல்பவர்களுடன்சென்று காமன் கோட்டத்துள் ஒளித்திருந்து பதுமாபதியின் நட்பைப் பெற்றான்.

அப்பால் அவன் தருசகனுடைய விருப்பத்தை யறிந்து நீரூற்றும் புதையலுமுள்ள இடங்களைக் காட்டி நன்கு மதிக்கப்பட்டு அங்கே இருந்தான். அதனை உணர்ந்த உதயணனுடைய தோழர்கள் வேறு வேறு தொழில்களை உடையவர்களாய் அவனைப்பாதுகாத்துக்கொண்டு அந்நகரில் ஒடுங்கியிருந்தனர். ஒருநாள் காமனது கோட்டத்தைச் சார்ந்த மாடத்திலிருந்த உதயணன் பிறரறியாமற் சிவிகையிற் புகுந்து பதுமாபதியுடன் சென்று அவளுடைய மாளிகையில் மறைந்து ஒடுங்கியிருந்தான். அக்காலத்தில் பதுமாபதி தன் தோழியைக் கொண்டு உதயணனுடைய இசையுணர்ச்சி முதலியவற்றை ஆராய்ந்தறிந்து மகிழ்ந்தனள். அதுகாறும் அவனை யாவரும் ஒரு மறையவனென்றே எண்ணியிருந்தனர்.

அக்காலத்தில் பகையரசர் சிலர் தருசகனோடு போர் செய்தற்கு வந்ததை யறிந்த உதயணன் பதுமாபதியைப் பிரிந்து உருமண்ணுவா முதலியோரைப் போர்செய்ய ஏவினன். அப்போரால் பகையரசர் அஞ்சித் தம் படைகளுடன் இரவில் எழுந்து ஓடினர். பகைவரை வென்ற உதயணன் தனக்குரிய இயல்பான வேடத்தோடே வயந்தகன் வாயிலாகத் தருசகனை அடைந்து அளவளாவினன். அக்காலத்தில் தருசகனை வெல்லக் கருதித் தம்முட் கூடி மீட்டும் போர்செய்தற்கு வந்த பகையரசர் எண்மர் உதயணனால் வெல்லப்பட்டு ஓடிவிட்டனர். அதனால் மகிழ்ந்த தருசகன் பதுமாபதியை உதயணனுக்கு மணஞ்செய்வித்தான். பிறகு உதயணன் பாஞ்சால அரசன்மேல் படையெடுத்துச் சென்று அவனைக் கொன்று அரச உரிமையைப் பெற்றான்.

(4.—வத்தவ காண்டம்.)

உதயணன் அரச உரிமையைக் கைக்கொண்டு போரில் தனக்கு உதவி செய்தவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அனுப்பிக் குடிகளின் குறையைத்தீர்த்துத் தன் நாட்டைப் பரவச் செய்தான். அக்காலத்தில் யூகி வாசவதத்தை முதலியோர் அவன்பால் வந்து சேர்ந்தனர். உருமண்ணுவா முதலியோருக்கு நாடுமுதலியவற்றைச் சீவிதமாகக் கொடுத்து உதயணன் கோசம்பி நகரத்தில் வாழ்ந்திருந்தான்.

ஒருநாள் வாசவதத்தையின் தோழியர்களுள் ஒருத்தியாக இருந்த கோசலத்தரசன் மகளாகிய மானனீகை என்பவள் பந்தாடுகையில் உதயணன் கண்டு காமுற்று அவளை மணந்தனன். இளமைப்பரு

வத்தில் உதயணனால் மாலை சூட்டப்பெற்ற விரிசிகை என்பவள் "வேறொருவரையும் மணவேன்" என்றிருத்தலை அவளுடைய தந்தையாகிய முனிவனால் அறிந்த அவன் அவளையும் வருவித்து மணஞ் செய்து கொண்டனன்.

(5.—நரவாண காண்டம்.)

இங்ஙனம் வாழ்ந்துவந்த காலத்தில் வாசவதத்தைக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு நரவாணதத்தன் என்னும் பெயரிட்டனர். அப்பால் பதுமாபதியும் ஒரு மகனைப்பெற்றாள். அவனுக்குக் கோமுகன் என்னும் பெயர் இடப்பெற்றது.

நரவாணதத்தன் நாள்தோறும் வளர்ச்சியுற்றுக் கல்வியிலும் வீரத்திலும் சிறந்து விளங்கினன். அப்பால் அந்நகரத்திலுள்ள மதனமஞ்சிகை என்பவளைக் காமுற்று அவளை அவன் மணந்தான்.

கௌசாம்பி நகரத்தில் மிக்க சிறப்புடன் விழாவொன்று நடந்தது. அதனைக் காண விரும்பிவந்த வித்தியாதர அரசனாகிய மானசவேகன் என்பவன் மதனமஞ்சிகையைத் தன் நகருக்கு எடுத்துச் சென்று அவள்பால் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். அவள் உடன்படாமல் மறுக்கவே அவன் ஏங்கி, "மதனமஞ்சிகையின் மனத்தை எப்படியாவது வேறுபடுத்திவிட்டு வா" என்று தன் தங்கையாகிய வேகவதியென்பவளை அனுப்பினன். அவள் வந்து மானசவேகனது உயர்வை எடுத்துக்கூறி, "நீ என் தமையனுக்கு உரியவளாக இருப்பாயாயின், மிக்க இன்பத்தை அடைவாய்" என்று காரணங்காட்டிப் பல்வாறு வற்புறுத்திக் கூற மதனமஞ்சிகை, "அழகு, கல்வி, வீரமுதலியவை எல்லாவற்றிலும் மேம்பட்டுச் சிறந்து விளங்கும் என் தலைவன் நரவாணதத்தனை இனி அடையேனாயின் யான் உயிரை நீத்தல் ஒருதலை" என்று கூறி மறுத்தனள்.

அப்பால் வேகவதி, தன் தமையனது கட்டளையை மறந்து நரவாணதத்தன்பால் வேட்கையுற்று விமானமூர்ந்து புறப்பட்டு வந்து கௌசாம்பியை யடைந்தனள். அப்போது நரவாணன் மதனமஞ்சிகையின் பிரிவாற்றாமல் வருந்தி மயங்கிச் சோலையெங்கும் அவளைத்தேடி அலமந்து உழலுதலைக் கண்டு அவன் வடிவைப் பார்த்து வியந்து விருப்பம் மிகப்பெற்று ஒருமந்திரவலியால் மதனமஞ்சிகையின் வடிவத்தை எடுத்துக்கொண்டு ஒரு கொடிவீட்டிலிருந்தாள். அங்கே மதனமஞ்சிகையைத் தேடிவந்த நர

வாணன் வந்துகண்டு கவலையொழிந்து மிக்க பரபரப்புடன் அவளைத் தழுவியின்புற்றான். பின்னர் அவன் ஐயுற்று, "நீ யார்?" என்ன, அவள் தான் இன்னாளென்பதையும் தன் தமையனாகிய மானசவேகன் மதனமஞ்சிகையை விரும்பிக் கைப்பற்றிச் சென்றது முதலியவற்றையும் கூறித் தன்து உண்மை உருவத்தைக் காட்டினள். கண்ட நரவாணன் மகிழ்ந்து மதனமஞ்சிகையை மறந்து வேகவதி பால் அன்புற்று அவளுடன் எப்பொழுதும் இருப்பானாயினன்.

இவர்கள் இப்படியிருக்க, மானசவேகன் சென்ற தன் தங்கையைக் காணாகிப் பல இடங்களிலும் தேடிக்கொண்டு வந்து கௌசாம்பியைச் சார்ந்த சோலையில் அவ்விருவரையுங்கண்டு சினமுற்று அவர்களைப் பற்றிக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் செல்லும்பொழுது இடைவழியில் நரவாணனைத் திடீரென்று கீழே தள்ளிவிட்டான்; வேகவதி தன் மந்திரவலியால் அவனுக்கு யாதொரு துன்பமுந்தோன்றாதபடி செய்வித்தனள். நரவாணன் [1]சதானிக முனிவருடைய தவப் பள்ளியில் வீழ்ந்தான். அவர் ஞானத்தால் அவனை இன்னானென்று அறிந்து, "உதயணனுடைய புதல்வனே! உனக்கு மங்களமும் அறிவுமுண்டாகுக" என்றனர்; "நம் தந்தையின் பெயரை இவர் எப்படியறிந்தனர்?" என்று வியப்புற்ற அவன், "தேவரீர் யாவர்?" என்று கேட்ட பொழுது அவர், "யான் உன்னுடைய தந்தையின் தந்தை" என்றதன்றித் தம் வரலாறு முழுவதையுங் கூறினர். அவன், "வித்தியாதரருலக ஆட்சியை நான் பெறுதல்கூடுமென்று முன்னம் கேட்டுள்ளேன். அதனைப் பெறுதற்கு உபாயம் யாது?" என்று கேட்ப அவர், "உன்னுடைய நகரமடைந்து உதயணன்பால் ஆகாய மார்க்கமாகச் செல்லுதற்குரிய விச்சையைப்பெற்று அதனால் அந்த ஆட்சியைப் பெறுவை" என்றனர். பின்பு நரவாணன் கோசம்பியை அடைந்து உதயணனால் மேற்கூறிய மந்திரத்தை உபதேசித்தனன்; பின்பு விமானமூர்ந்து சென்று விசயார்த்த மென்னும் மலையின் தென்பாலுள்ள ஸ்ரீதரமென்னும் நகரத்தை அடைந்து அதன்கோட்டைவாயிலில் தங்கியிருந்தனன்.

அப்பொழுது ஒருவன் வந்து வணங்கி, "கந்தருவபுரத்தின் அரசனாகிய நீலவேகனுக்கு நாகதத்தையென்பவள்பாற்றோன்றிய அநங்க விலாசனியென்பவள், முன்னொருநாள் துயிலும்பொழுது ஒரு சிங்கக்குட்டி பூமியிலிருந்து வந்து தனக்கு மாலைசூட்டியதாகக் கனவொன்றைக் கண்டு அதனைத் தந்தைக்குத் தெரிவித்தனள். அவன்

1 இவர் உதயணன் தந்தை.

சுமித்திரனென்னும் முனிவரிடம் அக்கனவைத் தெரிவித்து அதன் பயனை வினவினன். அவர், 'பூமியிலிருந்து தீரனான ஒரிளைஞன் வந்து உன்மகளுக்கு மாலைசூட்டுவான்; பின் அவன் இங்கே சக்கர வர்த்தியுமாகி எல்லா அரசர்களையும் அடக்கி ஆள்வான்' என்றுவிடை யளித்தனர். அளிக்கவே உம்முடைய நல்வரவை நாடோறும் நோக்கிக்கொண்டேயிருக்கும் அவன் நீர் இங்கே வந்தமையறிந்து தன்பால் உம்மை அழைத்துவரும்படி கட்டளையிட்டனன்" என்று தெரிவிக்க, நரவாணன் மகிழ்ந்து அவனுடன் அவ்வரசனையடைந்து அவன்வேண்டுகோளின்படி அநங்கவிலாசனியை மணந்தான். அவனது விறலையறிந்த அவ்வுலகத்து அரசர்களெல்லோரும் வந்து வணங்கிப்பணிந்து திறைகொடுத்து அவன் கட்டளைப்படி ஒழுகுவாராயினர். அச்செய்திகளையறிந்த மானசவேகன் மிகவுமஞ்சித் தன்னிடமிருந்த மதனமஞ்சிகையை அழைத்துவந்து நரவாணன்பாற் சேர்ப்பித்துவிட்டு, "என்குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்" என்று வேண்டினன்; பின்பு அவன் தன் தங்கை வேகவதியையும் அன்புடன் நரவாணனுக்கு மணஞ்செய்வித்தனன். நரவாணன் அவளோடும் வேகவதி, அநங்கவிலாசனியென்பவர்களோடும் பின்பு அங்கே மணஞ்செய்த எண்ணாயிரந் தேவிமாரோடும் இருந்து ஒற்றைச் செங்கோல் செலுத்திச் சக்கரவர்த்தியாகி அவ்வுலகை ஆண்டு வந்தான்.

அக்காலத்தில் தன் இருமுதுகுரவர்களைத் தரிசிக்க விரும்பி மனைவிமாரோடும் பரிசனங்களோடும் புறப்பட்டுக் கௌசாம்பி நகரு மடைந்தான். தாய்தந்தையரை வணங்கிப் பதுமையின் புதல்வனை கோமுகனை இளவரசாக நியமிக்கும்படி தந்தையை வேண்டி அவ்வண்ணஞ் செய்வித்துவிட்டு விடைபெற்று மனைவிமார் முதலியவர்களோடு வித்தியாதர உலகத்தை அடைந்து அரசாட்சி செய்து கொண்டு வாழ்வாராயினன்.

(6.—துறவுக் காண்டம்.)

உதயணன், தனக்கு யூகி மந்திரியானதும் வாசவதத்தை மனைவியானதும் வித்தியாதர சக்கரவர்த்தியாக விளங்கும் நரவாணதத்தன் புதல்வனானதும் பிறநலங்களும் தவத்தின் பயனேயாதலால், பின் தான் மேற்கொள்ளற்பாலது தவமேயென்று துணிந்து செல்வத்தை வெறுத்தனன். அதனையறிந்த தேவிமார் நீர்விளையாட்டு முதலியவற்றால் அவன் மனத்தை வேறுபடுத்தித்

தம்மையே கருதி ஒழுகச்செய்ய, அவன்மனம் அந்தவழியிற் சிலநாட்கள் சென்றது. பின்பு ஒருநாள் அவனுடைய பட்டத்துயானை மதங்கொண்டு புறப்பட்டு நகரை அழிக்கத்தொடங்கி யாருக்கும் அடங்காமற் பாகர்களையும் குத்துக்கோற்காரரையும் பிளந்தெறிந்தது; அதனால் நகரம் நடுங்கியது.

அக்காலத்தில் அந்நகரத்தை அடுத்த சோலையொன்றில் தவத்தாற் சித்திபெற்ற சாரணர் பலர் வந்து தங்கினார்கள். அவர்களுக்குத் தலைவரான தருமவீரரென்பவர் தம்மை அடைந்தவர்களுக்கு வழக்கப்படி அங்கே தருமோபதேசஞ் செய்துவருவாராயினர். அவ்வுபதேசமொழிகளை விலங்குகளும் பறவைகளும் கேட்பனவாய்த் தத்தஞ் செயல்களைமறந்து உணவொழிந்து தாம்செய்த பாவங்களை நினைந்து துன்புற்ற வண்ணமாய் அடங்கிநின்றன; மேற்கூறிய பட்டத்து யானையும் இயல்பாகவே அங்கேவந்து அந்த அறவுரையைக் கேட்டுக் கோபம்நீங்கித் தன்பாவச்செயல்களுக்கு அஞ்சிக் கண்ணீரை உகுத்துக்கொண்டு யாதொரு கொடுஞ்செயலுமின்றி அரண்மனைவாயிலில் வந்து நின்றது.

வாயில்காவலர் யானை வந்து அடங்கிநிற்பதை அரசனுக்குத் தெரிவிக்க, அவன்வந்து பார்த்து வியப்புற்று நிற்கையில் யூகி, 'ஏதோ அறவுரையைக்கேட்டு இது பக்குவமுற்று அடங்கி நிற்கின்றது போலும்: இனி ஊர்ந்து செல்லுதற்கு இது தகுதியுள்ளது" என்றனன். உதயணன் அதன் பிடரியில் ஏறியபொழுது யானை அவனை மிக்க விருப்பத்துடன் தாங்கிக்கொண்டு சென்று மேற்கூறிய வனத்தையடைந்து நின்றது. அரசன் அவ்வனத்திற் பெரியோர் பலர் வந்திருத்தலையறிந்து இறங்கி வழிபாட்டுடன் சென்று தருமவீரமுனிவரை வணங்க, அவர் அவனுக்கு ஓர் இருக்கை அளித்துத் தருமோபதேசஞ் செய்தனர். அதனைக்கேட்ட அரசன் இன்புற்று, "இந்த யானையின் பண்டை வரலாறு என்ன?" என்றுகேட்ப அவர், "சாலியென்பதொரு நாட்டில் கடகமென்பதோர் ஊரிலுள்ள இடபகனென்பவனும் அவன் மனைவி சாலியென்பவளும் இல்லறம் நடத்திக்கொண்டு வருகையில், அவன் பண்டைப் பாவவசத்தால் அமரிகையென்னும் ஒரு கணிகை வயத்தனாய்க் குலவொழுக்கத்தை விட்டு மிக்க பாவச்செய்கைகளைச் செய்தனன். இறந்த பின்பு அவனே இந்த யானைப்பிறப்பை அடைந்தனன்; அதனால் இது தருமங்களைக் கேட்டவுடன் அடங்கி நின்றது" என்றனர்.

கேட்ட உதயணன் அதை நன்கு பாதுகாக்கும்படி பாகர்களுக்குக் கட்டளையிட்டு அதன் பக்கத்தை அடைந்து, "யானையரசே! உனக்கு யான் செய்வித்த துன்பங்களைப் பொறுத்துக்கொள்" என்று சொல்லி அதனை அன்புடன் தைவந்து தன்னிடம் அடைந்தனன்.

அப்பால் அரசனுக்கு வைராக்கியமுண்டாக, அவன் நரவாணதத்தனை வருவித்து, "நீ இந்த அரசாட்சியை ஒப்புக்கொள்; துறந்து தவஞ்செய்தற்கு என்மனம் விரைகின்றது" என்றுசொல்ல, அவன் வணங்கி, "அடியேனுக்கும் அரசாட்சியிற் சிறிதும் விருப்பமில்லை; துறத்தற்கே என்மனம் விரைகின்றது" என்று தன் கருத்தைத் தெரிவித்தான்; பின் உதயணன் பதுமையின் புதல்வனாகிய கோமுகனை அழைத்து அவனுக்கு முடிசூட்டிவிட்டுச் சென்று தேவியருக்குத் தன் கருத்தைத் தெரிவித்தனன். அவர்களும் உடன்வந்து தவஞ்செய்வதாகக் கூறினர். யூகி முதலிய மந்திரிகள் நால்வரும் வாசவதத்தை முதலிய தேவிமாரும் பிறரும் புடைசூழ்ந்துவர, உதயணன் தவவனஞ்சென்று அங்கே தவஞ்செய்து கொண்டிருந்த தருமச்சுருதியென்னும் முனிவரைச் சரணமடைந்து துதித்து, "அடிகேள்! தவவழிகளை உபதேசித்து அடியேங்களை உய்வித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனன். அவர் ஜினதருமங்களை விரிவாக உபதேசித்தனர். பின்பு அவன் அப்பொழுது செய்யவேண்டிய நியமங்களை முடித்துக்கொண்டு தியானுதிகளைச் செய்வானாயினன். தவவொழுக்கமும் ஒளியும் அவன்பாற் சிறந்து விளங்கின.

பின்பு உதயணமுனிவன் யோகசமாதியைச் செய்து முடித்துச் சித்தபதத்தை அடைந்தான். தேவியரும் மந்திரிகளும் தவஞ்செய்து கற்பலோகத்தை அடைந்து இன்புற்று வாழ்ந்தார்கள்.

உ

கணபதி துணை

பெருங்கதை

முதலாவது உஞ்சைக் காண்டம்.

௩௨—கரடு பெயர்த்தது.

(பிரச்சோதனனை நோக்கி உதயணன் கூறல்)

.............*பொருள்புரி நூலும்
அலகை சான்ற வுலக புராணமும்
பலவகை மரபிற் பாசண் டியர்கள்
சலசல மிழற்றுஞ் சமய விகற்பமும்
இசையொடு சிவணிய யாழி னூலும்
நாடகப் பொருளும்...............
உப்பாற் பொருளு முட்கொண் டடக்கி
உளப்பா டுடைமை [1]யுதயண னுரைத்தலும்

(பிரச்சோதனன் உட்கோள்)

இனைத்தோ ரிளமையொ டினைப்பல கேள்வியும்
தவத்தது பெருமையிற் றங்கின விவற்கென
மருட்கை யுற்றதன் மனம்புரிந் தருளி

(வியந்த அரசன் விளம்பல்)

எம்முடை யளவையிற் பண்புறப் பேணி
நும்பதிப் பெயர்க்கு மளவையி னும்பியர்
நின்வழிப் படுகென [2]மன்னவ னுரையாக்
குலங்கெழு குமரரைக் குற்றே லருளிக்
கலந்தவ ணின்ற கட்டுரைக் காலத்துத்

---

* இதற்கு முன்னுள்ள பகுதிகள் கிடைக்கவில்லை.

பிரதிபேதம். 1 உதயனன். 2 மன்னவற்குரையா, மன்னவற்குரைப்ப.

(உதயணனும் வாசவதத்தையும் தம்முள் ஒருவரையொருவர் நோக்குதல்)

தென்கட லிட்டதோர் திருமணி வான்கழி
வடகட னுகத்துளை வந்துபட் டாஅங்கு
நனிசே ணிட்ட நாட்டின ராயினும்
[1]பொறைபடு கருமம் பொய்யா தாகலிற்
சிறைபடு விதியிற் சென்றவட் குறுகி
மதியமு ஞாயிறுங் [2]கதிதிரிந் தோடிக்
கடனிற விசும்பி னுடனின் றுங்குப்
பைந்தொடிச் சுற்றமொடு தந்தை தலைத்தாள்
ஆயத் திடையோள் பாசிழைப் பாவை
யானை மிசையோன் மாமுடிக் குருசில்
இருவரு மவ்வழிப் பருகுவனர் நிகழ

(அரசன் கூற்று)

யாதனிற் [3]சிதைந்ததிவ் வடற்பெருங் களிறென
வேழ வேட்டம் விதியின் [4]வினைய
கதிர்முடி வேந்தன் கண்ணிய நுண்பொருட்

(இருவர் செய்திகள்)

கெதிர்மொழி கொடாஇய வெடுத்த சென்னியன்
மன்னவன் முகத்தே மாதரு நோக்கி
உள்ளமு நிறையுந் தள்ளிடக் கலங்கி
வண்டுபடு [5]கடாஅத்த வலிமுறை யொப்பன
பண்டு கடம் [6]படாஅ பறையினுங் கனல்வன
விடற்கருந் தெருவினுள் விட்ட செவ்வியுட்
டடக்குவரை நில்லாது தோட்டி நிமிர்ந்து
[7] மதக்களி றிரண்டுடன் மண்டி யாஅங்
கில்வழி வந்ததம் பெருமை பீடுறத்
தொல்வழி [8]வயத்துத் தொடர்வினை தொடர
வழுவில் போகமொடு வரம்பின்று நுகரும்
உழுவ லன்பி னுள்ளந் தாங்கி
இழையினுங் கொடியினு மிடியினும் பிணங்கித்

பி - ம். 1 முறைபடு. 2 கதிர்திரிந்து. 3 சிதைந்ததிவ்விடர்ப். 4 வினைஅய்க். 5 கடாத்து. 6 படாஅப்பறையினும். 7 வயக்களிறு. 8 வசுத்து.

தேனினும் பாலினுந் தீஞ்சுவைத் தாகிக்
குலத்தினுங் குணத்தினுங் கூடிய வன்பினும்
இனத்தினும் பிறவினு மிவ்வகை யிசைந்த
அமைப்பருங் காதலு மிமைப்பினு ளடக்கி
ஒருவயிற் போல் வுள்ளழி நோக்கமொ
டிருவயி னொத்தஃ திறந்த பின்னர்த்

(உதயணன் செயல்)

தாரணி வேந்தன் றலைத்தா ணிகழ்ந்தது
காரண மாகக் காத றேறி
ஓர்ப்புறு நெஞ்சந் தேர்ச்சியிற் றிருத்திப்
பேர்த்தவன் வினவிய பெருங்களிற் றிலக்கணம்
போர்த்தொழில் வேந்தன்முன் பொருந்தக் காட்டி
நீல யானை நெஞ்சுபுக் கனன்போற்
சில விகற்பந் தெரிந்தன னுரைக்கலும்
அதுமுன் னடக்கிய [1]மதியறி பாகரொ
டங்கை விதிர்த்தாங் கரசவை புகழப்

(பிரச்சோதனன் செயல்)

பைந்தொடிச் சுற்றமொடு பரிசனம் போக்கி
விழுநிதி யடுத்த கொழுமென் செல்வத்துக்
[2] கணக்கரை வியன்கரக் கலவறை காக்கும்
திணைத்தொழி லாளரைப் புகுத்துமி னீங்கெனப்
புறங்காற் றாழ்ந்து போர்வை முற்றி
நிலந்தோய் புடுத்த நெடுநுண் ணுடையர்
தானை மடக்கா மான மாந்தர்
அண்ணுந் தியலா வான்றுபுரி யடக்கத்துக்
கண்ணி நெற்றியர் கைதொழூஉப் புகுதரக்
களிறுவழங்கு தடக்கையிற் காண்வரக் கொண்ட
[3] வெள்ளேட் டங்கண் வித்தக மெழுதிய
கடையெழுத் தோலைக் கணக்குவரி காட்டி
முன்னுறு [4]கிளவியிற் பண்ணுறப் பணிக்கலும்

பி - ம். 1 மதியணி பாகர். 2 கணக்குரைவியனகர்க் கல்லறை. 3 வெளிறேட்டங்கண். 4 கிளவியுட்.

(கணக்கர் முதலியோர் உதயணனுக்காகக் குஞ்சரச்சேரி மாளிகையில் பலபொருள்களைத் தொகுத்தல்)

பன்மணி விளக்கும் பள்ளிக் கட்டிலும்
பொன்னி னடைப்பையும் பூரண கலசமும்
கவரியுங் கடகமுங் கதிர்முத் தாரமும்
நிகரின் மாண்கல நிதியொடு நிறைந்த
ஆரியச் செப்பும் யவனமஞ் சிகையும்
பொன்செய் பேழையொடு பொறித்தாழ் நீக்கி
[1] நன்கனம் படுத்து நகுமலர் பரப்பி
விரைவிரி யாளர் புரைவுறப் [2]புணர்த்த
பண்டம் புதைத்த வண்டுபடு வளநகர்
மடையரு மகளிரு மல்லரு மமைச்சரும்
கடையருங் கணக்கருங் காப்பரு முளப்பட
இறைவினை திரியாப் பழவினை யாளரை
வழிமுறை மரபிற்றங் தொழின்முறை நிறீஇ
வாய்மொழி விதியின் மேவன வெல்லாம்
நோக்கி மன்ன நுவலருங் காப்பின்
அணிந்தது நகரெனப் பணிந்தவ ருரைக்கலும்

(பிரச்சோதனன் செயல்)

குஞ்சரச் சேரிக் குமரற் கியற்றிய
வெண்சுதை நல்லி லுறையு ளாக
இடம்புகு தக்கன் றிருத்த னெடிதெனப்
பேரியல் வையம் பின்செல வருளி
வீரிய வேந்தன் விடுத்தகம் [3]புக்கபின்

(உதயணன் செயல்)

விட்டுழல் யானை யச்ச நீக்கி
வெறிகோள் பண்ணியுந் தொழிறலைப் பெயர்த்தவன்
கலிகொ ளாவணங் கைதொழப் போகி
அரைமதி யிரும்பொடு கவைமுட் [4] கரீஇ
பீலி சுற்றிய வேணு வெண்காழ்
யானை யிளையரைத் தானத்துப் பிணிக்கெனத்
தகைமலி வேழந் தலைக்கடை யிழிதந்
தகம்புக் கனனா லரசவை விடுத்தென்.

௩௨—கரடு பெயர்த்தது முற்றிற்று.

பி-ம். 1 நன்கலம். 2 புணர்ந்த. 3 புக்கனன். 4 செரீஇப்.

௫௫—மாலைப் புலம்பல்.

(உதயணன் செயல்)

அரசவை விடுத்தபி னணிநகர் முன்னித்
தொடர்பூ மாலைக் கடைபல போகி
ஆந்தக் கேணியு மெந்திரக் கிணறும்
தண்பூங் காவுந் தலைத்தோன் றருவிய
வெண்சுதைக் குன்றொடு வேண்டுவ பிறவும்
இளையோர்க் கியற்றிய விளையாட் டிடத்த
சித்திரப் பூமி வித்தக நோக்கி

(உதயணன் ஐயமுறல்)

ஒட்டாக் கிளைஞரை நட்பினுட் கெழீஇய
ஐயிரு பதின்ம ரரக்கி னியற்றிய
பொய்யி லன்ன பொறியிவன் புணர்க்கும்
கையுங் கூடுங் கால மிதுவென
ஐய முற்று மெய்வகை நோக்கிச்
சிறப்புடை மாணகர்ச் செல்வங் காண்கம்
உழைச்சுற் றுளரைப் [1]புகுத்துமின் விரைந்தெனத்

(உதயணன் தெளிதல்)

தலைக்கூட் டுபாயமொடு தக்கோன் றெரிந்து
முட்டு முடுக்கு மிட்டிடை கழியும்
கரப்பறை வீதியுங் கள்ளப் பூமியும்
மரத்தினு மண்ணினு மதியோர் புணர்க்கும்
எந்திர மருங்கி னிழுக்க மின்மை
அந்நிலை மருங்கி ஞசற நாடி
வஞ்ச மின்மை நெஞ்சிற் றேறிச்

(உதயணன் காணுங் காட்சி)

சந்தன வேலிச் சண்பகத் திடையதோர்
வேங்கையொடு தொடுத்த விளையாட் டூசற்
றூங்குபு மறலு முழைச்சிறு சிலதியர்
பாடற் பாணியொ டளைஇப் பல்பொறி

பி - ம். 1 புகுத்துமினீங்கெனத் தலைக்கட்டுபாயமொடு.

ஆடியன் மஞ்ஞை யகவ வயலதோர்
வெயில்கண் போழாப் பயில்பூம் பொதும்பிற்
சிதர்தொழிற் றும்பியொடு மதர்வண்டு மருட்ட
மாத ரிருங்குயின் மணிநிறப் பேடை
காதற் சேவலைக் கண்டுகண் களித்துத்
தளிப்பூங் கொம்பர் விளிப்பது நோக்கியும்
பானிறச் சேவல் பாளையிற் பொதிந்தெனக்
கோண்மடற் கமுகின் குறிவயிற் காணாது
பவழச் செங்காற் பன்மயி ரெருத்திற்
கவர்குர லன்னங் கலங்கல் கண்டும்
தனித்துளங் கவல்வோன் றன்வீழ் மாதர்
மணிக்கேழ் மாமை மனத்தின் [1]றலைஇப்
புள்ளுப்புலம் புறக்க வுள்ளுபு நினைஇ
மன்றனு ளொருசிறை நின்ற பாணியுட்

(சூரியன் அத்தமித்தல்)

சென்றுசென் றிறைஞ்சிய சினந்தீர் மண்டிலம்
கூடுறு பாண்டிலிற் சுருங்கிய கதிர்த்தாய்க்
கோடுய ருச்சிக் குடமலைக் குளிப்ப
விலங்கும் பறவையும் [2] வீழ்துணைப் படரப்

(மாலைக்கால வருணனை)

புலம்புமுத் துகுத்த புன்மைத் தாகி
நிறைகடன் மண்டில நேமி யுருட்டிய
இறைகெழு பெருவிற லெஞ்சிய பின்றைக்
கடங்கண் ணரிந்த கைய ராகி
இடந்தொறும் பல்கிய மன்னர் போல
வரம்பில் பன்மீன் வயின்வயின் விலங்கிப்
பரந்துமீ தரும்பிய பசலைவா னத்துத்

(பிறைமதியின் தோற்றம்)

தலைத்தேர்த் தானைக்குத் தலைவ னாகி
முலைப்பாற் காலத்து முடிமுறை யெய்திக்
குடைவீற் றிருந்த குழவி போலப்
பொழில்கண் விளக்குந் தொழினுகம் பூண்டு

பி - ம். 1 தலையும். 2 வீழ்பதிப்படர.

புயன்மாசு கழீஇப் புனிற்றுநா ளுலவாது
வியன்கண் மாநிலந் தாங்கவிசும் பூர்ந்து
பைந்தொடி மகளிர் பரவினர் கைதொழச்
செங்கோட் டிளம்பிறை செக்கர்த் தோன்றித்
தூய்மை காட்டும் [1]வாய்மைமுற் றுது
மதர்வை யோர்கதிர் மாடத்துப் பரத்தரச்
சுடர்வெண் ணிலவின் றுழிற்பயன் கொண்ட
மிசைநீண் முற்றத் தசைவளி போழ
[2] விதானித்துப் படுத்த வெண்கா லமளிச்
சேக்கை மகளிர் செஞ்சாந்து புலர்த்தும்
தேக்க ணகிற்புகை திசைதொறுங் கமழக்
கன்றுகண் காணு முன்றிற் போகாப்
பூத்தின் யாக்கை மோ....................
..............குரால் வேண்டக் கொண்ட
சுரைபொழி தீம்பா லுரைதெளித் தாற்றிச்
சுடர்பொன் வள்ளத்து மடல்விரற் றுங்கி
மதலை மாடத்து மாண்குழை மகளிர்
புதல்வரை மருட்டும் பொய்ந்நொடி பகரவும்
இல்லெழு முல்லையொடு மல்லிகை மயங்கிப்
பெருமணங் கமழவும் பிடகைப் பெய்த
வதிவைச் சூட்டணி வண்டுவாய் திறப்பவும்
பித்திகக் கோதை செப்புவாய் மலரவும்
அறவோர் பள்ளி யந்திச் சங்கமும்
மறவோன் சேனை வேழச் சங்கமும்
புதுக்கோள் யானை பிணிப்போர் கதமும்
மதுக்கோண் மாந்த ரெடுத்த வார்ப்பும்
மழைக்கட லொலியின் மயங்கிய மறுகின்
விளக்கொளி பரந்த வெறிகமழ் கூலத்துக்
கலக்கத வடைத்து மலர்க்கடை திறப்பவும்
ஒளிறுவே லிளையர் தேர்நீ றளைஇக்
களிறுகா லுதைத்த புஞ்சப் பூழியொடு
மான்றுக ளவிய மதுப்பலி தூவவும்
தெற்றி முதுமரத் துச்சிச் சேக்கும்

பி - ம். 1 வான்மை. 2 விதனித்து.

து.......க...........ரக் குரலளீஇச்
சேக்கை நல்லியாழ் செவ்வழி பண்ணிச்
செறிவிரற் பாணியி னறிவரப் பாடவும்
அகினு றங்கை சிவப்ப நல்லோர்
துகிலின் வெண்கிழித் துய்க்கடை நிமிடி
உள்ளிழு துறீஇய [1]வொள்ளடர்ப் பாண்டிற்
றிரிதலைக் கொளீஇ யெரிதரு மாலை

(உதயணன் வருந்தல்)

வெந்துயர்க் கண்ணின் வேலிட் டதுபோல்
வந்திறுத் தன்றால் வலியெனக் கில்லெனக்
கையறு குருசிலை வைகிய தெழுவென
[2] இலங்குசுடர் விளக்கோ டெதிர்வந் தேத்திப்
புறங்காப் பிளையர் புரிந்தகம் படுப்ப
எண்ணு விலக்கணத் துண்ணூல் வாங்கித்
திணைவிதி யாள ரிணையற வகுத்த
தமனியக் கூடத்துத் தலையள வியன்ற
மயன்விதி யன்ன மணிக்காழ் மல்லத்துச்
சித்திர வம்பலஞ் சேர்ந்துகுடக் கோங்கிய
அத்தம் பேரிய வணிநிலை மாடத்து
மடையமைத் தியற்றிய மணிக்கா லமளிப்
படையகத் தோங்கிய பல்பூஞ் சேக்கைப்
பைத னெஞ்சத்து மையல் கொள்ளா
[3] எஃகொழி களிற்றின் வெய்துயிர்த் துயங்கி
உண்டெனக் கேட்டோர் கண்டினித் தெளிகெனத்
திருவின் செய்யோ ளுருவமெய்த் தோன்றத்
தீட்டிரும் பலகையிற் றிருத்தித் தேவர்
காட்டி வைத்ததோர் கட்டளை போலக்
கலன்பிற வணிந்து காண்போர் தண்டா
நலந்துறை போகிய நனிநா ணொடுக்கத்து
மணிமுகிழ்த் தன்ன மாதர் மென்முலைத்
தணிமுத் தொருகாழ் தாழ்ந்த வாகத்
திலமலர்ச் செவ்வா யெயிறு [4]விளக் குறுக்க
அலமரு திருமுகத் தளகத் தப்பிய

பி - ம். 1 ஒள்ளழற். 2 இறங்குசுடர். 3 வெஃகொழி. 4 விளக்குறுத்த.

செம்பொற் சுண்ணஞ் சிதர்ந்த திருநுதல்
பண்பிற் காட்டிப் பருகுவனள் போலச்
சிதர்மலர்த் தாமரைச் செந்தோடு கடுப்ப
மதரரி நெடுங்கண் வேற்கடை கான்ற
புள்ளி வெம்பனி கரந்த கள்விதன்
காரிகை யுண்டவென் பேரிசை யாண்மை
செறுநர் முன்னர்ச் சிறுமை யின்றிப்
பெறுவென் கொல்லென மறுவந்து மயங்கி
எவ்வமிக் கவனும் புலம்ப வவ்வழிக்

(வாசவதத்தை வருந்தல்)

குழவி ஞாயிறு குன்றிவர் வதுபோல்
மழகளிற் றெருத்தின் மைந்துகொண் டிருந்த
மன்ன குமரன் றன்னெதிர் நோக்கி
ஒழுகுபு சோர்ந்தாங் குக்கதென் னெஞ்சென
மழுகிய திருமுக மம்மரொ டிறைஞ்சித்
தருமணற் பேரிற் றமரொடு புக்குத்
திருமணி மாடத் தொருசிறை நீங்கிப்
பெருமதர் மழைக்கண் வருபனி யாக்கிக்
கிளையினும் பிரித்தவன் கேடுதலை யெய்தித்
தளையினும் பட்டவன் றனிய னென்னுன்
வேழம் விலக்கிய யாழொடுஞ் செல்கெனச்
சொன்னோ னுழை முன்னர்த் தோன்றி
உரக்களி றடக்குவ தோர்த்து நின்ற
மாத்தி னியன்றகோன் மன்னவன் கண்ணெனப்
பைந்தார்த் தந்தையை நொந்த நோயள்
உள்ளகத் தெழுதரு மருளின ளாகித்
தெளிதல் செல்லா டிண்ணிறை யழிந்து
பொறியறு பாவையி னறிவறக் கலங்கிக்
காம னென்னு நாமத்தை மறைத்து
வத்தவ னென்னு நற்பெயர் கொளீஇப்
பிறைக்கோட் டியானை பிணிப்பது மன்றி
நிறைத்தாழ் பறித்தென் னெஞ்சகம் புகுந்து
கள்வன் கொண்ட வுள்ள மின்னும்
பெறுவென் கொல்லென மறுவந்து மயங்கித்

தீயுறு வெண்ணெயி னுருகு நெஞ்சமொடு
மறைந்தவ ணின்ற மாதரை யிறைஞ்சிய

(நீங்கிய தோழிமார் வந்து வாசவதத்தையைக் காண்டல்)

வல்லிருள் புதைப்பச் செல்சுடர் சுருக்கி
வெய்யோ னீங்கிய வெறுமைத் தாகிக்
கையற வந்த பைதன் மாலைத்
தீர்ந்தவ ணொழிந்த திருநல் லாயம்
தேர்ந்தனர் குழீஇப் பேர்ந்தனர் வருவோர்
இணையி லொருசிறைக் கணையுளங் கிழிப்பத்
தனித்தொழி பிணையி னினைப்பன [1]ணின்ற
எல்லொளிப் பாவையைக் கல்லெனச் சுற்றி
அளகமும் பூணு நீவிச் சிறிதுநின்
திலக வாணுதற் றிருவ்டி வொக்கும்
பிறையது காணு யிறைவளை முன்கை
[2] திருமுகை மெல்விரல் கூப்பி நுந்தை
பெரும்பெயர் வாழ்த்தாய் பிணையென் போரும்
செம்பொன் வள்ளத்துத் தீம்பா லூட்டும்
எம்மனை வாரா ளென்செய் தனளெனப்
பைங்கிளி காணுது பயிர்ந்துநிற் கூஉம்
அஞ்சொற் பேதா யருளென் போரும்
மதியங் கெடுத்து மாவிசும் புழிதரும்
தெறுதரு நாகநின் றிருமுகங் காணிற்
செறுதலு முண்டினி யெழுகென் போரும்
பிசியு நொடியும் பிறவும் பயிற்றி
நகைவல் லாய நண்ணினர் மருட்டி
முள்ளெயி றிலங்கு முறுவ லடக்கிச்
சொல்லெதிர் கொள்ளாண் மெல்லிய லிறைஞ்சிப்
பந்தெறி பூமியுட் பாணி பெயர்ப்புழி
அஞ்செங் கிண்கிணி யடியலைத் தனகொல்
திருக்கிளர் வேங்கையும் பொன்னும் பிதிர்ந்து
மருப்பியல் செப்புங் குரும்பையு மிகலி
உருத்தெழு மென்முலை முத்தலைத் தனகொல்

பி - ம். 1 நிற்ப. 2 திருமுக.

பிணைய லலைப்ப நுதலொருங் கதுகொல்
இனையவை யிவற்றுள் யாதுகொ லிந்நோய்
பெருங்கசி வுடையளிப் பெருந்தகை மகளெனத்
தவ்வையுந் தாயுந் தழீஇயினர் கெழீஇச்
செவ்வி யிலளெனச் சேர்ந்தகம் படுப்பச்
செம்பொன் விளக்கொடு சேடியர் முந்துறத்
திண்ணிலைப் படுகாற் றிருந்தடிக் கேற்ற
மணிக்கல மொலிப்ப மாட மேறி
அணிக்காற் பவழத் தியவன ரியற்றிய
மணிக்காழ் விதானத்து மாலை தொடர்ந்த
தமனியத் தியன்ற தாமரைப் பள்ளிக்
கலனணி யாயங் கைதொழ வேறிப்
புலம்புகொண் மஞ்ஞையிற் புல்லெனச் சாம்பிப்
புனல்கொல் கரையி னிணைவனள் [1]விம்மிப்
பாவையும் படரொடு பருவரல் கொள்ள
இருவர் நெஞ்சமு மிடைவிட லின்றித்
திரிதர லோயாது திகிரியிற் சுழல
ஊழ்வினை வலிப்பி னல்ல தியாவதும்
சூழ்வினை யறுத்த சொல்லருங் கடுநோய்க்
காமக் கனலெரி கொளீஇ யாமம்
தீர்வது போலா தாகித் திசைதிரிந்
தீர்வது போல விருளொடு நிற்பச்
சேர்ந்த பள்ளி சேர்புணை யாகி
நீந்தி யன்ன நினைப்பின ளாகி
முழங்குகடற் பட்டோ ருழந்துபின் கண்ட
கரையெனக் காலை தோன்றலின் முகையின
பூக்கண் மலரப் புலம்பிய பொய்கைப்
பாற்கே ழன்னமொடு பல்புள் ளொலிப்பப்
பரந்துகண் புதைஇய பாயிரு ளீங்கிப்
புலர்ந்தது மாதோ பொழுதலைப் பெயர்ந்தென்

௫௫—மாலைப்புலம்பல் முற்றிற்று.

பி-ம். 1 விம்மா.

௫௪—யாழ் கைவைத்தது.

(பிரச்சோதனன் செயல்)

பொழிறலைப் பெயர்ந்த [1]புலம்புகொல் காலை
எழின்மணி விளக்கி னேமம் போகிக்
கலையினுங் களியினுங் காமுறக் கவைஇய
மழலைக் கிண்கிணி மடவோர் மருட்டப்
புரிதார் நெடுந்தகை பூவணை வைகிய
திருவீழ் கட்டிற் றிறத்துளி காத்த
வல்வேற் சுற்றத்து மெய்ம்முறை கொண்ட
பெயர்வரி வாசனை கேட்டபி னுயர்திறல்
ஊழி னல்லது தப்புத லறியார்
காலனுங் கடியு நூலொண் காட்சியர்
யாக்கை மருங்கிற் காப்புக் கடம் [2] பூண்
டருந்துறை போகிய பெருந்தகை யாளர்
உணர்வு மொளியு மூக்கமு முணர்ச்சியும்
புணர்வின் செல்வமும் போகமுஞ் சிறப்ப
அமிழ்தியல் யோகத் தஞ்சனம் வகுத்துக்
[3] கமழ்கொள் பூமியிற் கபிலை முன்னிறீஇ
மகடூஉத் துறந்த மாசறு படிவத்துத்
துகடீ ராளர்க்குத் துளக்கிய முடியன்
[4] மலர்கண் ணளைஇய மந்திர நறுநீர்
பலருடன் வாழ்த்தப் பண்புளி யெய்திப்
பால்பரந் தன்ன வால்வெள் விதானத்து
மாலை தொடர்ந்த மங்கலப் பந்தர்
[5] விரிநூ லந்தணர் வெண்மணை சூழ்ந்த
திருமணிக் கட்டிற் றிறத்துளி யெய்தி
அறநிலை பெற்ற வருள்கொ ளவையத்து
நிறைநூற் பொத்தக நெடு [6] மணை யேற்றி
வல்லோர் வகுத்த வாசனை [7] வாக்கியம்
பல்லோர் பகரப் பயம்பல பருகித்

பி - ம். 1 புலம்புகொள். 2 பூண்டு மருந்து துறைபோகிய. 3 கடல்கொள். 4 மலர்க்கண். 5 விதிநூல். 6 மணையேற்றி. 7 வாய்க்கியம்.

தரும விகற்பமொடு தானை யேற்பும்
கரும விகற்பமொடு காமமுங் கெழீஇய
இன்பக் கேள்வி யினிதுகொண் டெழீஇத்
துன்ப நீங்குந் தொழின்முறை போக்கி
முடிகெழு மன்னரொடு முற்றவை நீங்கிக்
கடிபெருங் கோயிலுட் காட்சி விரும்பி
உதயண குமரனை யுழைத்தரல் விரைந்தென
உழைநிலை யாள ரோடின ரிசைப்ப

(உதயணன் செயல்)

இழையணி யிரும்பிடி யெருத்த மேறிக்
கழையணி யாவணங் கைதொழப் போதந்
தெறிவேற் பெருங்கடை யியைந்தன னிற்பத்

(பிரச்சோதனன் உதயணனை உபசரித்தல்)

தருமணன் முற்றத்துத் தாமெதிர் சென்று
திருமணி யம்பலங் கொண்டொருங் கேறி
இரட்டைத் தவிசி னிருக்கை காட்டி
இசைக்க வேண்டா விதையுன தில்லெனச்
சிறப்புடைக் கிளவி செவ்விதிற் பயிற்றித்
தளரிய லாயமொடு தன்புடை நின்ற
பணியோள் பற்றிய பவழச் செப்பின்
வாச நறுந்திரை வகுத்துமுன் னீட்டித்
தாமரை யங்கையிற் றன்பின் கொண்டு
குறிப்பி னிருக்க குமர னீங்கென
[1] மடக்கிடன் மனமொடு மாணகர் புக்குத்

(பிரச்சோதனன் சிவேதனிடம் கூறல்)

தான்பயில் வீணை தங்கையு மொருத்தி
காண்குறை யுடைமையிற் கவலு மாதலின்
வல்லோர்ப் பெறாது தொல்குறை [2] யுழத்தும்
தாயும் யானு மெந்தை யாதலிற்
றீதொடு வரினுந் தீர்த்தறன் கடனென
மதியொண் காட்சி மாமுது சிவேதனை
இதுகங் குறையா விசைத்தி சென்றென

பி - ம். 1 மக்கடன். 2 உழக்கும்.

(சீவேதன் உதயணனுக்குக் கூறல்)

நல்வினை யம்பலத் திருந்த நம்பிக்கு
வல்விதி னக்குறை யுரைத்த பின்னர்

(உதயணன் செயல்)

அதற்கோ ருபாய மறியா திருந்தோன
மகட்குறை யுணர்ந்து மன்னவன் விடுத்த
திருமணி வீணை யிசைத்தலுந் தெருமந்
தொருநிலை காறு முள்ளே [1] யொடுக்கி
விழுப்பமொடு பிறந்த வீறுயர் தொல்குடி
ஒழுக்கங் காணிய வுரைத்ததை யொன்றுகொல்
ஒளிமேம் பட்டன னென்று னென்றனை
அளிமேம் படீஇய வெண்ணிய தொன்றுகொல்
உள்ள [2]மருங்கி னுவத்தது செய்தல்
செல்வ மன்னவன் சீலங் கொல்லோ
யாதுகொன் மற்றிவ் வேந்தல் பணியென
நீதி மருங்கி னினைவ வவன்சூழ்ந்
[3] தியாதெனப் படினும் படுக விவன்பணி
மாதரைக் காட்டுதன் மங்கல மெனக்கென
நெஞ்சு.............................தங் கூறி
அஞ்சொ லாயத் தன்றியான் கண்ட
தாமரை முகத்தி தலைக்கை யாகப்
பல்பெருந் தேவியர் பயந்த மகளிருள்
நல்லிசை யார்கொ னயக்கின் றோளெனச்
சொல்லினன் வினவுஞ் சுவடுதனக் கின்மையின்
யாரே யாயினு மிவன்மக ளொருத்தியைச்
சீர்கெழு வீணை சிறப்பொடு காட்டிப்
[4] பயிற்சி யுள்வழிப் பல்லோர் வருதலின்
அழித்து மொருநா ளன்றியான் கண்ட
கதிர்மதி முகத்தியைக் காண்டலு முண்டென
முதிர்மதிச் சூழ்ச்சியின் முற்ற நாடிச்
செய்யே னாகிச் சிறுமை நாணின்
உய்யே னாதை லொருதலை யதனால்

பி - ம். 1 ஒடுக்கிய. 2 மறுகின் 3 யாதெனிற். 4 பயிர்ச்சி.

உயிர்கெட வருவழி யொழுக்கங் கொள்ளார்
செயிரறு கேள்வி தேர்ந்துணர்ந் தோரென
வெல்லினுந் தோற்பினும் விதியென வருத்தல்
பொருணூ லாயும் புலவோர் துணிவென
மதிவழி வலித்த மனத்த னாகி
என்னிதற் படுத்த நன்னுதன் மாதரைப்
பேரும் பெற்றியுந் தேரு மாத்திரம்
நேர்வது பொருளென நெஞ்சு வலியுறீஇச்
செறுநரைப் போலச் சிறையிற் றந்துதன்
சிறுவரைப் போலச் செய்தோன் முன்னர்த்
தவன்முறை யாயினுந் தன்மன முவப்பன
இயன்முறை யாற்றி யென்கடன் றீர்ந்த
பின்ன ராகுமென் பெயர்முறை யென்ன
ஆன்பாற் றெண்கட லமுதுற [1]வளைஇய
தேன்பெய் மாரியிற் றிறவ தாகப்
பருகு வன்ன பயத்தொடு கெழீஇ
உருகு வன்ன வுவகைய னாகி
இறந்தன னிவனென [2]விளிப்பரந் துருது
சிறந்தன னிவனெனச் செவ்வ னோக்கிக்
கடந்தலை வைக்குங் கால மிதுவென
அவன்றலை வைக்கு மாணை யேவலும்
உவந்ததை யெல்லா முரைமி னீரெனப்
[3]பேர்ந்தனன் விடுப்பப் பெருமூ தாளன்
நேர்ந்ததை யெல்லா நெடுந்தகைக் குரைப்பத்

(பிரச்சோதனன் செயல்)

திருமலி யாகத்துத் தேவியர் பயந்த
நங்கைய ருள்ளு மங்கை முற்றாப்
பெதும்பை யாயத்துப் பேதையர் வருகெனப்
பளிக்கறைப் பூமியும் பந்தெறி களத்தும்
மணிக்கயிற் றூசன் மறலிய விடத்தும்
கொய்ம்மலர்க் காவும் பொய்கைக் கரையும்
அந்தக் கேணியும் வந்துபெயர் கூவித்

பி - ம். 1 அளைஇத். 2 இனிப்பரந் துருது. 3 பெயர்ந்தனன்.

தவவை மகளிருந் தாய்கெழு பெண்டிரும்
அவ்வழி யாயமு நொய்தகப் படுப்ப
முத்தின ருத்தியர் மும்மணிக் காசினர்
கச்சினர் கண்ணியர் கதிர்வெள் வளையினர்
சில்கலத் தியன்ற வணியின ரல்லது
பல்கலஞ் சேரா மெல்லென் யாக்கையர்
அசைவில் குமரரை யாடிடத் தணங்கும்
நசையுட் கொண்ட நன்மை யியன்று
விழுத்தகைத் தெய்வம் வழுத்தா மரபிற்
ருர்ப்பொலி மேனிக் கூர்ப்பணங் கொடுக்கிய
மண்டு [1]தணிதோண் மாசின் மகளிர்
பெணடுணை சார்வாக் கண்டுழிக் கலங்கிக்
கடைக்கண் சிவப்புங் கதிர்முலை யுருப்பும்
மடக்காக் கூழையு மருங்குலும் பற்றிப்
புதையிருந் தன்ன கிளரொளி வனப்பினர்
அரங்கொல் கிண்கிணி யிரங்க வொல்கிப்
பொற்கிடுகு செறிந்து போர்வை முற்றி
முத்துக்காழ் தொடர்ந்த சித்திரக் கூடத்துப்
பவழக் கொடுங்காழ் பத்திமுகத் [2]தழுத்தித்
திகழ்கோட் டியன்ற திமிசுகுடப் பொற்கால்
உரிமைச் சுற்றத் துரியோர்க்குத் திறந்த
திருமணி யம்பலத் திமிழ்முழாத் ததும்பும்
அரங்க நண்ணி [3]யரிமா சுமந்த
மரகதத் தியன்ற மணிக்காற் கட்டில்
நூல்வினை நுனித்த நுண்டொழி லாளர்
வாலரக் கூட்டிய வானூ னிணைவைப்
பால்பரந் தன்ன பஞ்சி மெல்லணைச்
சேக்கை மெலியச் செம்மாந் திருந்த
முடிகெழு தந்தை முன்னர்த் தோன்றி
அடிதொழு திறைஞ்சிய வவரிடை யெல்லாம்
தெய்வத் தாமரைத் திருமகட் கெடுத்தோர்
ஐயப் படூஉ மணியிற் கேற்ப
ஒண்மையு நிறையு மோங்கிய வொளியும்

பி - ம். 1 திணிதோள். 2 அழுத்திய. 3 அரிமாச்சுமந்த.

பெண்மையும் பெருமையும் பிறவு முடைமையிற்
பாசிழை யாயத்துப் பைபென நின்ற
வாசவ தத்தை வல்ல ளாகென
ஊழ்முறை [1] பொய்யாது கரும மாதலின்
யாழ்முறைக் கரும மிவளதென் றருளி
மற்றவ ணின்ற பொற்றொடி மகளிரைக்
குற்றமில் குறங்கிற் கோ....வல மேற்றிக்
கோதை மார்பிற் காதலி னெடுக்கிப்
பந்துங் கிளியும் பசும்பொற் றூதையும்
கந்தியன் மயிலுங் [2]காந்துறை பூவையும்
கண்ணியுங் கழங்குங் கதிர்முலைக் கச்சும்
வண்ண முற்றிலும் பவழப் பாவையும்
தெளித்தொளி பெறீஇய பளிக்குக்கிளிக் கூடும்
அவரவர் மேயின வவ்வயி னருளி
அடிசில் வினையும் யாழின் றுறையும்
கடிமலர்ச் சிப்பமுங் [3] காந்துறை கணக்கும்
வட்டிகை வரைப்பும் வாக்கின் விகற்பமும்
கற்றவை யெல்லாங் காட்டுமி னெமக்கென
மருளி யாய மருளொடும் போக்கி
நங்கை கற்கு மங்கலக் கருவிக்கு
நியம விஞ்சன மமையின் விரைந்தென
ஈன்ற தாயு மென்மகட் கித்தொழில்
மாண்ட தென்று மனத்திற் புகல

(பலர் கூற்று)

மழலைக் கிண்கிணிக் கழலோன் பெருமகள்
அரும்பெறற் றத்தைக் காசா னாகிப்
போக வீணை புணர்க்கப் பெற்ற
தேசிக குமரன் றிருவுடை யன்னென
அடியரு மாயமு நொடிவனர் வியப்ப
ஏனைத் தாயரு மாறு தேத்த
வத்தவர் பெருமகன் வல்ல வீணை
தத்தை தனக்கே தக்க தாலென

பி - ம். 1 பொய்யாக்கருமம். 2, 3 காந்துரை.

வேட்டது பகருங் கோட்டி யாகிக்
கோட்டமின் முற்றங் குமிழ்குமிழ்த் துரைப்பப்

(வாசவதத்தைக்கு அலங்காரம் செய்தல்)

பொன்னகற் கொண்ட பூவும் புகையும்
[1] அவ்வகற் கொண்ட வவியும் பிரப்பும்
செம்முது செவிலியர் கைபுனைந் தேத்திச்
சந்தன நறுநீர் மண்ணுறுத் தாட்டி
மறுவில் வெண்கோட்டு மங்கலம் பொறித்த
பெருவெண் சீப்பிற் றிருவுற வாரிச்
சுருண்முறை வகுத்துச் சூட்டுப் புரியுறீஇக்
கருங்குழல் கட்டிக் கன்னிக் கூழை
பொன்னி ணுணிற் புடையெடுத் தியாத்துப்
பதரில் செம்பொன் காயழ லுறுத்த
கதழ்வுறு சின்னஞ் சிதறிய மருங்கிற்
றிருநுதற் சுட்டி திகழச் சூட்டி
முத்தக் கலனணி மொய்ப்புறச் சேர்த்துப்
பொன்செ யோலையொடு பூங்குழை நீக்கி
மணிச்செய் கடிப்பிணை மட்டஞ் செய்து
தேய்வுற் றமைந்த திருவெள் ளாரத்
தேக விடுகொடி யெழிற்றோ ளெழுதிக்
கச்சியாப் புறுத்த கால்வீங் கிளமுலை
முத்த வள்ளியொடு மும்மணி சுடர
மணிக்காற் பா..............கவைஇத்
[2] தணிப்பொற் றோரைத் தகையொளி சுடர
மட்டங் குயின்ற மங்கல வல்குற்
பட்டுடைத் தானைப் பைம்பூண் சுடரத்
திருமுகை முருக்கின் விரிமலர் கடுப்பச்
செறிமலர் படினுஞ் சீறடி நோமென
நெறியெனப் படுத்த நிலப்பெருந் தவிசின்

(வாசவதத்தை கீதசாலைக்குச் செல்லுதல்)

உள்ளகத் தொடு..............மெல்லடி
அரிப்பொற் கிண்கிணி யார்ப்ப வரங்கின்

பி - ம். 1 அகவற். 2 திணிப்பொற்.

உழைச்சென் மகளி ருக்க மேற்றிச்
சித்திரம் பயின்ற செம்பொ னோலை
முத்துவாய் சூழ்ந்த பத்திக் கோட்டைஇச்
சிரற்சிற கேய்ப்பச் சிப்பம் விரித்த
கவற்றுவினைப் பவழங் கடைந்துசெய் மணிக்கை
ஆல வட்ட நாலொருங் காட்டப்
பொன்னிய லாய்வளைக் [1]கன்னிய ரசைப்பப்
பொருத்தின் றமைந்த புனைவிற் றாகிச்
சொத்துற் றமைந்த சுதையில் செஞ்சுவர்
வெண்கோட்டு நெடுந்தூண் விதானந் தூக்கித்
தேநவின் றோங்கிய திருநா றொருசிறைக்
கீத சாலை வேதி நிறைய
மல்லற் சுற்றமொடு கல்லெனப புகுதந்
தரக்குப் பூமி யாயமொ டேறிப்
பரப்புமல ரொருசிறைப் பாவையை நிறீஇப்
பண்ணமை நல்லியாழ்ப் பலிக்கடன் வகீஇய

(உதயணன் வருகை)

அண்ணல் வருகென வவ்வயி னோடி
ஒண்டொடி மகளிர் கொண்டகம் புகுதரத்
தானைத் தவிசிற் றகையோ னேற
ஏனைத் தவிசி னங்கையை யிருத்தினர்
இன்னா னென்ப திவனு மறியான்
....

(வாசவதத்தை யாழ்பயிலத் தொடங்கல்)

நன்னர்க் கிளவி நயவரப் பயிற்றி
ஆசான் கொடுக்கு மருங்பெறல் விச்சை
காண்போர் செய்யுங் கடப்பா டிதுவெனா
வெள்வளை முன்கை தோழியர் பற்றி
ஒள்ளிழை மாத ரொழுக்கஞ் செய்கெனக்
காந்த ளழித்த கைம்முகிழ் கூப்பிக்
கஞ்சிகை திறந்த பொழுதி னன்றுதன்
காட்சிக் கொத்த கள்வ னுதலின்

பி - ம். 1 கன்னியர்கவிப்ப.

மேற்படு நோக்கமொ டிருவரு மெய்தி
ஏப்பெறு துயரமொ டிலங்கிழை யிறைஞ்சிப்
பொற்காற் படுத்துப் பூந்துகில் வளீஇக்
கைக்கோற் சிலதரொடு கன்னியர் காப்பத்
தெய்வத் தன்ன திறலோன் காட்டக்
கைவைத் தனளாற் கனங்குழை யாழென்.

௩௪.—யாழ் கைவைத்தது முற்றிற்று.

௩௫—நருமதை சம்பந்தம்.

(அயலார் கூற்றுக்கள்)

கைவைத் தமைந்த கனங்குழைக் கவ்வியாழ்
வைக றோறும் வத்தவன் காட்ட
நிகழ்வதை யுரைக்கும் [1] புகர்ச்சொன் மாக்கள்
ஒன்னலர் நுழையா வுரிமை மாணகர்த்
தன்மக ளொருத்தியைத் தானயாழ் கற்கென
ஏதின் மன்னனை யெண்ணான் றெளிந்த
பேதை மன்னன் பின்னுங் காண்பான்
சென்றே யாயினுஞ் சிதையி னல்லது
நன்றொடு வாரா தொன்றறிந் தோர்க்கென
அரச னுசா னரும்பெறற் றந்தையெனக்
கல்லாச் சனத்தொடு பல்லோர் சொல்ல
.........ப்புகாஅ ரியல்புணர்ந் தோரென
மதியோர் மொழிந்த திதுவென் றெண்ணி
இன்னவை பிறவுந் துன்னினர் கிளந்து
வேந்திடை யிட்ட வெஞ்சொ லாதலிற்
சேர்ந்தோர் மாட்டுஞ் செப்ப றீதென
உரைப்போர் நாவிற் குறுதி யின்மையின்
நினைத்தது மிகையென நெஞ்சு வலியுறீஇ
மனத்ததை யாக மாந்த ரடங்கலின்
வம்ப மாக்கள் வாயெடுத் துரைக்கும்
கம்பலை யின்மையிற் கடிநகர் தேறி
ஆங்கன மொழுகுங் காலை யோங்கிய

பி. ம். 1 புகழ்சொன்.

(வயந்தகன் செயல்)

மாணிப் படிவமொடு மதிலுஞ் சேனையுள்
ஓதிய காலத் துடன்விளை யாடித்
தோழ மாக்க டொழுதியிற் கூடிப்
பால குமரன் பணியி னொருநாள்
மாலையுஞ் சாந்து மடியும் பெய்த
கையுறைச் செப்பொடு கடிநகர்ச் சென்ற
வயந்தக குமரனை நயந்துமுக நோக்கிப்
பண்டியா னிவரைப் பயின்றுழி யுண்டெனக்
கண்டறி விலீரெனக் கரந்தவன் மறுப்பக்
.........போல..............................
இசையா மாக்கண்மு னியல்பில சொல்லி
அன்றுதலைப் பட்ட வார்வலர் போல
இன்றுதலை யாக வென்று மெம்வயின்
இவரே வருகென வேயின னருளி
மன்ன குமரன் றன்வயிற் கோடலின்
அரும்பெறற் றோழ னுங்குவந் தொழுகிப்
பெரும்பெற் றறையும் பேச்சின னாகி
மாய யாக்கையொடு மதிலகத் தொடுங்கிய
ஆயு மாக்க ளவன்வயி னறிந்து
காவ லாள ரற்ற நோக்கி
மேவன மென்னுஞ் சூழ்ச்சிய ராகிப்
பன்னாள் [1] கழித்த பின்னர் முன்னாள்

(உதயணனுக்கு வாசவதத்தைமீது வேட்கை மிகுதல்)

எண்மெய்ப் பாட்டினு ளிரக்க மெய்ந்நிறீஇ
ஒண்வினை யோவியர் கண்ணிய விருத்தியுட்
டலையத னும்பர்த் தான்குறிக் கொண்ட
பாவை நோக்கத் தாரணங் கெய்தி
முற்றான் கண்ட முகஞ்செய் காரிகை
உட்கொண் டரற்று முறு [2] பிணி தலைஇக்
கட்கொண் டாங்குக் களிநோய் கனற்றத்
தீமுகத் திட்ட மெழுகிற் றேம்பியும்

பி - ம். 1 கழிந்த. 2 பிணித்தலைஇ.

தாய்முகத் தியாத்த கன்றிற் புலம்பியும்
உயலருந் துன்பமொ டொருவழிப் பழகிப்

(உதயணன் எண்ணுதல்)

பயலை கொண்டவென் பைபு ளாக்கை
பண்டென் வண்ணம் பயின்றறி மாக்கள்
இன்றென் வண்ண மிடைதெரிந் தெண்ணி
நுண்ணிதி னோக்கி நோய்முத னாடிற்
பின்னிது கரக்கும் பெற்றி யரிதென
மலரே ருண்கண் மாதர்க் [1]கமைந்த
அலரவண் புதைக்கு மருமறை நாடித்

(உதயணனும் வயந்தகனும் ஆலோசித்தல்)

தெரிவுறு சூழ்ச்சியு ளிருவரு மெண்ணிப்
பிறன்பாற் பட்ட பெண்பா னாடி
அவள்பாற் பட்ட வார்வஞ் செய்கம்
அன்ன ளொருத்தியை யறிந்தனை வம்மெனப்

(வயந்தகன் செயல்)

பல்வேன் முற்றம் பணியிற் போகி
நகர்முழு தறிய நாணிகந் தொரீஇ
ஒருவன் பாங்க ருளம்வைத் தொழுகும்
அதன்மி யாரென வாங்கவன் வினவ
இரங்குபொற் கிண்கிணி யிளையோர் நடுவண்
அரங்கியன் மகளிர்க் காடல் வகுக்கும்
தலைக்கோற் பெண்டிருட் டவ்வை யொருமகள்
நாடகக் கணிகை நருமதை யென்னும்
பாவை யாகுமிப் பழிபடு துணையென
ஒருநூற் றொருகழஞ் சுரைகண் டெண்ணிய
கனபொன் மாசை காண வேந்தி
மன்றமு மறுகுங் கம்பலை கழும
வனப்புமுத லாக வழிவர வமைந்து
குணத்துமுறை வகையிற் கோல மெய்தி
வீழ்ந்தோர் நல்கும் வெறுக்கை யன்றிக்
காணி கொண்டுங் கடனறிந் தெண்ணிய

பி - ம். 1 அமைத்த.

ஒன்றுமுத லாக வோரெட் டிறுத்த
ஆயிரங் காறு மாத்த பரிசத்
தியாழ்முத லாக வறுபத் தொருநான்
கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக்
கலைபுற வகுத்த காமக் கேள்வித்
துறைநெறி போகிய தோழித் தூதினர்
அரசர்க் காயினு மடியர்க் காயினும்
அன்றை வைகல் சென்றோர்ப் பேணிப்
பள்ளி மருங்கிற் படிறின் றொழுகும்
செல்வ மகளிர் சேரி நண்ணி
வயக்களி றடக்கிய வத்தவர் பெருமகன்
இயக்கரும் வீதியி னெதிர்ப்பட வொருநாள்
நயப்புற் றாற்று நருமதை யென்னும்
நாடகக் கணிகை மாடம் யாதெனத்
தாயுறை வியனகர்த் தன்குறை யுரைதது
வாயி லாகிய வயந்தகன் புகலும்
சென்றா னிணந்த சித்திரக் கம்மத்து
வெண்கா லமளி விருப்பி னேற்றி
அணியிழை மகளிரும் யானையும் வணக்கும்
மணியொலி வீணையுஞ் சாபமு மரீஇக்
கழறொடி கவைஇய கலம்பொழி தடக்கை
உதயண குமர னுள்ளத் துளனெனின்
ஒண்டொடி மாதரு மொருதுணை யோருட்
பெண்டுணை சான்ற பெருமைபெற் றனளென்
றுருமகற் புகலு மனம்புரி கொள்கை
இருமூ தாட்டி யெனக்கு முண்டெனத்
தூண்டி விரையிற் றடக்குள் ளுறுத்துத்
தேன்றோய்த் தன்ன தீஞ்சொ லளைஇப்
பொருளெனக் கருதிப் பொன்னிவண் விடுத்தோன்
அருளியு மருளா னடித்தி மாட்டெனக்
காரணக் கிளவி நீர கூறித்
தற்பெயர் பெயர்ப்ப மனத்தகை கரந்து
பிற்பயங் கருதும் பெருநசைக் கிளவி
இன்னகைத் தோழற் கினிய பயிற்றி
ஆங்கினி திருந்த போழ்திற் பூங்குழை

(தாய் உதயணனது இயல்பை உரைத்தல்)

காமுறப் பட்ட சேணிகச் சிறுதொழில்
கற்றது மில்லாச் சிற்றறி வாளன்
பொய்யொடு மிடைந்த பொருணசைக் கடுஞ்சொல்
மையுண்டு கழுமிய மாசுபடு கலிங்கத்
[1] திளையோர் வைகா விழுக்கரு வாழ்க்கையன்
கவறு டாளர்க்குக் கலந்தொலை வெய்திக்
[2] கொடையகத் தோனெனக் கடைகழிந் தோடிக்
கவலையிற் செலலுங் கவ்வையின் விலக்கி
ஐயன் வந்த வாசறு கருமம்
கைவளை மாதர் களைந்து [3]சென் றீயென

(நருமதை மறுத்தல்)

நிதியங் காட்டப் பொதியொடு சிதறிக்
குறையொடு வந்தவக் குமரன் கேட்க
சிறியனேன் வந்தவச் சிறுநில மன்னற்
கம்மனை நயந்தியா னவ்வயிற் சேறல்
என்மனை மருங்கி னில்லெனச் சீறித்
தன்றுறைக் கொவ்வாத் தகையில் கிளவி
பைந்தொடி மாதர் பண்பில பயிற்றத்
தாயப் பெண்டிருந் தந்துணை யோருமென்
றோரி லெழுகிளை யுடன்றொக் கீண்டிப்
[4] பழமையிற் பசையாது கிழமையிற் கெழுவாது
தவந்தீர் மருங்கிற் றிருமகள் போலப்
பயந்தீர் மருங்கிற் பற்றுவிட் டொரீஇ
இட்டதை யுண்ணு நீலம் போல
ஒட்டிடத் தொட்டு முறுதி வாழ்க்கையுட்
பத்திமை கொள்ளார் பைந்தொடி கேளென
எடுத்தியல் கிளவியோ டேதுக் காட்டித்
தொடிக்கேழ் முன்கைத் தொகுவிரன் மடக்கி
மாநிதி வழங்கு மன்னரிற் பிறந்து
.... வேண்டியது முடிக்கும்
கால மிதுவெனக் காரணங் காட்டும்

பி - ம். 1 இணையோர். 2 தொடை. 3 சென்றீமென. 4 பழைமை.

ஆர்வச் சுற்றத் தவர்வரை நில்லாள்
தாய்கை விதிர்ப்பத் தலைபுடைத் திரங்கி
ஏயது மறுக்கலு மிருந்தோற் கூய்நின்
அடியரிற் பற்றி யாணையிற் கொள்கெனக்
கடிதியல் வையங் கவ்வையி னேற்றிக்
கொடியணி கூலங் கொண்டனன் போவுழி

(நருமதையின் கூற்று)

வலிதி னென்னை வத்தவர் பெருமகன்
கொலிய செய்வது குழுக்கள் காண்கெனப்
பூசற் கிளவி சேயிழை பயிற்ற

(கண்டோர் கூற்று)

மாரியுந் திருவு மகளிர் மனமும்
தக்குழி நில்லாது பட்டுழிப் படுமெனும்
கட்டுரை யன்றியுங் கண்டன மியாமென
விச்சையும் வனப்பும் விழுக்குடிப் பிறப்பும்
ஒத்தொருங் கமைந்த வுதயண குமரனைப்
பெற்றன ளாயினும் பிறர்க்குநைந் தழுவோள்
1 பெண்ணிலி கொல்லோ பெரியோர்ப் பிழைப்பதோர்
கண்ணிலி யாகுமிக் கணிகை மகளெனக்
கூத்தி மருங்கிற் குணம்பழிப் போரும்
ஆற்றற் கொற்றமொ டரசுவழி வந்ததன்
காத்துயர் தொல்குடிக் கதுவா யாகப்
பண்பில் சிறுதொழில் பயின்றதை யன்றியும்
தன்னொடு படாளைத் தானயந் தாற்றிக்
கண்ணற் றனனாற் காவலன் மகனென
அண்ணன் மருங்கி னறிவிழிப் போரும்
எள்ளியு மிழித்து மின்னவை பயிற்றி
முள்ளெயி றிலங்கு மொள்ளமர் முறுவலர்
பட்டி மாக்கள் கட்டுரை பகரும்
பெருங்கலி யாவணம் பிற்படப் போலும்
வையத் தவளொடும் வயந்தகன் கேட்பத்

பி - ம். 1 பெண்ணலி.

(கணிகையநடலும் நம்பியர் உணர்த்தலும்
விடர் முதலியோர் கூற்றும்)

தேன்கவர் வோப்பித் திருநுதல் சுருக்கிப்
பூநறுந் தேறல் பொலன்வள்ளத் தேந்தி
ஒழுகி நிலம்பெறாஅ தொசிந்து கடைபுடைத்
தெழுதுநுண் புருவ மேற்றி யியைவித்
திலமலர்ச் செவ்வா யொப்ப விதழ்விடுத்து
நரம்பிசை தள்ளி வறிதினிற் சுவைத்து
மகிழின் மும்ம ரெய்தி முகிழின்
கால மன்றியுங் கையி [1] னெரித்த
கழுநீர்க் குவளைப் பெரும்போதி யவிழ்ந்த
வள்ளிதழ் வகைய வாகி யொள்ளிதழ்
செஞ்சிவப் புறுத்த சிதரரி மழைக்கண்
கொழுங்கடை யிடுக நோக்கி மணிபிறழ
விருப்புள் கூர விம்மி வெய்துயிர்த்
தெருத்தஞ் சிறிய கோட்டி யெம்மினும்
திருத்தஞ் சான்றநுந் துணைவியிற் செல்கெனப்
புலவித் தண்டந் தமர்வயி னேற்றி
இல்லை யாயினுஞ் சொல்வகை செருக்கித்
தண்டிக் கொண்டு பெண்டிரைப் பொறாது
செயிர்வுள் ளுறுத்த நோக்கமொடு நறவின்
வாசங் கமழு மோசைய வாகிக்
கிளிப்பயி ரன்ன களிப்பயின் மழலை
எய்தா வொழுக்கமொ டைதவட் பயிற்றி
எயிறு வெளிப்படா திறைஞ்சி ஞிமிறினம்
மூசின கரிய கோதையிற் புடைத்துப்
பூங்குழை மகளிர் புலவிகொ டிருமுகம்
தேர்ந்துணர் காட்சியிற் [2] றிரிந்துநலங் கரியப்
பூந்துகிற் றானை பற்றிக் காய்ந்தது
காட்டினை சென்மோ [3] மீட்டினை தெளிகெனப்
படிற்றியல் களைஇப் பணிமொழிக் கிளவி
நடுக்குறு துயரமொடு நயவரப் [4] பயிற்றிக்
குவிப்பூங் கையிணை கூப்பித் திருக்குழல்

பி - ம். 1 எடுத்த. 2 தெரிந்து. 3 மீட்டினித். 4 பற்றி.

நானப் பங்கி கரமிசைத் திவளப்
பரட்டசை கிண்கிணிப் பக்கம் புல்லி
அரத்தகத் தீரத் தைதுகொண் டெழுதிய
சீறடிச் சுவட்டெழுத் தேறிய சென்னியர்
நாட்போது நயந்த வேட்கைய வாயினும்
முகைப்பதம் பார்க்கும் வண்டினம் போலத்
தகைப்பருங் காமத்துத் தாம்வீழ் மகளிர்
நகைப்பதம் பார்க்கு நனிநா கரிகத்துச்
சொல்லி னுண்பொருள் காட்டி யில்லின்
படுகாழ்ப் படுத்துத் தேய்வை யுரீஇக்
கலுழி நீக்குங் கம்மியர் போல
மகர வீணையின் மனமாசு கழீஇ
நகர நம்பியர் திரிதரு மறுகின்
ஆணையிற் கொண்டுதன் னரசியல் செய்தோன்
காம விருந்தினன் கலையிற் கிகந்தனன்
பிழைக்கவும் பெறாஉம் பெண்டிர் மாட்டென
உரைத்தகு கிளவி யோம்பார் பயிற்றி
நடநவின் மகளிர் நலத்திடை நம்பி
விருந்தினன் போன்மெனப் புரிந்தலர் தூற்றி
விடருந் தூர்த்தரும் விட்டே றுரைப்பத்
தரும நுவலாது தத்துவ மொரீஇக்
கரும நுதலிய கள்ளக் காமம்
எத்துறை மாக்களு மெய்க்கொளப் பரப்பி
வனப்பு மிளமையும் வரம்பில் கல்வியும்
தனக்குநிக ரில்லாத் தன்மைய னுதலிற்
பொருந்தாப் புறஞ்சொ னிறம்பார்த் தெறிய
வான்மயிர் துடக்கிற் றானுயிர் வாழாப்
பெருந்தகைக் கவரி யன்ன பீடழிந்து
நெடுவெண் ணிலவி னீர்மைக் கிரங்கி
முறுவன் மகளிர் முற்ற நிற்பப்
பசுங்கதிர் சுருங்கிய பசலைத் தாகி
விசும்பெழத் தேயும் வெண்மதி போல
வலியிற் றீரா தொளியிற் குன்றிப்
பெருநல் கூர்ந்த பெருவரை யகலத்

தெவ்வ மறைத்தல் வேண்டி வையத்து
வலிதிற் றந்த வால்வளைப் பணைத்தோள்
[1] ஒருமனம் புரிந்த நருமதை கேட்ப
வேட்கைக் கிளவி வெளிப்படப் பயிற்றிச்
சேட்படு குருசில் சேர்தொறும் பொருஅள்
நச்சுயிர்ப் பளைஇய நாகம் போல
அச்சுயிர்ப் பளைஇ யமரா நோக்கமொடு
சில்லைச் சிறுசொன் மெல்லியன் மிழற்ற
அவ்விரு ளடக்கி வைகிருட் போக்கிப்
போற்றா மாக்க ருற்றும் பெரும்பழி
மேற்கொண் டனனுன் மின்னிழை பொருட்டென்.

௫௫—நருமதை சம்பந்தம் முற்றிற்று.

௫௬—[2] சாங்கியத்தாயுரை.

(ஒற்றர் பிரச்சோதனனுக்கு உணர்த்தல்)

மின்னிழை பொருட்டா மேலவன் கொண்ட
துன்னரும் பெரும்பழி நன்னகர் [3] கழுமக்
கம்பலை மூதூர் வம்பல ரெடுத்த
படுசொ லொற்றர் கடிதவ ணோடி
வானுற நிவந்த வசையில் மாணகர்த்
தாம்பெறு செவ்வியுட் டலைமகற் குணர்த்தக்

(பிரச்சோதனன் செயல்)

காமத் தியற்கை காழ்ப்பட லுணர்ந்து
நகைபு நாணுந் தொகவொருங் கெய்தி
இழிப்புறு நெஞ்சின னாயினும் யார்கணும்
பழிப்புறஞ் சொல்லாப் பண்பின னாதலின்
உருவுவழி நில்லா தாயினு [4] மொருவர்க்குத்
திருவுவழி நிற்குந் திட்ப மாதலிற்
கேட்டது கரந்து வேட்டது பெருக்கிப்
பட்டது நாணாது பெட்டது மலையும்
கால மன்மை யல்லது காணிற்

பி - ம். 1 ஒருமணம். 2 சாங்கியன்றாயுரை. 3 கெழும. 4 ஒருவற்குத்.

கோல மன்றே குமரற் கிதுவென
எள்ளியு முரையா னிளமைய தியல்பென
முள்ளெயி றிலங்கு முறுவல னாகித்

(அரசன் நருமதைக்குச் சிறப்புச் செய்தல்)

தண்கய மருங்கிற் றாமரை போல
அண்ணன் மூதூர்க் கணியெனத் தோன்றிச்
சாமரை யிரட்டையுந் தமனியக் குடையும்
மாமணி யடைப்பையு மருப்பிய லூர்தியும்
பைந்தொடி யாயமும் பட்டமு முடையோர்
ஐம்பதி னாயிர ராங்கியன் மகளிருள்
மன்னருட் பிறந்த மக்களு ளருங்கலம்
தன்னயந் தாற்றத் தன்கடன் றீர்த்துத்
தகைசா லரிவைக்குத் தக்கன விவையென
இசைசால் சிறப்பி னிருங்கலப் பேழையொடு
மணியினும் பொன்னினு மருப்பினு மல்லது
மரத்தி னியலாத் திருத்தகு வையம்
முத்த மாலை முகமிசை யணிந்து
பொற்றார் புனைந்த புள்ளியற் பாண்டில்
[1] கடைமணி பூட்டிக் கணிகையில் விட்டுப்
பெரியதன் மகளிரொடு புனலாட் டயரினும்
தெய்வ விழவொடு தேர்ப்பி னியலினும்
நகர்கடந் திறத்த னருமதை பெறுகென
எயின்மூ தாளரை வயின்வயி னேஎய்
வாயில் சுட்டி வளநக ரறியக்
கோயிற் கூத்துங் கொடுங்குழை யொழிகெனத்
தொன்றிய லவையத்து நன்றவட் கருளித்
தருமணற் பந்தர்த் தான்செயற் கொத்த
கரும மறுத்த கைதூ [2]வமையத்

(வாசவதத்தையை விரும்பிப் பிறவாசர் மணத்தூது விடுத்தல்)

திருநிலத் திறைமை யேயர் பெருமகன்
பெருங்களி றடக்கிய பெறற்கரும் பேரியாழ்

பி - ம். 1 கடிமணி, கடமணி. 2 அவையத்து.

கல்லா நின்றனள் கனங்குழை யோளென
எல்லா வேந்தரு மிசையின் விரும்பி
வழிமொழிக் கிளவியொடு வணக்கஞ் சொல்லிக்
கழிபெரு நன்கலங் களிற்றின்மிசை யுயரித்
துன்னருங் கோயிலுட் டூதரை விடுத்தர

(பிரச்சோதனன் நிலை)

ஓலையுட் பொருளு முரைத்த மாற்றமும்
நூலிய லாளரொடு நுண்ணிதிற் கேட்டு
நன்று மென்னா னன்றென மறாஅன்
மரனிவர் குரங்கின் மகக்கோட் போல
நிலைமையொடு [1]தெரிதரு நீதிய னாகி
ஆவது துணிதுணை யாசையி னிறீஇத்
தார்கெழு வேந்தன் றமர்களை விடுத்தபின்

(சாங்கியத்தாயின் செயல்)

கோமகன் குறித்தது கொண்டுகை புனைந்து
தாய்மகட் டேரிய தன்வயி னுரைக்க

(வாசவதத்தை வருந்தல்)

நோதுமற் கிளவி கதுமென வெரீஇப்
புதுமரப் பாவை பொறியற் றாங்கு
விதுப்புறு நடுக்கமொடு [2]விம்முவன ளாகி
இதுமெய் யாயி னின்னுயிர் வேண்டி
வாழ்வோ ருளரெனிற் சூழ்கதன் வினையென
ஆவி நுண்டுகில் யாப்புறுத் தாயினும்
சாவ துறுதியான் றப்பிய பின்றை
என்பிற் றீர்க வெந்தைதன் குறையென
அன்பிற் கொண்ட வாற்றுறு கிளவி
வளைக்கை நெருக்கி வாய்மிக் கெழுதரக்
கதிர்முத் தாரங் கழிவன போலச்
சிதர்முத் தாலி சிதறிய கண்ணள்

(சாங்கியத்தாய் அவளைத் தேற்றல்)

மாழ்குபு கலிழு மகள்வயிற் றழீஇ
வீழ்தரு கண்ணீர் விரலி னீக்கிக்

பி - ம். 1 திரிதரு. 2 விழுவனளாகி.

கவாஅற் கொண்டு காரணங் காட்டி
அமேறற்கென் பாவா யதுவு முண்டோ
யாயு நீயும் யானு மெல்லாம்
இதுமுத லாக விவ்வகை நிகழிற்
றலைமகற் றுறந்து தவம்புரி வேமெனை
அஞ்சி லோதியை நெஞ்சு வலியுறீஇச்
சேயுய ருலகஞ் செம்மையிற் கூறும்
தீதறு நோன்பிற் றெய்வந் தேற்றிய
தீம்பாற் காட்சித் [1] தெரிவுபல காட்டி
மாற்றுக் கவலையின் மனங்கொண் டாங்கு
நிறைமை சான்றநின் னெஞ்சங் கொண்ட
பொறைமை காணிய பொய்யுரைத் தேனென
ஓதியு நுதலு மாதரை நீவித்
தக்கது நோக்கான் பெற்றது விரும்பி
நுந்தை நேரா னெஞ்சுகொள் காரணம்
பைந்தொடித் தோளி பரிவறக் கேளென
இளமையும் வனப்பு மில்லொடு வரவும்
வளமையுந் தறுகணும் வரம்பில் கல்வியும்
தேசத் தமைதியு மாசில் சூழ்ச்சியொ
டெண்வகை நிறைந்த நன்மகற் கல்லது
[2] மகட்கொடை நேரார் மதியோ ராதலின்
அவையொருங் குடைமை யவர்வயி னின்மையின்
அதுபொய் யாத லதனினுந் தேறெனக்
காரணக் கிளவி நீர காட்டிச்
செவிலி தெளிப்பக் கவிழ்முக மெடுத்து

(வாசவதத்தை கூற்று)

நெடுவெண் டானை வாங்கிக் கொண்டுதன்
வடிவே லுண்கண் வருபனி யரக்கித்
தோற்ற நிகர்ப்போ ரின்றி யாற்றல்
காலனொ டொக்கு ஞாலப் பெரும்புகழ்
புகரின் றோங்கிய நிகரில் கேள்வியன்
காம நுகர்வோர்க் காரணங் காகிய
ஏம வெண்குடை யேயர் மகனொடு

பி - ம். 1 திரிவுபல. 2 மகளிடை.

வையக மறியக் கையகம் புக்குத்
தானறி வீணை தனியிடத் தெழீஇக்
காணு மென்னுங் கட்டுரை [1] யன்றியும்
உலக மாந்த ருள்ளங் கொண்ட
ஐயக் கிளவி தெய்வந் தேற்றினும்
தூய வென்னுத் தீதுரை யெய்தி
வாசவ தத்தையும் வாழ்ந்தன ளென்னும்
ஓசை நிற்ற லுலகத் தஞ்சுவன்
எமர்தர வாரா தாயினு மிவ்வேற்
றவனுறை யுலகத் தழித்துப்பிறந் தாயினும்
எய்துதல் வலித்தனென் செய்வது கேளெனத்
தெய்வ மாதர் திட்பங் கூற

(சாங்கியத்தாய் எண்ணுதல்)

அண்ணன் மருங்கி னுவது வேண்டும்
தன்மன முவந்தது தலைவர நோக்கி
ஏற்ற முன்கைத் தொடிவீழ்ந் தற்றாற்
கோற்றொடி கொண்ட கொள்கையென் றேத்தி
மிகுதியின் மிக்கதன் மேற்றிணைக் கேற்பத்
தகுவன கூறுந் தலைமகன் மகளென

(சாங்கியத்தாய் கூற்று)

உவகை நெஞ்சமொ டுவப்பன கூறிப்
பைந்தொடி யாயமொடு பன்னொடி பகர்ந்து
கங்குல் யாமத்துங் கண்படுத் திலையாற்
கல்விச் சேவகங் கடவோன் வருந்துணைப்
பல்பூங் கோதாய் பள்ளிகொண் டருளெனப்
பூமென் சேக்கையுட் [2] புனையிழைப் புகீஇ
யான்வரு மாத்திரை யாரையும் விலக்கிக்
காஞ்சன மாலாய் காவல் போற்றெனத்

(சாங்கியத்தாய் உதயணனைக் காணுதல்)

தொகுவேன் முற்றஞ் சிவிகையிற் போந்து
மயிலா டிடைகழி மாடத் தொருசிறைப்
பயில்பூங் கொம்பர்ப் பந்தர்மு னிழிந்து

பி - ம். 1 இன்றியும். 2 புனையிழை புகீஇ.

கிளரிழை கற்குங் கேள்விப் பொழுதெனத்
தீளரிய லாயமொடு தாய்முத லிசைப்பக்
கீத சாலை வேதிகை காக்குங்
கோல்கொள் சுற்றமொடு குமரன் புகுதர
இடுமணன் முற்றத் திவ்வழி வருகெனக்
கொடிமுதிர் குருகின் கொம்புதலைக் கொண்ட
உதிர்பூம் புன்கி னொரு சிறை யிரீஇ
இனைத்திறம் பகருறு மெந்தையொ டென்னிடைக்
கிளைத்திறம் பகருநர் தலைப்பெய லரிதெனக்
கண்ணினுஞ் செவியினு நண்ணுநர்ப் போற்றி

(சாங்கியத்தாய் கூற்று)

மண்ணகங் காவலன் மாபெருந் தேவி
திருவயிற் றியன்ற பெருவிறற் பொலிவே
இனையை யாவது மெம்மனோர் வினையென
யாக்கைய தியல்பினு மன்பினுங் 1 கொண்டதன்
காட்சிக் கண்ணீர் கரந்தகத் தடக்கி

(சாங்கியத்தாய் தன் வரலாறு கூறுதல்)

இன்ன ளென்றியா னென்முத லுரைப்பேன்
மன்னவன் மகனே மனத்திற் கொள்ளெனச்
செம்மற் செங்கோ 2 னுந்தை யவையத்
தென்னிகந் தொரீஇயின னிளமையிற் கணவன்
தன்னிகந் தொரீஇயான் றகேன ளாகக்
கொண்டோற் பிழைத்த தண்டந் தூக்கி
வடிக்க ணிட்டிகைப் பொடித்துக ளட்டிக்
குற்றங் கொல்லுமெங் கோப்பிழைப் பிலனென
முற்றந் தோறு மூதூ ரறிய
நெய்தற் புலைய னெறியிற் சாற்றிப்
பைதற் பம்பை யிடங்க ணெருக்கி
மணற்குடம் பூட்டி மாநீர் யமுனை
இடைக்கயத் தழுந்த விடஇய செல்வுழிப்
புனற்கரைப் படஇயர் புதல்வரொ டார்க்கும்
தோணி யரவஞ் சேணோய்க் கிசைப்பத்

பி - ம். 1 கொண்டுதன். 2 றந்தைவையத்.

தழூஉப்புணை யாயமொடு குழூஉத்திரை மண்டி
ஆவி நுண்டுகில் யாப்புறத் [1] தசைத்துப்
பாகவெண் மதியிற் பதித்த குடுமிக்
களிற்றொடு புக்குக் கயங்கண் போழ்வோய்
அவ்வயி னெழுந்த கவ்வை யென்னென
முந்தை யுணர்ந்தோர் வந்துநினக் குரைப்ப
யாமுங் காண்கங் கூமின் சென்றெனக்
கோல்கொண் மள்ளர் காலி னோடி
நம்பி வேஎண் மம்பி வருகென
ஆணையிற் றிரீஇய ரஞ்சன்மி னீரெனத்
தோணி யிழிப்புழித் துடுப்புநனி தீண்டி
நெற்றி யுற்ற குற்ற மிதுவென
இதுமுத லாக வின்னே யிம்மகள்
அழிதவப் படுத லாற்றுமென் றுரைத்த
குறிகோ ளாள னறிவிகழ்ந் தெள்ளி
எல்லை ஞாயி றிரவெழு மெனினும்
பல்கதிர்த் திங்கள் [2] பகல்படு மெனினுநின்
சொல்வரைத் தாயிற் சொல்லுவை நீயென
இன்னகை முறுவலை யாகி யிருங்களிற்
றெண்ணுதன் மத்தகத் தூன்றிய கையை
கொண்டோன் கரப்பவுங் கொள்கையி னிகப்போள்
தன்குறிப் பாயுழித் தவமிவட் கெளிதென
வம்ப மாக்கள் வாயெடுத் துரைத்த
வெஞ்சொற் கிளவிநின் னங்கையி னவித்து
வேண்டிய துரைமி னீண்டியான் றருகெனப்
புலைமக னறையப் பூசலிற் போந்தேன்
நிலைமை வேண்டியா னின்னகர் வாழ்வேன்
தலைமகன் மகனே தவமென் றுணிவென
நிகழ்வதை யுரைக்கு நிமித்திக் [3] கனுரறப்
புகழ்வினை யாகிப் பூக்கொண் டெறிந்தபின்
மற்று மவனே கற்றது நோக்கி
யானை யணிநிழற் படுதலி னந்தணி
தான்கொண் டெழுந்த தவத்துறை நீங்கித்

பி - ம். [1] அசைத்த. [2] பகல்விடு. [3] அனுலாப்.

தானை வேந்தன் றுணிபுழற் றங்கி
முற்றிழை மகளிர்க்கு முதுக ணுமெனச்
செவ்வகை யுணர்ந்தோன் சேனைக் கணிமகன்
கோசிக னென்றவன் குறிப்பெயர் கூறி
அடையாண் கிளவியொ டறியக் கூறலும்

(உதயணன் கூற்று)

கடிதார் மார்பனுங் கலிழ்ச்சி நோக்கிப்
பிறப்பிடை யிட்டே னுயினு மெனக்கோர்
சிறப்பின ராத றேற்றுமென் மனனெனக்
கண்டதற் கொண்டு தண்டா தூறுமென்
அன்புகரி யாக வறிபுதுணி கல்லேன்
இன்றிவை கரியா வினித்தெளிந் தனனென
உதயண குமர னுணர்ந்தமை தேற்றலும்

(சாங்கியத்தாயின் கூற்று)

மறைமூ தாட்டி மற்றுங் கூறும்
கதிர்வினை நுனித்தநின் கணியெனக் கூறிய
எதிர்வினை யெல்லா மெஞ்சா தெய்தி
இந்நகர்ப் பயின்றியா னிங்கிலை யெய்திற்
றென்னி னுயிற் றென்குவை யாயின்
என்முதல் கேளெனத் தொன்முத றொடங்கி
ஆக்கையி னிழிந்துநின் னருளிற் பிறந்தவென்
நோக்கரு நல்வினை நுகரிய செல்கெனக்
கொற்றவன் மகனே பற்றுது விடுவேன்
நீராட் டியலணி நின்வயி னீங்கியப்
பேர்யாற் றொருகரைப் பெயர்ந்தனென் போகிக்
கெங்கா தீரத்துத் தேசங் கெழீஇ
[1] அங்காங் கொல்வனென் றுத்திரை முன்னி
வம்பலர் மொய்த்ததோர் வழிதலைப் பட்டு
வயிரச் சாத்தொடு வடதிசைப் போகி
அயிரிடு நெடுவழி யரசிடை யிருந்துழிப்
பூதியு மண்ணும் பொத்தகக் கட்டும்
மானுரி [2] மடியு மந்திரக் கலப்பையும்

பி - ம். 1 அங்காங்கொள்வன், 2 முடியும்.

காளெடு மணியுங் கட்டுறுத் தியாத்த
கூறை வெள்ளுறிக் குண்டிகைக் காவினர்
தரும தருக்கர் தற்புறஞ் சூழப்
பரிபு மெலிந்த படிவப் பண்டிதன்
சாங்கிய நுனித்தவோர் சாறயர் முனிவனை
ஆங்கெதிர்ப் பட்டாங் கவனொடும் போகி
அத்தவப் பட்டாங் கறுவகைச் சமயமும்
கட்டுரை நுனித்த காட்சியே னாகி
இமயப் பொருப்பகத் தீராண் டுறைந்தபின்
குமரித் தீர்த்த மரீஇய வேட்கையின்
அருந்தவ நுனித்த [1] வறவா சிரியன்
[2] தருமவாத் திரையெனத் தக்கணம் போந்துழி
மாவுஞ் சேனை மதிற்புறங் கவைஇய
காள வனத்தோர் கபாலப் பள்ளியுட்
செலவயா வுயிர்த்த காலை நூற்றுறை
யாற்றுளிக் கிளந்த வறுவகைச் சமயமும்
ஏற்றல் காணுமெம் மிறைவன் றனென
மாற்றக் கோடணை மணிமுர சறைதலிற்
கற்றோர் மொய்த்த முற்றவை நடுவண்
தாழாப் பெரும்புகழ்க் காளக் கடவுண்முன்
பாலக னென்னும் பண்ணவர் படிவத்துக்
[3] காள சமணன் காட்சி நிறுப்ப
ஐம்பெருஞ் சமயமு மறந்தோற் றனவென
[4] வேந்தவ னுதலிய வேதா சிரியரும்
[5] தாந்தம் மருங்கிற் றாழங் காட்டிச்
சாங்கிய சமயந் தாங்கிய பின்னர்
நல்வினை நுனித்தோ னம்மொடு வாழ்கெனப்
பல்வேல் வேந்தன் பரிவுசெய் தொழுகலின்
எழுந்த [6] வாத்திரை யொழிந்தீண் டுறைவுழிக்
கையது வீழினுங் கணவ னல்லது
தெய்வ மறியாத் தேர்ந்துணர் காட்சிப்
படிவக் [7] கற்பிற் பலகோ மகளிருட்

பி-ம். 1 அறவாசிரியத். 2 தருமயாத்திரை. 3 கானசமணன். 4 வேந்தவனுதலிய. 5 தாந்தவமருகிற்றருமங்காட்டி. 6 யாத்திரை. 7 காவிற்.

டொடியோ டம்மனை தோழி யெனத்தன்
குடிவழி யாகக் கொண்ட கொள்கையின்
இத்தவ முவக்கும் பத்தினி யாதலிற்
றவஞ்சார் வாகத் தலைப்பெயல் விரும்பி
அறஞ்சார் வாக வன்புசெய் தருளி
இறைமக னறிய வின்றுணை யாகிப்
பிறைநுதன் மாதர் பிறந்த யாண்டினுள்
நாவொடு நவிலா நகைபடு மழலையள்
தாய்கைப் பிரிந்துதன் றமர்வயி னீங்கி
என்கைக் கிவரு மன்பின ளாதலிற்
றாயென் றறிந்தனை [1] ணீயினி வளர்க்கெனக்
காதல் வலையாக் கைத்தரக் கொண்டவள்
பால்வகை யறிந்தபின் படர்வேன் றவமென
மைத்துன மங்கை மருஉமா கண்டு
நட்புவலை யாக நங்கையொ டுறைவேன்
ஒன்பதிற் றியாட்டை யுதயண கேளெனத்
தன்வயிற் பட்ட தவ்வயிற் கிளரி
அகம்புரி செம்மை யன்பிற் காட்டி
மனமுணக் கிளந்த மந்திரக் கோட்டியுட்
புள்ளூரு மாவு முள்ளுறுத் தியன்ற
ஆண்பெயர்க் கிளவி நாண்மகிழ் [2] கடவ
வழுக்கிக் கூறினும் வடுவென நாணி
ஒழுக்க நுனித்த வூராண் மகளிர்
தாநயந் தாற்றினுந் தக்குழி யல்லது
[3] காமுறற் கொவ்வாக் கயக்கமி லாளநீ
ஒட்டாக் கணிகையைப் பெட்டனை யென்பது
புலவோர் தெரியிற் பொருத்தமின் றாகி
அலவலை நீர்த்தா லத்தைநின் னலரென

(உதயணன் செயல்)

மற்றவள் வினவவும் பற்றிய தவிழான்
பண்டறி வுண்டெனப் பகைநிலத் துறைந்த
பெண்டிரைத் தெளிந்து பெருமறை யுரைத்தல்
நுண்டுறை யாளர் நூலொழுக் கன்றெனத்

பி - ம். 1 நீயிவளர்க்கென. 2 தடவ. 3 காமுகற்.

தேரூத் தெளிவொடு கூறு தடக்கி
மாயமென் றஞ்சின் மற்றிது முடிக்கும்
[1] வாயி லில்லென வலித்தனன் றுணிந்து
தாய்முத லிருந்துதன் ஞேய்முத லுரைப்ப

(சாங்கியத்தாய் கூற்று)

ஒள்ளிழை கணவனு முரிமையுட் டெளிந்த
கொள்கை யறிந்தியான் கூறவும் [2] வேண்டா
அருமறை யன்மையி னன்பிற் காட்டி
ஒருவயி றொண்டொடிக் குற்றது கேளென
ஏதின் மன்னர் தூதுவ மாக்கள்
வந்தது வடுவெனத் தந்தையொ டூடி
அறத்தா றன்றியு மாகுவ தாயின்
துறத்தல் வேண்டுந் தூய்மை யோற்கெனத்
துணிவுள் ளுறுத்த முனிவின ளாகி
நன்மணி யைம்பா னருமகைக் கரற்றிய
மன்ன குமரன் மனம்பிறி தாயினும்
எந்தையும் யாயு மின்னகை யாயத்துப்
பைந்தொடிச் சுற்றமும் பலபா ராட்ட
மாசில் வீணை மடமொழிக் கீந்தோன்
ஆசா னென்னுஞ் சொற்பிறி தாமோ
அண்ணற் குமரற் கடிச்செருப் பாகெனத்
தன்மனங் [3] கொண்டவ டாவ முற்றிச்
சாவினை துணியு மாத்திரை யாவதும்
மறுவொடு மிடைந்து மாண்பில வாகிய
[4] சிறுசொற் கிளவி கேளல செவியென
அங்கையிற் புதைஇ யணிநிற மழுகிய
நங்கையைத் தழீஇ நன்னுத னீவி
மனங்கோள் காரண மருளக் காட்டி
இனமி லொருசிறை யின்னினி தாகப்
பூமலி சேக்கையுட் புகுத்தினென் போந்தேன
பாயலு ளாயினும் பரிவவ டீர்கென
இஃதவ ணிலைமை யின்னினிக் கொண்டு

பி - ம். 1 வாயிலரில்லென. 2 வேண்டான். 3 கொண்டவடிவம். 4 சிறுகொற்.

பரிவுமெய்ந் நீங்கிப் பசலையுந் தீர்கென
ஒண்ணுதன் மாதர் கண்ணைப் பெற்ற
புண்ணுறு நெஞ்சிற் புலம்புகை யகல
மாதர் நுதலிய மருந்தியற் கிளவி
ஆருமி லொருசிறை யன்புறப் பயிற்றி
நிலைமைக் கொத்த நீதியை யாகித்
தலைமைக் கொத்த வதுவை யெண்ணென
இழுக்க மில்லா வியல்பொடு புணர்ந்த
ஒழுக்க மெல்லா மோம்படுத் துரைஇப்
பூட்டுறு பகழி வாங்கிய வேட்டுவன்
வில்விசை கேட்ட வெரூஉப்பிணை போலக்
காவ லாட்டியர் நாமிசை யெடுத்த
சொல்விசை வெரீஇய [1] மெல்லென் பாவை
என்முகத் தேயு மிறைஞ்சிய தலையள்
நின்முகத் தாயி னிகழ்ந்ததை நாணி
நிலம்புகு வன்ன புலம்பின ளாகிச்
சிறுமையி னுணர்ந்த பெருமக னிரங்க
மண்கெழு மடந்தாய் மறைவிடந் தாவென
ஒன்றுபுரி கற்பொ டுலகுவிளக் குறீஇப்
பொன்ற லாற்றிய புகழாள் போலக்
கொண்ட கொள்கையி னொண்டொடி யோளும்
துளிப்பெயன் மொக்குளி னுளித்த லஞ்சுவென்
இன்றைக் கேள்வி யிடையிடு மெனினும்
[2] சென்றயா நங்கையைச் செவ்வி நோக்கி
இன்றுணை மகளிரொ டொன்றியான் விடுத்தரும்
சொல்லொடு படுத்துச் செல்கவென் களிறெனு

(சாங்கியத்தாய் உதயணனை நீங்கிக்
காஞ்சனமாலையிடம் கூறல்)

அவன்வயி னீங்கி யாயங் கூஉய்
மகள்வயிற் புக்கு மம்மர்நோய் நீக்கி
நல்லோள் கற்கு நாழிகை யிறந்தன
வல்லோன் செல்கதன் வளநக ரத்தெனக்
காஞ்சன மாலாய் காவலற் குரையென

பி - ம். 1 வெல்லென்பாவை. 2 சென்றியான்.

மணிப்படு மாடத்து வாயில் போந்தவள்
பணித்த மாற்ற மணித்தகைக் குரைப்ப

(உதயணன் செயல்)

ஆர மார்பனும் போவன னெழுந்து
கற்றில னென்னுங் கவற்சி வேண்டா
பற்றிய கேள்வியு முற்றிழை முற்றினள
குஞ்சர வேற்றுங் கொடித்தேர் வீதியும்
பொங்குமயிர்ப் புரவியும் போர்ப்படைப் புணர்ப்பும்
நீதியும் பிறவு மோதிய வெல்லாம்
நம்பி குமாருந் தந்துறை முற்றினர்
வல்லவை யெல்லாம் வில்லோன் மக்களை
நல்லவைப் படுப்பது நாளை யாதலின்
என்னறி யளவையி ணெண்ணுதல் கொண்ட
தைவரற் கியைந்த தான்பயில் வீணையைக்
கையினுஞ் செவியினுஞ் செவ்விதிற் போற்றி
ஆராய் கென்பது நேரிழைக் குரையென
விசும்பா டூசல் வெள்வளைக் கியற்றிய
பசும்பொன் ஞகத்துப் பக்கம் பாந்த
நறும்புகை முற்றத்து நம்பி நடக்கெனக்
குறும்புழை போயினன் கோலவர் தொழவென.

௩௬.—சாங்கியத்தாயுரை முற்றிற்று.

௩௭.—விழாக்கோண்டது.

(அரச குமரருடைய படையரங்கேற்றம்)

கோலவர் கைதொழக் கோயில் போகி
வேல்கெழு முற்றமொடு வீதியி னீங்கிக்
குஞ்சரச் சேரித் தன்னக ரெய்தி
அன்றை வைகல் சென்ற பின்னர்
முரசுகடிப் பிகுத்த மூரி முற்றத்
தரசிறை கொண்ட வகன்கண் வாரியுட்
கையார் கடகத்துக் கதிர்வாட் கச்சையர்
ஐயா யிரவ ரரச குமரரொடு

பொன்றலை யாத்த பொதியிற் பிரம்பின்
வண்ணச் செங்கோல் வலவயிற் பிடித்த
எண்ணூற் றறுவ ரிளங்கிடை காப்பரொடு
புறஞ்சுற் றமைத்த பிறங்குகடைப் படுகால்
நித்திலந் தொடரிய நிகரில்கம் மத்துச்
சித்திரம் பயின்ற செம்பொன் விதானத்துச்
சந்தனப் பீடிகைச் சார்வணை யேறிப்
பன்மயிர்க் கவரியொடு பரிசனஞ் சுற்றப்
பெருமக னிருந்த [1]திருமலி யவையத்துக்
கொற்ற வேந்தன் குடிகெழு குமரரைக்
கற்றவை காட்டும் வத்தவர் கோவெனப்
பல்பெருங் கேள்வி படைத்தோ ரன்ன
கல்வி மாந்தர் கலித்த கௌவையில்
ஆப்புறு பாடமொ டருத்தங் கூறி
நாக்கொள் கேள்வி நவிற்றிக் காட்டி
[2] மண்டல மருங்கிற் கொண்டகம் புகுந்து
படைகெழு தெய்வம் புகலப் பலிவகுத்

(படைப்பயிற்சியின் வகை)

[3] திடைநாட் பிறையி னேற்றிய திருவிற்
கண்ணு ளுறுத்துக் கடவதிற் றூங்கி
எண்ணு லரணமு மீரெண் கரணமும்
துன்னரும் பாசமொடு தொடங்குபு தோன்றி
அரிதியல் சாரியை யந்தரத் தியக்கமும்
பொருவின் ஞாழிகை பூணு மாறும்
செருவா ளாட்டுஞ் சேடகப் பிண்டியும்
சாரியை விலக்கும் வேறிரி வகையும்
இடுக்கட் போதி [4]னேமப் பூமியுள்
வகுத்த வாயில் வகைவகை யிவையென்
ஓட்டும் பாய்த்துளுங் கரந்தொருங் கிருக்கையும்
செருக்கொள் யானை மருப்பிடைத் திரிவும்
தாழாச் சிறப்பிற் பாழியிற் பயின்ற
காலாட் கரும விகற்பமுங் காட்டிக்
கருவித் தாக்கினுங் காலாட் சுற்றினும்

பி - ம். 1 திருமதி. 2 மண்டில. 3 திறைநாட். 4 னேமைப்.

தனியி னாயினுந் தானையொ டாயினும்
புகவும் போக்கும் பொச்சாப் பின்றிப்
பகைவெல் சித்திரம் பலதிறம் பயிற்றி

(குதிரையேற்றம் முதலியன)

வண்பரிப் புரவியும் வானெடுந் தேரும்
அண்ணல் யானையும் பண்ணுறுத் தேறி
இலைய வினப்பரி கொளீஇச் சிலையின்
மதியோர் புகழ்ந்த மரபியல் வழாமை
நுதியமை நுண்படை நூல்வழிச் சிதறி
மழைத்துளி படினும் வான்றுகள் சூழினும்
விலக்கித் தவிர்க்கும் விற்றொழி லுள்ளிட்
டிலக்கத் திண்படை [1] யேறுபல காட்டலும்
தலைத்தேர் யானைக்குந் தருக்கின ராயினர்
படைத்தே ராள பாலக ரிவரென
அவைபுகழ்ந் தெடுத்த வரும்பெறற் கிளவியொடு
தகைமுடி வேந்தன் றாள்புகழ்ந் தேத்தித்

(பிரச்சோதனன் கூற்று)

தகைசால் சிறப்பிற் றன்னொடு நம்மிடைப்
பகைமுத லாகப் பழிதர வந்த
செற்ற நம்வயிற் கொள்ளான் சிறந்த
சுற்ற மாகச் சூழ்ச்சியின் விளக்கி
நன்றுணர் விச்சை நம்பியர்க் கருளி
அன்புவழிப் படுத்த வரச குமரற்குக்
கைம்மா றிதுவெனக் [2] கடவதி னிறையும்
செம்மா ணாற்றுச் சிறுமைய மாதலின்
ஒன்பதின் கோடி யொண்பொருள் கொடுப்பினும்
பண்பெனக் [3] கொண்டிவன் பண்டஞ் செய்யான்
நங்குடித் தலைமை யிங்கிவற் கியற்றி
நாமிவன் குடைக்கீழ்க் காமுறக் கலந்திவன்
வேண்டியது செய்யு மாண்பல திலமென
மண்முத லிழந்தோற்கு மறுமன மழித்துக்

பி - ம். 1 வேறுபல. 2 கடவது நிறையுஞ் செம்மாணாற்றுச்.
3 கொண்டவன்.

தன்பதிப் புகுந்து தான்மணம் படுகெனக்
குறையுறு கிளவி முறைபல பயிற்றிச்
செயப்படு கருமஞ் செய்நரோ டோஅய்
முயற்சி யுள்ளமொடு முந்தவற் போக்கி

(பிரச்சோதனன் அந்தப்புரஞ் சென்று கூறல்)

அவைக்கள மெழுந்து [1] குவைக்களம் புக்குக்
குலமகள் பயந்த குடிகெழு குமரர்
நிலமக ணயக்கு நீதிய ராகி
வெறுமை நீங்கினர் விச்சையி னமைந்தெனத்
திருநுத லாயத்துத் தேவியர் நடுவட்
பெற்ற நாளினும் பெரும்பூட் புதல்வரைக்
கற்ற நாள்வயிற் கலிசிறந் துரைஇ
மகிழ்ச்சிக் கிளவி மழையென விசைப்ப
முகிழ்த்தகை முறுவன் முனிவின்று பயிற்றிக்

(உதயணன் சொல்லியனுப்பல்)

[2] கடவர் வகுத்த கரும நாளாற்
கடவதை யாதலின் மடவர லாயத்து
நங்கை கேள்வியு நல்லவைப் படுகென
வந்துரைத் தனரால் வத்தவன் றமரென

(அரசன் வாசவதத்தையின் யாழரங்கேற்றத்திற்கு ஆவன செய்தல்)

வெந்திறல் வேந்தனு நன்றென வருளி
வாயிற் கூத்துஞ் சேரிப் பாடலும்
கோயி லுடைக் குழுக்களும் வருகென
யாழுங் குழலு மரிச்சிறு பறையும்
தாழ முழவுந் தண்ணுமைக் கருவியும்
இசைச்சுவை தரீஇ யெழுபவு மெறிபவும்
விசைத்தெறி பாண்டிலொடு வேண்டுவ பிறவும
கருவி யமைந்த புரிவளை யாயமொடு
பல்லவை யிருந்த நல்லா சிரியர்
அந்தர வுலகத் தமரர் கோமான்

பி - ம். 1 நவைக், கவைக். 2 கடவுள்.

இந்திரன் மாணக ரிறைகொண் டாங்குப்
பொருவேன் முற்றத்துப் [1] புரிவனர் புகுதரப்
பாடன் மகளிர் பல்கல் லொலிப்ப
ஆடன் மகளி ராயமொடு கெழீஇ
வேல்வேந் திருந்த நால்வேண் டவையத்துத்
துகிர்த்துலா மண்டபத் தகிற்புகை கமழக்
கண்டங் குத்திய மண்டப வெழினியுட்

(வாசவதத்தையின் யாழரங்கேற்றம்)

டாயுறை வியனகர்த் தமர்பா ராட்ட
ஆயஞ் சுற்ற வணியிழை புகுதந்
தொலிபெறு கீதத் தோதை போகிய
பலிகெழு நல்யாழ் பாங்குறத் தழீஇக்
கின்னர கீதத்துக் கேள்வி மாந்தர்
[2] முன்னுற நின்று மூதறி செவிலிநும்
மகண்மா ணாக்கி வணங்கு நும்மென
அவைப்பரி சாரங் கடத்துளிப் போக்கி
ஐவகைக் கதியு மற்ற மின்றித்
தெய்வ நல்யாழ் திருந்திழை தைவர
மெய்பனிப் பதுபோன் மொய்யவை மருள
நாற்பெரும் பண்ணு மெழுவகைப் பாலையும்
மூவேழ் திறத்தொடு முற்றக் காட்டி
நலமிகு சிறப்பொடு நல்லவை புகழ
இயம்வெளிப் படுத்தபி னிசைவெளிப் படீஇய
எரிமலர்ச் செவ்வா யெயிறுவெளிப் படாமைத்
திருமலர்த் தாமரைத் தேன்முரன் றதுபோற்
பிறந்துழி யறியாப் பெற்றித் தாகிச்
சிறந்தியம் பின்குரற் றெளிந்தவ ணெழுவச்
சுருக்கியும் பெருக்கியும் வலித்து நெகிழ்த்தும்
குறுக்கியு நீட்டியு நிறுப்புழி நிறுத்தும்
மாத்திரை கடவா மரபிற் றாகிக்
கொண்ட தானங் கண்டத்துப் பகாமைப்
பனிவிசும் பியங்குநர் பாடோர்த்து நிற்பக்

பி - ம். 1 புருவனர். 2 முற்புற.

கனிகொ ளின்னிசைக் கடவுள் வாழ்த்தித்
தேவ கீதமொடு தேசிகந் தொடர்ந்த
[1] வேத வின்னிசை விளங்கிழை பாடத்

(சபையோர் புகழ்தல்)

திருந்திழை மாதர்கொ றெய்வங் கொல்லென
இருந்தவர் தெருளா ரிசைபுகழ்ந் தேத்தி
நூலுஞ் செவியு நுண்ணிதி னுனித்தே
யாழும் பாடலு மற்ற மின்றி
விலக்கும் விடையும் விதியி னறிந்து
துளக்கில் கேள்வித் தூய்மையின் முற்றி
வத்தவ நாடன் வாய்மையிற் றருக்கும்
கொற்ற வீணையுங் கொடுங்குழை கொண்டனள்
இறைகெழு குமாரு மேனை விச்சைத்
துறைநெறி போகிய துணிவின ராயினர்
தேயாத் திருவ நீயுந் தேரின்
நிலங்கொடை முனியாய் கலங்கொடை கடவாய்
வேள்வியிற் றிரியாய் கேள்வியிற் பிரியாய்
[2] இளையோய் தாணிழற் றங்கிய நாடே
வயிர வெல்படை வானவ ரிறைவன்
ஆயிரங் குஞ்சரத் தண்ணல் காக்கும்
மீமிசை யுலகினுந் தீதிகந் தன்றெனத்
தொல்லிசை யாளர் சொல்லெடுத் தேத்தப்

(பிரச்சோதனன் செயல்)

புகழார் வெய்திய திகழ்முடிச் சென்னியன்
ஆசில் பாட லமிழ்துறழ் நல்யாழ்க்
கேள்வி நுனித்த கீத வித்தகத்
தாசா ரியரொ டரங்கியன் மகளிரை
ஏடுகோ ளாள ரெனையரென் றெண்ணிப்
பேரெழுத் தோலை பெறுமுறை நோக்கிக்
கட்டுடைக் கலனுங் கதிர்முத் தாரமும்
பட்டியற் கலிங்கமொடு பாசிழை நல்கி
இலைத்தொழிற் [3] றடக்கைய ளெழுந்தீ கினியெனக்

பி - ம். 1 வேகவின்னிசை. 2 இளையோர். 3 தடக்கையின்.

(வாசவதத்தை தந்தையை வணங்கல்)

கலைத்தொழி லவையங் கைதொழப் புக்காங்
கிருந்த விறைவன் றிருந்தடி குறுகிச்
செம்பொ னல்யாழ் சிலதிகைந் நீக்கி
அணங்குறை மெல்விரல் வணங்கினள் கூப்பி

(பிரச்சோதனன் செயல்)

இறைஞ்சிய மாதரை யெடுத்தனன் றழீஇப்
பிதிர்சுணங் காகமொடு பெருந்தோ ணீவிக்
கதிர்பொற் பட்டமொடு கனங்குழை திருத்தி
ஒண்ணுதன் மாதரை யொருகை பற்றிப்
பொன்னிழை தாயுழைப் போகெனப் புகலலும்

(இராசமாதேவி மகிழ்தல்)

தான்முன் கண்ட தவற்றின ளாதலிற்
சென்ற வாயிற் கொன்றல ளூடிப்
புலவியிற் கருகிய திருமுக மிறைமகட்
குவகையின் மகிழ்ந்த முறுவல ளாகிக்
கடைக்கட் டூதாற் காவலற் கடைஇச்
[1] சுடர்க்குழை பயந்தோள் சொல்லா ணிற்ப

(தாயர் மகிழ்ந்துகூறல்)

இன்சொன் மகளி ரெனைப்பல ருள்ளும்
நுந்தை நெஞ்ச நீயறப் பெற்றுங்
குரக்களி றடக்கிய வோசைத் தாகி
வரத்தொடு வந்த வசைதீர் சிறப்பின்
வத்தவ குலத்துத் துப்பெனத் தோன்றிய
தகையொலி வீணையொ டவைதுறை போகி
உருவிற் கொத்த திருவினை யாகிக்
குடிவிளக் குறாஉங் கொடியே வாவெனா
மாத ராயத்து மகள்வயிற் கொளீஇத்
தாய ரெல்லாந் தழீஇயினர் முயங்கிச்
சுற்ற[2]மாந்தர் தொக்கனர் புகல

(பிரச்சோதனன் செயல்)

வத்தவ ரிறைவனை வருகெனக் கூஉய்ப்

பி - ம். 1 சுடற்குழற். 2 மாநகர்த்.

பொற்கோட் டம்பலம் பொலிய வேறிக்
கற்றறி வாளர் சுற்றிய நடுவட்
டாமுயல் வேட்கையின் மாநிலத் துறையுநர்
மரமுதல் சாய மருந்துகொண் டாஅங்கு
நங்குடி வலித்தல் வேண்டி நம்பி
தன்குடி கெடுத்த தகவி லாளனேன்
என்மனம் புகல வேண்டி னிவனைத்தன்
மண்மிசை நிறுக்கு மந்திர [1] மிருக்கென
மதிவ லாளர் விதிவகை யிதுவெனத்
தண்ணுஞ் சேனையுந் தகைக்கோ சம்பியும்
பண்டுகண் ணழிந்த பகையினை நீக்கிப்
பொன்னு நெல்லும் புரிவின் வழங்குகென்
றொன்றெனப் பயிற்றி யுருமிடித் தன்ன
வென்றி முரசம் வீதிதோ றெருக்கி
முன்யா னிவனை முருக்கலும் வேண்டினென்
பின்யா னிவனைப் பெருக்கலு முற்றனென்
எமர னாயி னிறைகொடுத் தகல்க
அமர னாயி னமைவொடு நிற்கென
அடல்வேற் றானை யாருணி யரசற்கு
ஞாலத் தின்னுயிர் வாழ்வோர் நாப்பட்
காலம் பார்க்குங் [2] காலன் போல
வெல்போ ருதயணன் [3] வெஃறுணை யாகப்
பல்கோ டியானைப் பாலகன் வருமெனக்
கணக்குத்துறை முற்றிய கடுஞ்சொ லோலை
அரக்குப்பொறி யொற்றி யானையிற் போக்கி
எண்படைத் தலைவரு மிருபிறப் பாளரும்
எண்பதி னாயிர மிளம்பது வாய்களும்
ஏற்றினம் வரூஉ நாற்றங் கமழிய
மதங்கவுட் பிறந்த கதந்திகழ் படாத்த
ஐந்நூ றியானையு மாயிரம் புரவியும்
எண்பது தேரு மிருவகைத் தொறுவும்
நன்மணி யைம்பா னருமறை யுள்ளுறுத்
திரங்குபொற் கிண்கிணி யரங்கிய லாயத்து

பி - ம். 1 இறுக்கென. 2 காலம்போல, 3 வேல்துணை.

நாடக மகளிர் நாலெண் பதின்மரும்
கோடிய லூர்தியுங் கொண்டுவிசி யுறுத்துக்
கோடி விழுநிதி கொண்டகஞ் செறிக்கப்
பாடியல் பண்டியொடு படைசெலல் விதித்து
வளங்கெழு தாயத்து வழியடை யாகிய
இளங்கோ நம்பியு மிவனொடு செல்கென
மாண்மொழிக் குருசி லாணை வைத்தகம்புக
நாள்கொண் டெழுவது நாளை யாமென
அமைச்சனுஞ் செவிலியு மமைந்த வகையால்
நாள்கொளற் கிருந்துழி நன்னகர் கேட்பக்

(பாகீரதியென்பவள் செயல்)

கழிந்த யாண்டுங் கயநீ ராட்டணி
ஒழிந்ததன் றண்ட முயர்கொடி மூதூர்க்
குருதி வெள்ளங் கூலம் பரப்பி
அழுகுரன் மயங்கிய வல்லற் றுக
மதவலி வேழ மைய லுறுத்த
கடவுள் யானெனக் கடவுட் காட்டிப்
பேரிசைக் கடவுட் பெருநகர்த் தோன்றிச்
சேரி யாயத்துச் செம்முதிர் பெண்டிரொடு
கட்டறி மகடூஉக் கடிமுறத் திட்ட
வட்ட நெல்லு மாண்பில பெரிதெனக்
குற்ற முண்டெனிற் கூறுமி னெமக்கெனக்
கருங்காற் கலிங்கமொடு காஅழ் கலக்கிப்
[1] பிட்ட வாயள் பெரும்பா கிரதி
பொய்ப்பே யேறிப் பொள்ளென நக்கு
முலையிடைத் துளங்கு முத்துற மாரமொடு
தகையெருத் தூரிஞ்சுந் தமனியக் குழையள்
கொடும்பூண் மார்பிற் கூந்தல் பரப்பிப்
பிடிக்கை யன்ன பெருந்தோ ளோச்சி
இடிக்குரன் முரசின்மு னெழுந்தன ளாடி
விழாக்கோ ளாளரைக் குழாத்திடைத் தரீஇத்
திருநீ ராட்டணி மருவி ராயிற்

பி - ம். 1 பெட்டவாயள்.

பிணக்குறை படுத்துப் பிளிறுபு சீறிய
இன்றுஞ் சென்றியான் குஞ்சரம் புகுவலென்
றஞ்சி லோதி யணங்குவாய் கூறப்

(பெரியவர் அரசனுக்கறிவித்தல்)

பன்றியெறி யுற்ற புண்கூர் ஞமலி
குன்று வடிசிற் குழிசி காணினும்
வெரீஇ யன்ன வியப்பின ராகி
அலகை மூதூ ரான்றவ ரெல்லாம்
உலகந் திரியா வொழுக்கின ராதலிற்
காவன் மன்னற்குக் கதுமென வுரைத்தலிற்

(சேனாதிபதி செயல்)

றேவர் [1] சொல்லும் தேதகை யாகென
வெண்முகை யடுத்துப் பைந்தோடு படுத்து
மாத ரங்கையின் மங்கலத் தியற்றிய
வாகைக் கண்ணி வலத்திற் சூட்டித்
தானைச் சேரித் தலைப்பெருந் திருவண
ணாணீ ராட்டணி நாளையென் றறைதலும்

(நகர் விழாக்கோள்ளல்)

விளையாட் டரணி விற்றுங் கொள்ளும்
தொலைவின் மூதூர்த் தொன்றின மறந்துராய்த்
தோணியு மரமுந் துறைநா வாயும்
நீரியன் மாடமு நீந்தியற் புணையும்
சுண்ணமுஞ் சூட்டுஞ் சுவைநறுந் தேறலும்
செண்ணச் சிவிகையுந் தேரும் வையமும்
கண்ணார் பிடிகையுங் கட்டமை யூர்தியும்
பண்ணிரும் பிடியும் பண்ணுவனர் மறலிச்
செவ்வி பெறாஅ வைகல ராகி
வான்கிளர்ந் தன்ன வளநீ ராட்டணி
சேணிடை யுறைநருஞ் சென்று காண்புழிப்
புதவகத் துறைந்தோர் போம்பொழு தென்றென
உதயண குமரனை [2]யோர்த்துறச் சொல்லி
நூலறி வாளர் நால்வரை விட்டபின்

பி--ம். 1 சொல்லுமேதகை. 2 ஒத்துறச்.

உவாக்கடற் பரப்பி னொல்லென மயங்கி
[1] விழாக்கொண் டன்றால் வியனகர் விரைந்தென்.

௩௭.—விழாக்கோண்டது முற்றிற்று.

௩௮—விழாவாத்திரை.

விரைந்தனர் கொண்ட விரிநீ ராத்திரை
புரிந்துட னயரும் பொலிவின தாகி
மல்லன் மூதூ ரெல்லாச் சேரியும்
பயிர்வளை யரவமொடு வயிரெடுத் தூதி
இடிமுர செறிந்த வெழுச்சித் தாகி
யாழுங் குழலு மியம்பிய மறுகின்
மாலை யணிந்த மணிக்காழ்ப் படாகையொடு
கால்புடைத் தெடுத்த கதலிகை நெடுங்கொடி
ஆர்வ மகளிரு மாய்கழன் மைந்தரும்
வீர குமரரும் விரும்புவன ரேறிய
மாவுங் களிறு மருப்பிய லூர்தியும்
காலிரும் பிடியுங் [2] கடுங்காற் பிடிகையும்
தேரு மாக்களுந் தெருவகத் தெடுத்த
எழுதுகள் சூழ்ந்து மழுகுபு மாழ்கிப்
பகலோன் கெடுமெனப் [3] பாற்றுவன போல
அகலிரு [4] வானத் துகடுடைத் தாட
விசும்புற நிமிர்ந்த பசும்பொன் மாடத்து
வெண்சுடர் வீதி விலக்குவனர் போல
எண்ணரும் பல்படை யியக்கிடம் பெறாஅ
நகர நம்பிய ரரச குமரர்
நிறைகளி றிவைகா ணீங்குமி னெனவும்
இறைவ னாணை யீங்கெவன் செய்யும்
புதல்வ ராணை புதுநீ ராட்டெனச்
சிறாஅர் மொய்த்த வறாஅ விருப்பிற்
கம்பலைத் தெருவி னெம்பரு மெடுத்த
குடையுங் கொடியுங் கூந்தற் பிச்சமும்

பி - ம். 1 விழாக்கொண்டனரால். 2 கருங்காற். 3 பார்த்துறுவன. 4 வானத்தகடு.

அடல்வே லியானை யடக்குங் காழும்
களிறெறி கவரியொடு காண்டக மயங்கிப்
பெருநீர்க் கருங்கட [1] றுளுப்பிட் டதுபோல்
ஒண்ணுதன் மகளி ருண்க ணிரைத்த
கஞ்சிகை துளங்கக் கயிற்றுவரை நில்லாச்
செஞ்சுவற் பாண்டியஞ் செல்கதி பெறாஅ
குரைத்தெழூந் துகளுங் [2] குரம்புவி நிரைத்துடன்
சங்கிசை வெரீஇச் சால்பில பொங்கலின்
அவிழ்ந்த கூந்த லங்கையி னடைச்சி
அரிந்துகால் பரிந்த கோதைய ராகத்துப்
பரிந்துகா ழுகுத்த முத்தினர் பாகர்க்குக்
காப்பு [3] நேரிய கூப்பிய கையினர்
இடுக்க ணிரப்போர் [4] நடுக்க நோக்கி
அரறுவ போல வார்க்குந் தாரொ
டுரறுபு தெளித்துக் கழறும் பாகர்
வைய நிரையும் வயப்பிடி யொழுக்கும்
கைபுனை சிவிகையுங் கச்சணி மாடமும்
செற்றுபு செறிந்தவை மொக்கு ளாக
மக்கட் [5] பெருங்கடன் மடைதிறந் ததுபோல்
எத்திசை மருங்கினு மிவர்ந்துமே லோங்கிய
கட்டளை வாயி லிவர்வனர் கழிந்து

(நகரமாந்தர் தங்கல்)

வரம்பில் பல்சனம் பரந்த பழனத்
தாற்றிரு கரையி னசோகம் பொழிலினும்
காய்த்தொசி யெருத்தின் கமுகிளந் தோட்டமும்
மயிலுங் குயிலு மந்தியுங் கிளியும்
பயில்பூம் பொதும்பினும் பன்மலர்க் காவுதொறும்
உயரத் தொடுத்த [6] வூசல தாகி
மரந்தொறு மொய்த்த [7] மாந்தர்த்தாகிப்
புறங்கவின் கொண்ட நிறங்கிளர் செல்வத்

(நீரங்காடியின் வருணனை)

தூரங் காடி யுய்த்துவைத் ததுபோல்

பி-ம். 1 துளும்பிட்டது. 2 குரம்புநிரைத்துடன். 3 நெரியக் கூப்பிய. 4 நடுக்குற. 5 பெருங்கடை. 6 ஊசலராகி. 7 மாந்தர்க்காகி.

நீரங் காடி நெறிப்பட நாட்டிக்
கூல வாழ்நர் கோன்முறை குத்திய
நீலக் கண்ட நிரைத்த மருங்கின்
உண்ணா மதுவு முரைக்கு நானமும்
சுண்ணமுஞ் சாந்துஞ் சுரும்பிமிர் கோதையும்
அணியுங் கலனு மாடையு நிறைந்த
கண்ணகன் கடைக ளொண்ணுத லாயத்துக்
கன்னி மாண்டுழித் துன்னுபு நசைஇய
தூதுவர் போல [1] மூசின குழீஇ
[2] ஆணைத் தடைஇய நூனெறி யவையத்துக்
கல்வி யாளார் சொல்விசை போல
வேட்போ ரின்றி வெறிய வாக

(தந்த மிடங்கள்)

மாக்க ளூழிதரு மணநெடுந் தெருவின்
மடலிவர் போந்தை மதர்வைவெண் டோட்டினும்
படலைவெண் சாந்தினும் படத்தினு மியன்ற
பந்தரும் படப்பும் பரந்த பாடி
அந்தமு மாதியு மறிவருங் [3]குரைத்த
யோசனை யகலத் தொலிக்கும் புள்ளிற்
றேவரும் விழையுந் திருநீர்ப் பொய்கைக்
கரையுங் கழியுங் கானலுந் துறையும்
நிரைவளை மகளிர் நீர்பாய் மாடமொடு
மிடைபுதலை மணந்த மேதகு வனப்பிற்
கடல்கண் கூடிய காலம் போல
நூல்வினை நுனித்த நுண்வினைப் படாத்துத்
தானக மாடமொடு தலைமணந் தோங்கிய
வம்புவிரி கொட்டிலொடு வண்டிரை மயங்கிச்
செவ்வான் முகிலிற் செறிந்த செல்வத்
தெவ்வாய் மருங்கினு மிடையறக் குழீஇ
ஊரிறை கொண்ட நீர்நிறை விழவினுள்
இறைவன் பணியென் [4] றிறைகொண் டண்டி

பி - ம். 1 மூசினர். 2 ஆணைத்தடைஇய. 3 குரைத்தாய். 4 திமைகொண்டண்டு.

நிறைபுனற் [1] புகாஅர் நின்னகத் தோமென
விழாக்கோ ளாளர் விரைந்துசென் றுரைத்தலும்

(பிரச்சோதனன் செயல்)

உவாக்கட லொலியி னுரிமையொ டாஅய்
விழாக்கொள் கம்பலின் வெகுண்டுவெளின் முருக்கி
எழாநிலை புகாஅ வினங்கடி சீற்றத்
[2] தாணை யிகக்கு மடக்கருங் களிறு
சேணிகந் துறைந்த சேனையிற் கடிகென
வேந்துபிழைத் தகன்ற வினைவ ராயினும்
சேர்ந்தோர்த் தப்பிய செறுந ராயினும்
கலங்கவர்ந் தகன்ற கள்வ ராயினும்
நிலம்பெயர்ந் துறைத னெடுந்தகை வேண்டான்
தொகுதந் தீண்டிக் கிளைஞ ராகிப்
புகுதந் திகவிப் புனலாட் டகத்தெனச்
சாற்றிடக் கொண்ட வேற்றுரி முரசம்
திருநகர் மூதூர்த் தெருவுதோ றெருக்கி
மெய்காப் பிளைய ரல்லது கைகூர்ந்
திடைகொள வரினு மிருபத் தொருநாட்
படைகொளப் பெறாஅப் படிவத் [3] தானையன்

(பிடியின் சிறப்பு)

தாழ்புனற் றுறையுந் தமரொடு தருக்கும்
நாழிகைத் தூம்பு நறுமலர்ப் பந்தும்
சுண்ண வட்டுஞ் சுழிநீர்க் கோடுமென்
றெண்ணிய பிறவு மிளையோர்க் கியைந்த
புனலகத் துதவும் போகக் கருவி
பணையெருத் தேற்றிப் பண்ணின வாகி
மாலையு மணியு மத்தகப் பட்டும்
கோதையு மணிந்த கோல முடையன
திருநீ ராட்டினுட் டேவியர்க் காவன
மேவிய வனப்பொடு மிசைபிறர்ப் பொறுதன
பாக ரூரப் பக்கஞ் செல்வன

பி-ம். 1 புகாது நின்னகத்தோமெனை. 2 ஆணையிகத்த லடக்கவேண்டி, சேணிச்கந் துறைந்தனஞ் சேனைகட் கறையென. 3 தானையென்.

ஆருட் டிளம்பிடி யாயிரத் தங்கட்
குறும்பொறை மருங்கிற் குன்றம் போல
இருநில நனைப்ப விழிதரு கடாத்துக்
கைம்மிகக் களித்த கவுள தாயினும்
செயிர்கொண் மன்னர் செருவிடத் தல்ல
துயிர்நடுக் குறூஉ வேழம் பண்ணி

(பிரச்சோதனன் பொய்கைக் கரைக்கு வருதல்)

அரசுகை கொடுப்ப வண்ணூந் தியலிக்
கடிகை யாரங் கழுத்தின் மின்னப்
பயிர்கொள் வேழத்துப் பணையெருத் திரீஇக்
கடவுட் கல்லது காறளக் கில்லது
தடவுநிலை நிழற்றிய தாம வெண்குடை
ஏந்திய நீழற் சாந்துகண் புலர்த்திய
பரந்த கவரிப் படாகைச் சுற்றத்
துயர்ந்த வுழைக்கலத் தியன்ற வணியின்
முந்நீ ரொலியின் முழங்கு முரசமொ
டின்னீர் வெள்வளை யலறு மார்ப்பின்
மைத்துன மன்னரு மந்திரத் துணைவரும்
அத்துணை சான்ற வந்த ணாளரும்
சுற்றுபு சூழ முற்றத் தேறிப்
பிடியும் வையமும் வடிவமை பிடிகையும்
பெருந்தே ரொழுக்கிற் பிணங்கிய செலவின்
வண்ண மகளிர் சுண்ணமொடு சொரியும்
மலர்தூ மாட மயங்கிய மறுகின்
நாட்பெரு வாயி னூறுநீ ராத்திரை
வாட்கெழு நெடுந்தகை வளம்பட வெழுலும்

(அரசன் மனைவியர் புறப்படல்)

உயவக் கொண்ட வோவியத் தண்டிகை
இயைகொள் வெள்ளியொ டிரும்பியர்ப் புறத்து
வான்கொடிப் பவழமொடு வல்லோர் வகுத்த
ஆன்கட் சந்தனத் தரிக்கவறு பரப்பி
முத்து மணியுஞ் சித்திரத் தியற்றிப்
பத்தி பயின்ற கட்டகக் கம்மத்து

மருப்பிடைப் பயின்ற மாசறு மணித்தொழிற்
பிரப்பமை பலகையொடு பாசுணங் கோலி
ஐவகை வண்ணமு மாகரித் தூட்டிக்
கைவினை நுனித்த கச்சணி கஞ்சிகை
பசும்பொன் குயின்ற பத்திப் போர்வை
அசும்பிற் றேயா வலர்கதி ராழி
பாடின் படுமணி [1] யூடுறுத் திரங்க
மாலை யணிந்த மணித்தொழிற் பாண்டியம்
நூல்பிணித் தின்னுக நோன்சுவற் கொளீஇக்
கோல்கொள் கன்னியர் மேல்கொண் டேறி
விசிபிணி யுறுத்த வெண்கோட் டூர்தி
முரசெறி முற்றத்து முந்துவந் தேறும்
அரச மங்கைய ரடிமிசைக் கொண்ட
கிண்கிணி மயங்கிய தண்பெருங் கோயிற்

(நீர்விழாவிற்காகக் கொண்டு செல்லும் பண்டங்கள்)

[2] கடைப்பகச் செப்பே கவரி குஞ்சம்
[3] அடைப்பைச் சுற்றமொ டன்னவை பிறவும்
அணிகலப் பேழையு மாடை வட்டியும்
மணிசெய் வள்ளமு மதுமகிழ் குடமும்
பூப்பெய் செப்பும் புகையகி லறையும்
சீப்பிடு சிக்கமுஞ் செம்பொற் கலசமும்
காப்பியக் கோசமுங் கட்டிலும் பள்ளியும்
சுட்டிக் கலனுஞ் சுண்ணகக் குற்றியும்
வட்டிகைப் பலகையும் வருமுலைக் கச்சும்
முட்டிணை வட்டு முகக்கண் ணடியும்
[4] நக்கிரப் பலகையு நறுஞ்சாந் தம்மியும்
கழுத்திடு கழங்குங் கவறுங் கண்ணியும்
பந்தும் பாவையும் பைங்கிளிக் கூடும்
யாழுங் குழலு மரிச்சிறு பறையும்
தாழ முழவமுந் தண்ணுமைக் கருவியும்
ஆயத் ததவு மரும்பெறன் மரபிற்

பி - ம். 1 ஊடுறத்திரங்க. 2 கடப்பகம். 3 அடைப்பச். 4 நத்திரப்பலகை.

போகக் கலப்பையும் பொறுத்தனர் மயங்கிக்
கூனுங் குறளு மாணிழை மகளிரும்
திருநுத லாயத்துத் தேவிய ரேறிய
பெருங்கோட் டூர்திப் பின்பின் பிணங்கிச்
செலவுகண் ணுற்ற பொழுதிற் பல்லருடன்

(தேவியர் செயல்)

பண்டிவ் வாழ்வினைத் தண்டியுங் கொள்வோள்
இன்றிந் நங்கை கண்டதை யுண்டுகொல்
பாணி செய்தனள் காண்மின் சென்றென
ஏறிய வையத் தெடுத்த கஞ்சிகைத்
தேறுவா மதியிற் றிருமுகஞ் சுடரக்
கதிர்விரற் கவியலுட் கண்ணிணை பிறழ
நெருக்குறு சுற்றத்து விருப்பி னோக்கி
ஒட்டிழை மகளிரை விட்டனர் நிற்பச்

(வாசவதத்தையின் செயல்)

[1] சுட்டுருக் ககிலின் வட்டித்துக் கலந்த
வண்ண விலேகை நுண்ணிதின் வாங்கி
இடைமுலை யெழுச்சித் தாகிப் புடைமுலை
முத்திடைப் பரந்த சித்திரச் செய்கொடி
முதலின் முன்னங் காட்டி நுதலின்
சுட்டியிற் றோன்றிய சுருளிற் றாகி
வித்தகத் தியன்றதன் கைத்தொழில் காட்டி
இன்னிசை வீணை யன்றியு நின்வயின்
உதயண நம்பி யோவியத் தொழிலின்
வகையறி யுபாயமும் வல்லை யாகெனத்
தந்தது முண்டோ பைந்தொடி கூறென
உற்ற புருவத் தொரா அ ராகி
முற்றிழை மகளிர் முறுவல் பயிற்றச்
செழுங்குரன் முரசிற் சேனா பதிமகள்
ஒருங்குயிர் கலந்த வுவகைத் தோழியை
நறுநீர்க் கோலத்துக் கதிர்நலம் புனைஇயர்
நீடகத் திருந்த வாசவ தத்தையை

பி - ம். 1 சுட்டிருக்கலின.

நீசெலற் பாணிநின் ருய ரெல்லாம்
தாரணி வையந் தலைக்கடை நிறீஇ
நின்றனர் திருவே சென்றிடு விரைந்தென
விளங்குபொன் னறையுள விழுநிதிப் பேழையுள்
இளங்கலந் தழீஇ யெண்ணிமெய்ந் நோக்கித்
தோழியர்க் கெல்லா மூழூழ் நல்கி
வத்திவை வைய மேறினள் போலப்

(பதுமகாரிகை உட்கோளும் செயலும்)

புதுவது மகிழ்ந்த [1] புகற்சிய ளாகிப்
பதும காரிகை மகண்முக நோக்கித்
தனித்துஞ் சேனைப் பணித்துறைப் படியின்
நீரின் வந்த காரிகை நேர்த்தது
துகடீ ரிருந்தவத் துணிவின் முற்றி
முகடுய ருலக முன்னிய முனிவரும்
கண்டாற் [2] கண்டவாங் கதிர்ப்பின வாகித்
தண்டாப் பெருந்துயர் தருமிவள் கண்ணென
உண்மலி யுவகைய ளாகித் தன்மகள்
இனவளை யாயத் திளையர் கேட்பப்
புனல்விளை யாட்டினுட் போற்றுமின் சென்றென
ஓம்படைக் கிளவி பாங்குறப் பயிற்றி
ஆங்கவ ருள்ளூ மடைக்கல நினக்கெனக்
காஞ்சன மாலைக்குக் கைப்படுத் தொழிந்தபின்

(வாசவதத்தை புறப்படல்)

ஏற்ற கோலத் தியம்புங் கிண்கிணி
நூற்றுவர் தோழியர் போற்றியல் கூறத்
தெய்வச் சுற்றத்துத் திருநடந் ததுபோல்
பையென் சாயலொடு பாணியி னொதுங்கி
உறைத்தெழு மகளிரொடு தலைக்கடை சார்தலும்

(வையத்தின் சிறப்பு)

யவனக் கைவினை யாரியர் புனைந்தது
தமனியத் தியன்ற தாமரை போலப்
பவழமு மணியும் பல்வினைப் பளிங்கும்

பி - ம். 1 புகழ்ச்சியள். 2 கண்டவாக்.

21006

தவழ்கதிர் முத்துந் தானத் தணிந்தது
விலைவரம் பறியா வெறுக்கையுண் மிக்க
தலையள வியன்றது தனக்கிணை யில்லது
தாயொடு வந்த தலைப்பெரு வையம்
வாயின் முற்றத்து வயங்கிழை யேறப்
பாத பீடிகை பக்கஞ் சேர்த்தலும்
செந்நூல் விசித்த நுண்ணுக நுழைந்த
இலக்கணப் பாண்டியம் வலத்தி னேற்றிக்
கண்ணணி பரிந்து [1] கடிக்குளம் பிளகலும்
பண்ணிய வையம் பள்ளி புகுகென
மூதறி பாக னேற வியையான்
இலக்கண மின்றென விலக்கினன் கடிய

(மாடச்சிவிகையின் சிறப்பு)

ஆடகப் பொற்கவ றணிபெறப் பரப்பிக்
கூடங் குத்திய கொழுங்காழ்க் கேற்ப
நாசிகைத் தானத்து நகைமுத் தணிந்து
மாசறு மணிக்கான் மருப்புக் குடமிரீஇ
அரக்குருக் கூட்டிய வரத்தக் கஞ்சிகைக்
கரப்பறை விதானமொடு கட்டி லுடையது
கோதை புனைந்த மேதகு வனப்பின்
மல்லர் பூண்ட மாடச் சிவிகை
பல்வளை யாயத்துப் பைந்தொடி யேறலும்
செய்யோ ளமர்ந்த செம்பொற் றாமரை
வள்ளிதழ் பொதிந்த கொட்டை போல
மெல்லியன் மாதரை யுள்ளகம் புகுத்தி
மல்லற் பெருங்கிளை செல்வுழிப் படர

(காவலர் முரசறைதல்)

முனிவ ராயினு மூத்தோ ராயினும்
எனையீர் பிறரு மெதிர்வரப் பெறீரென
வானுறை யுலகினும் வையக வரைப்பினும்
தான [2] விளைவினுந் தவத்தது பயத்தினும்
எண்ணரும் பல்லுயி ரெய்தும் வெறுக்கையுட்

பி - ம். 1 கழிக்குளம்பிளக்கலும். 2 வளைவினுந்.

பெண்டிருண் மிக்க பெரும்பொரு ளின்மையின்
உயிரெனப் படுவ துரிமை யாதலின்
செயிரிடை யிட்டது செல்வன் காப்பென
ஆறுகடி முரச மஞ்சுவரக் கொட்டிக்
காவ லாளர் காற்புறஞ் சுற்றப்
புயன்மலை [1] தொடுத்துப் பூமலர் துதைந்து

(மகளிர் பொய்கைத்துறையைச் சேர்தல்)

[2] வியன்கா மண்டிய வெள்ளம் போல
மாட மூதூர் [3] மறுகிடை மண்டிக்
கோடுற நிவந்து மாதிரத் துழிதரும்
கொண்மூக் குழாத்திற் கண்ணுற மயங்கி
ஒண்ணுதன் மகளி ரூர்தி யொழுக்கினம்
புள்ளொலிப் பொய்கைப் பூந்துறை முன்னித்
தண்பொழில் கவைஇய சண்பகக் காவிற்
கண்டோர் மருளக் கண்டத் திறுத்த

(பிரச்சோதனன் செயல்)

விழாமலி சுற்றமொடு வெண்மண லேறி
நாளத் தாணி வாலவை நடுவண்
நிரந்தநீர் விழவினு ளிரந்தோர்க் கீக்கெனப்
பன்னீ ராயிரம் பசும்பொன் மாசையும்
குவளைக் கண்ணியுங் குங்குமக் குவையும்
கலிங்க வட்டியுங் கலம்பெய் பேழையும்
பொறியொற் றமைந்த குறியொடு கொண்ட
உழைக்காப் பாள ருள்ளுறுத் தியன்ற
இழைக்கல மகளி ரிருநூற் றுவரொ
டியாழறி வித்தகற் கூர்தி யாவது
கண்டுகொண் மாத்திரை வந்தது செல்கெனத்
தனக்கென் றுய்ந்த தலையிரும் பிடிகளுள்
இலக்கணக் கரும மெட்டா முறையது
மதியோர் புகழ்ந்த மங்கல யாக்கையொடு
விதியோர் கொளுத்திய வீரிய முடையது
சேய்ச்செல லேன்பரிச் சீலச் செய்தொழிற்

பி - ம். 1 கொடுத்துப். 2 வியனகர். 3 மறுகிட.

பூச்செய் கோலத்துப் பொலிந்த பொற்படை
மத்தக மாலையொடு மணமகள் போல்வ
துத்தரா பதத்து மொப்புமை யில்லாப்
பத்திரா பதியே பண்ணிச் செல்கென
உதயண குமரற் கியைவன பிறவும்
[1] உழைக்கல மெல்லாந் தலைச்செல விட்டு
வல்லே வருகவில் லாளன் விரைந்தென

(உதயணன் செயல்)

விட்ட மாற்றம் பெட்டனன் பேணிச்
சென்ற காட்சிச் சிவேதனைக் காட்டிப்
பொன்னறை காவலர் பொறிவயிற் படுகெனச்
செண்ண மகளிர் செப்பிற் காட்டிய
வண்ணஞ் சூட்டின கண்ணியிற் கிடந்த
பனிப்பூங் குவளை பயத்தின் வளர்த்த
தனிப்பூப் பிடித்த தடக்கைய னாகி
நெடுநிலை மாநகர் நில்லான் போதந்
திடுமணன் முற்றத் திளையரு ளியன்று
படுமணி யிரும்பிடிப் பக்க நண்ணிப்
பொலிந்த திருவிற் பொற்புடைத் தாகி
மலிந்த யாக்கையின் மங்கல மிக்கதன்
வனப்பிற் கொவ்வா வாழ்விற் றாகி
வாழ்நா ளற்ற வகையிற் றாயினும்
கணைச்செல வொழிக்குங் கடுமைத் திதுவென
மனத்திற் கொண்ட மதிய னாகிக்
கண்டே புகன்ற தண்டா வுவகையன்
தாரணி யிரும்பிடி தலைக்கடை யிரீஇ
ஏரணி யெருத்த மிறைமக னேறலும்

(குதிரைகள்)

தூய்மை யின்றென மாநிலத் தியங்காக்
கடவு ளியக்கங் கற்குவ போலக்
குளம்புநில னுறுத்தலுங் குறையென நாணிக்
கதழ்ந்துவிசை பரிக்குங் கால வாகி

பி - ம். [1] இழைக்கல.

உரத்தகைப் பொற்று ரற்று மார்பிற்
பிந்துபுடை பாணியிற் பொங்குமயிர்ப் புரவி

(தேர்கள்)

மருங்கிரு மணிப்புடை நிரந்துடன் மிளிர
நான்முகங் கவைஇய வான்செய் பச்சைய
தானச்செங் கோட்டுத் [1] தோன்மணைப் படுத்த
சித்திரத் தவிசிற் செறிந்த குறங்கிற்
பொற்றொடர் பொலிந்த பூந்துகிற் கச்சைய
கத்திகை சிதர்மணி கட்கத்துத் [2] தெரிப்ப
வித்தக நம்பியர் பக்கத்து வலித்த
[3] கானத்துக் குலைந்த கவரி யுச்சிய
தானைத் தலைப்படை பாணியிற் பரிப்ப
அச்செறி புலவ ரளவுகொண் டமைத்துக்
கட்க நுனித்த கடைக்கட் டிண்ணுகம்
கொய்சுவ லிரட்டை மெய்யுறக் கொளீஇ
ஒட்டிடை விட்ட கட்டின வாயினும்
ஒன்றினின் றியங்காச் சென்றிடை கூடுவ
மாயங் காட்டுநர் மறையப் புணர்த்த
கோவை நாழிகைக் கொழூஉக்கண் கடுப்ப
வடுச்சொ னீங்கிய வயங்கிய வருணத்
திடிச்சொற் பொருஅ விலக்கண வினையர்
உள்ளுறக் கோத்த வள்புகொள் வலித்தொழிற்
பாகர் நின்ற பண்ணமை நெடுந்தேர்
ஆக..............................புறஞ்சுற்றக்
காலியற் புரவியொடு களிறுபல பரப்பிப்
பால குமரர் படையகப் படுப்ப
உருவச் செங்கொடி தெருவத்துப் பரப்பிச்
செருமிகுந் தாமமொடு சேனையிற் கூடி
மன்னவ னிருந்த தண்பொழிற் காவில்
சென்றிறுத் தனரா னம்பிய ரொருங்கென்.

௫௮—விழாவாத்திரை முற்றிற்று.

பி - ம். 1 தொன்மணைப். 2 தெறிப்ப. 3 கலினத்துக்.

௩௧—புனற்பாற்பட்டது.

(பிரச்சோதனன் செயல்)

நம்பியர் கூடிய நாளவை மருங்கிற்
கம்பலைப் பந்தர்க் காழகில் கழுமிய
திருநா ளிருக்கைத் திறல்கெழு வேந்தன்
பெருநீ ராட்டணி பெட்கும் பொழுதெனச்
செம்பொற் படத்துப் [1] பேறுவலித் திருந்த
மங்கலக் கணிகண் மாதிர நோக்கிப்
புரைமீன் கூடிய பொழுதியல் கூற
இருப தியானையு மெண்பது புரவியும்
அருமணி மான்றே ரையைந் திரட்டியும்
ஒருநூ றாயிரத் தொருகழஞ் சிறுத்த
தமனிய மாசையொடு தக்கணை யுதவிக்
கடவது நிறைந்த தடவளர் செந்தீ
ஒடியாக் கேள்விப் பெரியோ ரீண்டிய
படிவக் குழுவினு ளடிமுதல் வணங்கி
ஆசை மாக்களொ டந்தணர் கொள்கென
மாசை வாரி மன்னவ னாடி
அறிநர் தானத் தாயிரம் [2] பொற்பூக்
கருவிநிலைப் பள்ளிக்குத் தொழுதனன் போக்கிச்
சுண்ணம் விரவிய சுரியிரும் பித்தைக்
கண்ணி நெற்றி வெண்சூட் டேற்றித்
தூத்துகி லுடுத்துத் தொடியுடைத் தடக்கைக்
கோத்தொழி லிளையர் பூப்பலி கொடுத்துச்
செம்பொ னெல்லின் செங்கதிர் சூட்டி
வெண்டுகி லிட்ட விசய முரசம்
பண்டிய லமைந்த படுகட னெல்லாம்
தண்டொழிற் செங்கோ றலைத்தலை சிறக்கென
வெந்திறல் வேந்தன் [3] விட்டிவை கூறக்
கண்டொரு பாணியிற் கடல்கிளர்ந் ததுபோற்
பல்படை மொய்த்த மல்லற் பெருங்கரை
மழைமலைத் தன்ன மாணிழை மிடைந்து

பி - ம். 1 பேடு. 2 பொற்பூச் சுருவி. 3 வீட்டிவை.

வம்புவிசித் தியாத்த செம்பொற் கச்சையர்
மாலை யணிந்த கோல்செய் கோலத்துப்
பூப்போ துறுத்த மீப்பொற் கிண்கிணி
இடுமணிப் பெருநிரை நெடுமணிற் கிடைஇ
இரும்புறம் புதைய வெழின்மறைந் திருந்த
கருங்காற் கானத்துக் கண்மணிக் குழாத்திடை
ஏற்றரி மாவின் றேற்றம் போல
மின்னிழை மகளிரொடு மன்னவன் றோன்றி
விசைய [1] வேழத் திசையெருத் தேற்றிப்
பெருவிறல் வேந்தன் சிறுவரை யெல்லாம்
ஓடுநீர்ப் பெருந்துறை யுள்ளம் பிறந்துழி
ஆடுக போயென் றவர்களை யருளி
உதயண குமர னுவந்துழி யாடித்
துறைநகர் விழவின் றேற்ற மெல்லாம்
பரந்த செல்வங் காண்கெனப் பணித்துப்
புரிந்த பூவொடு பொற்சுணங் கமழ
எழுந்த வார்ப்பொ டியம்பல துவைப்பப்
புண்ணியப் பெருந்துறை மன்னவன் படிந்தபின்

(நகரமாந்தர் செயல்)

இறைகொண் டீண்டிய வேனை மாந்தரும்
துறைதுறை தோறு முறைவிடம் பெறாஅர்
தண்புன லாட்டின் றக்கணை யேற்கும்
அந்த ணாள ரடைக விரைந்தெனப்
பயினூ லாளரைப் பயிர்வனர் கூஉய்க்
கவர்வனர் போலக் [2] காதலி னுய்த்து
நன்கல மேற்றி நாளணி யணிந்து
மங்கல வேள்விபுண் மகளீ வோரும்
செம்பொற் புரிசை வெண்சுதை மாடத்
துழைக்கலம் பரப்பி யுருவிய மகளிரொ
டிழைக்கல நிறீஇ யில்லீ வோரும்
ஆலைக் கரும்பு மரியுறு செந்நெலும்
பாளைக் கமுகின் படுவுஞ் சுட்டிப்
புயல்சே ணீங்கினும் பூவளங் குன்றா

பி - ம். 1 வேழத்தசை. 2 காவலின்.

வயலுந் தோட்டமும் வழங்கு வோரும்
நாகுகூ னீங்கிய சேதாத் தொகுத்துக்
குளம்புங் கோடும் விளங்குபொன் னுறீஇத்
தளையுந் தாம்பு [1] மளைகடை மத்தும்
கழுவுங் கலனும் வழுவில பிறவும்
பைம்பொனி னியன்றவை பாற்பட வகுத்துக்
குன்றுக் கோடி கொடுத்துவப் போரும்
இன்னவை பிறவு மென்னோர்க் காயினும்
உடையவை தவாஅக் கொடைபுரி படிவமொ
டிலமென் மாக்களை யிரவொழிப் பவர்போற்
கலங்கொடை பூண்ட கைய ராகி
வெண்டுகில் பூட்டிய வேழக் குழவியும்
ஒண்படை யணிந்த வண்பரிப் புரவியும்
உண்டியு முடையுங் கொண்டகஞ் செறித்த
பண்டியு மூர்தியுங் கொண்டன ருழித்தந்
தந்தணர் சாலையு மருந்தவர் பள்ளியும்
தந்தற மருங்கிற் றலைவைப் போரும்
நிலம்பெய் வோரு நிதிபெய் வோரும்
களிறுபெய் வோரும் பரிபெய் வோரும்
பெய்வோர் பெய்வோர் [2] பெயர்வறக் குழீஇக்
கொள்வோ ரறியாக் குரல ராகி
மணற்கெழு பெருந்துறை மயங்குபு தழீஇ
வனப்பொடு புணர்ந்த வகையிற் றாகிப்
புனற்பாற் பட்டன்றுற் பூநகர் புரிந்தென்.

௩௯—புனற்பாற்பட்டது முற்றிற்று.

௪௰—உவந்தவைகாட்டல்.

புரிந்த சுற்றமொடு புணர்ந்துடன் கெழீஇ
விரிநீர்ப் பொய்கையுள் விளையாட்டு விரும்பிய
மறுநீங்கு சிறப்பின் மதிலுஞ் சேனை
நறுநீர் விழவி னுளணி கூறுவென்

பி - ம். 1 அளைகடன்மத்து. 2 பெயர்வுற.

(நீர்மாடத்தின் சிறப்பு)

[1] பனையும் வெதிரும் பாசிலைக் கமுகும்
இனையன பிறவும் புனைவனர் நாட்டிக்
கிடையும் பீலியு மிடைவரித் [2] தழுத்தி
மிடைவெண் டுகிலி னிடைநிலங் கோலி
அரிச்சா லேகமு மார வள்ளியும்
கதிர்ச்சா லேகமுங் கந்துங் கதிர்ப்ப
வம்பப் படத்துப் பொன்னுருக் கூட்டி
அள்ளிலை வாழை யகம்போழ்ந் திறுத்த
வெள்ளி வெண்டிரள் வேண்டிடத் தூன்றிக்
கட்டளை நாசியொடு கபோதங் காட்டி
எட்டிறை யெய்திய விலக்கணக் காட்சி
ஏரணி யமைந்த வெழுநில [3] நல்வினை
நீரணி மாடத்து நிலாநெடு முற்றத்

(நாரைகளின் செயல்)

தரிப்பொற் கிண்கிணி யார்ப்ப வியலிக்
கருங்கண் மகளிர் கைபுடைத் தோப்ப
இருங்கண் விசும்பக மிறகுறப் பரப்பிக்
கருங்கயல் கொண்ட கவுள வாகிப்
பொங்கிரும் புன்னைப் பூம்பொழின் முன்னிச்
செங்கா ணாரை செல்வன காண்மின்

(ஒரு பிடியின் செயல்)

சாந்தரை............யன கூலப் பெருங்கடை
ஈண்டிய மாதரை யீண்டிடந் தம்மினெம்
பூங்குழை மாதர் [4] புனலகம் புக்கனள்
ஆங்கியன் றவளைத் தாங்குந ரில்லெனக்
கூந்த னறுமண் சாந்தொடு கொண்டு
நானச் செப்பொடு கூன்பின் றுளங்கப்
பெருங்கோ நங்கை பெட்ப வேறிய
இருங்கை யிளம்பிடி கடச்செருக் கெய்திக்
கடிற்றுப் பாகன் கைப்புழிச் செல்லாது
தொடிக்கை மகளிர் நீர்குடை வெரீஇய

பி - ம். 1 பணையும். 2 எழுதி. 3 நலவினை. 4 புகலகன்.

நெட்டிரும் பொய்கைக் குட்ட மண்டி
ஒளிச்செந் தாமரைப் பாசடைப் பரப்பிற்
களிக்கய லிரியக் குளிப்பது காண்மின்

(ஒரு பெண்ணின் செயல்)

ஞாழற் படுசினை தோழியர் நூக்க
ஆம்பற் பரப்பிற் பாய்ந்த பைந்தொடி
செண்ணச் சிகழிகைப் பின்னிடை சேர்ந்த
பொன்னரி மாலைதன் [1] புறம்பிடைப் புடைப்பச்
செற்றப் புதவு குத்தி வாங்கிக்
கொழுநன் கூந்தல் கொண்டெனக் கருதிக்
கழுநீ ருண்கட் கடையி னோக்கி
அன்மையி [2] னழுங்கிய நன்னுத லுவப்ப
வள்ளிலைப் பரப்பின் வள்பெறிந் தன்ன
துள்ளியல் வட்டிகை துடிப்பிற் கடைஇ
உள்வழி யுணரா துழிதருங் கணவன்
நனிபெருங் காதலொடு நண்ணுவழி யடையப்
பனிவா ருண்கண் பைதன் மறைய
முகிழ்ந்துவீங் கிளமுலை முத்திடை நாற்றிக்
கவிழ்ந்தெருத் திறைஞ்சுமோர் காரிகை காண்மின்

(ஒரு தூரங்கின் செயல்)

நீலக் குவளை நிரையித ழுடுத்த
கோலப் பாசடைப் பால்சொரிந் தன்ன
தூவெள் ளருஞ்சிறைச் சேவலொ டுளரிப்
பள்ளி யன்னம் பகலிற் றுயிலா
வெள்வளை மகளிர் [3] முள்குவநர் குடையும்
நீரொலி மயக்கிய வூர்மலி பெருந்துறைக்
கடற்றிரைக் கண்டங் கானற் குத்தி
மடற்பனை யூசலொடு மாட மோங்கிய
உருவ வெண்மணற் பெரு [4] வெண் கோயிலுட்
செம்பொற் கிண்கிணிச் சேணு பதிமகள்
கம்பற் சுற்றமொடு கன்னியர் காப்பப்
பைந்தொடிக் கோமா னங்கையர் நடுவண்

பி - ம். 1 புணர்படைப். 2 அழுக்கிய. 3 முழுகுவனர். 4 வேண்,

வண்டுளை ரைம்பால் வாசவ தத்தை
அரைச மங்கைய ராயமொடு கெழீஇ
நிரைவெண் மாடத்து நீரணி காணிய
போதரு மென்னுங் காதலின் விரும்பிப்
பெருங்காற் புன்னைக் கருங்கோட் டணைத்த
நாவாய் பண்ணு மாவிறன் மள்ளர்க்குக்
கள்ளடு மகடூஉக் கைசோர்ந் திட்ட
வெள்ளி வள்ளம் பல்லுறக் கவ்விக்
கூடக் கூம்பி னீடிர ளேறி
உச்சிக் கிவருங் கட்கின் கடுவன்
வீழ்ந்த திங்களை விசும்புகொண் டேறும்
தெய்வ மகாஅரி னையுறத் தோன்றித்
துள்ளுபு திரிதருந் தோற்றங் காண்மின்

(ஒரு களிமகன் செயல்)

சுழலுங் [1] கண்ணினன் சோர்தரு மாலையன்
அழுனறுந் தேற லார மாந்திக்
காழக மீக்கொண் டாழுந் தானையன்
வாழ்க வாழ்கவெம் மதிலுஞ் சேனை
மட்டுண் மகளிர் சுற்றமொடு பொலிகெனத்
துட்டக் கிளவி பெட்டவை பயிற்றிக்
கட்பகர் மகடூஉக் கட்குடை யோசையும்
கன்னமர் பள்ளிக் [2] கம்மிய ரிடிக்கும்
பன்மலர்க் காவி னம்மனை வள்ளையும்
குழலும் யாழும் மழலை முழவமும்
முட்டின் றியம்பும் பட்டின மொரீஇத்
துறக்கங் கூடினுந் துறந்திவ ணீங்கும்
பிறப்போ வேண்டேன் யானெனக் கூறி
ஆர்த்த வாய னூர்க்களி மூர்க்கன்
செவ்வழிக் கீதஞ் சிதையப் பாடி
அவ்வழி வருமோ ரந்த ணாளனைச்
செல்ல லாணை நில்லிவ ணீயென
எய்தச் சென்று வைதவண் விலக்கி

பி - ம். 1 கண்ணின். 2 கம்மியரடிக்கும்.

வழுத்தினே முண்ணுமிவ் வடிநறுந் தேறலைப்
பழித்துக் கூறுநின் பார்ப்பனக் கணமது
சொல்லா யாயிற் புல்லுவென் யானெனக்
கையலைத் தோடுமோர் களிமகற் காண்மின்

(சிலமகளிர் செயல்)

பல்காசு நிரைஇய வல்குல் வெண்டுகில்
ஈரத் தானை நீரிடைச் சோரத்
[1] தோட்டார் திருநுதற் சூட்டயற் சுடரும்
சுட்டி சிதையக் குட்டத்துக் குளித்து
மகர குண்டல மறிந்துவில் வீசக்
கிளரும் பாசிழைக் கிண்கிணிக் கணைக்கால்
அஞ்செஞ் சீறடி யஞ்சுவர வோடி
நிரைவளை மகளிர் நீர்குடை வொரீஇப்
புரைபூங் கொண்டையிற் [2] புகைப்பன காண்மின்

(மயிலின் செயல்)

கருங்காற் புன்னையொ டிருங்கரும் புடுத்து
நாணல் கவைஇய கான லொருசிறை
மகிழ்பூ மாலையொடு [3] மருதிணர் மிடைந்த
அவிழ்பூங் கோதையொ டவிரிழை பொங்க
எக்கர்த் தாழை நீர்த்துறைத் தாழ்ந்த
நெடுவீ ழூசன் முடிபிணி யேறித்
[4] தொடுவேன் முற்றத்துத் தோழியொ டாடாப்
பட்டியல் கண்டத்துப் பலர்மனங் கவற்றவோர்
எட்டி குமர னினிதி னியக்கும்
இன்னொலி வீணைப் பண்ணொலி வெரீஇ
வஞ்சிக் கொம்பர்த் துஞ்சரித் துளரி
ஒளிமயிர்க் கலாபம் பரப்பி யிவ்வோர்
களிமயில் கணங்கொண் டாடுவன காண்மின்

(உண்ணும் அந்தணர் செயல்)

அதிரல் [5] பரந்த வசோகந் தண்பொழின்
மணிக்கயத் தியன்ற மறுவி றண்ணிழற்

பி - ம். 1 சோட்டார். 2 புடைப்பன. 3 மருதினர். 4 தொடிவெண. 5 பரந்த சோகத்.

பனிப்பூங் குவளையொடு பாதிரி விரைஇ
வேதிகை யெறிந்த வெண்மணற் றிண்ணைப்
பாலிகைத் தாழியொடு பல்குட [1] மிரீஇ
முந்நீர்ப் பந்தர் முன்கடை நாட்டி
வரைவின் மாந்தர்க்குப் புரைபதம் பகரும்
கலம்பூச் [2] சரவத் திலஞ்சி முற்றத்துக்
கருப்புக் கட்டியொடு தருப்பணங் கூட்டி
நெய்ச்சூட் டியன்ற சிறுப லுண்டி
நகைப்பத மிகுத்த [3] கைய ராகித்
தொகைக்கணம் போதரு மறச்சோற றட்டில்
தலையுலை வெந்த வளைவா லரிசி
வண்ணப் புழுக்க லுண்ணாது சிதறி
ஊட்டெமக் கீத்த கோப்பெருந் தேவி
முன்ன ராக முன்னுமின் கொண்டெனத்
தலைப்பெரு மடையனைத் தலைக்கடை வாங்கும்
எந்தயிர் வாரா னெமக்கெனச் சீறி
அந்த ணாள ரலைப்பது காண்மின்

(மகளிர் குரவை)

முன்றுறை யீண்டிய குன்ற வெண்மணல்
எக்கர் மீமிசைத் தொக்கொருங் கீண்டி
நுண்ணயிர் வெண்டுகள் குடங்கையின் வாரி
இலைப்பூண் கவைஇய வெழுதுகொடி யாகத்து
முலைக்கச் சிளமுலை [4] முகத்திடை யப்பி
மராஅ மயிலின் மயங்குபு தூங்கும்
குழாஅ மகளிர் குரவை காண்மின்

(ஒரு பெண்ணின் செயல்)

புனைந்தேந் தல்குற் காசுபுதை யாது
நனைந்து நிறங்கரந்த நார்நூல் வெண்டுகில்
அரைய தாகவு மாடைகா ணாது
நிரைவளை முன்கைத் தோழியர் குடைந்த
நுரைகை யரிக்குமோர் நுடங்கிடை காண்மின்

பி - ம். 1 மரீஇ. 2 சாவஞ் சிலஞ்சி. 3 கையவாகி. 4 முத்திடை பரப்பி.

(சில மகளிர் செயல்)

[1] தொக்கனர் படியுந் தொய்யின் மகளிர்தம்
கைக்கொ ணீரிற் கண்ணிழல் கயலென
மெய்க்கண் மேவார் மெல்லெனச் சொரிதந்
தெக்கர்க் கிளைக்கு மேழையர்க் காண்மின்

(கட்குடி மகளும் அவள் காதலனும்)

நெடுநீர் மாடத் தேணி யேறிப்
பொறிமயிற் பெடையிற் பொங்குபு பாய்தலில்
அணிக்கையிற் றவழ்ந்த மணிக்குர லைம்பால்
ஈர்முத் தாகத் தீரம் புலர்த்தி
அழனறுந் தேறல் சுழல்வண் டோப்பிக்
குறிவெங் காதலன் பொறியாப் புறுத்த
தமனிய வள்ளத்துத் தன்னிழ னோக்கிப்
பிறண்முக மிதுவெனப் பெண்மையின் மயங்கிக்
கள்ளினுட் டோன்றுமிவ் வொள்ளிழை மாதரைப்
பண்டு மொருகாற் கண்டகத் தடக்கிய
வையப் பாத்தையைக் கையொடு கண்டேம்
இனிப் [2] பொய் யுண்ணு மேழைய மல்லமென்
றணித்தகு நுதல்வியர்த் தரையெழுத் தளைஇத்
துணிப்புறு கிளவி பணிக்கடற் பிறந்த
அரும்பெற லமிழ்தென விரும்பும் வேட்கையன்
முகிழ்நகை முகத்த னாகி முற்றிழை
அவிழ்குரற் கூந்த லங்கை யடைச்சிக்
கள்ளமர் தேவிநின் கதிர்விடு நெடுமுகத்
தொள்ளணி காணிய வுள்ளி வந்ததை
உணராது புலத்தல் புணர்குவை யாயினென்
உள்ளகஞ் சுடுமென வுள்ளவிழ்ந் தெழுதரும்
காமக் கட்டுரை கனியென வளைஇத்
தாமக் கோதையொடு தாழ்சிகை திருத்தி
வளர்ந்தேந் திளமுலை மருங்கிவர்ந்து கிடந்த
பொலங்கல மணிப்பூண் பொலியப் புல்லியவள்
மனங்கொளத் தேற்றுமோர் மைந்தனைக் காண்மின்

பி - ம். 1 தொக்குத் துறைபடியும். 2 போயுண்ணும்.

(ஒரு பெண்ணின் ஊடல்)

ஏம முந்நீ ரெறிசுற வுயர்த்த
காமனும் விழையுங் காமர் காரிகைக்
கலையுணர் மகளி ருள்ளம் போல
நிலையின் றழிதரு நெடுஞ்சுழி நீத்தத்து
விளைதீ ருயிரின் மிதந்தது கிழாப்
பண்ணமை நெடும்புணை திண்ணிதிற் றழீஇ
ஆய மாக்களொடு செய்வழி யோடிக்
கலந்த [1] காதலி னூடலிற் கைசோர்ந்து
மலர்ந்துகடை போழ்ந்து மாழை கழீஇக்
காமங் கனிந்த கருந்தடங் கண்ணின்
இமைதீர் வெம்பனி முலைமுக நனைப்ப
மாரிப் பிடிக்கை நால்புறல் கடுப்ப
நீர்பொறை யாற்றாது [2] நெகிழ்ந்துவீ ழிசைந்த
காரிருங் கூந்தல் கையி னேந்தி
அகலி னகலு முயிரின ளாகித்
தலைநீர்ப் பெருந்துறை நிலைநீர் நின்ற
வண்டார் கோதையைக் கண்டன னாகி
நீணீர் நீந்தி நெடும்புணை யொழியத்
தன்வயிற் செல்லு மில்வளக் கொழுநனை
நின்வயிற் காத னில்லா தூர்தரும்
பூம்புனன் மடந்தையைப் புணர்ந்துவிளை யாடித்
தேம்பட மொழிந்து வேம்புமனத் தடக்கி
வார லோவென வாய்திறந்து மிழற்றி
ஓராது புலக்குமோ ரொள்ளிழை காண்மின்

(நீராடுதலினின்றும் விலக்கப்பட்ட
ஒரு பெண்ணின் செயல்)

நச்சுமன வேந்தர்க்குத் துச்சி லமைத்த
சிறுவலி யொருவனிற் றன்மனஞ் சுருங்கி
நறுமெல் லாக நந்துபொறை யெள்கப்
போக்கிட மின்றி வீக்கமொடு பெருகி
அம்மையு மழகுங் கொம்மையொடு கழுமிக்
கால்பரந் திருந்த கருங்கண் வெம்முலை

பி - ம். 1 காதலியாடலிற். 2 நெகிழ்ந்து வந்திசைந்த.

மேலிருந் தனையான் பொறையாற் றேனென்
றொசிவது போலுநின் னசைநுசுப் புணரா
தினக்கிடை யிப்புனல் குடைகுவை யாயின்
நினக்கிடை மற்றொன் றுடையை யோவெனக்
காதற் செவிலி கழறுபு விலக்கவும்
போதற் கண்ணே புரிந்த வேட்கையின்
ஐயரி பரந்த வரிமலர் நெடுங்கண்
மையுண்டு மதர்த்த மணியொழுக் கேய்ப்பக்
கோல வாகத்துக் கொடிபட வெழுதிய
சாதிங் குலிக மாதி யாகச்
சுட்டிச் சுண்ணமொடு மட்டித்துக் கலந்த
குங்குமக் கொழுஞ்சேறு கூடக் குழைத்திட்
டிந்திர வின்னெகிழ்ந் துருகி [1] யாங்கு
நீடுர வழியி னூடுநிமிர்ந் தொழுகிப்
பிணர்முரிப் பட்டுடைப் பெருநல வல்குற்
காசுநிழற் காட்டு மாசின் மாமை
ஆவி நுண்டுகி லணிநல நனைப்பப்
பூவினுட் பிறந்த புனையிழை போலத்
தண்ணீர் தோழிய ராடத் தான்றன்
கண்ணீ ராடுமோர் கனங்குழை காண்மின்

(அரசனுடைய ஏவலாளர்களின் செயல்)

திருவீற் றிருந்த திருநகர் வரைப்பின்
உருமீக் கூறு மன்னவ னொருமகள்
கண்டுகண் ணோராக் காமர் காரிகை
வண்டுள ரைம்பால் வாசவ தத்தை
பேணி யாடும் பெரும்புனல் விழவினுள்
நாணிச் செல்லா நல்குர வுடையோர்க்
கரும்பொறி யணிகல மாரப் பெய்த
பெரும்பொறிப் பேழை யிவையெனக் கூறிக்
கறைவாய் முரசங் கண்ணதிர்ந் தியம்ப
அறையவுங் கொள்ளுங் குறையில ராகித்
துறைதுறை தோறு மிறைகொண் டோருள்

பி - ம். 1 ஆங்கணீடுயிர்.

அணியா தோரை யாராய்ந் [1] துழிதரும்
பணியா வேந்தன் பணிநரைக் காண்மின்

(ஓர் அன்னச்சேவலின் செயல்)

புழற்காற் றாமரை யழற்போ தங்கண்
அல்லி மெல்லணைப் பள்ளி கொண்ட
தார்ப்பூம் பேடை தையல ரெடுத்த
நீர்ப்போர்க் கவ்வையி னீங்கி முனாஅ
தொள்ளொளிப் பவளத் துள்ளொளி யடக்கி
வெள்ளிப் பூந்தா ரெள்ளுந் தோற்றத்துப்
போதுபொறை யாற்றாப் புன்னையம் பொதும்பர்த்
தாதுபுறத் துறைப்பத் தங்கலிற் றலைபரிந்
திகழ்வி னேக்கமொ டிரைவேட் டெழுந்த
பவழச் செங்காற் பானிறச் சேவல்
திரையுமிழ் பொய்கையு ளிரையுமிழ்ந்து மயங்கி
மதிபுரை தாமரைப் பொதிபோது புல்லியஃ
தன்மையி [2]னழிந்து புன்மையிற் புலம்பி
அருப்பிள முலையவ ரடைகரை வைத்த
மருப்பியல் செப்பை மதித்த தாகி
அழல்வெங் காமத் தன்புதலைக் கொண்ட
மழலைத் தீங்குரன் மருட்டி யழைஇக்
குறுகச் [3] சென்றத னுறுநோக்குப் பெறாது
புன்னையம் பள்ளிப் பொழிறொறு நாடும்
அன்னப் புள்ளி னலமரல் காண்மின்

(ஓர் அந்தணன் செயல்)

நானந் தோய்த்த நறுமென் கூந்தலுள்
ஆனைந்து தெளித்து நீரிடை மூழ்கி
ஆவிரை யலரு மறுகையுஞ் செரீஇக்
கொட்டுமடி விரித்த பட்டுடைத் தானையள்
அங்கோற் றீந்தொடைச் செங்கோட் டியாழின்
பத்த ரன்ன மெத்தெ னவ்வயிற்றுத்
திரையொடு பட்டு நுரையொடு மறுகி
மட்டுண் மறுத்த பட்டினிப் படிவமொடு

பி - ம். 1 இழிதரும். 2 னிழிந்து. 3 சென்றுதன்.

கட்டளை பிழையாப் பட்டுடை யல்குலள்
பெட்ட வாய்மொழிப் பெரும்பா குதிர
எதிர்ப்புன லாடுநர்க் கேம மாகப்
புனற்றுறை விடுத்த பொங்குமடைப் புழுக்கலைக்
காக்கை யோட்டி நோக்கி னுண்டு
[1] வேண்டல னாயினும் விறலுஞ் சேனையும்
நீண்ட விஞ்சியு நிறைமணி மாடமும்
உருக்குறு நறுநெய் யுள்ளுறப் பெய்த
புழுக்கலொடு பாற்சோ றுயின வாயின்
வழுக்க லின்றியென் வயிற்றக மார
உண்ப லென்றுதன் கண்பனி வாரக்
கொள்ளா வயிற்றி னுண்ட கையன்
செல்வோற் கண்டு பொள்ளென நக்கு
நுரைபுரை வெண்டுகி லரைமிசை வீக்கி
அவியிடப் படினென் னாருயிர் வைப்பது
கடிவோ ரில்லை முடிகுவெ னின்றெனச்
செவிமடுத் தெற்றிச் சிவந்த கண்ணினன்
உண்டற் புண்ணிய முடையனை யொளி;
கொண்டனை போகிற் கூடுமோ நினக்கெனப்
பிண்டப் பெருங்கவுட் பெருவிய ரிழிதரக்
கண்டோ ரார்ப்பக் கலாஅங் காமுறாஉம்
பண்டப் பார்ப்பான் பட்டிமை காண்மின்

(சில பெண்களின் செயல்)

நுரையொடு பொங்கு நுண்ணூல் வெண்டுகில்
அரையிடை நெகிழ வசைத்தல் செல்லார்
இறுமென நுடங்குஞ் சிறுகொடி மருங்கின்
மதுகை யோரா மறங்கூர் மனத்தர்
எதிர்நீர் தூஉ மினையோர் திருமுகத்
தாழ மிகவா வரிபரந் தகன்ற
மாழை யுண்கண் மலரென மதித்துத்
தண்செங் கழுநீர்த் தகைமலர்த் தாதும்
ஒண்செந் தாமரைப் பைம்பொற் றாதும்
ஆராய்ந் துழிதரு மஞ்சிறை வண்டினம்

பி - ம். 1 வேண்டா னாயினும்.

ஓராங்கு நிலைபெற் றுண்ணெகிழ்ந் தவிழ்ந்த
பேரா விவையெனப் பேர்தல் செல்லா
மொய்த்தலின் மற்றவை மொய்ப்பி னீங்கத்
தத்தரி நெடுங்கண் டகைவிரல் புதைஇப்
புதுமண மகளிரிற் கதுமெனத் தோன்றும்
மதுர மழலை மடவோர்க் காண்மின்

(ஊடலைத் தீர்த்துத் தலைவன் தலைவியோடு நீராடல்)

நிறைக்குறி னிறைத்துப் போக்குறிற் போக்கும்
பொறிப்படை யமைந்த பொங்கில வந்திகை
முன்னம் புக்க தன்னமர் காதலன்
பாடகச் சீறடிப் பைந்தொடி மாதரை
ஆடுக வாவித னகவயி னென்றலிற்
செஞ்சூட் டிட்டிகைச் சுதைச்சுவர்ப் படுகால்
அஞ்சிறை யன்னத்தி னணிபெற வியலி
மண்ணுமணி யன்ன வொண்ணிறத் தெண்ணீர்த்
தண்ணிழற் கண்டே யென்னிழ லென்னும்
நுண்மதி நுணுகாப் பெண்மதி பெருக
எழுதி யன்ன வேந்துநுண் புருவம்
முழுதுநுத னெருங்க முரிய வேற்றிச்
செதும்பற் றாமரைச் செவ்விதழ் போலப்
பதம்பார்த்து மலரும் பனிமலர்த் தடங்கண்
கையிகந்து சிவப்ப வெய்துபட வுயிரா
நிரைகொ ளற்புத்தளை நெரிய வூர்தரும்
புலவி நோக்கத்துப் பூந்தொடி புலம்பி
நீரர மகளிரொடு நிரந்துட னின்ற
சூர னிவனெனச் சொல்லுங் குறிப்பினள்
பேரு முள்ளமொடு பிறக்கடி யிடுதலின்
நண்ணிய காதலி கண்ணிய துணர்ந்து
காளை போந்தவள் சிறுபுறங் கவைஇப்
பூளை மெல்லணைப் பொதியவிழ்ந் தன்ன
மென்றோ ணெகிழப் பற்றிக் குன்றா
[1] அழல்புரை வேகத்து ளற்புநீ ராட்டிச்
சிறுவரைத் தணித்தவ டிருமுகந் திருத்தி

பி - ம். 1 அழல்புனைவேழத்து.

நீரர மடந்தையுங் கணவனு மிதனுள்
ஆர்வ வுள்ளமொ டானோர்க் காண்கம்
ஏகென வுய்த்துத்த மிருநலங் காட்டி
வேக வூட லவள்வயி னீக்கி
உருவக் கோலமொ டோம்பல் செல்லா
தொருவயி னாடு மிருவரைக் காண்மின்

(சேனைவாணிகன்மகள் செயல்)

ஒருமீக் கோற்றவ னுடைப்பொரு ளுடைய
செருவார் சேனைப் பெருவா ணிகன்மகள்
தன்னொடு நவிலத் தன்னை மார்கள்
கலத்திற் றந்த நலத்தகு விழுச்சீர்
வேறுபடு திருவினுள் விளங்கிழை மகளிரைக்
கூறுபட நிறீஇக் குளித்தன ளெழுவோள்
மின்னிருங் கூந்தன் மேதகப் புனைந்த
பொன்னரி மாலையைப் புனல்கொண் டீர்ப்ப
அத்துறை மருங்கி னயற்றுறை யாடும்
மைத்துன மன்னன் கைப்படுத்து வந்துதன்
சென்னி சேர்த்தியவண் முன்னர்த் தோன்ற
நெடும்புணை தழீஇ நீத்தொடு மறலத்
தடம்பெருங் கண்ணி தலைகவிழ்த் திறைஞ்சிச்
செறிப்பி னாகிய செய்கையி [1] னொரீஇயவள்
குறிப்பிற் [2] கொண்டனன் கோதை யென்ப
தயலோர் கருதி னற்றந் தருமெனக்
கயலேர் நெடுங்கண் கடும்பனி கால
மாலை கவர்ந்து மற்றவற் கீத்தனை
கோல வைவே லேனைய குமரர்க்
கறியக் கூறுவெ னஞ்சுவை யாயிற்
பெயர்த்துத் தம்மெனச் [3] செயிர்த்தவ னோக்கி
நீரணி யாட்டொடு நெஞ்சுநொந் துரைக்கும்
வாணிக [4] மகளின் மடத்தகை காண்மின்

(துறைகாக்கும் காவலர் செயல்)

மின்னவிர் மணிப்பூண் மன்னவன் மடமகள்
அங்கலுழ் பணைத்தோட் செங்கடை மழைக்கண்

பி-ம். 1 ஒரீஇயவன். 2 கொண்டனள். 3 செயிர்த்தவனோக்கி. 4 மகளிர்

நங்கை யாடும் பொங்குபுனற் பூந்துறைக்
குங்குமக் [1] குழங்கல் கொழுங்களி யாக
இத்துறை [2] மேவ வெத்துறை யாயினும்
ஆடன்மின் யாவிரு மாடுவி ருளிரெனின்
ஆடகப் பொன்னினும் மளவி னியன்ற
பாவை யாகும் படுமுறை யதுவெம்
கோவி னாணை போமி னீவிரெனத்
தென்மலைப் பிறந்த பொன்மருள் சூரல்
கருங்கண் டோறும் பசும்பொன் னேற்றித்
தொடித்தலைப் படுகோல் பிடித்த கையர்
வரிக்குப் பாயத்து வார்பொற் கச்சையர்
திருப்புன லாடிச் செயிர்த்த நோக்கினர்
முழுநீர் விழவின் மூவெழு நாளும்
கழுநீர்ப் பெருந்துறைக் காவ னண்ணிய
வண்டுஞ் சேரா வஞ்சுவரு சீற்றத்துக்
குண்டுதுறைக் காவலர் குழாஅங் காண்மின்
இன்னவை பிறவுங் கண்ணொடு புணர்ந்த
புண்ணிய முடைமையிற் காண்மி னீரெனப்
பணிவி னல்வினைப் பயனுண் டாயின்
மணிமுடி மன்ன னணியுஞ் சேனையுள்
எழுமைப் பிறப்பு மெய்துகம் யாமெனக்
கழுமிய காதலொடு கைதொழு தேத்தி
நகர மாந்தர் பகர்வாற் பரந்தேன்.

௪௦—உவந்தவைகாட்டல் முற்றிற்று.

௪க—நீராட்டரவம்.

பரந்த விழவினு ளுவந்தவை காட்டி
நகர மாந்தர் பகர்வன ரறையும்
பாடிமிழ் பனித்துறைக் கோடணை யரவமும்

(நீர் விளையாட்டுக்குரிய கருவிகள்)

கிடைப்போழ்ப் பந்தத் திடைப்புணர்ந் தியற்றிய
அவிர்நூற் பூங்கிழி யாப்பினொடு சார்த்திக்

பி - ம். 1 குழங்கற். 2 மேல.

கட்டளை யமையச் சட்டகங் கோலிக்
கண்டோ ரின்றியுங் கைந்நவில் வித்தகர்
கொண்டோர் மருளக் கோலங் குயிற்றி
அம்புவா யணிந்த பெருந்தண் சக்கரம்
சாந்திற் செய்த வேந்திலை யெறிவேல்
போதிற் புனைந்த பூம்பொறி வளையம்
மலர்புறத் தழுத்திய விலையணி யீர்வாள்
பிணையலிற் பொலிந்த கணையக் கப்பணம்
சுண்ணம் பொதிந்த வண்ண வட்டிணை
உருக்குறு...........முள்வாய் சேர்த்தி
அரக்குறு நறுநீ ரஞ்செங் குலிகம்
குங்கும வூறலொடு கொண்டகத் தடக்கிய
எந்திர நாழிகை யென்றிவை பிறவும்

(அரசகுமரர் ஒலி)

ஏற்றிப் [1] பண்ணிய வினக்களிறு நிரைஇ
மாற்று மன்ன ராகுமி னெனத்தம்
உரிமை மகளிரொடு செருமீக் கூறிக்
[2] கரைசென் மாக்கள் கலாஅங் காமுறாஉம்
அரைச குமர ரார்ப்பொலி யரவமும்

(பறவைக் கூட்டத்தின் ஒலி)

வளையார் முன்கை வையெயிற் றின்னகை
இளையோர் குடைதலி னிரைகொளப் பெருஅப்
பைந்தாட் குருகின் மென்பறைத் தொழுதி
தடவுச் சினைதொறுந்.................................
மேற்பட மிடைந்த மேதகு குடம்பையுட்
பார்ப்பொடு நரலும் பையு ளரவமும்

(மரங்களைக் கரையேற்றுவோர் ஒலி)

அறைவரைச் சாரற் சிறுகுடிச் சீறூர்க்
குறவர் குறைத்த கொய்புன மருங்கின்
அந்தண் ணகிலுஞ் சந்தனக் குறையும்
கருவிளங் கோடுங் காழிருள் வீடும்
திருவிழை [3] சுழையுந் தேக்குந் திமிசும்

பி - ம். 1 பண்ணியினக். 2 கரைதனமாக்கள். 3 களையும்.

பயம்புங் கோட்டமுங் கயம்பல கலங்க
அமிழ்ந்துகீ ழாழ வருங்கலஞ் சுமந்து
நுரைபுன லீத்தத்து நூக்குவனர் புக்குக்
கரைமுதற் 1 சார்த்துங் காளைக ளரவமும்

(பெண்மான்களை இனத்தோடு
கூட்டும் இளைஞர் ஒலி)

இடைநீர்ப் பட்ட மடமா னம்பிணை
மம்மர் நோக்க நோக்கி நையா
நம்மில் காலை 2யென்னவென் றெண்ணிப்
புனற்சுழி நீத்த நீந்தி மற்றவை
இனத்திடைப் புகுத்து மிளையோ ரரவமும்

(தோணியிற் செல்லும் மகளிர் ஒலி)

தொடியணி 3 தோளியர் துன்னி யேறிய
வடிவமை யம்பி யடியினுள் வானத்
தாழ றவிர்ந்து மரும்புனல் கவைஇயின
தாழ்தரும் வலிமின் றைய லீரெனத்
திரிதர லோவாது தீயவை சொல்லிய
மைத்துன மைந்தரை நோக்கி மடந்தையர்
அச்சப் பணிமொழி யமிழ்தென மிழற்றி
நச்சுவன ராடு நல்லோ ரரவமும்

(பேதை மகளிர்)

அணியற லன்ன வைம்பாற் கூழையர்
மணியுமிழ்ந் திமைக்கும் வயங்குகொடிப் பைம்பூண்
முத்தொடு முரணித் தத்து மாகத்துக்
காமங் 4 காலா வேம நோக்கத்து
மாத ராற்று மழலையங் கிளவிப்
பேதை மகளிர் சேதடி யணிந்த
கண்பிணிப் பகுவாய்க் கிண்கிணி யரவமும்

(பேதும்பை மகளிர்)

5 முகிழ்நிலா விரிந்த முத்துவடக் கழுத்தினர்
திகழ்நிலா விரிந்த திருமதி முகத்தர்

பி-ம். 1 சாத்தும். 2 என்னரென்று. 3 தோழியர். 4 காழா.
5 முழுநிலா.

செண்ண மாகிய சிகழிகை முடியர்
வண்ண மகடூஉ வல்லவா வகுத்த
இரதப் பல்காழ்ப் பரவை யல்குலர்
பொன்னிறக் கோங்கின் பொங்குமுகிழ்ப் பென்ன
முன்ன ரீன்ற முலைமுதன் முற்றத்து
மின்னுக்கொடி பிறழுங் கன்னிக் கோலமொ
டொதுங்க லாற்று வொளிமலர்ச் சேவடிப்
பெதும்பை மகளிர் சிலம்பொலி யரவமும்

(மங்கை மகளிர்)

கொடியணி பிறழுங் கொம்மை வெம்முலைக்
கடிகை வேய்நலங் கழிக்கு மென்றோட்
கொடியென நடுங்குங் கோல மருங்குலர்
அம்பெனக் கிடந்த வையரி நெடுங்கண்
மங்கை மகளிர் பைங்கா சரவமும்

(மடந்தை மகளிர்)

நீனிறக் கொண்மூ நெற்றி முள்கும்
வானிற வளர்பிறை வண்ணங் கடுப்பச்
சின்மெல் லோதி சேர்ந்த சிறுநுதற்
குலாஅய்க் கிடந்த கொடுநுண் புருவத்
துலாஅய்ப் பிறழு மொள்ளரித் தடங்கண்
வம்புமீக் கூரும் பொங்கிள முலையின்
நுடங்குகொடி மருங்கி னுணுகிய நுசுப்பின்
மடந்தை மகளிர் குடைந்தா டரவமும்

(அரிவை மகளிர்)

கலங்கவின் பெற்ற கண்ணார் களிகை
நலங்கவின் கொண்ட [1] நனிநா கரிகத்
தம்மென் சாய லரிவை மகளிர்
செம்மலஞ் சிறுவரைச் செவிலியர் காப்பப்
பூம்புன லாடுதொறும் புலம்பும் புதல்வரைத்
தேம்படு கிளவியிற் றீவிய மிழற்றிப்
பாலுறு வனமுலை பகுவாய்ச் சேர்த்தித்
தோளுறத் தழீஇ யோலுறுப் பரவமும்

பி - ம். 1 நனிநற்காகத்.

(தெரிவை மகளிர்)

பொன்னரி மாலை புனல்பொதிந் தசைதர
மின்னெறிந் ததுபோற் பொன்னணி பிறழப்
புனலக மூழ்கிப் பூந்துகில் களையார்
மணலிகு நெடுந்துறை மங்கலம் பேணிப்
பெரியோ ருரைத்த பெறலருந் தானம்
உரியோர்த் தரீஇ யுள்ளுவந் தீயும்
தெரிவை மகளிர் வரிவளை யரவமும்

(பேரிளம் பெண்டிர்)

தித்தி யொழுகிய மெத்தெ னல்குலர்
மட்டப் பூந்துகிற் கட்டளைக் கச்சையர்
நரையிடைப் படர்ந்த நறுமென் கூந்தலர்
திரையுடைக் கலுழி திறவதி னுடித்
1 தாமிள மகளிரைக் காமஞ் செப்பி
அஞ்சல் செல்லாது நெஞ்சுவலித் தாடுமிந்
நங்கையர் நோற்ற பொங்குபுனற் புண்ணியம்
நுங்கட் காகென நுனித்தவை கூறி
நேரிழை மகளிரை நீராட் டயரும்
பேரிளம் பெண்டிர் 2 பெருங்கலி யரவமும்

(வேறு பலவகை ஒலிகள்)

கைபுனை பாண்டியங் கட்டளை 3 பூட்டி
வையந் தரூஉம் வயவ ரரவமும்
புகுவோ ரரவமும் போவோ ரரவமும்
தொகுவோ ரரவமுந் தொடர்ந்துகை தழீஇ
நடந்தியன் மறுகி னகுவோ ரரவமும்
மயங்கிய சனத்திடை மம்மர் நெஞ்சமொடு
நயந்த காத னன்னுதன் மகளிரைத்
தேருந ரரவமுந் திகைக்குந ரரவமும்
பேருநர்ப் பெறாஅப் பெரியோ ரரவமும்
நெடுந்துறை நீந்தி நிலைகொள லறியார்
கடுங்கண் வேந்தன் காதல ரரவமும்
கொலைத்தொழில் யானை சென்றுழிச் செல்லாத்

பி - ம்.—1 தாமின. 2 பெருங்கலவரவமும். 3 ஊட்டி.

தலைக்க ணிரும்பிடி பிளிற்றிசை யரவமும்
துறைமாண் பொராஅத் தூமண லடைகரை
நிறைமாண் குருகி னோர்கொடிப் பந்தர்ப்
பாடலொ டியைந்த பல்லோ ரரவமும்
ஆடலொ டியைந்த வணிநகை யரவமும்
யாற்றொலி யரவமொ டின்னவை பெருகிக்
கூற்றொலி கேளாக் கொள்கைத் தாகி

(ஆடவும் உண்ணவும் அமைந்தவை)

அரைப்பமை சாந்தமு முரைப்பமை நானமும்
ஒப்புமுறை யமைந்த வோமா லிகையும்
வித்தகர் வனைந்த சித்திரக் கோதையும்
காதன் மங்கைய ராகத் தெறியும்
சாதி லிங்கமுஞ் சந்தனத் தேய்வையும்
உரைத்த வெண்ணெயு [1] நுரைப்பம லரைப்பும்
பீடுடன் பேராப் பெருந்துறை யெங்கும்
ஆடவு முண்ணவு மாதர மாகப்
பேராக் காதலொடு பெருஞ்சிறப் பியற்றி
நீராட் டரவ நிகழுமா லினிதென்.

௪௧—நீராட்டரவம் முற்றிற்று.

௪௨—நங்கை நீராடியது.

நீராட் டரவ நெடுநகர் வரைப்பகம்
[2] ஆராட் டரவமொ டமர்ந்துவிழை வகற்றிய
பெருநிலை நிதியம் பேணாது வழங்கி

(பிரச்சோதனன் பெருமை)

இருநில மடந்தைக் கிறைவ னாகிப்
பெருஞ்சின மன்ன ரருஞ்சமம் வாட்டித்
தம்மொழிக் [3] கொளீஇ வெம்முரண் வென்றியொடு
வழுவில் கொள்கை வானவ ரேத்தும்
கழிபெருங் கடவுளை வழிபடி னல்லது

பி - ம். 1 நுரையலாராறம்பு. 2 ஆருப்பாவம். 3 கொளீஇய.

21006

வணக்க மில்லா வணித்தகு சென்னித்
திருச்சே ரகலத்துப் பிரச்சோ தனன்மகள்

(வாசவதத்தை நீராடவருதல்)

அரிமா னன்னதன் பெருமா ணகலத்துத்
திருவுநிறை கொடுக்கு முருவுகொள் காரிகை
வரல்வளைப் பணைத்தோள் வாசவ தத்தையைக்
கோல்வளை மகளிர் கொட்டையைச் சூழ்ந்த
அல்லியு மிதழும் போல நண்ணிப்
பல்வகை மரபிற் பசும்பொன் [1] குயின்ற
ஊர்தியும் [2] பிடிகையுஞ் சீர்கெழு சிவிகையும்
வையமுந் தேரும் வகைவெண் மாடமும்
பொறுப்பவு மூர்பவுஞ் செறித்திடம் பெருஅர்
நேமி வலவ னாணை யஞ்சிப்
பூமி [3] சுவர்க்கம் புறப்பட் டாங்குத்
[4] திட்டமை கூர்வாள் கூட்டொடு பொலிந்த
வேற்றிற லாளரு மிலேச்சருஞ் சிலதரும்
கோற்றகை [5] மாக்களு நூற்றுவில் லகலம்
குறுகச் செல்லாச் செறிவுடைக் காப்பிற்
பெருங்கடி மூதூர் மருங்கணி பெற்ற
அருங்கடி வாயிலொடு துறைதுறை தோறும்
[6] அம்பணை மூங்கிற் பைம்போழ் நிணவையும்
வட்டமுஞ் சதுரமு முக்கோண் வடிவமும்
கட்டளை யானையு மத்தக [7]வுவாவும்
வையப் புறத்தொடு கைபுனைந் தியற்றிப்
பூத்தூர் நிலையொ டியாப்புற வமைத்துக்
காமர் பலகை கதழவைத் தியற்றி
வண்ணங் கொளீஇய நுண்ணூற் பூம்படம்
எழுதுவினைக் கம்மமொடு முழுதுமுத லளைஇ
[8] மென்கிடைப் போழ்வைச் சந்திய வாகி
அரிச்சா லேகமு நாசியு முகடும்
விருப்புநிலைத் தானமும் பிறவு மெல்லாம்

பி - ம். 1 குன்ற. 2 பிடாகையுஞ். 3 சுவறகம். 4 தற்றமைக் கூர்வாள். 5 மாக்கணூற்று. 6 அம்புனை. 7 உயர்வும். 8 பொன்கிடைப் போர்வை.

நேர்ந்துவனப் பெய்திய நீரணி [1] மாடம்
சேர்ந்த வீதியுட் சிறப்பொடு பொலிந்த
எவ்வெவ பண்டமு மவ்வயிற் போத்தந்
தொலியுஞ் சேனை யிணைதனக் கொவ்வா
மலிநீர் மாடத்துப் பொலிவுகொண் மறுகின்
வெயிலழல் கவியாது வியலக வரைப்பின்
உயிரழல் கவிக்கு முயர்ச்சித் தாகிப்
பூந்தா ரணிந்த வேந்தல் வெண்குடை
வேந்தன் மகளே விரையா தென்மரும்
பண்டை மகளிர் படிமையிற் பிழையாது
தண்டந் தூக்கித் தலைப்புனல் விழவினைக்
கொண்டுவந் தாடுங் கொழுமலர்த் தடங்கட்
பொங்குமலர்க் கோதாய் போற்றென் போரும்
நின்னை யுவக்குநின் பெருமா னேந்திய
[2] வென்வேல் கடுக்கும் வெம்மை நோக்கத்துப்
பொன்னே போற்றி பொலிகென் போரும்
[3] பொருவேட் பேணிப் பொலியுஞ் சேனையுள்
பெருவேண் மறைந்து பெரும்புன லாடும்
திருவே மெல்லச் செல்கென் போரும்
பொங்குதிரை ஞாலத்து மயக்க நீக்கும்
திங்க ளன்னநின் றிருமுகஞ் சுடரத்
துன்பப் [4] பேரிரு டுமிக்கத் தோன்றிய
நங்காய் மெல்ல நடவென் போரும்
வல்லவ னெழுதிய பல்பூம் பத்திக்
[5] கட்டெழில் சேர்ந்த வட்டணைப் பலகைப்
பளிக்குமணிச் சிவிகையுள் விளக்குறுத் ததுபோல்
தோன்று மாதரைத் தோன்ற வேத்திப்
பைங்கேழ்ச் சாந்துங் குங்குமக் குவையும்
மலர்ப்பூம் பந்துந் தலைத்தளிர்ப் போதும்
மல்லிகைச் சூட்டு நெல்வளர் கதிரும்
இனிக்குறை யில்லை யாமு மாடுகம்
எனத்துணிந் திளையோ ரிருநூற் பெய்த

பி - ம். 1 மாடமும். 2 வெள்வேல். 3 ஒருவேள். 4 போரிலிடுமீத். 5 கட்டழல்.

அணிச்சக் கோதையு மாய்பொற் சுண்ணமும்
அந்தர மருங்கின் வண்டுகை விடாஅச்
சுந்தரப் பொடியுஞ் சுட்டிச் சுண்ணமும்
வித்தகர் கொடுத்த பித்திகைப் பிணையலும்
[1] மத்தநல் யானை மதமு நானமும்
வாசப் பொடியொடு காயத்துக் கழும
அந்தரத் தியங்குநர் மந்திர மறப்ப
நறுந்தண் ணாற்ற முடையவை நாடி
எறிந்துந் தூவியு மெற்றியுந் தெளித்தும்
பல்லோர் [2] பல்சிறப் பயர்வன ரேத்தி

(வாசவதத்தையை மணையிற் சேர்த்தல்)

வெல்போர் வேந்தன் மடமகள் விரும்பி
நில்லாத் தண்புன னெடுங்கோட் டொருசார்த்
துறையமைத் தியற்றிய குறைவில் [3] கூடத்
தம்புகை மருங்கிற் செஞ்சுடர் மழுங்கச்
சீயமு மேறும் பாய்பரிப் புரவியும்
யானையும் புலியு மன்னமு மகன்றிலும்
ஏனைய பிறவு மேள ருடையன
புனைவுகொண் டேற்றி வினைவல ரியற்றிய
கனல்சேர் [4] புகையக லேந்திய கையின்
மூதறி பெண்டிர் காதலொடு பரவி
நீர்கால் கழீஇய வார்மண லெக்கர்
முத்து மணியும் பொற்குறு சுண்ணமும்
வெள்ளியும் பவழமு [5] முள்விழுந் திமைப்ப
வண்ண வரிசியொடு மலரிடை [6] விரைஇ
நுண்ணிது [7] வரித்த வண்ண னகர்வயின்
தமனியத் தடத்துப் பவழப் பாய்கால்
திகழ்மணி வெள்ளிப் புகழ் [8] மணை சேர்த்திக்
கதிர்நகை முறுவற் காரிகை மாதரை
எதிர்கொண்டு வணங்கி யிழித்தனர் நிறீஇக
காஞ்சன மாலையுஞ் செவிலியும் பற்றி

பி-ம். 1 மத்தகயானை. 2 பலசிறப்பளவனரேத்தி. 3 கூட்டத். 4 புகை புகையல். 5 உள்விரைந். 6 வெரீஇ. 7 விரைத்தவண்ணநகர். 8 மனை.

எஞ்சலில் கம்மத் திணைதனக் கில்லாப்
பஞ்ச வண்ணத்துப் பத்திபல புனைந்த
பொங்குமலர்த் தவிசிற் பூமிசை யாயினும்
அஞ்சுபு மிதியாக் கிண்கிணி மிழற்ற
வேழத் தாழ்கைக் காலொடு சேர்த்த
கண்டப் பூந்திரை மண்டபத் திழைத்த
நன்னகர் நடுவட் பொன் [1] மணை யேற்றிப்

(மஞ்சனம் ஆட்டல்)

பெருந்திசை நோக்கி யிருந்தவ ணிறைஞ்சி
யாத்த காதலொ டேத்த லாற்றாள்
[2] அடித்தல முதலா முடித்தலங் காறும்
மொய்யுறத் தோய்ந்த நெய்தயங்கு பைந்தாள்
மங்கலப் புல்லவ ரின்புறப் பெய்தபின்
நீராடு பல்கல நெரிய வேற்றி
ஆராடு தானத் தைந்நூ றாயிரம்
பசும்பொன் மாலையுந் தயங்குகதிர் முத்தமும்
இரவன் மாக்கட்குச் சொரிவன ணல்கித்
தீங்கருங் காதற் செவிலியுந் தோழி
காஞ்சன மாலையுங் கையிசைத் தேந்த
[3] அளற்றெழு தாமரை யள்ளிலை நீரில்
துளக்குறு நெஞ்சி னடுக்கமொடு விம்மித்
தோழியர் சூழ வூழூ ழொல்கித்
தலைப்புனன் மூழ்குத லிலக்கண மாதலின்
மணலிடு நிலைத்துறைத் துணைவளை யார்ப்பக்
குடைவனள் குளாஅய்க் [4] குறிப்புநனி நோக்கிப்
படையோர் கண்ணியர் பணிந்துகை கூப்பிப்
புடைவீங் கிளமுலைப் பூண்பொறை யாற்றா
திடையே மாக்குமென் றடைவனர் விலக்கிச்
சீலத் தன்ன தெய்வங் கவினிக்
கோலங் கொண்ட கூந்தலொடு குளித்துப்
பிடிக்கையின் வணரு [5] முடிக்குர லாற்றாள்

பி - ம். 1 மணை. 2 அடிக்கலமுதலா முடிக்கலந்தாறு. 3 அளற்பெறு. 4 குறிப்புளி. 5 முடித்தலாற்றாள்.

செருக்கய லன்ன சேயரி நெடுங்கண்
[1] அரத்தகம் பூப்ப வலமந் தெழலும்
வாழிய ரெம்மனை வருந்தினை பெரிதெனை
மொழியறி மகளிர் தொழுதனர் வணங்கி
அத்துமுறை யுரிஞ்சி யாயிரத் தெண்குடம்
முத்துறழ் நறுநீர் முறைமையி னாட்டி

(வாசவதத்தையை அலங்கரித்தல்)

அங்கர வல்கு னங்கைக் கின்றிவை
மங்கல மண்ணுநீ ராவன வென்று
நெஞ்ச நெகிழ்ந்தவந் தன்புகலந் தாடியல்
அரவிற் பரந்த வல்குன் மீமிசைக்
கலாஅய்க் கிடந்த குலாத்தரு கலிங்கம்
நிலாவிடு பசுங்கதிர்க் கலாவ மேய்ப்ப
நீரணி கொண்ட வீரணி நீக்கிக்
கதிர்நிழற் கவாஅய் [2] பதுமநிறங் கடுக்கும்
புதுநூற் பூந்துகி [3] லருமடி யுடீஇக்
காரிருங் கூந்த னீரற வாரி
வனப்பொடு [4] புணர வகுத்தணி முடிமிசை
நீர்ப்பூம் பிணையல் சீர்ப்பமை சிகழிகை
முல்லையங் கோதை சில்சூட் டணிந்து
தண்ணறுஞ் சாந்த நுண்ணிதி னெழுதிப்
பதினோ ராண்டினுட் பாற்படக் கிளந்த
விதிமா ணுறுப்பிற்கு வேண்டுவ வேண்டுவ
கதிர்மாண் [5] பல்கலங் கைபுனைந் தியற்றி
உறுப்பெடுக் கல்லா வுடம்பின ளாயினும்
சிறப்பவை யாதலிற் சீர்மையொ டிருந்து
காமர் கோலங் கதிர்விரித் திமைப்பத்
தாமரை யுறையுண் மேவாள் போந்த
தேமலர்க் கோதைத் திருமகள் போலக்
கோமகள் போதுங் குறிப்புநனி நோக்கி

(அந்தணமகளிர் முதலியோர்)

அரணி கான்ற வணிகிளர் செந்திக்

21006

பி-ம். 1 அலத்தகம். 2 புதுநிறங். 3 அரும்பிடி. 4 புணர்ந்த. 5 பல்கலை.

[1] கிரிசையின் வழாஅ வரிசை வாய்மை
அளப்பரும் படிவத் தான்ற கேள்வித்
துளக்கி னெஞ்சத்துத் துணிந்த வாய்மொழி
சால்வணி யொழுக்கி னூலிய னுனித்த
மந்திர நாவி னந்தண மகளிரும்
வரும்புன லாடற்குப் [2] பரிந்தனர் வந்த
விரைபரி மான்றே ரரைச மகளிரும்
அறிவினுஞ் செறிவினும் பொறியினும் புகழினும்
எறிகடற் றானை யிறைமீக் கூறிய
செம்பொற் பட்டத்துச் சேனா பதிமகள்
நங்கை தோழி நனிநா கரிகியும்
அருந்திணை [3] யாயத் தவ்வயின் வழாஅத்
திருந்திய திண்கோட் பெருந்திணை மகளிரும்
செண்ண மமைத்த செம்பொற் பட்டத்து
வண்ண மணியொடு முத்திடை விரைஇய
கண்ணணி நெற்றிக் காவிதி மகளிரும்
காவினுங் கலத்தினுஞ் சாலத் தந்த
மாநிதிச் செல்வத்து வாணிக மகளிரும்
நிலத்தோ ரன்ன நலத்தகு பெரும்பொறை
அருங்கடி மூதூர்ப் பெருங்குடி மகளிரொ
டெண்ண லாகத்துப் பெண்ணுல கேய்ப்பக்
கன்னி மகளிர் கதிர்த்த கோலமொடு
நன்மணி யைம்பா னங்கையொடு போந்தோர்

(நீர் விளையாட்டு)

நீர்தலைக் கொண்ட நெடும்பெருந் துறைவயிற்
போர்தலைக் கொண்டு பொங்குபு மறலிக்
கொங்கலர் கோதை கொண்டுபுறத் தோச்சியும்
அஞ்செஞ் சாந்த மாகத் தெறிந்தும்
நறுநீர்ச் சிவிறிப் பொறிநீ ரெக்கியும்
முகிழ்விரற் [4] றாரை முகநேர் விட்டும்
மதிமரு டிருமுகத் தெதிர்நீர் தூவியும்
பொதிபூம் பந்தி [5] னெதிர்நீ ரெறிந்தும்

பி - ம். 1 கிரிகையின். 2 பரிந்திறை. 3 மாயந்தவவையின். 4 தாமரை. 5 எதிரெதிர்.

சிவந்த கண்ணினர் வியர்ந்த நுதலினர்
அவிழ்ந்த கூந்தலர் நெகிழ்ந்த வாடையர்
ஒசிந்த மருங்குல ரசைந்த தோளினர்
நல்கூர் பெரும்புனல் கொள்க வென்றுதம்
செல்வ மெல்லாஞ் சேர்த்திறைத் தருளி
இளையா விருப்பிற்றம் விளையாட்டு [1] முனைஇக்
கயம்பா டவியப் புறங்கரை போந்து
[2] பொறிமயிற் றொழுதி புயல்கழி காலைச்
செறிமயி ருளர்த்துஞ் செய்கை போற் [3] றம்
நெறிமயிர்க் கூந்த லீரற வாரிச்
செழும்பூம் பிணைய லடக்குபு முடித்துக்
குழுங்கற் சாந்த மழூந்துபட வணிந்து
பைங்கூற் பாதிரிப் போதுபிரித் தன்ன
அங்கோ சிகமும் வங்கச் [4] சாதரும்
கொங்கார் கோங்கின் கொய்ம்மல ரன்ன
பைங்கேழ்க் கலிங்கமும் பட்டுத் தூசும்
நீலமு மரத்தமும் வாலிழை வட்டமும்
கோலமொடு புணர்ந்த வேறுவே றியற்கை
நூலினு முலண்டினு நாரினு மியன்றன
யாவை யாவை யவையவை மற்றவை
மேவன மேவன காமுற வணிந்து
கம்மியர் புனைந்த காமர் பல்கலம்
செம்மையி னணியுஞ் செவ்விக் காலத்துச்

(உதயணன் செயல்)

சிந்தையி னெழிக்குஞ் செலவிற் றாகி
அந்தர விசும்பி னமரர் பொருட்டா
மந்திர முதல்வன் மரபிற் படைத்த
இந்திரன் களிற்றொரு டிணைந்துடன் பிறந்த
இரும்பிடி தானு மிதற்கிணை யன்றெனை
அரும்பிடி யறிவோ ராராய்ந் தமைத்தது
காலினுங் கையினும் படைத்தொழில் பயின்றது
கோலினும் வேலினு [5] மறலினுங் குமைத்தது

பி-ம். 1 முனைஇக். 2 பொழிமயில். 3 தன்னெறி. 4 சந்தமும். 5 அறலினுமமைத்து.

* கஉ

தட்பமும் வெப்பமுந் தாம்படிற் றீர்ப்பது
பகலினு மிருளினும் பணியிற் பயின்ற
[1] திகலிருங் கும்பத் தேந்திய சென்னியது
மேலிற் றூயது காலிற் கடியது
மத்தக மாலையொடு நித்தில மணிந்த
துத்தரா பதத்து மொப்புமை யில்லாப்
பத்திரா பதியிசைப் பணிக்கடற் பிறந்த
வெஞ்சூர் தடிந்த வஞ்சுவரு சீற்றத்து
முருகவே ளன்ன வுருவுகொ டோற்றத்
துதையண குமரன் புதைவா ளடக்கிச்

(உதயணன் கருதுதல்)

சிறையெனக் கொண்ட மன்னவன் செல்வமும்
துறைவயி னுடுநர் துதைந்த போகமும்
நெய்பெய் யழலிற் கையிகந்து பெருகிப்
புறப்படல் செல்லா வாகி மற்றவை
மனத்திடை நின்று கனற்றுபு சுடுதலின்
மாற்றுச் செய்கை யென்னு நீரால்
ஆற்ற வெவ்வழ லவிப்பக் கூடுதல்
வயிரத் தோட்டி யன்றியும் பயிரிற்
சொல்லியது பிழையாக் கல்விக் கரணத்துப்
பிடியொடு புணர்ந்த விப்பக லாயினும்
முடியு மென்னு முயற்சிய னாகிப்
பாப்புரி யன்ன மீக்கொ டானை
இருபுடை மருங்கினும் வருவளிக் [2] கொசிந்து
வீச்சுறு கவரித் தோற்றம் போல
மிக்குவாய் [3] கூரு மீட்சி வேட்கையன்
கொக்குவா யன்ன கூட்டமை விரலினன்
நண்ணு மன்னனை நலிவது நாடும்
எண்ணமொ டிருந்தன னிரும்பிடி மிசையென்.

சச—நங்கைநீராடியது முற்றிற்று.

பி - ம். 1 அகலிருங். 2 ஒசிந்த. 3 கூறும்.

௪௫—ஊர் தீயிட்டது.

எண்ணமோ டிருந்தோன் கண்ணியது கருதி
யாத்திரைக் [1] கமைந்தன பாற்பட வடக்கிப்
போகுபொரு ளுணர்ந்து பாகுசெயற் கெய்தி
நயந்தெரி நாட்டத்து வயந்தகன் கூறும்

(யூகி சொல்லியதை உதயணனுக்கு வயந்தகன் கூறல்)

பாகிய வுள்ளத்துப் படிமந் தாங்கிய
யூகி சூழ்ந்த வுரைப்பருஞ் சூழ்ச்சி
வாய்திறந் தின்றிது கோமகற் குரையெனக்
கூறின னருளிக் குறிப்பிற் கேண்மதி
செறுநர் சிறையகப் பட்டன னாயினும்
உறுவலி நாகத் தொற்றிடம் பார்த்தல்
அறைகடன் ஞாலத் திறைகட னாதலின்
நம்மை யெள்ளிய வெம்மை வேந்தன்
சூழ்ச்சி வெள்ளத் தாழ்ச்சி யெய்தி
ஒன்னா தோருந் துன்னின ராடும்
நெடுநீர் விழவிற் படைபிடித் தோரைக்
கடிமுறை கடிவ தல்ல தில்லென
இடுமணி யானை யெருத்த மேற்றி
அடன்முர சறைந்தமை யறிந்தன மாதலின்
உத்தரா பதத்து மொப்புமை யில்லாப்
பத்திரா பதியைப் பண்ணமைத் தியற்றித்
தான்மேற் கொண்ட தன்மைய னாதலின்
நூன்மேற் சூழ்ந்த [2] நுனிப்பில் வழாமைச்
செருவடு வேந்தனும் பெருநடுக் கெய்தத்
தொகைகொண் மாடத் தந்நகர் வரைப்பின்
நகைகொண் முறுவ னந்நாட் டாட்டியர்
புகையெரி பொத்திய புணர்ப்புவகை யுண்மையின்
ஊர்வயிற் கம்பலை யல்ல தொருவரும்
நீர்வயிற் கம்பலை நினைக்குந ரில்லை
இல்லை யாதலின் வெல்சமம் பெருக்கி
வேந்தற் கோடல் வியனுடு கெடுத்தல்

பி - ம். 1 அமைந்தன்று. 2 நுனிப்பியல்.

ஆங்கவன் மகளை யருஞ்சிறை வெளவுதல்
மூன்றினு ளொன்றே காய்ந்தவர் கடுந்தொழில்
தோன்றக் கூறிய மூன்றி னுள்ளும்
முன்னைய விரண்டு [1] முடியா மற்றவன்
அரும்பெறன் மடமக ளமிழ்துபடு தீஞ்சொல்
ஏசுவ தில்லா வெழில்படு காரிகை
வாசவ தத்தைக்கு வலத்த னாகிச்
செந்தீ வெம்புகை யிம்பர்த் தோன்றலும்
அந்தீங் கிளவியை [2] யாண்மையிற் பற்றிக்
[3] காற்பிடி தன்னொ டேற்றுக வேற்றலும்
வேற்படை யிளையர் நாற்பெருந் திசையும்
வாழ்க வுதயணன் வலிக்கநங் கோளெனப்
பாழினு முழையினுங் காழில் பொத்தினும்
ஒளித்த வெம்படை வெளிப்பட வேந்தி
மலைக்குந ருளரெனின் விலக்குந ராகித்
தொலைக்கு நம்படை துணிந்திது கருதுக
இமைத்தோர் காணா வியற்கைத் தாக
அமைக்கப் பட்ட [4] வணிநடை மடப்பிடி
நண்ணா [5] மன்ன னுடுதலை மணந்த
ஐந்நூற் றேடுத லாற்றா தாயினும்
முந்நூற் றெழுபது முப்பது மோடி
வீழினும் வீழ்க வேதனை யில்லைக்
கூழினு முடையினுங் [6] குறிப்பின ராகிய
நாட்டுப்புற மாக்களும் வேட்டுவத் தலைவரும்
குறும்பருங் குழீஇய குன்றுடைப் பெருநா
டறிந்தோர்க் காயினு மணுகுதற் கரிய
அரிய வாயினு முரியவை போல
இயற்றினன் பண்டே கவற்சி நீங்கி
இன்ன னென்று தன்னறி வுறீஇப்பின்
குற்றப் படினு மற்ற மோம்பிப்
போதத்தி னகன்று [7] சாதத்தின் வழிநின்
[8] றடுகளிக் குரவைசே [9] ரார்கவி யாளர்

பி - ம். 1 முடியாவாதலின்மற்றவனரும். 2 ஆனையிற். 3 கார்ப் பிடித் தன்னொடு. 4 அணிநகை. 5 மன்னர் நாடுதலை. 6 குறிப்பிலராகிய. 7 சாமத்தின். 8 அருளிக். 9 ஆகளி.

நடுகற் படப்பை யிடுகற் சீறூர்
கண்கூட் டிருந்த வைம்பதிற் றிரட்டிப்
புல்பரந்து கிடந்த கல்லதர் கடந்தபின்
தமரன் மாக்களைத் தருக்கி னூறும்
அமரடு நோன்றா ணமருள ரவ்வயின்
இன்னவை பிறவுந் தன்மனத் தடக்கித்
தானவ ணொழிக மானவ னகரில்
இழுக்குடைத் தென்னு மெண்ணமுண் டாயினும்
வழுக்குடைத் ததனை வலித்த னீங்குக
யாவை யாயினும் யான்றுணி கருமம்
தீய தின்மை தெளிகவெம் பெருமகன்
யூகி யென்னு முரைபரந் தோடப்
புல்வா யினத்திற் புலிபுக் காங்குக்
கொல்வாள் வீசிக் கூற்றுத்தலை பனிப்ப
வெல்போர் வேந்தன் வீரரைச் சவட்டி
எய்தப் போதுவ லேத மாயினும்
ஐய மின்றி யான்றுணி கருமம்
செய்யா னாயின் வைய மிழக்கும்
மையல் யானை மன்னவன் றனென
இயைந்த தோழ னெண்ணிய கருமம்
வயந்தக குமரன் வத்தவற் குரைப்பத்

(உதயணன் செயல்)

தானும் யானுந் தீதில மாயின்
வானும் வணக்குவ மேனைய தென்னென
முறுவல் கொண்ட முகத்த னாகி
நறுநீர் விழுவி னாளணி [1] யகலம்
பூண்சேர் மார்வன் காண்பான் போலக்
கடைப்பிடி யுள்ளமொடு மடப்பிடி கடைஇக்
கோமக ளாடும் பூமலி பெருந்துறை
அகலா தணுகாது பகலோன் [2] விண்முனிந்
திருநில மருங்கி னிழிதந் தாங்குப்
பெருநலந் திகழுந் திருநலக் கோலமொடு
செய்குறிக் கருமந் தெவ்வப் பட்டுழித்

பி - ம். 1 அகலப்பூண். 2 விழன்முனிந்து.

தாக்குந ரசாஅய்ப்பொர நேர்க்குந [1] ரிரிவுழி
இருவரு மவ்வழிப் பருவர றீரப்
பெருவலிக் கிளையிற் கூடுவது போல
விண்ணக மருங்கிற் கண்ணகன் றூராஅய்
மண்ணக மறிக்கு மதுகைத் தாகிப்
பாருடைப் பவ்வம் பருகுபு நிமிர்ந்த
நீருடைக் கொண்மூ நெகிழாக் காலொ
டெண்டிசைப் பக்கமு மெதிரெதிர் கலாஅய்க்
கண்டவர் நடுங்கக் கடுவளி தோன்றலிற்

(யூகியின் செயல்)

கனவிற் கண்ட கண்ணூர் விழுப்பொருள்
நனவிற் பெற்ற நல்குர வன்போல்
உவந்த மனத்தின் விரைந்தெழுந் தியூகியும்
மறையத் திரிதரு மாந்தர்க் கெல்லாம்
அறியக் [2] கூறிய குறியிற் றாகப்
பத்திரா பதத்துப் பகையமை போர்வை
உட்குவரு முரச முருமுறழ்ந் ததிரக்
கொட்டினன் கொட்டலுங் கொள்ளென வுராஅய்

(யூகியின் வீரர் செயல்)

எவ்வெத் தானத்துங் கவ்வை தோற்றி
உதையண குமரனும் யூகியும் வாழ்கெனப்
புதைவா ளுரீஇப் பூசல் விளைத்தலும்

(கள்ளமங்கையர் தீயிடுதல்)

மட்டணி மூதூர் மனைதொறு மரீஇய
[3] கட்டணி கூந்தற் கள்ள மங்கையர்
அட்டிலு மறையும் விட்டெரி கொளுவலின்

(தீப்பட்ட ஊரில் நிகழும் நிகழ்ச்சிகள்)

எட்டெனக் கூறிய திசைதிசை தொறூஉம்
ஐந்தலை யுத்தி யரவுநா ணாக
மந்தர வில்லி னந்தணன் விட்ட
தீவா யம்பு திரிதரு நகரின்
ஓவா தெழுமடங் குட்குவரத் தோன்றி

பி - ம். 1 அரிவுழி. 2 கூறிக். 3 விட்டணி.

அரும்புன லாடா தகவயி ளெழிந்த
பெரும்பரி சாரத்துப் பெண்டி ரெல்லாம்
நறுநெய் தோய்ந்த நார்நூல் வெண்டுகிற்
செறிமென் கச்சை சேர்ந்த வல்குலர்
அசல மஞ்ஞையி னணிநிறந் தழீஇப்
பசலை பாய்ந்த திதலைத் தித்தி
அசைந்த வவ்வயி றடையத் தாழ்ந்த
கொடுங்காற் குண்டிகைக் கொட்ட மேய்ப்ப
அறூஉ தொழுகு மம்முலை யாரம்
பொறூஅ வாயினும் புடைத்த[1] லானுர்
ஆற்றல் வேந்த னற்ற நோக்கி
வேற்று வேந்தர் புகுந்தன ருளர்கொல்
கூற்ற வேழங் குணஞ்சிதைந் ததுகொலென்
றீற்றுப் பெண்டி ரிளமகத் தழீஇ
ஊற்றுநீ ரரும்பிய வுள்ளழி நோக்கினர்
காற்றெறி வாழையிற் கலங்கிமெய்ந் நடுங்கி
ஆற்றேம் யாமென் றலறின ரொருசார்
போதுகொண் டணியிற் பொறுக்க லாற்றுத்
தாதுகொண் டிருந்த தாழிருங் கூந்தலர்
கருங்கே ழுண்கண் கலக்கமொ டலமரப்
பெருஞ்சூற் பெண்டிர் பேரழ லேக்கி
வருவோர்க் கண்டு வணங்கின ரொருசார்
தவழும் புதல்வரை யொருகையாற் றழீஇப்
பவழஞ் சேர்ந்த பல்கா ழல்குலர்
அவிழ்ந்த பூந்துகி லங்கையி னசைஇ
நகைப்பூங் கோதையொடு நான்ற கூந்தற்கு
மிகைக்கை காணுது புகைத்தீ யெறிப்பப்
படைத்தோன் குற்ற மெடுத்துரைஇ யிறக்கேம்
அங்கித் தேவ னருளென வயன்மனைப்
பொங்குநீர்ப் பொய்கை புக்கன ரொருசார்
பறைந்திடை சோர்தரு பசலை வெண்ணரைக்
குறைந்த கூந்தலர் கோசிகம் போலப்
புள்ளி விதிர்த்த வுள்ளூறு மேனியர்

பி - ம். 1 ஆனு.

பைசோரிந் தன்ன பாலி றேன்முலை
நரைமூ தாட்டியர் நடுக்க மெய்திக்
காலிடு தளர்ச்சியர் கண்பிற ராகக்
கோலொடு தளர்ந்து கூட்டுந ரின்றி
ஆதி முற்றத்து வேதிகை முட்டிச்
சுழலு நெஞ்சமொடு துயர மெய்தி
அழலின் முற்ற மடைந்தன ரொருசார்
சீப்புள் ளுறுத்துத் திண்ணெழுப் போக்கிக்
காப்புள் ளுறுத்த கடிமதில் வாயிற்
கால்கடி யாளர் வேல்பிடித் தோடி
ஆணை யாணை யஞ்சன்மின் கரவொடு
பேணல் செல்லாது பெருந்தீப் படுத்த
நாணில் பெண்டிரை நாடுமின் விரைந்தென
ஆய்புகழ் வேந்த னரசத் தாணிக்
கோயில் காவல் கொண்டன ரொருசார்
எப்பான் மருங்கினு மப்பா லவரவர்
பெருந்துய ரெய்திக் கரிந்துகண் புதைப்ப
நறுநெய் பயந்த நன்னகர் முத்தீ
மறுமைக் கெண்ணிய மயலறு கிரிசை
அந்தணர் சேரியு மருந்தவர் பள்ளியும்
வெண்சுதை மாட்டும் வேந்தன் கோயிலும்
தெய்வத் தானமொ டவ்வழி யொழியத்
தண்ணறுங் காழகி னுண்ணயிர் கூட்டி
அம்புகை தவழ்ந்த வரக்குவினை மாடமும்
வெம்புகை தவழ்ந்து வேந்துகண் புதைப்ப
வால்வளை மகளிர் மணிநிலத் தமைந்த
கால்வளர் சாலி யாய்பத வரிசிப்
பொன்செய் கிண்கிணிப் புதல்வ ராடும்
கம்பலை வெரீஇக் கவரல் செல்லா
அம்பலக் கொடுங்கா ழசைத்த யாப்பின்
கிடையும் பூளையுங் கிழியும் பஞ்சியும்
படையமைத் தியற்றிய மடையணிப் பள்ளியுட்
பிணிக்குரல் பயிற்றும் பேடையைக் [1] காணு

பி - ம். 1 காணுதுமணிக்.

தணிக்கட் புறவி னைம்பாற் சேவல்
எரிவளை புகையிடை யிறகுவிரித் தலற
மேலெழு பேடை மீண்டுவந் தாடக்
கீழெழு செந்தீக் கிளைபிரித் தழற்ற
மாமயிற் பெடையொடு மகளிர் நாப்பண்
தூவி மஞ்ஞை தோகைவிரித் தகவ
ஏற்றுரி முரசி னிறைவன் மூதூர்க்
காற்றுத் துணையாகக் கனலெரி கவரப்
படலணி வாயின் மடலணி வேயுள்
இடையற வில்லா விருக்கையிற் பொலிந்த
பன்னூ றாயிரம் [1] பாடிக் கொட்டிலும்
முந்நூ றாயிர முட்டிகைச் சேரியும்
ஐந்நூ றாயிரங் கம்மவா லயமும்
சேனை வேந்தன் சிறப்பினோ டிருந்த
தானைச் சேரியுந் தலைக்கொண் டோடிக்
கானத் தீயிற் கடுகுபு திசைப்ப
ஏனை மாடமு மெழுந்தன்றா லெரியென

௪௩—ஊர் தீயிட்டது முற்றிற்று.

௪௪—பிடியேற்றியது.

(மங்கையர் கலக்கம்)

எரிதலைக் கொண்டாங் கெயிலக மெரியப்
புறமதிற் சேரிப் பூசலு மார்ப்பும்
உறுநீர்ப் பெருங்கட லுவாவுற் றாஅங்
காகுலம் பெருகலி னருந்துறை தோறும்
போகா தாடுநர் புன்க ணெய்தி
மேகலை விரீஇய தூசுவிசி யல்குல்
நீருடை களைதல் செல்லார் கலங்கிக்
கானிரி மயிலிற் கவின்பெற வியலி
அயிலிடு நெடுங்க ணரும்பனி யுறைத்தர
உயிரோர் கணவரைத் தானை பற்றி

பி-ம். 1 பாடித்தொட்டிலும்.

நல்லது தீதென் றறியா தவ்வழிச்
செல்வது பொருளோ செப்பீ ரோவென்
றல்லல் கூர வலமரு வோரும்
மாக்குருக் கத்தியொடு மல்லிகை மணந்த
பூப்பெரும் பந்தர் நூற்றிரை வளைஇய
காற்பெரு மாடங் காற்றொடு துளங்க
விண்ணுலகு பெறினும் விடுத்தற் காகாப்
பண்ணியல் பாணி நுண்ணிசை யோர்வார்
ஊரக வரைப்பி னெல்லென வெழுந்ததோர்
பூசனுண் டெனவும் பொறையுயர் மாமலை
வேயுயர் பிறங்கற் சேயுயர்ந் தோடும்
சூருறு மஞ்ஞையிற் சோர்ந்த கூந்தலர்
புதல்வரை யொழிந்தியாம் போந்தன மேயென
அதிர்வனர் நடுங்கி யழலி னுயிர்த்துத்
திதலை யவ்வயி றங்கையி னதுக்கி
உதிர்பூங் கொம்பி னொடுங்கு வோரும்
குட்ட மாடிக் குளிர்ந்த வருத்தம்
அட்டுப்பத மாக வறிந்தோ ரமைத்த
மட்டுமகிழ்ந் துண்ணு மாந்த ரவ்வழிப்
பட்ட தென்னெனப் பசும்பொனி னியன்ற
வட்ட வள்ளம் விட்டெறிந்து விதும்பி
எழுந்த கம்பற் கியைந்துசெல் வோரை
அழிந்த தில்லை யறிந்தேம் யாமென
மொழிந்திடை விலங்கி முன்னிற் போரும்
கம்மப் பல்கலம் விம்மப் பெய்த
பொறியமை பேழையொடு பூந்துகி றழீஇக்
குறிவயி னின்ற குறள்வயி னோக்கார்
சோருங் கூந்தலர் வாருங் கண்ணினர்
ஆருந் துன்பமொ டூர்வயி னோக்கி
வீழ்பூங் கொடியின் விரைந்துசெல் வோரும்
பழிப்பின்று புனைந்த பட்டணைப் படுகாற்
கழிப்பட மாடங் காலொடு துளங்க
விழிப்பின் மேனிதம் மின்னுயிர் வீடுமென
வேகப் புள்ளின் வெவ்விசை கேட்ட

நாக மகளிரி னடுங்கு வோரும்
ஓடுவிசை வெங்காற் றுருமொ டோர்தரப்
பாடற் றண்ணுமைப் பாணியிற் பிழையா
தாடன் மகளி ரரங்கம் புல்லெனச்
சுவைசோர்ந் தழிய நவைகூர்ந்து நடுங்கி
மஞ்சிடைப் புகூஉ மகளிர் போலத்தங்
கஞ்சிகை யெழினியிற் கரந்துநிற் போரும்
நடுங்கு வோரு நவையுறு வோரும்
ஒடுங்கு வோரு மொல்கு வோரும்
இனைய ராகத்தம் புனைநலம் புல்லென
நங்கையுஞ் சேயணம் மிறைவனு நண்ணான்
என்கொ லீண்டுநம் மின்னுயிர்த் துணையென
மங்கைய ரெல்லா மம்ம ரெய்தக்

(அறிஞர் கூற்று)

கணிகை யிரும்பிடி யணிநல நசைஇயப்
பிடியொடு போந்த பெருங்களிற் றொருத்தலை
வீரிய விளையர் வாரியுள் வளைஇ
மதந்தலை நெருங்கி மதக்களிறு வலியாக்
கதந்தலை யழியக் கந்தொ டார்த்துச்
சாம கீத வோசையிற் றணிக்கும்
நூலறி பாகரொடு மேலறிவு கொள்ளா
திகழ்ச்சியின் விட்ட விறைவன் போல
மகிழ்ச்சி யெய்தி மணிமுடி வேந்தன்
வத்தவ ரிறைவனை விட்டன னுழிதரல்
நீதி யன்று நெறியுணர் வோர்க்கென
ஓதிய லாள ருடலுந் ருழிதரப்

(அரசன் செயல்)

பௌவ மெல்லாம் படரு மீண்டெனக்
கௌவை வேந்தனுங் காற்றொலி யஞ்சி
யானையி னருஞ்சிறை வளைஇ யதனுணம்
சேனையு முரிமையுஞ் செறிக வந்தெனப்
பிறிதிற் றீரா நெறியின னாகக்

(யானைகளின் செயல்)

காற்றொடு கலந்த கார்முழக் கின்னிசை

மாற்றுக்களிற் றெதிர்வென மறித்தன மயங்கி
அந்தப் போதிகை யிடைபரிந் தழியக்
கந்துமுதல் கிழித்துக் காரென வுரறி
மேலியன் முறைவர் நூலிய லோசை
எஃகெறிந் தன்ன வெஃகுறு செவிய
அடக்கவு மடங்காப் புதுக்கோள் யானை
வால்வளை மகளிரொடு மைந்தரை யுழக்கி
ஏர்நுங் குலிகப் புனல்பரந் திழிதரும்
காரிருங் குன்றிற் கவின்பெறத் தோன்றக்

(நளகிரியின் செயல்)

கொன்னே சிதைந்து கோவின் குறிப்புடன்
நகரி முழக்கினு மிகையெழு தீயினும்
அளவி லார்ப்பினு மருந்தளை பரிந்து
கடலென வதிர்ந்து காரெனத் தோன்றி
விடலருஞ் சீற்றமொடு வேறுபட நோக்கிக்
களமெனக் கருதிக் கனன்ற வுள்ளமொடு
நளகிரிக் கூற்ற நகர முழக்க
எதிரெழு வோரை யதிர நூறி
வத்தவர் கோமான் வயவர் திரிதர
எத்திசை மருங்கினு முட்குவரத் தோன்றிய

(அரசன் செயல்)

இன்னுக் காலை யொன்னு மன்னனும்
தன்னுண் டொழிற்றுணி வெண்ணு மாயினும்
செறியக் கொள்ளுஞ் செய்கை யோரான்
அறியக் கூறிய வன்பின னல்லதைத்
தன்வயி னின்றுதன் னின்னியங் கொள்ளும்
என்மக ளுள்வழி யிளையரொ டோடிக்
காவ லின்றுதன் கடனெனக் [1]கூரி
மத்தவன் மான்றேர் வத்தவற் குரைமெனப்
பாய்மான் றானைப் பரந்த செல்வத்துக்
கோமான் பணித்த குறைமற் றிதுவென
ஏவ லிளைய ரிசைத்த மாற்றம்

பி - ம். 1 கூறி.

(உதயணன் செயல்)

சேதியர் பெருமகன் செவியிற் கேட்டு
விசும்புமுதல் கலங்கி வீழினும் வீழ்க
கலங்க வேண்டா காவலென் கடனெனக்
காற்றிற் குலையாக் கடும்பிடி கடைஇ
ஆற்றுத்துறை குறுகிய வண்ணலைக் கண்டே

(காவலர் உதயணனிடம் கூறல்)

காவன் மாக்களுங் காஞ்சுகி முதியரும்
ஏவ லிளையரு மெதிரெழுந் தோடி
மாடமுங் கடையு மதிற்புறச் சேரியும்
ஓடெரி கவரலி னூர்புக லாகாது
வையமுஞ் சிவிகையுங் கைபுனை யூர்தியும்
காற்றுப்பொறி கலக்க வீற்றுவீற் றாயின
போக்கிட மெங்கட்குப் புணர்க்க லாகா
தாக்கிட மெமக்குமுண் டாக வருளி
ஆய்ந்த நல்யாழ்த் தீஞ்சுவை யுணர்ந்தநின்
மாணாக் கியையெம் மன்னவ னருளால்
இரும்பிடி நின்னொ டொருங்குட னேற்றிக
கொடுக்குவ வேண்டுமென் றெடுத்தெடுத் தேத்தி
அருந்திறற் காவல ரச்ச மெய்திப்
பெருந்திறன் மன்னற்குப் பணிந்தன ருரைப்ப

(உதயணன் செயல்)

எவ்வா யமரு மின்மொழிக் கிளவி
அவ்வாய் மங்கல மாகென விரும்பிக்
கவ்வையும் பெருகிற் றய்தலு மரிதே
இவ்வழி மற்றிவ ணிற்றலு மேதம்
வருக வீண்டென வத்தவன் வலிப்பத்
தவாஅக் காதலொடு தகையாழ் காட்டும்
உவாத்தி யாதலி னுறுதியு மதுவெனச்
செய்கையி னறியாச் சிதைவிற் றாகிக்
கௌவை யெரியுங் காற்றினொ டெழுந்த
தரிமா னன்னநம் பெருமாற் சேரத்
திருமா நுதலியைத் தீதொடு வாரா

னுதயண குமர னொருபிடி யேற்றிப்
போவது பொருளெனக் காவல ரிரப்பப்
பெரியோர்க் குதவிய சிறுநன் றெய்ப்பக்
கரவாது பெருகிக் கையிகந்து விளங்கும்
உள்ளத் துவகை தெள்ளிதி னடக்கி
மதர்வை வண்டொடு சுரும்புமணந் தாடும்
குயில்பூங் கோதையொடு குழற் [1]குரல் வணரும்
கயிலெருத் திறைஞ்சிக் காணிலங் கிளைஇ
உருகு நெஞ்சத் துதயண குமரனைப்
பருகும் வேட்கையள் பையுள் கூர
நிறையு நாணு நிரந்துமுன் விலங்க
நெஞ்சு நேர்ந்தும் வாய்நேர்ந் துரையா
அஞ்சி லோதியை நெஞ்சு வலியுறப்
பயிற்சி நோக்கி னியற்கையிற் றிரியாக்
காஞ்சன மாலை கையிசைந் தொருங்கே
ஏந்தின ளேற்ற விரும்பிடி யிரீஇ
முடியா வாள்வினை முடித்தன மின்றென
வடியோர் தடங்கண் வாளென மிளிரும்
கொடியோர் சாயலைக் [2] குடங்கையிற் றழீஇப்
பிடியேற் றினனாற் பெருந்தகை யுவந்தென்.

௪௪—பிடியேற்றியது முற்றிற்று.

௪௫—படைதலைக்கொண்டது.

(காஞ்சனமாலை செயல்)

பெருந்தகை யண்ணல் பிடிமிசை யேற்றித்
திருந்திழை யணிந்த பரந்தேந் தல்குல்
நீர்மைப் பல்காசு நிழலுமிழ்ந் திமைப்பப
பார்வை முள்கிய பட்டுநிறம் பயப்பத்
தான [3] மீக் கூரி மேனிவந் தோங்கி
அமிழ்துபெய் செப்பி னன்ன வெம்முலை
நுகர்பூங் காமத்து நுதிமுக முரிஞ்சிக்

பி-ம். 1 குரலணவ. 2 கொடுங்கையிற். 3 மிக்கூரி.

கடாஅ யானைக் கண்ணக மறைத்த
படாஅத் தன்ன படிவத் தாகிய
வடகப் போர்வையை வனப்பொடு திருத்திக்
கடக முன்கைக் காஞ்சன மாலை
உரத்தகை யண்ணல் வரத்திற் பெற்ற
வழிவரு நல்லியாழ் [1] வயந்தகற் கீத்துப்
[2] பொற்படைப் புளகமிசைப் பொங்குஞ் சாமரை
நற்பிடி நடத்தொறு நடுங்குந் தோழியைப்
பொற்கொடி மருங்குல் புல்லுவன ளருளிப்

(உதயணன் செயல்)

பவனத் தரச னுவணித் தெறிந்த
குந்தக் கடைமணி யுறுதலின் முரிந்த
வலப்பா லெயிற்றின் குற்றமு மலைத்துடன்
வலிந்துமேற் சென்ற கலிங்கத் தரசன்
குஞ்சர மருப்பிற் குறியிடப் பட்டுச்
செஞ்சாந்து மெழுகிய சேடுபடு செல்வத்து
மார்பினது வனப்புந் தோளினது திரட்சியும்
நிறத்தது நீர்மையு நெடுமைய தளவும்
சிறைத்துயர் நீக்கற்குச் செய்த வேடமும்
குறிக்கொளற் கமைந்தவை பிறவுந் திறப்பட
வாகிய லமைச்சன் யூகிக் குள்ளவை
சாங்கிய முதுமக டான்றெரிந் துணர
அறிவின் முன்னே செறியச் செய்த
பொறியுடை யோலை பொருக்கென வீழ்த்து

(சாங்கியத்தாய் வருதலும் வயந்தகன் செயலும்)

மடத்தகை பொருந்திய வயத்தகை மாதரை
நடுக்க மோம்பி விடுக்குநள் போலச்
சார்ந்தன ளாகியவட் கோம்படைக் குறிப்பொடு
நண்ணிய பொழுதிடைக் கண்ணிற் காட்ட
வயந்தக குமரன் மறைத்து நீட்டலும்
நயந்த நெஞ்சமொடு நன்கன மடக்கிச்
சேற லாற்றுண் மாறினண் மறைந்தபின்

பி - ம். 1 வத்தவற். 2 பொற்புடை.

(உதயணன் செயல்)

அங்கண் ஞாலத் தன்புடை யோரைப்
புன்க ணீக்குதல் புகழுடைத் தாதலின்
உங்க ளன்பின் யானுறு நோயினைப்
பைங்கண் வேழத்துப் பகடன் றீர்ந்ததிவள்
செழுங்கடை மழைக்கண் செருக்கயல் புரைய
உண்ணெகிழ்ந்து கலிழ்ந்த வுருஅ நோக்கிற்
கண்ணெகிழ் கடுநோய் கைவரு காலை
ஈர்வது போலு மிருளுடை யாமத்துத்
தீர்திற மறியேன் [1] றேர்வுழித் தீர்திறம்
வந்துகை கூடிற் றுசலி னின்றிது
நீக்கனின் கடனென மாக்கே ழிரும்பிடி
அந்தோற் செவியினுண் மந்திர மாக
வழிமொழி கூறிய வத்தவர் பெருமகன்
கழிபோக் கெண்ணிக் கடவா நின்றோன்
கம்பலைக் கவற்சியிற் [2] கடுங்கோளைக் கொளீஇ
அம்பொடு பிடித்த வில்ல னாகி
ஓராஅ வுரிமைக் கொருபுடை வரூஉம்
வராக னென்னும் வயவனைக் கண்டே
வந்தனை யிப்பா லஞ்ச லார்ப்போர்
கள்வ ராதலு முண்டென் கையகத்
தொள்வரிச் சிலையு முடுவார் பகழியும்
தந்தனை யாகியென் றகைவா ளேந்தி
ஊறுண் டெனினு முழையிற் பிரியா
தேறிவ் விரும்பிடி யென்னொ டென்றுதன்
நெஞ்ச நெகிழா வஞ்சமனத் தடக்கி
அன்பின்று கிளந்த வருளில் பொருண்மொழித்
தோட்டியின் வணக்கம் வேட்டவன் விரும்பிக்
கொடுஞ்சிலை கொடுத்துக் கூப்பிய கையன்
கடுஞ்செல விரும்பிடிக் கான்முதற் பொருந்தி
ஏற்றம் விரும்பலு மிளம்பிடி யெடுப்பி
ஆற்றன் மன்னன் காற்றெனக் கடாவ
விசையின் வீழ்ந்து வெருளி யாற்றான்

பி - ம். 1 தேறிவழி. 2 கடுங்கோலைக்.

ஆய்பெருங் கடிநகர் வாயிலு நோக்கான்
கோமக னுள்வழிக் குறுகலுங் குறுகான்
ஓவிய முட்கு முருவினைத் தழீஇப்
போயினன் வத்தவன் புறக்கொடுத் தோயெனக்

(பிரச்சோதனனுடைய வீரச்செயல்)

காவ லாளர் கலக்க மெய்தி
மண்ணக மழித்து மலைத்துச்சிறை கொண்ட
நண்ணா மன்ன னாட்ட மோராம்
பண்ணமை பிடிமிசைப் பையர வல்குலை
ஏற்றல் வேண்டுமென் றிரந்தேற் றினமால்
கூற்ற வாணையெங் கொற்றவன் றலைத்தாள்
என்சொலிச் சேறுமென் றெண்ணுபு நாணினர்
வெஞ்செலற் பகழியும் வில்லுந் தழீஇத்
தஞ்சினம் பெருகத் தாக்குநர்ப் பெறாஅர்
பொங்குபுகழ் வேந்தன் வென்றி யேத்தி
விண்ணக மேறி னல்லது விரிநீர்
மண்ணக வரைப்பினெம் மண்ணலைப் பிழைத்தோர்க்
கின்னுயிர்க் கேம மாகுத லரிதெனப்
பின்னிலை முனியார் பிடிவழிப் [1]படரக்

(உதயணனுடைய வீரச்செயல்)

கரைவேட் டுலாஅங் கருங்கட லழுவத்
திரைவேட் டுலாஅ மினச்சுற வினத்தின்
[2]வத்தவ நாட்டு வித்தக வீரரும்
மலைக்கு மாந்தரைத் தலைக்கொண் டோடி
ஐந்தலை நாகத் தழலுறு கண்ணினர்
பைந்தலை துமித்துச் செங்குடர் சிதறிப்
பிடித்த வாளர் மடித்த வாயர்
திருவமர் மூதூர்த் தெருவுங் கோணமும்
ஒருவழி யொழியா துயிர்நடுக் குழீஇத்
திரிதர்வர் மாதோ திருநக ரகத்தென்.

௪௫—படைதலைக்கொண்டது முற்றிற்று.

பி-ம். 1 படாஅக். 2 வத்தவள.

௪௯—உழைச்சன விலாவணை.

திருநக ரகவயிற் றிறன்மீக் [1] கூரி
ஒருதுணை வயவ ருள்வழித் திரிதர
ஓடிவி றேற்றத் துதயண னாரும்

(போர் நிகழ்ச்சி)

பிடிவழிப் படரும் பேணு மள்ளரை
அதிரத் தாக்குதற் கமைக்கப் பட்ட
பதிநிலந் தோறும் பதிந்துமுன் னிருந்த
ஐந்நூற் றைம்பத் தைவ ராடவர்
செந்நூற் பத்திச் சேடகக் கையர்
மன்னிய மாதிர மறுவின்று மயங்கி
மின்னுமிழ்ந் ததுபோல் வீசிய வாளினர்
கரண நுனித்த வரணக் காப்பினர்
பின்சென் மாந்தரை முன்சென்று விலங்கி
அரதன நாகரிற் சொரிதரு வெகுளியர்
ஏற்றோர்த் தாக்கிக் கூற்றுறை யுலகினுள்
உறைகுவி ராயிற் குறுகுமின் விரைந்தெனச்
சிறையழி புனலிற் சென்றுமே னெருங்கி
வேலுங் கணையமும் வீழினு மிமையார்
வீரியத் தறுகணர் வீக்கிய கச்சையர்
ஆர்வ லாள ரார்த்தன ரெறிய
ஓங்குமடற் பெண்ணைத் தீங்குலைத் தொடுத்த
விளைவுறு தீங்கனி வீழ்ச்சி யேய்ப்பத்
தளையவிழ் தாமமொடு தலைபல புரளவும்
வேகப் புள்ளின் வெவ்விசைக் குலந்த
நாகப் பிறழ்ச்சியிற் றோண்முத றுணியவும்
அஞ்செஞ் சாந்த மெழுதிய வகலம்
ஒண்செங் குருதிப் பைந்தளி பரப்பவும்
[2] குசைத்தொழிற் கூத்தன் விசைத்துநனி விட்ட
பொங்குபொறித் தாரையிற் றங்கல்செல் லாது
குருதிச் செம்புன றவிரா தெக்கவும்
மிகைசெலற் கெழுந்த வேக வெவ்வழல்

பி - ம். 1 கூறி. 2 குமைத்தெழிற்.

அகவயிற் சுடுதலி னவிந்த வாற்றலர்
நிலத்தொடு நேரா நெஞ்சினர் போலப்
புலக்கமழ் புண்ணர் விண்ணிடை நோக்கிக்
கொலைப்பெருங் கூர்வாள் கோடுற வழுத்தலிற்
பொறிப்படு வேங்கையிற் குறிப்பிலர் குரங்கவும்
மத்தகத் திழிதரு நெய்த்தோர்ப் பெரும்புனல்
மொய்த்துமுகம் புதைதலின் முன்னடி காணார்
மடித்த செவ்வா யழுந்தக் கவ்விப்
பிடித்த வாளொடும் பிறழ்ந்தனர் கவிழவும்
கையொடு துமித்த வைவாள் வாய்மிதித்
தற்ற வடியினர் செற்றத்திற் கழுமிக்
கற்ற கரண மற்ற வாக
உரத்தகை மழுங்கி யுள்ளடி யின்றி
மரக்காற் கூத்தரின் மறிந்தனர் விழவும்
[1] மடத்தகை மகளிர் மருங்குல் கடிந்த
முலைப்பூ ணழுத்திய மொய்சாந் தகலம்
வாண்முக மழுத்தலின் வயவுநடை சுருங்கிச்
செந்நிறக் குருதியிற் [2] பைந்நிணங் கெழீஇச்
செயிர்த்த நோக்கினர் செங்க ணுடைவர்
வியர்த்த நுதலினர் வீழ்ந்தன ரவியவும்
ஊடரும் வாளினர் சோர்நிண மிழுக்கி
அடர்பூ ணகலத் தரும்படை யுற்றுக்
குடர்க டாக்கக் குழிப்படு களிற்றிற்
படர்கூ ரெவ்வமொடு பதைத்தனர் [3] பனிப்பவும்
தலையுந் தடக்கையுந் தாளு முடம்பும்
கொலையமை வில்லுங் கூர்வாய்ச் சுரிகையும்
வேலு மீட்டியுங் கோலுங் குந்தமும்
சேடக வட்டமுஞ் செந்நூற் பாரமும்
தண்டும் வாளுந் [4] தளையிடு பாசமும்
பொங்குமயிர்க் கிடுகும் புளகத் தண்டையும்
அரக்குவினைப் பலகையு நிரைத்தவெண் குடையும்
கூந்தற் பிச்சமுங் கோணு வட்டமும்

பி - ம். 1 செயக்களி மகளிர். 2 பைந்நிணந்தழீஇ. 3 பணியவும். 4 தலையிடு.

வாங்குகைத் தறுகண் வாரணப் பிளவும்
பாவைச் செந்திரை விரவுபு முடுகி
அன்ன பிறவு முன்மு னுருட்டிக்
கைந்நவி லாளர் காடெறிந் துழுத
செந்நில மருங்கிற் செஞ்சால் சிதைய
மாஞ்சுமந் திழிதருங் கடும்புனல் கடுப்பக்
குருதிச் செம்புனல் போர்க்களம் புதைப்ப
அடங்காத் தானை யவந்திய ரிறைவற்
காருயி ரன்ன வரும்பெறன் மடமகள்
வால்வளைப் பணைத்தோள் வாசவ தத்தையை
வலிதிற் கொண்ட வத்தவ ரிறைவனை
நலிதற் கெழுந்த நண்ணு விளையரைக்
கடல்விலக் காழியிற் கலக்க மின்றி
அடல்விலக் காள ரார்த்தன ரடர்ப்பவும்

(யூகியின் செயல்)

உயிரொன் றாகிய செயிர்தீர் காதற்
றுணைநலத் [1] தோழன் றுயர மறுத்தற்
கிணைமலர்த் தடங்க ணிமையகத் தொடுங்கிய
காட்சியிற் கனையும் வேட்கைய னாகி
விம்முறு விழுநகர் வீதியிற் கொண்ட
வெம்முறு படிவ நீக்கி யூகி
பிணம்படு பெருங்காட்டுப் பேயு முட்கும்
அணங்கருந் தானத் தஞ்சுதக விரீஇத்
தாழி படுத்துத் தமரையுந் தெளியான்
பூழி படுத்த சாதனை யமைவிற்
கற்படை போழினுங் [2] கதுவாய் போகா
தெற்புடம் பறுக்கு மியற்கைத் தாகிக்
கொற்புனைந் தியற்றிய கொலையமை கூர்வாள்
வாய்வயிற் றெய்வம் வணங்குபு கொண்டு
தீவயி ருர்த்திய திறலோன் போலநின்
காய்வுறு கடும்பசி களைகுவெ னின்றெனைக்
காத்த லோம்பென வாற்றுளி கூறிப்
பத்தி குயின்ற பல்வினைக் கம்மத்துச்

பி - ம். 1 தோழுன். 2 கதுவாப்.

சித்திரச் சேடகஞ் செறியப் பற்றி
ஊற்ரூ னுற்ற வுறுகண் டீர்க்கெனக்
கற்ரூய் கலிங்கங் கட்டிய கச்சையன்
ஊழி யிறுதி யுட்குவரத் தோன்றி
வாழுயிர் பருகும் வன்கட் செய்தொழிற்
கூற்றம் போல வேற்றவர் முருக்கிக்
கடிகமழ் நறுந்தார்க் காவலன் மகளைப்
பிடிமிசைக் கொண்டவன் பெயரு நேரத்து
முடிமுத லண்ணலை முந்தினன் குறுகித்
தொடிமுதற் றிணிதோ டோன்ற வோச்சி
வலமுறை வந்து பலமுறை [1] பழிச்சி
நும்பொருட் டாக நெடுந்தகை யெய்திய
வெம்பெருந் துயரம் விடுத்தனை யாகிக்
காட்டகத் தசையாது கடுகுபு போகி
நாட்டகம் புகுக நண்பிடை யிட்ட
இரும்பிடி நினக்கிது பெருங்கடன் மற்றெனப்
பிடியோம் படுத்துப் பெருமை யெய்திக்
குடியோம் பியற்கையெங் கோமக னெழுகென
வரத்தொடு புணர்ந்த வாரணக் காவற்
றிறத்தொடு கொடுத்துச் செய்பொருள் கூறிப்
பிறக்கொடுத் தொழியும் போழ்திற் றிறப்பட

(உதயணன் செயல்)

ஒருநாட்டுப் பிறந்த வார்வ மன்றியும்
கருமக் கிடக்கையுங் கலங்காச் சூழ்ச்சியும்
மறைபுறப் படாமையு மறையுண் ணுமையும்
வாசவ தத்தைக்கு வலித்துணை யாய
தாய்மையுந் தவமும் வாய்மையு நோக்கி
விடுதற் கருமை முடியக் கூறி
வடிவும் வண்ணமும் படிவமும் பிறவும்
அருந்தவ மகளைத் திருந்துமொழித் தோழன்
உணர வெழுதிய வோலையும் வாங்கிப்
புணர வவள்வயிற் போக கொண்டெனை
ஊகந்த ராயற் காக நீட்டித்

பி - ம். 1 பழிப்பி.

(உதயணன் மகிழ்ந்து செல்லுதல்)

தமரது வென்றியுந் தருக்கு நிலைமையும்
அரிய தோழன் சூழ்ச்சிய தமைதியும்
எய்திய வின்பமுங் கையிகந்து பெருக
வையக வரைப்பின் வத்தவ ரிறைவற்
கெவ்வந் தீர்க்கென விமையோ ரியற்றிய
தெய்வத் தன்ன திண்பிடி கடைஇ
மன்னிய தோற்றமொடு வடகீழ்ப் பெருந்திசை

(வராகன் செயல்)

முன்னிய பொழுதின் முன்னுங் கூறிய
வணங்குசிலை கொடுத்த வலிகெழு வராகன்
இரும்பிடி கடாவல னிவனென வெண்ணி
அரும்படை யாள ராருயி ரோம்பி
நயந்துகை விடாஅன் பின்செல் வோனை
எறிபடைத் தானை யேயர் பெருமகன்
உறுபடை யில்லா வொருதிசை காட்டி
ஆற்றலும் வென்றியு மறிவு மூன்றும்
கூற்றுத்திறை கொடுக்குங் கொற்றத் தானை
அவந்தியர் பெருமக னடிமுதல் குறுகிப்
பயந்துதான் வளர்த்த பைந்தொடிப் பாவையைச்
சிறையிவ னென்னுஞ் சிந்தையி னீக்கிக்
குறையுடை யுள்ளமொடு கொள்கெனத் தந்துதன்
காதலின் விடுப்பப் போகுதல் வலித்தனென்
வணக்க மின்றியான் செய்தனன் றனக்கெனக்
கூறினை சென்மெனத் தேறக் காட்டிப்
படிறிடை மிடைந்த பணிகோ ளீயா
ஆன்பாற் [1] செந்தேத் தணியுறு கிளவி
அடுதிற லாற்ற லறியக் கூறப்
பிடிவழிப் படர்ந்து பெயர்ந்தவ னிற்பத்

(வாசவதத்தை வருந்தல்)

தொடியுடைத் தடக்கையிற் றொழுதன ளிறைஞ்சி
மீட்டவற் போக்கு மாற்றங் கேட்டே

பி - ம். 1 சந்தத்திணியுறு.

மணிமுதற் கொளீஇய மாண்பொற் சந்தின்
ஏரிமணி யிமைக்கு மிலங்குபொற் கோணத்துக்
கதிர்நகைக் கோவைக் கைவினைப் பொலிந்த
மத்தகப் புல்லக நக்குபு கிடந்த
திலகத் திருநுதல் வியர்பொடித் திழியக்
கலக்குறு சின்னீர்க் கருங்கயல் போல
நிலைக்கொளல் செல்லா நீர்சுமந் தளைஇப்
பிறழ்ச்சியொ டுலாவும் பெருமதர் மழைக்கண்
[1] அச்ச நோக்கி னச்செயி றணிந்த
நாகப் பிள்ளை யங்கட் பிறந்த
ஆவி போல வைதுவெய் துயிராப்
பருவர லுருஅப் பையு ளெஞ்சினள்
கண்டிரள் வேய்த்தோட் காஞ்சன மாலையைக்
கொண்டிழி கென்னுங் குறிப்பினள் போலச்
செவ்வி யின்றிச் சேயிழை புலம்ப

(காஞ்சனை உதயணனை வினவுதல்)

எள்ளியது தீர வுள்ளியது முடித்த
உலவாக் கேள்வி யுதயண குமரனைத்
தொகுவிரல் கூப்பித் தொழுவன ளாகித்
தேம்பொதி செவ்வாய்க் காஞ்சனை யுரைக்கும்
பைந்தளிர் பொதுளிய பனிமலர்க் காவிற்
செந்தளிர்ப் பிண்டிச் சினைதொறுந் தொடுத்த
பின்னுறு பொன்ஞாண் பெருந்தொடர் கோத்த
பண்ணுறு பல்வினைப் பவழத் திண்மணை
ஊக்கமை யூசல் வேட்கையின் விரும்பினும்
திருநலத் தோழியர் சிறுபுறங் கவைஇப்
பரவை யல்குற் பல்காசு புரளக்
குரவை யாயங் கூடித் தூங்கினும்
தன்வரைத் தல்லா விம்முறு விழுமமொடு
நோய்கூர்ந் தழியுமெங் கோமக ணடுங்க
எறிவளி புரையு மிரும்பிடி கடைஇப்
பின்வழிப் படருமெம் பெரும்படை பேணுய்
என்வலித் தனையோ விறைவ நீயென

பி - ம். 1 அக்க.

(உதயணன் தேற்றல்)

நடுக்கம் வேண்டா நங்கையு நீயும்
அடுத்த காவல னிவளொடு மமர்ந்து
விடுத்தமை யுணரா வீரிய விளையர்
தருக்கொடு வந்து செருச்செய றுணிந்தனர்
பணிவகை யின்றிப் பண்டு மின்னதை
அணியிழை மடவோய் துணிகுவெ னாயின்
அரியவு முளவோ வஞ்ச லோம்பெனத்

(காஞ்சனமாலை வாசவதத்தையைத் தேற்றல்)

தெரிவனன் கூறிய தெளிமொழி கேட்டே
அன்ன தாகிய வருளுண் டாமெனின்
அஞ்சொற் பேதா யதுவிது வாமெனப்
பின்னிருங் கூந்தலொடு பிறழ்கலந் திருத்திக்
கலக்க நீங்கெனக் காஞ்சனை தெருட்டி
நலத்தகை மாதரு நனிநடுக் கொழிய
வலத்தினும் வலியினும் வத்தவன் கடாவத்

(கோட்டந் தாங்கிய பணிப்பெண்கள் வருந்தல்)

திருமா தேவி பெருநகர் வரைப்பினும்
செருமாண் வென்றிச் செல்வன் பக்கமும்
மையார் கண்ணியை யொய்யா னாகிக்
கையிகந் தனனாற் காவலன் மகனெனக்
காற்றினு மெரியினு மேற்ற வார்ப்பினும்
நாற்றிசை மருங்கினு நண்ணல் செல்லார்
பகலிட மருங்கிற் பருதியைக் கெடுத்த
அகலிடம் போல வச்ச மெய்திப்
படைமலர்த் தடங்கண் பனிசுமந்து வீழ
இடைமுலைக் கிடந்த வேக வல்லி
முற்றுறு [1] கழங்கொடு முதலகடு பொருந்திப்
பற்றிடம் பெறாது பாம்பெனப் பதைப்ப
வெருவுறு மஞ்ஞையிற் றெருமந் திகலிப்
பழிப்பில் கம்மியன் பசும்பொனிற் புனைந்த
கொடிப்பல விரீஇய கொழுந்துபடு கோலத்துக்

பி - ம். [1] களங்கொடு.

கொட்டங் கொண்டோர் கட்டழ லுயிரா
விட்டகன் றனையோ வேந்தனென் றின்றமை
மட்டுவார் கோதாய் மறந்தென மாழ்கவும்

(அடைப்பை தாங்கியவர் வருந்தல்)

சிறுபுறங் கவைஇச் சிப்பின் வாரிக்
குறுநெறிக் கொண்ட கூழைக் கூந்தலுள்
நறுமலர்க் கோதை நான்றுவந் தசைஇ
வடுப்போழ்ந் தன்ன வாளரி நெடுங்கண்
குமிழ்த்தெழு வெம்பனி கோங்கரும் பேய்ப்ப
முகிழ்த்தன் முன்னிய முலைமுதன் முற்றத்து
வரித்த சாந்தின் வண்ணஞ் சிதைப்பச்
செறிதொடர் கொளீஇய சித்திரக் [1] கம்மத்துப்
பொறியமை புடைசெவிப் போழ்வாய் மணிக்கண்
அருங்கய லடைப்பை யங்கையி னேந்திப்
பெருங்கட் பேதைய ரிருந்துய ரெய்தவும்

(கவரியேந்தியவர் வருந்தல்)

மறுவகத் தடக்கிய மதியம் போலச்
சிறுமுகச் செப்பிகை புடைமுதல் புதைஇய
மல்லிகை நறுஞ்சூட்டு வெள்ளிதின் விளங்கவதன்
ஊர்கோ ளேய்ப்பச் [2] சூழ்புடன் வளைஇய
செம்பொற் பட்டம் பின்றலைக் கொளீஇச்
சில்லென் கோலத்துச் சிறுகொடி மருங்கிற்
றணிமுத் தணிந்த தண்சாந் தாகத்துப்
பனிமுத் தாலி படைக்கண் காலா
வெள்ளிப் போழை யுள்ளகத் தடக்கி
மணியினும் பொன்னினு மருப்பினும் வல்லவர்
அணிபெறப் புனைந்த வமர்பெறு காட்சித்
தின்மை செறிவில் சேடக மகளிர்
தன்மை கடுக்குந் தானைக் கச்சையர்
வம்புநெருக் குற்ற பொங்கிள முலையர்
குவளைக் கோதை கொண்ட கூந்தலர்
தவளைக் கிண்கிணி ததும்புசீ றடியர்

பி - ம். 1 கயத்துப். 2 சூழுடன் றுளைஇச்.

* கறு

விளக்குறு மணிக்கை முகட்டுமுதல் வளைத்த
பொங்குமயிர்க் கவரிப் பைந்தொடி மகளிர்
எரியுறு மெழுகி னுள்ளஞ் சோரப்
பரிவுறு நெஞ்சினர் பையாந் தேங்கவும்

(பணிசெய்யும் கூனர் வருந்தல்)

கன்மிசை மருங்கின் மின்மினிர்ந் ததுபோற்
றிடர்சே ராகத்துச் சுடர்மணி பிறழ
முத்துற ழாலி தத்துறு கண்ணொடு
பனிப்புறு கிளவியிற் பக்க நோக்கி
மங்கலச் செப்பின் மாண வேந்திய
குங்குமங் கொண்ட [1] கூன்வழுக் குறவும்

(பணிசெய்யும் குறளர் வருந்தல்)

அருங்கலந் துதைஇப் பெருங்கல மெல்லாம்
பேணி யணிந்த நாணுக் கோலத்துப்
பையர வல்குற் பவழப் பல்காசு
கைபுனை கலிங்கத் தைதுகலந் தொன்றி
நீலத் தெண்ணீர் நீந்து மாமையிற்
கோலக் குறுக்கைவாள் கூட்டுட் கழீஇப்
பாலிகை பற்றிய குறள்வழிப் படரவும்

(தோழியர் புலம்பல்)

மணிகிடந் திமைக்கு மாட மாணகர்
அணிகிடந் திமைக்கு மகன்பெருங் கோயிலுட்
காப்புற வகுத்த கன்னியங் கடிமனை
யாப்புற வகுத்த போர்ப்பெருங் கோணத்துக்
கழறுகா லமைத்துக் கண்ணகன் பரப்பின்
நிழறரு படுகா னீரதிற் புனைந்த
கற்பிறங் கடுக்கத்து நற்குறி யாவையும
படுகற் சுரமும் பாறையும் படுவும்
நடுக லடுக்கலு நறும்பூஞ் சாரலும்
தேனுடை வரையுங் கானகக் குறும்பும்
அருவி யறையு முருவ வேனலும்
குழியுங் [2] குவடும் வழிநீ ரசும்பும்

பி - ம். 1 கூன் வழிக்குறுகவும். 2 கவடும்.

வள்ளியும் வகுந்துஞ் சுள்ளியுஞ் சூரலும்
வழைசேர் வாழையுங் கழைசேர் கானமும்
நாகமு நறையு மூகமு முழுவையும்
கடமா னேறுங் கவரியுங் கரடியும்
மடமான் பிணையு மஞ்ஞையு மகன்றிலும்
விடமா நாகமும் வேக யானையும்
கழனியும் பொய்கையும் பழனப் படப்பையும்
தெரிமலர்க் காவு முருவின வாக
அமைக்கப் பட்ட செயற்கருஞ் செல்வத்து
மைதவழ் சென்னிக் கைசெய் குன்றொடு
நால்வகை நிலனும் பால்வகுத் தியற்றி
[1] அறவை யல்லது பிறபுகப் பெறாஅ
வளமரந் துறுமிய விளமரக் காவினுட்
கொண்ட கோலமொடு குரவை பிணைஇ
வண்ட லாடுந் தண்டாக் காதல்
எம்மையு முள்ளா திகந்தனை யோவென
மம்மர் கொண்ட மனத்த ராகித்
தோழிய ரெல்லாம் பூழியுட் புரளவும

(செவிலித்தாயர் புலம்பல்)

அம்பொன் வள்ளத் தமிழ்துபொதி யடிசில்
கொம்பி னெல்கிக் குறிப்பிற் கொள்ளாய்
செம்பொற் கிண்கிணி சிலம்பொ டார்ப்ப
மணிநில மருங்கிற் பந்தொடு மறலிநின்
அணிவளைப் பணைத்தோ ளசைய வாற்றாய்
இன்றீங் கிளவி யொன்றிரண்டு மிழற்றிப்
பண்சுவைத் தொழிந்து பாவி றோன்முலை
ஒண்முக விரலிற் கண்முக ஞெமிடி
மையார் நெடுங்கண் மாலை யாமத்துப்
பையாந்து பொருந்திப் பள்ளி கொள்வோய்
காதற் காளை கானத் தொய்ப்பப்
போதற் கண்ணே புரிந்தனை யோவெனச்
செவிலித் தாய ரவலித் தழவும்

பி - ம். [1] அயறவையல்லது.

(காஞ்சுகி முதியர் வருந்தல்)

கற்ற மந்திரி காட்டவுங் காணுது
பெட்டாங் கொழுகும் பெருமகன் போலவும்
முறைமையிற் றேயு நிறைமதி நீர்மை
நண்புகொ ளொழுக்கி னஞ்சுபொதி தீஞ்சொல்
வளைஇய மடந்தையைத் தெளிவன ரொழுகி
வெறுக்கை யின்மையிற் றுறக்கப் பட்ட
இளையவன் போலவுங் கிளைஞரும் பிறரும்
கண்டவ ரெல்லாங் கையெறிந்து நகூஉம்
கம்பலைப் பெரும்பழி யெய்திய காவலன்
வம்ப மன்னனை வழிதெளிந் தனனென
வெண்ணரை சூழ்ந்த தண்ணுமைப் பறைதலைக்
காஞ்சுகி முதியர் சாய்ஞ்சனு ரெய்தவும்

(சாங்கியத்தாயின் செயல்)

பொன்னணிப் பாவை போகிய புணர்ப்பின்று
தன்னி ளுகிய தன்மைத் தென்று
தண்டார் வேந்தன் கொண்ட காலை
விடுத்தற் கரிதென நடுக்க மெய்தி
ஓங்கிய வொழுக்கி னுயர்ந்தோர்ப் பேணிச்
சாங்கியந் தாங்கிய சால்பணி படிமை
வருமதி நுனித்த பெருமூ தாட்டி
வேக வேந்தன் வெஞ்சம முருக்கிப்
போக வேந்தனைப் போகப் பண்ணிப்
பொருபடை பரப்பி யுருமறைந் துழிதரும்
யூகி யுள்வழி யொற்றுந ளெய்தி
ஆகுபொரு [1] ளோலையி னிருவரு மறிவுற்றுக்
கண்கூ டெய்துங் காலங் கூறி
மண்கூட் டாளன் மனைவயின் மறையவும்
இன்னோர் பிறரு மம்மருண் மயங்கிய
உழைக்கல மகளிரு மிழைப்பிரிந் தாற்றவும்
பேராறு மடுத்த பெருங்கடல் போல
ஓசை யறியாப் பூசலும் புலம்பும்
ஊரக மருங்கிற் கூரெரி கொளுவ

பி - ம். 1 ஓலையுள்.

எதிர்த்த மாந்த ரின்னுயி ரிறுதியும்
சதிர்த்த முறுவற் கன்னியைத் தழீஇ
வத்தவ னகற்சியு மவ்வழிச் செலவும்
வித்தக குமரர் வீழ்ச்சியும் பிறவும்
ஒத்தவை யுணர்ந்து முற்றிறைக் குரையார்
பொய்ப்பொரு ளாயினு மெய்ப்பொருட் கண்ணும்
உய்வகை யில்லை வெய்யோன் மாட்டென்
றறிந்தோ ரறிந்தோர் செறிந்தன ராகி
வெய்துறு விழுமமொடு விம்மங் கூரச்
செய்வதை யறியார் திரிவாராற் பலரென்.

௪௬—உழைச்சன விலாவணை முற்றிற்று.

௪௭—உரிமை விலாவணை.

21006

(வராகன் செயல்)

செய்வதை யறியா ராகிப் பல்லவர்
கைவிரல் பிசைந்து பையென [1] வருவழி
வில்கைக் கொண்டவன் விடுக்கப் பட்ட
வல்வினைக் கொடுந்தொழில் வராகன் வந்துதன்
கோமக னிருந்த கோயி னெடுங்கடைத்
தோரணக் கந்தின் றூண்முதல் பொருந்திக்
கடிகமழ் நறுந்தார்க் காவலற் குறுகி
அடியுறை யருண்மொழி யான்பணிந் துரைப்பச்
செவ்வி யறிந்து நொவ்விதின் வருகெனக்
கோற்றொழி லவற்குக் கூறின னிற்ப

(நிமித்திகன் கூற்று)

ஈரிதழ்த் தாரோ யிற்றை நாளால்
காரொ டுறந்தவிக் கடுவளி நிமித்தம்
ஊரொ டுறந்த வுறுகண் காட்டி
இன்னா வின்ப நின்வயிற் றருமெனத்
தொன்னூ லாளன் றேன்றக் கூற

பி - ம். [1] வருவுழி.

(பிரச்சோதனன் வினவுதல்)

இன்னா வின்பத் தியற்கை யென்னென
மன்னவன் வினாய மாத்திரைக் கண்ணே

(வாயில்காவலன் செயல்)

செறியிலைப் பொற்குழை சிறப்பொடு தூக்கிய
சிறுதுளைக் காதிற் செங்கட் செந்நோக்
கருளொடு படாஅ வறிதெழு சினத்தன்
ஆர மார்ப னருமறைப் பள்ளியுள்
உற்றது கூறுங் கொற்ற வாயிலன்
கோலொடும் வாளொடுங் கூப்பிய கையன்
முன்பணிந் திறைஞ்சிய தன்மை கண்டே
செந்தா மரைக்கணிற் செவ்வி னோக்கி
வந்தது கூறென வணங்கி வாய்புதைத்
தந்தர விசும்பினு மணிநில வரைப்பினும்
பெண்ணே ருருவம் பிறர்தமக் கில்லா
நுண்ணேர் மருங்கினும் மடித்தியெம் பெருமான்
வடிவேற் றடங்கண் வாசவ தத்தைக்
கடிவழிப் படூஉ முரிமையுட் கம்மியன்
வல்வி னையன் வராக னென்போன்
சொல்லுவ துண்டெனச் செவ்வி வேண்டி
நின்றனன் பல்லாண் டென்றவ னிறைஞ்ச

(பிரச்சோதனன் செயல்)

அகன்மொழி தெரியு மருமறைப் பொழுதும்
மகண்மொழி யல்லது மற்றைய கேளா
இயற்கைய னாதலிற் பெயர்த்துப்பிறி துரையான்
வருக மற்றவன் வல்விரைந் தென்றலின்

(வாயில்காவலன் செயல்)

ஆணை வேந்த னருங்கல நிதியம்
பேணாது பிழைத்த காவ லாளன்
திருத்தகை மார்பற் குரைப்பதொன் றுள்ளான்
நின்றன னிமைப்பிடைச் சென்றன னுணர்த்தக்

(வராகன் செயல்)

கோயிற் கோதிய கோல முடைத்தாய்
வாயிலுந் தகைப்பும் வகையமைத் தியற்றிய

முளைக்கோற் பெருந்திரை வளைத்த வட்டத்து
நிலாவெண் மாடமொ டுள்ளறை சூழ்ந்த
உலாவு மண்டபத் துலாவுத லின்றி
அங்கண் ஞாலத் தழலுமிழ்ந் திமைக்கும்
செங்கதிர்ச் செல்வனிற் சீர்பெறத் தோன்றிச்
சீயஞ் சுமந்த செம்பொ னாசனத்
தாய்மணி யணைசார்ந் தரத்த மீக்கோள்
தாண்முத லசைத்தோர் தாமரைக் கையன்
இருந்த மன்னவற் கெழுகோ லெல்லையுட்
பொருந்தல் செல்லாது புக்கவ னிறைஞ்ச
வண்ணமும் வடிவு நோக்கி மற்றவன்
கண்ணி வந்தது கடுமை சேர்ந்ததென்
றெண்ணிய விறைவ னிருகோ லெல்லையு்ள்
துன்னக் கூஉய் மின்னிழை பக்கம்
மாற்ற முரையென மன்னவன் கேட்ப
இருநில மடந்தை திருமொழி கேட்டவட்
கெதிர்மொழி கொடுப்போன் போல விறைஞ்சப்
பின்னுந் தானே மன்னவன் வினவ
மறுமொழி கொடாஅ மம்மர் கண்டவன்
உறுமொழி கேட்கு முள்ள மூர்தர
நெஞ்சி னஞ்சாது நிகழ்ந்தது கூறென்
றுருயிர்க் கபயங் கோமான் கொடுப்ப
எரியுறு மெழுகி னுருகிய முகத்தன்
ஆர மார்பநின் னருள்வகை யாங்கொல்
கார்முகத் தெழுந்தது கடுவளி வளியென
நகைத்தொழி லறியா நன்னகர் வரைப்பகம்
புகைக்கொடி சுமந்து பொங்கெரி தோன்றப்
புறமதிற் சேரியுங் குறுகுதற் கரிதாக்
காற்று மெரியுங் கலந்துடன் றோன்ற
எப்பான் மருங்கினு மப்பான் மலைக்குநர்த்
தப்புத லல்லது மிக்குயல் காணேம்
கூற்று மஞ்சுநின் னாற்ற லாணை
உரைப்பவு மொழியாது தலைத்தலை சிறப்பநின்
அடிநிழல் வட்ட மடையத் தரூஉம்

கடியர ணின்மையிற் கையற வெய்தி
வெம்முரண் வேழத்து வெஞ்சின மடக்கிய
உண்முர ணருஅ வுதயண குமரனொ
டுடன்பிடி யேற்ற லூற்றனே னாகித்
தடம்பெருங் கண்ணியைத் தலைவயிற் பணிந்திரந்
தேற்றின மேற்றலுங் காற்றெனக் கடாஅய்
எம்மொடு படாஅ னிந்நகர் குறுகான்
தன்னகர்க் கெடுத்த தருக்கின னாதலின்
ஆயிரத் தைவர் காவற் காளையர்
மாயிரு ஞாலத்து மன்னுயி ருண்ணும்
கூற்றெனத் தொடர வேற்றுமுன் விலங்கி
வயவ ரென்றியாம் வகுக்கப் பட்டோர்
பயவ ரன்றிப் பணிந்தவர் தொலைய
வென்றி யெய்திக் கொன்றுபலர் திரிதரப்
பின்றையு நின்றியான் பிடிப்பின் செல்வுழி
அடுத்த காத லணங்கைத் தந்தவன்
விடுக்கப் போந்தனென் மீண்டிது கூறெனத்
தடக்கை கூப்பிநின் னடித்திசைக் கிறைஞ்ச
ஒழிந்தியான் வந்தனெ னிகழ்ந்ததை நினைப்பினோர்
மாயம் போலுங் காவல வருளென

(பிரச்சோதனன் செயல்)

உரைத்த மாற்ற முணரக் கேட்டே
செருச்செய் நெடுங்கண் டீயெனச் சிவப்பப்
பிரச்சோ தனனெனும் பெரும்பெயர் விளக்கம்
மகிழ்ச்சி யெய்தி வத்தவற் றெளிந்த
இகழ்ச்சி யளற்று ளிறங்கிற் றின்றெனச்
சுற்ற மாக்களைச் சுடுவான் போலப்
பொற்றார் மார்பன் பொங்குபு வெகுண்டு
முகைநகை முத்தொடு தகைமுடி தயங்க
அருவரை யகலத் தாரம் புரளத்
திருமுடி யண்ண றீப்படச் சீறி
எழுவுறழ் திணிதோ ளெடுத்தன னோச்சிப்
பொழிமணித் திண்டுண் பொறிபடப் புடைத்து
மாற்றுச் சிங்கத்து மறக்குரல் கேட்ட

ஏற்றுச் சிங்கத்தி னிடித்தெழுந் தூறிக்
கொடியணி தேருங் குதிரையும் யானையும்
வடிவே லிளையரும் வல்விரைந் தோடி
எய்கணை யியற்கை யியற்றமை யிரும்பிடி
கையகம் புக்க தன்றியிவ் வையகத்
தறத்தொடு புணர்ந்த துறைப்புன லாட்டத்
தற்றமும் பிறவு மொற்றுவன னோக்கி
வள்ளி மருங்கின் வயங்கிழைத் தழீஇ
எள்ளி யிறந்த வின்னு மன்னனைப்
பற்றுபு தம்மெனப் படையுறப் படுத்து
ஞாலந் தரும்பொரு ளியற்பட நாடிய
சாலங் காயனைத் தலைக்கை யாக்கப்
பல்பொருள் பொதிந்த பயன்றெரி பனுவற்
பரதகன் றன்னொடு பயந்தீர் நண்பின்
மந்திர மாக்களு மந்த ணாளரும்
அகத்தாற் சூழீஇய வவைய னாதலின்
முகைத்தார் வேந்தற்கு முகத்தெழு பெருஞ்சினம்
புனற்படு நெருப்பிற் பொம்மென வாறி
ஆறிய [1] வண்ண மணிமுக நோக்கித்
தெளிதகு கிளவி செவ்வியிற் கேட்ப

(சாலங்காயன் கூற்று)

உளைவன செய்த வுதயண குமரனைத்
தளைவயி னகற்றலுங் கிளைவயிற் பெயர்த்தலும்
ஆர மார்பவஃ தியாவரு மறிவர்
வருமுலை யாகத்து வணங்குகொடி மருங்கில்
திருமக டன்வயிற் றெரிந்தனை காணிற்
குலத்தினுங் குணத்தினு நலத்தகு நண்பினும்
நிலத்தினி னின்னொடு நிகர்க்குந னாதலின்
மேல்வகை [2] விதியின் விழுமியோர் வகுத்த
பால்வகை மற்றிது பழிக்குந ரில்லை
ஆறென வருளா யண்ணன்மற் றதுநீ
வேறென வருளிய வேட்கை யுண்டெனின்
முன்னிலை முயற்சியி னன்றி மற்றினிப்

பி - ம். 1 வண்ணலணிமுகம். 2 விதியினும்.

பின்னிலை முயற்சியிற் பெயர்த்தனந் தருதல்
திருவளர் மார்ப தெளிந்தனை யாகென
ஒருபே ரமைச்ச னுள்விரித் துரைப்ப

(பிரச்சோதனன் செயல்)

எறிநீர் வரைப்பி னெப்பொரு ளாயினும்
என்னி னறிவோ ரில்லென மதிக்கும்
மன்னருண் மன்னன் மனத்திற் றேறி
இடத்தோ ளன்ன விடற்கருங் காதல்
உரிமைத் தேவியர்க் கொருமீக் [1] கூரிய
பட்டத் தேவிக்குப் பட்டதை யெல்லாம்
ஏனோ ருணர்த்துத னீக்கிக் கோமான்
தானே யுணர்த்துந் தன்மைய னாகி
அரசு கொற்றத் தருங்கடம் பூண்ட
முரசெறி வள்ளுவ முதியனைத் தரீஇக்
கார்பனி துளித்துக் கதிர்கண் புதைஇய
வார்பனி மாலைநம் வளநகர் புகுதல்
புனலாடு விழவிற் பொலிவின் றாதலின்
கோலங் குயிற்றிக் கோடணை யியற்றிக்
காலை புகுதல் காவலன் பணியெனத்
துறைநக ரறியப் பறையெடுத் தறைகெனச்
செல்சுட ரந்தி நல்லிய லோம்பிப்
பள்ளிக் கோயிலுட் பல்லிய மெடுப்ப
ஆய்பூஞ் சேக்கையு ளருமணி சுடரப்
பாயல் கோடல் பலரறி வுறீஇய
கைக்கோ ளிளையருங் காஞ்சுகி முதியரும்
[2] அகக்கோ ளாளரொ டருமறை யாகப்
பண்டிவட் புகூஉம் பொங்குபுனல் விழவணி
அன்றவ ணிலனா யாவித் திழிந்த
இந்திர குமர னியற்கைய னாகிக்
கஞ்சிகைச் சிவிகையுட் கரணத் தொடுங்கி

(பள்ளியறை)

வேண்டிடந் தோறுந் தூண்டுதிரிக் கொளீஇக்

பி-ம். 1 கூறிய. 2 அக்கோளாளர்.

கைவயிற் கொண்ட நெய்யகற் சொரியும்
யவனப் பாவை யணிவிளக் கழலத்
திருந்துசா லேகமொடு பொருந்துகத வொற்றிப்
பளிக்குமணி யிழிகைப் பவழக் கைவினைப்
புலிக்கா லமளிப் பொங்குபட் டடைசைஇ
எலிப்பூம் போர்வையொடு மயிர்ப்படம் விரித்துக்
கலத்தி னல்லது காலின் வாரா
நலத்தகு பல்படை யழற்றற் குரியவை
[1] ஆய்வனர் படுத்த வம்பூம் பள்ளியுட்

(திருமாதேவியின் உட்கோள்)

பெருமூ தாட்டியர் பேணுவனர் சூழத்
திருமா தேவி யருநக ருற்ற
ஆகுலப் பூசலு மழலு மற்றிவை
காவல னறிந்த கருத்தின னாகியென்
வாசவ தத்தையை வலிதிற்கொண் டேகினும்
தீது நிகழினு மேத மில்லென
நினைப்புள் ளுறுத்த நெஞ்சின ளாகி
மனத்து ளோர்க்கு மம்மர் தீர
அருங்கடி காவல ரஞ்சின ரெதிர்கொள
இருஞ்சின வேந்தன் பெருஞ்சின மகற்றி
வாயிலுள் வருமிடத் தெதிர்கொளற் பொருட்டாக்
கோயிலு ளிருந்த கோப்பெருந் தேவிக்குப்

(பிரச்சோதனன் செயல்)

பொலப்பூங் குடத்திற் போற்றித் தந்த
தலைப்பூ நறுநீர் சிறப்பு முந்துறீஇத்
தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து
வெண்முகிற் பொடிக்கும் வெய்யோன் போலக்
கைபுனை சிவிகையிற் கஞ்சிகை நீக்கி
அம்பூந் தானை யடிமுதற் றடவர
வெம்போர் வேந்தன் மெல்லென விழிந்து
நெடுவெண் டிங்க ளகடுறத் தழூவும்
கடிவெண் மாடத்துக் கன்னியங் கடிமனை

பி- ம். 1 யவனர்

இல்லாத் தன்மையிற் புல்லெனத் தோன்றும்
பையுட் செல்வத்துக் கையற வெய்திப்
பொன்னு மணியும் புகரறப் புனைந்த
தொன்னு டமரத் துணைமுதற் பொறித்த
[1] தோடமை கொளுவத் தூடுற வளைஇத்
தாழ்காழ் நகையொடு தாமந் துயல்வரும்
மாசி றிண்ணிலை வாயிற் பேரறைப்
பள்ளி மண்டபத் தொள்ளொளி கிளரத்
திருவுகொ ளுரோணி யுருவுநலம் விரும்பிய
விரிகதிர்ச் செல்வனின் வியப்பத் தோன்றிப்
பாயல் கொள்ளான் பட்டத் தேவி
சாயற் செல்வந் தலையளித் தோம்பி
அணியிய லமிர்த மாற்றிய பின்னவட்
டெளியக் காட்டுந் தெரிவின னாகிப்
பூங்கொடி புனைந்த வீங்குமுலை யாகத்து
வாங்கமைப் பணைத்தோள் வாசவ தத்தையை
நல்லியாழ் நவிற்றிய நளிமணிக் கொடும்பூண்
உறுவரை மார்பி னுதயண குமரன்
மறுவி றொன்று மனைவளந் தரூஉம்
செல்வி யாகச் சிறப்பொடு சேர்த்தியவன்
நாட்டகம் புகுத்தற்கு வேட்ட தென்மனன்
ஒண்குழை மடவோ யுவத்தி யோவென

(திருமாதேவி கூற்று)

அருமையிற் பெற்றநும் மடித்தி தன்வயிற்
றிருமணச் சூழ்ச்சி யெழுமைத் தாயினும்
ஏத [2] மின்றா லின்பம் பயத்தலின்
யானைக் கெழுந்த வெஞ்சின மடக்கிநின்
தானைத் தலைத்தா டந்த ஞான்றவன்
நிலையிற் றிரியா விளமைக் கோலம்
உயர்பிற் றிரியா தொத்துவழி வந்த
மகளுடைத் தாயர் மனத்தகம் புகற்றலின்
யானு மன்றே பேணினெ னடிகள்
மான மில்லை மற்றவன் மாட்டென

பி - ம். 1 தோழமை கொழுவத்தூழுற. 2 இன்றாதின்பம்.

(பிரச்சோதனன் கூறல்)

உவந்த வொள்ளிழை யுள்ள நோக்கி
நிகழ்ந்த திற்றென நெருப்புநுனை யுறீஇச்
சுடுநா ராசஞ் செவிசெறித் தாங்கு
வடிவேற் றானை வத்தவன் றன்னொடு
பாவை பிரிவினைக் காவல னுணர்த்தலின்

(திருமாதேவி வருந்தல்)

இசைகொள் சீறியா ழின்னிசை கேட்ட
அசுண நன்மா வந்நிலைக் கண்ணே
பறையொலி கேட்டுத்தன் படிமறந் ததுபோல்
நீலத் தன்ன கோலத் தடங்கண்
முத்துற ழாலி தத்துவன தவழப்
பெறலரு மென்மகள் பிரிந்தன ளம்மெனக்
கூறிய கிளவி கூற்றுவ னிமிழ்த்த
பாசம் போலப் பையுள் செய்ய
அலமந் தழூஉ மஞ்சி லோதியை

(பிரச்சோதனன் தேற்றல்)

முகைமலர்ப் பைந்தார் குழைய முயங்கி
மடவை மன்ற மடவோய் மண்மிசை
உடைவயிற் பிரியா துறைநரு முளரோ
இற்றுங் கேண்மதி முற்றிழை மகளிர்
தத்துநீர்ப் பெருங்கடற் சங்குபொறை யுயிர்த்த
நித்திலத் தன்னர் நினைந்தனை காணென
ஆர்வக் காதலன் காரணக் கட்டுரை
இகப்ப விடாஅன் றெளிப்பத் தேறிக்
கயல்புரை கண்ணி யியல்புகிளந் தேத்திப்
பொன்னணி நகரமொடு தம்மனை புலம்ப
வான்மதி யிழந்த மீனினம் போலப்
பொலிவின் றாகிப் புல்லென் கோலமொடு
கலாவேற் காவலன் மடமகட் காணாது
விலாவித் தன்றால் விழவணி நகரென்.

சஎ—உரிமை விலாவணை முற்றிற்று.

சஅ—மருதநிலங் கடந்தது.

(பிரச்சோதனன் படைவீரர் செயல்)

விழவணி விழுநகர் விலாவணை யெய்த
முழவணி முன்றிலொடு முதுநகர் புல்லென
அழுகை யாகுலங் கழுமிய கங்குல்
மதியா மன்னனைப் பதிவயிற் றம்மென
வெல்போர் வேந்தன் விடுக்கப் பட்ட
பல்போர் மறவ ரொல்லென வுலம்பிப்

(குதிரைகள்)

புடைப்போர்ப் புளகத் துடப்புமறைப் பருமத்துத்
தீப்படு [1] கரணத்துக் கணைவிடு விசைய
செய்வினைத் தச்சன் கைவினைப் பொலிந்த
வேற்றவ ரொல்லென வேற்றினன் பாய்த்துள
கண்டிரள் கலினமொடு பிண்டிகைக் கவ்வித்
திரைத்தலைப் பிதிர்வி னுரைக்கும் வாயின
கற்றோர்க் கமைந்த கருவி மாட்சிய
பொற்றா ருடுத்த பொங்குமயிர்ப் புரவி

(தேர்கள்)

புரவி பூண்ட பொன்னுகக் கொடுஞ்சிப்
பரவைத் தட்டிற் பன்மணிப் பலகை
அடிதொடைக் கமைந்த கிடுகுடைக் காப்பிற்
காழமை குழிசிக் கதிர்த்தவா ரத்துச்
சூழ்பொற் சூட்டிற் [2] சுடர்மணிப் புளகத்
தாழாக் கடுஞ்செல லாழித் திண்டேர்

(யானைகள்)

திண்டேர்க் கமைந்த தண்டாக் காப்பிற்
குன்றுகண் டன்ன தோன்றல குன்றின்
அருவி யன்ன வுருவுகொ ளோடைய
ஓடைக் கமைந்த சூழிச் சுடர்நுதற்
கோடில வெழுதிய கோலக் கும்பத்
திடுபூந் தாம மிருங்கவு ளசைஇப்

பி - ம். [1] கானத்துக். [2] சுடர்மணிக் கானத்துத்.

படுவண் டோப்பும் பண்ணமை கோலத்து
விண்ணுரு மன்ன வெடிபடு சீற்றத்
தண்ணல் யானை யவையவை தோறும்

(படைவீரர் செயல்)

மேலாட் கமைந்த காலாட் காப்பிற்
கருவிப் பல்படை கடல்கிளர்ந் தெனவுறப்
பரவை யெழுச்சிப் பக்கமு முன்னும்
வெருவரத் தாக்கி வீழ நூறி
நற்றுணைத் தோழ ருற்றுழி யுதவ
அமிழ்தி னன்ன வஞ்சில் கிளவி
மதர்வை நோக்கின் மாதரைத் தழீஇ
ஓங்கிய தோற்றமொ டொருதா னாகி
நீங்கிய மன்னற்கு நிகழ்ந்தது கூறுவேன்
சேரா மன்னனுஞ் சேனையம் பெரும்பதிக்
கோரிரு காவத மூரா மாத்திரம்

(சூரியன் அத்தமித்தல்)

விரிகதிர் பரப்பி வியலகம் விளக்கும்
பரிதி ஞாயிறு பல்லவர் காணின்
அற்றந் தருமென வருள்பெற் றதுபோற்
கொற்ற வெங்கதிர் குளிர்கொளச் சுருக்கிக்
குண்டகன் கிடக்கைக் குடகடற் குளிப்ப

(மாலை வருணனை)

வண்டகத் தடக்கிய வாய வாகிக்
1 கூலப் பொய்கையு ணீலமொடு மலர்ந்த
கோலக் கழுநீர் குழிவாய் நெய்தல்
எழுநீர்க் குவளையொ டின்னவை பிறவும்
தாமரை தலையாத் தன்னகர் வரைப்பகம்
ஏம மாகவிவ ணெய்துவ னென்றுதம்
தூய்மை யுள்ளமொடு கோமகற் கூப்பும்
குறுந்தொடி மகளிர் குவிவிரல் கடுப்ப
நறுந்த ணாற்றம் பொதிந்த நன்மலர்த்
தடங்கயந் துறந்த தன்மைய வாகிக்

பி - ம். 1 கோலப்.

குடம்பை சேர்ந்து குரல்விளி பயிற்றிப்
புட்புலம் புறுத்த புன்கண் மாலை
கட்புல மருங்கிற் கலந்த ஞாயிற்று
வெப்ப நீக்கித் தட்பந் தான்செயக்

(பிடியின் நிலை)

கண்ணுறு பிறங்கற் கருவரை நுனித்தலை
வெண்ணிற வருவி வீழ்ச்சி யேய்ப்ப
மத்தக மருங்கின் மாலையொடு கிடந்த
நித்திலத் தாம நிலையின் வழாமை
வைத்த தலையிற் றாக வலிசிறந்து
வித்தகக் கோலத்து வீழ்ந்த கிழவற்குப்
பத்தினி யாகிய பைந்தொடிப் பணைத்தோட்
டத்தரி நெடுங்கட் டத்தை தம்மிறை
ஆணை [1] யஞ்சிய வசைவுநன் கோம்பிக்
கோணை நீண்மதிற் கொடிக்கோ சம்பி
நகைத்துணை யாய மெதிர்கொள நாளைப்
புகுத்துவ லென்பது புரிந்தது போலப்
பறத்தரல் விசையினும் பண்ணினு மண்மிசை
உறப்புணர்ந் தூரு முதயணன் வலப்புறத்
தறியக் கூறிய செலவிற் றாகிக்
கோடுதல் செல்லாது கோமகன் குறிப்பறிந்
தோடுதல் புரிந்த வுறுபிடி மீமிசைக்
கூந்தலுங் கூந்தல் வேய்ந்த கோதையும்
ஏந்திளங் கொங்கையு மெடுக்க லாற்றாள்
அம்மென் மருங்கு லசைந்தசைந் தாடப்
பொம்மென வுயிர்க்கும் பூநுதற் பாவையைக்
கைம்முதற் றழீஇக் காஞ்சனை யுரைக்கும்

(காஞ்சனையின் கூற்று)

கட்டி லாள ருட்புகன் றுறையும்
நாகத் தன்ன நன்னகர் வரைப்பின்
ஏகத் திகிரி யிருநிலத் திறைவன்
நீப்பருங் காத னிற்பயந் தெடுத்த

பி-ம். 1 அஞ்சியசைவு.

கோப்பெருந் தேவியொடு கூடிமுன் னின்று
பொற்குடம் பொருந்திய பொழியமை மணித்தூண்
நற்பெரும் பந்தருண் முத்துமணற் பரப்பி
நல்லோர் கூறிய நாளமை யமயத்துப்
பல்லோர் காணப் படுப்பிய லமைந்த
செந்தீ யந்தழ லந்தணன் காட்டச்
சேதா நறுநெய் யாசின் றுகுத்துச்
செழுமலர்த் தடக்கையிற் சிறப்பொடு மேற்படக்
கொழுமலர்க் காந்தட் குவிமுகை யன்னநின்
மெல்விரன் மெலிவுகொண் டுள்ளகத் தொடுங்கப்
பிடித்துவலம் வந்து வடுத்தீர் நோன்பொடு
வழுவில் வாலொளி வடமீன் காட்டி
உழுவ லன்பி னுதயண குமரன்
அருமறை யாளர்க் கருநிதி யார்த்திப்
பெருமறை விளங்கப் பெற்றனன் கொள்ளக்
கொடுத்தில னென்பது கூறி னல்லதை
அடுத்தனன் கண்டா யணிமுடி யண்ணல்
வையத் தேனோர் வல்ல ரல்லாத்
தெய்வப் பேரியாழ் கைவயிற் றரீஇ
எழுவியல் கரணம் வழுவிலன் காட்டுநின்
ஆசா னிவனென வருளிய வச்சொற்
றாசார்ந்து துளும்புங் காசுவிரி கலாபத்துப்
பைவிரி யல்குற் பாவாய் மற்றிது
பொய்யுரை யன்றிப் புணர்ந்தன் றதனால்
பொருளெனக் கருதிய மடியுறை கேண்மதி
மருளெனக் கருதிய மடியுறை கேண்மதி

(யானையின் வேகத்தால் தோன்றும்
விம்மிதத்தைத் தெரிவித்தல்)

எண்டிசை மருங்கினு மெதிரெதி ரோடி
மண்டில மதியமொடு கதிர்மீன் மயங்கி
நிலைக்கொண் டியலா வாகித் தம்முள்
தலைக்கொண் டியலுந் தன்மை போலக்
கண்ணகன் மருங்கின் விண்ணகஞ் சுழலும்
மண்ணக மருங்கின் விண்ணுற நீடிய

மலையு மானு நிலையுற னீங்கிக்
கடுகிய விசையொடு காற்றென வுராஅய்
முடுகிய விரும்பிடி முகத்தொடு தாக்கிய
எதிரெழுந்து வருவன போலு மதிரொடு
மண்டிணி யிருநில மன்னுயிர் நடுங்கத்
துளக்க மாறு தாசி னிலைதிரிந்து
கலக்கங் கொண்டு கைவரை நில்லா
[1] தோடுவன போன்ற வாதலின் மற்றுநின்
நீடுமலர்த் தடங்கண் பாடுபிறழ்ந் துறழ
நோக்கல் செல்லா திருவென நுதன்மிசை

(காஞ்சனை செயல்)

வேர்த்துளி துடைத்து வித்தக வீரன்
அருவரை யகலத் தஞ்சுவன ணீட்டித்
திருவளர் சாயலைத் திண்ணிதிற் றழீஇ
உவணப் புள்ளினஞ் சிவணிச் செல்லும்
சிறக ரொலியிற் றிம்மென வொலிக்கும்
பறவை யிரும்பிடிப் பாவடி யோசையின்
அவணை போத லஞ்சி வேய்த்தோள்
வாளரித் தடங்கண் வாலிழை மாதர்
கேள்விச் செவியிற் கிழித்துகிற் பஞ்சி
பன்னிச் செறித்துப் பற்றினை யிருவெனப்
பிடியிடை யொடுங்குங் கொடியிடை மருங்கின்
நோய்கொள லின்றி நொவ்விதிற் கடாவலென்
றுய்புக ழுண்ண லசைதல் செல்லான்

(மருதநில வருணனை)

அங்க ணகல்வய லார்ப்பிசை வெரீஇய
பைங்க ணெருமை படுகன் றோம்பிச்
செருத்தல் செற்றிய தீம்பா லயல
உருவ வன்னமொடு குருகு பார்ப்பெழுப்
பாசடைப் பிலிற்றும் பழனப் படப்பை
அறையுறு கரும்பி னணிமடற் றொடுத்த
நிறையுறு தீந்தே னெய்த்தொடை முதிர்வை

பி - ம். 1 தோடுவதுபோன்றதாதலின்.

உழைக்கவின் றெழுந்த புழற்காற் றாமரைச்
செம்மல ரங்கட் டீயெடுப் பவைபோல்
உண்ணெகிழ்ந் துறைக்குங் கண்ணகன் புறவிற்
பாளைக் கமுகும் பணையும் பழுக்கிய
வாழைக் கானமும் வார்குலைத் தெங்கும்
பலவும் பயினு மிலைவளர் மாவும்
புன்னையுஞ் செருந்தியும் பொன்னிணர் ஞாழ
இன்னவை பிறவு மிடையற வின்றி
இயற்றப் பட்டவை யெரிகதிர் விலக்கிப்
பகலிருள் பயக்கும் படிமத் தாகி
அகல மமைந்த வயிர்மண லடுக்கத்துக்
காஞ்றாய் கணைக்கதிர்ச் சாஞ்றாய் சாலி
வரம்பணி கொண்ட நிரம்பணி நெடுவிடை
உழவ ரொலியுங் களமர் கம்பலும்
வளவய லிடையிடைக் களைகளை கடைசியர்
பதலை யரியல் பாசிலைப் பருகிய
மதலைக் கிளியின் மழலைப் பாடலும்
தண்ணுமை யொலியுந் தடாரிக் கம்பலும்
மண்ணமை முழவின் வயவ ரார்ப்பும்
மடைவாய் திருத்து மள்ளர் சும்மையும்
இடையற வின்றி யிரையாறு தழீஇ
வயற்புலச் சீறா ரயற்புலத் தணுகி
மருதந் தழீஇய மல்லலம் பெருவழி

(உதயணன் அநுட்ட நகரத்தை யணுகுதல்)

ஒருநூற் றிருபத் தோரைந் தெல்லையுள்
வலப்பா லெல்லை வயல்பரந்து கிடந்த
அளற்றுநிலைச் செறுவி னகனிலங் கெழீஇ
இடப்பான் மருங்கிற் பரற்றலை முரம்பிற்
புன்புலந் தழீஇய புகற்சித் தாகி
வன்றொழில் வயவர் வலிகெட வருத்த
[1] படைப்புறக் கிடங்குந் தொடைப்பெரு வாயிலும்
வாயிற் கமைந்த ஞாயிற் புரிசையும்
இட்டமைத் தியற்றிய கட்டளைக் காப்பின்

பி - ம். 1 படைப்புங்.

மட்டுமகிழ் நெஞ்சின் மள்ளர் குழீஇய
[1] அருட்ட நகரத் தல்கூ ணமயத்
தஞ்சொன் மகளி ரடிமிசை யரற்றும்
பைம்பொற் பகுவாய்க் கிண்கிணி யொலியும்
மையணி யிரும்பிடி மணியும் பாடவித்
தெய்தினன் மாதோ விருளிடை மறைந்தென்.

சச—மருதநிலங் கடந்தது முற்றிற்று.

சரு—முல்லைநிலங் கடந்தது.

(வயந்தகன் கூறல்)

இருளிடை மருங்கி னிருநிலந் தழீஇய
அருமதிற் படப்பை யருட்ட நகரகம்
[2] உருள்பட லொற்றி யூடெழுப் போக்கிக்
கருங்கட் பம்பை நெருங்கக் கொட்டி
அழற்படு சீற்றத் தஞ்சுவளி செலவிற்
கழற்கா லிளையர் கலங்காக் காப்பின்
இயற்றப் பட்ட வியற்கை யிற்றென
வயத்தகு நோன்றாள் வயந்தக் குமரன்
ஆழ்கடற் பௌவத் தருங்கல மியக்கும்
[3] நீயான் போல நெஞ்சுணர் மதிப்பினன்
தெய்வப் பேர்யாழ் கைவயி னீக்கி
வீக்குறு புரோசை வாய்ப்பொற் பந்தத்து
யாப்புற வமைத்துக் காப்புறு தொழிலின்
நீர்நிறைக் கொளீஇய தாமரைக் கம்மத்துக்
கூரிலைக் கொலைவாள் வார்மயிர் வட்டத்துச்
சேடக வரணமொ டுடுபட விரைஇ
இறைமகன் கேட்ப விற்றென வுரைக்கும்
துறைவளங் கவினிய நிறைவளப் படுவிற்
செல்வ மருதத் தெல்லையு ளிருந்த
தொல்லருஞ் சிறப்பினிம் மல்லன் மாநகர்
அகப்பட் டியங்குந ரச்ச நீக்கிப்

பி-ம். 1 அட்ட நகரத்து. 2 உருள்பிடல். 3 நீயான்.

புறப்பட் டியங்குநர்ப் புன்கண் செய்யும்
காப்புவினை யுடைத்தே யாப்புற விதனை
இடத்திட் டேகுது மெனினே யெங்கும்
முடத்தாட் டாழை மொய்த்தெழு முழுச்சிறைத்
தோட்டமும் படுவுங் கோட்டகக் கோடும்
பிரம்பெழு [1] பெரும்பா ரடைந்துமிசைச் செற்றிச்
செதும்புபரந் தெங்குஞ் சேற்றிழுக் குடைத்தாய்
வாய்க்கா னிறைந்த போக்கரும் பணையொடு
வரம்பிடை விலங்கி வழங்குதற் கரிதாய்
நிரம்பாச் செலவி னீத்தருஞ் சிறுநெறி
நலத்தகு புகழோய் நடத்தற் காகாது
வலத்திட் டூர்ந்து வழிமுதற் கோடுமென்

(உதயணன் செயல்)

றுரைப்பக் கேட்டே யுதயண குமரன்
குறிவழிக் காட்டிய கொலைத்தொழி னகரம்
அறித லஞ்சி யடியிசை கேட்கும்
எல்லை யகன்று வல்லைமருங் கோட்டி
முதனெறிக் கொண்டு முந்நாற் காவதம்
கதழ்வொடு கடக்குங் காலை யவ்வழி

(வயந்தகன் கூறல்)

ஒருபாற் படாதோ ருள்ளம் போல
இருபாற் பட்ட வியற்கைத் தாகிய
நெறிவயி னேதங் குறிவயிற் காட்டி
[2] வடுவி னண்பின் வயந்தக னுரைக்கும்
இடுகன் முதலன விடவயிற் கிடந்த
தின்னாப் பேர்தே ரியற்கைத் தெண்மதி
ஒன்னா மன்னற் குற்றது செய்யும்
யாப்பி லாளர் காப்பிற் றாகி
ஏற்றமு மிழிவு மிடையிடைப் பல்கி
ஊன நாடு முளவழிச் சில்கி
நீரு நிழலு நீங்கிற் றாகி
வெவ்வினை யாள ரல்லது விழுமிய
செவ்வினை யாளர் சேரா நம்பதிக்

பி - ம். 1 பெரும்பாழ். 2 வடிவினட்பின்.

கணித்து மன்றது மணிப்பூண் மார்ப
வலத்திற் கிடந்த வழிவகை தானே
விளைந்த செலவிற் றுகித் தலைத்தலைக்
கடுஞ்சின வென்றிக் காவ லாடவர்
[1] கொடுஞ்சிநற் றேருங் குதிரையும் யானையும்
காலாட் குழாத்தொடு நால்வகைப் படையும்
ஒருநிரல் செல்லு முள்ளகல் வுடைத்தாய்த்
திருநிலை பெற்றுத் தீயோ ருன்னார்
நருமதை யாறு நாட்டக மப்பால்
வஞ்சர் வாழு மஞ்சுவரு தீநிலத்
தகலிடந் தானும் பகலிடத் தியங்குநர்க்
கின்ப மாகிய வேம வெண்குடை
மன்பெருஞ் சிறப்பின் மண்ணகக் கிழமை
ஒருகோ லோச்சிய திருவார் மார்பநின்
முன்னோர் காலைப் பன்னூல் பயிற்றிய
நல்லிசை நாட்டத் துல்லியன் கண்ட
குளமும் பொய்கையுங் கூவலும் வாவியும்
அளவிறந் தினியவை யசைவிடத் துடைத்தாய்ப்
பயப்பறு பாலை நிலனு மொருபால்
இகக்க லாகா விரண்டினு ளுவப்பதை
ஓட்டுக வல்விரைந் தென்றலி னுதயணன்

(உதயணன் செயல்)

காட்டுப் பெருவழி கடத்தன் மேவான்
நாட்டுப் பெருவழி நணுகக் காட்டிப்
பொருள்வயிற் பிரிவோர் வரவெதி ரேற்கும்
கற்புடை மாதரிற் கதுமென வுராறி
முற்றுநீர் வையக முழுது முவப்பக்
கருவி மாமழை பருவமொ டெதிரப்
பரவைப் பௌவம் பருகுபு நிமிர்ந்து
கொண்மூ விதானந் தண்ணிதிற் கோலித்
திருவிற் [2] றாம முருவுபட நாற்றி
விடுசுடர் மின்னொளி விளக்க மாட்டி
ஆலி வெண்மண லணிபெறத் தூஉய்க்

பி - ம். 1 கொடுஞ்சினத்தேருங். 2 றாம.

கோல வனப்பிற் கோடணை போக்கி
அதிர்குரன் முரசி னதிர்த லானாது
தூநிறத் தண்டுளி தானின்று சொரிந்து
வேனி றுங்கி மேனி வாடிய
மண்ணக மடந்தையை மண்ணுநீ ராட்டி
முல்லைக் கிழத்தி முன்னரு ளெதிரப்
பல்லோர் விரும்பப் பரந்துகண் ணகன்று
பொருள்வயிற் பிரிந்து பொலங்கல வெறுக்கையொ
டருள்வயின் வந்த வின்னுயிர்க் காதலன்
மார்பக மணந்த நேரிழை மடந்தையர்
மருங்குல் போலப் பெருங்கவி [1]னெய்திய

(முல்லைநில வருணனை)

சிறுகொடி யூழூழ் பாப்பி மற்றவர்
முறுவ லரும்பிய முல்லை யயல
குரவுந் தளவுங் குருந்துங் கோடலும்
[2] அரவுகொண் டரும்ப வறுகால் வண்டினம்
அவிழ்பதம் பார்த்து மகிழ்வன [3] முரலக்
கார்வளம் பழுனிக் கவினிய கானத்
தேர்வளம் படுத்த வெல்லைய வாகி
உறங்குபிடித் தடக்கை யொருங்குநிரைத் தவைபோல்
இறங்குகுர லிறடி யிறுங்குகடை நீடிக்
கவைக்கதிர் வரகுங் கார்பயி லெள்ளும்
புகர்ப்பூ வவரையும் பொங்குகுலைப் பயறும்
உழுந்துங் கொள்ளுங் கொழுந்துபடு சணையும்
தோரையுந் துவரையு மாயவும் பிறவும்
அடக்க லாகா விடற்கரு விளையுட்
கொல்லை பயின்று வல்லை யோங்கிய
வரையி னருகா மரையா மடப்பிணை
செருத்தற் றீம்பால் செதும்புபடப் பிலிற்றி
வெண்பூ முசுண்டைப் பைங்குழை மேயச்
சிறுபிணை தழீஇய திரிமருப் பிரலை
செறியிலைக் காயா சிறுபுறத் துறைப்பத்
தடவுநிலைக் கொன்றையொடு பிடவுதலைப் பிணங்கிய

பி - ம். 1 எய்திச். 2 மருக்கொண். 3 மறலக்.

நகைப்பூம் புறவிற் பகற்றுயி லமரா
வரித்தா ரணிந்த விரிப்பூந் தொழுதிப்
புல்லுத லினத்தொடு புகன்றுவிளை யாடும்
பல்லிணர்ப் படப்பைப் படியணை பெருங்கடி
பகர்விலைப் பண்டமொடு பல்லோர் குழீஇ
நகரங் கூஉ நாற்ற நந்திப்
பல்லாப் படுநிரைப் பயம்படு வாழ்க்கைக்
கொல்லைப் பெருங்குடிக் கோவலர் குழீஇய
முல்லைப் பெருந்திணை புல்லுபு கிடந்த
ஐம்பதி னிரட்டியொ டையைந் தெல்லையுள்
மன்பெருஞ் சிறப்பின் மாலை யாமத்துச்
சென்றது மாதோ சிறுபிடி விரைந்தென்.

சசு—முல்லைநிலங் கடந்தது முற்றிற்று.

ருo—குறிஞ்சிநிலங் கடந்தது.

விரைந்தன ளாகிய விறல்கெழு வீரியன்
முகைந்த புறவின் முல்லையம் பெருந்திணை
இகந்த பின்றை யிருபாற் பக்கமும்

(குறிஞ்சிநில வருணனை)

அளப்பரும் படிவத் தான்றோர் போலத்
துளக்க மில்லாத் திருத்தகு நிலைமைய
மதுரம் பொதிந்த மழலையங் கிளவிச்
[1] சதுரச் சந்திச் சமழ்ப்பில் கலாபத்துத்
தொட்டிமை கலந்த தூசுவிரி யல்குற்
பட்டிமை யொழுக்கிற் பலர்தோய் சாயல்
அரம்போ ழவ்வளை மகளிர் மனத்தின்
நிரம்பா நெறியின வாகி யரும்பொருள்
கல்லா மாந்த ருள்ளம் போல
நொய்ந்நுரை சுமந்து மெய்ந்நயந் தெரிந்த
மேலோர் நண்பிற் றூழ விழிதரும்
அருவி யறுஅ வாகலி னயல

பி - ம். 1 சதிரச்.

[1] பருவி வித்திய பைந்தாட் புனந்தோ
ஈரமில் குறவ ரிதண்மிசைப் பொத்திய
ஆரத் துணியொடு காரகில் கழுமிய
கொள்ளிக் கூரெரி வெள்ளி விளக்கிற்
கவரிமா னேறு கண்படை கொள்ளும்
தகரங் கவினிய தண்வரைச் சாரல்
நறையு நாகமு முறையிரு வேரியும்
வருக்கையு மாவும் வழையும் வாழையும்
அருப்பிடை நிவந்த வாசினி மரமும்
பெருஞ்செண் பகமும் பிண்டியும் பிரம்பும்
[2] கருங்கோற் குறிஞ்சியுங் கடிநாள் வேங்கையும்
சுள்ளியுஞ் சூரலும் வள்ளியு மரலும்
வால்வெள் வசம்பும் வள்ளிதழ்க் காந்தளும்
பால்வெண் கோட்டமும் [3] பனிச்சையுந் திலகமும்
வேயும் வெதிரமும் வெட்சியுங் குளவியும்
ஆய்பூந் தில்லையு மணிமா ரோடமும்
ஆரமுஞ் சந்து மகிலுந் தமாலமும்
ஏரில வங்கமு மேலமு மிருப்பையும்
.......................பாய்தலிற் கிழிந்து
பொதிக்க ணிறுஅற் பூம்புறம் புதைஇ
மதிக்கண் மறைந்த மாசுண மான
மணிவரை மருங்கி னணிபெற வொழுகி
முதிர்பூங் காவி னுதிர்தா தளைஇ
மலைவாழ் குறவர் மகளிர் குடையும்
சுனைவாய் நிறைக்குஞ் சூருடைச் சிலம்பிற்
பாடுபெயர்த் தறியாப் பக்கம் பயின்ற
கோடுயர் நிவப்பிற் குளிர்மலை யோங்கி
மாட நிரைத்த மறுகை போல
நிரப்ப மெய்தி முரப்புநிலை முனுது
கல்விற் காட்டிய செல்லற் றாவழிப்
பிண்டி பிணங்கிப் பிலம்புக் கதுபோல்
கண்டவர்க் காயினுங் கடத்தற் காகா
அருமை யெய்திய வரிலமை யாரிடை

பி - ம். 1 பரீஇ வித்திய. 2 கருங்காற். 3 பணிச்சை.

இறும்பம லடுக்கத் தின்றேன் கொளீஇய
பொங்கெரி விளக்கம்.................ம்
ஏனற் பெருந்தினை யேனங் காவலர்
கானற் பெருமரங் கண்ணுற மாட்டி
இருள்பட வோங்கிய வெல்லை வேலிதொறுட்
வெருள்படப் போக்கிய வெண்டீ விளக்கம்
மங்குல் வானத்து மதிநிலா மழுங்கக்
கங்குல் யாமத்துக் கடையற வெழுந்த
கதிரோன் போல வெதிரெதிர் கலாஅய
நறும்பூஞ் சோலை நாற்றங் கமழிய
குறிஞ்சிப் பெருந்திணை குலாஅய்க் கிடந்த
பதிற்றுப் பத்தொடு விதிப்பட வெண்ணிய
ஐயைந் தெல்லையு மரையிரு ணடுநாள்
எய்தி யிகந்தன்று வியற்றமை பிடியென்.

ரு0—குறிஞ்சிநிலங் கடந்தது முற்றிற்று.

ருக—நருமதை கடந்தது.

எய்தி யிகந்த வியற்றமை யிரும்பிடி
கொய்பூங் குறிஞ்சிக் கொழுநிலங் கைவிட்
டைந்நான் கெல்லையொ டாறைந் தகன்றபின்

(நருமதை வருணனை)

மதிய முரைஞ்சு மால்வரைச் சென்னிப்
பொதியவிழ் பூமரம் பொதுளிய சோலை
அகலத் தெல்லையு மாழ்ச்சிய தந்தமும்
உயர்பி னோக்கமு முணர்த்தற் காகா
விஞ்சையம் பெருமலை நெஞ்சகம் பிளந்து
கல்லுட் பிறந்த கழுவாக் கதிர்மணி
மண்ணுட் பிறந்த மாசறு பசும்பொன்
வேயுட் பிறந்த வாய்கதிர் முத்தம்
வெதிரிற் பிறந்த பொதியவி ழருநெல்
மருப்பினுட் பிறந்த மண்ணு முத்தம்
வரையிற் பிறந்த வயிரமொடு வரன்றி

நுரையுட் பிறந்த நொ......லாடை
முடந்தாட் பலவின் குடம்புரை யமிழ்தமும்
நெடுந்தாண் மாவி னெய்படு கனியும்
கருந்தாள் வாழைப் பெருங்குலைப் பழனும்
பெருந்தேன் றொடையலும் விரைந்துகொண் டளைஇ
நறவஞ் சாரற் குறவர் பரீஇய
ஐவன நெல்லுங் கைவளர் கரும்பும்
கருந்தினைக் குரலும் பெருந்தினைப் பிறங்கலும்
பாவை யிஞ்சியுங் கூவைச் சுண்ணமும்
நாகத் தல்லியு மேலத் திணரும்
கட்சா லேகமு முட்கா ழகிலும்
குங்குமத் தாதும் பைங்கறிப் பழனும்
கிழங்கு மஞ்சளுங் கொழுங்காற் றகரமும்
கடுப்படு கனியுங் காழ்த்திப் பிலியும்
சிற்றிலை நெல்லிச் சிறுகாய்த் துணரும்
அரக்கின் கோலொ டன்னவை பிறவும்
ஒருப்படுத் தொழியாது விருப்பி னேந்தி
மலைவயிற் பிறந்த மாண்புறு பெருங்கலம்
நிலைவயின் வாழ்நர்க்குத் தலைவயி னுய்க்கும்
பகர்விலை மாந்தரி னுகர்பொரு ளடக்கிப்
பன்மலைப் பிறந்த தண்ணிற வருவிய
அமலை யருங்கல மடக்குபு தழீஇத்
தன்னிற் கூட்டிய தானைச் செல்வமொ
டிருகரை மருங்கினும் பெருகுபு தழீஇ

(மரங்கள்)

அணிக்குருக் கத்தியு மதிரலு மனுக்கி
மணிச்சையு மயிலையு மௌவலு மயக்கி
ஞாழலும் புன்னையும் வீழ நூக்கிக்
குருந்துங் கொன்றையும் வருந்த வணக்கித்
தடவும் [1]பிடவுந் தாழச் சாய்த்து
முளவு முருக்கு முருங்க வொற்றி
மாவும் மருதும் வேரறப் புய்த்துச்
சேவுங் குரவுஞ் சினைபிளந் தலைந்து

பி - ம். 1 பிளவுர்.

நறையு நாகமு முறைநடு முருக்கி
வழையும் வாழையுங் கழையுங் கால்கீண்
டாலு மரசுங் காலொடு துளக்கிப்
புன்கு நாவலும் புரள வெற்றிக்
கொங்கார் கோடலொடு [1] கொய்யல் குழைஇ
அனிச்சமு மசோகமு மடர வலைத்துப்
பனிச்சையும் பயினும் பறியப் பாய்ந்து
வள்ளியு மாலுந் தன்வழி வணக்கிப்

(விலங்கு முதலியன)

[2] புள்ளி மானும் புல்வாய்த் தொகுதியும்
ஆமா வினமுந் தாமா றோடி
இடைப்புனற் பட்டவை யுடைப்புனற் கிவரப்
பொறிமயிற் பேடை போத்தொடு புலம்ப
எறிமயி ரேனமொ டெண்கின மிரியக்
குரங்கு முசுவு மரந்தொறும் வாவச்
சுரும்புந் தும்பியும் விரும்புபு விரைய
அகத்துறை பல்லுயி ரச்ச மெய்தப்
புறத்துறை பல்லுயிர் புகன்றுவிளை யாடப்
படிவப் பள்ளியொடு பாக்கங் கவர்ந்து
குடிகெழு வளநாடு கொள்ளை கொண்டு
கவ்வை யோதங் கால்கிளர்ந் துராஅய்ப்
பௌவம் புகூஉம் படர்ச்சித் தாகிக்
கருங்காற் குருகுங் கம்புளுங் கழுமிப்
பெரும்பூட் பூணியும் பேழ்வாய்க் கொக்கும்
குளிவையும் புதாவுந் தெளிகயக் கோழியும்
அன்றிலு நாரையுந் துன்றுபு கெழீஇ
வாளையும் வராலு நாளிரை யாக
அயிரையும் பிறவு மல்கிரை யமைத்துப்
பறவைப் பார்ப்பினஞ் சிறுமீன் செகுத்து
வார்மண லடைகரைப் பார்வலொடு வதியும்
சும்மை யறாஅத் தன்மைத் தாகிக்
கயம்பல கெழீஇ யியங்குதுறை சில்கிப்

பி - ம். 1 கொய்தழை, கொய்தல். 2 புள்ளியும்.

பெருமத யானையொடு பிடியினம் பிளிற்றும்
நருமதைப் பேர்யாறு நண்ணிய பொழுதில்

(வயந்தகன் வழிகாட்டல்)

தலைப்பெருந் தண்புன றன்வந் தன்றென
நிலைப்பரு நீணீர் நீத்திற் றாகி
மாக்கடல் வரைப்பின் மன்னுயிர்க் கியன்ற
ஆக்கமுங் கேடுஞ் [1] சாற்றிய தொப்ப
வலமலர்ப் பைந்தார் வயந்தக னிழிதந்
திளமணற் படாஅ தியங்குதுறை நோக்கிக்
கானிலை கொள்வழித் [2] தானிலை காட்ட

(உதயணன் செயல்)

அரிமதர் மழைக்க ணனந்த ரெய்திய
திருமா மேனியைத் திண்ணிதிற் றழீஇச்
செல்விசை கதுமெனச் சுருக்கி மெல்லென
வரையே றரிமாப் போல மற்றதன்
கரையே றினனாற் கார்நீர் கடந்தென்.

ருக—நருமதை கடந்தது முற்றிற்று.

ருஉ—பாலைநிலங் கடந்தது.

(வயந்தகன் செயல்)

கார்நீர் நருமதைக் கரையகங் கடந்தபின்
வார்நீர் துடைத்து வயந்தக னேறி
வானக நாண்மீன் றான நோக்கி
ஆற்றின தளவு மாரிரு ளெல்லையும்
ஏற்றமை யிரும்பிடி யியக்கமு மெண்ணி

(துர்க்கையின் கோயில்)

அரநுதி யன்ன பரன்முரம் படுக்கத்துச்
சுரமுத லடைந்த சூழகன் புரிசைப்
பாழ்நில வாழ்நர் பரவினர் தூஉம்
செந்தடிக் குருதிப் பைங்கிணக் கொழுங்குடர்
எண்டிசை மருங்கினுங் கொண்டவ ரெடுத்த

பி - ம். 1 சாற்றியதிகப்ப. 2 தானிலைஇக்.

வேர்முத லூசல் வேம்பின் சினைதொறும்
கண்பா டவிந்த கருமணிப் பிறங்கலொ
டுழைக்கோ டணிந்து பீலி நாற்றிக்
கழைக்கோற் றொடுத்த கதலிகை நுடங்கச்
செறிதோற் பரமு மெறிகோல் வாளும்
அப்புப் புதையு மணிவரிச் சிலையும்
செப்புறச் செய்த செல்வ முன்றிற்
........................றிகழ்மதி முகத்தி
[1] எண்வகைப் பொலிந்த வொண்படைத் தடக்கைக்
கச்சார் வனமுலைக் கண்மணிக் கொடும்பூட்
பச்சைப் பாற்கிளி பவழச் செவ்வாய்
முத்தேர் முறுவன் முயங்குகயற் றடங்கட
சிலையேர் புருவச் செங்கட் செல்வி
கலைகா முறுவி நிலைகா முற்ற
கற்சிறைக் கோட்டத்து நற்சிறை யொடுங்கி

(வழியிலுள்ளவை)

வில்லே ருழவர் செல்சாத் தெறிந்துழி
நல்லாப் படுத்த [2] நடுக லுழலையும்
ஆளிடு பதுக்கையு மரில்பிணங் கடுக்கமும்
தாளிடு குழியுந் தலைகரந் தியாத்த
புல்லும் பொள்ளலும் வெள்ளிடைக் [3] களரும்
நீரில் யாறு நிரம்பா நிலனும்
ஊரில் காடு மூழடி முட்டமும்
வறுஞ்சுனைப் பரவையுங் குறும்பாற் குன்றமும்
இயற்கையி னமைந்தவுஞ் செயற்கையிற் சிறந்தவும்
ஒன்றுகண் டவைபோற் சென்றுலப் பரிதாய்த்
தட்பக் காலத்தும் வெப்ப மாறா

(மரங்கள்)

தோமையு முழிஞ்சிலு முலவையு முகாயும்
கடுவுந் தான்றியுங் கொடுமுட் டொடரியும்
அரவு மரசு மாரு மாத்தியும்
இரவு மிண்டுங் குரவுங் கோங்கும்
கள்ளியுங் கடம்பு முள்ளியு முருக்கும்

பி - ம். 1 எண்கைப். 2 நடுகனு. 3 கிளரும்.

தணக்கும் பலாசுங் கணைக்கான் ஞெமையும்
ஈங்கையு மிலவுந் தேங்காய் நெல்லியும்
வாகையும் பிறவும் வன்மர மொடுங்கித்
தோகையுங் குயிலுந் துன்னல் செல்லா

(புறவின் செயல்)

நுண்பொறிப் புறவின் செங்காற் சேவல்
வெண்சிறைப் பெடையொடு விளையாட்டு விரும்பி
வன்பர லார்ந்த வயிற்ற வாகிக்
[1] கண்பொரி கள்ளிக் கவர்சினை யேறிக்
கூப்பிடு குரலிசை சேட்புலத் திசைப்பவும்

(விலங்கு முதலியவற்றின் செயல்)

கானப் பன்றித் தோன்முலைப் பிணவல்
குரங்குநடைக் களிற்றொடு திரங்குமாற் சுவைத்து
நீர்நசைக் [2]கெள்கித் தேர்மருங் கோடவும்
உள்ளழ லுருஅ தொள்ளழ லன்ன
செம்முக மந்தி கைம்மகத் தழீஇப்
பைங்குழைப் பிரச மங்கையி னக்க
நொதுமற் கடுவ னதுகண் டாற்றாது
காஞ்சிரங் கவர்கோற் கவின்பெறத் தொடுத்த
[3] தண்டே னூட்டித் தாகந் தணிப்பவும்
வெங்கற் சாரல் வேய்விண் டுதிர்த்த
அங்கதிர் முத்த மணிமழைத் துளியெனக்
காட்டுக் கோழிச் சூட்டுத்தலைச் சேவல்
குத்த லாற்றது தத்துற்றுத் தளரவும்
கயந்தலை தழீஇய கறையடி யிரும்பிடி
நயந்தலை நீங்கிய நாரின் முருங்கை
வெண்பூங் கவள முணைஇ நெல்லிப்
பைங்கா யமிழ்தம் பல்வயி னடக்கி
ஆறுசெல் வம்பலர் சேறுகிளைத் திட்ட
உவலைக் கேணி யவலடுத் துலாவவும்
செந்தளி ரிருப்பைப் பைந்துணர் வான்பூத்
தீஞ்சுவை நசைஇய தூங்குசிறை வாவல்
கல்லெனத் துவன்றிப் பல்வயிற் பறப்பவும்

பி - ம். 1 கண்பொறிக். 2 கிளகி. 3 தீந்தேனூட்டி.

இன்னவை பிறவும் வெம்மையின் வருந்தி
நடப்பவும் பறப்பவு மிடுக்க ணெய்தி
வேட்டச் செந்நாய் வேண்டா தொழிந்த
காட்டுமா வல்சியர் கரந்தை பாழ்பட
வெட்சி மிலைச்சிய வில்லுறு வாழ்க்கைச்
சிறுபுல் லாளர் சீறூர்க் கியங்கும்
கற்குவி புல்லதர் பற்பல பயின்று
பாலை தழீஇய பயனறு பெருவழி
நீடிரு ளல்லது நீந்துத லரிதெனத்

(யாழ் விழுதல்)

[1] எதிர்மலர்ப் பைந்தா ரேயர் பெருமகன்
[2] அதிர்கயம் விட்ட காலை யவ்வழி
ஆய்ந்த கோலத் தமரும் விழையும்
தீந்தொடைப் பேரியாழ் திவவொடு [3] கொளீஇ
யாப்புறு புரிஞாண் வீக்குமுத லவிழ
ஓர்ப்பில் காலை யுதயண குமரனை
நீப்பிட மிதுவென நினைப்பது போலப்
பஞ்சுரம் பழுனிய பண்முறை நிற்ப
வெஞ்சுரக் கான்யாற்று வேயொடு பிணங்கிக்
கொய்தகை பொதும்பர்க் கையகன் றொழிய
வலிகெழு வயந்தகன் வத்தவ நின்யாழ்
நிலமிசை வீழ்ந்தது நிற்கநின் பிடியென
நலமிகு புகழோய் நாலிரு நூற்றுவிற்
சென்றது கடிதினிச் செய்திற னிதன்மாட்
டொன்று மில்லை யுறுதி வேண்டின்
தந்த தெய்வந் தானே தருமெனப்
பின்னிலை வலித்து முன்னிலை கூறிய
இன்னுப் போகுதற் காகும் பொழுதெனத்
துன்னார்க் கடந்தோன் றுன்றக் கூறிப்
பறந்துசெல் வதுபோற் சிறந்தவன் கடாவலின்

(பிடி மெலிவடைதல்)

மன்பெருஞ் சிறப்பின் மாத்தா ளிரும்பிடி
எண்பதி னெல்லை யோடிக் கண்சுழன்

பி - ம். 1 எதிர்மலைப், 2 அதிசயம், 3 கொளீஇய

21006

றுதிரப் புள்ளி [1]யூழூழ் வீழ்தரப்
பொதியவிழ் முட்டையிற் புறப்படத் தோன்றி
இறுதி யிடும்பை யெய்துபு மறுகித்
தாழ்ந்த கையிற் றுகித் தலைபணிந்
தாழ்ந்து செலவின் றுட்டந் தோன்ற
இன்னுயி ரின்னே விடுமிதற் கின்றென
மன்னுயிர் காவலன் மனத்தி னெண்ணி
யானை வித்தக னுதலி [2]னழனிலத்
தேனை நின்ற விருபதி னெல்லையும்
எய்துவ னென்னுஞ் சிந்தையன் வெய்துற்
றேரலர் தாரோ னுற்றலி னூர்தரக்
கோலக் குமரன் குறிப்புவரை நில்லாது
காலக் [3]கரணத்துக் கடும்பிணி கனற்ற
ஊன்றதர்ந் திழிந்த வுதிர வெம்புனல்
தான்புறப் பட்டுத் தாங்குதற் கரிதாய்
வாயிற் கூறி யாங்கு மற்றுத்தன்
நோயின் கடுமை நூக்குபு நலிய
என்னுயிர் விடுவ லிழிந்தனை யாகி
நின்னுயிர்க் கேம மறிந்தனை நீங்கென
வடுத்தீர் பெரும்புகழ் வத்தவ னிறைவனை
விடுப்பது போல நடுக்க மெய்திய
மெய்யிற் கூறிக் கைவரை நில்லாது
வெந்நோய் முடுக வேற்றவ னுடிறந்
தைந்நூற் றெல்லையு ளசைந்ததாற் பிடியென்.

ருஉ—பாலைநிலங் கடந்தது முற்றிற்று.

ருங—பிடிவீழ்ந்தது.

(உதயணன் செயல்)

அசைந்த விரும்பிடி யற்ற நோக்கி
வயந்தக குமரற்கு வத்தவ னுரைக்கும்
[4] நொப்புணை வலியா நுரைநீர்ப் புக்கோற்

பி - ம். 1 யூரூர். 2 னயனிலத். 3 கூடத்துக். 4 நொய்ப்புணை

கப்புணை யவல்வயி னவன்கை தீர்ந்தாங்
கவந்தியர் கோமா னருண்முந் துறீஇப்
பை........க கொலைப்பாற் படவகுத் தீந்த
[1] அரும்பிடி நம்மை யாற்றறுத் தன்றாற்
கரும்படு தீஞ்சொற் காஞ்சனை [2] யெழீஇ
அவர பக்கம் விரைவனை யிழிகெனக்
கவர்கணை நோன்சிலை கைவயி னடக்கி
வருத்தமுற் றலமரும் வாளரித் தடங்கட்
டிருத்தகு தாமரைத் திருப்புக்குத் திளைக்கும்
அருவரை யகலத் தணிபெறத் தழீஇக்
கருவரை மிசைநின் றிருநிலத் திழிதரும்
உமையொடு புணர்ந்த விமையா நாட்டத்துக்
கண்ணணங் கவிரொளிக் கடவுள் போல
மத்தக மருங்கிற் றத்துவன னிழிதர

(பிடி வீழ்தல்)

மருங்குற மண்மிசை வீழின் மற்றென்
இரும்புறத் [3] திருந்தோர்க் கேதமென் றெண்ணி
மல்குநீ ருடுக்கை மண்ணக மடந்தையைப்
புல்லிக் கோடல் புரிந்தது போலப்
பாவடி நிலனுறப் பரப்பி யுதயணன்
சேவடி தலைபுறச் செய்தது பொறுவென
வணக்கஞ் செய்வது போல மற்றுத்தன்
அணிக்கேழ்ப் பொறிச்செவி யாட லாற்றாது
செங்கேழ்த் துருத்தியி னங்காந் துயிர்த்தொறும்
பைசொரி பவழம் போலப் படிதாழ்
கைசொரி யுதிரங் கான்றுவந் திழிதர

(உதயணன் செயல்)

வீழ்ந்த வாறுமது நோக்கிய திசையும்
தேர்ந்த நூல்வழித் திண்ணி தாகலின்
அந்நிலை யெய்து மிடுக்கணும் பின்னிலைத்
தன்னிலந் தழூஉதலுந் தான்வலிப் பெய்தி
மணியும் புரோசையு மணிபூண் டவிசும்

பி - ம். 1 இரும்பிடி. 2 தழீஇ. 3 திழிந்தோர்க்கு.

கடித்தக முட்பட வெடுத்தனன் களைஇ
இன்னுயி ரினிவிடு மிதனுக் கின்றென
மன்னுயிர் காவலன் மனத்தி னெண்ணித்
துன்னிய தோழற்குத் தோன்றக் கூறி
வத்தவ ரிறைவன் மத்தகம் பொருந்திக்
குளிர்ப்பத் தைவந் தளித்த லானும்
இறுதிக் காலத் துறுதி யாகிய
ஓம்படைக் கிளவி பாங்குறப் பயிற்றிச்
செல்கதி மந்திரஞ் செவியிற் செப்பி
எம்மை யிடுக்க ணிம்மை தீர்த்தோய்
வரும்பிறப் பெம்மோ [1] டொருங்கா கியரெனச்
செந்தா மரைக்கண் டெண்பனி யுறைப்ப
நிறுத்த லாற்று [2] நெஞ்சினிகழ் கவற்சியன்
மறுத்து முதயணன் வயந்தகற் குரைக்கும்
பெறற்கரும் பேர்யாழ் கைவயிற் பிரிந்ததும்
இயற்றமை யிரும்பிடி யின்னுயி ரிறுதியும்
எள்ளு மாந்தர்க் கின்ப மாக்கி
உள்ளு தோறு முள்ளஞ் சுடுதலிற்
கவற்சியிற் கையற னீக்கி முயற்சியிற்
குண்டுதுறை யிடுமணற் கோடுற வழுந்திய
பண்டிதுறை யேற்றும் [3] பகட்டிணை போல
இருவே மிவ்விடர் நீக்குதற் கியைந்தனம்
திருவேர் சாயலைத் தேமொழித் துவர்வாய்க்
காஞ்சன மாலையொடு கண்படை கொளீஇக்
காவ லோம்பெனக் காவல னருளிக்
கவர்கணை நோன்சிலை கைவயி னீட்டி
[4] அரணக் கூர்வா ளசைத்த தானையன்
[5] கரணச் சேடகங் கைவயி னடக்கி
விச்சையின் மெலிந்துதன் விழுத்தகு நகரிழந்
தச்சமொ டொளித்த வணித்தகு பேரொளிக்
கோலக் குமரன் போலத் தோன்றி
மடப்பிடி தனக்கு மாக்கடன் கழியா

பி - ம். 1 டொருங்காதியர். 2 நெஞ்சினிகழ் வகற்சியின். 3 பகட்டிணைப். 4 யாணர்க். 5 காணச்.

தியங்குத லிலக்கண மிறைமகற் கின்மையிற்
செய்வது துணியுஞ் சிந்தைச் சூழ்ச்சியன்
வெவ்வழி நிலமிசை வில்லைப் பாட்டிடை
எவ்வெம் மருங்கினுந் [1] தெரிவோ னவ்வழி
நல்காக் [2] கரவ னடுவன் மேல்வர
ஒல்காத் தவமிலா தொளித்தது போலக்
குண்டுசுனை யடுக்கத்துக் கொழுங்கனி வீழ்ச்சிப்
பண்ணமை படைச்சுவர்க் கண்ணகன் றமைந்து
நாற்பெரு வாயி லேற்ப வியற்றிக்
கற்படை யமைத்துக் [3]கடுமழை மறப்பினும்
உட்படு நீரோ டூற்றுடைத் தாகி
[4] வாசற வறியா வளப்பருங் குட்டத்துப்
பாசடைத் தாமரை யாம்பலொடு பயின்று
புட்புகன் றுறையுமோர் பூம்பொக் கரணியை
முற்படக் கண்டே முகனம ருவகையன்
விளக்குறு வெள்ளி முளைத்துமுன் றோன்ற
வடக மீக்கோள் வாளொடு களைந்ததன்
படுகரை மருங்கிற் பாங்குற வைத்து
வருதிரை புகூஉம் வருணன் போல
இருகரை மருங்கினும் புள்ளெழுந் தியம்பத்
தெளித்தலைத் தண்ணீர் குளித்தன னாடி
வாய்மைக் கொத்த வாய்ப்பூச் சியற்றித்
தூய்மைக் கொத்த தொழில னாகி
அரும்படைத் தானை யாசூர்ந் தியற்றிய
இரும்பிடி யினிதுழி யேறுக சென்றெனப்
போர்க்கடம் பூண்ட பொருவலித் தடக்கையின்
நீர்க்கட னாற்றிய நியமக் கிரிகையன்
பூம்போ தணிந்த [5] வாங்குகரை மருங்கின்
வழிபடு தெய்வம் வணங்குவன னேத்திக்
கழிபிடி வலங்கொண் டொழிவிடத் தொழிந்து
துணைபிரிந் தனைய னிணைபிரி மகன்றிலிற்
போத லாற்றான் காதலிற் கழுமிப்

பி - ம். 1 தெரிவோற்கவ்வழி. 2 காலை நடுவன். 3 கடுமுறை, கடுமறை. 4 யாசறவறியா. 5 வாய்க்கரைமருங்கின.

பிடிக்க ணின்ற பேரன் பாஞன்
வடிக்கண் மாதர் வருத்த மோம்பிப
பகலிடத் தற்றம் படாமை யிருக்கும்
அகலிட மறித லருமை யுடைத்தெனத்
தாழிற் ருழ்ந்து சூழிற் சூழியல்
அந்த ணாளனெடு மந்திரம் விரும்ப
வஞ்சமி னண்பின் வயந்தக னுரைக்கும்

(வயந்தகன் கூற்று)

நஞ்சம் பொதிந்து நமக்கும் பிறர்க்கும்
அஞ்சல் செல்லா வரணகம் வலித்துக்
காட்டகத் துறையுங் கடுவினை வாழ்க்கை
வேட்டுவர் பயின்ற விடமற் றிந்நிலம்
நாட்டுச் சந்தி நாமிவ ணீந்தி
ஒன்றிரு காவதஞ் சென்ற பின்றைக்
குன்றகச் சாரற் குறும்புபல வடக்கிநம்
வன்ரு ளிளையர் வாழ்பதிக் கியங்கும்
வழியது வகையுந் தெரிவழிக் குறையும்
திகைத்திலே ஞதன் மதிக்குமென் மனனே
மடத்தகை மாதர் வருந்தினு நாமிவட்
கடப்பது கருமம் காவல வருளென

(உதயணன் செயல்)

வாளொடு கேடகம் வயந்தகற் கீத்துக்
கோலொடுங் கொடுஞ்சிலை கோமகன் கொண்டு
பள்ளி கொண்ட வள்ளியஞ் சாயற்
கற்பொடு புணர்வியைக் காஞ்சன மாலாய்
நற்பொரு ளிதுவென நன்கன மெடுப்பி
நடக்கல் வேண்டு நாமிவ ணீங்கி
இடுக்க ணில்லா விடம்புகு மளவென
உற்றவ னுரைத்த வுறுதி மாற்றம்

(காஞ்சனைசெயல்)

பொற்ருர் வேந்தன் பூங்கொடிப் பாவையைச்
செவ்விதிற் றேர்ந்து கைவிரல் கூப்பித்
தோழி காஞ்சனை தோன்றக் கூறிக்

(வாசவதத்தையின் நிலை)

காழில் பஞ்சி [1]யூழறிந் தாற்றி
விரற்கொண் டமைத்து வித்தக ரூட்டிய
அரத்த வடர்மையு மரந்தோய்ந் தென்ன
நோய்கொண்டு கறுக்கு மாய்மலர்ச் சேவடி
ஏழடி யிடுத லாற்றா தாயினும்
ஊர்திரைப் பௌவ முலாவு மூக்கமொடு
பூமலர்க் கோதையும் பொறையென வசைவோள்
மாமலை தாங்கு மதுகையள் போல
இன்பக் காதலற் கேத மஞ்சிப்
பொன்புனை பாவையும் போகுதல் வலிப்பக்
கொடிப்படை கோமக னாகக் கூழை
வடுத்தீர் வயந்தகன் வாள்வலம் பிடித்துக்
கடித்தகப் பூம்படை கைவயி னடக்கிக்
காவல் கொண்ட கருத்தின னாகப்
புரிசைச் சுற்றங் காஞ்சனை யாக
உரிமைக் கொத்த திருமா மேனியைப்
புன்புலர் விடியற் புறம்பனி யொழுகிய
அம்புத லதர்வை யணிநடைக் [2]கியலிய
வனப்பொடு புணரிய வடகப் போர்வையை
மணிப்பூண் வனமுலை யிடைக்கரை புதைஇப்
பைந்தொடிப் பணைத்தோள் பைய வீசி
அஞ்செந் தாமரை யகவித ழன்ன
சில்லரித் தடங்கண் மெல்லென மிளிர
மானின் மடப்பெடை மம்ம ரெய்த
வேனிற் காலத்துத் தான நோக்கி
மணிக்கட் பீலி மாமயிற் பேடை
அணிக்கவின் மென்னடை யனுக்க வசைந்தசைந்
தியலா நின்ற காலை வியலிடத்
தெல்லை யாரிரு ளல்வினை முன்னர்ப்
பாவம் போலப் பறைந்துகை யகலக்
கோவத் தன்ன குழவிக் கோலமொடு
குணமலைப் பிறந்து குடவரை நிமிர்ந்து

பி ம். 1 யூழறிந்தூட்டி. 2 கிகலிய.

கனல்கதிர் கான்று கடுமை கூராத்
தனிக்காற் றேரோன் றனிமை யெய்த
அனித்த மிதிப்பினும் பனித்த லாறு
ஒளிச்செஞ் சீறடி யுருக்காக் கேய்ப்ப
உளித்தலை வெம்பர லூன்றுபு நலியப்
பவளக் கொப்புளம் பக்கம் பயிலத்
தவளைக் கிண்கிணி தாங்குத லாற்று
திவள திடுக்க ணிசைத்தும் யாமெனத்
ததும்புகுரற் பூச லிரங்குவன வொலிப்ப

(உதயணன் கூற்று)

மணங்கமழ் நறுந்தார் மன்ன குமரன்
வயந்தகற் குரைக்கும் வாலிழை வருந்தினள்
இயங்குதல் செல்லா திருக்குமிடங் காணெனக்

(வயந்தகன் செயல்)

கார்ப்பூ நீலங் கவினிய கலித்துறை
நீர்ப்பூம் பொய்கை நெறியிற் கண்டதன்
படுகரை மருங்கிற் படர்புறம் வளைஇக்
கன்முரம் படுத்துக் [1]கவடுகா ழூழ்ந்து
புள்ளினம் புகலினும் புகற்கரி தாகி
ஒள்ளெரி யெழுந்த வூழ்படு கொழுமலர்
முள்ளரை யிலவத்துண் முழையரண் முன்னி
முள்ளங் கோடு மூழிலைப் பிறங்கலும்
வள்ளிலை வாடலும் வயந்தகன் களைந்து
பாய லமைத்த பாசடைப் பள்ளியுள்
ஆய்வளைத் தோளியை யமர்துயில் கொளீஇத்
தடம்பெரும் பொய்கை தண்ணிழல் வலியா
ஒடுங்கினர் மாதோ கடும்பகல் கரந்தென்.

ருந.—பிடிவீழ்ந்தது முற்றிற்று.

பி - ம். 1 கவறு.

௫௪—வயந்தகனகன்றது.

(அந்தி வருதல்)

இரந்தன ரொடுங்கிய கடும்பகல் கழிந்தபின்
பரந்த வானம் பசலை யெய்த
அழலுமிழ் கதிரோ னத்தஞ் சேர
நிழலுமிழ் செல்வ னிலாவிரித் திமைப்ப
வான்றோ யிஞ்சி வளநகர் வரைப்பில்
தேன்றோய் கோதைத் திருநிலை மகளிர்
வெள்ளி விளக்கத் துள்ளிழு துறீஇப்
பள்ளி மாடத்துப் பரூஉச்சுடர் கொளீஇக்
காடி கலந்த கோடிக் கலிங்கம்
கழும வூட்டுங் காழகி னறும்புகை
முழுநிலா மாடத்து முடிமுத றடவக்
கேள்வித்துறை போகி வேள்வி முற்றிய
அந்த ணாளர் தந்தொழி றொடங்கப்
பால்வெண் குருகின் பன்மயிர்ச் சேவல்
பூம்பொறிப் பெடையைப் புல்வி யுணர்த்திப்
பொறிப்பூம் பள்ளி புகாஅ தயல
மதிதோய் மாடத்து மழலையம் புறவொடு
வெள்ளிவெண் மாடத்துப் பள்ளி கொள்ளும்
பசும்பொ னகரமர் விசும்புபூத் ததுபோல்
செழுஞ்சுடர் விளங்குஞ் சிறுபுன் மாலை
வையெயிற்றுத் துவர்வாய் வாசவ தத்தைதன்
தார்ப்பூண் மார்பிற் றந்தை [1]கடிமனைச்
சீர்ப்பூண் களைந்த சில்லென் கோலமொடு
நிலாவெண் முற்றத் துலாவி யாடிச்
செம்முது செவிலியர் கைம்முதற் றழீஇய
சாலி வாலவிழ் பாலொடு கலந்த
தமனிய வள்ளத் தமிழ்த மயிலாள்
யானையும் புலியுங் [2] கூனற் காடியும்
அரிமா னேறு நரிமான் சூழ்ச்சியும்
........வுங் காட்டமொ டெனையவை பிறவும்

பி - ம். 1 கடிமணச். 2 கானற்.

தந்துரைக் கிளவியிற் றந்துறை முடித்த
தன்னிணை யாயம் பன்ஞெடி பகரச்
செவியிற் கேட்குஞ் செல்வஞ் செய்யாது
நண்ணிய தோழியொடு கண்ணிற் காணக்
கலவ மஞ்ஞை கவர்குரல் பயிற்றி
இலவங் கொம்புதோ றிறைகொண் 1 டீண்டப்
பொறிவரி யிரும்புலிப் போத்துநனி வெரீஇ
மறியுடன் றழீஇய மடமா னம்பிணை
துள்ளுநடை யிரலையொடு வெள்ளிடைக் குழுமப்
பிடிக்கணந் தழீஇய பெருங்கை யானை
இடிக்குர லியம்பி யெவ்வழி மருங்கினும்
நீர்வழிக் கணவரு நெடுங்கைய வாகிக்
காரிரு முகிலிற் கானம் பரம்பச்
செழுநீர்ப் பொய்கையுட் கொழுமலர் கூம்பப்
புள்ளினங் குடம்பை சேரப் புல்லென
அம்புறு புண்ணி னந்திவந் திறுப்ப

(வயந்தகன் கூற்று)

ஓங்கிய பெரும்புக ழுருமண் ணுவாவுறை
தேங்கமழ் திருநகர்த் திசையு மெல்லையும்
ஆற்ற றிடரு மவ்வழி யுள்ள
பொல்லாக் குறும்பும் போகுதற் கருமையின்
காலை நீங்கிய மாலை யாமத்துப்
பணிப்பூங் கோதையொடு தனித்தன மியங்கின்
அற்றந் தரூஉமஃ தமைச்சிழுக் குடைத்தென
உற்ற தோழ னுதயணற் குரைக்கும்
கொடியணி நெடுமதிற் கொற்றவன் மடமகள்
பிடிமிசை யிருந்து பெருங்கவின் வாடி
வருத்த மெய்திய வண்ணமும் வழிநடந்
தரத்த மார்ந்த வஞ்செஞ் சீறடி
கோவத் தன்ன கொப்புளங் கூர்ந்து
நோவ வொல்கி நொசிந்த மருங்குலள்
அமிழ்துற முடிசி லயிலா வசைவொடு

பி - ம். 1 டீண்டிப்.

நவைகொண் டழிந்து நடுக்க மெய்தித்
தாங்க லாற்று டளர்தலு மாங்கே
உலைவில் பெரும்புகழ் யூகி யொட்டார்
நிலவரை நிமிர்வுறு நீதி நிறீஇக்
கூற்றுறழ் மொய்ம்பி னேற்றுப்பெய ரண்ணல்
பரந்த படையோ டிருந்தினி துறையும்
புகலரும் புரிசைப் பொருவில் புட்பகம்
இருளிடை யெய்திப் பொருபடை தொகுத்துக்
காலை வருவேன் காவ லோம்பிப்
போகல் செல்லாது புரவல விருவென
உள்ளத் துள்பொரு ளுணர்ந்தோன் போல
வள்ளிதழ் நறுந்தார் வயந்தக னுரைத்த
மாற்றங் கேட்டே மன்னவன் மனமுவந்

(உதயணன் கூற்று)

திற்றுங் கேளென மற்றவற் குரைக்கும்
கொடியணி நெடுமதிற் கொடிக்கோ சம்பிப்
படியணி நெடுங்கடைப் பகலங் காடியுள்
ஊறுகளி யானை யொருங்குட னேற்றி
வீறுபடு கோலமொடு வியனகர் விழவணி
கொண்ட காலைத் தண்டப் பாற்படுத்
தென்னணி பெருங்கலந் தன்னணிந் தேற்றிக்
குற்றமில் பெரும்புகழ்க் கோப்பெருந் தேவி
கொற்றக் கோயிலுண் மற்றுப்பிற ரின்றித்தன்
பெருமலர்ச் சீறடி யிருநிலத் தியங்கத்
தண்ட வேந்தன் றமரா நமக்கெனக்
கொண்ட கொள்கையுங் குறிப்பினது நிலைமையும்
யானை வாரியுஞ் சேனை வீடும்
அடுத்தனை யாராய்ந் தறிய வென்வயின்
நெடித்தல் செல்லாய் விடுத்த னீயென
விடுத்தனன் விடுத்து வேந்த னிருந்த
அந்தக் கோட்டியுண் மந்திர மாகப்
பெரும்பொரு ளிதுவெனப் பொருந்தக் கூறி
அரும்பெறல் யூகியு முருமண் ணுவாவும்
வயந்தகன் வரினு நயந்தனன் றெரியா

திருக்க தானென நெறிப்படக் கூறிக்
குறிப்பெழுத் தோலை பொறிப்புணைந் தொற்றிய
அம்மடி யன்றியு மாகு மெய்ம்மொழி
வருவோர்க் கறியக் கூறி மற்றென்
செருவில் வேந்தன் செய்கை யென்ற
பின்ன ரல்லது துன்னின ரிவரெனத்
துணியப் பெறுயெனத் துணிந்தியான் கூறிய
பணிவகை யுண்டது பண்டைக் காலத்
தின்றிந் நிலைமைக் கன்றது நினைப்பின்
அற்றந் தருமென வுற்ற தோழற்
கடையா ளருண்மொழி யறியக் கூறிப்
படையாள் கடுந்தொழிற் பற்று மன்னன்
பாவையைத் தழீஇப் பண்ணுப்பிடி யேற்றி
எய்தா வரும்பொரு ளெய்திய பின்றைப்
பொய்வகை புணர்த்த புணர்ப்பும் போந்தபின்
செய்வகை யறிதற் பொருட்டுஞ் சேனையுள்
உய்வகை மற்றவ னொழிந்த வுறுதியும்
உறுதி யோரான் பிறிதுநினைந் தொற்றிக்
குஞ்சரங் கடாஅய்க் கொணர்மின் சென்றெனும்
வெஞ்சின வீரன் வெகுட்சியும் வெகுட்சியின்
விடுத்த பல்படை பெயர்த்தற் பொருட்டா
நம்படை யொழிந்த வண்ணமும் வெம்படைக்
காவல னுடு கங்கு னீங்கிச்
சார வந்த தன்மையுஞ் சார்ந்தபின்
அரும்பொறி யழிந்த வெந்திரம் போல
இரும்பிடி வீழ்ந்தத னின்னுயி ரிறுதியும்
இற்ற விரும்பிடிப் பக்க நீங்கி
இடுக்க ணெய்தி யிலங்கிழை மாதர்
நடக்க லாற்று ணடுக்க மெய்திக்
கடக்கருங் கானத்துக் கரந்த சேக்கையும்
சேக்கையு ணின்றுநீ சென்ற செலவும்
வாய்ப்பக் கூறி வாட்படை தொகுத்து
வையம் பூட்டி வழிவரல் விரைந்தென்
எவ்வந் தீர விருள்கழி காலைக்

21006

கோற்குறி யெல்லையுட் குறிவழி வம்மென
வாட்டிறல் வத்தவன் வயந்தகற் போக்கிப்

(உதயணன் செயல்)

பணிவரை மார்பன் றனிய னாகி
வேழ வேட்டத்து வீழ நூறி
அருஞ்சிறை யெய்தி யாப்பொடு புக்க
பெருஞ்சிறைப் பள்ளிப் பேரிருள் போலும்
துன்பப் பெருங்கடற் கின்ப மாகி
மாந்தளிர் மேனி யேந்துபுணை யாக
நீந்துதல் வலித்த நெஞ்சின னாகிக்
கணையொடு திரிதருங் காமன் போலத்
துணைநல மாதரைத் தோழியொடு துயிற்றித்
துஞ்சல் செல்லான் வெஞ்சின விடலை
வாள்வலங் கொண்டு காவ லோம்ப
வரிநிறக் கோம்பி வாலிமிழ்ப்பு வெரீஇ
எரிமல ரிலவத் திருஞ்சினை யிருந்த
[1] அலந்த மஞ்ஞை யாமங் கூவப்
புலர்ந்தது மாதோ புரவலற் கிரவென்.

௫௪—வயந்தகனகன்றது முற்றிற்று.

௫௫—சவரர் புளிஞர் வளைந்தது.

(உதயணன் செயல்)

புலர்ந்த காலைப் பூங்கழற் குருசில்
மலர்ந்த பொய்கையுண் மணிநிறத் தெண்ணீர்க்
கொழுமலர்த் தடக்கையிற் கூட்டுபு கொண்டு
குழவி ஞாயிற் றெழிலிகந் தெள்ளும்
திருமுக மருங்கிற் செருமீக் [2] கூரி
ஒள்ளிழை மகளி ருள்ளங் கவற்றும்
செந்தா மரைக்கண் கழீஇ மந்திரத்
தந்தி கூப்பித் தென்புலக் கிறைஞ்சித்

பி - ம். 1 அனந்தர். 2 கூறி.

தமரிற் பிரிந்ததன் றனிமையை நினைஇ
அமரிய தோழி யாகத் தசைந்து
சுடர்முகம் புல்லெனப் படரொடு மயர்ந்து
வேனில் வள்ளியின் மேனி வாடி
உள்ளங் கனலு மொள்ளிழை மாதரைக்
குற்ற நலத்துக் குறிப்புநனி காட்டி
உற்ற வெந்நோ யோம்பென வுற்ற
காஞ்சன மாலையை யாங்கன மருளி
வருபடைக் ககன்ற வயந்தகன் வருவழிப்
பொருபடை யண்ணல் பொழில்வயி னிருப்பக்
கடுவிசைக் கனலி சுடுகதிர் மருங்கிற்
குடுமி நெற்றிக் கூருளி யன்ன
வல்வாய் வயவன் வறண்மரத் துச்சிப்
பல்காற் குரைத்தது பகற்படை தருமெனப்
பாட்டிற் கூறக் கேட்டன னாகி
வெண்மதி நெடுங்குடை வேற்றவன் படையொடு
நுண்மதி யமைச்ச னுண்மறைந் தொடுங்கி
மராவு மாவுங் குராவுங் கோங்கும்
தண்ணிழற் பொதும்பர்க் [1] கண்ணழற் காட்டும்
காழமை கழைத்தொடர்க் கடும்பரிப் போர்வைத்
தாழமை பெரும்பொறித் தச்சுவினைப் பொலிந்த
அரக்கூட் டம்புகர் மரக்கூட் டியானையைச்
செறுவுபு நிறீஇய செய்கை யோரா
தெறிபடை யாளரொ டுறுமுரண் செய்யக்
காழ்த்த காலைக் கீழ்த்திசை முன்பகல்
அன்றவட் பாடிய வணிவரி வயவன்
இன்றிவ ணின்னே யிகற்படை தருதல்
பொய்த்த லின்றி மெய்த்த [2] தாமென
அங்குப்படு புட்குர லாண்டகை யஞ்சி
வெங்கணை திருத்தி வில்லிடந் தழீஇ
இரும்பிடை யிட்ட பெரும்புடைக் கச்சையன்
வளிசுழற் றுறாஅ முளிமரக் கானத்
தென்கொ னிகழு மேத மின்றென

பி - ம். 1 கண்ணிழற். 2 தாதலின்.

நெஞ்சொ டுசாவுஞ் சிந்தைய னாகி
வெஞ்சின வீர னின்ற காலை

(வேடர் இயல்பு)

மடப்பிடி வீழ்ந்த மணிமலைச் சாரல்
அடக்கருஞ் சீறா ரரணக வுறையுளர்
கணங்கொ டலைவனைக் கைக்கொண் டியங்கா
அணங்கரும் பெருஞ்சாத் தவிய நூறிப்
பல்விலைப் பண்டங் கவர்ந்துபய மறியார்
சில்விலைக் கிடூஉஞ் செல்லா வாழ்க்கையர்
சுரஞ்செல் வம்பல ரரும்பத மடக்கி
மாணுறி யாத்த வாணத் தானையர்
அடுகணை மறவ ரகலிலை யோமை
நெடுநிலைத் திரடா ணேர்துணித் ததர்வைக்
கொடிபுரை கயிற்றொடு கொளுத்தினர் சமைப்ப
[1] வடியி னன்ன வாளரித் தடங்கட்
பைங்குழை மகளிர் பல்காழ்க் கலையோ
டங்குழைச் செயலைத் தண்டழை யுடீஇக்
காலி னியங்குநர் கற்குழிக் கொளினும்
நூலி னியன்றவை நோக்கார் சாபமென்
றுடூஉவு மகடூஉவு மாடு மறியார்
காடுதேர் முயற்சியர் கைப்பட் டோர்களைப்
பாடற் பாணிப் பல்லிசை கேட்டும்
ஆடென வணங்கிற் கருந்தலை துமித்தும்
வீளை யோட்டின் வெருவ வெய்தவர்
ஊளைப் பூசலோ டாடல்கண் டுவந்தும்
[2] காட்டுயிர் காணார் கைப்பயில் குறியொடு
வேட்டன செய்யும் வேட்டுவினைக் கடுந்தொழிற்
கவர்கணை வாழ்க்கைச் சவரர் புளிஞர்

(வேடர் செயல்)

காலை யெழுந்து கணங்கொண் டீண்டிச்
சோலைப் போதகச் சுவடுறுத் துழல்வோர்
காஅட்டுப் பிடிமற் றன்றிது கருதின்

பி - ம். 1 வடுவினன்ன. 2 காட்டுயர்.

நாஅட்டுப் பிடியே நடந்தது தானென
மூதிர்புலா ஞற்றமொடு முன்முன் வீசி
உதிர வழியே யதிர வோடிப்
பிடியது வீழ்ச்சியும் பெண்பாற் சுவடும்
அடுதிற லாடவ ரற்றமும் பிறவும்
படியி னுய்ந்து கடுகுவன ரோடி
வெள்ளிடை வெண்மணன் மிதித்த சுவடுதொறும்
[1] புள்ளடி யொழுக்கம் புரிவனர் நோக்கி
நெருந னீடிரு ணீங்குநர் சுவடிவை
அருமை யுடைத்தவர்த் தலைப்பட னமக்கென
அடியுறி னடையு மம்புடை யெயினர்
கடிகை வெள்ளிலுங் கள்ளி வற்றலும்
வாடிய வுவலொடு நீடதர் பரப்பி
உழைவயிற் றரியாது முழைவயி னொடுங்கிய
ஆறலை யிளையரை யாண்மை யெள்ளி
வேறினி நும்மொடு விளிகுநங் களவெனச்
சேறல் வலியாச் செய்கை நோக்கி

(நிமித்திகன் கூற்று)

வாய்ச்சிறு புதுப்புள் வீச்சுறு விழுக்குரல்
கேட்டுப்பொரு டெரியுமோர் வேட்டுவ முதுமகன்
பெருமக னென்னப் பெறலருங் கலத்தோ
டொருமக னுளவழி யெதிர்த்து மம்மகன்
நடுங்குதுய ருறுத்துங் கடுங்க ணண்மையன்
ஆண்மை யழிய நாண்டீக் [2] கூறி
மெய்ப்பொரு ளோர்ந்து கைப்படு நமக்கெனக்
காட்டக மருங்கி னல்லது மற்றவர்
நாட்டகம் புகுத னன்கிருள் கழியினும்
இல்லை யெழுகெனச் செல்வோர் முன்னர்ப்

(வேடர் செல்லுதல்)

புரக்கூட் டமைந்த வரக்கூட் டரத்தம்
பவளத் துணியிற் பசுமையொடு கிடப்ப
இன்னணிப் புக்கோ ரிவ்வழி யல்லது

பி - ம். 1 புள்ளழி. 2 கூறி.

மற்றவ ரெங்கு மறைந்திலர் காண்கெனச்
செல்வோ ரொருங்குடன் வல்லையும் வழியும்
வான்மரப் பொதும்புங் கானமுங் கடறும்
முழைவளர் குன்றுங் கழைவளர் கானமும்
பயம்பும் பாழியு மியங்குவனர் வதியும்
முதுமரப் பொத்தும் புதுமலர்ப் பொய்கையும்
இனையவை பிறவு மனையவ ருள்வழிச்
செருக்கய லுண்கட் சீதையைத் தேர்வுழிக்
குரக்கினத் தன்ன பரப்பின ராகிப்
பிடிமுதற் கொண்டுமல ரடிமுத லொற்றிச்

(வேடர் உதயணனைக் கண்டு தாக்கல்)

செல்வோர் கதுமெனச் செம்மலைக் கண்டே
கல்லெனத் துவன்றிக் கார்கிளர்ந் ததுபோல்
ஆர்ப்பும் விளியு மவ்வழிப் பரப்பிக்
கார்க்கலைக் கோட்டொ டார்ப்பொலி மயங்கி
அரவச் செய்கையர் வெருவரத் தாக்கப்

(உதயணன் செயல்)

பல்பனி பரந்த செல்லரி மழைக்கண்
நச்சுயிர்ப் பளைஇய வச்ச நோக்கமொடு
விம்முவன ணடுங்கும் பொம்ம லோதியை
மாஞ்சினை யிளந்தளிர் மணிநிற மேனிக்
காஞ்சன மாலாய் காவல் போற்றுமதி
அப்பாற் புகுதரு மற்ற மின்மையின்
இப்பால் வருவந ரின்னுயி ருண்கெனக்
கைச்சிலை வளைத்துக் கணைநாண் கொளீஇ
முற்றிய கோங்கின் முழுத்தாள் பொருந்தி
ஒற்றுபு நோக்கு மொற்றை யாளன்
வார்கணை செவியுற வாங்கி மற்றவர்
ஆருயிர் வௌவுவதன் முண்முதல் பொருந்தி
உடும்பெறிந் ததுபோற் கடுங்கணை முள்க
விட்ட வேந்தன் விற்றொழில் கண்டும்
கண்டுகை விடுதல் கரும மன்றென
விண்டல ரிலவத் தண்டைசார்ந் தவனைக்

(வேடர் உதயணனை நோக்கிக் கூறுதல்)

கண்ட வேட்டுவர் தண்டாது நெருக்கி
மையணி யிரும்பிடி வீழ மற்றுநீ
உய்வலென் றெண்ணி யொளித்தனை போந்தனை
எவ்வழிப் போதிநின் னின்னுயி ருண்குவம்
யாரை நீயெமக் கறியக் கூறென
வீர வெம்மொழி நீரல பயிற்றி

(உதயணன் வேடரை நலிதல்)

உடுவமை பகழி யொருங்குடன் றாவ
விடுகணை விடலை வில்லின் விலக்கி
1 வதிபயின் றடைந்த மறவரை யதிரக்
கைவயிற் கடுங்கணை யொவ்வொன்று கொண்டவர்
மெய்வயிற் கழிந்து வியனிலத் 2 திங்க
வீரருள் வீரன் விசைபெற விடுதலின்
வீர வேட்டுவர் சார்த லாற்றார்

(வேடர் கலங்கிக் கூறல்)

கோல வுருவொடு குன்றிடைப் போந்தவோர்
காலன் கொல்லிவன் கானத் தோர்க்கெனப்
பன்முகத் தானும் பற்றடைந் தன்னவன்
வின்முகம் புகாஅர் வேட்டுவ ரஞ்சிப்
*புட்கூற் றுளனே யுட்கூற் றாகி
அழித்தனை கொணர்ந்தெனப் பழித்தனர் கழறி
3 உளைப்பொலி மான்றே றுதயண குமரனை
வளைத்துநின் றனரால் வலிப்பது தெரிந்தென்.

ருரு—சவரர்புளிஞர் வளைந்தது முற்றிற்று.

ருசு—வெற்றி யெய்தியது.

(வேடர் எண்ணுதல்)

தெரிவுறு சூழ்ச்சியர் செய்வதை யறியார்
ஒருவ னும்பல ரொழிவமென் னாது
விசையுடை வெங்கணை விற்றொழி னவின்ற

பி - ம். 1 மதி. 2 இயங்க. 3 உளைபொலி.

[1] அசைவி லாள னழிக்கவும் பட்டனம்
உரைமி னெல்லென வுறுவது நோக்கிக்

(நிமித்திகன் கூற்று)

கருவினை நுனித்த வருவினை யாண்மைப்
புள்ளுணர் [2]முதுமகன் றெள்ளிதிற் றேறி
இளையவர் கேட்க விற்றென விசைக்கும்
கிளையுடைப் பூசலொடு முளையரில் பிணங்கிய
முள்ளரை யிலவத் துள்ளவ ரிருப்பக்
கேளிழுக் கறியாத் தாளிழுக் குறீஇயினிர்
கோளிமிழ் கனலி சூழ்திசைப் பொத்திப்
புகையழ லுறீஇப் புறப்படுத் தவர்களை
நவையுறு நடுக்கஞ் செய்த லுணரீர்
கள்ள மின்றிக் கட்டாள் வீழ்த்த
வெள்ளை வேட்டுவீர் புள்ளெவன் பிழைத்ததென்
றுள்ளழிந் தவர்கட் குறுதி கூறக்

(வேடர் தீ மூட்டல்)

கணையொடு பிடித்த கைக்கோ லரணிப்
புடையிடு பூளைப் பூப்புற மடுத்துப்
பிசைந்த சிறுதீப் பெருக மூட்டி
இசைந்த மூளரி யெண்டிசைப் பக்கமும்
வேனிற் பேரழல் கானவர் கொளுத்தி
நோவக் கூறிச் சாவ தல்லது
போதல் பொய்க்கு மினியெனப் போகார்
அரிமா வளைந்த நரிமாப் போல
இகன்முனை வேட்டுவ ரிடுக்கண் செய்யப்

(வாசவதத்தை ஏங்கல்)

புகைமிகு வெவ்வழல் பூம்பொழில் புதைப்பக்
கான வெந்தீக் கடும்புகைப் பட்ட
மானமர் பிணையின் மம்ம ரெய்தித்
தளையவிழ் தாரோன் றனிமைக் கிரங்கிக்
களைகண் காணாது கையறு துயரமொடு
பெய்வளைத் தோளி வெய்துயிர்த் தேங்கக்

பி ம். [1] அசைவிலாளரை யழிக்கவும். [2] மதிமகன்.

(உதயணன் செயல்)

குலங்கெழு குருசில் கொடிக்கைம் மாறி
அலங்கிதழ்க் கோதையொ டவிழ்முடி திருத்திக்
கலங்க லோம்பிக் காஞ்சன மாலாய்
இலங்கிழை மாதரை யென்வழிப் படாதோர்
பக்கங் கொண்டு படர்மதி யிப்பால்
வில்லி னீக்கி வெள்ளிடை செய்தவர்
அல்ல லுறீஇ யாருயி ருண்கெனக்
கழைவளர் கானங் கடுந்தீ மண்ட
முழைவயிற் போதரு முளையெயிற் றிடிக்குரல
புலவும் புலிபோற் பொங்கழல் புதைஇய
இலவஞ் சோலையி னிறைமகன் போதர
ஆளி கண்ட வானை யினம்போல்
வாளி வல்வில் வயவர் நீங்கச்
சில்லிருங் கூந்தலை மெல்லென நடாஅய்
வெல்போர் விடலை வெள்ளிடைப் படுத்தலின்

(வேடர் செயல்)

அரணிடை யகற்றி யச்ச நீங்கி
முரணுடை வேட்டுவர் மூழ்த்தனர் மூசி
முன்னும் பின்னும் பக்கமு நெருக்கிப்
பொன்னணி மார்பன் போர்த்தொழி லடங்கக்
கலையுணர் வித்தகர் கைபுனைந் தியற்றிய
சிலைநா [1] ணறுத்தலிற் செய்வதை யின்றி

(உதயணன் நிலை)

வலைநா ணிமிழ்ப்புண் வயமாப் போலக்
காட்சிக் கின்னா வாற்ற லனாகிப்
பேரமர் ஞாட்பினுட் பெருமுது தந்தைதன்
வார்சிலைப் புரிநாண் வாளியி னறுப்பத்
தேர்மிசைத் திரிந்த திறலோன் போல
வீழ்தரு கடுங்கணை வில்லின் விலக்கி
ஊழ்வினை துரப்ப வுயிர்மேற் செல்லாது
தாழ்தரு தடக்கையுந் தாளுந் தழீஇ

பி - ம். 1 ணறுதலிற்.

வாயறை போகிய வடுச்சேர் யாக்கையன்
ஆழி நோன்ற எண்ணலைக் கண்டே

(வாசவதத்தையின் செயல்)

தாழிருங் கூந்தற் றளரிய னடுங்கித்
தானணி பெருங்கலந் தன்வயிற் களைந்து
கான வேட்டுவர் கைவயிற் கொடுவெனக்
கவிரிதழ்ச் செவ்வாய்க் காஞ்சன மாலைகை
அவிரிழை நன்கல மமைவர நீட்டி
அழியன்மி னீரென வழுவனண் மிழற்றிய
காஞ்சனை நமைப்பொரு கானவர் தமக்குக்
கொடுத்தில மாயிற் கொடுமைவிளை வுண்டெனக்
கலக்க வுள்ளமொடு கடுஞ்சிலை கைத்தர

(உதயணன் செயல்)

நலத்தகு மாதர் நடுக்க நோக்கி
வலத்த னாகிய வத்தவ னகப்பட்
டின்னுயிர் போகினு மின்ன னென்னாது
மன்னுயிர் காவன் மனத்தி னெண்ணிக்
குன்றச் சாரற் குறும்பினு ளுறையும்
வன்றோ ளிளையீர் வந்துநீர் கேண்மின்
பெருங்கலம் பெய்தியாம் பிடியொடும் போந்த
அருங்கல வாணிக ரப்பிடி வீழ
வருத்த மெல்லா மொருப்படுத் தொருவழி
நெறிவயி னீக்கிக் குறிவயிற் புதைத்தனெம்
கொள்குவி ராயிற் கொலைத்தொழி னீங்குமின்
உள்வழி யப்பொருள் காட்டுக முய்த்தெனச்

(வேடர் தலைவன் உதயணனை வினவுதல்)

சொற்பொருள் கேட்டே விற்றொடை மடக்கி
அறவரை யிழந்த செறுநரை விலக்கிக்
குறவருட் டலைவன் குருசிலைக் குறுகி
யாரே நீயெமக் கறியக் கூறென
வீரருள் வீரனை வேட்டுவன் கேட்ப

(உதயணன் கூற்று)

வத்தவர் கோமான் வாணிக ரித்திசைப்

பெரும்பெயர்க் கிளவிப் பிரச்சோ தன்னுட்
டரும்பொருள் கொண்டியா மாற்றிடைப் போந்தனெம்
மடப்பிடி வீழ விடர்ப்பட் டிருளிடைப்
பொழில்வயிற் புதைத்த தொழிலினெம் யாமென
முகைத்தார் மார்ப னுவப்பதை யுரைப்ப

(வேடர் செயல்)

வளங்கெழு வத்தவன் வாணிக ரெனவே
உளங்கழிந் தூர்தரு முவகைய ராகிக்
கொல்லாத் தொழிலினர் கொலைப்படை யகற்றி
வல்லாண் டோன்றலை வடகம் வாங்கிக்
கையாப் புறுத்துக் காட்டிய வெழுகென

(உதயணன் கூற்று)

உய்ம்மருங் குபாயத்துப் பொய்ம்மருங் கோடி
[1] அழல்வழி வந்தியா மசைந்தனம் வதிந்த
பொழில்வயிற் புதைத்தனம் புகற்கரி தாகத்
தெரிவில் கொள்கையி னெறிதலைக் கொளீஇயினிர்
அவ்வழ லாறு மாத்திர மிவ்வழி
நின்மி னீரென மன்ன குமரன்
தெளியக் கூறப் புளிஞர் தேறி

(வேடர் கூற்று)

எவ்வழி யாயினு மெரியவித் தவ்வழிக்
காண வுறுதுங் காட்டா யாயின்
[2] ஆண முன்கை யடுதும் யாமென

(வாசவதத்தை வருந்தல்)

நன்கை யாத்தது நன்று நொந்திவன்
கவிகைக் கேலாது கட்டெனக் கவிழ்ந்தோள்
அவிரழற் கானத் தருளி லாளர்
அடுதுமெனவே யமர்ப்பிணை போலத்
தீயுறு தளிரின் மாநிற மழுங்க
மாழை யொண்க ணாழ்ந்தழ் மல்க
மம்ம ருள்ளமொடு மடத்தகை மாழ்க

பி - ம். 1 அல்வழி. 2 ஞண.

(காஞ்சனை வருந்தல்)

மாழ்கிய மாதரை வாங்குபு தழீஇக்
கனவளைப் பணைத்தோட் காஞ்சன மாலை
புனவளைத் தோளி பொழிலகங் காவணம்
பெருமான் செல்வம் பேணாய் மற்றிவ்
வரிமா னன்னோற் காருயிர் கொடீஇய
போந்தனை யோவெனத் தான்பா ராட்டி
இரங்குவது நோக்கி யிறைமகன் கூறும்

(உதயணன் கூற்று)

வருந்துத றவிரயாம் வழியிடைப் புதைத்த
அருங்கலப் பேரணிப் பெருங்கலங் கருதின்யாப்
புறமுறை பின்னிடத் தறிமின் மற்றிவள்
நீப்பருந் துயர நெறிவயி னோம்பித்
தீப்புகை தீர்தலுங் காட்டுதுஞ் சென்றெனக்

(வேடர் செயல்)

கையகப் பட்டோன் பொய்யுரைத் தனனெனின்
உய்வகை யிலையிவ னுரைத்ததை யெல்லாம்
செய்தும் யாமென வெவ்வினை யாளர்
மையணி யானை தாங்கித் தழும்பிய
கையாப் பொழித்துக் காத்தனர் நிற்ப

(உதயணன் செயல்)

வாவிப் புள்ளின் றாவி விம்மிய
அணைமிசை யசைந்த வம்மென் சிறுபுறம்
மணன்மிசை யசைந்து மாக்கவின் வாட
அறியாது வருந்திய வாருயிர்த் துணைவியைப்
பொறியார் தடக்கையிற் போற்றுபு தழீஇப்
பூங்குழல் குருசி றேங்கொளத் தீண்ட
நீலத் தண்மலர் நீர்ப்பட் டனபோல்
கோலக் கண்மலர் குளிர்முத் துறைப்ப
அவலங் கொள்ளு மவ்வரைக் கண்ணே

(வயந்தகன் இடபகன்பாற் செல்லல்)

கவலை யுள்ளமொடு கங்குற் போகிய
வயந்தக குமரன் வந்துகாட் டொதுங்கிக்

கன்றொழி கறவையிற் சென்றவ ணெய்திக்
காப்புடை மூதூர்க் கடைமுகங் குறுகி
யாப்புடை நண்பி னேற்றுப் பெயரான்
வைகுபுலர் விடியல் வயவர் சூழ்வரப்

(இடபகன் செயல்)

பெருநலத் தானைப் பிரச்சோ தனன்றமர்
இருநிலக் கிழமை யேய ரிறைவன்
வென்றியும் விறலும் விழுத்தகு விஞ்சையும்
ஒன்றிய நண்பு மூக்கமு முயர்ச்சியும்
ஒழுக்க நுனித்த வுயர்வு மிழுக்கா
அமைச்சி னமைதியு மளியு மறனும்
சிறப்புழிச் சிறத்தலுஞ் சிறந்த வாற்றலும்
வெங்கோல் வெறுப்புஞ் செங்கோற் செல்வமும்
செருக்கிச் செல்லுஞ் செலவின னென்றுதம்
தருக்கிய தலைத்தாட் டானைச் செல்வப்
பெருமகற் றெளீஇத்தம் மருமதி மேம்படக்
கய்ந்நவி லாளனை யெஃகுள் ளடக்கிய
பொய்ந்நிலங் காட்டின ரென்பதோர் பொய்ம்மொழி
வெந்நில மருங்கின் வேட்டுவ ரெல்லாம்
போற்று துரைத்த மாற்றம் பட்டதை
நிலைக்கொண் டமைந்து நிரம்பாத் தந்நிலம்
கலக்க மறிந்த கவற்சிய னாகி
மன்னுயிர் காவலற் கம்மொழி மெய்யெனின்
இன்னுயிர் துறக்குமென் றெண்ணருஞ் சூழ்ச்சியன்
உற்றதை யுணரு மொற்று ளிளையனை
வருகென நின்றோன் வயந்தகற் கண்டே
உயிர்த்துணைத் தோழ னுளனென வுவந்து
பெயர்ச்சியி னுலகம் பெற்றான் போலச்
செந்தா மரைக்கட் காவலன் செவ்வியை
முந்துறக் கேட்ட பின்றை மற்றவன்
வந்ததை யுணர்குநன் மந்திர மிருந்துழிச்

(வயந்தகன் உதயணன் கூறியவற்றை இடபகனுக்குக் கூறுதல்)

சிறைகொண் மன்னவன் றுறைகொள் விழவினுள்

இகழ்வொடு பட்ட வியற்கை நோக்கிப்
பவழச் செவ்வாய்ப் பாவையைத் தழீஇ
இருளிடைப் போந்தது மிரும்பிடி யிறுதியும்
இற்ற விரும்பிடிப் பக்க நீங்கலும்
தெருளக் கூறித் தீதில் காலத்துப்
பெருமுது தேவி யுரிமைப் பள்ளியுள்
செருமுரட் செல்வன் [1] பெருவிரல் பிடித்தவற்
கறியக் கூறிய வடையாண் கிளவியும்
செறியச் செய்த சிறப்பு மாண்மையும்
அருந்தொழி லந்தணன் சுருங்கச் சொல்லலும்

(இடபகன் படையோடு உதயணனை நாடி வருதல்)

விரைந்தனஞ் செல்கென வெம்படை தொகுத்து
வேழமும் புரவியும் பண்ணுக விரைந்தெனத்
தாழும் பறையொடு சங்கமணந் தியம்பக்
கடல்கிளர்ந் ததுபோற் காற்படை துவன்றி
அடலருங் குறும்பர்க் கறியப் போக்கி
இடபகன் படையோ டெழுந்தன னாகி
விண்ணோர் விழையுஞ் செண்ணக் கோலத்துக்
கண்ணிய செலவிற் கஞ்சிகை வையம்
கண்ணி சூட்டிக் [2] கடைமணி பூட்டி
வண்ண மகளிர் கண்ணுறக் கவினிய
உழைக்கல மேந்தி யுழைப்படர்ந் தியலப்
பொற்கலத் தியன்ற நற்சுவை யடிசில்
காப்புப்பொறி யொற்றி யாப்புற வேற்றித்
தனிமை யெய்திய மன்னனுந் தையலும்
அணியுங் கலனு மகன் [3] பரி யாளமும்
துணிவியல் சுற்றமுந் தொடர்ந்துடன் விட்டுப்
பின்வர வமைத்து முன்வரப் போகி

(வயந்தகன் உதயணனைக் காணாமல் வருந்தல்)

வாட்டொழில் வயந்தகன் காட்டக மருங்கின்
அண்ண விருந்த வறிகுறித் தானம்
நண்ண லுற்ற காலை மன்னவன்

பி - ம். 1 பெருவிறல். 2 கடிமணி, கடமணி. 3 பரியாரமும்.

அம்புபட வீழ்ந்த வெங்கண் மறவர்
*உதிரப் பரப்பி னுருவுகெட வுண்ட
காக்கையுங் கழுகுந் தூப்பதந் துறந்து
கோடுகொண் டிருந்த குழாஅ நோக்கிக்
காடுகொண் மள்ளர் கதுமென நடுங்கிப்
போர்க்கள முண்மை பொய்த்த லின்றென
நீர்க்கரைப் பொய்கை நெற்றிமு னிவந்த
[1] முள்ளரை யிலவ மொள்ளெரி சூழப்
பொங்குபுகை கழுமிய பூம்பொழிற் படாஅன்
இங்குநம் மிறைவ னிருந்த விடமவன்
ஏதம் பட்டன னுதலி னின்னே
சாதல் பொருளெனக் காதல் கழுமி
வருபடை யுய்த்த வயந்தகன் மாழ்கப்

(படையாளர் அவனைத் தேற்றல்)

பொருபடை யாளர் புல்லிடைத் தெரிவோர்
வேட்டுவ ராதல் வில்லிற் காட்டி
வாட்டொழில் வயந்தகன் வருத்த மோம்பிப்
பெருங்கணஞ் சென்ற பிறங்குபுற் கானம்

(படையாளர் உதயணனைக்கண்டு வேடர்களைச் சூழ்தல்)

பரந்தனர் செல்வோர் பாவையைத் தழீஇக்
காவி கவினிய தாவில் பொய்கையுள்
தனித்தா ணிவந்த தாமரை போலப்
பனித்தார் மார்ப னிற்ப மொய்த்துடன்
வளைத்தனர் வலக்கும் வயவரைக் கண்டே
உளைப்பொலி மாவும் வேழமு மூர்ந்தவர்
போஒந் திசைவயிற் புதைந்தனர் நிற்பக்

(நிமித்திகன் கூறல்)

கதிரகத் திருந்த முதிர்குரற் பறவை
போழின் வல்லே போதீ ராயினும்
உயிர்த்தவ னுரைக்கு மென்பதை யுணர்ந்து
முந்துபுள் ளுரைத்த முதுமகன் கூற

பி - ம். [1] முள்ளெரி.

(படையாளர் செயல்)

வெந்திறல் வேட்டுவர் விரைந்தன ராகி
அல்லி நறுந்தா ரண்ணலை நலிய
[1] ஒல்லா மறவ ரொலித்தன ரோடி
வேகப் புள்ளமொடு விசைத்தன ரார்த்துக்
கோடும் வயிருங் குழுமின துவைப்பவக்
கருந்தொழி லாள ரிருந்தலை துமித்துப்
பெருந்தகைக் [2] கிழவனைப் போரா மறவரை
இடுக்கண் செய்யவு மியல்பி லாளர்
நடுக்க மெய்தக் குடைப்பெருந் தானை

(உதயணன் செயல்)

வத்தவ ரிறைவனு மெய்த்தகைத் தாகத்
தமர்மேல் வந்தமை தானகத் தடக்கி
நுமரோ மற்றிவர் பிறரோ தாமெனக்
கவர்கணை மொய்த்த கானத் திடைமறைத்
தெம்முயிர் காமி னெனவே யாங்கவர்

(வேடர் உதயணனை நோக்கிக் கூறல்)

அடையார்க் கடந்த வுதயணன் மந்திரி
இடபக னென்போ னெறிப்படை தானிது
கோளுலா யெழுமெனிற் கூற்றெனப் பரந்த
நாளுலாப் புகுத்தும் வாள்வலி யுடைத்தே
தெரிந்தனை நில்லா யாகி யெம்மொடு
புரிந்தனை போது போதா யாயின்
பிரிந்து காண்பிற ரருந்தலை துமிப்பவென்
றூர்வ வேட்டுவ ரண்ணற் குரைத்து
வார்சிலை யம்பொடு வாங்கிக் கொள்கென

(வேடர் செயல்)

வீர வேந்தற்கு விரைந்தவ ரீயா
முற்பகற் செய்வினை பிற்பக லுறுநரிற்
பார்வை நின்றும் பதுக்கையுட் கிடந்தும்
போர்வைப் புல்லுட் பொதிந்தன ரொளித்தும்
கழுக்குநிரை யிருந்துங் காலியற் புரவி

பி - ம். 1 ஓடாமறவ. 2 கள்வனைப்.

விழுக்குநிணம் பரிய விடுகணை விட்டும்
கோலிய வல்விற் குமரரை மாட்டியும்
வேலிய லாளரை வீழ நூறியும்
வெங்கணை வாளியுள் விளிந்தனர் வீழப்

(உதயணன் செயல்)

பைங்கண் வேழத்துப் படைத்திறல் வேந்தன்
தமர்வழங்கு படையு மவர்வழங்கு வாளியும்
பொன்னிழை மாதரொடு தன்வயிற் காத்து
மரம்பயி லழுவத்து மறைந்தன னிற்ப
உரங்கெழு மறவ ருதயண னொழிய
மத்துறு கடலிற் றத்துறு நெஞ்சினர்
பைவிரி நாகத் தைவாய்ப் பிறந்த
ஒலிப்புயிர் பெற்ற வெலிக்கணம் போல
ஒழிந்தோ ரொழியக் கழிந்தோர் காணு
ஆறுகொண் மாந்தர்க் கச்ச மெய்தி
ஏறுபெற் [1] றிகந்த பின்றை வீறுபெற்
றங்கண் விசும்பிற் றிங்களைச் சூழ்ந்த
வெண்மீன் போல வென்றி யெய்திப்
பன்மாண் படைஞர் பரந்தனர் சூழ
மலிந்தவ ணேறி வத்தவர் பெருமகன்
கலிந்த துன்பங் கையிகந் தகலப்
பொலிந்தன னென்ப [2] பொருபடை யிடையென்.

ருசு—வென்றியெய்தியது முற்றிற்று.

ருஎ—படைவீடு.

(படையாளர் செயல்)

பொருபடை யிளையர் புகன்றனர் சூழ்ந்து
செருவடு செம்மலைச் செல்ல லோம்பிக்
கூப்பிய கையினர் காப்பொடு புரிய
வண்டலர் படலை வயந்தக குமரனும்
தண்டத் தலைவனுந் தலைப்பெய் தீண்டிக்

பி-ம். 1 றிருந்த. 2 பொலிபடை.

கனிபடு கிளவியைக் கையகப் படுத்துத்
துனிவொடு போந்த தோழனைத் துன்னி
இழுக்கா வியல்பி னொழுக்க மோம்பி

(உதயணன் செயல்)

வஞ்சமில் பெரும்புகழ் வத்தவ ரிறைவனும்
நெஞ்ச மகிழ்ந்து நீத்துமிக வுடைய
துன்பப் பெருங்கடற் றுறைக்கட் பொருந்திய
இன்பப் பெரும்புணை யாயினி ரெமக்கென
அன்புடை யருண்மொழி நன்புபல பயிற்றி
ஆர்வத் தோழரை யார்த லாற்றான்
வீரத் தானை வேந்தன் விரும்பி
நறைமலர்ச் சோலை யிறைகொண் டிருப்பப்

(இடபகன் ஏவலாளர் உதயணனுக்குப்
படைவீடு அமைத்தல்)

பெருமூ தாளரும் பெருங்கிளைச் சுற்றமும்
திருமா தேவிக்குத் தெரிவன ரமைத்த
வண்ண மகளிரொடு வைய முந்துறீஇ
வந்தொருங் கீண்டிய பின்றைச் சயந்தி
நாடுவண் டரற்றுங் கோடுயர் சாரல்
இறைமகன் [1] விட்டிட வுறையுண் முறைமையின்
மறுகு முற்றமு மாண்பட வகுத்துத்
தறிமிசைக் கொளீஇய [2] செறிநூன் மாடமொடு
நிரைநிரை கொண்ட நுரைபுரை திருநகர்
பசும்பொற் புளகம் விசும்புபூத் ததுபோல்
பரந்த பாடி நிரந்தவை தோன்றப்

(வாசவதத்தைக்குரிய இடங்களும்
பண்டங்களும் அமைத்தல்)

பேணார்க் கடந்த பிரச்சோ தனன்மகள்
பூணா ராகத்துப் பொங்கிள வனமுலை
வள்ளிதழ்க் கோதை வாசவ தத்தைக்குப்
பள்ளி மாடமும் பாற்பட வமைத்துப்
பாவையு முற்றிலும் பூவையுங் குழலும்

பி - ம். 1 வீட்டிடமுறையுண். 2 செறிதூண்.

பைம்பொற் கவறும் பளிக்குமணி நாயும்
சந்தனப் பலகையுஞ் சந்தப் பேழையும்
சாந்தரை யம்மியுந் தேங்கட் காழகிற்
புகைத்துளை யகலுஞ் சிகைத்தொழிற் சிக்கமும்
கோதைச் செப்புங் கொடிக்கொட் டகரமும்
கிளியு மயிலுந்...............................
தெளிமொழிப் பூவையுஞ் செம்பொற் கரண்டமும்
மணிக்கலப் பேழையு மணிக்கண் ணாடியும்
மணிதிகழ் விளக்கு மயிர்வினைத் தவிசும்
இருக்கைக் கட்டிலு மடைப்பைத் தானமும்
செங்கோ டிகமும் வெண்பாற் றவிசும்
முட்டிணை வட்டும் பட்டிணை யமளியும்
ஆல வட்டமு மணிச்சாந் தாற்றியும்
மாலைப் பந்து மேனைய பிறவும்
ஏந்திய கையர் மாந்தளிர் மேனி
மடத்தகை மகளிர் படைப்பொலிந் தியல

(உதயணனுக்குரியன அமைத்தல்)

அரைசியன் முறைமையி னண்ணற் கமைந்த
விரைபரி மாவும் வேழமுந் தேரும்
தெள்ளொளித் திரள்காற் றிகழ்பொன் னல்கிய
வெள்ளிப் போர்வை யுள்ளொளிப் படலத்து
வள்ளிக் கைவினை வனப்பமை கட்டிலும்
விளங்குமணி முகட்டின் றுளங்குகதிர் நித்திலக்
கோவைத் [1]தாளங் கொட்டையொடு துயல்வரும்
கொற்றக் குடையும் வெற்றி வேலும்
கொடியுங் கவரியு மிடியுறழ் முரசும்
[2] சங்க படவமுங் கம்பல விதானமும்
அங்காந் தியன்ற வழலுமிழ் பேழ்வாய்ச்
சிங்கா சனமும் பொங்குபூந் தவிசும்
பள்ளிப் பலவகைப் படுப்பவும் பிறவும்
வள்ளிப் போர்வையும் வகைவகை யமைத்துத்

(சிலதர் முதலியோர் செயல்)

தெளியப் படூஉ முளிவில் செய்தொழிற்

பி - ம். 1 தானங். 2 சங்கபடலமுங்.

சிலதரு மியவருஞ் சிந்து தேசப்
பலவகை மரபிற் பாடை மாக்களும்
ஆய்நல மகளிர் வேய்நலம் பழித்த
தோடா வந்த வாய்தொழி லாளரோ
டென்னோர் பிறருந் துன்னினர் சுற்ற
ஏவற் கமைந்த காவற் றொழிலொடு
கைக்கோ ளிளையருங் கணக்குவினை யாளரும்
மெய்க்கோண் மள்ளரு மீளி மாந்தரும்
புற்றகத் தொடுங்கி முற்றிய காலை
ஈரம் பார்க்கு மீயற் கணம்போல்
நேரம் பார்த்து நெடுந்தகைக் குரிசிலை
மீட்டிடம் பெற்றுக் கூட்டிடங் கூடிக்
கடிதுசெ லியற்கைப் பிடிமிசை யிருந்த
வருத்த மறிந்து மருத்துவர் வகுத்த
அரும்பெற லடிசி லவிழ்பதங் கொள்ளும்
பெரும்பக னாழிகை பிழையா தளக்குநர்
செவ்வி யறிந்து கவ்விதின் மொழிய

(உதயணன் நீராடி உண்ணல்)

நள்ளிரு ணடைப்பிடி யூர்ந்த நலிவினும்
பள்ளி கொள்ளாப் பரிவிடை மெலிவினும்
கவர்கணை வேடரொ [1]டமர்வினை வழியினும்
பல்பொழு துண்ணாப் பசியினும் வருந்திய
செல்வக் காளை வல்லவன் வகுத்த
வாச வெண்ணெய் பூசிப் புனைந்த
காப்புடை நறுநீர் காதலி னாடி
யாப்புடைத் தோழரொ டடிசி லயில

(வாசவதத்தை நீராடல் முதலியன)

[2] நிறைத்துவர் நறுநீர் சிறப்பொ டாடிய
தாமரை முகத்தியைத் தமனியப் பாவையிற்
காமர் கற்சுனைத் தானமுத னிறீஇத்
தன்ன மகவயிற் றவாஅத் தாதைக்கு
முன்ன ரெழுந்த முழுக்கதம் போலப்

பி - ம். 1 டமர்வினை. 2 நிறைத்துறை.

புறவயிற் பொம்மென வெம்பி யகவயின்
தண்மை யடக்கிய நுண்ணிறைத் தெண்ணீர்
வரிவளைப் பணைத்தோள் வண்ண மகளிர்
சொரிவன ராட்டித் தூசுவிரித் துடீஇக்
கோங்கின் றட்டமுங் குரவின் பாவையும்
வாங்கிக் கொண்டு வாருபு முடித்து
[1] மணிமா ராட்டத் தணிபெற வழுத்திக்
காவலன் மகளைக் கைதொழு தேத்தி
ஆய்பத வடிசின் மேயதை யூட்டி
அவிழ்மலர்ப் படலைத் தந்தை யகவயின்
நிகழ்வதை நிகழ்த்திப் புகழ்வரும் பொலிவொடு
பரிசனஞ் சூழ்ந்து பரிவுநன் கோம்ப
அன்றை யப்பக லசைஇ யொன்றிய
துன்பப் பெருங்கட னீந்தி யின்பத்
தேம நெடுங்கரை யெய்தி யாமத்து
மதியம் பெற்ற வானகம் போலப்
பொதியவிழ் பூந்தார்ப் புரவலற் றழீஇச்
சுரமுத லிவந்த மரமுத றோறும்
பால்வெண் கடலின் பனித்திரை யன்ன
நூல்வெண் மாடங் கோலொடு கொளீஇ
மொய்த்த மாக்கட் டாகியெத் திசையும்
மத்த யானை முழங்கு [2]மாநகர்
உத்தர குருவி னொளியொத் தன்றால்
வித்தக வீரன் விறற்படை வீடென்.

௫௭—படைவீடு முற்றிற்று.

௫௮—சயந்தி புக்கது.

(உதயணன் யானைமீதூர்ந்து செல்லல்)

விறற்படை சூழ விளங்குமணிப் பைம்பூண்
மறப்படை நோன்றாள் வத்தவர் பெருமகன்
போரகத் தெழுந்த பூசல் [3] வினைஞர்
மார்பகம் போழ்தலி னீரந் தீரா

பி - ம். 1 மணிமாருட்டத். 2 மாந்தர். 3 வினையாளர்.

நெய்த்தோர்க் கச்சையி னித்திலம் போலச்
செம்மை சேர்ந்த [1] வெண்மைய வாகிய
ஏந்தெழி லாகத் திருவரைத் தாழ்ந்த
பாந்த ளன்ன பரேரெறுழ்த் தடக்கையின்
மிதிதோற் கொல்லன் பொதியுலைச் செந்தீத்
ததர்வன போலச் [2] சிதர்வன சிந்திப்
புகரணிந் தோங்கிய நெற்றிப் பூங்கவுள்
அயறசும் பிருந்த வந்த ணாற்றத்து
மதக்களி சுவைக்கு மணிநிறப் பறவைத்
தொகைத்தொழி லோப்புந் தகைச்செவிக் கேற்பப்
பணைத்த வெருத்திற் பைங்கட் செயிர்நோக்
கணைப்பக் கண்டத னணிநிழற் சீற்றத்து
நீல மால்வரை நிமிர்ந்துநடந் தன்ன
கோலக் குஞ்சரங் கொள்ளப் பண்ணிப்
பாகர் தருதலிற் பணையெருத் தேறிக்
கருமுகின் மருங்கி னிருளறுத் தேர்தரும்
வெம்மைச் செல்வன் மேனிலை பெற்ற
தண்மைத் திங்களிற் றகைக்குடை நிழற்ற
உதையண குமர னொளிபெறத் தோன்றப்

(காவலர் முதலியோர் செயல்)

புதைகுப் பாயத்துப் பூண்ட வாளிற்
கடுங்கட் காவலர் கொடுங்கோடு சிலைப்ப
எப்பான் மருங்கினு மொய்ப்புற்று விளங்கிக்
கிழியிடம் பெறாஅர் வழியிடம் பார்ப்ப
யானையும் புரவியுஞ் சேனையுஞ் செல்ல
விடற்கருந் தோழர் புடைக்களி றேற

(அரும்பொருள்கள்)

அந்தண் பொதியிற் சந்தன மரமும்
நறுந்தண் சோலை யிறுங்காற் றிமிசும்
அடவி விந்தத் தியானை மருப்பும்
வடதிசை மாமலைச் சுடர்விடு பொன்னும்
குடகடற் பிறந்த படர்கொடிப் பவழமும்

பி - ம். 1 வெம்மைய. 2 சிதர்ப்பன.

தென்றிசைப் பிறந்த வெண்சுடர் மணியும்
விஞ்சையம் பெருமலை விளங்கொளி வெள்ளியும்
இலங்கை யீழத்துக் கலந்தரு செப்பும்
இமயத்துப் பிறந்த வயிரச் சாதியும்
கடாரத் திரும்பொடு கையகத் தடக்கி

(பலநாட்டுக் கைத்தொழிலாளர்)

யவனத் தச்சரு மவந்திக் கொல்லரும்
[1] மகதத்துப் பிறந்த மணிவினைக் காரரும்
பாடலிப் பிறந்த பசும்பொன் வினைஞரும்
கோசலத் தியன்ற வோவியத் தொழிலரும்
வத்த நாட்டு வண்ணக் கம்மரும்
தத்தங் கோண்மேற்றங் கைத்தொழி றோன்ற

(வாசவதத்தைக்குரிய வண்டியின் உறுப்புக்கள்)

ஆரமுஞ் சூட்டு நேர்துணைக் குழிசியும்
அச்சு மாணியும் வச்சிர யாப்பும்
அகவாய்க் கோடும் புறவாய்ப் பூணும்
பத்திரப் பந்தமுஞ் சித்திரப் புளகமும்
புறமணைப் பலகையு [2] மகமணைத் தட்டும்
[3] சந்திக் கோணமு மெந்திர வாணியும்
கஞ்சிகைக் கொளுவொடு கயிற்றுநிலை யமைத்து
மூக்குங் கோடுங் கோப்புமுறை கொளீஇ
முகத்தூ ணளவு மகத்தூ ணமைதியும்
நூலிட் டமைத்த கோலக் [4] கூடத்து
நாண்மீ னெழுக்குங் கோண்மீன் கோப்பும்
கரந்துறை கோளொடு நிரந்தவை நிரீஇயவற்
றேழ்ச்சியு மிறுதியுஞ் சூழ்ச்சியு முணர
அரும்பொறி மண்டல மகவயி னியற்றிப்
புலமை யுணர்ந்து புலங்கெழு நுட்பத்துப்
பெரும்பொறிப் பாவை மருங்கி னிரீஇ
முடியு மடியு முறைமையிற் புணர்ந்து
கொடியு மலருங் கொள்வழி யெழுதிப்
பிடியுங் களிறும் பிறவு மின்னவை

பி - ம். 1 மக்கத்துப். 2 ம் வகமனத். 3 சிந்திக். 4 கூட்டத்து.

வடிமாண் சோலையொடு வகைபெற வரைந்து
நயத்திறம் பொருந்த நாடகங் கண்டும்
விசித்திர வனப்பின் வீணை யெழீஇயும்
பொன்னு மணியும் பன்மலர்த் தாரும்
திருத்தி யணிந்து மருப்புநெய் பூசிச்
சேணெறி செல்லக் கோணெறி கொளுத்தி

(வாசவதத்தை வையமேறல்)

உலைவி லூர்ச்சி வலவன் காத்தலிற்
புதுத்துணை மகளி ரொதுக்குநடை யேத்தக்
காஞ்சன மாலை பூம்புறத் தசைஇ
மாசில் விண்ணவன் மடமகள் போல
வாசவ தத்தை வைய மேறக்
கோற்றொழி லாளர் மாற்றுமொழி யியம்பக்
கொடிபல நுடங்கக் குன்றஞ் சிலம்ப
இடியுறழ் முரசி னிருங்க ணெருக்கிக்
காட்டக மருங்கின் வீட்டிட மமைகெனப்

(குடிகள் செயல்)

பெருமலைச் சாரற் சீறூர் வாழும்
காலக் குறும்ப ரோலைத் தூதிற்
பெரும்பொறி யண்ண லரும்பொறி யொற்றிக்
குழிப்படு வேழக் கூன்மருப் பிரட்டையும்
வரைப்படு தேனுஞ் சினைப்படு கனியும்
வீணைத் தண்டும் வேய்படு முத்தும்
கானத் தகிலு மேனத் தெறியும்
பொறிப்புலித் தோலு மறுப்பிய லூகமும்
மந்திப் பிணையொடு மற்றவை பிறவும்
தந்திறை தந்து முந்துசிறைப் பட்ட
அற்ற காலத்து முற்ற நோக்கி
அடியுறை செய்தொழிற் குடிமுதல் பிழைத்தல்
இருநிலம் பெயரினு மெம்மாட் டிலவெனப்
பெருமகன் றமரொடு தெளிவனர் தேற்றி

(உதயணனும் பிறரும் சயந்தியை அடைதல்)

உழைப்படை யாப்பிற் புடைப்படை காப்ப

மிலேச்ச மன்னர் தலைப்படை யொட்ட
நற்படைத் தோழர் விற்படை பின்வரக்
கடல்கிளர்ந் தன்ன வடலருந் தானை
இறும்பம லடுக்கத்துக் குறும்புபல போகி
அரிலற லகவயி னுடுத லானு
வரியகட் டலவன் வள்ளுகி ருற்றெனக்
கன்னி வாளை யுண்ணு தொடுங்கும்
தண்பணை தழீஇய வண்பணை வளநா
டருமிளை யுடுத்த வமைவிற் குன்றாது
பெருமலை சூழ்ந்த வரிதிய லமைவோ
டிழிக்கப் படாஅ வெழிற்பொலி வெய்திப்
பெருமண் ணுவாவும் பேராப் பல்படை
உருமண் ணுவாவுக் குரிமையி னிருந்த
சயந்தியம் பெரும்பதி யமர்ந்துபுக் கனரால்
இயைந்த செம்மையொ டியைந்திசி னோரென்.

௫௮—சயந்திபுக்கது முற்றிற்று.

முதலாவது

உஞ்ஞைக்காண்டம் முற்றுப்பெற்றது.*

---

*இதன்பின், "இந்தக் காவ்யமெழுதினது, அன்பூர் நயினான் அழத கவி யெழுத்து; நெல்வேலி நாதர் வடிவம்மை அழகியமன்னார் முன்னிற்க" என்பது ஒரு பிரதியிலும், "நெல்லைக் காந்திமதியம்மன் துணை" என்பது மற்றொரு பிரதியிலும் எழுதப்பெற்றிருந்தன.

இரண்டாவது

இலாவாண காண்டம்.

க—நகர் கண்டது.

(நகரமாந்தர் செயல்)

சயந்தியம் பெரும்பதி யியைந்தகம் புகுதலின்
தாதுமல ரணிந்த வீதி தோறும்
பழுக்குலைக் கமுகும் விழுக்குலை வாழையும்
கரும்பு மிஞ்சியு மொருங்குட னிரைத்து
முத்துத் தரியமும் பவழப் பிணையலும்
ஒத்த தாம மொருங்குடன் [1] பிணைஇப்
பூரணப் பெருங்கடைத் தோரண நாட்டி
அருக்கன் வெவ்வழ லாற்றுவ போல
விரித்த பூங்கொடி வேறுபல நுடங்க
எண்வகைச் சிறப்பொடு கண்ணணங் கெய்த
விடாஅ விளக்கொளி வெண்பூந் தாமமொடு
படாகையும் விதானமும் பாற்கடல் கடுப்ப
இருமயிர் முரச முருமென வுரறக்
கடமுழக் கின்னிசை யிடையிடை யியம்ப
வெந்துய ரருவினை வீட்டிய வண்ணலை
இந்திர வுலக மெதிர்கொண் டாங்கு
மகளிரு மைந்தருந் துகணிலந் துளங்க
நற்பெருங் கடைமுத னண்ணுவனர் குழீஇப்
பொற்பெருங் குடத்திற் புதுநீர் விலங்கி

(நகரமாந்தர் உதயணனுக்கு உபசாரங்கூறி வரவேற்றல்)

இருள்கண் புதைத்த விருங்கண் ஞாலத்து
விரிகதிர் பரப்பிய வெய்யோன் போல
வெங்க ணிருட்டுய [2] ரிங்க ணீக்கிய
பொங்குமலர்த் தாரோய் புகுகென் போரும்
..............................ளுட்கா தொழுகிற்

பி - ம். 1 பணைஇப். 2 ரிங்கண்.

பகைவ ரெண்ணம் பயமில வென்னும்
நீதிப் பெருமைநா லோதியு [1] மோராய்
யானை வேட்கையிற் சேனை நீக்கிப்
பற்று மன்னனிற் பற்றவும் பட்டனை
பொற்றொடிப் [2] பாவையை யுற்றது தீரக்
கொற்ற மெய்திக் கொண்டனை போந்த
மிகுதி வேந்தே புகுகென் போரும்
பயங்கெழு நன்னாடு பயம்பல தீரப்
புகுந்தனை புகன்றுநின் புதல்வரைத் தழீஇ
ஒன்னா மன்னனை யோடுபுறங் கண்டு
நின்னகர் நடுவண் மன்னுகென் போரும்

(நகரமாந்தர் வாசவதத்தையைக் கண்டுகூறல்)

மாயோன் மார்பிற் றிருமகள் போலச்
சேயோன் மார்பிற் செல்வமெய் தற்கு
நோற்ற பாவாய் போற்றெனப் புகழ்நரும்
திருமலர்ச் செங்கட் செல்வன் றன்னொடு
பெருமகன் மடமகள் பின்வரக் கண்டனம்
உம்மை செய்த புண்ணிய முடையம்
இம்மையின் மற்றினி யென்னா கியரென
அன்புறு கிளவியி ரின்புறு வோரும்
மண்மீக் [3] கூரிய மன்னவன் மடமகள்
பெண்மீக் [4] கூரிய பெருநல வனப்பின்
வளைபொலி பணைத்தோள் வாசவ தத்தை
உளளென மற்றியா முரையிற் கேட்கும்
அவணலங் காண விவண்வயிற் றந்த
மன்னருண் மன்னன் மன்னுகென் போரும்

(யூகியை வாழ்த்துபவர்)

கருத்திற் சூழ்ச்சியொடு [5] கானத் தகவயிற்
பெருந்திறல் வேந்தனெம் பெருமாற் சிறைகொள
மாயச் சாக்காடு மனங்கொளத் தேற்றி

பி - ம். 1 மோதாய். 2 பாவையுற்றது. 3 கூறிய. 4 கூறியப்.
5 கரணத்.

ஆய மூதூ ரகம்புக் கவன்மகள்
நாகுவளை முன்கை நங்கையைத் தழீஇப்
போகெனப் புணர்த்த போகாப் பெருந்திறல்
யூகியு மன்னுக வுலகினு ளென்மரும்

(உதயணனைப் புகழ்வோர்)

வியன்கண் ஞாலத் தியன்றவை கேண்மின்
நன்றாய் வந்த வொருபொரு ளொருவற்கு
நன்றே யாகி நந்தினு நந்தும்
நன்றாய் வந்த வொருபொரு ளொருவற்
கன்றாய் மற்றஃ தழுங்கினு மழுங்கும்
தீதாய் வந்த வொருபொரு ளொருவற்குத்
தீதே யாகித் தீயினுந் தீயும்
தீதாய் வந்த வொருபொரு ளொருவற்
காசில் பெரும்பொரு ளாகினு மாமெனச்
சேயவ ருரைத்ததைச் செவியிற் கேட்கும்
[1] மாயி காஞ்சனம் வத்தவ ரிறைவற்குப்
பெருஞ்சிறைப் பள்ளியு ளருந்துய ரீன்று
தீயது [2] தீர்ந்தத் தீப்பொரு ளூர்ந்தவன்
செல்வப் பாவையைச் சேர்த்திச் செந்நெறி
[3] அல்வழி வந்துநம் மல்ல றீர
நண்ணத் தந்தது நன்றா கியரெனக்
கண்ணிற் கண்டவன் புண்ணியம் புகழ்நரும்
ஓங்கிய பெருங்கலந் தருக்கிய வுதயணன்
தேங்கமழ் கோதைமென் றிருநுதன் மாதரை
வேண்டியுங் கொள்ளான் வேட்டனென் கொடுப்பிற்
குலத்திற் சிறியவன் பிரச்சோ தனனென
நிலத்தின் வாழ்ந ரிகழ்ச்சி யஞ்சி
யானை மாயங் காட்டி மற்றுநஞ்
சேனைக் கிழவனைச் சிறையெனக் கொண்டு
வீணை வித்தகம் விளங்கிழை கற்கென
மாணிழை யல்குன் மகணலங் காட்டி
அடற்பே ரண்ணலைத் தெளிந்துகை விட்டனன்
கொடுப்போர் செய்யுங் குறிப்பிஃ தென்மரும்

பி - ம், 1 மாயாக்கஞ்சனம். 2 தீர்ந்ததீப். 3 அந்தணனல்லதூநம்,

மற்று மின்னன பற்பல பயிற்றி
மகளிரு மைந்தரும் புகழ்வன ரெதிர்கொள
அமரர் பதிபுகு மிந்திரன் போலத்
தமர்நகர் புக்கனன் றானையிற் பொலிந்தென்.

௧—நகர்கண்டது முற்றிற்று.

உ—கடிக்கம்பலை.

பொலிந்த சும்மையொடு பொன்னணி மூதூர்
மலிந்தகம் புக்கபின் மண்பொறை கூரப்
பெறலரும் பெருங்கிளை யிறைகொண் டீண்டி
இன்மகி ழிருக்கை யேயர் மகனொடு
தண்மகிழ் நெடுங்குழற் றத்தொளித் தாமத்து
மதிக்கவி னழித்த மாசறு திருமுகத்
தணிக்கவின் கொண்ட வையரித் தடங்கண்
வனப்புவீற் றிருந்த வாசவ தத்தை
வதுவைச் செல்வம் விதியிற் கூறுவென்

(கணியின் சிறப்பு)

எண்டரும் பெருங்கலை [1] யொண்டுறை போகிக்
கண்ணகன் புணர்ப்பிற் கவின்பெற நந்தி
விண்ணகம் விளங்கு மேதகு நாட்டத்த
நாற்பொரு ளுணர்ந்து பாற்பொருள் பன்னி
நூற்பொரு ளுணித்துத் தீப்பொரு ளொரீஇ
அலகை வேந்தற் குலகங் கொண்ட
ஒழுக்க நுனித்த வழுக்கா மரபிற்
புணர்ப்பியல் காட்சியன் புரையோர் புகழ
நிழற்பெருங் குடையு நேரா சனமும்
செருப்பொடு புகுதலுஞ் சேனை யெழுச்சியும்
யானையுந் தானையு மேனைய பிறவும்
மண்ணகக் கிழவர் மனக்கோ ளுருது
விண்ணகக் கிழவனின் விழுப்பங் [2] கூறித்
தம்மிற் பெற்ற தவம்புரி தருக்கத்
தரும்பரி சாரத்துப் பெருங்கணி வருத்த

பி - ம். 1 யெண்டுறை. 2 கூறித்.

(வள்ளுவன் மணநாளை அறிவித்தல்)

நன்னா ளிதுவெனப் பன்னா டறியப்
பசும்பொற் பலவார் விசிந்து பிணியுறீஇக்
[1] கோதை முத்தொடு தாமந் ததைஇ
ஏற்றுரி போர்த்த விடியுறழ் தழங்குரற்
கோற்றொழில் வேந்தன் கொற்ற முரசம்
பெரும்பணைக் கொட்டிலு ளரும்பலி யோச்சி
முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித்
திருநாள் படைநாள் கடிநா ளென்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்
நறுவெண் சாந்தொடு மாலை யணிந்து
மறுவில் வெண்டுகின் மருங்கணி பெறீஇ
அணைமிசை யமர்தந் தஞ்சுவரு வேழத்துப்
பணையெருத் தேற்றிப் பல்லவர் சூழத்
தேர்திரி மறுகுதோ றூர்முழு தறியப்
பொலிக [2] வேல்வலம் புணர்க பூமகள்
மலிக மண்மகண் மன்னுக மன்னவன்
மல்லன் மூதூர்ப் பல்லவர் கேண்மின்
திருவொடு புணர்ந்து தீயவை நீக்கி
உருவொடு புணர்ந்த வொளியின ராகுமின்
பல்களிற் றியானைப் படைப்பெரு வேந்தன்
மெல்லியற் குலமகண் மிடைமணிப் பைம்பூட்
சிலம்பொலி சீறடிச் சென்றேந்து புருவத்
திலங்கொளி வாட்க ணின்னகைத் துவர்வாய்
வாசவ தத்தையொடு வதுவை கூடிக்
கோல நீண்மதிற் கொடிக்கோ சம்பி
மாலை மன்னவன் மணமக னாகும்
காலை யிதுவெனக் கதிர்மணிக் கடிப்பிற்
கண்ணதிர்ந் தியம்ப வின்மொழி பயிற்றிக்
கல்லென வறையு மொல்லென் கம்பலை
அறைந்தறி வுறீஇய பின்றை நிறைந்த

பி - ம். 1 தோகைமுத்தொடு. 2 செல்வம்.

(வீட்டை அலங்கரிப்பவர்)

பெரும்பெயர் மூதூர் விரும்புபு துவன்றிப்
படையமை நெடுமதிற் கடைமுகந் தோறும்
பசும்பொற் றோரணம் விசும்புற நாட்டி
அரும்பொற் றூரோ டணிகதிர் முத்தின்
இரும்பெருந் தாம மொருங்குடன் வளைஇ
உத்தம வேழத் துயர்புறம் பொலிய
வித்தக வெண்குடை விரகுளி கவிப்ப
மணிக்கைக் கவரி மரபின் வீசுநர்
புடைக்களி றொருங்குடன் புகூஉ மகலத்
தடைப்பமை பெரும்பொறி யாப்புமுதற் கொளீஇப்
பத்திர மணிந்த சித்திரக் கதவின்
வாயி றோறும் வலத்து மிடத்தும்
[1] தாயின் மாடத்துத் தாண்முத லெல்லையுட்
சதிரத் திண்ணைத் தண்பூம் பந்தருட்
பழுக்காய்க் குலையும் பழங்காய்த் துணருமம
களிக்காய்ப் பறியுந் துவர்க்கா [2] யும்பலும்
பளிக்காய்க் குப்பையும் பலம்பெய் பேழையும்
தளிரிலை வட்டியொடு தாதுபல வமைத்துச்
சுண்ணப் பெருங்குடம் பண்ணமைத் திரீஇ
எண்ணு தீயுந ரின்மொழிக் கம்பலும்

(அறச்சாலை)

தண்ணிழற் பொதிந்த வெண்மணற் பந்தர்
கண்ணுறக் கவினிக் கைப்புடை நிறைந்த
செல்வச் சாலையொடு பல்வழி யெல்லாம்
அந்த ணாளரொ டல்லோர் பிறர்க்கும்
அமுதி னன்ன வறுசுவை யடிசில்
நெய்ச்சூட் டமைந்த சிற்றூண் பந்தரோ
டெப்பொழு தாயினு மப்பொழு தீயும்
தூம நவின்ற நாமக் கைவினை
மடைத்தொழில் வழாஅ [3] வாழ்க்கையர் பயின்ற
அறச்சோற் றட்டி லகத்தும் புறத்தும்

பி - ம். [1] ஙாயின். [2] யுமலும். [3] வாழ்க்கை பயின்ற.

முரட்கோ லிளைய ரரண்மாட் டியற்றி
முட்டாது நடாஅ மட்டுண் கம்பலும்

(சிறார் ஏவல் மகளிர் முதலியோர் செயல்)

பவழப் பட்டத்துப் பளிக்குமணித் தூணிற்
றிகழ்பொற் போதிகைச் செம்பொற் செழுஞ்சுவர்
வெள்ளி வேயுள் வெள்ளியம் பலகைப்
பீடிகை நிறைத்த மாட மறுகிற்
கொடுப்போர் வீழ்த்த குங்குமக் குழையலும்
தொடுப்போர் வீழ்த்த தூவெள் ளலரும்
வேதியர் கடைத்தலை வேள்விச் சமிதையும்
வாதிகர் கடைத்தலை வாசச் சுண்ணமும்
கலந்தோ ருதிர்த்த கலவைச் சாந்தமும்
புலந்தோர் பரிந்த புதுப்பூ மாலையும்
சிறாஅர் வீழ்த்த செம்பொற் கண்ணியும்
அறாஅ மறுகி னுவணப் பலியும்
பசுங்காய் தெவிட்டும் பற்கூட் டரத்தமும்
இயங்குந ரின்புற வின்னவை பிறவும்
காட்டெனக் கமர்ந்து கூட்டுந ரமைத்த
கலவைக் கொழுங்களி யெழுதுக ளவித்து
வெறிக்களங் கடுப்ப வீதியு முற்றமும்
நிறைப்போது பரப்பி நெடுங்கடை தோறும்
அணித்தகை சிதைத்தன ரிவரென வாடும்
முனித்தலைச் சிறாரை முன்னில் வாங்கித்
தாயரைக் காட்டியவர் தவறெடுத் துரைக்கும்
ஏவன் மகளிர் வாய்மொழிக் கம்பலும்

(சீனலயமும் அங்கே நடைபெறுவனவும்)

வண்ணக் கலிங்கத்துக் கண்ணறைக் கண்டம்
தலையொடு தலைவர விலையடுக் கிரீஇக்
கச்சுவாய் கோடித்து முத்துப்புரி நாற்றி
ஒண்மணித் தாரொடு பன்மணிப் புளகம்
விலங்கு நீளமு மிலங்கித் தோன்றி
மிழற்றுபு விளங்கு மெழிற்பொலி வெய்த
வல்லவன் புணர்ந்த பல்வகைக் கம்மத்து

மங்கலப் பெருங்கொடி மங்குல்வா னத்துள்
உரற்றுமழை கிழிக்கு மொண்மணி யுச்சிப்
பல்லோர் காணும் பரூஉத்திர ளடியிற்
பன்மணி கண்டத்துக் கண்ணிழற் கலங்கி
ஓங்குபு நிமிர்ந்த [1] காம்பொடு கவ்விப்
பயில்பூம் பத்திக் குயில்புரை கொளுவின
[2] வட்டமைத் தியற்றிய வலம்புரி சாற்றி
ஆடகப் பொற்கயிற் றரும்பொறி யாப்பின
வயிரப் பல்லரிப் பயில்பூம் பத்திக்
கிண்கிணித் தாரொடு கலவிய கதிரணி
கொளுவொடு படாஅக் கொடிப்பவ ழத்துத்
தாமந் தாழ்ந்து தலைமுதற் கோத்த
நீலக் காழ்மிசை நெற்றி [3] மூழ்கி
உண்ணுகுப் போலையுட் கண்விரித் தியற்றிய
பாத சக்கர மாறெதிர் நீர்தரக்
கோதைத் தாமமொடு கொட்டைமுதற் கோத்த
இலங்கொளி முக்குடை யெந்திரத் தியங்க
அறிவர் சரித முறையிற் சுட்டி
உரையு மோத்தும் புரையாப் புலமைப்
பெரியோர் நடாவுந் திரியாத் திண்ணெறி
ஓராஅ வுலகிற் கோங்குபு வந்த
அராஅந் தாணத் தருச்சனைக் கம்பலும்

(வீதிகளை அலங்கரிப்பவர்)

கண்ணிற் கண்ட நுண்வினைக் கம்மம்
கையிற் புனையுங் கழிநுண் ணுளர்
ஏட்டினுங் கிடையினு மூட்டமை கிழியினும்
நாற்றமுந் தோற்றமும் வேற்றுமை யின்றி
ஏற்ப விரீஇய விலையுங் கொழுந்தும்
கொழுந்திற் கேற்ற வழுந்துபடு குலாவும்
குலாவிற் கமைந்த கோலச் சந்தியும்
முகிழும் போதும் [4] மகிழ்சுழ லலரும்
அன்னவை பிறவும் பன்மரம் பண்ணித்
தீட்டின ரன்றியு நாட்டினர் நிரீஇக்

பி - ம். [1] தாம்பொடு. [2] கட்டமைத். [3] மூள்கி. [4] விழி சூழலரும்.

கழைமுதற் கொளீஇக் கைபுனை வனப்பின்
இழைமுதற் கொளீஇய வெழில வாகிக்
காம வல்லியுங் கதலிகை யணிந்த
தாம வல்லியுந் தண்பெரும் படாகையும்
காலேந் திரமுங் கைவயிற் பிரியா
நூலேந் திரமு நோக்கினர் போகாப்
பத்திப் படாமுஞ் சித்திரக் கொடியும்
இன்னோ ரன்ன வென்னோர் சேரியும்
உறப்புணர்த் தார்க்குஞ் சிறப்பொலிக் கம்பலும்

(முதியோர் கூற்று)

இடியுறழ் முரசி னிறைமக னணியும்
முடியணி யொழிய முற்றணிப் பெருங்கலம்
யாவர் வேண்டினும் யாவரு மீமின்
ஈத்ததி னிரட்டி கோத்தரு நுமக்கென
நாற்பெருந் திசையு நகரங் காடியுள்
வாய்த்த செய்தொழில் வாணிகர்க் கறையும்
கோப்பெரு முதியர் வாய்ப்பறைக் கம்பலும்

(மகளிர் தம் புதல்வரை அலங்கரித்து விடுத்தல்)

[1] குடிக்கணி கொடுக்குங் கொற்றத் தானை
இடிக்கண் முரசி னேயர் பெருமகன்
வதுவை நாப்பட் புதுவது புணர்ந்து
நுந்தையர் தம்மொடு செலீஇ யெந்தையர்
வருக வீண்டென வறிதி னோடும்
தம்மமர் புதல்வரைத் தலையடி காறும்
கம்மப் பல்கலங் கைபுனைந் தணிந்து
செம்மலின் [2] விடுக்குஞ் சிறந்த சாயல்
அம்மென் கூந்த லரிவையர் கம்பலும்

(கள்ளுண்பார் செயல்)

வத்தவ ரிறைவன் வதுவையு ணம்மோ
[3] டொத்தவர் வரிசை யொத்துப் புகுதலிற்
பத்திபட நிரைத்த பைங்குலைத் தாறும்
தெங்கி னூறலுந் தேம்பிழித் தேறலும்

பி - ம். [1] குடிக்களி. [2] விளக்குஞ். [3] டொத்த வரிசை.

தாங்கரும் பெண்ணைப் பூங்குலை யமுதமும்
மதுவுஞ் சீதமும் புதுமலர் வேரியும்
உக்கிர வூறலுஞ் சிக்காரத் தெளியலும்
......................காஞ்சியத் தெளிவும்
கரும்பி னூறலும் பெரும்பொதித் தேனும்
இவையும் பிறவுஞ் சுவைதெரி யாளர்
விட்டுண லாற்று மட்டுமலி நறுங்கள்
பெய்ம்மின் றம்மி னீமின் பிறர்க்கெனத்
தம்மி ரூறு முண்மகிழ்ந் துரைக்கும்
கள்ளுண் ணுள ரொள்ளொலிக் கம்பலும்

(யானைப்பாகர்)

மாற்றுத்தொழின் மன்னர் மயங்கிய ஞாட்பினுட்
கூற்றுத்தொழி லிளையர் குடர்சூடு மருப்பின
வெம்படை மிகப்பலர் மெய்ம்மிசை யெறியினும்
தம்படைக் கொல்காப் பண்புடன் பயிற்றி
மூத்தோர் பெண்டிர் நீத்தோர் மகாஅரென
நாற்பா லோரையு நூற்பாற் செய்தொழிற்
பாகர் வேண்டினும் பையுள் செய்யா
வேக வுள்ளத்து வேழந் தெரிந்து
நிரந்தன காட்டிய நேயந் தோன்றப்
பார்படு முத்தொடு தாருடன் பூட்டி
ஐவகை வண்ணத்துக் கைவல் கம்மியர்
கொடியும் பத்தியும் வடிவுபட வெழுதிச்
சூழியு மோடையுஞ் சுடர்மணிக் கோவையும்
ஊழுறிந் துயர்த்த வுத்தம வுயர்ச்சிய
1 மண்ணுநீர் சுமக்கற்குப் பண்ணுமுறை பிழையாக்
கோல யானை நாலிரண்டு மிகையா
ஆயிர மணிந்தவை கோயிலுட் டரூஉம்
பாகிய வுள்ளத்துப் பாகர் கம்பலும்

(மஞ்சனநீர் கோணர்தற்குரிய மகளிர்)

மணியரி யடக்கிய மாண்வினைப் பகுவாய்
அணிமிழற் றரவத் தம்பொற் கிண்கிணி

பி - ம். 1 மண்ணுகிர்.

சிலம்பொடு சீறடிப் புறம்புதைத் தரறறவும்
அம்மென் மருங்கு லசைய வடிபரந்த
கொம்மை கொண்ட தன்மைய வாகிக்
கோங்கரும் பழித்த வீங்கிள மென்முலை
உட்பட விட்ட வட்ட நுடக்கத்துச்
சுண்ண விலேகை வண்ணஞ் சிதைய
மண்ணிய நித்தில [1] வடத்தொடு புரளும்
பல்கலஞ் சுமத்த லாற்றாது பையென
ஒல்குபு நுடங்கு மொருபிடி நுசுப்பினர்
மண்ணக மருங்கின் மதிபல பயின்றன
விண்ணக மென்னையும் விடுக்குங் கொல்லென
மதியகம் வெள்க வனப்பொடு புணர்ந்த
கதிர்விடு திருமுகத் தெதிர்வன போலச்
சென்றுவந் துலாவுஞ் சேயரிக் கண்ணினர்
ஈன்றோர் மாட்டு மெதிர்முக நோக்காது
மான்றோங் கூறு மம்மர் நோக்கினர்
பொன்னணி கொண்ட பூந்தண் சிகழிகைக்
கன்னி மகளிர் கண்ணணங் குறாஉம்
ஒவ்வா வணியின ரொப்பக் கூடி
மண்ணகக் கிழவற்கு மண்ணுநீர் சுமக்கும்
புண்ணிய முடையீர் போதுமி னீங்கென
வாயி லோறும் வந்தெதிர் கொள்ளப்
போர்வை மடக்கார் பொலியப் புகுதரும்
கோயின் மகளிர் கோல மெல்லடி
நூபுரங் கலந்த பாடகக் கம்பலும்
அன்னவை பிறவும் பன்னா றுயிரம்
ஒடிவில் கம்பலை யொருங்குதலைக் கூடிக்
கடிகமழ் செல்வங் கலந்தன்று நகரென்.

உ—கடிக்கம்பலை முற்றிற்று.

பி - ம். 1 வட்டத்தோடு.

௩.—கட்டிலேற்றியது.

(சோதிடர் நல்ல முகூர்த்தம் அறிந்து கூறல்)

கடிகமழ் செல்வங் கலந்த காலை
இடியுறழ் முரசி னோயர்பெரு மகற்கும்
பிடிமகிழ் யானைப் பிரச்சோ தனன்மகள்
வடிமலர்த் தடக்கை வாசவ தத்தைக்கும்
ஓருயிர்க் கிழமை யோரை யளக்கும்
பேரிய லாளர் பிழைப்பிலர் நோக்கி
வழுவில் செந்தீப் பழுதில வேட்கும்
பொழுதுமற் றிதுவெனப் புரையோர்க் குரைப்ப

(மணப்பந்தர்)

அறந்தொழின் முத்தீ யருந்துறை போகிய
மறைநவி னாவின் மரபிய லந்தணன்
பல்பூம் பந்தருட் செல்வஞ் சிறக்கும்
இருநிலத் திலக்கண மியற்பட நாடி
வெண்மண னிரப்பங் கொளீஇக் கண்ணுறப்
புண்ணியப் பலாசின் கண்ணிறை சமிதை
முக்குழிக் கூட்டத் துட்பட வோக்கி
ஆற்றுச் செந்தீ யமைத்தனன் மேற்கொள
ஐயொன் பதின்வகைத் தெய்வ நிலைஇய
கைபுனை வனப்பிற் கான்முத றோறும்
[1] ஆரணங் காகிய வணிமுளை யகல்வாய்ப்
பூரண பொற்குடம் பொலிய விரீஇ
வெண்மணன் ஞெமிரிய தண்ணிழற் பந்தருள்
ஐஇய வாசவா னெய்யொடு கலந்த
ஐவகை யுணவொடு குய்வளங் கொளீஇ
நறிய வாகிய வறுசுவை யடிசிற்
பெருஞ்சோற் றமலை பரந்துபலர் மிசையும்
மிச்சி லெய்தா வுட்குவ ரொருசிறை
......திசை யம்மிக் குணதிசைக் கோணத்
தீடமை பீடிகை பாடுபெற விருந்த
பொன்னயி ராணி முன்வயிற் பேணிப்

பி - ம். [1] ஆரணங்காகி.

பன்னிய பனுவற் பார்ப்பன முதுமகன்
அந்த ணாவிரை யலரு மறுகையும்
நந்தி வட்டமு மிடையிடை வலந்த
கோல மாலை நாற்றி வானத்
தருந்ததி யரிவையோ [1] டாணிகற் பரவும்
பொருந்துமொழிப் புறநிலை புணர்ந்துபலர் வாழ்த்தி
நான்முறை படைத்த நான்முகக் கடவுள்
தாண்முதற் றுனத்துத் தகைபெற விரீஇப்

(தெய்வ நிவேதன வகை)

பாலுலை வெந்த வாலவிழ்க் கலவையும்
தேனுலை வெந்த தூநிறத் துழவையும்
புளியுலை வெந்த பொன்னிறப் புழுக்கலும்
கரும்புலை வெந்த கன்னற் [2] றுழவையும்
நெய்யுலை வெந்த மைந்நிறப் புழுக்கொடு
பொன்னகன் மணியகல் செப்பகல் வெள்ளி
ஒண்ணிறப் போனக மண்ணக மலிர
அரிவைய ரடுமடை யமிழ்துகொண் டோச்சிப்

(தேவரை வழிபடுதல்)

பஞ்ச வாசமொடு பாகுவலத் திரீஇ
அஞ்செஞ் சாந்தமொடு மஞ்ச ணீவி
இருப்பக னிறைந்த நெருப்புநிறை சுழற்றித்
தேவர் தூம மேவர வெடுப்பி
மலையினீ ராயினு மண்ணினீ ராயினும்
அலைதிரைப் பௌவத் தகத்தினீ ராயினும்
விசும்பினீ ராயினும் விரும்பு வந்துநும்
பசும்பொ னுலகம் பற்றுவிட் டொழிந்து
குடைநிழற் றுனைக் கொற்றவன் மடமகள்
மடையமைந் துண்டு மங்கலந் தம்மென
ஒப்பக் கூறிச் செப்புவன ரளிப்பக்

(கன்னி மகளிர் செயல்)

கன்னி மகளிர் துன்னுவனர் சூழ
நான்முகக் கடவுளொடு [3] தாண்முதற் றுனம்

பி - ம். 1 டாணிகட். 2 குழவையும், குழைவையும். 3 தான்முதற்.

அன்னத் தொழுதியின் மென்மெல வலங்கொண்
டம்மென் சாயற் செம்முது பெண்டிர்
உழுந்துஞ் சாலியு முப்பு மலரும்
பசுங்கிளிச் சிறையெனப் பக்க நிறைத்த
பாகுஞ் சாந்தும் போகமொடு புணர்ந்த
மங்கல மரபின வங்கையு ளடக்கிக்
கொழுமுகைச் செவ்விரல் போதெனக் கூப்பி
எழுமுறை யிறைஞ்சுகென் றேத்துவனர் காட்ட
ஐதேந் தல்குலர் செய்கையிற் றிரியா
மடைத்தொழில் கழிந்தபி னடைப்பட நாட்டி

(காஞ்சனை வாசவதத்தையை உதயணனுக்கருகில் இருக்கச்செய்தல்)

அரம்போ ழவ்வளை யணிந்த முன்கைச்
சுருங்காச் சுடரொளிச் செம்பொற் பட்டம்
சூளா மணியொடு துளங்குகடை துயல்வரும்
புல்லகம் பொருந்திய மெல்லெ னோதிப்
பொன்னணி மாலை பொலிந்த பூமுடீஇ
வண்ணப் பூமுடி வாசவ தத்தையைச்
செண்ணக் காஞ்சனை [1] செவ்விதிற் றழீஇ
இலக்கந் திரியா தியற்பட விரீஇ
நலத்தகை மன்னவ னட்பொடு புணர்த்த

(உதயணன் திருமணச் சடங்குகளைச் செய்தல்)

புண்ணியப் புறநடைப் பண்ணமை யிருக்கையன்
உறுவரை யுதயத் துச்சிமுக நோக்கி
அமைதிக் கொப்ப வளந்துகூட் டமைத்த
சமிதைக் கிரிகை சால்புளிக் கழிப்பி
மந்திர விழுநெறித் தந்திரம் பிழையாது
துடுப்பிற் றேய்த்த சேதா நறுநெய்
அடுத்த செந்தீ யங்கழ லார்த்திப்
பைம்பொற் கிண்கிணி பரட்டுமிசை யார்க்கும்
செந்தளிர்ச் சீறடி செவ்வனம் பற்றிப்
போகமுங் கற்பும் புணர்ந்துட னிற்கென

பி - ம். 1 செவ்வியிற்.

ஆகுபொருள் கூறி யம்மிமுத லூரீஇ
நன்னெய் தீட்டிய செம்மல ரங்கைப்
பொம்மல் வெண்பொரி பொலியப் பெய்தபின்
நன்னிலை யுலகினு ளுவல் போலவும்
பொன்னணி நெடுமலை போலவும் பொழில்வயின்
மன்னுக விவரெனத் தன்னெறி பிழையான்
விதியிற் கூறிய விளங்கிழை வேட்கும்
அதிரா நெறியி னத்தொழில் கழிந்தபின்
மதியி னன்ன வாண்முகம் பொலிய
ஓடுகொடி மூக்கி [1] னூடுபோழ்ந் தொன்றுய்க்
கூடுதல் வலித்த கொள்கைய போலப்
பொருது போந்துலாம் போதரித் தடங்கண்
அமிழ்துசேர்ந் தனவக விதழ்நா ணிறக்கமொடு
பிறந்தவிற் பெருங்கிளை நிறைந்தொருங் கீண்டப்
பால குமரர் தோள்புகன் றெடுப்ப
நாடு நகரமும் கூடுதற் கருளி
யாயு மெந்தையுந் தீமுன் னின்று
வாயிற் கூடுதல் வராதிவண் வந்தென
வலிபுணர் வதுவைக்குச் சுளியுநள் போல
நடத்த றேற்று மடத்தகை மாதரை
வளைபொலி முன்கை வருந்தப் பற்றித்
தளையவிழ் தாரோன் வலமுறை வந்து
மறுவில் காதன் மக்களைப் பெறுகென
முறைமையிற் பிழையாது முகிழ்விரல் பற்றித
தகாஅக் காலந் தலைவரு மெனினும்
பகாஅக் காதலொடு பத்திமை..........
செஞ்சுடர் போன்ற வங்குலி நுழையா
வெஞ்சுடர் வீர னெஞ்சுமுத னீவித்
தென்மருங்கு மடுத்த தீர்த்தப் புன்மிசை
மென்மருங் கெழிலியை மெல்லென நடாஅய்
வதுவைத் தானம் [2] பொதுவந் தொன்றி
அந்த ணாள ராசிடை கூற
வெந்திறல் வேந்தன் பைந்தொடி யோடும்

பி - ம். 1 னூடுபோழ்ந்தன்றுய்க். 2 பொதுபந்தன்றி.

உத்தர கோணத் தத்தக வமைத்த
வேற்றுரி யதன்மிசை யாற்றுளி யிருந்து
படுசுடர்ச் செக்கர்ப் பசலை தீர
விடுசுடர் மதியமொடு வெண்மீ னிவர்ந்த
வடபான் மருங்கிற் சுடர்மீக் கூரிய
கற்புடை விழுமீன் காணக் காட்டிப்
பொற்றொடி நுதன்மிசைப் புனைவிரல் கூப்பி
மன்னிய வுலகினு ணின்னியல் பாக
என்வயி னருளென மும்முறை யிறைஞ்சுவித்
தெதிர்த்த விரதமொ டியல்பிற் பிழையாது
சதுர்த்தி யிருந்து கதிர்த்த காப்பொடு
மெய்ம்முத றிரியாது வேண்டுங் கிரிகையிற்
கைம்முதற் கேண்மை கழுமிக் கழிந்தபின்

(மணவறைக் கட்டிலின் சிறப்பு)

மருப்பினும் பொன்னினு மணியினும் புனைந்த
திருத்தகு திண்காற் றிருநிலை பெற்ற
வெண்பூம் பட்டிற் றிண்பிணி யமைந்த
பள்ளிக் கட்டில் வெள்ளிதின் விரிந்த
கோடுயர் பல்படை சேடுறச் சேர்த்தி
வயிரமும் வெள்ளியும் பவழமும் பொன்னும்
மணியு முத்து மணிபெறப் பரப்பி
அடிநிலை யமைத்து முடிநிலை காறும்

(உதயணனையும் வாசவதத்தையையும் பள்ளிக்கட்டிலின் மேலேற்றுதல்)

தாம நாற்றிக் காமங் குயின்ற
கோலச் செய்கை வாலணிப் பொலிந்த
எட்டி காவிதிப் பட்டந் தாங்கிய
மயிலியன் மாத ரியல்பிற் படுத்த
கட்டின் மீமிசைக் கட்டலர் கமழும்
ஒண்டார் மார்பி னுதயண குமரற்குத்
தண்டாக் காதலொடு தக்கவை யறிந்து
விண்ணவர் கிழவன் வீற்றிடங் கடுப்ப
மண்ணக மன்னர் மரபறிந் தியற்ற
அவ்வளைப் பணைத்தோ ளதிரா கரிகையைக்

கைவயிற் பிழையாது காஞ்சனை தழீஇ
உண்மை யுணரா நுண்மைப் போர்வையிவள்
பெண்மை காணிறே பிழைப்பிலென் யானெனத்
தன்னொளி சமழ்த்திவள் பெண்ணொளி புகற்ற
மண்ணார் மணிப்பூண் மாதரை யிரீஇயபின்
கண்ணார் குருசிலைக் கவின்பெற வேற்றித்
தகைமலர்த் தாரோன் றடக்கை பற்றியவள்
முகைமலர்க் கோதை முடிமுதற் றீட்டிச்
செம்பொற் றால மலிரப் பெய்த
மங்கல வயினி மரபுளி யுறீஇ
ஒல்லென் சும்மையொடு பல்வளந் தரூஉம்
உருமண் ணுவாவின் பெருநகர் மாந்தர்
ஆசில் செங்கோ லவந்தியன் மடமகள்
வாசவ தத்தையொடு வத்தவ றிறைவனை
முட்டில் செல்வமொடு முறையிற் பிழையாது
கட்டிலேற் றினராற் கருதியது முடித்தென்.

ஙு—கட்டிலேற்றியது முற்றிற்று.

ச—ஆருந்திங்கள் உடன்மயிர் களைந்தது.

கருதியது முடித்த கடிநாட் கோலமொடு
பருதி ஞாயிற் றுருவொளி திகழக்
கலிகெழு மூதூர் கைதொழு தேத்த
வலிகெழு நோன்றாள் வத்தவ றிறைவன்

(பிரச்சோதனன் சிறப்பு)

முதுநீர்ப் பொழிலுகம் [1] தெதிரின் றேதப்
பதினா றுயிரம் பதினறு வகைய
சுருக்க மின்றிச் சூழ்ந்துடன் றிரியாப்
பெருக்கத் தானைப் பிரச்சோ தனற்குப்

(பிரச்சோதனனுடைய தேவியர்)

பெருநில மன்னர் திருநகர்ப் பிறந்துதம்
நாட்டுப்பெயர் பொறித்த சூட்டுப்பொலி சுடர்நுதற்

பி - ம். 1 றெதிர்நின்றேதப்.

கொடிப்பூண் டிளைக்குங் கோல வாகத்து
வடிப்போழ்ந் தன்ன வாளரித் தடங்கண்
அருந்தவர்க் காயினுந் திருந்துமுக மிறைஞ்சாது
செங்கதிர் விரும்பும் பைங்கொடி நெருஞ்சிப்
பொன்புனை மலரின் புகற்சி போல
வெறுத்த வேட்கைத் தாழுளஞ் சிறப்பக்
[1] காதலற் கவாஅங் காம நோக்கத்
தீரெண் ணுயிரர் பேரெணப் பட்ட
ஓவிய ருட்கு முருவக் கோலத்துத்

(வாசவதத்தை தாயின் சிறப்பு)

தேவியர்க் கெல்லாந் தேவி யாகிக்
கோவீற் றிருப்புழிப் பூவீற் றிருந்த
திருமகள் போல வொருமையி னெட்டி
உடன்முடி கவித்த கடனறி கற்பின்
இயற்பெருந் தேவி வயிற்றகத் தியன்ற
வட்டப் பெரும்பூண் வாசவ தத்தையொடு
கட்டி லேற்றங் கடந்த பின்னர்

(மணக்காற் பந்தர் அமைத்தல்)

உயர்ந்த நண்பி னுருமண் ணுவாவும்
வயந்தக குமரனும் வத்தவற் கியற்றிய
..................ாளங் கழிந்து மூதூர் வாயிற்
றம்பெயர் நிறீஇய மன்பெரு மாந்தரும்
நிறையோம் பொழுக்கத்து மறையோம் பாளரும்
பன்னகர் தோறு மன்னவன் வேண்ட
முனைவர் வகுத்த புனைபூ ணகலத்துக்
காழகத் தொன்னூற் கருதுநெறி நுனித்ததன்
ஆழமைக் கடங்கா வமைவரு காட்சி
அரும்பொரு ளுணரும் பெருங்கணிச் சங்கமும்
திணைகளுங் கணக்கரு மினையவர் மொய்த்து
நாற்கயி றமைத்துக் கோற்கயிறு கொளீஇ
நன்குநிலை பெற்ற நாற்பத் தையணங்
குண்பத மெட்டெட் டெண்வர வாங்கி

பி - ம். 1 காதலிற்.

எண்பத் தெழுகோற் [1] றண்கையிற் றழீஇக்
கணக்க மாந்தர் கயிறிட் டளந்த
மணக்காற் பந்தருள் வடமென் மருங்குற்

(இடம் திருத்தல்)

குலத்தொடு புணர்ந்த நலத்தகு நண்பின்
அழுக்கா றகன்ற வொழுக்கா றேம்பிக்
கைவினை யைந்துங் கற்றகத் தடக்கி
மெய்யிற் றூய்மையொடு மேதகு வனப்பிற்
செயிர்வினை கடிந்துதஞ் சிறப்புவழித் தாங்கி
மயிர்வினை நுனித்த மாசில் கம்மத்துச்
[2] சிற்பியற் புலவர் நற்கென நாட்டிப்
[3] பதர்ச்சொற் பருப்பொருள் பன்னுபு நீக்கிப்
பொருட்சொன் னிரப்பும் புலவர் போலக்
கல்லு மோடும் புல்லுங் கரியும்
உமியு மயிரு மென்பு முட்பட
அமைவி றன்மைய வரித்துடன் களைந்து
விண்மேம் படூஉம் விழுத்தக வுடைத்தாய்
மண்மேம் படுத்து மணிநிழ லுறீஇ
வடக்குங் குணக்கும் வகையுளிப் பணித்துக்
குடக்குந் தெற்குங் கோண முயரி
நிரப்பங் கொளீஇ நின்ற நிலமிசை
விசும்புறை தேவர் வேள்விச் சேதான்
பசுஞ்சோற் றமலைப் பாசங் கொளீஇ
மறுவின் றமைந்த நறுவெண் சாந்திற்
பத்தியுங் கொடியும் பல்வழி யெழுதி
முத்தமு மணியுஞ் சித்திரத் தியற்றிய
ஆடகப் பொன்னு மகனில முதுபொழிற்
றன்பெயர் கொளீஇய மன்பெருஞ் சீர்த்தி
மரக்களி யன்ன திருத்தகு பொன்னும்
இரத்தினக் குப்பையு மிலங்கொளிப் பவழமும்
இன்னவை பிறவும் பன்முறை பண்ணித்
தொல்லோர் வகுத்தநூற் றுறைமுறை போகிய
நல்லா சிரியர் நடுவுநிலை யமைத்துக்

பி - ம். [1] றண்கயிற். [2] சிறப்பியற். [3] பகாசசொற்.

கீழ்த்திசை முதலா வாழ்த்துபு வணங்கித்
தெய்வம் பேணிக் கைவினைக் கம்மத்துச்
சத்தி முகமே சக்கர வட்டம்
பத்தி வரிப்பே பாவை நுடக்கம்
குஞ்சர முகமே நந்தி மலரவை
எஞ்சாத் திருவடி யெனப்பெய ரிவற்றுட்
போரடு மன்னர்க்குப் புரையோர் புகழ்ந்த
பாசடைத் தாமரைத் தாதகத் துறையும்
மாசின் மடமகண் மருங்கின் வடிவாய்க்
குலாஅய்க் கிடந்த கோலக் கோணத்துக்
கலாஅய்க் கிடந்து கவ்விய கொழுந்தின்
வள்ளியு மலருங் கொள்வழிக் கொளீஇ
வலமுறை வகுத்த நலமுறை நன்னகர்
நாற்பெரு வாயின் முதனூறு மேற்பத்
தமனியப் பேரிற் றலைநிலந் தழீஇய
கொழுங்களி யுழுந்துஞ் செழுங்கதிர்ச் செந்நெலும்
உப்பு மரிசியுங் கப்புரப் பளிதமொ
டைவகை வாசமுங் கைபுனைந் தியற்றிய
முக்கூட் டமிர்து மக்கூட் டமைத்துத்
தேனும் பாலுந் தயிருங் கட்டியும்
ஆனெயும் வெண்ணெயு மனையவை பிறவும்
பதினறு மணியும் பைம்பொன் மாலையும்
நுதியிற் பெய்து விதியுற விரீஇப்
பொதியிற் சந்தனம் போழ்ந்துகொண் டியற்றிக்
கதிரொளி பயின்ற கம்மக் கைவினை
நாற்கா லமைத்த பாற்பெரும் படுமணைப்
பொங்குமயிர்த் தவிசொடு பூமலர் புனைஇ
நண்ணிய சிறப்பொடு நாற்பெருந் திசையும்
பண்ணிய வுணவின் றிண்ணிலைக் குப்பையுள்
முடிமுதற் குத்தி யடிநிலைக் கமைந்த
பைம்பொன் விளக்கிற் செஞ்சுடர் மாட்டிக்

(உதயணன் வருதல்)

குறைவின் றமைந்த கோல நுட்பத்து
மறுவின் றமர்ந்த மங்கலப் பேரணி

மன்ன குமரன் றன்னோர் சூழ
உருத்த மன்ன ரூர்ச்சி வேழத்து
மருப்புக்கை யமைத்து வாய்முத றோறும்
உருக்குறு தமனியத் தொழுகுகொடி போட்டிட்
பவழக் கொட்டைப் பல்வினை நுனித்த
திகழணிச் செருப்பிற் சேவடி யிழிந்து
கடவுட் டானம் வலமுறை வந்தபின்
அடர்பொற் றிருநக ரறியக் காட்டி
நிலத்துமிசை யிழிந்த நிகரி னெடுமுடி
நலத்தகை யிந்திர னெழிற்பொலி வொப்ப
இலக்கண விருக்கை திருத்திய பின்றை

(வாசவதத்தை வந்து அமர்தல்)

நாணுக் கவின்கொண்ட நனிநா கரிகத்
தியாணர்ப் பூந்துகி லணிந்த வல்குல்
இலைப்பூண் கவைஇ முலைப்புறம் புதைஇப்
பொற்கொடி யிழையொடு நற்குடன் றாழ
ஏகவுத் தரிய மிடைச்சுவல் வருத்த
வட்டுடைப் பொலிந்த வண்ணக் கலாபமொடு
பட்டுச்சுமந் தசைந்த பரவை யல்குல்
இயைந்தணி பெற்ற வேன்ற வவ்வயிற்
றசைந்தணி கொண்ட வம்மென் சாயற்
றாமரை யெள்ளிய காமரு திருமுகத்
தின்பக் காம னெய்கணை போலச்
செங்கடை [1]போழ்ந்த சிதரரி மழைக்கண்
வண்ணக் கோதை வாசவ தத்தையைச்
செண்ணக் காஞ்சனை செவ்விதிற் றழீஇ
இகல்வரை மார்பற் கியைய விரீஇயபின்

(அந்தணர் முதலியோர் செயல்)

அகன் [2]மனைக் காவ லாற்றுளி நிறீஇ
எண்டிசை மருங்கினு மிவர்திரை யேய்ப்பக்
கண்டப் பூந்திரை காழ்முதற் கொளீஇ
எழுதுவினைக் கம்மத்து முழுமுதற் கோத்த

பி - ம். 1 போந்த. 2 மணைக்காவல்.

முத்த மாலை முடிமுதல் வருட
ஒத்த வோரை நோக்கி யோங்கிய
கைத்தொழி னுனித்த வித்தக வாளர்
பொன்புனை நன்கலத் தின்பத மார்ந்தபின்
மணியறைந் தன்ன மாணிருங் குஞ்சி
[1] அணிவலஞ் சுரிந்த வமைதிக் கேற்ப
வளர்பிறை யன்ன மல்லிகைக் கத்திகை
கிளர்பொற் போதொடு களையறப் பிணித்த
வாக்கமை சிகைமுதற் பாற்பட வடைச்சி
மகரங் கவ்விய மணிக்குழைக் காதினர்
தகரங் கலந்த தண்ணறுஞ் சாந்தினர்
பானிற வெண்டுகி [2]லானத் தானையர்
இறைமகற் கியன்ற குறைவில் செல்வமோ
டந்தண ரீண்டி யடித்துக [3]ளாற்றி
மந்திர விதியின் வாய்ப்பூச் சியற்றித்
தந்தொழின் முடித்துத் தலைவனைக் குறுகி
[4] வெண்ணிற மலருந் [5] தண்ணறுஞ் சாலியும்
புண்ணியப் புல்லும் பொன்னொடு முறைமையின்
மண்ணார் மணிப்பூண் மன்னனொடு மாதரைச்
சென்னியு முச்சியுஞ் சேடுபடத் தெளித்துக்
கூப்பிய கையர் காப்பொடு பொலிந்த
அமரரு முனிவரு மமர்வன ராகி
ஆயுளுந் திருவும் போகமும் பொலிவும்
மேயினர் தருகென மிகப்பல வாழ்த்தி
மறையிற் கிரிகையின் முறையறிந் தோதி

21006

(நாவிதன் செயல்)

மின்வா ளழித்த மேதகு கைவினைப்
பொன்வாள் பற்றிப் பன்மாண் பொலிகென
வலப்பாற் சென்னி வகைபெறத் தீட்டி
இலக்கணம் பிழையா வெஃகமை யிருப்பின்
நீரளந் தூட்டிய நிறையமை வாளினைப்
பஞ்சிப் பட்டொடு துரூஉக்கிழி நீக்கிப்

பி-ம். 1 அணிவஞ்சிசுரிந்த. 2 லாணத். 3 ளாற்றிய. 4 வெண்ணீறு மலருந், விண்ணிறமலருஞ். 5 தண்ணீறுஞ்.

பைங்கதி ரவிர்மதிப் பாகத் தன்ன
அங்கேழ்க் கன்மிசை யறிந்துவாய் தீட்டி
வெங்கேழ்த் துகின்மிசை விதியுளி புரட்டிச்
செங்கேழ்க் கையிற் சிறந்துபா ராட்டி
ஆசறு நறுநீர் பூசனை கொளீஇ
வாட்டொழிற் கம்மம் வல்லிதிற் பிழையாது
சேட்டெழிற் பொலிந்த திருமுகக் கேற்ப
மூரிக் கொள்ளான் முனிதல் செல்லான்
ஆவிக் கொள்ளா னயர்ந்தும் பிறர்நோக்கான்
சீர்கெழு நெடுந்தகை செவ்வியிற் றிரியான்
கண்ணினு மனத்தினுங் கையினு மமைத்த
மண்ணுவினை மயிர்த்தொழி னன்னல நாவிதன்
எல்லை வகுப்ப....................................
எதிர்நோக் காற்று விலங்கிழை முகத்தையும்
மதிமாசு கழீஇய வண்ணம் போலக்
கதிர்மே விலங்கக் கைவினை முடித்தபின்
அடிவினைக் கம்மியர் வெடிபட வடுக்கிய
[1] உயர்கலக் கோலத் தொள்ளொளி திகழ
வகையமை கொல்லியின் [2]வசையறத் துடைத்துச்
சேவடிக் கேற்பச் செழுமதிப் பாகென
வாருகிர் குறைத்து வனப்புவீற் றிரீஇய
ஒண்ணிறக் கல்லி னன்னிறம் பெறீஇ
விரலிற் கொண்ட [3]வெண்ணிற நுண்டாது
விரிகதிர் மதியின் விளங்கொளி யழிப்ப
நிறம்பெற வுரிஞ்சி நேர்துகிற் றுடைத்தும்
தண்டா மரையி னகவிதழ் போலப்
பண்டே சிவந்த படிய வாயினும்
கண்டோர் மருளக் கைவளங் காட்டி
அரத்தப் பஞ்சி யணிநிறங் கொளீஇப்
பரப்பும் விதிர்ப்பும் பருப்பு மின்றி
அணித்தலைச் சார்க்க மணிபெற வெழுதி
இருவகைக் கம்ம முருவொளி திகழ
வல்லோர் முடித்த பின்றைப் பல்லோர்

பி - ம். 1 உயிர். 2 வசைபெறத். 3 வெண்ணீற் றுண்டானது.

அருங்கல வெறுக்கை யார வீசி
விரும்புறு மனத்தவர் விண்ணவர் காப்ப
மன்னுக வேந்தே மண்மிசை நீடென
அன்னவை கலந்த வாரவ நாப்பண்
எண்ணுவரம் பறியா வின்பச் செல்வமொடு
மண்ணுவினை [1] முடிந்தன்றான் மயிர்வினை மகிழ்ந்தென்.

ச—ஆறாந்திங்கள் உடன்மயிர்களைந்தது முற்றிற்று.

ரு—மண்ணுநீராட்டியது

(உதயணன் கூற்று)

மயிர்வினைக் கம்ம மரபுளி முடித்தபின்
வயிரக் கொடுங்குழை வார்ந்த காதிற்
பெருமக னாடும் பீடுகெழு சிறப்பிற்
றிருமண்ணு நறுநீர் விரைவதின் வருகென
உருமண்ணு வாவொடு வயந்தகற் குரைப்ப

(நீர்க்குடம் செல்லுஞ்சிறப்பு)

ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
மன்பெருஞ் சுற்றமும் வம்ப மாந்தரும்
நிலையிடம் பெறாஅர் நெருங்குபு செற்றித்
தலையிட மருங்கிற் றமனியத் தண்குடம்
ஆயிரத் தோரெட் டணிமலர் வாய
முத்துத் தாமமொடு [2] பொற்புரி யணிந்து
வித்தகர் புனைந்த சித்திர நெடுங்குடை
எண்ணறுங் கோலமொடு கண்ணுறக் கவிப்பக்
காரிகை வனப்பிற் கன்னி மகளிர்
சீர்கெழு மெல்விரல் செறியப் பற்றி
இடுமணி யானை [3] யிரும்புறத் திருப்பப்
படுகண் முழவொடு பல்லியங் கறங்க
ஏம முரச மிழுமெனச் சிலைப்பக்
காமர் சங்கம் வாய்வதின் முழங்க
வரித்த பூங்கொடி விரித்துவிசும் பிவரப்
பத்திரப் படாகை பலவயி னுடங்கச்

பி - ம். 1 முடித்தன்றான். 2 பொற்புற வணிந்து. 3 யிருபுறத்

சாதிங் குலிகமொடு சமர மொழுகிய
மேதகு முளைக்காற் கோதை துயல்வரக்
குத்துமுளை செறித்த வித்தக விதானத்துத்
தண்ணெழி னடுவ ணுண்ணெழி னுனித்த

(மங்கலங்கள் பதினாறு)

அயின்முனை வாளும் வயிரத் தோட்டியும்
கொற்றக் குடையும் பொற்பூங் குடமும்
வலம்புரி வட்டமு மிலங்கொளிச் சங்கும்
வெண்கண் ணாடியுஞ் செஞ்சுடர் விளக்கும்
கவரியுங் கயலுந் தவிசுந் திருவும்
முரசும் படாகைபு மரசிய லாழியும்
[1] ஒண்வினைப் பொலிந்த வோமா லிகையுமென்
றெண்ணிரண் டாகிய பண்ணமை வனப்பிற்
கடிமாண் மங்கலங் கதிர்வளை மகளிர்
முடிமிசை யேந்தி முன்னர் நடப்ப
வேலும் வாளுங் கோலுங் கொண்ட
காவ லிளையர் காவல் கொள்ள

(மஞ்சனநீர் எடுத்தற்கு உரிய குளம்)

மருப்புநிலைக் கந்தி னிருப்பெழுப் போக்கி
வயவர் காக்கும் வாயிற் செல்வமொடு
கயவர் துன்னாக் கட்டிற் றாகிப்
படையமை யிட்டிகைப் பாடமை படுகால்
இடமமைத் தியற்றிய [1] வேந்துநிலைக் கோணத்துக்
கழுமுகா லமைத்த கட்கின் வாவியுள்

(மஞ்சன நீரெடுத்துவருதல்)

நிழறிகழ் தெண்ணீர் நீலஞ் சூழப்
பறவைத் தொழுதிப் பக்க நீக்கி
நிறைய முகந்து முறைமையி னேந்தி
ஐஞ்ஞூற் றிரட்டி யணியிதழ்த் தாமரைச்
செந்நீர்ப் போதொடு செறிய வீக்கிப்
பூஞ்சுமட் டிரீஇப் போற்றுவனர் தந்த
தேங்கமழ் நறுநீர் திறவதிற் பற்றிப்

பி - ம். [1] மாண்வினைப். [1] வேந்து கவைக்.

பணைமுர சியம்பும் படைப்பெரு முற்றத்துத்
துணைநலத் தோழர் துன்னினர் சூழா
மண்ணுநீ ராட்டின் மலைந்தன ராகி
வண்ண மணியும் வயிரமு முத்தும்
இட்டன கொள்ளு முட்டில ராதலின்
வான மீனின் வயின்வயி னிமைக்கும்
தானந் தோறுந் தகைபெறக் குழீஇ
வித்தகர் [1] வரித்த சித்திர நகர்வயிற்
பொற்பெரும் [2] படுமணை முத்தொடு விரவிச்
[3] சாலியு முழுந்துங் கால்வழிப் பரப்பிப்
பாஅ யமைந்த பின்றைச் சேஎய்ச்
செவ்வியிற் சேர்ந்து சிறப்பொடு வணங்கி
எவ்வழி யோரு மேத்தின ரெதிர்கொள
அவ்வழி யிரீஇய பின்றை மெய்பெறச்

(உதயணனுக்கு நெய்யணிதல்)

சங்கினும் பாலினுஞ் சலமில் வாய்மை
விழுத்திணைப் பிறந்த வொழுக்குடை மரபினர்
நெய்தலைப் பெய்தற் கெய்திய சிறப்பணி
ஏந்திய சென்னி மாந்தர் கூடி
அறுகைப் புல்லினும் வாகைத் தளிரினும்
நறுநெய் தோய்த்து முறைமுத னீவி
நின்றோ ரன்ன நீப்பருங் காதற்
பொன்னணி புலவரொடு செம்மலை யாகிக்
கொற்றங் கொண்டு கோலினி தோச்சென
வெற்ற வெள்வேல் வீரியற் புகழ்ந்து
மடவரன் மாதரை மணம்புரி காதலற்
கிடவயி னிருத்தல் கடவ தாதலிற்
றங்கரச் செல்வந் தலைத்தலை தரூஉம்
மங்கல மணைமிசை வெண்டுகில் புதைஇ
இருக்கை திருத்திய பின்றைத் திருத்தகு

(மகளிர் வாசவதத்தைக்கு நெய்யணிதல்)

மறுவி றொல்குடி மங்கல மடந்தையர்
நறுவெண் சாந்தி னன்னலங் குயிலக்

பி - ம். 1 விரித்த. 2 படுமனை. 3 ஆலியும்.

கொடிபல வெழுதிய கோலத் தோளினர்
முடிமிசை யணிந்த முல்லையங் கோதைக்
கொடுங்குழை திளைக்குங் காதினர் கடுங்கதிர்க்
கலாவம் புதைத்த நிலாவெண் டுகிலினர்
நுரைபுரை [1] கலிங்க மொருமுலை புதைப்பத்
திருக்கொடிச் சாலி செம்பொன் வாகையென்
றுருப்படுத் தூழ்முறை மையி னேந்தி
நானங் கலந்த நறுநெய் தோய்த்துத்
தானந் தோறுந் தலைமுத லுறீஇக்
கொண்டோன் வேட்குங் குறிப்பினை யாகித்
தண்டாப் புலமொடு மகளிரைத் தழீஇத்
திருமனைக் கிழமையி னொரு [2] மீக் கூறிக்
கற்புமேம் படீஇயர் பொற்றொடி பொலிந்தென
நற்பல கிளவி பற்பல பயிற்றி
நெய்தலைப் பெய்த பின்றை மெய்வயின்
மென்மையு நேயமு நன்மையு நாற்றமும்
ஒருநாட் பூசினு மோரியாண்டு விடாஅத்
திருமா ணுறுப்பிற்குச் சீர்நிறை யமைத்துக்
கரும வித்தகர் கைபுனைந் தியற்றிய
வாச வெண்ணெய் பூசினர் போற்றி
நூல்வழி நுனித்த நுழைநுண் ணுணர்வினர்
நால்வகைக் கோலத்து நால்வகை மாக்கள்
தாமரை மூய தமனியக் குடநீர்
தாமுறை சொரிந்துதம் முறைமையி னாட்டிச்

(மகளிர் செயல்)

செய்த கோலஞ் சிதைய மறலிப்
[3] பெய்த னுடிப் பேதையர் பிணங்கி
அத்தி னெறிந்து முத்துப்பரிந் திட்டும்
சித்திர நுண்டுகில் சேர்ந்த வல்குற்
பத்திப் பல்காசு பரிந்தன ருகுத்தும்
கோதை பரிந்துங் [4] குடநீர் தூயும்
மானேர் நோக்கியர்......................

பி.-ம். 1 கலிங்கமு. 2 மீக் கூறிக். 3 பெய்தனுபப்.
4 குடநீர்த்தாவும்.

போதுவிரி பொய்கையுட் புக்கனர் புரிந்தும்
குளித்த மகளிரொடு திளைத்த லானார்
குடைந்த வெண்ணுரை குடங்கையின் வாரித்
தடங்கண் சிவப்ப வெறிதலி னடுங்கி
விம்முவனர் தளர்ந்து மென்மெல வொதுங்கிக்
கூந்தல் சோரப் பூந்துகி லசைஇ
வேந்தன் மகனொடு விளையாட்டு விரும்பி
வண்ண மகளிரு மைந்தரு மயங்கி
மண்ணுநீ ராட்டின் மரபுளிக் கழிந்தபின்
திருமணுத் தானம் பெரும ணுள்ளிட்டு
மண்ணுறு மணியு மாலையுந் தூசும்
கண்ணுற மொய்த்த கழிபே ரவாவினின்
றேற்கு மாந்தர்க் காற்ற வீசிப்
பூவினுட் பொலிந்த தாமரை போலத்
தாவி லணியிற் றன்மீக் [1] கூரிய
அறுவைக் கோதிய வைவகை வண்ணத்துத்
துறைவிதி நுனித்த நூத்தொழி லாளர்
கண்டுளங் கவிரொளிக் கழூஉநிறம் பெறீஇய
வெண்டுகி லிணைமடி விரித்தன ருடீஇச்
செய்த கோலத்துச் சித்திரங் காண

(அலங்காரஞ் செய்யுமிடம்)

வெய்யோன் கதிரொளி வீசுவளி நுழையா
இரும்பணி பெற்ற வரும்பணைப் படுகால்
மேற்புற மமைந்த விளங்குமணி வேயுள்
யாப்புறு மண்டபத் தாசனத் திரீஇக்
கோப்புறு விழுக்கல மேத்துவனர் காட்டிக்

(உதயணனை அலங்கரித்தல்)

கனமணி முடியுங் கதிர்முத் தாரமும்
இனமணிப் பூணு மேக வட்டமும்
வயிரக் குழையும் வல்வினைப் பொலிந்த
நெடுந்தோள் வளையுங் கடுங்கதிர்க் கடகமும்
நாமர் வளியுங் காமர் கைவினைச்
சித்திரப் பிணையலும் பத்திரச் சுரிகையும

பி - ம், 1 கூறிய.

பத்திக் கச்சினொ டொத்தவை பிறவும்
ஆரணங் காகிய பேரணி கலங்களும்
உழைப்பெருஞ் சிலதியர் பிழைப்பிலர் நீட்ட
அருவரை பிளந்த வஞ்சுவரு நெடுவேல்
ஒருவலத் துயரிய பொருவில் புட்கொடித்
தளையவிழ் நறுந்தார்த் தனக்கிணை யில்லா
இளையவன் படிவ மேற்ப வியல்புறீஇச்
சித்திர விருநிதிச் செந்நெறி நுனித்த
வித்தக வினைஞர் தம்முடன் வந்து
வடிவு கண்டிடும் வத்தவர் பெருமகன்
ஒடிவில் வென்றி யுதயண குமரன்
ஒருமெய் சேர்ந்திவை பெருமை பெறுகென
அருளி னணியி னல்லதை யிவற்கிவை
உருவென வணியா வுறுப்புமுத லணிதலிற்
புண்ணிய முடையவிப் பொன்னணி கலனென
எண்ணிய நெஞ்சமொடு நுண்வினைப் பொலிந்த
கோல வித்தகர் வாலணி புனைய

(வாசவதத்தையை அலங்கரித்தல்)

ஆராக் காத லவந்திகை தன்னையும்
நீராட் டிடத்தி னீக்கி நடுவிற்குப்
பார மாகிய காசு புதைஇ
ஈர நுண்டுகி லகற்றி யேருடைக்
கோடிப் பூந்துகில் கொய்து விளிம்புரீஇச்
சேடா ரல்குற் சேடுபட வுடீஇ
வல்லவர் வகுத்த மல்வினை நகர்வயிற்
[1] பொன்மணை பொலியப் போற்றுவன ரிரீஇ
நன்மணக் கோலத்துக் கைந்நல நுனித்த
அங்கலுழ் பணைத்தோண் மங்கல மகடூஉக்
கட்டிய கச்சையள் கைவிரல் கூப்பி
நெட்டிருங் கூந்த னீரற வாரிப்
பன்னுமுறை விரித்துப் பின்னுபு தொகுத்துக்
கோட்டிடை வளைஇய குஞ்சரத் தடக்கையிற்
சுட்டொடு விரைஇச் சுற்றுபு முடித்துப்

பி - ம். 1 பொன்மனை.

பத்திப் பலகைப் பரிசாரக் கைவினை
வித்தகப் பத்தி வேறுபட விரித்தவை
ஒழுக்குமுறை யறிந்து வழுக்கிலள் வைத்து
முடிக்கல முதலா முறைமுறை தோன்றும்
அடிக்கல மீறு வணிந்தழகு பெறீஇ
வாச நறுஞ்சாந்து வகைபெறப் பூசி
மாசி றிருமகள் வண்ணம் பழிப்பதோர்
கோலஞ் செய்து கொண்டகம் புக்குக்
கடிநகர் வரைப்பிற் கல்லென் சும்மையொ
டடிசி லயினி யார்பத மயின்று
மன்பெரும் [1] போகத்து மகிழ்ந்துவிளை யாடி
இன்புற் றனரா லிருவரு மியைந்தென்.

௫—மண்ணுநீராட்டியது முற்றிற்று.

௬—தெய்வச் சிறப்பு.

(நல்லோர் கூற்று)

இன்புற் றிருவரு மியைந்துடன் போகிய
நன்பெருங் காலை நல்லோர் குழீஇக்
கண்கெழு பெருஞ்சிறப் பியற்றிப் பண்புளிப்
பூப்புரி மாடத்துப் போற்றெனப் புகாஅத்
தேவ குலத்தொடு திருநகர் வலஞ்செயல்
காவல குமரர் கடிநாட் கடனென
வென்றி முழக்கங் குன்றாது வழங்குநர்
முன்னர் நின்று முன்னியது முடிக்கென
மங்கல மரபினர் மரபிற் கூறக்

(உதயணன் ஆலயத்திற்குச் செல்லல்)

காவல குமரனுங் கடிநகர் வலஞ்செய
மேவின னருள மேவரப் புனைந்த
பசும்பொ னலகிற் பவழத் திரள்கால்
விசும்பிவர் மதியுறழ் வெண்பொற் போர்வைத்
தாம நெடுங்குடை தகைபெறக் கவிப்பக்
காமர் கோலங் காண்மி னீரென

பி - ம். 1 போதத்து.

ஏமச் செங்கோ லேயர் பெருமகன்
செம்பொற் செருப்பிற் சேவடி யிழிந்து
வெண்பூ நிரந்த வீதியு ளியங்கி
நகர்வலங் கொள்ளு நாண்மகற் றின்றெனப்
பகலங் காடியிற் பல்லவ ரெடுத்த
பல்வேறு கொடியும் படாகையு நிரைஇ
யாறுபுகு கடலின் மாறுதிரை மானக்
கண்ணுற்று நுடங்கிக் காரிருள் கழுமி
விண்ணுற் றியங்கும் வெய்யோ னழுங்க
மரீஇய மாந்தரு மனைகெடுத் துழன்றிது
பொரீஇக் காணிற் போகப் பூமிக்
கிருமடங் கினிதெனப் பெருநக ருற்ற
செல்வக் கம்பலை பல்லூழ் நிறைந்து
மாண்பதி யுறையுநர் காண்பது விரும்பித்
தன்னி னன்றியுந் தமக்குவழி வந்த
குலப்பெருந் தெய்வங் [1] கூப்புத லானும்
அரிமலர்க் கண்ணியொ டகநாட்டுப் பெயரும்
கருமக் காலைப் பெருவரம் பெறுகென
உள்ளகத் துணர்ந்தனை யுண்மை யானும்
சுருக்க மின்றிச் சுடர்ப்பிறை போலப்
பெருக்கம் வேண்டிப் பெருநில மன்னவன்
ஆரணங் காகிய வறிவர் தானத்துப்
பூரணப் படிமை காண்ட லானும்
இன்னவை பிறவுந் தன்னிய லாதலின்

(சீனலயம்)

ஆணப் பைம்பொ னடித்தொடைப் பலகைக்
கோணங் கொண்ட கொளுஉத்திரட் சந்துமிசை
உறப்புப்பல தெரிந்து சிறப்பிற் றுகிச்
செம்பொ னிட்டிகைத் திண்சுவ ரமைத்துக்
குடமுந் தாமமுங் கொழுங்கொடிப் பிணையலும்
அடர்பூம் பாலிகை யடிமுதற் குளீஇப்
புடைதிரண் டமைந்த போதிகைப் பொற்றூண்
வேண்டக மருங்கிற் காண்டக நிரீஇ

பி - ம். 1 கூப்புதல்யானும்.

[1] வரிமான் மகர மகன்றில் யானை
அரிமா னன்ன மணிநிற வெண்கினம்
குழவிப் பாவையொ டழகுபெறப் புணர்ந்து
பொருவில் பூதத் துருவுபட [2] வரீஇ
மரகத மாலை நிரலமைத் திரீஇ
எரிமலர்த் தாமரை யிலங்கொளி யெள்ளிய
திருமணிக் கபோதஞ் செறியச் சேர்த்திப்
பத்திப் பல்வினைச் சித்திரக் குலாவின்
ஒத்தமைத் தியன்ற சத்திக்கொடி யுச்சி
வித்தக நாசி வேண்டிடத் திரீஇத்
தூண்மிசைக் கேற்ப [3] வேண்முள் ளழுத்திய
போதிக் கொத்த சாதிப் பவழக்
கொடுங்காழ்க் கோவைக் கடுங்கதிர்ப் பிணித்திரள்
அவ்வயிற் கேற்றுக் கவ்விதிற் பொலிந்து
நீல வுண்மணிக் கோலக் குழிசி
புடைத்துளைக் கேற்ற விடைத்துளை யாப்பின்
அமைத்துருக் கியற்றிய வாடகப் பொன்னின்
விசித்திரத் தியற்றிய வித்தக வேயுட்
டீஞ்சுவை நெல்லித் திரள்காய்த் தாரையுட்
கூப்புபு பிணித்த கூடப் பரப்பிற்
கட்டளை யமைத்துக் கட்கினி தாகி
எட்டுவகைப் பெருஞ்சிறப் பேற்ப வெழுதி
ஒட்டிய வனப்பினோ [4] ரோட வுத்தரத்
தொண்மணிப் [5] புதவிற் றிண்ணிதிற் சேர்த்த
பொறிநிலை யமைந்த செறிநிலைப் பலகை
வள்ளியும் பத்தியு முள்விரித் தெழுதி
ஒள்ளொளி திகழும் வெள்ளிக் கதவின்
பக்கம் வளைஇய நித்திலத் தாமம்
சித்திர மாலையொடு சிறந்தொளி திகழ
வளவிற் கமைந்த வாயிற் றாகி
நிலவிற் கமைந்த [6] நிரப்ப மெய்தி
மண்ணினு மரத்தினு மருப்பினு மன்றிப்

பி - ம். 1 வரிமாண்மகரமன்றில். 2 விரீஇ. 3 வெள் ளெழுத்திய நாசிக்கொத்த. 4 ரோமவுத்திரனது. 5 புகவிற். 6 நிரப்பவெய்தி.

பொன்னினு மணியினுந் துன்னெழி லெய்தி
அடியிற் கேற்ற முடியிற் றாகி
அங்கண் மாதிரத் தணியழ குமிழும்
பைங்கதிர்ச் செல்வனொடு செங்கதிர்க் கியன்ற
வாலொளி மழுங்க மேலொளி திகழப்
[1] பரூஉப்பணைப் பளிங்கிற் பட்டிகை கொளீஇ
வேற்றெழில் பொலிந்த மாற்றுமருங் கமைத்துக்
காம்புங் கதிருங் கூம்புமணிக் குமுதமும்
பாங்குற நிரைத்த பயிற்சித் தாகிப்
பத்திச் சித்திரப் பன்மணிக் கண்டம்
வித்தக வண்ணமொடு வேண்டிடத் தழுத்தி
அரும்பும் போதுந் திருந்துசினைத் தளிரும்
பெருந்த ணலரொடு பிணங்குபு குலாஅய்
உருக்குறு பசும்பொ னுள்விரித் தோட்டிக்
கருத்தி னமைந்த காம வள்ளி
[2] கோணச் சந்தி தோரணங் கொளீஇ
மாலை யணிநகை மேனுற வளைஇ
நீலத் திரண்மணிக் கோலக் கருநிரை
இடையிற் கேற்றப் புடையிற் பொலிந்து

(சிங்காதனம்)

விழைதகு விழுச்சீர் மந்த மாமலை
முழையிற் போதரு முயற்சி போல
முதனிலைப் பலகைச் சுவன்முத லோச்சி
மூரி நிமிர்வன போல வேர்பெற்று
வைந்நுதி யமைந்த வயிர வாயிற்
கண்ணிழ லிலங்கு மொளியிற் றாகிப்
பவழ நாவிற் றிகழ்மணிப் பகுவாய்ப்
பசுமணிப் பரூஉச்செவிப் பன்மணிக் கண்டத்
துளைமயி ரணிந்த வுச்சிக் கேற்ப
வாய்புகு வன்ன வங்தொசி கொடிபோற்
சென்றுசெறிந் திடுகிய நன்றுதிர ணடுவிற்
றகைமணிக் கோவை தன்கைக் கேற்பப்

பி - ம். [1] பரூஉப்பிணைப், [2] சோணச்.

பரூஉத்திரட் குறங்கிற் பளிக்குமணி வள்ளுகிர்த்
திருத்தஞ் செறிந்து திகழ்ந்துநிழல் காட்டும்
உருக்குறு தமனியத் தொண்பொற் கட்டில்
அணிப்பொலிந் தியன்ற வழலுமி ழரிமான்
உச்சியிற் சுமந்துகொண் டோங்குவிசும் பிவர்தற்கு
நச்சி யன்ன வுட்குவ ருருவிற்

(சினதேவனும் வழிபடுவோரும்)

[1] றருமா ஞசனத் திருநடு விலங்க
இருந்த வேந்தைப் பொருந்து மருங்குற்
றலைவா யுற்றுத் தலைபெழிற் பொலிந்து
சிலைகவிழ்த் தன்ன கிம்புரி கவ்வி
நிழல்காட் டாடி நிழன்மணி யடுத்துக்
கோலங் குயின்ற நீலச் சார்வயல்
வாடாத் தாரினர் சேடார் கச்சையர்
[2] வட்டுடைப் பொலிந்த கட்டுடை யல்குலர்
மலர்ந்தேந் தகலத் திலங்குமணி யாரத்
துடன்கிடந் திமைக்கு மொருகாழ் முத்தினர்
முழவுறழ் மொய்ம்பினர் முடியணி சென்னியர்
கழுமணிக் கடிப்பினர் கடகக் கையினர்
புடைதிரண் டமைந்த பொங்குசின நாகம்
இடைநிரைத் தன்ன வெழில்வளை கவ்விய
எழுவுறழ் திணிதோ ளெடுத்தன ரேந்திப்
புடையிரு பக்கமும் போதிகை பொருந்தித்
தொடையமை கோவை துளங்குமணிப் பன்னகை
முகிழ்முடிச் சிறுநுதன் முதிரா விளமை
மகிழ்நகை மங்கையர் மருங்கணி யாகப்
புடைதிரண் டியங்கும் பொங்குமணிக் கவரி
அடைவண் டோப்பு மவாவினர் போல
எழின்மணி யியக்கத் தொழில்கொண் டடைய
மணிவிளக் குமிழு மணிநிலாச் சுவர்மிசை
வலத்தா ணீட்டி யிடத்தாண் முடக்கிப்
பொன்பொலிந் தியலும் பொங்குபூந் தானைப்

பி - ம். 1 றருமாஞசனத். 2 பட்டுடை.

பசும்பொற் கச்சை பத்தியிற் குயின்ற
விசும்பக நந்தும் வேட்கையர் போலத்
தாமரைத் தடக்கையிற் றாம மேந்தி
[1] விச்சா தரர்நக ரெச்சாரு மயங்கி
நீனிற முகிலிடைக் காமுறத் தோன்றத்
திருமுடி யிந்திர ரிருநிலக் கிழவர்
உரிமை மகளிரொ டுருபுபடப் புனைந்த
பொத்தகக் கைவினைச் சித்திரச் செய்கைத்
தத்தந் [2] தானத் தத்தக நிறீஇ
அழகுபடப் புனைந்த வலங்குமணித் தவிசின்மிசை
நிறைகதிர் வெண்மதி நிலாவொளி விரிந்து
முறையின் மூன்றுட னடுக்கின போலத்
தாம முக்குடை தாமுறை கவிப்ப
உலக வெள்ளத் தாழும் பல்லுயிர்க்
கலகை யாகிய வருந்தவக் கிழவனை

(உதயணன் செயல்)

இருக்கை யியற்றிய திருத்தகு செல்வத்
தாரணங் காகிய வணிகிளர் வனப்பிற்
பூரணம் பொலிமை புகழ்ந்துமீக் கூறித்
திருமணி யடக்கிய செம்பொற் செப்பின்
அருமணி சுடரு மாராஅந் தாணம்
உரிமைச் சுற்றமொ டொருங்குடன் றுன்றிக்
கதிவிளக் குறூஉங் கருத்தினன் போல
விதியிற் சேர்ந்து துதியிற் றுதித்துப்
பெறற்கரும் பேதையைப் பெறுகெனப் பரவிச்
சிறப்பெதிர் கொள்கைச் சித்திக் கிழவன்
பேரறம் பேணிய சீர்நெறிச் சிறப்பிற்
றெய்வதை யமர்ந்தெனக் கைம்முதல் கூப்பி
விரவுமலர்ப் போதொடு வேண்டுவ வீசிப்
பரவுக்கடன் கழித்தனன் பைந்தா ரோனென்

௬—தெய்வச்சிறப்பு முற்றிற்று.

பி - ம். 1 விச்சாதிரர். 2 தானத்துத்தக்க.

௭—நகர்வலங்கொண்டது.

(உதயணன் செயல்)

பரவுக்கடன் கழிந்து விரவுப்பகை தணிந்த
தாமந் துயல்வருங் காமர் கைவினைக்
கோயின் முற்றத்து வாயில் போந்து
குன்றுகண் கூடிய குழாஅ மேய்ப்ப
ஒன்றுகண் டன்ன வோங்குநிலை வனப்பின்
மாட மோங்கிய மகிழ்மலி மூதூர்
யாறுகண் டன்ன வகன்கனை வீதியுட்
காற்றுறழ் செலவிற் கோற்றொழி லிளையர்
மங்கல மரபின ரல்லது மற்றையர்
கொங்கலர் நறுந்தார்க் குமரன் முன்னர்
நில்லன்மி னீரென நீக்குவனர் கடிய

(மகளிர் செயல்)

மல்ல லாவணத் திருபுடை மருங்கினும்
நண்ணு மாந்த ராயினுங் கண்ணுறின்
இமைத்த லுருஅ வமைப்பின் மேலும்
புதுமணக் கோலத்துப் பொலிவொடு புணர்ந்த
கதிர்முடி மன்னனைக் காண்பது விரும்பி
மணியறைந் தன்ன மாவீ ழோதி
அணிபெறக் கிடந்த வம்பொற் சூட்டினர்
சூடுறு பொன்வினைச் சுவணர் புனைந்த
தோடுங் கடிப்புந் துளங்கு காதினர்
வெம்மை பொதிந்த பொம்மெ னிளமுலை
[1] இடைப்படீஇப் பிறழு மேக வல்லி
[2] அணிக்கலை புனைந்த வரசிலைப் பொன்னடர்
புனற்சுழி புரையும் பொலிவிற் றாகி
வனப்பமை யவ்வயிற் றணித்தகக் கிடந்த
உந்தி யுள்ளுற வந்துட னடுங்கி
அளைக்கிவ ரரவின் றளர்ச்சி யேய்ப்ப
முளைத்தெழு முலைக்கச் சசைத்தலி னசைந்த

பி - ம். 1 இடைபடிப். 2 மணிக்கலை.

மருங்கு ஞேவ விரும்புபு விரைந்து
மைவரை மீமிசை மகளிர் போலச்
செய்வளை மகளிர் செய்குன் றேறினர்
உணர்ந்தோர் கொண்ட வுறுநன் றேய்ப்ப
வணர்ந்தேந்து வளர்பிறை வண்ணங் கடுப்பத்
திருநுதற் கேற்ற பரிசரக் கைவினை
நீடிய பின்றைக் கூடாது தாங்கும்
கொற்றவற் காண்மென வெற்றவேற் றடக்கையர்
கோல வித்தகங் குயின்ற நுட்பத்துத்
தோடுங் கடிப்புந் துயல்வருங் காதினர்
வாலிழை மகளிர் வழிவழி விலக்கவும்
ஒன்பது விருத்தி நன்பத நுனித்த
ஓவவினை யாளர் பாவனை நிரீஇ
வட்டிகை வாக்கின் வண்ணக் கைவினைக்
கட்டளைப் பாவை கடுப்பத் தோன்றிக்
குறைவினைக் கோலங் கூடினர்க் கணங்காய்
நிறைமனை வரைப்பிற் சிறையெனச் செய்த
சுவர்சார் வாகத் துன்னுபு நிரைத்த
நகர்கா ணேணி விரைவன ரேறினர்
ஒருபுடை யல்ல துட்குவரு செங்கோல்
இருபுடைப் பெயரா வேயர் பெருமகன்
திதைபொருள் வலியாச் செறிவுடைச் செய்தொழில்
உதையண குமரன் வதுவைக் கணிந்த
கோலங் கொண்ட கோல்வளை மகளிருள்
ஞாலந் திரியா நன்னிறைத் திண்கோள்
உத்தம மகளி ரொழிய மற்றைக்
கன்னிய ரெல்லாங் காமன் றுரந்த
கணையுளங் கழியக் கவினழி வெய்தி
இறைவளை நில்லார் நிறைவரை நெகிழ
நாண்மீ தூர்ந்து நன்னெஞ்சு நடப்பத்
தோண்மீ தூர்ந்து தொலைவிட நோக்கி
அற்றம் பார்க்குஞ் செற்றச் செய்தொழிற்
பற்று மாந்தரிற் பசலை பாய்ந்த
கருங்கண் புலம்ப வருந்தின ரதனாற்

காட்சி விரும்பன்மின் மாட்சி யின்றென
ச்ஞுத் தாய ராஞுது விலக்கும்
ஆணை மறுத்தியா மாண முடைமையின்
இந்நகர் காண்கவெம் மன்னை மாரெனக்
கண்ணின வேட்கை பின்னின்று துரப்ப
வாயின் மாடத்து மருங்கணி பெற்ற
வரிச்சா லேகம் விரித்தன ரகற்றித்
ததும்புங் கிண்கிணித் தகைமலர்ச் சேவடிப்
பெதும்பை மகளிர் விதும்பி நோக்கினர்
நேரியற் சாய னிகர்தமக் கில்லாக்
காரிகை கடுநுனைத் தூண்டி லாக
உட்கு நாணு மூரா ணெழுக்கும்
கட்கின் கோலமுங் கட்டிரை யாக
இருங்கண் ஞாலத் திளையோ ரீட்டிய
அருங்கல வெறுக்கை யவைமீ ளுக
வாங்குபு கொள்ளும் வழக்கியல் வழாஅப்
பூங்குழை மகளிர் புனைமணிப் பைம்பூண்
ஒளிபெற் றிலங்கு முதயண குமரன்
அளிபெற் றமர்ந்த வம்பூஞ் சேக்கையுள்
உவக்கும் [1] வாயறிந் தூடி மற்றவன்
நயக்கும் வாயு ணச்சுவைப் புலவியுள்
நோக்கமை கடவுட் கூப்பினுங் கதுமெனப்
பூம்போ தன்ன தேங்குவளைத் தடக்கை
வள்ளுகிர் வருட்டி னுள்குளிர்ப் புறீஇப்
பஞ்சி யணிந்த வஞ்செஞ் சீறடிப்
பொன்னணி கிண்கிணிப் போழ்வாய் நிறையச்
சென்னித் தாமத்துப் பன்மலர்த் தாதுக
இரந்துபின் னெய்து மின்சுவை யமிர்தம்
புணரக் கூடிற் போகமு மினிதென
மீட்டல் செல்லா வேட்ட விருப்பொடு
கோடுகொண் மயிலின் குழாஅ மேய்ப்ப
மாடந் தோறு மலிந்திறை கொண்டனர்
சுவல்பொதி கூழையர் சுடர்பொற் றேட்டினர்

பெயலிடைப் பிறழு மின்னேர் சாயலர்
பாப்பெயிற் றன்ன பன்னிரைத் தாலி
கோப்புமுறை கொண்ட கோலக் கழுத்தினர்
மணிநில மருங்கின் முனிவில ராடும்
பந்துங் கழங்கும் பட்டுழிக் கிடப்ப
அந்தண் மஞ்ஞை யாடிட மெய்ப்பக்
கோதையுங் [1] குழலுந் துள்ளுபு விரியப்
பேதை மகளிர் வீதி முன்னினர்
வெண்முகி னடுவண் மீன்முகத் தெழுதரும்
திருமதி யென்னத் திலக வாண்முகம்
அருமணி மாடத் தகவயிற் சுடர
வாட்கெழு மழைக்கண் வாசவ தத்தை
தோட்குத் தக்க தொடுகழற் குருசிலைக்
கண்டீர் நீங்கிக் காணிடந் தம்மென
விண்டீர் மகளிரின் வியப்பத் தோன்றி
அரிமதர் நெடுங்க ணளவிகந் தகல
இருமுலைப் பொற்பூ ணிடவயிற் றிருத்தாத்
தெரிவை மகளிர் தேமொழிக் [2] கிளவிக்
குழித்தலைப் புதல்வ ரெழிற்புறம் வரித்த
அஞ்சாந் தழிய வாகத் தடக்கி
நுண்சா லேகத் தெம்பரு [3] நோக்கினர்

(மகளிர் மைந்தராகியவர் செயல்)

அறம்புரி செங்கோ லவந்தியர் பெருமகன்
மறம்புரி தானை மறமாச் சேனன்
பாவைய ருள்ளு மோவா வாழ்க்கை
ஏசுவ தில்லா வாசவ தத்தையும்
காம னன்ன கண்வாங் குருவிற்
றுமந் தாழ்ந்த வேம வெண்குடை
வத்தவ ரிறைவனு முற்பான் முயன்ற
அத்தவ மறியி னெத்திறத் தாயினும்
நோற்று மென்னுங் கூற்றின ராகி
மணிநிற மஞ்ஞையுஞ் சிங்கமு மயங்கி
அணிமலை யிருந்த தோற்றம் போல

பி - ம். 1 குழையுந். 2 கிளவிக்குமுற்றலைப். 3 நோக்கினல்.

மகளிரு மைந்தருந் தொகைகொண் டீண்டி
மாடந் தோறு மலர்மழை பொழிய

(நகரத்திலுள்ளார் செயல்)

ஆடம் பலமு மாவண மறுகும்
கீத சாலையுங் கேள்விப் பந்தரும்
ஓது சாலையுஞ் சூதாடு கழகமும்
ஐவே றமைந்த வடிசிற் பள்ளியும்
தங்கோ ளொழிந்த தன்மைய ராகி
மண்கா முறாஉம் வத்தவ மன்னனைக்
கண்கா முற்ற கருத்தின ராகி
விண்மே லுறையுநர் விழையுங் கோலமொடு
மென்மெல நெருங்கி [1] வேண்டிடம் பெறாஅர்
அரும்பதி யுறைநர் விரும்புபு புகழ

(உதயணன் செயல்)

அருந்தவங் கொடுக்குஞ் சுருங்காச் செல்வத்
துத்தர குருவ மொத்த சும்மை
முத்துமணல் வீதி முற்றுவலம் போகித்
தெய்வ மாடமுந் தேர்நிலைக் கோட்டிலும்
ஐயர் தானமு மன்னவை பிறவும்
புண்ணியப் பெயரிடங் கண்ணி னோக்கி
நாட்டகம் புகழ்ந்த நன்னகர் புகல

(உதயணனும் வாசவதத்தையும் நீராடல்)

மீட்டகம் புக்கு மேவரு செல்வமொடு
மங்கல மண்ணுநீர் மரபி னாடக்
கொங்கலர் கோதையைப் பண்டுமுன் பயின்ற
தோழி தானே தாழாது விரும்பிக்
கைந்நவில் கம்மத்துக் கம்மியன் புனைந்த
செய்கலத் துள்ளுஞ் சிறந்தவை நோக்கி
ஏற்குந் தானத்துப் பாற்பட வணிந்து
பானீர் நெடுங்கடற் பனிநா ளெழுந்த
மேனீ ராவியின் மெல்லி தாகிய
கழுமடிக் கலிங்கம் வழுவில வாங்கி

பி - ம். 1 யீண்டிடம்.

ஒண்மணிக் காசிற் பன்மணிப் பாவை
கண்ணிய காத லுண்ணெகிழ்ந்து விரும்பி
ஆடற் கவாவு மமிழ்தஞ் சோர
ஊடுபோந் துறழ வொளிபெற வுடீஇ
மாலையுஞ் சாந்து மங்கல மரபின்
நூலிற் றிரியாது நுண்ணெழில் புரிய
புதுவது புனைந்த பூங்கொடி புரையும்
வதுவைக் கோலத்து வாசவ [1] தத்தை
புதுமைக் காரிகை புதுநாண் டிளைப்பக்
கதிர்விளங் காகத்துக் காமங் கழுமி
அன்னத் தன்ன வன்புகொள் காதலொடு
[2] பொன்னகர்க் கியன்ற புகரில் புகழ்நகர்
வரைவில் வண்மை வத்தவ மன்னற்குப்
பொருவில் போகம் புணர்ந்தன்றா வினிதென்.

எ—நகர்வலங்கொண்டது முற்றிற்று.

அ—யூகி போதரவு.

போகம் புணர்ந்த பொன்னக ரவ்வயின்
வேகத் தானை வேந்தன் மகளோ
டேகச் செங்கோ லேயர் பெருமகன்
போகங் கழுமிப் புணர்ந்து விளையாட
யூகிக் கிப்பா லுற்றது கூறுவென்

(யூகியின் குணவிசேடங்கள்)

கண்ணகன் கிடக்கைக் கலிகெழு [3] மூழியுள்
மண்ணகந் தழீஇ மன்னிய வூழிதொறும்
புண்ணிய வுலகிற்கும் பொலிவிற் றாமெனத்
தொன்றோங் காளர் துணியப் பட்ட
பொன்றா வியற்கைப் புகழது பெருமையும்
ஆன்முலைப் பிறந்த வானிற வமிர்தம்
மலைப்பெய் நெய்யொடு தலைப்பெய் தாங்கு
வேறுபட் டேகினுங் கூறுபட் டியலா
அன்பினி [4] னளைஇய நண்பி னமைதியும்

பி-ம். 1 தத்தையைப். 2 பொன்னோர்க். 3 பூமியுள். 4 னணைஇய.

அசைவி றுணை விசைய வெண்குடைப்
பெருநில மன்னர் கருமங் காழ்த்த
அருமதி நுனித்த வமைச்சி னாற்றலும்
இன்னவை பிறவுந் தன்வயிற் றுங்கி

(யூகி உச்சயினியிற் செய்தவை)

மன்றணி வீதி மதிலுஞ் சேனையுள்
வென்ற கொற்றமொடு விசய மெய்தி
இறைவற் பிரிக்கு மறிவிற் சூழ்ந்த
படிவ வுருவம் பட்டாங் கெய்தி
இடியுறழ் முரசி னைய னிறைவன்
கண்ணியது முடித்துக் காரிகை பொலிந்த
வண்ணக் கோதை வாசவ தத்தையொடு
வழிமுதற் கொண்ட கழிமுதற் [1] கங்குலின்
மல்குகடற் றானை மன்னரை வணக்கிப்
பில்குகளி யானைப் பிரச்சோ தனனெனும்
ஐந்தலை நாக [2] மழல வெகுட்டிப்
பைந்தளிர்க் கோதையைப் பற்றுபு தழீஇச்
சிறைகொளப் [3] பட்டுச் செல்வ நீத்த
குறைமக னென்பது கோடல் செல்லாது
திருமன னெகிழ்ந்த வருண்மலி யன்பொடு
தந்தனன் கோமா னென்று தலை வணங்கி
ஒண்டார் மார்ப னுதயணன் பணிமொழி
மந்திர மாக மகண்மாட் டியைந்தவை
அன்றவ னுள்ளத் தகமுண வராகன்
உரைத்த வண்ணமு மிகப்பல வாகத்
தொல்லோர் முன்னர்த் தோன்றக் காட்டி
ஒல்கா வென்றி [4] யுதயணற் றடைய
வெல்போர்ப் பெரும்படை வேந்தன் விடுத்ததும்
விடுத்த பெரும்படை விளியத் தாக்கி
உடைத்த தோழ னூக்க வென்றியும்
வென்றி வியனகர் வெந்துய ருற்றதும்
பட்டாங் குணர்ந்து [5] முட்டாங் கியற்றி

பி - ம். 1 கங்குலன். 2 மழலவேகிட்டி. 3 பட்டுஞ். 4 யுதயனற் குடையும். 5 பெட்டாங்கியற்றி.

உணரா தான்போ லொருமீக் கொற்றவன்
புணரா தார்முற் பொச்சாப் பஞ்சி
வணங்குகொடி மருங்குல் வாசவ தத்தையைப்
பயந்தினி தெடுத்த பத்தினித் தெருட்டி
உயர்ந்த கோயிலு ளொடுங்கிய வொடுக்கமும்
நளிவரை யன்ன நளகிரி யேறி
ஒளிமணிக் கொடும்பூ ணுதயண குமரனைப்
பற்றுபு தம்மின் செற்றெனப் பகைகொண்டு
வெற்ற வேந்தன் வெகுண்டெழ லின்மையும்
இனையவை பிறவும் புனைநகர் வரைப்பினும்
கோயின் முற்றத்தும் வாயின் மருங்கினும்
வம்பலர் மொய்த்த வம்பலத் தகத்தும்
யானைத் தானத்து மருந்தவப் பள்ளியும்
தானைச் சேரியுந் தானெடுத் துரைக்கும்
பாடை யறியாத் தேசிகச் சேரியும்
ஓதுநர் சாலை யகத்து மோவாச்
சூதுபொரு கழகத் தருகலுந் தோமில்
நல்லதுந் தீயது மறிந்தகத் தடக்கா
மட்டுமகிழ் மகளிர் துட்டச் சேரியும்
காரிகை பகருங் கருங்கடை மழைக்கண்
வார்கொடி மகளிர் வளநகர் வரைப்பினும்
குதிரைப் பந்தியுங் கோடிகர் வரைப்பினும்
மதிமயக் குறூஉ மறுகணி கடையினும்
நீர்த்துறைக் கரையினுங் கூத்துறை சேரியும்
மன்றுஞ் சந்திய மொன்றுகண் டன்ன
ஊர்முழு துள்வழிக் கார்முழு துலாஅம்
கடுவளி வரவி னுடியாக் கற்பின்
நறுநுதற் பணைத்தோ ணங்கையை நம்மிறை
உறுவரை மார்பி னுதயணற் குள்ளத்
தருளொடும் போக்கிப் பொருளொடும் புணர்த்தமை
யாவிரு [1] மறைவி ரன்றெனின் மற்றிவன்
காவ லவ்வழிக் காணலெம் யாமென
மங்கையர் நாப்பண் மறவோ [2] ரெடுத்த

பி - ம். [1] மறிவிர். [2] ருடுத்த.

கம்பலைப் புறமொழி நன்பல கேட்டும்
'கூற்ற வேழ மடக்கிய குமரற்குக்
காற்று மெரியுங் கலந்துகை கொடுப்ப
மயக்க மெய்தி மாணகர் மாந்தர்
கயக்க மின்றிக் கடையிடை தெரியார்
தம்முட் டாக்கிய விம்ம வெகுட்சியுள்
பொருமுர ணண்ணல் பூந்தா ரகலத்துத்
திருமக டன்னிற் றீரா தியைந்தனள்
இன்னு மவனே கன்னிரை கானத்துக்
காதலிற் காப்பத் [1] தீதில ளாகிப்
புக்கன ளவனொடு புனைபிடி யூர்ந்தெனத்
தொக்க மாந்தர் நற்பொருள் பொதிந்த
வாய்ப்புட் கொண்ட வலிப்பின னாகி
யாப்புள் ளுறுத்த வமைதிச் சூழ்ச்சியன்
செறிந்த செய்கை யறிந்துமனத் தடக்கிச்
செறுநன் போலச் செல்வ வேந்தனும்
உறுநர் வேண்டு முள்பொருட் குடன்றொரு
மறுமொழி கொடுப்பி னல்லது மனத்தில்
துன்பாற் பட்டமை நன்பா னுணித்து
நூலிய னெறியினு மதியினுந் தெளிந்து
சொல்வேறு குறியொடு சுழன்றகத் தொடுங்கிய

(யூகி தன் படைவீரர்க்குக் கூறியவை)

பல்வே றுருவிற்றம் படைநரைப் பயிர்ந்து
பூவளங் கவினிய பொழிலுஞ் சேனை
மாகள வனத்து மன்னுயிர் நடுக்கும்
பணைப்பெருந் திரடோட் பகுவாய்க் கூரெயிற்
றிணைப்பெருங் காதி னிலங்குகுழை யணிந்த
சேடேந்து வனப்பிற் செழுமலர்த் தடங்கண்
மோடேந் தரிவை முற்றத்து முறைது
பனஞ்செறும் பன்ன பன்மயிர் முன்கை
நிணப்பசை கொண்ட நீளி நெடும்பற்
சாஅய் நீங்கிச் சார்ந்தோர் துட்கெனும்
பேஎ யுருவம் பெறவகுத் தெழுதிய

பி - ம். 1 தீதிலளாகிப்.

அழிசுவர் மண்டபத் தகவயி னிருள்
வழிபடர் வலித்த மந்திரக் கோட்டியுள்
வென்வேல் வேந்தனை விடுத்தனிர் சிறையென
இன்னுரை யமிர்த மியைந்தவர்க் கீத்துத்
தான்செயப் படுபொரு ளாங்கவர்க் குணர்த்தி
ஊன்சேர் கடுவே லுதயண னீங்கிய
கான்சேர் பெருவழிக் கடத்தல் செல்லீர்
நாடு மலையுங் காடும் பொருந்திக்
கனிவளங் கவர்ந்து பதிவயிற் பெயரும்
[1] பனியிறை வாவற் படர்ச்சி யேய்ப்பப்
படையினுந் தொழிலினு நடைவே றியன்ற
உருவினு மியல்பினு மொருவிரும் பலரும்
கலிகெழு பண்டங் களைகலம் போல
வலிகெழு சிறப்பின் மதிலுஞ் சேனை
உள்ளகம் வறுமை யெய்திப் புல்லெனப்
பெருந்தவ முள்வழி விரும்புபு செல்லும்
பொருளும் போகமும் புகழும் போல
மறுவின் மணிப்பூண் மன்னவ னுள்வழிக்
குறுகுதல் குணனென வுறுநரை யொருப்படுத்
தேகச் செய்தபி னருபொரு ளுடிக்
கடவுட் பள்ளியுட் கள்ள வொழுக்கொடு
நெடுநகர் மாந்தர் நெஞ்சுணத் திரிதரும்
ஒட்டிய தோழரொடு கட்டுரை விரும்பி
மூன்றிடம் பிழையா வான்ற நுண்ணெறிப்
பண்ணவர் முனிவர் பட்டதும் படுவதும்
எண்ணுவ ராயி னேதந் தருமென
நினைத்தோன் பெயர்ந்து நெறியிற் றீர்ந்தவர்
வினைத்துக ளறுக்கும் வேட்கை யல்லது
வேண்டுவ வுரையா மூங்கைக [2] ளாமெனும்
நீதியது நேர்மை யுளனு யோதிய
சமைய விகற்பஞ் சாலக் காட்டி
அசைவி லாள ருநெறி வலித்தது
மருண்டுந் தெளிந்தும் வந்தவை [3] பிதற்றிப்

பி - ம். [1] பனிச்சிறை. [2] ளாயினும். [3] பிதற்றிய.

பெயரு மியற்கைப் பெற்றியிற் றிரியான்
பூசுபு புலரா யாக்கையொடு பெயரிய
தோழ ரோடு மிகப்பல கழறி
வேற்றோன் போல மாற்றம் பெருக்கிப்
படிவப் பள்ளியுட் பகலிடங் கழித்துக்

(உதயணன்பால் மெய்யன்புள்ள ஒரு துயவனியல்பு)

குடிகெழு வளமனை குழீஇய செல்வத்துக்
கன்னி நன்மதிற் கடிக்கோ சம்பி
மன்முத றோறுந் தொன்முதல் பிழையா*து
பெருங்கலக் கைவினைப் பேறது பெற்றுத்
தானகந் தாங்கிய வூனமில் செல்வின்
இட்டிடர்ப் பொழுதி னின்ப நீக்கிக்
கட்டழற் புகூஉஞ் சுட்டுறு கோல்போல்
நட்டை யிட்டு நாட்டகந் துறந்துதம்
பெருமகற் கொள்ளும் வேட்கையிற் போந்த
குயமக னில்லங் குறுகின னாகி
ஆங்கினி திருந்த வருந்தவ வொழுக்கிற்
சாங்கிய மகளைப் பாங்கினிற் [1] றரீஇ
நிகழ்ந்ததை யெல்லா நெறியிற் கூறிப்
புகழ்ந்த வண்ணம் போகுதல் பொருளெனப்
பசியு மழலும் பரிவற வெறியும்
மிசைமருந் தியன்ற விசைவுகொ ளின்பத்துத்
தருப்பணக் கிழியுந் தண்ணீர்க் கரகமும்
ஒருப்படுத் தமைத்துப் புறப்படப் போக்கி
அமரிய நண்பிற் றமருளுந் தமராம்
யவனப் பாடி யாடவர் தலைமகன்
தவனியப் பைம்பூட் டம்மிறைக் கியன்ற

(எந்திரத் தேர்)

கண்மணி யன்ன திண்ணட் பாளன்
கையிற் புனைந்த கழிநுண் சிறப்பொடு
வையகத் தியங்கும் வெய்யவ னூரும்
தேரி னன்ன செலவிற் றாகி

பி - ம். 1 றழீஇ.

* உகூ

யாவரு மறியா வரும்பொறி [1] யாணியின்
இருப்புப் பத்திர மிசையக் கவ்வி
மருப்புப் பலகை மருங்கணி பெற்றுப்
பூணி யின்றியும் பொறியி னியங்கும்
மாண்வினை வைய மனத்தி [2] னெய்ப்பக்
கடுப்புந் தவிர்ப்புங் கண்டன னாகிப்
படைத்துப் பெயர்த்தற்குப் பாடமை வித்தகர்க்
கண்ணினுங் கையினுந் திண்ணிதி னடக்கி
எண்ணிய கருமத் தன்றியும் யூகி
சிறைவினை நீக்கி யிறைவினை யிரீஇக்
கொடிக்கோ சம்பி புகுத்துதற் கிருந்து
கோடித் தன்ன கோடுசால் வையத்து
மூவகை யோகமுஞ் சீரமைத் திரீஇ
எந்திர வூர்தியொ டேனவை யியற்றி
மந்திர மாகத் தந்தம ருளரெனிற்
போத்தந் தல்லது போதாய் நீயென
[3] ஆத்த வாரமொ டவனவ ணொழியத்

(யூகி புறப்பாடு)

தெய்வப் படைக்கலங் கையகத் தடக்கி
வத்தவ னன்னா டத்திசை முன்னி
வித்தக வாணி வேண்டுவயின் முறுக்கி
விண்ணகத் திழிந்து விமான மேறி
மண்ணகத் தியங்கன் மனத்தின் வேண்டிய
பூந்தார் மார்பிற் புரந்தர குமரனிற்
போந்தனன் மாதோ புறநகர் கடந்தென்.

அ—யூகி போதரவு முற்றிற்று.

கூ—யூகி சாக்காடு.

(வழியின் இயல்பு)

புறநகர் போந்த பின்றைச் செறுநீர்
அள்ளற் படப்பை யகனிலந் தழீஇப்

பி - ம். 1 யாணிமின். 2 னெப்ப. 3 ஆர்த்த.

புள்ளொலிப் பொய்கையொடு பூந்துறை மல்கி
வான்கண் டன்ன வனப்பின வாகி
மீன்கண் டன்ன வெண்மணல் விரிந்த
கானும் யாறுந் தலைமணந்து கழீஇ
அரும்பணி புன்னையுஞ் சுரும்பிமிர் செருந்தியும்
இலையணி யிகணையு மின்னவை பிறவும்
குலையணி கமுகொடு கோட்டெங் கோங்கு
பழன மடுத்த கழனிக் கைப்புடைப்
[1] போர்மா றட்ட பூங்கழன் மறவர்
தேர்மா றோட்டித் திண்ணிதி னமைத்த
கோட்ட மில்லா நாட்டு வழிவயின்

(யூகி புட்பக நகரை அடைதல்)

ஆணி வைய மாரிருண் மறையப்
பூணி யின்றிப் பொறிவிசைக் கொளீஇ
உள்ளிய வெல்லை யோட்டிக் கள்ளமொ
டொடுங்குந் தானமுங் கடும்பகற் கரக்கும்
ஆளவி காடு மருஞ்சுரக் கவலையும்
கோளவிந் தொடுங்கிய குழூஉக்குடிப் பதியும்
வயவர் நாடுங் கயவர் கானமும்
குறும்புங் குன்றமு மறிந்துமதி கலங்காது
பகலு மிரவு மகலப் போக்கி
இருநூற் [2] றிருப திரட்டி யெல்லையுள்
அருநூ லமைச்ச னயற்புற நிரீஇ
நட்புடைத் தோழ னன்கமைந் திருந்த
புட்பகந் தன்னைப் பொழுதுமறைப் புக்குப்

(யூகி இடபகனைக் காணலும் அவன் உதயணன் செய்தியை வினவலும்)

புறத்தோ ரறியா [3] மறைப்பமை மாயமொ
டாணி வைய மரும்பொறி கலக்கி
மாண வைத்து மகிழ்ந்தனன் கூடி
மாண்முடி மன்னன் [4] றோண்முதல் வினவிச்
சிரம மெல்லாஞ் செல்விருட் டீர்ந்து

பி - ம். 1 போர்மாரட்டப். 2 றுபத்திரட்டி. 3 விறப்பமை. 4 ருண்முதல்.

கரும மறியுங் கட்டுரை வலித்துத்
தோழனுந் தானுஞ் சூழ்வது துணியா
வெந்திறன் மிலேச்சர் விலக்குவனர் காக்கும்
மந்திர மாடத்து மறைந்தன னிருந்து

(முன்பு நிகழ்ந்தவற்றை இடபகனுக்கு யூகி கூறல்)

தன்றொழி றுணியாது தானத்தின் வழீஇக்
குஞ்சர வேட்டத்துக் கோளிழுக் குற்ற
வெஞ்சின வேந்தனை விடுத்தல் வேண்டி
வஞ்ச விறுதி நெஞ்சுணத் தேற்றி
உஞ்சையம் பெரும்பதி யொளிக்களம் புக்கு
மெய்ப்பேய்ப் படிவமொடு பொய்ப்பே யாகிப்
பல்லுயிர் மடிந்த நள்ளென் யாமத்துக்
கூற்றுறழ் வேழங் குணஞ்சிதைந் தழியச்
சீற்ற வெம்புகை செருக்க வூட்டிக்
கலக்கிய காலை விலக்குநர்க் காணாது
நாவாய் கவிழ்த்த நாய்கன் போல
ஓவா வவலமொடு காவலன் கலங்கிப்
பண்ணமை நல்லியா ழின்னிசைக் கொளீஇய தன்
கண்ணயற் கடாத்துக் களிப்பிய றெருட்டின்
ஆழித் தடக்கை யற்ற மில்லென
வருமொழிக் கட்டுரை முகமன் கூறிநம்
பெருமகன் றன்னுழைப் பிரச்சோ [1] தனனிம்
மன்னுயி ருற்ற நடுக்க நீக்குதல்
இன்னியன் மான்றே ரேயற் கியல்பென
உதையண குமர னுமுள்ளம் பிறழ்ந்ததன்
சிதைவுகொள் சீலந் தெளிந்தனன் கேட்டு
வீணை யெழீஇ வீதியி னடப்ப
ஆணை யாசாற் கடியுறை செய்யும்
மாணி போல மதக்களிறு படியத்
திருத்தகு மார்வ னெருத்தத் திவர
அண்ணன் மூதூ ரார்ப்பொடு கெழுமி
மன்னவன் வாழ்க வத்தவன் வாழ்க
ஒலிகெழு நகரத் துறுபிணி நீக்கிய

பி - ம். 1 தனனிடம்.

வலிகெழு தடக்கை வயவன் வாழ்கெனப்
பூத்தூய் வீதிதோ றேத்தின ரெதிர்கொள
அவந்தி யரச னுவந்தனன் விரும்பிப்
பொலிவுடை யுரிமையொடு பரிசனஞ் சூழப்
புலிமுக மாட மலிர வேறி
மையல் வேழ மடக்கிய மன்னனை
ஆணை கூறு தருண்மொழி விரவாது
காண லுற்றனன் காத லிதுவெனச்
சேனை வேந்தன் றானத்து விளிப்ப
அறியாப் பாழியு மறியக் காட்டிக்
குறியாக் கூற்றத்தைக் கோள்விடுங் கொல்லெனச்
சிறியோ ரஞ்சப் பெரியோர் புகல
ஆனை யேற்ற மறியக் காட்டி
இருட்டெறு சுடரி னன்ன விறைவன்முன்
வருட்டுபு நிறுத்த மன்னனை நோக்கித்
தெருட்டுதற் காயவித் தீக்குறி வேழம்
யாதிற் சிதைந்ததஃ தறிய வுரைக்கென
ஏதில் வேந்தன் காதலின் வினவ
வேத முதல்வன் விளம்பிய நூல்வழி
மாதங்க மென்று மதித்தலிற் பெற்ற
பெயரது மற்றத னியல்பறிந் தோம்பி
வெருட்டலுந் தெருட்டலும் விடுத்தலும் விலக்கலும்
பணித்தலு முயர்த்தலுந் தணித்தலுந் தாங்கலும்
தமர்பிற ரென்ப தறியுந் திறனும்
நீல முண்ட நூலிழை வண்ணம்
கொண்டது விடாமைக் குறிப்பொடு கொளுத்தல்
பண்டிய றென்னூற் பாகியல் பாதலின்
முதற்கட் பிணித்தோர் சிதைப்பில் விடாது
கொண்டதை யிதுவெனச் சண்ட வேந்தற்
கெதிர்மொழி கொடீஇக் கதிர்முக மெடுத்தோன்
தகைமலர்ப் படலைத் தந்தை தலைத்தாள்
முகைமலர்க் கோதை முறுவற் செவ்வாய்க்
கன்னி யாயத்துப் பொன்னணி சுடர
வீசுவளிக் கொடியின் விளங்குபு நின்ற

வாசவ தத்தை மதிமுகத் தேற்றிச்
சிதரரி மழைக்கண் மதர்வை [1] நோக்கம்
உள்ளகத் தீர வள்ளற் பட்ட
போதகம் போலப் போத லாற்றுக்
காதற் குமரனைக் கருமக் காமத்துக்
கணிகை திறவயிற் பிணிபிறர்க் குணர்த்தி
இகழ்வொடு பட்ட புகழ்கா ணவையத்து
மல்லன் மூதூர் மலிபுனல் விழவினுட்
சில்லரிக் கிண்ணியொடு சிறுபிடி யேற்றிச்
செயற்படு கருமத் தியற்கை யிற்றென
இப்பா விறைமகற் போத்தந் தப்பால்
நிகழ்ந்ததை யறிதந் தொளித்தன னாகி
வேறல் செய்கை வேந்தற் குண்மை
தேறன் மாக்களைத் திறவிதிற் காட்டிப்
பழந்தீர் மரவயிற் பறவை போலச்
செழும்பல் யாணர்ச் சேனைபின் னொழிய
நம்பதி புகுதரக் கங்குற் போத்தந்
தியான்பின் போந்தன னிதுவென வவன்வயின்
ஓங்கிய பெரும்புகழ் யூகி மேனாட்
பட்ட வெல்லாம் பெட்டாங் குரைப்பக்

(இடபகன் யூகியைப் பாராட்டல்)

கெட்ட காலை விட்டன ரென்னாது
நட்டோ ரென்பது நாட்டினை நன்றென
உறுதுணைத் தோழன் மறுமொழி கொடுத்தபின்

(யூகி உதயணன் செய்தியை வினவுதல்)

தன்னுரை யொழித்து நுண்வினை யமைச்சனைப்
பெயர்ந்த காலைப் பெருமகற் கிப்பால்
உயர்ந்த கானத் துற்றதுண் டெனினதூஉஞ்
சின்மொழி மாதரைச் சேர்ந்ததற் கொண்டு
நிலையது நீர்மையுந் தலையது தன்மையும்
உள்விரித் துரையென வூகி கேட்ப

பி - ம். 1 நோக்கவும்.

(இடபகன் நிகழ்ந்தவற்றைக் கூறல்)

அடலரும் பல்படை யிடபக னுரைக்கும்
அழகமை மடப்பிடி யைந்நூ றேடி
அழனிலை யத்தத் தசைந்துயிர் வைப்பத்
தடம்பெருங் கண்ணியொடு நடந்தனர் போந்து
கடும்பகல் கழிதுணைக் காட்டகத் தொடுங்கி
[1]வெங்கதிர் வீழ்ந்த தண்கதிர் மாலை
வயந்தக னென்பால் வரீஇய போதரத்
தயங்குமலர்த் தாரோன் றனிய னாகி
மாலை யாமங் கழிந்த காலை
வெஞ்சொல் வேட்டத் தஞ்சுவரு சீற்றத்துச்
சலம்புரி நெஞ்சிற் சவரர் புளிஞர்
கலந்தன ரெழுந்து கானந் [2]தெரிவோர்
ஊனென மலர்ந்த வேனி லிலவத்துக்
கானத் தகவயிற் கரந்தன னிருந்த
அரச குமரனை யகப்படுத் தார்ப்ப
வெருவுறு பிணையின் விம்முவன னடுங்கும்
அஞ்சி லோதியை யஞ்ச லோம்பென
நெஞ்சுவலிப் புறுத்து நீக்குவன னிரீஇ
[3]விலக்கவண் கொளீஇ வில்லின் வாங்கி
ஓரோர் கணையி னூராஅய் வந்தவர்
ஏழேழ் மறவரை வீழ நூறலின்
ஆழ நெஞ்சமொ டச்ச மெய்திப்
பட்டவர் தந்தமர் பகையி னெருங்கிக்
கட்டெரி கொளீஇக் கரந்தன ரெனலும்

(யூகி மூர்ச்சித்தலும் பின்பு தெளிந்து கேட்கத் தொடங்கலும்)

ஒட்டிய தோழற் குற்றதை யறியான்
பகையடு தறுக ணிமையகன்று பிறழ
உரைபெயர்த்துக் கொடாஅன் யூகி மாழ்க
வரைபுரை மார்பனை வாங்குபு தழீஇக்
கதுமென வுரைத்தது கவன்றன னாகி

பி-ம். 1 வெண்கதிர். 2 திரிவோர். 3 யிலக்கவணை,

எதிர்மலர்க் குவளை யிடுநீர் சொரிந்து
சீதச் சந்தனந் தாதோ டப்ப
ஏஎல் பெற்றெழுந் [1]திருந்தன னுரைக்கென

**(பின்பு நிகழ்ந்தவற்றையும் உதயணனது இயல்பையும்
இடபகன் கூறல்)**

மாஅ லன்ன [2]மன்னுயிர் காவலன்
ஆட்டிடைப் பாயு மரிமாப் போல
வேட்டிடைப் பாய்தலை வெரீஇ யோடாப்
பஞ்சி மெல்லடிப் பரல்வடுப் பொறிப்ப
வஞ்சி மருங்குல் வாடுபு நுடங்க
அஞ்சுபு நின்ற பைந்தொடி மாதரைச்
சிறுவரை நடாஅய்ச் செல்ல னீங்கக்
கறுவுகொ ளாளர் மறுவுவந் தோடி
[3] உறுவுகொ ளுரோணியொ டுடனிலை புரிந்த
மறுவுடை மண்டிலக் கடவுளை வளைத்த
கரந்துறை யூர்கோள் கடுப்பத் தோன்றி
நிரந்தவர் நின்ற பொழுதிற் பெயர்ந்து
குறிவயிற் குறித்தியாஞ் செல்லு மாத்திரை
அறிவி னாடி யரும்பொரு ளுண்டென்
விரைமுதல் கட்டிய விரும்பி னிமிழ்ப்பின்
உரைமுதல் காட்டி யுளமை கூறி
நின்ற பொழுதிற் சென்றியாந் தலைப்பெய
எந்திற மறியா வேதிலன் போல
வெந்திறல் வேந்தனு மவரொடு விராஅய்
ஓட லாற்றா னாகி யொருசிறை
ஆடமைத் தோளியோ டகன்றன னிற்ப
வேட்டுவ ரகலக் கூட்ட மெய்திக்
கரும நுனித்த கடுங்க ணாண்மை
உருமண் ணுவாவி னாரகம் புகீஇப்
போகப் பெருநுகம் பூட்டிய காலை
மாக விசும்பின் மதியமு ஞாயிறும்
எழுதலும் படுதலு மறியா வின்பமொ

பி - ம். 1 திருந்தனனெ யுரைக்கென. 2 மன்னுயிரங்கவன். 3 உருவுகொளோணி.

டொழுகுபுன லகழினை யுடையெனக் கிடந்த
முழுமதி னெடுங்கடை முதற்பெரு நகரம்
தாரணி யாணை பரப்பித் தலைநின்
1 ருருணி யரச னுள்வது மறியான்
தன்னுயி ரன்ன தம்பியர் நினையான்
இன்னுயி ரிடுக்க ணின்னதென் றறியான
அவையுங் கரணமு மவைவகுத் திருவான்
அந்தி மந்திரத் தருநெறி யொரீஇத்
தந்தையொ டொறுக்கப் படாஅன் சிந்தை
அகனுணர் வில்லா மகனே போலத்
தன்மனம் பிறந்த வொழுக்கின னாகிப்
பொன்னகர் தழீஇய புதுக்கோப் போலச்
செவ்வியுங் கொடாஅ னிவ்வியல் புரிந்தனன்
அண்ண லாதலி னசைவில னென்னத்
தன்னமர் தோழன் பன்னின னுரைப்ப

(சாங்கியத்தாயைக்கண்டு யூகி பின் நிகழ்த்த வேண்டியவற்றைக் கூறல்)

வேகந் தணியா வெஞ்சின நெடுவேல்
யூகந் தாயண னொழிவிலன் கேட்டு
முறுவல் கொண்ட முகத்தின னாகிப்
பெறுக போகம் பெருமக னினிதென
அறுவகைச் சமயத் துறுபொரு ளொழியாது
பன்னுபு தெரிந்த பழியறு வாய்மொழித்
தொன்மூ தாட்டியைத் துன்னத் தரீஇத்
தருமத் தியற்கையுங் கருமக் கிடக்கையும்
தலைமையது தன்மையு நிலைமையது நீர்மையும்
வேறுவே றாகக் கூறுகூ றுணர்த்தி
இதுவென் வலிப்பென வதுவவட் குணரக்
கூறுதல் புரிந்த குறிப்பின னாகி
அகலா தோரையு மகல்கென நீக்கி
உம்மைப் பிறப்பிற் கொண்டுஞ் செம்மற்குத்
தாயோ ரன்ன தகையினி ராதலின்
மேயோர்க் கல்லது மெய்ப்பொரு ளுணர்த்தல்

பி - ம். 1 ருருணியாசான்.

ஏதில் பெரும்பொரு ணீதியு ளின்மையின்
தெரியக் கேட்கென விரியக் காட்டி

(இனியவர் கடமை இன்னவென்பது)

அற்றங் காத்தலி னுண்மை போலவும்
குற்றங் காத்தலிற் குரவர் போலவும்
ஒன்றி யொழுகலி னுயிரே போலவும்
நன்றி யன்றிக் கன்றியது கடிதற்குத்
தகவில [1] செய்தலிற் பகைவர் போலவும்
இனையன பிறவு மினியோர்க் கியன்ற
படுகட னாதியிற் பட்டது நினையான்
[2] தொடுகழற் குருசில் வடுவுரை நிற்ப
இன்ப வளற்று ளிறங்கின னாதலின்
துன்பந் துடைத்த தொழிலே போல
அவல மொழிப்பி யவன்வயிற் றிசையா
இகலடு பேரர ணிலாவா ணத்தவன்
உகந்துண் டாடி மகிழ்ந்தபி னொருநாள்
வாலிழை மாதரை மன்னவ னகல்விடைக்
கோலக் கோயில் கூரெரிக் கொளீஇப்
பொய்ந்நில மருங்கிற் போத்தந் தென்வயிற்
கண்ணெனத் [3] தருதல் கடனெனக் கூறி
இன்பந் துடைத்தவற் கிறைக்கடம் பூட்டுதல்
[4] நின்கட னாமென நினைந்துநெறி திரியா
துருப்ப நீளதர்க் கமைத்துமுன் வைத்த
தருப்பணஞ் செருமித் தன்னுயிர் வைத்தனன்
யூகி யென்ப துணரக் கூறி
நிலங்குறை பட்ட மன்னனை நிறுவுதல்
புலந்துறை போகிய பொய்யில் வாய்மொழி
நும்பி னாத லெம்பிற் சூழ்ந்த
தறியக் கூறினேன் யானென வவளொடும்
செறியச் செய்த தெளிவின னாகி
உருமண் ணுவாவொடு வயந்தக குமரனைக்
கருமக் கிடக்கை காண்வரக் காட்டி
இன்னுழி வருகென வன்னவை பிறவும்

பி - ம். 1 செய்தொழிற். 2 செடு. 3 தெரிதல். 4 நினக்குக்கடனாதலின்.

ஒருபொரு ளொழியா தவளொடு சூழ்ந்து

(தான் இறந்துவிட்டதாக யூகி நடித்து அஃது உண்மை
யென்றே அயலாரை நம்பச்செய்தல்)

மறைப்பிட னமைத்துப் புறத்தோர்[1] முன்னர்
ஆத்திரைத் தருப்பண மாத்திரை கூட்டி
உண்புழி விக்கிக் கண்புகச் செருமி
உயிர்ப்பு நீங்கிய வுடம்பின னாகிச்
செயற்கைச் சாக்காடு தெளியக் காட்டத்
தோழனுந் தமருஞ் சூழ்வனர் குழீஇ
வாழல மினியென வஞ்ச விரக்கம்
பல்லோர் முன்னர்க் கொள்ளக் காட்டிச்
சுடுதற் கொவ்வாச் சூழ்ச்சி யண்ணலைக்
கடுவினை கழூஉங் கங்கா தீரத்
திடுது முய்த்தென விசைத்தனர் மறைத்துத்
தவமுது மகளைத் தலைமகற் குறுகி
முகனமர்ந் துரைத்து முன்னையி ராம்மெனன்
றகனமர் காதலோ டாற்றுளி விடுப்பக்
காட்டகங் கடந்து காவல னிருந்த
நாட்டக நணுகி நகரம் புக்கனள்
தெரிமதி யமைச்சனொடு திறவதிற் சூழ்ந்த
அருமதித் திண்கோ ளறம்புரி மகளென்.

கூ—யூகி சாக்காடு முற்றிற்று.

௪௰—யூகிக்கு விலாவித்தது

அறம்புரி யாட்டி யமைச்சனி னீங்கி
மறம்புரி தானை மன்னவ னிருந்த
தயங்கிதழ்த் தாமரைத் தண்பணை தழீஇய
சயந்தியம் பெரும்பதி யியைந்தகம் புக்குப்
பொன்வரை யன்ன பொருவி லாகத்து
மன்ன குமரனை மரபுளிக் குறுகித்
தாய்காண் கன்றிற்[2] காவலன் விரும்பி

பி-ம். [1] முன்னமாத்திரை, [2] காவலின்,

ஏற்ற செவ்வி மாற்றங் கூறிச்
சேடுபடப் புனைந்த சித்திரக் கம்மத்துப்
பீடங் காட்டலி னீடுபட விருந்து
மன்னவன் மகனே மாதரொடு போந்து
நின்னகர்ப் புகுந்த பின்னர்க் கண்டனென்
என்னு கியர்மற் றென்வயி னினியென
முகமற் கிளவி தகுவ கூறி
ஆடியல் யானை யவந்திய னகர்வயிற்
பாடி மாற்றமொடு பட்டதை யுரைத்தபின்
முனிமூ தாட்டியை முகனமர்ந்து நோக்கி
இனியவர் பெருங்கட மியல்பிற் றீர்த்த
யூகி நும்மொடு போந்தில னோவெனப்
போகிய புகழோற்குப் பொருக்கென [1] வுரையாள்
ஆங்கவன் கேட்ப வறிவி னோடிச்
சாங்கிய முதுமக டான்றெரிந் துரைக்கும்
ஒலியுஞ் சேனையுள் வலியோரை வணக்கி
நங்கையைத் தழீஇப் போந்த கங்குற்
பட்டதை யெல்லாம் பட்டாங் குணர்ந்து
மறுபிறப் புணர்ந்த மாந்தர் போல
உறுகுறைக் [2] கரும முள்ளக மருங்கிற்
றுனே [3] யுணரி னல்லது புறப்பட்
டேனோ ரறியா வியற்கைத் தாகிக்
காரிய முடிவி னோரிருண் [4] மறையா
அரும்பொறி வையத்துக் கரந்தகத் தொடுங்கி
எம்மைக் கொண்டுவந் தேமஞ் சார்த்தி
வெம்மை வேட்டுவர் வியன்மலை வரைப்பிற்
கோற்றொழிற் கரும மாற்றுளி முடித்துச்
சிலபகல் கழிந்தபின் வருவனீர் சென்று
நலமிகு வேந்தனை நண்ணுமின் விரைந்தென்
றொழிந்தன னுதயண யூகி பின்னென
மொழிந்தன ளடக்கி முகிழ்விரற் பணைத்தோள்
வாசவ தத்தையை வகையுளிக் காண்கெனத்
தேச மன்னன் றிறத்துளிக் கூறக்

பி - ம். 1 வுரைப்புாள். 2 கருமமுள். 3 புணரின். 4 மறைய.

கன்றுகாண் கறவையிற் சென்றவட் பொருந்தித்
தளர்நடை யிளமையிற் றான்கொண் டோம்பிய
வளர்கொடி மருங்குல் வருந்தப் புல்லி
உவகைத் தண்டுளி யூழூழ் சிதறி
அமிர்துகடை கடலி னரவ மோவாது
தமர்தலை மணந்த தம்பெருங் கோயிற்
கண்ணீர் வெள்ளங் காலலைத் தொழுக
வட்டிகை வாக்கின் வனப்பொடு புணர்ந்த
பட்டச் சின்னுதற் பதினறு றுயிரார்
நும்மோய் மார்களுந் தம்மின மகளிரும
ஒருதுணை யாயமு முடைவுகொண் டொழியப்
பெருமகன் றனெனப் பெற்றியிற் பிழையான்
யாப்பமை காதலோ டாருயி ரன்ன
கோப்பெருந் தேவிக்கு நீப்பிட முணர்த்தித்
தந்தையுரை காட்ட வுய்ந்தது முதலா
இன்பக் கட்டுரை பைந்தொடி கேட்ப
முறைமையின் விரிப்ப முகத்தொளி புல்லென
நிறைமலர் நெடுங்க [1] ணீஇர் நெகிழத்
தமர்வயி னிணைஇய தன்மைய ளாகிப்
புகரில் கோலத்துப் புனையிழை புலம்பத்
தாழ்நகை யாகத்துத் தண்சாந்து சிதைய
வீழ்தரு வெந்துளி விரலி னீக்கிச்
செவிலித் தவமக டேறக் காட்டி
அவலங் [2] கோட லங்கண் ஞாலத்து
வெங்கண் வேந்தன் பைந்தொடிப் பாவாய்
மங்கல மகளிர்க்கு மாபன் றிதுவென
நீலப் பொய்கைப் பாசடைத் தாமரை
கதிர்வாய் திறந்து..............................
பகுவாய்க் கிண்கிணி பரட்டுமிசை யார்ப்பக்
கோடுவாய் சிலம்பிற் கொழுஞ்சிகைக் குன்றின்
பாடமை படுகால் பைய வேறி
நங்காய் காணுன் பெருமா னன்னகர்
உந்தத் திசையதென் றுன்றப் பிறவும்

பி - ம். 1 ணீரே. 2 கொண்டலங்கண்,

உகப்பக் கூறி மிகப்பல வருட்டி
உலகியல் வழாஅ வுருமண் ணுவாவொடு
வலிகெழு நோன்ருள் வயந்தகற் குறுகி
நட்டோன் றுணிந்த கட்டழற் கருமம்
[1] மந்தண மாக வந்தணி யுரைத்தலும்
நன்னெறி நூல்வழித் திண்ணறி வாளன்
வருந்தி நோற்ற வருந்தவம் போலப்
பிற்பய முடைமை தெற்றெனத் தெளிந்து
தெரிமதி யூட்டியைத் திட்பங் கொளீஇ
அருமதி யமைச்சனை யன்பிற் கெழீஇத்
தோழற் குணர்த்துஞ் சூழ்வினை தொடங்கிக்
கட்டளை யமைந்த கண்ணார் வனப்பினோர்
வட்டிகைப் பலகையுள் வாக்குவகை யமைத்து
வத்தவன் வடிவினோர் வண்ணப் பாவை
வித்தகஞ் சிறப்ப வேறுபட வெழுதி
[2] நாற்க ணுக வமைத்துமற் றவற்றுள்
மேற்கண் மழுகிய வினையிற் ருகக்
கைத்தொழி லமைத்தபி னுய்த்தவட் குணர்த்தி
விருத்தி யமைத்த வினைமுடி பாவைக்
கருத்துமெய் தெரிதல் காவலன் கடனெனத்
தேவியொ டிருந்த செவ்விக் கோட்டியுள்
ஓவியப் பாவை யுய்த்தவள் காட்ட
நுண்ணுணர் மன்னன் றன்னெப் பாகிய
கண்ணுளர் நுட்பத்துக் கருத்து நோக்கி
இடம்படு ஞாலத் துடம்பொடு புணர்ந்த
இன்னியன் மாந்தர் திண்ணிய வுறுப்பினுள்
தாளே பெருங்கிளை தோளே துணைவி
பல்லே மக்கள் கண்ணே தோழர்
முடியே குரவ ரடியே யாளாம்
ஆக்கையி னுடி யங்ஙனங் காணின்
மேற்கட் குற்றத்து விதுப்பியல் வழாது
நூற்க ணுணித்த நுண்ணுணர் வெண்ணத்தின்
யூகி தன்வயி னுறுகண் வெந்தொழில்

பி - ம். 1 மந்திரமாக. 2 நாற்கேணுக.

ஆகிய துண்டென வையந் தேறி

(யூகி இறந்தானாக நினைந்த உதயணனது வருத்தம்)

உதயணன் மாழாந் துயிர்வாழ் வொழிகெனச்
சிதர்பொறி யெந்திரம் போலச் சிதர்ந்து
தாரும் பூணு மார்பிடைத் துயல்வரச்
சோருங் கண்ணினன் றுளங்கிமெய்ம் மறப்ப
இடியே றுண்ட நாகம் போலக்
கொடியோர் சாயற் கொழுங்கவின் வாடப்
பூவிருங் கூந்தல் புல்லென விரிய
வாசவ தத்தையும் வத்தவன் மார்பின்
மம்ம ரெய்திய மயக்க நோக்கி
விம்ம லெய்தி வியன்பெருங் கோயில்
அழுகை யாகுலங் கழுமிய பின்றை
அவல வுயிர்ப்பிணி யடியற வெறியும்
தவலருஞ் சாந்தந் தடியுற வப்பிச்
சீதச் செய்கையின் மாதுயர் விடுப்பத்
தீதில் பெருமகன் றெளிவுமுந் துறீஇக்
காதலிற் கவலைப் பாசந் தட்பத்
தண்டா மரைக்கண் வெம்பனி வீழ

(யூகி தனது சிறைத்துயரம் நீக்கியது முதலியவற்றைச்
சொல்லி உதயணன் புலம்பல்)

விண்டோய் கானத்து வேழ வேட்டத்துச்
சிறைகொளப் பட்டியான் செல்சார் [1] வறுத்தபின்
மறைகொண் மாயமொடு துறைநகர் விழவினுள்
ஏதின் மன்னன் காதலி பயந்த
மாதரைத் தழீஇப் போதரப் புணர்த்துப்
போதுவ லென்றோய் பொய்த்தனை யோவெனக்
காதற் றோழனைக் காணாது கலங்கி
மாதாங்கு தடக்கை மன்னருண் மன்னவன்
[2] நளிகதிர் மண்டில நாண்முதற் றோன்றி
ஒளியிடப் பெறாஅ வுலகம் போல
இருளகம் புதைப்ப மருளகத் தெய்தித்
தருமமுங் கருமமுந் தளரச் சாஅய்

பி - ம். 1 வுறுத்த. 2 நளிர்கதிர்.

ஆழி னல்லதை யாசியல் வழாமை
வாழ்த லாற்றேன் யானென மயங்கியும்

(இளமைப் பருவத்தில் யூகி தன்பால் வைத்திருந்த அன்பின் மிகுதியைச் சொல்லி உதயணன் புலம்பல்)

நிழற்பொலி காவி னிரந்துட னாடிக்
குழற்சிகை யவிழக் குண்டுநீர் யமுனைக்
கணைக்கடு நீத்திடைப் புணைப்புறந் தழீஇ
விளையாட்டு விரும்பி யளையின [1] வாகிய
இன்சுவை யடிசி லுண்பது மொரீஇ
மன்பெருங் கோயிலுள் வளர்ந்த காலை
வேக நம்பிக்கு விலக்குக வடிசிலென்
றுகுபொரு ளறிவி யரும்பொரு ளென்மகன்
யூகந்த ராய னுண்கென வுண்ணாய்
குடிப்பெருந் தேவி யடிக்கலம் பற்றி
அருளினுங் காயினு மொப்ப தல்லதை
பொருளஃ தன்று புரவலன் மாட்டென்
றென்செய் குற்ற நின்கட் டாங்கி
அன்பளி சிறப்பித் தின்பத மியற்றல்
இளமைக் காலத்து மியல்பா வுடையோய்
முதுமைக் காலத்து மதலையிற் றுங்கிப்
பின்போக் குரிய பெருந்தகை யாள
முன்போக்கு விரும்புதன் மூர்க்கர தியல்பெனக்
கேட்டோ ருருக மீட்டுமீட் டரற்றப்

(உருமண்ணுவா உதயணனைத் தேற்றல்)

பூந்தார் மார்ப புலம்புகொண் டழீஇ
இருநில வரைப்பி னியற்கை யோராப்
பெருநிலங் காவல பேணு தவர்முன்
இனையை யாகுத லிறைமை யன்றாற்
கொடுங்காழ் [2] சோரினுங் கூட மூன்றிய
நெடுங்காழ் போல நிலைமையின் வழாஅது
துன்பத்திற் றுளங்கா தின்பத்தின் மகிழா
தாற்றுளி நிற்ற லாடவர் கடனென
மாற்றம் பற்பல மரபிற் கூறி

பி - ம். 1 மாகிய. 2 சொரியினுங்.

யடைநடுதரூட்டடங்கண் டபுத்த
அந்த ணாளரின் வெந்திறல் வீரன்
சொற்றுணைத் தோழன் றெழில்பா ராட்டி
நற்றுணை மாந்தர் முற்றுணை யாக
அரசிய லாக்கங் கூடு மாயினும்
பெருவிறற் றோழன் வருதலு முண்டெனத்
தானயர் பெருநெறித் தலைநின் றனனால்
வீணை வித்தகன் விலாவணை தொடர்ந்தென்.

கo—யூகிக்கு விலாவித்தது முற்றிற்று.

கக—அவலந் தீர்ந்தது.

விலாவணை யொழியான் வீணைக் கைவினை
நிலாமணிக் கொடும்பூ ணெடுந்தகை நினைந்து
வைக றோறும் வான்மதி மெலிவிற்
பையுள் கொண்ட படிமை நோக்கி
அரும்பெற லமைச்சரொ டொருங்குடன் சூழீஇக்
காவல னதிர்ந்த காலை மண்மிசைத்
தாவில் பல்லுயிர் தளர்ச்சி யெய்தலின்
எத்திறத் தாயினு மத்திற மகற்றுதல்
மந்திர மாந்தர் தந்திர மாதலின்
வத்தவர் கோமாற் கொத்த வுறுதொழில்
உத்தம மந்திரி யூகியிற் பின்னர்
அருமை சான்ற வாய்பொருட் கேள்வி
உருமண் ணுவாவிற் குறுகட னிதுவெனத்
தாழாத் தோழர் தன்மேல் வைத்தபின்
வீழாக் காதலொடும் விரும்புவன னாகிச்
செய்பொரு ளிதுவென வையந் தீர
மன்னுயிர் ஞாலக் கின்னுயி ரொக்கும்
இறைபடு துன்பங் குறைபட வெறியும்
மருந்தின் பிண்டந் தெரிந்தனிர் கேண்மின்

(உதயணனது கவலையைத்தீர்த்தற்குரிய பரிகார வகைகள்)

தணப்பில் வேட்கை தலைத்தலை சிறப்ப
உணர்ப்புள் ளுறுத்த வூட லமிர்தத்துப்

புணர்ப்புள் ளுறுத்த புரைபதம் பேணும்
காமக் காரிகைக் காதன் மகளிர்
தாமப் புணர்முலைத் தலைப்பிணி யுறீஇ
யாமக் கோட்டத் தருஞ்சிறைக் கோடல்
வணங்கா மன்னரை வாழ்வுகெட முருக்கி
அணங்கரும் பெருந்திறை கொணர்ந்துமுன் னிடுதல்
பூமலர் பொதுளிய புனல்வரைச் சோலை
மாமலைச் சாரலொடு கானங் காட்டுதல்

(புணை வகைகள்)

யானையுஞ் சுரியுளை யரிமா னேறும்
மானிற் பெடையும் வாள்வரி யுழுவையும்
புள்ளு மாக்களு முள்ளுறுத் தியன்ற
நொய்ம்மர நெடும்புணை கைம்முதற் றழீஇக்
கூறு டாயமொடு குழூஉக்கொண் டீண்டி
ஆறு டாயமொ டணிவிழ வமர்தல்
இன்ன தொன்றினு மென்னதொன் றாயினும்
காமுறு கருமங் கால்வலை யாக
ஏமுற வொழியா வேயர் மன்னனை
உடுத்துவழி வந்த வுழுவ லன்பின்
வடுத்தீர் கைவினை வாசவ தத்தையொ
டொருப்படுத் தொழியா தோங்குமலை மருங்கிற்
கடிகமழ் கானங் காணக் காட்டிப்
படிவப் பள்ளியுட் பாவப் பெருமரம்
விரத மழுவின் வேரறத் துணிக்கும்
குறிக்கோ ளுறுதவ னுண்மை கூறி
....

(உதயணனுடைய பிறப்பு வரலாறு முதலியன)

இன்றே யன்றியுந் தொன்றுவழி வந்த
குன்றாக் கற்பினெங் கோப்பெருங் கிழவோள்
நித்திலம் பொதிந்த விப்பி போலத்
திருவயிற் றகவயி னுருவொளி யுறாஅ
நின்னைத் தாங்கிய நன்னா ளமயத்துக்
கண்ணிழன் ஞாறிய காமர் பள்ளியுள்
வெண்ணிலா முற்றத்து விரும்பி யுசைதலின்

ஒள்ளொளி யரத்த மூனென நசைஇப்
பல்வலிப் பறவை பற்றுபு பரிந்து
விபுல மென்னும் வியன்பெருங் குன்றத்
தருவரை யருக ராய்நலங் கவினிய
ஆலங் கானத் தணியொடு பொலிந்த
ஞாலங் காவ னஞ்சென நீக்கிப்
பாய்பரி யிவுளி யேயர் பெருமகன்
தன்கட் கொற்ற மெல்லாந் தன்மகன்
வென்றித் தானை விக்கிரற் கருளி
மறுவி னெஞ்சமொடு மாதவந் தாங்கி
உறுபெருங் காட்சி யோங்கிய படிவத்
தறம்புரி தந்தை பள்ளிய தருகர்ப்
[1] பறந்துசெல் சிம்புள் பையென வைத்தலும்
கயலேர் கண்ணி துயிலேற் றெழுவே
[2] உயிர்போ யுறுமையி னுறுபுட் போக
அச்ச வகையினு மந்தரச் செலவினும்
பொற்றொடி மாதர் பொறைநோய் கூர
எல்லாக் கோளு நல்வழி நோக்கத்
திருமணி விளக்கந் திசைநின் றழலப்
பெருமணிப் பாவையிற் பிறந்தனை கிடந்தோய்
திருமெய் தழீஇ யருமைத் தாக
நிகழ்ந்ததை யறியாள் கவன்றன ளிரங்க
ஆத்திரை போந்த வருந்தவன் கண்டுதன்
ஆத்த காதன்மக ளாவ தறிந்துசென்
றஞ்ச லோம்பென நெஞ்சகம் புகலப்
பள்ளிக் கொண்டுபுக் குள்ளழி வோம்பி
அதிரா ஞாலத் தரசுவீற் றிருந்த
கதையுரைக் கெல்லாங் காரண னுதலிற்
புதையிரு ளகற்றும் [3] பொங்கொளி மண்டிலம்
உதய [4] மிவர்தர வுதித்தோன் மற்றிவன்
உதயண னெனப் பெயர்முதற் கொளீஇப்
பரம விருடிகள் பல்லோர்க்குத் தலைவன்

பி - ம். 1 பறந்து சிம்புள். 2 உயிர்பெய்தருமையின், உயிர்பிரிந்தருமையின். 3 பொங்கிருண் மண்டிலம். 4 மிவர்தரப்பிறந்தோன்.

தருமந் தாங்கிய தவாஅக் கொள்கைப்
பிரமசுந் தரனெனும் பெரும்பெயர் முனிவற்குப்
பழிப்பில் கற்பிற் பரமசுந் தரியெனும்
விழுத்தகு பத்தினி விரும்பிப் பெற்ற
புத்திரன் றன்னொடு வத்தவர் தோன்றலும்
[1] இருவிரு மவ்வழி மருவிவிளை யாடிச்
செல்லா நின்ற சில்லென் [2] காலை
வெஞ்சின வேழ வெகுளி நீக்கும்
மந்திர நாமம் வந்துநீர் கன்மெனத்
தேவவிந் திரனிற் றிருந்தப் பெற்ற
ஆய்பெரு நல்லியா ழமைவர வெழீஇக்
கான யானையுங் கரந்துறை புள்ளும்
ஏனைய பிறவு மூனு வுவகையொடு
கேட்டவை யெல்லாம் வேட்டவை விரும்பி
வேண்டிய செய்தலி னீண்டிய மாதவன்
வரத்தின் வல்லே வல்லை யாகென
[3] உரைத்தம் முனிவ னுவந்தனன் கொடுத்துப்
பெறலரும் பேரியாழ் பெற்ற வாறும்
ஆர்வ நெஞ்சின னாகிய கல்வி
நேர்தனக் கில்லா நெஞ்சு ணமைதி
யூகி நினக்கிங் கடைக்கல மென்பதும
போகிய புகழோன் பணிப்பக் கொண்டு
தோழ னாகித் தோமில் கேள்வி
யாழும் பாட்டு மவைதுறை போகிக்
கல்லா நின்ற சில்லென் [4] காலத்து
மைவரை மருங்கின் மடப்பிடி சூழத்
தெய்வ யானை நின்றது நோக்கிக்
கண்டே நின்று காத லூர்தர
மந்திர வாய்ப்பும் வல்ல யாழின்
கந்திர வகையுங் காண்பல் யானென
எழீஇ இயவு ணியக்கப் பொழிமத யானை
வேண்டிய செய்தலி னீண்டிய மாதவன்
பள்ளிக் குப்ப நள்ளிருட் கூறும்

பி - ம். 1 இருவரும். 2 கானம். 3 உரைத்தமுனி. 4 கானத்து.

பாக ரேறினுந் தோற்கயி றிடினும்
நீமுன் னுண்ணினு நீங்குவல் யானென
ஆகு பொருள்கேட் டறிவுற் றெழுந்து
போதுங் காலை மாதவ னொருமகன்
வீயாச் செங்கோல் விக்கிர னொருநாள்
எச்ச மின்மையி னெவ்வங் கூராத்
துப்புர வெல்லாந் துறப்பென் யானெனத்
தற்பயந் தெடுத்தவன் றுணிழல் வந்தோன்
மதலை யாகுமிப் புதல்வன் யாரெனச்
செருமிகு சீற்றத்துக் குருகுலத் தரசன்
சாயாச் செங்கோற் சதானிகன் றேவி
அருமைசால் கற்பின் மிருகா பதியெனும்
நங்கை தன்னகர்க் கங்குற் கிடந்தோட்
கின்னது நிகழ விவ்வயிற் றந்த
பொன்னணி பைம்பூட் புதல்வன் றுனிவன்
ஐயாண்டு நிறைந்தன னாதலி னிவனைத்
தெய்வ ஞானந் திறப்படக் காட்டித்
தன்னகர்க் குய்ப்பெ னென்றனு மடிகள்
என்னுழைத் தம்மி னிறையென வியற்றித்
தாய மெல்லாந் தனக்குரித் தாக
ஏயர் கொற்ற மிவன்வயிற் கொடுத்துப்
பெறலரும் பெருந்தவத் துறுபயன் கொள்வலென்
றுய்புகழ் முனிவனொடு தேவியை யிரந்து
செருமிகு குருசிறன் மருமகற் றழீஇ
நீல யானை நின்றது பண்ணிக்
கோல வெருத்தங் [1] குலவ வேற்றி
வளநகர் புக்குத்தன் [2] னுளமனைக் கெல்லாம்
உதயண னிறையென வறிவரச் சாற்றி
வேத்தவை நடுவண் வீற்றினி திருத்தி
ஏயர் குலமுதற் கிறைவ னாகி
அவ்வழி மற்றுநீ வளர விவ்வழிப்

(தேவியைப் பிரிந்த சதானிகன் செயல)

பட்டதை யறியான் பயநிலங் காவலன்

பி - ம். [1] பொலிய. [2] னுள்மனைக்.

கட்டழ லெவ்வமொடு கடவுளை வினவக்

(முனிவன் கூற்று)

கடும்புள் ளெதிர்ந்து காட்டகத் திட்டதூஉம்
நெடுந்தோ ளரிவை நின்னைப் பெற்றதூஉம்
தகையுடை முனிவன் றலைப்பட் டதூஉம்
வகையுடை நல்யாழ் வரத்திற் பெற்றதூஉம்
விசையுடை வேழம் வணக்கும் விச்சையும்
மாமன் கொண்டுதன் மாணகர் புக்கதூஉம்
ஏயர்க் கிறைமென வியற்றிய வண்ணமும்
மாசில் கொற்றவன் மறுத்திவண் வரவும்
ஆண்டகை மொய்ம்பினோ ரரசடிப் படுப்பதூஉம்
ஈண்டிவண் வந்துநீ வீற்றிருப் பதூஉம்
உள்ளுறத் [1] தோதியா னுள்ள முவப்ப
முற்பா னிகழ்ந்தவும் பிற்பாற் பெருக்கமும்
இனையவை யெல்லா மியற்படப் பிழையாது
வினவிய பொழுதின் [2] விரித்துரைத் தனனோர்
பனுவ லாளனைப் பணிந்துகை கூப்பிக்
கண்போற் காதனின் கழிபே ரமைச்சன்
முன்போல் விளிந்து முடிக்குங் காரியம்
உண்டு மாங்கொல் கண்டுவந் தோர்களைக்
கண்டில மாதலிற் பண்பொடு புணரக்
கேட்பி னறிதும் யாமென வேட்ப
இன்னவை கிளந்துபின் றன்வயிற் றழீஇ
என்கூற் றினையு [3] நுங்கூற் றுகத்
தேன்சுவைக் கொளீஇ வேம்பி னூட்டும்
மகாஅர்மருந் தாளரின் மறத்தகை யண்ணலை
நகாஅர் பல்லவர் நலம்புகழ்ந் தேத்தும்
விழுப்ப மெய்தி யொழுக்கியல் போம்பி
[4] இழுக்கா தியன்ற விலாவா ணத்தயல்
உண்டாட் டயர்த லுறுதி யுடைத்தென
வண்டார் மார்பனை வலியுள் ளுறீஇ
ஏழ்ச்சி வேண்டுஞ் சூழ்ச்சி கொடுக்கென

பி - ம். [1] தொழியா. [2] விரித்துவே றுரைத்தபனுவல். [3] நின் கூற்றுகத். [4] இறக்காறியன்ற.

உள்ள தோழரு மொருப்பட் டெய்தி
வள்ளிதழ் நறுந்தார் [1] வத்தவற் குறுகி
முறைபட வுணர்ந்த குறைவில் கட்டுரை
கொள்ளக் கூறலும் வள்ளலும் விரும்பி
நிதியக் கலத்தொடு பதிபல வருளிக்
கொற்ற முரசிற் கோடணை கொட்டி
ஓசைபோக் கினரா லுவகையின் மகிழ்ந்தென்.

கக—அவலந் தீர்ந்தது முற்றிற்று.

கஉ—மாசன மகிழ்ந்தது.

ஓசை போக்கிய பின்றை யோவா
மாசில் சிறப்பின் வான்பூத் தன்ன
நகரம் வறுவி தாகநாட் கொண்டு

(இலாவாணத்தின் அயலிலுள்ள மலையின் இயற்கையழகும் செயற்கையழகும்)

தகரங் கமழுந் தண்வரைச் சாரற்
றக்கோ ருறையுந் தாபதப் பள்ளியும்
கற்றோ ருறையுங் கடவுட் டானமும்
புக்கோர் புறப்பட லுறாஅப் பொலிவிற்
சுனையும் யாறு மினையவை மல்கி
மேவர வமைத்த மேதகு வனப்பிற்
கோலக் கோயிலொடு குரம்பை கூடிப்

(மரங்கள் முதலியன)

பலவு மாவு நலமா நாகமும்
மகிழும் பிண்டியும் [2] வரியித முனிச்சமும்
வேங்கையு மாவும் விளவும் வேயும்
கோங்கமுங் குரவுங் கொடிக்குருக் கத்தியும்
நறையு நந்தியு மறைபயி லகிலும்
வழையும் வாழையுங் கழைவளங் கவினிய
திகிரியுந் தில்லையும் பயில்பூம் பயினும்
முல்லையும் பிடாவுங் குல்லையுங் கொன்றையும்

பி - ம், [1] வயந்தகற், [2] விரியித.

21006

குருந்தும் வெட்சியு நரந்தையு நறவும்
நறும்பா திரியு நாண்மலர்க் கொகுடியும்
இரும்பம லேலமு மேரில வங்கமும்
பைங்கூ தாளமும் வெண்பூஞ் சுள்ளியும்
[1] கொய்தகை போந்துங் கைதகை காந்தளும்
திமிசுந் தேக்கு ஞெமையு மாரமும்
[2] சேபா லிகையுஞ் செங்கொடு வேரியும்
தீவாய்த் தோன்றியுந் திலகமுந் திரிகோற்
பகன்றையும் பலாசு மகன்றலைப் [3] புழகும்
குளவியுங் குறிஞ்சியும் வளவிய மௌவலும்
சிறுசெங் குரலியுஞ் சிறுசெண் பகமும்
நறும்பொற் [4] கொட்டமுந் துறும்புபு கஞலி
இன்னவை பிறவும் பன்மரம் பயின்று
கொடிப்பூம் பந்த ரிடைப்பரந் தியன்ற
இடமிடந் தோறுங் கடனது வாகித்
தண்டாக் காதலி னுண்டாட் டுரைப்பென

(மாசனம் மலைச்சாரலையடைதல்)

தேரும் வையமுஞ் சிவிகையும் பண்டியும்
ஊரு மூர்தியும் [5] பிடிகையு முயர்வரை
மையணி வேழமு மாவும் பண்ணி
மடமொழி மகளிரு மைந்தரு மேறிக்
கடன்மலை பெயருங் காலம் போல
..........விடு தேனிற் பூநகர் புல்லென
நீரணி பெருமலைச் சார லெய்தி

(பாடியின் இயல்பு)

மாசில் வானத்து மதிவிரிந் தன்ன
தூசக் குடிஞையுந் துலாமண் டபமும்
பல்காழ்த் திரையும் [6] படாகையங் கொட்டிலும்
ஒல்காக் கூடமு மொருங்குதலைப் பிணங்கி
மன்றும் வீதியுந் துன்றிவீ றெய்தி
எவ்விடந் தோறு மவ்விடத் தாகி

பி - ம். 1 கொய்தகைப்போதுங்கைதைக். 2 சோபாலிகை. 3 புழுகும். 4 கோட்டமுந். 5 பிடகை. 6 படாகையும்.

உயர்மிசை யுலக நீங்கி நிலமிசை
அந்தர மருங்கி னந்தன வனத்தொ
டிந்திர [1] னுரிமையொ டெண்கொண் டிறங்கின
இன்பம் பயந்த விலாவா ணத்தயல்
மண்பெருஞ் சோலை மலைவயிற் போகா

(மகளிரும் மைந்தரும் பலவகைக்காட்சிகளைக்கண்டு மகிழ்தல்)

அறைவாய் முரசி னதிர்க ணன்ன
[2] நிறைவாய்த் தண்சுனை நிவந்த நீலத்
தொண்மலர் குற்ற மகளி ரவைநம்
கண்மல ரழித்த கவின போன்மென
[3] நீலமொ டிகன்ற நேரிழை மகளிரைக்
கோலமொடு கலந்த குமரர் மற்றவை
தேம்புடை விரியக் கூம்பிடங் காட்டிநும்
கண்ணிழ லெறிப்பக் கலக்கமொடு நடுங்கி
ஒண்ணிழ லிழந்த வொளிய வாகித்
[4] தொழுவன விரக்குந் தோழிகைக் [5] கொடீஇ
ஒழிக வுள்ளழி விவற்றொடு நீரெனக்
கழுமிய [6] வெகுளியர் காணக் காட்டி
மாறுத் தானை மன்னனை வழுத்தி
ஆறுக் காதலொ டாடின ரொருசார்
பூந்தண் சாரற் பொங்குகுலை யெடுத்த
காந்தட் கொழுமுகை கண்ட மகளிர்நம்
கைவிர லெழினலங் கவர்ந்தன விவையெனக்
கொய்பூங் [7] காந்தள் கொண்ட கையினர்
எமக்கணி யுடையரென் றெம்மொ டுறையுநீர்
நுமக்கணி [8] யுடையரை யெதிர்ந்தனி ரீங்கென
எழில் [9] விர றேறு மியைந்தணி யாகிய
கழுமணி மோதிரங் கழித்தனர் களைந்து
கவற்சி கொண்ட காமத் துணைவியர்
[10] இயற்கை யோரி னிற்றென மதித்துக்
காலக் காந்தட் கதழ்விடங் காட்டிக்

பி - ம். 1 னுரிமையோடுடன். 2 நிரைவாய். 3 நீலமொடணிந்த. 4 தொழுவனிரக்கும். 5 கொண்டென. 6 வெருளிகாண. 7 காந்தளொடு. 8 யுடையோரை. 9 விறற்றேறு. 10 இயலகையோரிற்றென

கோலக் கொழுவிர லேலொளி யெறிப்ப
அரும்பென நில்லா வஞ்சின வளிய
விரிந்த விவற்றொடு விடுமின் வேர்வென்
றிரந்தனர் தெருட்டி யியைந்தன ரொருசார்
தேங்கமழ் சிலம்பிற் பாங்குபட நிவந்த
வேங்கை விரியிணர் விரும்புபு கொய்து
புணர்வெங் காதலர் புனையிருங் கூந்தற்
கிணரிவை யணிமினென் றிரந்தனர் நீட்ட
விரும்பினர் கொண்டு வீயென வுணரார்
அரும்பிள வனமுலை யாகத் தருகர்ச்
[1] சிதர்வன கிடந்த சில்லரிச் சுணங்கிவை
புதல்வர்ப் பயப்பிற் புலந்துகை நீங்கி
மலையக மருங்கின் [2] மரம்பொருந் தினவெனச்
சிலையணி யழித்த சென்றேந்து புருவத்
தரிமலர் நெடுங்க [3] ணழலெழ நோக்கித்
தெரிவை மகளிர் திண்பார் வீசிட
மாலை யோதி மடவரன் மகளிர்க்குக்
காலை கழியினுங் கழியா திதுவென
உவந்த வுள்ளமொடு நயந்துபா ராட்டி
அன்மையை யுணர்த்த [4] வண்மையிற் றாழ்ந்து
வீழ்பூங் கொம்பின் வேங்கை நிரந்த
ஆய்பூங் கானத் தாடின ரொருசார்
அரும்பெறற் காதலொ டணிநமக் காகி
மருங்குலு மாகமும் வருந்தப் போந்த
கருங்கண் வெம்முலை யரும்பி னழித்து
வண்பொற் றட்ட மலர்ந்த வாதலின்
நண்பிற் கொத்தில நம்மோ டிவையெனக்
கோங்கங் குறுகல் செல்லா [5] ரயல
மாம்பொழிற் சோலை மகிழ்ந்துட னாடும்
ஒள்ளிழை மகளிர்க் கொளிர்மதி யன்ன
சுள்ளிவெண் சூழ்ச்சி சுரும்புணத் தொடுத்து
நெறிப்பல கூந்த னேயந் தோன்றக்
குறிப்பறிந் தணிந்து கூடின ரொருசார்

பி - ம். 1 சிதாவமை. 2 மாருரந். 3 ணழலென. 4 வன்மை. 5 ரியலா.

நாக நறுமர நவியத்திற் றுணித்து
வேக வெவ்வழல் விளிய மாட்டி
மாணிணப் புழுக்கலொடு தேனெய் விதவையிற்
பன்முறை பகர்ந்து தொன்முறை பிழையார்
நன்னாட் கொண்டு தன்னையர் பரியப்
பொன்னேர் சிறுதினை விளைந்த [1] புனந்தொறும்
சாயலுங் கிளவியுந் தம்மொடு நிகர்த்த
தோகையுங் கிளியுந் தொக்கவை யகலத்
துறுகல் வேயின் குறைகண் டன்ன
தடந்தோ ளசையத் தட்டை [2] புடைதது
முடந்தாட் பலவின் முன்றி னின்ற
கானவர் மகளிர் காரிகை நோக்கி
வானவர் மகளி [3]ரல்ல ராயின்
வளமலைச் சாரல் வரைமிசை யுறையும்
இளநல மகளி ரிவரென வெண்ணி
அஞ்சி லோதிய ரஞ்சின ரொருசார்
எச்சார் மருங்கினு மின்னோர் பிறரும்
[4] விச்சா தரியரின் வியப்பத் தோன்றிச்
சுனைப்பூக் குற்றுஞ் சுள்ளி சூடியும்
சினைப்பூ வணிந்துங் கொடிப்பூக் கொய்தும்
மகிழின் வட்ட வார்மலர் [5] தொடுத்தும்
பவழப் பிண்டிப் பல்லிணர் [6] பரிந்தும்
செண்ணத் தளிரிற் கண்ணி கட்டியும்
மாலை தொடுத்து மலைவளம் புகழ்ந்தும்
கோலக் குறிஞ்சிக் குரவை யாடியும்
மணிமயிற் பீலி மாமயிற் றெழுதி
அணிநல நோக்கியு மாடல்கண் டுவந்தும்
மாதர்ப் பைங்கிளி மழலை கேட்டும்
மகளிர் நாப்பண் மன்னவன் போலத்
துகளணி யிரும்பிடி துன்னுபு [7] சூழ
அந்தண் மாஅத்த பைந்தளிர் வாங்கிக்
கண்ணயற் பிறந்த கவுளிழி கடாத்துத்

பி - ம். 1 புலந்தொறும். 2 யுடைத்து. 3 ரல்லவாயின். 4 விச்சாதிரியரின். 5 தொடுத்துப். 6 பரிந்து செண்ண. 7 சூழ்ந்தவந்தண்.

தண்ணறு நாற்றந் தாழ்ப்பத் தவிர்த்துப்
பெருமையிற் பிறப்பினும் பெற்றி போகாச்
சிறுமை யாளர் செய்கை போல
மூசுத லோவா மிஞிற்றின மிரிய
வீசுத லோவா விழுத்தகு தடக்கை
இருங்களிற் றினநிரை விரும்பு நோக்கியும்
கொய்குர லேனலுங் குளிர்சுனைப் பாறையும்
மைவளர் சென்னி மரம்பயில் கானமும்
மலர்ப்பூஞ் [1] சோலையுந் திளைத்த லானார்
ஆடியும் பாடியுங் கூடியும் பிரிந்தும்
ஊடியு முணர்ந்து மோடியு மொளித்தும்
நாடியு நயந்து நலம்பா ராட்டியும்
மைந்தரு மகளிரு மணந்துவிளை யாடி
மைந்துற் றனரால் வளமலை புகழ்ந்தென்.

௧௨—மாசன மகிழ்ந்தது முற்றிற்று.

௧௩—குறிக்கோட் கேட்டது.

மைந்தரு மகளிரு மலைவயி னாடி
வெந்திறல் வேந்தன் வீழ்பவை காட்டி
ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்
கண்ணுறக் கவவிக் கலந்து விடாஅ
அருமைக் கொத்த வஞ்சுவரு காப்பின்
உரிமைச் சுற்றம் பின்பட வுய்த்துத்
தீதற வெறியுந் தெரிபொருட் கேள்வி
மூதறி முனிவன் [2] பள்ளி முன்னர்

(சோலைவனம்)

அரணம் வேண்டா தச்ச நீக்கி
வருண மொன்றாய் மயங்கிய வூழிச்
சிறுமையும் வறுமையுந் தின்மையும் புன்மையும்
[3] இறுபும் புலம்பு மின்மையு மிரக்கமும்
அறியு மாந்தரி னுறுவளங் கவினி

பி - ம். 1 சோலைதிளைத்தல். 2 பள்ளியுமுன்னர். 3 இறுபபும், இறுபவும்.

ஐந்திணை மரனும் பைந்தளிர்க் கொடியும்
தந்துணைச் [1]செல்வந் தலைத்தலை பெருகி
அருமதி முனிவர் நிருமிதம் போல
அழல்கண் ணகற்றி நிழன்மீக் [2]கூரி
நீர்புக் கன்ன நீர்மைத் தாகி
ஊர்புக் கன்ன [3]வுள்ளுறப் புரீஇ
மலர்த்தவி சடுத்துத் தளிர்க்குடை யோங்கிப்
பூங்கொடிக் கவரி புடைபுடை வீசித்
தேங்கொடிப் பறவையுந் திருந்துசிறை மிஞிறும்
விரும்புறு சுரும்பும் பெரும்பொறி வண்டும்
[4] குழல்வாய்த் தும்பியுங் குயிலுங் கூடி
மழலையம் பாடலின் மனம்பிணி யுறீஇ
முதிர்கனி யமிர்த மெதிர்கொண் டேந்தி
மேவன பலபயின் றீவன போன்ற
பயமர மல்லது கயமர மில்லாக்
காவினு ளிரீஇக் காவல் போற்றி

(உதயணன் முனிவரைக் காணுதல்)

மாதவ [5]முனிவற்கு மன்னவன் காணும்
கரும முண்மை மரபிற் கிளப்பப்
பெருங்குலப் பிறப்பினு மரும்பொருள் வகையினும்
இருங்கண் ஞாலத் தின்னுயி ரோம்பும்
காவல் [6]பூண்ட கடத்தினும் விரும்பி
இமையோ ரிறைவனை யெதிர்கொண் டோம்பும்
அமையா தீட்டிய வருந்தவ [7]முனிவரின்
வியலக வேந்தனை யியல்புளி யெதிர்கொண்
டணித்தகு பள்ளி யசோகத் தணிநிழல்
மணித்தார் மார்பனை மணன்மிசை யடுத்த
பத்திப் பன்மலர்ச் சித்திரங் குயின்ற
இயற்றுத் தவிசின்மிசை யிருக்கை [8]காட்டக்
கவற்சி மனத்தொடு காண்டக [9]விருந்ததன்
தாண்முதல் சார்ந்து தோண்முதற் றோழனை

பி-ம். 1 செல்வத்தலை. 2 கூறி. 3 வுள்ளுவப். 4 சழலவாயம்பி. 5 முனிவர்க்கு. 6 பூணடத்தினும். 7 முனிவரன். 8 காட்டிக். 9 விருந்தனன்.

உள்ளி [1] யுள்ளழிந் தொழுகுவரைத் தடக்கையின்
[2] வெள்ளிதழ் நறுமலர் வீழப் பையாந்து
நினைப்புள் ளுறுத்தவ னிலைமை நோக்கி
[3] இனத்தி னிரித்தாங் கெவ்வகை நிமித்தமும்
மனத்தி [4] னுற்றவை மறையின் றுணர்தலிற்
[5] றுனிவுகொண் மன்னற்கு முனிவன் கூறும்

(முனிவன் கூறல்)

பசுமரஞ் சார்ந்தனை யாதலின் மற்றுநின்
உசிர்ப்பெருந் தோழ னுண்மையுங் கூட்டமும்
கண்ணகன் றுறைந்த கடிநா ளமையத்துத்
திண்ணி தாகுந் தெளிந்தனை யாகுமதி
விரும்பிநீ பிடித்த வெண்மலர் வீழ்ச்சி
பொருந்திநீ யளக்கும் பொருவில் போகத்
திடையூ றுண்மை முடியத் தோன்றும்
வீழ்ந்த வெண்மலர் வெறுநிலம் படாது
தாழ்ந்த கச்சைநின் றுண்முதற் றங்கலிற்
பிரிந்த போகம் பெயர்த்தும் பெறுகுவை
நிலத்துமிசை யிருந்தனை யாதலின் மற்றுநின்
தலைப்பெரு நகரமொடு நன்னாடு தழீஇக்
கொற்றங் கோடலு முற்றிய தாகி
முன்னிய [6] நின்றவை முடியத் தோன்றுமென்
றெண்ணிய விப்பொரு டிண்ணிதி னெய்தும்
பெறும்பய மிதுவெனப் பிழைத்த லின்றி
[7] உறும்பெருஞ் சாரண ருரைவே றுண்மையும்
[8] இறுவா யெழுச்சியு மித்துணை யளவென
உறுதவ முனிவ னுள்விரித் தொழியாது
வத்தவர் பெருமகன் றத்துற வகலக்
கழிபொரு ளெதிர்பொருட் கேது வாக
அழிபொரு ளன்றி யாகுபயங் கூறத்

(உதயணன் உவத்தல்)

தக்கது [9] மன்ற மிக்கோன் கூற்றென
நட்புடைத் தோழனை நண்ணி யன்னதோர்

பி - ம். 1 யுள்ளிழந். 2 வள்ளிதழ். 3 இனத்திரிந். 4 னூற்றமுறை. 5 றுணிவு. 6 நின்றமை. 7 உறுபெறுஞ். 8 இன்றுவா. 9 மன்றனமிக்கொள்.

உட்புகன் றெழுதரு முவகைய னாகிப்
பள்ளி மருங்கிற் பாவங் கழீஇ
வள்ளி மருங்குல் வாசவ தத்தையைக்
கூடுத லானாக் குறிப்பு முந்துறீஇ
ஆடுத [1] லூற்றமொ டமர்ந்தன னுவந்தென்.

கரு—குறிக்கோட் கேட்டது முற்றிற்று.

கச—உண்டாட்டு.

21006

ஆடுத லானா வளப்பின னாகி
நாடுதலை மணந்த நன்னகர் நினையான்
மாயோன் மார்பின் மன்னுபு கிடந்த
ஆரம் போல வணிபெறத் தோன்றிப்
பசும்பொற் றாதொடு பன்மணி வரன்றி
அசும்புசோ ரருவரை யகலம் பொருந்தி
ஞால மாந்தரை நாணி யன்ன
நடுங்குசெலற் கான்யாற்றுக் கடும்புன லாடி
மணிநிழற் பாறை மருங்கிற் பல்கி
அணிகலப் பேழை [2] யகந்திறந் தன்ன
நறுமல ரணிந்த குறுவாய்க் குண்டுசுனை
நீணீர் முழவின் பாணியிற் பாடியும்
குழையர் கோதைய ரிழைய ரேரிணர்த்
தழையர் தாரின ருழைவயிற் பிரியார்
பல்வகை மகளிரொடு செல்வஞ் சிறந்தும்
கானுறை மகளிரிற் கவின்பெறத் தோன்றித்
தேனுறை சிலம்பிற் றானந் தோறும்
விரவுமலர்க் கோதையர் வேறுவே [3] றியலிக்
குரவம் பாவைகொண் டோலுறுத் தாடியும்
விரிந்துவே யுடைத்த வெண்கதிர் முத்தம்
தெரிந்துவே றமைத்துச் சிற்றி லிழைத்தும்
பூங்கட் பாவைக்குப் பொற்கல மிவையெனத்
தேங்கட் சாரற் றிருந்துசினை மலர்ந்த
கோங்கந் தட்டம் வாங்கினர் வைத்தும்

பி-ம். 1 லூற்றமொடு போந்தனன், 2 யகந்தீர்ந்தன்ன, 3 றிகலிக்.

செப்படா ரன்ன செங்குழைப் பிண்டிக்
[1] கப்புடைக் கவிசினை நற்புடை நான்ற
தழைக்கயிற் றூசல் விருப்புற் றாக்கியும்
பைங்கொடி முல்லை வெண்போது பறித்தும்
கத்திகை தொடுத்தும் பித்திகை பிணைத்தும்
சித்திர மாகச் செந்தளிர் வாங்கிப்
பத்திரச் சேதம் பற்பல கிள்ளியும்
[2] உறியோர்க் குதவுதல் செல்லா தொய்யெனச்
சிறியோ ருற்ற செல்வம் போலப்
பொருசிறை வண்டினம் பொருந்தாது மறக்க
நறுமலர்ச் செல்வமொடு நாட்கடி கமழும்
செண்பகச் [3] சோலைத் தண்டழை தைஇயும்
[4] பேறருங் கற்பிற் பிரச்சோ தனன்மகள்
மாறடு வேற்கண் வாசவ தத்தை
செல்வமுஞ் சிறப்பும் பல்லூழ் பாடிக்
குராஅ நீழற் கோல்வளை யொலிப்ப
மராஅங் குரவை மகிழ்ந்தனர் மறலியும்
[5] ஆடுபொற் கிண்கிணி யடிமிசை யரற்ற
நீடி யன்ன நிழலறை மருங்கிற்
பந்தெறிந் தாடியும் பாவை புனைந்தும்
அந்தளிர்ப் படைமிசை யயர்ந்தன ரொடுங்கியும்
[6] ஏனற் குறவ ரிருங்குடிச் சீறூர்
மானமர் நோக்கின் மகளிரொடு மரீஇ
வெங்கண் மறவர் வில்லின் வீழ்த்த
பைங்கண் வேழத்துப் பணைமருப் புலக்கையின்
அறையுர லிறைய வைவனப் பாசவல்
இசையொடு தன்னைய ரியல்புபுகழ்ந் திடிக்கும்
அம்மனை வள்ளை யின்னிசை கேட்டும்
கோயின் மகளிர் மேயின ராடப்
பொருவில் போகமொ டொருமீக் [7] கூறிய
உருவப் பூந்தா ருதயண குமரனும்

பி - ம். 1 கைப்புடைச். 2 முறியோர்க்குதவுதல். 3 சோலையொடு தண்டழைத்தையும். 4 பெறலருங். 5 ஆய்பொற். 6 ஏணிக்குறவர். 7 கூரிய.

வள்ளியம் பணைத்தோண் முள்ளெயிற் றமர்நகை
வான்மணிக் கொடும்பூண் வாசவ தத்தையும்
இயல்பிற் செய்ய வாயினு முயர்வரை
அருவி யாட்டினு [1] மறற்சுனைத் திளைப்பினும்
பூங்குழை மகளிர் பொலங்கலத் தேந்திய
தேங்கமழ் தேறலொடு தெளிமது [2] மடுப்பினும்
தாமரைச் செவ்விதழ்த் [3] தலைக்கேழ் விரித்த
காமர் நெடுங்கண் கைம்மீச் சிவப்பக்
கனிந்த காதலொடு முனிந்து............ .
மயக்க மாகி முயக்க மில்லாது
பிரிவரும் புள்ளி னொருமையி னொட்டி
வண்டார் [4] சோலை வளமலைச் சாரல்
உண்டாட் டயர்பவா லுவகையுண் மகிழ்ந்தென்.

௧௪—உண்டாட்டு முற்றிற்று.

௧௫—விரிசிகை மாலைசூட்டு.

வண்டார் சோலை வளமலைச் சாரல்
உண்டாட் டயரும் பொழுதி னொருநாள்

(முனிவராச்சிரமம்)

[5] வழையமன் முன்றிலொடு வார்மணல் பரப்பிக்
கழைவளர் கான்யாறு [6] கல்லலைத் தொழுகி
ஊக முகளு முயர்பெருஞ் சினைய
நாகப் படப்பையொடு நறுமலர் துறுமிச்
சந்தனப் பலகைச் சதுரக் கூட்டமொடு
மந்திரச் சாலை மருங்கணி பெற்ற
[7] ஆத்திரை யாளர் சேக்குங் கொட்டிலும்
நெடியவன் மூவகைப் படிவம் பயின்ற
[8] எழுதுநிலை மாடமு மிடுகுகொடிப் பந்தரும்
கல்லறை யுறையுளொடு பல்லிடம் பயின்றே
துறக்கக் கிழவனுந் துன்னிய காலை

பி - ம். 1 மறச்சுனை. 2 மடுப்பவுந். 3 தலைக்கென். 4 கோதை. 5 வழையமர். 6 காலலைத். 7 மாத்திரை. 8 எழுநிலைமாடம்.

இறக்க லாகா வெழிற்பொலி வெய்தித்
தண்பூந் தணக்கந் தமாலந் தகரம்
ஒண்பூங் காந்தள் வெண்பூஞ் சுள்ளி
வீயா நாற்றமொ டணிவளங் கொடுப்பக்
கையமைத் தியற்றிய செய்சுனை தோறும்
வராலும் வாளையு முராஅய் [1] மறலக்
கழுநீ ராம்பல் கருங்கேழ்க் குவளையொடு
கொழுநகைக் குறும்போது குறிப்பிற் பிரியாப
புணர்ச்சி மகளிர் போகத்துக் கழுமித்
துயிற்கண் டிறந்த தோற்றம் போல
நறவுவாய் திறந்து நாண்மதுக் கமழ
அறுகால் வண்டின மார்ப்ப வயலே
அந்தீம் பலவு மள்ளிலை வாழையும்
முதிர்கோட் டெங்கொடு முன்றி னிவந்து
மணிக்கண் மஞ்ஞையு மழலை யன்னமும்
களிக்குரற் புறவுங் கருங்குயிற் பெடையும்
பூவையுங் கிளியும் யூகமு மந்தியும்
மருளி மாவும் வெருளிப் பிணையும்
அன்னவை பிறவுங் கண்ணுறக் குழீஇ
நலிவோ ரின்மையி னொலிசிறந் தூராஅய்
அரசிறை கொண்ட [2] வாவணம் போலப்
பொலிவொடு புணர்ந்த பொழிலகம் புதைஇப்
பெருந்தகு படிவமொடு பிறப்பற முயலும்
அருந்தவ நோன்மைய ராத்திரைக் கொட்டிலிற
கேள்வி முற்றிக் கிரிசை நுனித்த
வேள்விக் கலப்பை விழுப்பொருள் விரதத்துச்
சீரை யுடுக்கை வார்வளர் புன்சடை
ஏதமில் காட்சியோர் மாதவ ருறையும்
பள்ளி குறுகி யொள்ளிழை மகளிரொடு
வான்பொற் கோதை வாசவ தத்தையும்
காஞ்சன மாலையுங் காண்டற் ககலப்
பெருந்தண் பிண்டி பிணங்கிய நீழல்
அரும்படைத் தானை யகன்ற செவ்வியுள்

பி - ம். 1 மலரக். 2 வாவுணம்.

வயந்தக குமரனொடு வத்தவ னிருந்துழி

(விரிசிகையின் பாதாதிகேச வருணனை)

ஏத மின்றி யிறைக்கடங் கழித்துக்
காதற் பெருந்தொடர் களைத லாற்றான்
மாதர்த் தேவியொடு மாதவம் புரிந்த
மன்னவ முனிவன் றன்னம ரொருமகள்
அணித்தகு பேரொளி யரத்த மடுத்த
மணிப்பளிங் கன்ன மாசில் வனப்பின்
உகிரணி பெற்ற நுதிமுறை சுருங்கி
நிரலள வமைத்த விரலிற் கேற்பச்
செம்மையிற் சிறந்து [1] வெம்மைய வாகி
ஊன்பெறப் பிறங்கி யொழுகுநீ ராமைக்
கூன்புறம் பழித்த கோலப் புறவடிக்
குவிந்த வடிமையிற் கோபத் தன்ன
பரட்டி னன்னர்ப் பாய சீறடித்
திரட்டி யன்ன செல்வக் கணைக்காற்
செறிந்துவனப் பெதிர்ந்த தேன்பெய் காம்பின்
நிறங்கவின் பெற்ற காலமை குறங்கிற்
கைவரை நில்லாக் கடுஞ்சின வரவின்
பையழித் தகன்ற பரந்தேந் தல்குற்
றுடிநடு வன்ன துளங்கிய நுசுப்பிற்
கொடியடர்ந் தொழுகிய கோல மருங்கிற்
புனற்சுழி யலைத்துப் பொருந்திய கொப்பூழ்
வனப்புவீற் றிருந்த வாக்கமை யவவயிற்
றஞ்சி லாகத் தெஞ்சுத லின்றித்
திணைமுத லிட்ட செங்கண் முகிழ்முலை
அணைபுரை மென்மை யமைபடு பணைத்தோட்
காம்பமை சிலம்பிற் கடிநாட் காந்தட்
பூந்துடுப் பன்ன முன்கையிற் பொலிந்து
கொழுமுகை குவித்த செழுமென் சிறுவிரற்
கிளிவா யன்ன வொளிவா யுகிரின்
விரிந்துநிலா நிறைந்த மேதகு கமுகின்
எருத்திற் கேற்ற திருத்தகு கழுத்திற்

பி - ம். 1 வெண்மைய.

கூடுமதி யன்ன சேடணி திருமுகத்
தகழ்கடற் பிறந்த வாசறு பேரொளிப்
பவழக் கடிகை பழித்த செவ்வாய்
முருந்தொளி முருக்கிய திருந்தொளி முறுவல்
நேர்கொடு சிவந்த வார்கொடி மூக்கிற்
பொருகயல் போலப் புடைசேர்ந் துலாஅய்ச்
செருவேல் பழித்த சேயரி நெடுங்கட்
கண்ணிற் கேற்ப நுண்ணிதி னொழுகி
முரிந்தேந்து புருவம் பொருந்திய பூநுதல்
நாள்வாய் வீழ்ந்த நறுநீர் வள்ளைத்
தாள்வாட் டன்ன [1] தகையமை காதின்
நீல மாமணி [2] நிமிர்ந்தியன் றன்ன
கோலங் கொண்ட குறுநெறிக் கூழை
ஒருசிகை முடித்த வுறப்பமை கோலத்து
விரிசிகை யென்னும் விளங்கிழைக் குறுமகள்

(விரிசிகையின் செயல்)

இருந்தினி தொழுகு மியன்மலைப் பள்ளியுள்
அருந்தவ ரல்லதை யாடவ ரறியாள்
தவிர்வில் காதலொடு தன்வழிப் படூஉம்
கவர்கணை நோன்சிலைக் காம னிவனெனும்
மைய வுள்ளமொடு பைய வியலிப்
பிள்ளைமை கலந்த பேதைப் பெரும்பிணை
வெள்ளை நோக்கமொடு [3] விரும்புபு விதும்பிப்
பவழப் பாவையும் பந்துங் கிடைஇப்
புகழப் பட்ட பூமரக் காவினுள்
நந்தி வட்டமு நாகத் தலரும்
சிந்து வாரமுஞ் [4] சேபா லிகையும்
மணிக்குருக் கத்தியும் பணிப்பூஞ் சுள்ளியும்
நாட்சிறு சேடமு நறுஞ்செண் பகமும்
கோட்கமைந் தேந்திய கோலப் பன்மலர்
அம்பூங் குடங்கை யகவயி னடக்கிக்
கொம்பேர் மருங்குல் கோமகற் குறுகித்
திருந்துவாய் திறந்து தேனென மிழற்றிப்

பி - ம். [1] தகைமைக். [2] நிவிர்ந்தியன், [3] விதும்புபு. [4] சோபாலிகையும்.

பெருந்தண் [1] மலரிற் பிணைய ரெடுத்தென்
பாவையும் யானும் பண்புளிச் சூடுகம்
ஈயி னையவென் றிரந்தன ணீட்ட

(உதயணன் கருதுதலும் மாலை தொடுத்து விரிசிகைக்கு ஈதலும்)

நூலொடு புணர்ந்த வாலியன் மரபிற்
றவத்தியற் பள்ளி சார்ந்தன ளுறையும்
இயற்கைத் திருமக ளிவளென வெண்ணி
இணைமலர் நெடுங்க ணிமைத்தலும் வாடிய
துணைமலர்க் கோதைத் தோற்றமுங் கண்டே
முனிவர் மகளெனத் தெளிவு முந்துறீஇ
ஐய மின்றி [2] யாணை யோட்டிய
தெய்வத் திகிரி கைவலத் துயரிய
நிலப்பெரு மன்னர் மகளிர்க் கமைந்த
இலக்கணக் கூட்ட மியற்படத் தெரியா
அரும்படை வழக்கி னன்றியு முனியாது
நரம்புபொரத் தழும்பிய திருந்துவிர லங்கையிற்
புரிநூன் மீக்கோள் பூம்புறத் தேற்றதன்
தெரிநூல் வாங்கி யிருநூற் கொளீஇப்
பவழமும் வெள்ளியும் பசும்பொன் னடரும்
திகழ்கதிர் முத்தமுந் திருமணிக் காசும்
உறழ்படக் கோத்த வொளியின போல
வண்ணம் வாடாது வாசங் கலந்த
தண்ணறும் பன்மலர் தானத் திரீஇ
வாட்டொழிற் றடக்கையின் வத்தவர் பெருமகன்
சூட்டுநலம் புனைந்து சுடர்நுதற் கீய
ஈயக் கொண்டுதன் னெழின்முடிக் கேற்பச்
சூடுத றேற்றாள் சுற்றுபு திரியும்
ஆடமைத் தோளி யலமர னோக்கி
மடவரன் மாதரை வாவென வருளித்
தடவரை மார்பன் [3] றுண்முத லுறீஇ
உச்சிக் கேற்ப வொப்பனை கொளீஇப்
பக்கச் சின்மலர் பத்தியிற் கட்டுபு

பி - ம். 1 மலரிற்றிணைய. 2 யானை. 3 றுன்முதல்.

நீல நாகம் பைவிரித் தன்ன
கோலச் சிகழிகை தான்முதல் சேர்த்தி
அஞ்செங் கத்திகை யணிபெற வடைச்சிப்
பைங்கேழ்த் தாமம் பக்கம் வளைஇ
இருளறு மதியிற் றிருமுகஞ் சுடர
அமைபுரி தோளியை யன்பி னளைஇப்
புனைமலர்ப் பிணையல் சூட்டினன் புகன்றென்.

கரு—விரிசிகை மாலைசூட்டு முற்றிற்று.

கசு — ஊடலுணர்த்தியது.

(உதயணன் விரிசிகையை விடுத்தல்)

புனைமலர்ப் பிணையல் புரவலன் சூட்டி
[1] இனமடற் பெண்ணை யீர்ந்தோடு திருத்திச்
செல்க நங்கை மெல்ல நடந்தென
அடுத்த காதலொ டண்ணல் விடுப்ப

(வாசவதத்தை காணுதலும் ஊடுதலும்)

வேண்டிடத் தாடும் விருப்புறு நீக்கம்
யாண்டுகழிந் தன்ன வார்வ மூர்தரத்
தழையுங் கண்ணியும் விழைவன வேந்திப்
பொற்பூங் கிண்கிணி புறவடிப் [2] பிறழ
நற்பூங் கொம்பர் நடைபெற் றூங்குக்
கவவுறு காதலிற் கண்ணுற வரூஉம்
உவவுறு மதிமுகத் தொளிவளை முன்கைக்
கண்ணார் கனங்குழை கதுமெனக் கண்டே
மண்ணார் மார்வன் மாதரைச் சூட்டிய
காமர் பிணையற் கதுப்பணி கனற்றத்
தாமரை யன்னதன் றகைமுக மழுங்கா
ஓடரி சிதரிய வொள்ளரி மழைக்கண்
ஊடெரி யுமிழு மொளியே போலச்
சிவப்புள் ளுறுத்துச் செயிர்ப்பு முந்துறீஇ
நயப்புள் ளுறுத்த வேட்கை நாணி

பி - ம். 1 இளமலர்ப். 2 புழற.

உருத்தரி வெம்பனி யூழூழ் சிதரி
விருப்புமறைத் தடக்கி வேக நோக்கமொடு
பனிப்பிறை யழித்த படிமைத் தாகிய
அணித்தகு சிறுநுத லழன் றுவிய ரிழிய
உருவ வானத் தொளிபெறக் [1] குலாஅய
திருவி லன்ன சென்றேந்து புருவம்
முரிவொடு புரிந்த முறைமையிற் றுளங்க
இன்பம் பொதிந்த வேந்தணி வனமுலை
குங்குமக் கொடியொடு குலாஅய்க் கிடந்த,
பூந்தா தொழுக்கஞ் சாந்தொடு திமிர்ந்து
தளிர்ப்பூங் கண்ணியுந் தழையும் வீசியிட்
டொளிப்பூந் தாம முள்பரிந்து சிதறி
முழுநீர்ப் பொய்கையுட் பொழுதொடு விரிந்த
செழுமலர்த் தாமரைச் செவ்விப் பைந்தாது
வைக லூதா வந்தக் கடைத்தும்
எவ்வந் தீராது நெய்தற் கவாவும்
வண்டே யனையர் [2] மைந்த ரென்பது
பண்டே யுரைத்த பழமொழி மெய்யாக்
கண்டே னொழிகினிக் காமக் கலப்பெனப்
பிறப்பிடைக் கொண்டுஞ் சிறப்பொடு பெருகி
நெஞ்சிற் பின்னி நீங்கல் செல்லா
அன்பிற் கொண்ட வார்வ வேகமொடு
நச்சுயிர்ப் பளைஇ நண்ணல் செல்லாள்
[3] கச்சத் தானைக் காவலன் மடமகள்
பெருமகன் மார்பிற் பிரியா துறையுமோர்
திருமக ளுளளெனச் செவியிற் கேட்பினும்
கதுமெனப் பொறாஅ [4] ளாதலிற் கண்கூ
டதுவவட் கண்டகத் தறாஅ வழற்சியிற்
றற்புடை சார்ந்த தவமுது மகளையும்
கைப்புடை நின்ற காஞ்சனை தன்னையும்
அற்பிடை யறாஅ வெந்தை யணிநகர்
உய்த்தனிர் கொடுமினென் றாழடி யொதுங்கிச்
சிதர்மல ரணிந்து செந்தளி ரொழுகிய

பி - ம். 1 குலாயத். 2 மாந்த. 3 கச்சைத். 4 ளாயினும்.

புதுமலர்ச் சோலையுட் புலந்தவ ளகல

(காஞ்சனை முதலியோர் செயல்)

அகலு மாதரை யன்பிற் கெழீஇக்
கலைபுணர் கணவனொடு காஞ்சனை பிற்படக்
கண்ணிற் காட்டிக் காம வெகுளி
நண்ணின் மற்றிது [1] நயந்துவழி யோடி
மாசறக் கழீஇ மனத்திடை யாநோய்
ஆரா வாய்முத் தார்த்தி னல்லது
தீரா துயிர்க்கெனத் தெளிவு முந்துறீஇ
ஊராண் குறிப்பினொ டொருவயி னொதுங்கும்
தன்னமர் மகளொடு தாய்முன் னியங்க

(உதயணன் செயல்)

[2] நறவினை தேற லுறுபிணி போலப்
பிறிதிற் றீராப் பெற்றி நோக்கிக்
குறிப்புவயின் வாரா ளாயினுங் கூடிப்
பொறிப்பூ ணகத்துப் புல்லுவன னொடுக்கி
அருமைக் காலத் தகலா நின்ற
திருமகட் பரவு மொருமகன் போல
உரிமைத் தேவி யுள்ளக நெகிழும்
வழிமொழிக் கட்டளை வழிவழி யளைஇ
முடியணி திருத்தியு முலைமுதல் வருடியும்
அடிமிசைக் கிண்கிணி யடைதுக ளகற்றியும்
கதுப்பணி புனைந்துங் கதிர்வளை யேற்றியும்
மதுக்களி கொண்ட மதரரி நெடுங்கட்
கடைத்துளி துடைத்துங் கடிப்புப்பெயர்த் தணிந்தும்
புதுத்தளிர் கொடுத்தும் பூம்புற நீவியும்
செயிரிடை யிட்டிது [3] சிறக்குவ தாயின்
உயிரிடை யிட்ட வுறுகண் டருமெனத்
தன்னுயிர்க் கணவ னுண்ணெகிழ்ந் துரைக்க
அம்மொழி கேளா தசைந்த மாதரை
அருவி யாற்றிசை யணிமுழ வாகக்
கருவிரன் மந்தி பாடக் கடுவன்
குரவை யயருங் குன்றச் சாரற்

பி - ம். 1 நவந்து. 2 நறவினைத் 3 சிதைக்குவ,

றகிலிணைப் பொலிந்த பகலணைப் பள்ளியுள்
முகிழ்ந்தேந் திளமுலை முத்தொடு முழீஇத்
திகழ்ந்தேந் தகலத்துச் செஞ்சாந்து சிதையப்

(வாசவதத்தை உரைத்தல்)

பூண்வடுப் பொறிப்பப் புல்லுவயின் வாராள்
நாணொடு மிடைந்த நடுக்குறு [1]மழலையள்
காம வேக முள்ளங் கனற்றத்
தாமரைத் தடக்கையிற் றூமம் பிணைஇ
ஆத்த வன்பி னரும்பெறற் காதலிக்
கீத்தது மமையாய் பூத்த கொம்பின்
அவாவுறு நெஞ்சமொடு கவான்முத லிரீஇத்
தெரிமலர்க் கோதை திகழச் சூட்டி
அரிமலர்க் கண்ணிநின் னகத்தன ளாக
அருளினீ விழைந்த மருளி னோக்கின்
மாதரை யாமுங் காதலெம் பெரும
பொம்மென் முலையொடு பொற்பூ ணொருங்க
விம்ம முறுமவள் வேண்டா முயக்கெனப்
பண்ணெகிழ் பாடலிற் பழத்திடைத் தேன்போல்
உண்ணெகிழ்ந்து கலவா வூடற் செவ்வியுள்

(ஒரு முசுக்கலையின் செயல்)

தாழ்வரை யடுக்கத்துத் தளிர்சேர் தேமாத்
தூழுறு தீங்கனி யுண்ணு விருத்தலின்
இவறினை நீயெனத் தவறு முந்துறீஇ
இனப்பெருந் தலைமக னிணையி னோட்டித்
தனக்கரண் காணது தடவரைத் தத்திப்
பெருமகன் கோயிற் றிருமுற் பாய்ந்தெனக்
கரணீ யருளென் றடைவது போன்றோர்
கருமுக முசுக்கலை கதுமெனத் தோன்ற

(வாசவதத்தை நடுங்கி ஊடல் தீர்தல்)

[2] இன்னதென் றுணரா நன்னுத னடுங்கி
அழல்கதிர் பரப்பி யுழல்சேர் [3]வட்டமொடு
நிழலவிர் கதிர்மதி நிரந்துநின் றாங்குத்

பி-ம். 1 மிழலையள். 2 இன்னதொன்று, 3 வட்டம்,

திலகத் திருமுகஞ் செவ்வன் றிருத்தி
ஒழுகுகொடி மருங்கு லொன்று யொட்டி
மெழுகுசெய் பாவையின் மெல்லிய லசைந்து
மன்னவன் மார்பின் மின்னென வொடுங்கி
அச்ச முயக்க [1] நச்சுவனள் விரும்பி
அமிழ்துபடு போகத் தற்புவலைப் படுத்த

(உதயணன் செயல்)

மாதரை மணந்த தார்கெழு வேந்தன்
[2] வழித்தொழிற் கரும மனத்தி னெண்ணான்
விழுத்தகு மாதரொடு விளையாட்டு விரும்பிக்
கழிக்குவனன் மாதோ கானத் தினிதென்.

௧௬—ஊடலுணர்த்தியது முற்றிற்று.

௧௭—தேவியைப் பிரித்தது.

கழிக்குங் காலைக் கானத் தகவயின்

(யூகியின் செயல்)

வழுக்கி றோழரொ டிழுக்கின் றெண்ணி
[3] வந்தவ னொடுங்கிய வெந்திற லமைச்சன்
பொய்ந்நில மமைத்துப் புரிசைக் கோயில்
வெவ்வழ லுறீஇ யிளங்கிழைப் பிரித்து
நலத்தகு சேதா நறுநெய்த் தீம்பால்
அலைத்துவாய்ப் பெய்யு மன்புடைத் தாயின்
இன்னா செய்து மன்னனை நிறூஉம்
கருமக் கடுக்க மொருமையி னுடி
உருமண் ணுவாவொடு வயந்தகற் குணர்த்தித்
தவமுது மகளைத் தக்கவை காட்டி
உயர்பெருங் கோயிலுட் டேவியை யொழியா
நிலாமணிக் கொடும்பூ ணெடுந்தகைக் குருசிலை
உலாவெழப் போக்கி யொள்ளழ லுறீஇயபின்
இன்னுழித் தம்மினென் றன்னுழி யவளொடு
[4] பின்கூட் டமைவும் பிறவுங் கூறிக்

பி - ம். 1 நசசுவன. 2 வழுத்தொழிற். 3 வாநதவனொடுங்கிய, 4 பினகூட்டமையும்,

[1] கன்கூட் டெய்திக் கரந்தன னிருப்ப

(சாங்கியத்தாயின் செயல்)

மந்திர நாவி னந்த ணூட்டி
தேருடை மன்னர் திறல்படக் கடந்த
போரடு குருசிலைப் பொழுதிற் சேர்ந்து
வரையுடைச் சாரலில் வரூஉங் குற்றத்
துரையுடை முதுமொழி யுரைத்தவற் குணர்த்தித்

(சாங்கியத்தாய் உதயணனுக்குக் கூறல்)

தோற்கை யெண்குங் கோற்கைக் குரங்கும்
மொசிவா யுழுவையும் பசிவாய் முசுவும்
வெருவு தன்மைய வொருவயி னொருநாட்
கண்ணுறக் காணிற் கதுமென நடுங்கி
ஒண்ணுதன் மாத ருட்கலு முண்டாம்
பற்றா ருவப்பப் பனிவரைப் பழகுதல்
நற்றார் மார்ப நன்றியின் றாகும்
இன்னெயிற் புரிசை யிலாவா ணத்துநின்
பொன்னியல் கோயில் புகுவது பொருளென

(உதயணன் இலாவாணம் சென்று இருத்தல்)

உறுவரை மார்ப னுவந்தன னாகி
இறுவரை யிமயத் துயர்மிசை யிழிந்து
பன்முகம் பரப்பிப் பௌவம் புகூஉம்
நன்முகக் கங்கையி னகர நண்ணிப்
பன்மலர்க் கோதையைப் பற்றுவிட் டகலான்
சின்னாள் கழிந்த காலைச் சிறந்த

(தோழர் உதயணனிடம் கூறுதல்)

நன்மாண் டோழர் நண்ணுபு குறுகிச்
செய்வினை மடிந்தோர்ச் சேர்ந்துறை விலளே
மையறு தாமரை மலர்மக ளானெனல்
வையகத் துயர்ந்தோர் வாய்மொழி யாதலின்
ஒன்றா மன்னர்க் கொற்றுப்புறப் படாமைப்
பன்னாட் பிரிந்து [2] பசைந்துழிப் பழகாது
வருவது பொருளென வாசவ தத்தையைப்

பி-ம். 1 கண்கூட். 2 பசந்துழி.

(உதயணன் மறுத்தலும் வாசவதத்தையின் கூற்றும்)

பிரித லுள்ளம் பெருந்தகை மறுப்பத்
தாழிருங் கூந்தலைத் தணப்ப நின்றதோர்
ஊழ்வினை யுண்மையி னொளிவளைத் தோளியும்
வேட்டம் போகி யடிகள் காட்டகத்
தரும்பினு மலரினும் பெருஞ்செந் தளிரினும்
கண்ணி கட்டித் தம்மி னெனக்கென

(உதயணன் வேட்டைக்குச் செல்லல்)

வள்ளிதழ் நறுந்தார் வத்தவ மன்னனும்
உள்ளம் [1] புரிந்தன னொள்ளிழை யொழியக்
கழிநாட் காலைக் கான நோக்கி
[2] அடுபோர் மாவூர்ந் தங்க ணீங்க

(அமைச்சரின் ஏவலாளர் வாசவதத்தையின் மாடத்திற்குத் தீ மூட்டல்)

வடுநீங் கமைச்சர் வலித்தன ராகிப்
பிணைமலர்ப் படலைப் பிரச்சோ தனன்றன்
இணைமலர்ப் பாவையை யியைந்ததற் கொண்டும்
ஊக்க மிலனிவன் வேட்கையின் வீழ்ந்தென
வீக்கங் காணார் வேட்டுவ ரெள்ளிக்
கலக்க மெய்தக் கட்டழ லுறீஇய
தலைக்கொண் டனரெனத் தமர்க்கும் பிறர்க்கும்
அறியக் கூறிய செறிவுடைச் செய்கை
வெஞ்சொன் மாற்றம் வந்துகை கூட
வன்கண் மள்ளர் வந்தழ லுறீஇப்
போர்ப்பறை யரவமொ [3] டார்ப்பனர் வளைஇக்
கோப்பெருந் தேவி போக்கற மூடிக்
கைபிகந்து பெருகிய செய்கைச் சூழ்ச்சியுட்

(உருமண்ணுவா முதலியோர் செயல்)

பொய்ந்நில மமைத்த பொறியமை மாடத்
திரும்பும் வெள்ளியு மிசைத்துருக் குறீஇ
அருங்கல மாக்கி யாப்புப்பிணி யுழக்கும்
கொலைச்சிறை யிருவரைப் பொருக்கெனப் புகீஇ

பி - ம். 1 புரிதனள. 2 அடும்போர் 3 டார்ப்பன.

நலத்தகு மாத ரடிக்கல முதலாத்
[1] தலைக்கலங் காறுந் தந்தகத் தொடுக்கிச்
சித்திரப் பெரும்பொறி யுய்த்தன ரகற்றி
வத்தவர் கோமான் மனத்தமர் துணைவியொடு
தத்துவச் செவிலியைத் தலைப்பெருங் கோயில்
மொய்த்தழல் புதைப்பினும் புக்கவட் [2] போமினென்
றத்தக வமைத்த யாப்புறு செய்கையொ
டருமணி வரைப்பக மாரழ [3] லுறீஇய
கருமக் கள்வரைக் கலங்கத் தாக்கி
உருமண் ணுவாவு மொருபா லகலப்
பொறிவரித் [4] தவிசிற் பொன்னிறப் பலகை
உறநிறைத் தியற்றி யுருக்கராக் குறீஇய
மாடமும் வாயிலு மோடெரி கவர

(சாங்கியத்தாய் வாசவதத்தையைக்கொண்டு யூகிபாற் செல்லல்)

இளையரு மகளிருங் களைகண் காணார்
வேகுறு துயரமொ டாகுல மெடுப்பத்
தடங்கண் பிறழத் தளர்பூங் கொடியின்
நடுங்கிவெய் துயிர்க்கு நன்னுதற் பணைத்தோட்
டேவியைப் பற்றித் தெரிமூ தாட்டி
யூகி கூறிய வொளிநில மருங்கிற்
பெருங்கல நிதியம் பெய்துவா யமைத்த
அரும்பிலத் தியாத்த வச்ச மாந்தர்
வாயில் பெற்று வழிப்படர்ந் தாங்குப்
போக வமைத்த பொய்ந்நிலச் சுருங்கையுள்
நற்புடை யமைச்சனை நண்ணிய பொழுதிற்
கற்புடை மாதரைக் காதற் செவிலி
அற்புடைப் பொருள்பே ரறிவிற் காட்டி
அஞ்சி லோதி யஞ்சனும் பெருமான்
நெஞ்சுபுரை யமைச்ச னீதியிற் செய்த
வஞ்ச மிதுவென வலிப்பக் கூறி
அருந்திற லமைச்சனொ டொருங்குதலைப் பெய்தபின்
இன்னகை முறுவலொ டெண்ணியது முடிந்ததென்

பி - ம். 1 தலைககலஙகாறுங. 2 போயினென. 3 லுறீஇயக். 4 தவிசின.

றெதிரெழுந்து விரும்பி யூகி யிறைஞ்சி
மதிபுரை முகத்திக்கு மற்றிது கூறும்

(யூகி கூறல்)

இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் ஞாலத்துத்
[1] தன்னி னல்லது தாமீக் [2] கூரிய
மன்னரை வணக்கு [3] மறமாச் சேனன்
காதன் மகளே மாதர் மடவோய்
வத்தவர் பெருமகன் வரைபுரை யகலத்து
வித்தக நறுந்தார் விருப்பொடு பொருந்தி
நுகர்தற் கமைந்த புகர்தீர் பொம்மற்
கோல வனமுலைக் கொடிபுரை மருங்குல்
வால்வளைப் பணைத்தோள் வாசவ தத்தாய்
அருளிக் கேண்மோ வரசியல் வழாஅ
இருளறு செங்கோ லேய [4] ரிறைவன்
சேனை நாப்பணும் பெருமான் செய்த
யானை மாயத் தருந்தளைப் [5] படுதலிற்
கொங்கலர் நறுந்தார்க் கோல மார்பிற்
பிங்கல கடகர் பெற்றியிற் பிழைப்பப்
பாஞ்சால ராயன் பரந்த படையொடு
மாண்கோ சம்பி வௌவியது மறியான்
அருஞ்சுழி நீத்தத் தாழு மொருவன்
பெரும்புணை பெற்ற பெற்றி போல
நிற்பெறு சிறப்பொடு நெடுநகர் புகல
முற்படத் தோன்றிய முகைப்பூண் மார்வன்
தற்படு துயரந் தன்மனத் தணையான்
மட்டுறு கோதாய் மற்றுநின் வனமுலை
விட்டுறை வாற்றா வேட்கையிற் கெழுமிப்
பட்டுறை பிரியாப் படிமையி னவ்வழி
ஒட்டிடை விட்டபி னல்லதை யொழிதல்
வாணுதன் மடவோ யரிதுமற் றதனாற்
சேண்வரு பெருங்குடிச் சிறுசொ னீங்க
ஆர்வ நெஞ்சத் தாவது புகலும்

பி - ம். 1 தன்னின. 2 கூறிய. 3 மறமாசேனன். 4 ரிறைவனைச். 5 படுத்தலிற்.

இன்னுயி ரன்ன வென்னையு நோக்கி
மன்னிய தொல்சீர் மரபிற் றிரியா
நலமிகு பெருமைநின் குலமு நோக்கிப்
பொருந்திய சிறப்பி னரும்பெறற் காதலன்
தலைமையின் வழீஇய நிலைமையு நோக்கி
நிலம்புடை பெயரினும் விசும்புவந் திழியினும்
கலங்காக் கடவுணின் கற்பு நோக்கி
அருளினை யாகி யழியா வமைச்சியல்
பொருளெனக் கருதிப் பூங்குழை மடவோய்
ஒன்று மன்னனை யுதயண குமரன்
இன்று செய்துத னிகன் [1]மேம் படநினைச்
சின்னாள் பிரியச் சிதைவதொன் றில்லை
வலிக்கற் பாலை வயங்கிழை நீயென்
றொலிக்குங் கழற்கால் யூகி [2] யிரப்ப

(வாசவதத்தை தன்னுட் கருதுதல்)

நெறிதா ழோதி நெஞ்சி னகத்தே
பொறிதாழ் மார்பிற் புரவலற் கியைந்த
நூல்வல் லாளர் நால்வ ருள்ளும்
யூகி முடிந்தன னுருமண் ணுவாவொடு
வாய்மொழி வயந்தக னிடபக னென்ற
மூவரு மல்லன் முன்னின் றிரப்போன்
யாவன் கொல்லிவ [3] னென்றவற் கெதிர்மொழி
யாவதுங் கொடாஅ ளறிவிற் சூழ

(சாங்கியத்தாய் கூறல்)

விம்முறு நிலைமை நோக்கித் துன்னிய
உறுதி வேண்டும் யூகி மற்றிவன்
இறுதி செப்பி யிவண்வந் தோனெனத்
தாய்தெரிந் துரைப்பச் சேயிழை தேறி

(வாசவதத்தை செயல்)

உரைத்த கருமத் துறுதி விழுப்பமும்
கருத்துநிறை காணாது கண்புரை தோழன்
வலித்த கருமமும் வத்தவர் பெருமகன்

பி-ம். 1 மெம்படுநினைச், 2 யுரைப்ப, 3 னென்றிவற்.

உதயண குமரன் யூகி யென்பதை
உரையினு முடம்பினும் வேறெனி னல்ல
துயிர்வே றில்லாச் செயிர்தீர் சிறப்பும்
திண்ணிதி னறிந்த செறிவின ளாயினும்
பெண்ணியல் பூர்தரப் பெருங்கண் பில்கிக்
குளிர்முற் றாலி குளிர்புள் ளுறாஅ
தொளிமுத் தாரத் துறைப்பவை யுக்கி
அரிமா னன்ன வஞ்சுவரு துப்பினெம்
பெருமான் பணியன் றாயினுந் தெரிமொழி
நூலொடு பட்ட நுனிப்பியல் வழாமைக்
கால வகையிற் கருமம் பெரிதெனல்
நெறியிற் றிரியா நீர்மையிற் காட்டி
உறுகுறை யண்ண லிவன்வேண் டுறுகுறை
நன்றே யாயினும் தீதே யாயினும்
[1] ஒன்று வலித்த வுறுதி யுடைத்தெனக்
கைவரை நில்லாது கனன்றகத் தெழுதரும்
வெய்துயிர்ப் படக்கிநீ வேண்டியது வேண்டாக்
குறிப்பெமக் குடைமை கூறலு முண்டோ
மறத்தகை மார்வன் மாய யானையிற்
சிறைப்படு பொழுதிற் சென்றவற் பெயர்க்க
மாய விறுதி வல்லே யாகிய
நீதி யாளநீ வேண்டுவ [2] வேண்டென
முகிழ்நகைக் கிளவி முகமன் கூறி
அண்ண லரசற் காகுபொருள் வேண்டும்
ஒண்ணுதன் மாத [3] ரொருப்பா டெய்தி
அரிதின் வந்த பெருவிருந் தாளரைச்
சிறப்புப் பலியறுச் செல்வனிற் பேணும்
பெறற்கரும் பெரும்பண் பெய்திய தெனக்கென
அசதிக் கிளவி நயவர மிழற்றி
நேர்ந்த மாதரை நெடுந்தகைக் குருசில்
பேர்ந்த காலைப் பிழைப்பில ளாகுதல்
அறியு மாத்திர [4] மவ்வழி யமைத்துச்

பி - ம். 1 ஒன்ற. 2 வேண்டுவென. 3 ரொருப்பாட்டெய்தி. 4 மவன்வழி.

செறியச் செய்த செவிலியுந் தானும்
[1] மறுதா வுடைய மாயச் சூழ்ச்சி
உறுதியொ டொளித்தன ருள்ளியது [2] முடித்தென்.

கஎ—தேவியைப் பிரித்தது முற்றிற்று.

கஅ—கோயில் வேவு.

உள்ளியது முடித்த யூகியுஞ் செவிலியும்
ஒள்ளிழை மாதரொ டொளித்த பின்னர்ப்

(உதயணன் மீண்டு வருதல்)

பலாவம லசும்பிற் பயமலைச் சாரல்
உலாவேட் டெழுந்த வுதயண குமரன்
குழையணி காதிற் குளிர்மதி முகத்திக்குத்
தழையுந் தாருங் கண்ணியும் பிணையலும்
விழைபவை பிறவும் வேண்டுவ கொண்டு
கவவிற் கமைந்த காமக் கனலி
அவவுறு நெஞ்சத் தகல்விடத் தழற்றத்
தனிக்கன் றுள்ளிய புனிற்றுப் போல
விரைவிற் செல்லும் விருப்பின னாகிக்

(குதிரை வருணனை)

[3] கலினங் கவவிக் கான்றுநுரை தெவிட்டும்
வலியுடை யுரத்தின் [4] வான்பொற் றுலிப்
படலியம் பழுக்கமொடு [5] பஃறகை வில்லாப்
பருமக் காப்பிற் [6] படுமணைத் தானத்
தருமைக் கருவி யலங்குமயி ரெருத்தின்
வயமாப் பண்ணி வாய்க்கயிறு பிணித்துக்

(குதிரையைப் பாகன் கொடுப்ப உதயணன் அதன்மீதூர்ந்து வருதல்)

குறுக்கை புக்க கொளுவமை கச்சையன்
அறைக்கண் மருங்கி [7] னகத்துளை யின்றிக்
கண்ணள [8] வமைந்து கதிர்த்த றோங்கிற்

பி - ம். 1 மறுதாயுடைய. 2 முடிந்தென். 3 கலிநலங்கலவி. 4 வான்பொற்பஃறுலி. 5 பஃறசையில்லாப். 6 படுமணைத். 7 னகத்துணை. 8 வமைத்துக்.

பண்ணமை காழ்மிசைப் பசும்பொன் வலக்கும்
அடிநிலைச் சாத்தோ டியாப்புப் பிணியுறீஇ
வடியிலைக் கதிர்வாள் வைந்நுனைக் குந்தமொடு
வார்ப்பி னமைத்த யாப்பமை யரும்பொறி
மணிக்கை மத்திகை யணித்தகப் [1] பிணித்துக்
கோற்கமை [2] வுறுநடைக் குதிரைக் கோதிய
நூற்க ணாளரொடு நுணித்துக் கதிவினாய்
வாக்கமை வாளன் கூப்புபு வணங்கிக்
கடுநடைப் புரவி கைம்முதல் கொடுப்ப
அடுதிற லண்ண லணிபெற வேறி
மறுவின் மாணகர் குறுக வருவழி

(தீய நிமித்தம்)

இடுக்கண் டருதற் கேது வாகி
இடக்க ணாடலுந் தொடித்தோ டுளங்கலும்
ஆருயிர்க் கிழத்தி யகன்றன ளிவணிலள்
நீர்மலர்ப் படலை நெடுந்தகை யாள
காணா யாகி யாணா விரக்கமொ
டிழுக்கி னோழொ டியங்குவை யினியென
ஒழுக்கும் புட்குர லுட்படக் கூறிய
நிமித்தமுஞ் சகுனமு நயக்குண மின்மையும்
நினைத்தனன் வருஉ நேரத் தமைத்த

(உதயணன் புகைத்தோற்றத்தைக் காணுதல்)

[3] தண்ணிதிப் பலகைச் சந்தனச் சார்வணைக்
கண்ணுற நினைத்த கைப்புடை யாவணத்
திருமணி யருங்கல மெளிதினிற் றரீஇக்
காலத்தி னடக்குங் கூலக் கொழுங்கடைக்
கடுவுங் [4] கொட்டமுங் காழகிற் குறையும்
அரக்கு மதிங்கு மரும்பெறற் பயினும்
நறையு நானமு நாறிரு வேரியும்
அறைவெள் ளாரமு மன்னவை பிறவும்
அண்ணரும் பேரழ லாக்கிய கமழ்புகை
மாதிரத் தியங்குஞ் சோதிடர் விமானமும்

பி - ம். [1] பிடித்துக். [2] குறுநடைக் [3] தண்ணதிப். [4] கோட்டமுங்.

வாச மூட்டும் வகையிற் றாகி
மஞ்சொடு நிரைஇ வெஞ்சுடர் மழுக்க
இருள்படப் பரந்த மருள்படு பொழுதிற்
கண்டா னாகித் திண்டே ருதயணன்
வண்டார் கோதை வாசவ தத்தை
இருந்த விடமும் பரந்தெரி தோன்றவவட்
கேதுகொ லுற்றதென் றெஞ்சிய நெஞ்சின்
ஊறவ னுண்மை தேறின னாகிச்
செல்லா நின்ற காலை வல்லே

(உதயணனும் வயந்தகனும் நிற்றல்)

மாய மள்ளரை யாயமொ டோட்டி
உருமண் ணுவாவும் வயந்தக குமரனும
பொருமுர ணண்ணல் புகுதரும் வாயிலுட்
பொச்சாப் போம்புதல் புரிந்தனர் நிற்ப

(காஞ்சனமாலையின் கலக்கம்)

எச்சார் மருங்கினு மெரிபுரை தாமரை
கண்ணுற மலர்ந்த தெண்ணீர்ப் பொய்கையுள்
நீப்பருஞ் சேவலை நிலையிற் காணாது
பூக்கண் போழும் புள்ளிற் புலம்பி
எரிதவழ் கோயி லெவ்வழி மருங்கினும்
திரிதர லோவா ளெய்ந்துநிற மழுங்கிக்
கட்டழற் கதிய நெட்டிருங் கூந்தல்
1 புதையெரி பற்றப் புன்சொற் கேட்ட
பெரியோர் போலக் கருகி வாடிய
தகையழி தாமமொடு தாழ்வன பரப்பித்
தோழியைக் காணாள் சூழ்வளிச் சுழற்றியள்
செவ்விய தன்கையி னவ்வயி றதுக்கா
நாவலந் தண்பொழி னண்ணா ரோட்டிய
காவலன் மகளே கணங்குழை மடவோய்
மண்விளக் காகி வரத்தின் வந்தோய்
பெண்விளக் காகிய பெறலரும் பேதாய்
பொன்னே திருவே 2 யன்னே யரிவாய்

பி - ம், 1 புதையெரிப்புற்ற. 2 யன்னாய்,

நங்காய் நல்லாய் கொங்கார் கோதாய்
வீணைக் கிழத்தி வித்தக வுருவி
தேனேர் கிளவி சிறுமுதுக் குறைவி
உதையண குமர னுயிர்த்துணைத் தேவி
புதையழ லகவயிற் புக்கனை யோவெனக்
கானத் தீயிடைக் கணமயில் போலத்
தானத் தீயிடைத் தானுழன் றேங்கிக்
காணல் செல்லாள் காஞ்சனை புலம்பிப்
பூசல் கொண்டு புறங்கடைப் புரளும்

(உதயணன் கண்டு மூர்ச்சித்தல்)

ஆகுலத் திடையே யண்ணலுங் கதுமென
வாயில் புகுந்து வளங்கெழு கோயில்
தீயுண விளியுந் தேமொழிச் செவ்வாய்க்
காஞ்சன மாலை கலக்கமுங் காணாப்
பூங்குழை மாதர் பொச்சாப் புணர்ந்து
கருவி யமைத்த காலியற் செலவிற்
புரவியின் வழுக்கிப் பொறியறு பாவையின்
முடிமிசை யணிந்த முத்தொடு பன்மணி
விடுசுடர் விசும்பின் மீனெனச் சிதறச்
சாந்துபுல ராகத்துத் தேந்தார் திவளப்
புரிமுத் தாரமும் பூணும் புரள
எரிமணிக் கடகமுங் குழையு மிலங்க
வாய்மொழி வழுக்கி வரையின் வீழ்ந்தே
தேமொழிக் கிளவியிற் றிறல்வே றாகி
இருநில மருங்கிற் பெருநலந் தொலையச்
சோரு மன்னனை யார்வத் தோழர்

(தோழர் உபசரித்தலும் அவன் தெளிந்து எழுதலும்)

அடைந்தனர் தழீஇ யவலந் தீர்க்கும்
கடுங்கூட் டமைத்துக் கைவயிற் கொண்ட
போகக் கலவை யாகத் தப்பிச்
சந்தனங் கலந்த வந்த ணறுநீர்த்
தண்டளி சிதறி வண்டின மிரியக்
குளிரிமுதற் [1] கலவையிற் கொடிபெறக் குலாய்

பி - ம். 1 கவ்வையிற்,

.....................யொண்மணித் தட்டப்
பவழப் [1] பிடிகை பக்கங் கோத்த
திகழ்பொன் னலகிற் செஞ்சாந் தாற்றியிற்
பன்முறை வீசத் தொன்முறை வந்த
பிறப்பிடைக் கேண்மைப் [2] பெருமனைக் கிழத்தியை
மறப்படை மன்னன் வாய்சோர்ந் தரற்றாச்
சேற்றெழு தாமரை மலரிற் செங்கண்
எற்றெழுந் தனனா வினியவ ரிடையென்.

கஅ—கோயில் வேவு முற்றிற்று.

ககூ—தேவிக்கு விலாவித்தது.

ஏற்றெழுந் ததன்பி னினியோர் குழீஇ
ஆற்றல் சான்ற நூற்றுறை மருங்கிற்
பழையவும் புதியவு முழைவயிற் பிரியார்
காரண முரைப்பவு மோர்வரை நில்லான்

(உதயணன் தீயில் விழச் செல்லல்)

அந்தீங் கிளவியெ னம்பிணை மூழ்கிய
செந்தீ யானும் புகுவென் சென்றென
முரிந்த கந்தி னெரிந்த வேயுள்
அரிந்த யாப்பிற் சொரிந்த கடுங்காழ்
கரிந்த மாடங் [3] காவலன் குறுக

(தோழர் விலக்கல்)

ஆரளைச் செறிந்த வருஞ்சின நாகத்துப்
பேரழற் காணிய பேதை மாந்தர்
வாயின் மருங்கிற் றீயெரி கொளீஇயது
செயிர்படு பொழுதிற் செம்முக நின்றுதம்
உயிரொழிந் ததுபோ லுறுதி வேண்டார்
அடங்கா ரடக்கிய வண்ணன் மற்றுநின்
கடுஞ்சினம் பேணாக் கன்றிய மன்னர்
[4] கறுவு வாயிற் குறுதி யாக
இகப்ப வெண்ணாத லேதை முடைத்தே

பி - ம், 1 பீடிகைப், 2 பெரும்பணைக், 3 தாமன், 4 கருமவாயிற்.

ஆகிய தறியு மரும்பொருட் சூழ்ச்சி
யூகியி னல்லதை யுதயண குமரன்
[1] உள்ள மிலனென வெள்ளைமை கலந்த
புறத்தோ ருரைக்கும் புன்சொன் மாற்றம்
அகத்தோர்க் கென்று [2] மகஞ்சுட லாணா
தாங்கன மங்கிலை யறிந்துமனங் கவலா
தோங்கிய பெருங்குலந் தாங்குதல் கடனாப்
பூண்டனை யாகுதல் பொருண்மற் றிதுவென
மாண்ட தோழர் மாற்றுவனர் விலக்கக்

(உதயணன் வாசவதத்தையின் உடம்பைக் காணவிரும்பல்)

காலங் கலக்கக் கலக்கமொ டோராஅய்
ஞால முழுது நவைக்குற் றெழினும்
ஊர்திரை யுடைய வொலிகெழு முந்நீர்
ஆழி யிறத்தல் செல்லா தாங்குத்
தோழமை யிகவாத் தொடுகழற் குருசில்
சூழ்வளை முன்கைச் சுடர்க்குழை மாதர்
மழைக்கா லன்ன மணியிருங் கூந்தல்
அழற்புகை சூழ வஞ்சுவன ளடுங்கி
மணிக்கை நெடுவரை மாமலைச் சாரற்
புனத்தீப் புதைப்பப் போக்கிடங் காணா
தளைச்செறி மஞ்ஞைபி னஞ்சுவனள் விம்மி
இன்னுயி ரன்ன வென்வயி [3] னினைஇத்
தன்னுயிர் வைத்த மின்னுறழ் சாயல்
உடப்புச் சட்டக முண்டெனிற் காண்கம்
கடுப்பழ லவித்துக் காட்டுமின் விரைந்தெனக்
கரிப்பிணங் காணார் காவல ரென்னும்
மொழிப்பல காட்டவு மொழியா னழிய

(உருமண்ணுவாவின் செயல்)

முன்னைய ராதலின் முதற்பெருந் தேவி
இன்னுயி ரிகப்ப விடாஅ ரிவரென
மன்ன குமரன் மதித்தன னாயின்
எண்ணிய சூழ்ச்சிக் கிடையூ றுமெனத்

பி - ம். 1 உள்ளமில்லென, 2 மருஞ்சுட. 3 னினைஇத்.

தவலரும் பெரும்பொரு ணிலைமையி னெண்ணி
உலைவில் பெரும்புக ழுருமண் ணுவாவிரைந்
தாய்புக ழண்ணன் மேயது விரும்பி
நீள்புடை யிழிந்துக ஞாயி லொதுங்கிக்
கோயில் வட்டத் தாய்நலங் குயின்ற
பள்ளிப் பேரறை யுள்ளகம் புக்காங்
கழிவுறு சுருங்கை வழிமுதன் மறைஇ
விம்முறு துயரமொடு விளிந்துயிர் வைத்த
[1] கும்மனத் தாளர் குறைப்பிணங் காட்டித்
தாயுந் தையலுந் தீயுண விளிந்தமை
மாய மன்றென மன்னனைத் தேற்றி
மணியு முத்து மணியு மிழந்துதிரந்
தாரக் கம்மஞ் சாரவீற் றிருந்து
கொள்கைக் கட்டழ லுள்ளுற மூட்டி
மாசுவினை கழித்த மாதவர் போலத்
தீயகத் திலங்கித் திறல்விடு கதிரொளி
சேடுறக் கிடந்த செம்பொற் செய்கலம்
பொன்னணி மார்பன் முன்னண விடுதலின்

(உதயணன் வாசவதத்தையின் பொன்னரிமாலை முதலியவற்றை நோக்கிப் புலம்பல்)

(பொன்னரிமாலை)

ஒண்செந் தாமரை யொள்ளித ழன்ன
பண்கெழு விரலிற் பன்முறை தொகுத்து
நான மண்ணி நீனிறங் கொண்டவை
விரித்துந் தொகுத்தும் வகுத்தும் வாரியும்
உளர்ந்து மூறியு மளந்துகூட் டமைத்த
அம்புகை கமழிய வணிமா [2] ராட்டம்
வெம்புகை சூழ்ந்து மேலெரி யூர
விளிந்தது நோக்கி யொழிந்தனை யாதலின்
நன்னுதன் மாதர் பின்னிருங் கூந்தற்
பொன்னரி மாலாய் பொருளிலை யென்றும்

(நெற்றிப்பட்டம்)

கொடியு மலருங் கொழுந்துங் குலாஅய்

பி - ம். 1 கும்மணத்தாளர். 2 ரூட்டம்.

வடிவுபெற வகுத்த மயிர்வினைச் சிப்பத்து
வத்தவ மகடூஉச் சித்திரத் தியற்றிய
பல்வினைப் பரிசரத் தெல்லை யாகி
மதிப்புறங் கவைஇய வானவிற் போல
நுதற்புறங் கவவி மிகச்சுடர்ந் திலங்கும்
சிறப்புடைப் பட்டஞ் சிறியோர் போல
இறப்புக் காலத்துத் துறப்புத்தொழி றுணிந்த
வன்கண் மைபெரி தெனத் தன்கணு நோக்கான்
பட்டப் பேரணி விட்டெறிந் திரங்கியும்

(திலகம்)

பனிநாட் புண்ணியத் தணிபெறு திங்கள்
அந்தியுண் முளைத்த வெண்பிறை போலச்
செந்தீச் சிறுநுதன் மூழ்கத் தீர்ந்து
நிலமிசை மருங்கின் வீழ்ந்தனை யோவெனத்
திலக நோக்கிப் பலபா ராட்டியும்

(காதணி)

வெண்மதிக் கைப்புடை வியாழம் போல
ஒண்மதி திகழ வூச லாடிச்
சீர்கெழு திருமுகத் தோரணி யாகிய
வார்நலக் காதினுள் வனப்புவீற் றிருந்த
நன்பொற் குழைநீ நன்னுதன் மாதரை
அன்பிற் காந்தே யகன்றனை யோவெனப்
போதணி கூந்தற் பொற்பூம் பாவை
காதணி கலத்தொடு கவன்றனன் கலங்கியும்

(கண்கள்)

பொய்கையிற் றீர்ந்து புன்கண் கூர
எவ்வ மாந்த ரெரிவா யுறீஇய
பொருங்கயல் போல வருந்துபு மிளிராக்
களைகண் பெறாஅக் கலக்க நோக்கமொடு
தளையவிழ்ந் தகன்ற தாமரை நெடுங்கண்
அகையற வருளா யாகிக் கலிழ்ந்து
செவ்வழல் புதைத்திடச் சிதைந்தனை யோவென
அவ்விழிக் கிரங்கி வெவ்வழ லுயிர்த்தும்

(நகில்கள்)

'செஞ்சாந்து வரித்த சின்மெல் லாகத்
தஞ்சாய் மருங்குல் வருந்த வடிபரந்து
வீங்குபு செறிந்த வெங்கண் வனமுலை
பூங்கொடிப் பொற்கலம் போழ்ந்துவடுப் பொறிப்ப
மகிழ்ச்சி யெய்தி மனமொன் றாகிய
புணர்ச்சிக் காலத்து மதர்த்துமுகஞ் சிவப்ப
நோய்கூர்ந் தழியு நீயே யளியை
வேக வெவ்வழல் வெம்புகை யணிந்த
பொங்கழற் போர்வை போர்த்ததோ வெனவும்

(பலவகை ஆபரணங்கள்)

இலைப்பெரும் பூணு மிதயவா சனையும்
நலப்பெருங் களிகையு நன்முத் தாரமும்
பன்மணிப் பூணுஞ் சின்மணித் தாலியும்
முத்தணி வடமுஞ் சித்திர வுத்தியும்
நாணுந் தொடரு மேனைய பிறவும்
மெய்பெறப் புனைந்து கைவல் கம்மியச்
செய்கையிற் குயிற்றிய சித்திரங் கொளீஇப்
பூணணி யுள்ளு மாணணி யுடையவை
ஆகக் கேற்ப வணிகம் வாராய்
வேகத் தானை வேந்தன் மகளே
தனித்தா ழியங்கலுந் தாங்கினை யோவெனப்
பனித்தார் மார்பன் பலபா ராட்டியும்

(தோளணிகள்)

ஓங்குவரை மருங்கி ஞெளிபெற நிவந்த
காம்பொசிந் தன்ன கவினை யாகிய
நலங்கிளர் தடந்தோ ணவையறச் சேஎந்
தலங்குமலர்த் தாமரை யகவயி னமர்ந்த
திருமக ளிருக்கை யுருவுபடக் குயிலாக்
காமுறப் புனைந்த தாம முளப்படப்
பொறிவரி யொழுக்கம் போலு மற்றிம்
மறியிலைக் கம்மமொடு மகரங் கவ்விக்
கொடியொடு துளங்கி யடிபெற வகுத்த

* ௱கூ

அருமணிக் கடகமொ டங்குலி யழியச்
செற்றுபு சிறந்த சிறப்புமுள் ளாது
கற்றதெ னமர்ந்த கலப்பின வாகியும்
பற்றுவிட் டகறல் பண்போ வெனவும்

(இடையணி முதலியன)

பவழக் காசொடு பன்மணி விரைஇத்
திகழக் கோத்த செம்பொற் பாண்டில்
கைவினைக் கொளுவிற் செய்துநலங் குயின்ற
எண்ணாற் காழ்நிரை கண்ணுமிழ்ந் திலங்க
உருவக் கோலமொ டுட்குவீற் றிருந்த
அரவுப்பை யன்ன வைதேந் தல்குல்
புகைக்கொடிப் புத்தேள் பொருக்கென வூட்டி
அழற்கொடி யரத்த மறைத்ததோ வெனவும்
மணிக்க ணன்ன மணித்தகு பெடையைப்
பயிலிதழ்ப் பனிநீர்ப் பக்க நீக்கி
வெயில்கெழு வெள்ளிடை விட்டிசி னூங்கு
மணியரிக் கிண்கிணி சிலம்பொடு மிழற்ற
....
நின்னணி காண்கஞ் சிறிது சிறிதுலாஅய்
மராஅந் துணரு மாவின் றழையும்
குராஅம் பாவையுங் கொங்கவிழ் முல்லையும்
பிண்டித் தளிரும் பிறவு மின்னவை
கொண்டியான் வந்தேன் கொள்குவை யாயின்
வண்டிமிர் கோதாய் வாரா யெனவும்

(முன்னிகழ்ச்சிகளை நினைந்துப் புலம்பல்)

அணிவரைச் சார லருவி யாடியும்
பணிமலர் கொய்தும் பாவை புனைந்தும்
திருவிழை மகளிரொ டொருவழி வருவோய்
மருவின் மாதவன் மாசின் மடமகள்
விரிசிகை வேண்ட வேறுபடு வனப்பிற்
றாமந் தொடுத்தியான் கொடுத்தது தவறெனக்
காம வேகங் கடுத்த கலப்பிடை
முகத்தே வந்தோர் முசுக்கலை தோன்ற
அகத்தே நடுங்கி யழற்பட வெய்துயிர்த்

தஞ்சி யடைந்த வஞ்சி றேமொழிப்
பஞ்சி மெல்லடிப் பாவாய் பரந்த
கடுந்தீக் கஞ்சாது காத்தியோ வெனவும்
அங்கண் மாநிலத் தகன்றுயிர் வாழ்வோர்
வன்க ணாள ரென்றுபண் டுரைப்போய்
நின்க ணம்மொழி நிற்ப வென்கட்
புன்க ணோக்காது போதியோ வெனவும்
இளைப்புறு ஞமலி நலத்தகு நாவிற்
செம்மையு மென்மையுஞ் சிறந்துவனப் பெய்தி
[1] அம்மை முன்னு மணிபெறப் பிணங்கி
இலைபடக் குயிற்றிய வெழிலொளிக் கம்மத்துத்
தலைவிரற் சுற்றுந் தாதணி வளையமும்
வட்ட வாழியுங் கட்டுவட விணையும்
மகர வாயொடு நகைபெறப் புனைந்த
விரலணி கவ்வி நிரலொளி யெய்திப்
பூவடர் மிதிப்பினும் புகைந்தழ லுறாஉம்
சேவடிக் கேற்ற செம்பொற் கிண்கிணி
பாடகக் குரலொடு பாடுபிறழ்ந் தரற்றக்
கழனிக் [2] கண்பின் காயெனத் திரண்ட
அழகணி சிறுதுடை யசைய வொதுங்கி
ஆயத் திறுதி யணிநடை மடப்பிடி
கானத் தசைந்து தானத்திற் றளர்ந்தபிற்
கரிப்புற் பதுக்கையுங் கடுநுனைப் பரலும்
எரிப்புள் ளுறீஇ யெஃகி னியலவும்
எற்கா முறலி னேத மஞ்சிக்
கற்கால் பயின்ற காலவீ சில்லதர்
நடுக்க மெய்தி நடப்பது [3] நயந்தோய்
இடுக்கண் யான்பட வென்னையு நினையாது
கடுப்பழ லகவயிற் காத்தியோ வெனவும்
படிகடந் தடர்ந்த பல்களிற் றியானை
இடிபுறழ் முரசி னிறைமகன் பணிப்ப
நூலமை வீணைக் கோலமை கொளீஇக்
காரணம் [4] பயிற்றினுங் காந்தண் முகிழ்விரல்

பி - ம். 1 மம்மை. 2 காண்பின். 3 வீயநதோய. 4 பற்றினுங்.

அரணங் காணு வஞ்சின போலப்
பயத்தி னீங்காச் சிவப்புள் ளூறுவின
அடைதற் காகா வாரழற் செங்கொடி
தொடுதற் [1] காற்றத் துணிந்தவோ வெனவும்
வடிக்கண் மாதர் முடிக்கல முதலா
அடிக்கலந் தழீஇ முடித்தார் மார்பன்
அரற்றியு மயர்ந்து முரற்றியு முயிர்த்தும்
வீழ்ந்து மெழுந்துந் தாழ்ந்துந் தளர்ந்தும்
செருவடு செங்கண் டெண்பனி சிதறி
உருவுடை யகலத் தூழூ ழுறைத்தரக்
கோல விரும்பிடி குழிப்பட் டாழ
நீல வேழ [2] நினைந்துழன் றாங்கு
மாலை மார்பன் மாதரைக் காணு
தின்னவை பிறவும் பன்முறை யரற்றச்

(தோழர் செயல்)

செறுநர் முன்னர்ச் சீர்மை யன்றென
உறுநர் சூழ்ந்த வொருபா லொடுங்கித்
தேரும் புரவியும் வார்கவுள் யானையும்
மறப்படை யிளையரொடு திறப்பட வகுத்துப்
போரணி கலமும் பொருளு நல்கி
ஆருணி யரச னடுதிற லாண்டகை
அற்ற மறியாச் செற்றச் செய்கையொ டு
மேல்வர வுண்டெனின் மீளி வாட்டிச்
சென்று நெருங்காது பின்றியும் விடாது
குன்றக மடுத்துக் கூழவ ணொடுக்கி
யாப்புற நிற்கெனக் காப்புறு பெரும்படை
திசைசெலப் போக்கி யசைவி லாண்மை
மன்பெருங் குமரனை மரபுளிக் காட்டித்
துன்பந் தீரிய தொடங்கினர் துணிந்தென்.

கக—தேவிக்கு விலாவித்தது முற்றிற்று.

பி - ம். 1 காற்றல், 2 நினைந்துடன்றுங்கு.

௨௰—சண்பையுள் ஒடுங்கியது.

(காதலின் துற்றத்தை உதயணனுக்குத் துணிவுடையோர் உணர்த்தி விலக்கல்)

துணிவுடை யாளர் துன்னினர் குழீஇ
அணியுடை யண்ணற் கமைந்தமை காட்டிப்
படுதிரைப் பௌவத்துக் கடுவளி கலக்கப்
பொறியவிழ்ந்து கவிழ்ந்த பொருகலத் துய்ந்தோர்
நெறிதிரிந் தொரீஇ நீந்துயிர் வழங்காத்
தீவகம் [1] புக்குத் தாவகங் கடுப்பப்
பெருந்துய ருழக்கு மருந்துபசி [2] மூளத்
திண்ணிலை வரைப்பிற் சினைதொறுஞ் செறிந்து
கண்ணவை யுறாஉங் கனிபல கண்டவை
நயவரு நஞ்செனப் பெயர்தெரி வின்மையின்
ஊழுறுத் தக்கனி தாழ்விலர் வாங்கித்
துன்ப நீக்குந் தோற்றமு மன்றி
இன்ப நாற்றமு மியைந்தன விவையென
[3] நச்சுபு தெரிந்த நாற்றமுஞ் சுவையும்
ஒப்புமை யின்மையி னுயிர்முதற் றுங்க
அமரர் காட்டிய வமுதுநமக் கிவையெனப்
பசிநோய் தீர வயிறலிற் கதுமெனத்
தசைபொழ்ந்து கழற்றித் தபுத்திசி னாங்குத்
தாமரைச் செங்கட் டகைமலி மார்ப
காமத் தியற்கையுங் காணுங் காலை
இறுதியி லின்பமொ டினியது போல
உறுபய னீனு வுடம்புமுதற் புகுத்தலிற்
பெறுபய மிதுவெனப் பேணார் பெரியோர்
வெற்றித் தானையொடு விசயம் பெருக்கிக்
கொற்றம் வேண்டாய் பற்றொடு பழகிய
ஆர்வப் புனலகத் தழுந்துவை யாயின்
ஊர்கடல் வரைப்பி னாருயிர் நடுக்குறீஇப்
பெரும்பே துற்று விளியுமற் றதனாற்
கரும்பேர் கிளவிக் கனங்குழை திறவயிற்

பி - ம். 1 புக்குக் காய்வகங். 2 யாளர். 3 நக்குபு.

கழுமிய காதல் கைவிடல் பொருளெனக்
காமத்துக் கடையுங் காதற் குற்றமும்
ஏமாப் பிலவென வெடுத்துரை நாட்டி
அமைச்சத் [1] தொழிலர் விலக்குபு காட்ட

(யூகி முதலியோர் ஒரு மலைச்சாரலுக்குச் செல்லுதல்)

இருப்ப மொடுங்கிய வியல்பின னாகிய
அண்ண னிலைமை திண்ணிதி னறிந்து
வண்ணக் கோதை வாசவ தத்தைக்குக்
காதற் கணவ னேத மின்மை
அறியக் கூறி யகல்வது பொருளெனப்
பொறியமைத் தியற்றிய பொய்ந்நிலம் போகி
வேண்டிய வளவிற் காண்டகக் கூட்டிக்
கரந்துநிற மெய்த்து மரும்பெறல் யோகம்
யாவரு மறியாத் தன்மைத் தாக
மூவரு முண்டு வேறுநிற மெய்தி
அந்தண வுருவொடு சந்தனச் சாரற்
பெருவரை யடுக்கத் தருமைத் தாகிய
கல்சூழ் புல்லதர் மெல்லடி யொதுங்கிப்
பிரிவுதலைக் கொண்ட வெரிபுரை வெந்நோய்
தலைமை நீரிற் றண்ணெனத் தெளித்து
முலைமுதற் கொழுந னிலைபெற வேண்டும்
உள்ள வூர்தி யூக்கம் பூட்டக்
கள்ளக் காத றுங்கின ளாகி
இமிழ்வினை விச்சையி னிடுக்கட் பட்ட
மகிழ்மணி நாகர் மடமகள் போல
யூகி நீதியிற் பேதைபிணிப் புண்டு
வேண்டுவயிற் சென்ற காலை யாண்டே

(ஓர் ஆச்சிரமத்தின் வருணனை)

தண்கோ லல்லது வெங்கோல் புகாஅச்
செங்கோ லாளன் சேதியம் பெருமலைத்
தாண்முதற் றழீஇ நாண்மதுக் கமழும்
கற்சுனை நீலமுங் கணிவாய் வேங்கையும்

பி - ம். 1 தோழர்.

நற்சினை நறவமு நாகமு நந்தியும்
பருவ மன்றியும் பயங்கொடுப் பறாஅப்
பலவு மாவுங் குலைவளர் வாழையும்
இருங்கனி நாவலு மிளமா துளமும்
ஒருங்குடன் கஞலி யுள்ளம் புகற்றும்
மாசின் முனிவரொடு மகளிர் குழீஇயதோர்
ஆசில் பள்ளி யறிந்துமுன் னடி

(யூகி முதலிய மூவரும் முனிவனாச்சிரமத்தில் இருத்தல்)

மற்றத னகவயிற் றெற்றெனத் தெரியும்
உருமண் ணுவாவின் பெருமுது குரவன்
அவமில் சூழ்ச்சித் தவமுது மகனொடு
கருமங் கூறிக் கண்ணுற்றுப் பிரியார்
அணித்துஞ் சேய்த்து மன்றி யமைவுற
மணிப்பூண் மாதரு மனம்புரி தோழனும்
காதற் செவிலியுங் காந்தவ னொடுங்கி
மாதவர்த் தெரீஇ மரீஇ யொழுகப்

(சாங்கியத்தாயின் செயல்)

பள்ளியும் பதியு மலையுஞ் சேணிடத்
துள்ளவை யுரைத்துத் தள்ளாத் தவநெறி
அற்றந் தீர வுற்றுப்பிரிந் தொழுகிய
உருவுடை முதுமக ளொருவயிற் றியன்றவை
நீப்பிடந் தோறும் யாப்புற வறிவுறீஇ
நாட்ட வொழுக்கொடு நன்னுத லிவளை
வேட்டோன் விட்டுக் காட்டக நீந்திக்
குண்டுநீர்க் குமரித் தெண்டிரை யாடிய
போயின னென்னும் பொய்ம்மொழி பொத்தித்
தீவினை யாளரைத் தெளியக் கூறி
வாய்மொழி யாக வலித்தனள் வழங்கி
மறுவின் மன்னற் குறுதி வேண்டித்
தண்டமை மகளிரொடு தலைநின் றொழுகக்

(காஞ்சனமாலையின் வரவு)

கண்டனி ருளிரோ காவலன் மகளையென்
றெண்டொடிக் காஞ்சனை யுயிர்நனி நில்லாச்

செல்ல னோக்கிச் செயற்பாற் றிதுவென
ஒல்லு நண்பி னுருமண் ணுவாவவட்
கொண்டனன் வந்து கோமகட் காட்டிக்
கருமக் காரண மவள்வயிற் பேசி
விண்டலர் கழுநீர் வென்ற கண்ணியொடு
தலைப்படுத் தனனுத் தானவட் போகி
வண்டுள ரைம்பால் வயங்கிழை மாதரை
ஆற்றுவித் தோம்பிப் போற்றுபு தழீஇ
நீங்கல் செல்லா நெறிமையி னோங்கி

(யூகி முதலிய நால்வரும் சண்பை நகருக்குச் செல்லுதல்)

யாங்கினி திருத்துமென் றறிவினிற் சூழ்ந்து
பற்றா ராயினு முற்றா ராயினும்
ஒற்றுவ ருளரெனி னற்றந் தருமென
மற்றவ னொடுங்கார் மறைந்தனர் போகி

(சண்பை நகரின் சிறப்பு)

உருமண் ணுவாவின் பெருமுது குரவன்
அவமில் சூழ்ச்சித் தவறி றோழன்
பெரும்புனற் கங்கை பெருவளங் கொடுக்கும்
அங்க நன்னாட் [1] டணிபெற விருந்த
தெங்குநிக ரில்ல தெழிற்கிடங் கணிந்தது
பொங்குமலர் நறுந்தார்ப் புனைமுடிப் பொற்கழல்
விச்சா தரருந் தேவ குமரரும்
அச்சங் கொள்ள வாடுகொடி நுடங்கிச்
சத்திக் குடத்தொடு தத்துற லோம்பி
விளங்குபு துளங்கும் வென்றித் தாகி
அளந்துவரம் பறியா வரும்படை யடங்கும்
வாயிலும் வனப்பு மேவிவீற் றிருந்து
மதிலணி தெருவிற் றாகி மற்றோர்க்
கெதிரில் போக மியல்பமை மரபொடு
குதிரையுங் களிறுங் கொடிஞ்சித் தேரும்
அடுதிறன் மள்ளரும் வடுவின்று காப்ப
நெடுமுடி மன்னருண் மன்ன னேரார்

பி - ம். 1 டனிபெற.

கடுமுர ணழித்த காய்சின நெடுவேற்
படுமணி யானைப் பைந்தார் வெண்குடை
உக்கிர குலத்து ளரசரு ளரசன்
விற்றிறற் றானை விசயவர னென்னும்
நற்றிறன் மன்ன னாளுங் காக்கும்
சண்பைப் பெருநகர்ச் சால்பொடும் விளங்கிய

(யூகி முதலியோர் மித்திரகாமன் வீட்டில் மறைந்திருத்தல்)

முட்டில் வாழ்க்கைச் செட்டியர் பெருமகன்
மித்திர காமன் மிக்குயர் பெருமனை
வத்தவன் காதலி வாசவ தத்தையென்
றத்தக வறிந்தோ ரவ்விடத் தின்மையின்
ஆப்புடை நண்பி னந்த ணாட்டியும்
நீப்பருங் காத லிலைமைத் தோழியும்
ஓங்கிய பெரும்புகழ் யூகியு முகவாக்
காப்பொடு புறநகர் மேற்படி பிழையாப்
பூங்குழன் மாதரொடு புகுந்தன ராகி
ஆங்கினி திருந்தன ரவ்வழி மறைந்தென்.

உ०—சண்பையுள் ஒடுங்கியது முற்றிற்று.

இரண்டாவது
இலாவாண காண்டம் முற்றுப்பெற்றது

ஆகூ காண்டம் இரண்டிற்குக் கூடிய காதை, எஅ.

மூன்றாவது

மகத காண்டம்.

க—யாத்திரை போகியது.

ஆங்கினி திருந்த காலை யீங்கினி
வேந்துபடக் கடந்த வேந்துசுடர் நெடுவேல்
உதயண னிலைமை யிதுவென வுரைப்பேன்

(உதயணன் உட்கோள்)

பழனப் படப்பைப் பாஞ்சால ராசன்
அழன்மிகு சீற்றத் தாருணி யரசன்
திரியு நெய்யு மொருவயிற் செல்லிய
எரிவிளக் கற்ற மிருள்பரந் தாங்குப்
பாய தொல்சீர்ப் பகையடு தானை
ஏய ரற்றத் திடுக்கட் காலை
அன்றவ ணறிந்தே தொன்றுவழி வந்த
குலப்பகை யாகிய வலிந்துமேல் வந்து
நன்னகர் வெளவு மின்னாச் சூழ்ச்சியன்
என்வகை யறிந்த நன்பொரு ளாளன்
பெரும்படைத் தானைப் பிரச்சோ தனன்றன்
அரும்படை யழியா வாற்றலிற் போந்தவன்
மடமகட் கொண்ட விடனறி சூழ்ச்சி
யூகி யுளனெனி னிகழா [1] னிவனெனச்
சாவுமுந் துறுத்த வலிப்பின னாகித்
தீயகங் கழுமிய கோயில் வேவினுள்
தேவியை யிழந்து பூவிதழ்ச் சோலைப்
புல்லென் யாக்கையொடு போயின னுதயணன்

(பாஞ்சாலராசன் உட்கோள்)

இல்லெனக் கெழுபகை யிம்மையி னினியென

பி - ம். 1 னிவணெனச்.

மாற்று வேந்தன் மதில்காப் பிகந்துதன்
ஆற்றன் மகிழ்ந்த வந்நிலை யொற்றி

(அமைச்சர் உதயணனுக்குக் கூறல்)

[1] மகத மன்னனொடு மகட்கிளை யாகித்
தொகைகொண் டீண்டியவன் றொல்படை தழீஇ
ஆதித் துணிவுடை நீதியிற் கரந்த
தம்பியர் கூட வெம்பிய வெகுட்சியின்
ஒடுங்கா மாந்த ருள்ள மஞ்சப்
பாடுபெயர்ந் திடிக்கு [2] மேடகம் போல
அகன்றுபெயர்ந் தழிக்கு மரும்பெறற் சூழ்ச்சி
நவின்ற தோழரொடு பயம்பட வலித்து
மதியுடை யமைச்சர் மனந்தெளி வுறீஇப்
புதிதிற் கொண்ட பூக்கவின் வேழம்
பணிசெயப் பிணிக்கும் பாகர் போல
நீதி யாள ராதி யாகிய
திறத்திற் காட்டவு மறத்தகை யழுங்கி

(உதயணன் இரங்கல்)

முன்னுப காரத்து நன்னயம் பேணித்
தன்னுயிர் கொடுக்குந் தவமுது தாயும்
[3] விறப்பினிற் பெருகியும் [4] வறப்பினிற் சுருங்கியும்
உறுதி நோக்கி யுயிர்புரை காதலோ
டாழ்விடத் துதவு மரும்புணை போலத்
தாழ்விடைத் தாங்கிச் சூழ்விடைத் துளங்கா
உள்ள வாற்ற லுறுபுகழ் யூகியும்
அள்ளற் றாமரை யகவித ழன்ன
அரிபரந் தகன்ற வம்மலர் நெடுங்கட்
டெரிமலர்க் கோதைத் தேவியு மின்றித்
தருமமு மருத்தமுங் காமமு மிழந்தே
இருநில மருங்கி னிறைமை தாங்கி
வாழ்தலி னினிதே யாழ்தலென் றழிந்தே
உரக்கவின் றேய விரக்கமொ டாற்றவும்

(தோழர் தேற்றல்)

கைவரை நில்லாக் கையறு கவற்சிகண்

பி-ம். 1 மத்த. 2 மோதம். 3 பிறப்பினிற். 4 மறப்பினிற்.

டின்மொழி விச்சை யிலாமய னென்னும்
ஆளவி நெஞ்சத் தந்தண னிருந்த
காள வனமும் வெந்தீப் புக்கெனக்
காதலன் றன்னையுஞ் சாவற வுறீஇ
மயக்க நெஞ்சமொடு மனம்வலித் திருந்துழி

(இசைச்சன் கூற்று)

இசைச்சன் கூறுவ னீங்கிது கேட்கென
விச்சையின் முடியா விழுவினை யில்லெனல்
பொய்ச்சொ லென்பர் புன்மை யோரே
அற்ற தாத விற்றுங் கூறுவென்
கற்றதுங் கேட்டதுங் கண்ணு மாந்தர்க்
கொற்கிடத் துதவு முறுவலி யாவது
பொய்ப்பது போலு நம்முதற் றுகப்
பற்றொடு பழுகி யற்பழ லழுந்தி
முடிவது நம்மைக் கடிவோ ரில்லை
இல்லை [1] யாதலிற் சொல்லுவ லின்னும்
முடியாக் கரும மாயினு முடியும்
வாயின் முற்றித்து வயங்கா தாயினும்
சாவினும் பழியார் சால்புடை யோரென
மல்லற் றானை மறங்கெழு மன்னவன்
செல்வப் பாவை சென்றினிது பிறந்துழி
இம்மை யாக்கையி னியல்பின ளாகத்
தன்மையிற் றரூஉந் தாழாப் பெருவினை
உட்குடை விச்சை யொன்றுண் டதனைக்
கற்றுநனி நவின்ற கடனறி யந்தணன்
இருந்தினி துறையு மிராசகிரியெனும்
[2] பொருந்தரு வியனகர்ப் புக்கவற் குறுகி
ஆற்றுளி வழிபா டாற்றி யமைச்சனொடு
பூக்குழை மாதரை மீட்டனங் கொண்டு
பெறற்கரு விச்சையுங் கற்று நாமெனத்
திறற்படு கிளவி தெரிந்தவ னுரைப்ப

(உதயணன் கூற்றும் தோழர்செயலும்)

விறற்போ ருதயணன் விரும்புபு விதும்பி

பி - ம். 1 யாயினுஞ். 2 பெருந்தகு.

என்னே யன்னவு முளவோ வென்றலின்
வேட்டதன் வழியே பாற்பட நாடி
ஆதி வேதத் தகவயிற் பெரியோர்
ஓதிய வுண்டென வுணரக் கூற
இன்னே போது மேகுமின் விரைந்தெனப்
பள்ளம் படரும் பன்னீர் போலவன்
உள்ளம் படர்வழி யுவப்பக் காட்டிக்
கணம்புரி பெரும்படைக் காவ னீக்கிக்
குணம்புரி தோழர் கொண்டனர் போதர
ஆற்றலும் விச்சையு மறிவு மமைந்தோர்
நூற்றுவர் முற்றி [1] வேற்றுந ராகென

(வேற்று வேடவகை)

வெண்ணூற் பூந்துகில் வண்ணங் கொளீஇ
நீலக் கட்டியு மரகதத் தகவையும்
பாசிலைக் கட்டியும் பீதகப் பிண்டமும்
கோல மாகக் கொண்டுகூட் டமைத்துப்
பிடித்துருக் கொளீஇக் கொடித்திரி யோட்டிக்
கையமைத் தியற்றிய கலிங்கத் துணியினர்
கொய்யுளைப் புரவி மேற்கொண் டவரிற்
கைவினைக் கம்மங் காண்பினி தாக
வாரமைத் தியற்றிய காலமை செருப்பினர்
செம்பொற் கொட்டைப் பந்தர்க் கொளுவினர்
மாத்திரை [2] நுண்கயிற் றுத்திரை யாப்பினர்
உள்கூட் டமைந்த சில்கூட் டல்குலர்
இரும்பனை யிளமடல் விரிந்துளர் வெண்டோட்
டூர்க்கிடை யாத்த [3] நூற்புரிப் பந்தச்
செந்தோட் டணிமலர் சேர்ந்த வுச்சி
அந்தோட் டம்பணை யரக்குவினை யுறீஇய
சித்திரத் திண்கால் வித்தகக் குடையினர்
மரகத மணிக்கை மாசில் பொற்றொடி
உருவுபடச் செறிந்த வுரோமக் கொட்டையிற்
செந்தளிர் மராஅத்துப் பைங்காய் பழித்த
செண்ணூர் வடிவிற் கண்ணூர் கத்தியர்

பி - ம். 1 வேற்றுநாடாகென. 2 நுணங்கெயிற். 3 நூற்பிரிப்பாதிச்.

ஏரில வங்கந் தீம்பூ வேலம்
கப்புரப் பளிதமொ டொப்படுத் தியற்றிய
வாசத் திரையொடு பாகுநிறைத் தடக்கிய
மாசி லருமணி மடைத்த வாடையர்
பட்டுச் சுவேகமொடு பாட்டுப்புற மெழுதிய
கட்டமை சுவடி பற்றிய கையினர்
புரிநூ லணிந்த பொன்வரை மார்பினர்
விரிநூற் கிரந்தம் விளம்பிய நாவினர்
வாச வெள்ளை [1] வரைந்த கழுத்தினர்
தேசந் திரிதற் காகிய வணியொடு
வளங்கெழு மாமலை வன்புன் றூளக
நலங்கெழு சிறப்பி னாட்டக நீந்திப்
பைந்தொடி யரிவைக்குப் படுகடங் கழீஇய
கண்புரை யந்தணன் காள வனத்தினின்
றுதய ஞாயிற்றுத் திசைமுக நோக்கித்
திருமகட் டேரு மொருமையிற் போந்து
கருப்பாச மென்னுங் கானக் கான்யாற்றுப்
பொரும்புன னீத்தம் புணையிற் போகிச்
சேணிடைப் போகிய பின்றை யப்பால்
நீணிலைப் படுவிற் பேர்புணை நீந்தி
நொந்துநொந் தழியு நோன்புபுரி யாக்கையர்
அருஞ்சுரக் கவலையு மடவியும் யாறும்
பெருஞ்சின வீர ரொருங்குடன் போர்வுழி

(உதயணன் மான் முதலியவற்றை நோக்கிப் புலம்பல்)

வென்றடு சிறப்பின் வீணை வித்தகன்
ஒன்றிய தேவியை யுள்குவன னாகிச்
செறிந்த மருங்கிற் றிரிமருப் பிரலை
புறந்தற் காப்பப் புணர்மறி தழீஇய

(மான் பிணை)

மடமா னம்பிணை கண்டு மாதர்
கடைபோழ் நெடுங்கட் காம நோக்கம்
உள்ளத் தீர வொள்ளழ லுயிரா

பி - ம். 1 வரைத்த.

இனத்திற் கெழீஇ யின்ப மகிழ்ச்சியொடு
'புனத்திற் போகாது புகன்றுவிளை யாடும்
மான்மடப் பிணையே வயங்கழற் பட்ட
தேனேர் கிளவி சென்ற வுலகம்
அறிதி யாயின் யாமு மங்கே
குறுகச் செல்கங் கூறு யெனவும்

(மயிற்பெடை)

பணிவரை மருங்கிற் பாறை தோறும்
மணியிரும் பீலி மல்க வுளரி
அரும்பெற லிரும்போத் தச்சங் காப்ப
மதநடை கற்கு மாமயிற் பேடாய்
சிதர்மலர்க் கூந்தற் செந்தீக் கவர
மயர்வனள் விளிந்தவென் வஞ்சி மருங்குல்
மாறிப் பிறந்துழி மதியி னுடைக்
கூறிற் குற்ற முண்டோ வெனவும்

(ஆண்புறு)

வெஞ்சுரஞ் செல்வோர் வினைவழி யஞ்சப்
பஞ்சுர வோசையிற் பையெனப் பயிரும்
வெண்சிறைச் செங்கா னுண்பொறிப் புறவே
நுண்சிறு மருங்கு னுகர்வின் சாயற்
பாசப் பாண்டிற் [1] பல்கா ழல்குலென்
வாசவ தத்தை யுள்வழி யறியின்
ஆசை தீர வவ்வழி யடைகேன்
உணரக் கூறு யாயிற் பெடையொடு
புணர்வு விரும்பல் பெறல்லா தெனவும்

(வண்டு)

பசைந்துழிப் பழகல் செல்லாது பற்றுவிட்
டுவந்துழித் தவிரா தோடுதல் காமுறும்
இளையோ ருள்ளம் போலத் தளையவிழ்ந்
தூதுமல ரொழியத் தாதுபெற நயந்து
கார்ப்புன மருங்கி னூர்த்தணை திரிதரும்
அஞ்சிறை யறுகாற் செம்பொறி வண்டே

பி - ம். 1 பல்கால், பல்காசு.

2/006

எரியுள் விளிந்தவென் வரிவளைப் பணைத்தோள்
வள்ளிதழ்க் கோதை யுள்ளுழி யுணரிற்
கவற்சி வகையிற் பெயர்த்தனை களைஇயர்
அரும்பூங் கோதைப் பூந்தா துண்டவள்
அவிழ்பூங் கூந்தலுண் மகிழ்துயில் வெய்தி
நீயு மெவ்வந் தீர யானும்
நல்லிள வனமுலை புல்லுபு பொருந்த
உய்த்தனை காட்டுதி யாயிற் கைம்மா
றித்துணை யென்பதொன் றில்லென விரங்கியும்

(தென்றல்)

பொங்குமழை தவழும் பொதியின் மீமிசைச்
சந்தனச் சோலைதொறுந் தலைச்சென் றாடி
அசும்பிவ ரடைகரைப் பசுந்தோ டுளரிச்
சுள்ளிவெண் போது சுரும்புண விரித்து
மணிவாய் நீலத் தணிமுகை யலர்த்தி
ஒண்பூங் காந்த ளூழ்க்கிச் சந்தனத்
தந்த ணறுமல ரவிழ மலர்த்தி
நறுங்கூ தாளத்து நாண்மல ரளைஇக்
குறுந்தாட் குரவின் குவிமுகை தொலைச்சி
முல்லைப் போதி னுள்ளமிழ் துணாஅப்
பல்பிட வத்துப் பணிமலர் 1 மறுகிப்
பொற்றார்க் கொன்றை நற்றாது நயந்து
2 சாத்துவினைக் கம்மியன் கூட்டுவினை யமைத்துப்
பல்லுறுப் படக்கிய பையகங் கமழ
எல்லுறு மாலை யிமயத் துயர்வரை
அல்குதற் கெழுந்த வந்தண் டென்றல்
செவ்வழித் தீந்தொடை சிதைந்தன கிளவியென்
எல்வளைத் தோளியை யெவ்வழி யானும்
நாடிச் சென்றவள் சேடிள வனமுலைக்
குழங்கற் சாந்திடைக் குளித்துவிளை யாடியென்
அழுங்க னெஞ்சத் தயாஅநோய் தீர
மயர்வெனை 3 மாற்றுதி யாயி னின்மாட்
4 டியர்வுள வியற்கை யொழியுமோ வெனவும்

பி - ம். 1 மருகிப். 2 சாந்துவினைக். 3 யாட்டுதி. 4 டியர்புனத் தியற்கை, டியர்புன.

இன்னவை பிறவு மன்னவை கண்டோர்
அவல நெஞ்சமொ டறிவுபிறி தாகத்
தவலருந் தேவியைத் தானினைந் தாற்று
திறுதி யெண்ணி யிகவா மன்னனை

(உதயணன் முதலியோர்
மகதநாட்டின் எல்லையை அடைதல்)

உறுதி மொழியி னுணர்த்துவன ராகிப்
பல்வகைத் தோழர் படிவ வேடமொடு
செல்வ மகதத் தெல்லை யெய்தி
ஒருவழிப் பழகல் செல்லா துருவுகரந்து
பெருவழி முன்னினர் பெருந்தகைக் கொண்டென்.

க—யாத்திரை போகியது முற்றிற்று.

உ—மகதநாடு புக்கது.

(தோழர்செயல்)

பெருவழி முன்னிப் பெருந்தகை வேந்தனை
உருமண் ணுவாவும் வயந்தக குமரனும்
அருமறை நாவி னந்த ணாளன்
மயக்கமில் கேள்வி யிசைச்சனு மென்றிக்
கடனறி தோழர் காவல் போற்றி
மடநடை மாதர் மாறிப் பிறந்துழி
மீட்கும் வேட்கையொடு சேட்புலம் போகி
விரிகதிர்த் திங்கள் வெண்குடை யாக
ஒருவயிற் கவித்த வுற்ற வேந்தற்
கருமை யமைச்சர் பெருமலை யேறிக்
கொண்டியாந் தருதுங் கண்டனை தெளிகென
நண்புணத் தெளித்த நாடகம் போலப்
படைச்சொற் பாசத் தொடக்குள் ளுறீஇக்
கலாவேற் குருசிலை விலாவணை யோம்பி

(எருமையின் செயல்)

[1] வயல்கொள் வினைஞர் கம்பலை வெரீஇக்

பி - ம். 1 வலைகொள் விலைஞர்.

* நு-அ

கயமூழ் கெருமை கழைவளர் கரும்பின்
விண்ட விளமடன் முருக்கித் தண்டாது
தோகைச் செந்நெல் சவட்டிப் பாசிலை
ஒண்கேழ்த் தாமரை யுழக்கி வண்டுகள்
ஆம்ப லகலிலை முருக்கிக் கூம்பற்
குவளைப் பன்மலர் குழைத்துத் தவளைத்
தண்டுறை கலங்கப் போகி வண்டினம்
பாட லோவாப் பழனப் படப்பைக்
கூடுகுலைக் கமுகின் கொழுநிழ லசைந்து
மன்றயற் பரக்கு மருதந் தழீஇக்

(அருவி)

குன்றயற் பரந்த குளிர்கொ ளருவி
மறுவின் மானவர் மலிந்த மூதூர்
வெறிது சேறல் விழுப்ப மன்றெனக்
கான வாழைத் தேனூறு கனியும்
அள்ளிலைப் பலவின் முள்ளுடை யமிர்தமும்
திரடாண், மாஅத்துத் தேம்படு கனியும்
வரைதாழ் தேனொடு காஅய்விரை சூழ்ந்து
மணியு முத்து மணிபெற வரன்றிப்
பணிவில் பாக்கம் பயங்கொண்டு கவரா
நிறைந்துவந் திழிதரு நீங்காச் செல்வமொடு

(மகதநாட்டின் சிறப்பு)

சிறந்த சீர்த்திக் குறிஞ்சி கோலிக்
கல்லென் சும்மையொடு கார்தலை மணந்த
முல்லை முதுதிணைச் செல்வ மெய்திப்
பாலையு நெய்தலும் வேலி யாகக்
கோல மெய்திக் குறையா வுணவொடு
துறக்கம் புரியுந் தொல்லையி னியன்றது
பிறப்பற முயலும் பெரியோர் பிறந்தது
சிறப்பிடை யறாத தேசிக முடையது
மறப்பெருந் தகையது மாற்றோ ரில்லது
விறற்புக ழுடையது வீரிய மமைந்த
துலகிற் கெல்லாந் திலகம் போல்வ

தலகை வேந்த னாணை கேட்ப
தரம்பு மல்லலுங் கரம்பு மில்லது
செல்வப் பெருங்குடி சிறந்தணி பெற்றது
நல்குர வாளரை நாடினு மில்லது
நன்பெரும் புலவர் பண்புளி பன்னிய
புகழ்ச்சி முற்று மகிழ்ச்சியின் மலிந்த
தின்னவை பிறவு மெண்ணுவரம் பிகந்த
மன்பெருஞ் சிறப்பின் மகதநன் னாடு
சென்றுசார்ந் தனராற் செம்மலோ டொருங்கென்.

உ—மகதநாடு புக்கது முற்றிற்று.

௩—இராசகிரியம் புக்கது.

மன்பெருஞ் சிறப்பின் மகதநன் னாடு
சென்று சார்ந்தபின் வென்றியிற் பெருகி

(ஊர்களின் சிறப்பு)

யாறுங் குளனும் வாய்மணந் தோடித்
தண்டலை தோறுந் தலைபரந் தூட்டி
வண்டிமிர் பொய்கையும் வாவியுங் கயமும்
கேணியுங் கிணறு நீணிலைப் படுவும்
நறுமலர் கஞலி யுறநிமிர்ந் தொழுகிச்
சாலி கவினிய கோலச் செறுவிற்
செல்வங் கொடுத்து நல்குத லறாஅ
இன்பங் கெழீஇய மன்பெருஞ் சிறப்பிற்
பல்குடித் தொல்லூர் புல்லுபு சூழ

(இராசகிரியத்தின் சிறப்பு)

உயர்மிசை யுலகி னுருகெழு பன்மீன்
அகவயிற் பொலிந்துத னலங்குகதிர் பரப்பி
நிலப்புடை நிவத்தரு நிறைமதி போலக்
காட்சி யியைந்த மாட்சித் தாகிச்

(மதில்)

சித்திரக் கைவினை செறிந்த கோலத்துப்

[1] பத்திரப் பாம்புரி [2] யத்தகக் கலாஅய்
[3] முற்பட வளைஇய பொற்படைப் படுகாற்
கண்டவர் நடுக்குங் குண்டகழ்ப் பைந்துகில்
தண்டாச் செல்வமொடு தனக்கணி யாக
உடுத்துவீற் றிருந்த வடுத்தீ ரல்குல்
மாற்றோர் நுகரப் படாஅ தேற்ற
பன்மணி பயின்ற வொண்முகட் டுச்சி
நலத்தகு ஞாயி லிலக்கண விளமுலைப்
பொறிநிலை யமைந்த போர்ப்பெருங் கதவிற்
செறிநிலை யமைந்த சித்திரப் புதவின்
யாப்புற வமைத்த வாய்ப்புடைப் பணதி
வல்லோர் வகுத்த செல்வக் கூட்டத்
தாய்நலக் கம்மத் தழுகொடு புணர்ந்து
தீயழற் செல்வன் செல்வுமிசை தவிர்க்கும்
வாயின் மாடத் தாய்நல வணிமுகத்
தொண்பொற் சத்தித் திண்கொடி சேர்ந்து
விண்ணிற் செல்லும் விளங்கொளி யவர்களை
மண்ணிற் செல்வங் காணிய வல்விரைந்
[4] தடைதர்மி னென்னு மவாவின போல
வடிபட வியங்கும் வண்ணக் கதலிகைக்
கூந்த லணிந்த வேந்துநுதற் சென்னிக்
கடிமெயின் முதுமகள் காவ லாக

(படைச்சேரி)

நெடுநீர்ப் பேரியாறு நிறைந்துவிலங் கறுத்துப்
பல்வழிக் கூடிய படிய வாகிச்
செல்வழி யெல்லாஞ் சிறந்த கம்பலை
கரைபொரு துலாவுந் திரையொலி கடுப்ப
நிறைவளங் கவினிய மறுகிரு பக்கமும்
அந்தி வானத் தகடுமுறை யிருந்த
ஒண்கே [5] ழுடுவி னொளிபெறப் பொலிந்து
கண்ணுற நிவந்த பண்ணமை படுகாற்
கைவினை நுனித்த மைதவழ் மாடத்

பி - ம். [1] பத்திப். [2] வித்தகக்கலாய். [3] முட்பட. [4] திடைதர்மி. [5] ழெழுவி.

தரும்படைச் செல்வ ரமர்ந்தினி துறையும்
'பெரும்படைச் சேரி திருந்தணி யெய்திக்
கைபுனை வனப்பினோர் பொய்கை யாக

(பரத்தையர் தெரு)

வாணுதன் மகளிரு மைந்தரு மயங்கிக்
காம மென்னு மேமப் பெருங்கடற்
படுதிரைப் பரப்பிற் குடைவன ராடி
அணிதலும் புனைதலு முனிவில ராகிக்
காத லுள்ளமொடு கலந்துண் டாடுநர்
போகச் சேரி புறவித ழாகச்

(வேளாளர் தெரு)

சால்பெனக் கிடந்த கோலப் பெருநுகம்
பொறைக்கழி கோத்துப் பூண்டன ராகி
மறத்துறைப் பேரியாற்று மறுகரை போகி
அறத்துறைப் பண்டி யசைவிலர் வாங்கி
உயர்பெருங் கொற்றவ னுவப்பினுங் காயினும்
தவிர்க்கவும் போக்கவும் படாத தன்மையர்
நன்புலந் தழீஇய மன்பெருஞ் செய்கைக்
காரணக் கிளவிப் பூரண நோக்கிற்
பெருங்கடி யாள ரருங்கடிச் சேரி
புறவிதழ் மருங்கிற் புல்லித ழாக

(வாணிகர் தெரு)

மதியுறழ் சங்கின் வாய்வயிற் போந்த
நிதியம் பெற்ற நீர்மையர் போல
அதிரா வியற்கை யங்கண் ஞாலத்துக்
குதிரை மருப்புங் கொளற்கரி தாகிய
அழலுமிழ் நாக நிழலுமிழ் மணியும்
சிங்கப் பாலுந் தெண்டிரைப் பௌவத்து
மூவா வமரர் முயன்றுடன் கொண்ட
வீயா வமுதமும் வேண்டிற் போய்த்தரும்
அரும்பெறற் பண்ட மொருங்ககத் தடக்கி
விட்டன ரிருவா முட்டில் செல்வத்துப்
பல்விலை வாணிகர் நல்விலைச் சேரி

புல்லிதழ் பொருந்திய நல்லித ழாக

(அந்தணர் தெரு)

மேன்முறை யியன்ற நான்மறைப் பெருங்கடல்
வண்டுறை யெல்லை கண்டுகரை போகிப்
புறப்பொரு ளல்லா வறப்பொரு ளுவின்
ஒளிகண் கூடிய நளிமதி போல
ஒத்தொடு புணர்ந்த [1] காப்புடை யொழுக்கின்
உலகப் பல்லுயிர்க் கலகை யாகிப்
பெருந்தகை வேள்வி யருந்தவப் படிவமொடு
தந்தொழி றிரியாத் தரும நெஞ்சின்
[2] அந்தணர் சேரி யகவித ழாக

(அமைச்சர் தெரு)

இருநில வரைப்பி னெதிர்ப்போ ரின்றி
அருநிலை யுலகி னாட்சி [3] விறப்பினும்
பெரும்படைக் கொற்றம் பீடழிந்து சுருங்கா
அரும்படை மன்ன ராற்றலி னெருங்கத்
தலைமையின் வழீஇய நிலைமை யெய்தினும்
உற்றது முடிக்கு முறுதி நாட்டத்துக்
கற்றுப்பொரு டெரிந்த கண்போற் காட்சி
அருமதி யமைச்சர் திருமதிற் சேரி
மாசில் பைந்தாது சுமந்த மத்தகத்
தாசில் பன்மல ரல்லி யாகச்

(அரண்மனை)

சுடுகதி ரணிந்த சூழ்கதிர்ச் செல்வன்
விடுசுடர்ப் பேரொளி விமானம் போலச்
சேணொளி திகழு மாண்வினை மாடம்
வேண்டிய மருங்கிற் காண்டக நெருங்கிச்
செஞ்சுடர் மணிமுடி திகழுஞ் சென்னிப்
பைந்தலை நாகர் பவணங் கடுப்பக்
காப்பின் றுயினுங் கண்டோ ருட்கும்
யாப்புடைப் புரிசை யணிபெற வளைஇ
அருமணிப் பைம்பூ ணரசகத் தடைந்து

பி - ம். 1 காப்புக்கடை. 2 அந்தண்சேரி. 3 விருப்பினும்.

வாயி லணிந்த வான்கெழு முற்றத்துக்
'கோயில் கொட்டை யாகத் தாமரைப்
பூவொடு பொலியும் பொலிவிற் றாகி
அமையாச் செய்தொழி லவுணர்க் கடந்த
இமையாச் செங்க ணிந்திர னுறையும்
அமரா பதியு நிகர்தனக் கின்றித்
துன்ப நீக்குந் தொழிலிற் றாகி
இன்பங் கலந்த விராச கிரியமென்
றெண்டிசை மருங்கினுந் தன்பெயர் பொறித்த
மன்பெருஞ் சிறப்பின் மல்லன் மாநகர்

(உதயணன் இராசகிரியம் புகுதல்)

சாரச் சென்றதன் சீர்கெழு செல்வமும்
விள்ளா விழுச்சீர் விச்சா தாருறை
வெள்ளியம் பெருமலை யன்ன விளங்கொளி
மாட மறுகின் மயங்கொளிக் கழுமலும்
நீடுபுகழ்க் [1] குருசி னெஞ்சிடை நலிய
வள்ளிதழ்க் கோதை வாசவ தத்தையை
உள்ளுபு திருநகர் புக்கன னுலந்தென்.

௩—இராசகிரியம் புக்கது முற்றிற்று.

௪—புறத்தொடுங்கியது.

உள்ளுத லானா துள்ளகஞ் சுருங்கிய
வள்ளிதழ் நறுந்தார் வத்தவன் றன்னொடு

(யவனச்சேரிமுதலிய சேரிகள்)

விண்ணுற நிவந்த பண்ணமை படைமதில்
வாயிலு மருங்கினுங் காவல் கண்ணி
வேந்துபிழைத் தொழுகினுங் காய்ந்து கலக்குறு
முழுப்பரி சார முத்தக ணெய்தி
விழுப்பெருஞ் செல்வமொடு வென்றி தாங்கிய
ஐம்பதி னிரட்டி யவனச் சேரியும்

பி - ம். 1 குருகின்,

எண்பதி னிரட்டி யெறிபடைப் பாடியும்
அளப்பருஞ் சிறப்பி னுயிர மாகிய
தலைப்பெருஞ் சேனைத் தமிழச் சேரியும்
கொலைப்பெருங் கடுந்திறற் கொல்லர் சேரியும்
மிலேச்சச் சேரியுந் தலைத்தலை சிறந்து

(சித்திரசாலை முதலியன)

வித்தக வினைஞர் பத்தியிற் குயிற்றிய
சித்திர சாலையு மொத்தியைந் தோங்கிய
ஒட்டுவினை மாடமுங் கொட்டுவினைக் கொட்டிலும்
தண்ணீர்ப் பந்தருந் தகையமை சாலையும்
அறத்தியல் கொட்டிலு மம்பலக் [1] கூடமும்
மறப்போர்க் கோழி மரபிற் பொருத்தும்
விறற்போ ராடவர் விரும்பிய களனும்
மறக்களி யானை வடிக்கும் வட்டமும்
கடிசெல் புரவி முடுகும் வீதியும்
அடுத்தொலி யறாஅ வரங்குமுங் கழகமும்
அறச்சோற் றட்டிலு மம்பலச் சாலையும்
தேவ குலனுந் தேசிகப் பாடியும்
மாவுந் தேரு மயங்கிய மறுகும்
காவுந் தெற்றியுங் கடவுட் பள்ளியும்
தடவளர் செந்தீ முதல்வர் சாலையும்
வேண்டிடந் தோறுங் காண்டக நெருங்கி
ஆதி யாகி யமைந்தவனப் பெய்தி
மயங்கிய மாந்தர்த் தாகி யார்க்கும்
இயங்குதற் கின்னாப் புறம்பணைச் சேரியும்
அந்தண் பாடியு [2] மணுகி யல்லது
வெந்திறல் வேகமொடு விலக்குதற் கரிய
ஐங்கணைக் கிழவ னமர்ந்துநிலை பெற்ற
எழுதுவினைத் திருநக ரெழிலுற வெய்தி

(பொய்கை)

இட்டிகைப் படுகாற் குட்டக் கோணத்
துத்தர மருங்கி னத்தினஞ் சொரிந்த

பி - ம். 1 கூட்டமும். 2 மனுகி.

மணிதெளித் தன்ன வணிநிறத் தெண்ணீர்ப்
பெருந்தண் பொய்கை மருங்கிற் குலாஅய்ச்

(தாபதப்பள்ளி அமைந்துள்ள இடம்)

சேறுபடு செறுவி னாறுநடு கடைசியர்
கழிப்புநீ [1] ராரலொடு கொழுப்பிறக் கொளீஇய
நாரைச் சேவல் பார்வலொடு வதிந்த
எழிற்பூம் புன்னைப் பொழிற்புடை நிவந்த
வள்ளிதழ்த் தாமரை வான்போ துளரி
முழுத்திரட் டெங்கின் விழுக்குலை நெற்றி
அகமடல் வதிந்த வன்புபுரி பேடை
நரல்குர லோசை யளைஇ யயல
கணைக்காற் கமுகி னிணைப்பொதி யவிழ்ந்த
அம்மென் பாளையு ளசைந்த வண்டினம்
மம்மர் வைகறை மருங்குதுயி லேற்ற
அனந்தர் முரற்சி யளைஇப் புதைந்த
பூங்கண் முற்றிய புறத்துப்புடை யாடித்
தேங்கட் டும்பி தீங்குழ லிசைப்ப
இயல்பிற் கெழீஇய வின்றுணைப் பிரிந்தோர்க்
குயலரி தாக வூழூழ் கவற்றும்
வயலுந் தோட்டமு மயல்பல கெழீஇய
தாமரைச் செங்கட் டமனிய விணைக்குழைக்
காமன் கோட்டத்துக் கைப்புடை நிவந்த
இளமரக் காவி னிணைதனக் கில்லாத்
தூபத் தொழுக்கத் தாபதப் பள்ளி
தமக்கிட மாக வமைத்த பின்றை

(அமைச்சர் செயல்)

வீழ்துணை மாதர் விளிவுநினைந் திரங்கி
வாழ்த லாற்றான் வாய்மொழி [2] யரசன்
உற்றவ னாருயி ருய்தல் வேண்டி
இற்றவள் பிறந்துழிக் காட்டு மந்திரம்
கற்றுவினை நவின்றனென் காட்டுவெ னினக்கென
வஞ்ச மாயினு நெஞ்சுவலி யுறுக்கெனக்;

பி - ம். 1 ரார்வலொடு. 2 யந்தணனற்ற.

கண்கவர் பேரொளிக் காகதுண் டகனெனும்
அந்த ணாளனை யமைச்சர் தருதலின்

(காகதுண்டக முனிவன் கூற்று)

அருமதி யண்ணற் கவனிது கூறும்
இருமதி யெல்லை யியைந்த விரதமொ
டிரக்க மின்றி யிருக்கல் வேண்டும்
அத்துணை யிருந்தபி னருங்காட் டகவயின்
மொய்த்தழ லீமத்து முன்னர்க் காட்டிய
தவாஅ வன்பிற் [1] றவமா சாதனை
போகிய பொழுதி னாகிய [2] நலத்தொடு
மேலை [3] யாகிய வடிவின னாகி
மற்றவ ளடைவது தெற்றெனத் தெளியெனக்
கற்புடை மாதரைக் கைப்படுத் தன்னதோர்
கட்டுரை வகையிற் பட்டுரை யகற்றி
ஆப்புடை யொழுக்க மறியக் கூறிக்
காப்பொடு புணரிற் [4] காணலு மெளிதெனக்
காவல குமரற்கு மேவன வுரைத்து
[5] விடுத்தவன் போகிய பின்றை மடுத்த

(உருமண்ணுவா முதலியோர் கூற்று)

இருநிலம் புகுதலு [6] மொருவிசும் பிவர்தலும்
வருதிரை நெடுங்கடல் வாய்க்கொண் டுமிழ்தலும்
மந்தர மேந்தலு மென்றிவை பிறவும்
பண்டியல் விச்சை பயிற்றிய மாக்களைக்
கண்டு மறிதுங் கண்கூ டாகச்
செத்தோர்ப் புணர்க்கும் விச்சையொடு புணர்ந்தோர்க்
கேட்டு மறியலம் வீட்டருஞ் சிறப்பிற்
புண்ணிய முடைமையி னண்ணின னிவன்
ஒருதலை யாகத் தருதல் வாயென
உறுதி வேண்டி யுருமண் ணுவாவும்
மருவிய தோழரு மன்னனைத் தேற்றி
மாய [7] வொழுக்கமொடு சேயதை நோக்கி

பி - ம். 1 றவாசசாதினை. 2 நிலத்தொடு. 3 யாக்கிய. 4 கற்றலு. 5 விடுத்தனன். 6 மருவிசும். 7 வொடுக்கமொடுசெய்கை.

மிகுதிக் கர்தன் மகத மன்னனொடு
சுற்ற மாக்குஞ் சூழ்ச்சிய ராகிக்
கொற்ற வேந்தன் குறிப்புவழி யோடி
அகத்துறைந் தொடுங்குதல் செல்லா ரகன்மதிற்
புறத்தொடுங் கினராற் பொருள்பல புரிந்தென்.

ச—புறத்தோடுங்கியது முற்றிற்று.

ரு—பதுமாபதி போந்தது.

பொருள்புரி யமைச்சர் பூங்கழற் குருசிலொ
டிருளறு திருமணி யிராசகிரி யத்துப்
புறமதி லொடுங்கிய பொழுதின் மறனுவந்

(மகத மன்னவன்)

தமரா [1] மன்ன ரருஞ்சம முருக்கிப்
பைங்கழ லமைந்த பாடமை நோன்றாள்
வெண்கதிர் மதியின் [2] வீற்றொளி திகழ்ந்து
தான்மீக் கூரிய வேம வெண்குடை
மணிமுடிச் சென்னி மகத மன்னவன்
தணியா வேகத்துத் தருசகன் றங்கை

(பதுமாபதியின் பாதாதிகேசம்)

பசும்பொற் கிண்கிணி பரடுசுமந் தாற்ற
அசும்பம ருமரை யலைத்த வடியினள்
சிறுபிடித் தடக்கையிற் செறிவொடு புணர்ந்து
மென்மையி னியன்று செம்மைய வாகி
நண்புவீற் றிருந்த நலத்தகு குறங்கினள்
மணியும் பவழமு மணிபெற நிரைஇய
செம்பொற் பாசிழை செறிய வீக்கிய
பைந்துகி லணிந்த பரவை யல்குலள்
துடிதோங் கூறிய விடுகிய நடுவிற்குப்
பார மாகிய வீரத் தானையள்
ஊக்க வேந்த னூக்கம் போல
வீக்கங் கொண்டு வெம்மைய வாகி
இலைப்பூண் டிளைக்கு மேந்திள முலையள்

பூ - ம். [1] மன்னனருஞ், [2] வேமொளி திகழ்ந்து.

திலதஞ் சுடருந் திருமதி வாண்முகத்
தலரெனக் கிடந்த மதரரி மழைக்கட்
கதிர்வளைப் பணைத்தோட் கணங்குழைக் காதிற்
புதுமலர்க் கோதை புனையிருங் கூந்தற்
பதுமா பதியெனும் பைந்தொடிக் கோமகள்

(முரசறைதல்)

கன்னி யாயந் துன்னுபு சூழ
மதிற்புறங் கவைஇய புதுப்பூங் காவின்
மகர வெல்கொடி மகிழ்கணைக் காமற்கு
நகரங் கொண்ட நாளணி விழவினுள்
எழுநா டோறுங் கழுமிய காதலொடு
வழிபா டாற்றிய போதரு மின்றென
அழிகவுள் வேழத் தணியெருத் தேற்றிய
இடியுமிழ் முரசி[1] னிருங்கண் டாக்கி
வடிவேற் கொற்றவன் வாழ்கெனப் பல்லூழ்
அணித்திரட் கந்தின் மணிப்பொற் பலகைச்
சித்திர முதுசுவர் வித்தக வேயுள்
ஆவணந் தோறு மறைந்தறி வுறுத்தலின்

(நகரமாந்தர் விழாத் தொடங்கல்)

இடையற வில்லாக் கடைமுத றோறும்
கைவ லோவியர் மெய்பெற வெழுதிய
உருவப் பூங்கொடி யொசிய வெடுத்துத்
தெருவு மந்தியுந் தெய்வச் சதுக்கமும்
பழமண னீக்கிப் புதுமணற் பரப்பி
விண்மிசை யுலகின்[2] விழவமைந் தாங்கு
மண்மிசை யுலகின் மன்னிய சீர்த்தி
முழவுமலி திருநகர் விழவினை தொடங்க

(பதுமாபதி புறப்படல்)

அரும்பொறி நுனித்த யவனக் கைவினைப்
பெரும்பொறி வையத் திருந்தியாப் புறீஇ
மங்கலச் சாந்தின் மலர்க்கொடி[3] யெழுதிப்
பைம்பொற் பத்திரம் புளகமொடு[4] வீக்கிக்

பி - ம். 1 னிருங்கணந்தாக்கி. 2 விழவறைந். 3 யெழுதிய. 4 விலக்கிக்.

கதிர்நகைத் தாம மெதிர்முக நாற்றிப்
பத்திர மாலை சித்திர மாகப்
புடைப்புடை தோறுந் தொடக்கொடு தூக்கிக்
கட்டி தோய்த்த காழகி னறும்புகை
பட்டுநிணர் கட்டிற் பல்படை குளிப்ப
உள்ளக மருங்கின் விள்ளாக் காதற்
றுணைநலத் தோழியர் துப்புர வடக்கி
அணிநலத் தோழிக் கமைந்தன வியற்றி

(வண்டியெருதுகள்)

நெய்ந்நிறங் கொண்ட பைந்நிற மஞ்சளின்
வைம்மருப் பணிபெற வண்ணங் கொளீஇக்
கைவினைக் கண்ணி கவின்பெறச் சூட்டித்
தகைமலர்ப் பொற்றார் வகைபெற [1] வணிந்து
காண்டகு வனப்பிற் காலியற் செலவிற்
பாண்டில் வையம் பண்ணிப் பாகன்
கோலுடைக் கையிற் கூப்புவன னிறைஞ்சி
வையம் வந்து வாயி னின்றமை
தெய்வ மாதர்க் கிசைமின் சென்றென
இசைத்த மாற்றத் துரைப்பெதிர் விரும்பிப்
போதுவிரி தாமரைத் தாதகத் துறையும்
தீதுதீர் சிறப்பிற் றிருமக ளாயினும்
உருவினு முணர்வினு மொப்புமை யாற்றாத்
தெரியிழை யல்குற் றேமொழிக் குறுமகள்

(மகளிர் ஏந்திய பொருள்கள்)

பாவையும் பந்துங் கழங்கும் பசும்பொற்
றாதையு முற்றிலும் பேதை மஞ்ஞையும்
கிளியும் பூவையுந் தெளிமணி யடைப்பையும்
கவரியுந் தவிசுங் கமழ்புகை யகிலும்
சாத்துக் [2] கோயும் பூத்தகைச் செப்பும்
இன்னவை பிறவு மியைய வேந்தி

(பதுமாபதி வண்டியேற வருதல்)

வண்ண மகளிர் வழிநின் றேத்திச்

பி - ம். 1 வணிந்த. 2 கோதையும்.

செண்ணச் சேவடி போற்றிச் சேயிழை
மென்மெல விடுகெனப் பன்முறை பணிய
ஒண்செங் காந்தட் கொழுமுகை யுடற்றிப்
பண்கெழு தெரிவிர லங்கை சிவப்ப
மயிலெருத் தணிமுடி மாதர்த் தோழி
கயிலெருத் தசைத்த கைய ளாகித்
தாழியுண் மலர்ந்த தண்செங் குவளை
ஊழுறு நறும்போ தொருகையிற் பிடித்து
விண்ணக மருங்கின் வேமா னியர்மகள்
மண்ணகத் திழிதர மனம்பிறழ்ந் தாங்குக்
கன்னிக் கடிநகர்ப் பொன்னிலத் தொதுங்கி
விடுகதிர் மின்னென விளங்குமணி யிமைப்ப
இடுமணன் முற்றத்து மெல்லென விழிதர
வாயில் போந்து வைய மேறிற்
சாய னோமெனத் தாயகட் டெடுத்துப்

(பதுமாபதி வையமேறிக் காமன் கோயில் செல்லல்)

போற்றுப்பல கூற வேற்றுவன ளிருப்பப்
பாகனை யொழித்துக் கூன்மகள் கோல்கொளப்
பொதியிற் சோலையுட் கதிரெனக் கவினிய
கருங்கட் கூரற் செங்கோல் பிடித்த
கோற்றொழி லாளர் மாற்றுமொழி விரவி
நலத்தகு நங்கை போதரும் பொழுதின்
விலக்கரும் வேழம் விடுதி ராயிற்
காயப் படுதிர் காவலன் பணியென
வாயிற் கூறி வழிவழி தோறும்
வேக யானைப் [1] பாகர்க் குணர்த்தி
உட்குவ ருருவங் கட்புல மருங்கிற்
காண விடாஅ ராணையி னகற்றிக்
கச்சுப்பிணி யுறுத்துக் கண்டகம் பூண்ட
அச்சுறு நோக்கி னறுபது கழிந்த
காஞ்சுகி மாக்கள் சேர்ந்துபுடை காப்பக்
கண்டோர் விழைபுந் தண்டாக் காதலொ
டருந்தவ முண்மை யறிமி னீரெனப்

பி - ம். 1 பாகற்கு.

பெருஞ்சாற் றுறாஉம் பெற்றியள் போலப்
பைந்தொடி மகளிர் நெஞ்சுநிறை யன்பொடு
வண்ண மலருஞ் சுண்ணமுந் தூவ
அநங்கத் தானத் தணிமலர்க் காவிற்
புலம்படை வாயில் புக்கனள் பொலிந்தென்.

௫—பதுமாபதி போந்தது முற்றிற்று.

௬—பதுமாபதியைக் கண்டது.

வாயில் புக்கபின் வைய நீஇ
ஆய்வளைத் தோழி யகம்புக் கருளென
வைய வலவன் வந்தனன் குறுகிப்
பூண்ட பாண்டியம் பூட்டுமுதல் விட்டபின்
மஞ்சுவிரித் தன்ன வைய வாயிற்
கஞ்சிகை கதுமெனக் கடுவளி யெடுப்ப
வெண்முகிற் பிறழு மின்னென நுடங்கித்

(உதயணன் நிலை)

தன்னொளி சுடருந் தையலை யவ்வழிக்
குறுஞ்சினைப் புன்னை நறுந்தா தாடிக்
கருங்குயிற் சேவ றன்னிறங் [1] கரந்தெனக்
குன்றிச் செங்க ணின்றுணைப் பேடை
உணர்தல் செல்லா தகறூஉம் விரும்பிப்
புணர்த [2] லுணர்வொடு பொங்குசிறை யுளரி
அளிக்குர [3] லழைஇத் தெளித்துமன நெகிழ்க்குமக்
[4] குயிற்புணர் மகிழ்ச்சி [5] யயிற்கூட் டமைத்த
செஞ்சுடர் வேலி னெஞ்சிடம் போழத்
தன்னாழ் நவிற்றிய தாமரை யங்கைப்
பொன்னாண் டியல்வரும் பொங்கிள வனமுலை
மனைப்பெருங் கிழத்தியை நினைத்தன னாகிச்
[6] செம்மை நெடுங்கண் வெம்மை யுறாஅத்
தெண்பனி யுறைத்தரத் திருத்துஞ் சகலத்துப்

பி - ம். 1 கவர்ந்தெனக். 2 லுறவொடு. 3 லளைஇத். 4 கயிற் புணர். 5 யற்கூட். 6 செம்மல்.

பொன்பூத் தன்ன வம்பூம் பசப்பொடு
நாண்மலர்ப் புன்னைத் தாண்முதல் பொருந்திக்
கொடிக்குருக் கத்திக் கோலச் செந்தளிர்
பிடித்த விரலின ளாகிக் கெடுத்த
அவந்திகை மாத ரணிநல நசைஇக்
கவன்றன னிருந்த காலை யகன்று
போமின் போமி னென்றுபுடை யோட்டும்
காவ லாளரைக் கண்டிவட் புகுதரும்
உரிமை யுண்டென வரிமா னன்ன
வெஞ்சின விடலை நெஞ்சுநிறை துயரமொடு
நீக்கச் சென்றனெ னெருந லின்றிவண்
நீக்கப் பட்டனெ னாதலி னிலையா
ஆக்கமுங் கேடும் யாக்கை சார்வா
ஆழிக் காலிற் கீழ்மேல் வருதல்
வாய்மை யாமென மனத்தி னினைஇ

(உதயணன் பதுமாபதியைக் காணல்)

நீங்கிய வெழுந்தோன் பூங்குழை மாதரை
வண்ணக் கஞ்சிகை வளிமுகந் தெடுத்துழிக்
கண்ணுறக் கண்டே தன்னமர் காதல்
மானேர் நோக்கின் வாசவ தத்தை
தானே யிவளெனத் தான்றெரிந் துணரான்
மந்திர விதியி னந்த ணாளன்
தந்தனன் மீட்டெனுஞ் சிந்தைய னாகி
உறுப்பினு நிறத்தினும் வேற்றுமை யின்மையின்
மறுத்து நோக்கு மறத்தகை மன்னன்

(உதயணன் கண்கள்)

செஞ்சுடர் முகத்தே செருமீக் [1] கூரிய
வெஞ்சின [2] வேந்தர்க்கு நஞ்சுமிழ் நாகத்துத்
தீயோ ரன்ன திறல வாகி
முளையோர் முறுவன் முகிழ்த்த சின்னகை
இளையோர் நெஞ்சிற் றளைமுதல் பரிந்தவர்க்
கமிழ்தம் பொதிந்த வருளின வாகித்

பி - ம். 1 கூறிய. 2 வேந்தற்கு.

தலைப்பெருந் தாமரைச் செம்மல ரன்ன
நலத்தொடு புணர்ந்த விலக்கண நெடுங்கண்

(உதயணனும் பதுமாபதியும் தம்முள் மயங்கல்)

வயப்பட லுற்று வயங்கிழை மாதர்
தானுங் கதுமென நேர்முக நோக்க
நெஞ்சிறை கொளீஇய நிறையமை நெடுந்தாழ்
வெந்தொழிற் காம வேட்கை திறப்பத்
திண்பொறி கலங்கித் திறல்வே றாகி
வேலை யெல்லை மீதூர்ந் திரண்டு
கோலப் பெருங்கடல் கூடி யாங்கும்
இசைந்த வனப்பி னேயர் மகற்கும்
பசைந்த காதற் பதுமா பதிக்கும்
யாப்புறு பால்வகை நீப்புற வின்றி
பிறப்புவழிக் கேண்மையிற் சிறப்புவழி வந்த
காமப் பெருங்கடல் கண்ணுறக் கலங்கி
நிறைமதி யெல்லைத் துறையிகந் தூர்தர

(பதுமாபதி நினைத்தல்)

நன்னகர் கொண்ட தன்னமர் விழவினுட்
கரும்புடைச் செல்வன் விரும்பு தோன்றித்
தன்னலங் கதுமெனக் காட்டி யென்னகத்
திருநிறை யளத்தல் கருதிய தொன்றுகொல்
அந்தண வடிவொடு வந்திவட் டோன்றி
மேவன நுகர்தற்கு மாயையி னிழிதரும்
தேவ குமரன் கொல்லிவன் றெரியேன்
யாவ னாயினு மாக மற்றென்
காவ னெஞ்சங் கட்டழித் தனனென
வெஞ்சின விடலையொடு நெஞ்சுமா றாடி

(பதுமாபதி கண்ணின் செயல்)

உலைப்பருந் தானை யுதயண [1] குமரற்
கிலைக்கொழுந் தூழின்ற வெழில்வளைப் பணைத்தோள்
உரிய வாயின வுணர்மி னென்றுதன்
அரிமதர் நெடுங்க ணயனின் றோர்க்கும்

பி - ம். 1 குமரனிலைக்,

அறியக் கூறுத லமர்ந்தன போல
நெறியிற் றிரியா நிமிர்ந்துசென் றூட

(பதுமாபதி கோயிலை வலஞ்செய்தல்)

வளங்கெழு மாவி னிளந்தளி ரன்ன
நயத்தகு மேனியு நல்லோர் நாடிய
பயப்புள் ளுறுத்த படியிற் றாகக்
கைவரை நில்லாப் பையு ளொடுக்கி
உட்கு நாணு மொருங்குவந் தடைதர
நட்புடைத் தோழி நண்ணுவன ளிறைஞ்ச
மேதகு வையத்தின் மெல்லென விழிந்து
தாதுகு புனைமலர்த் தண்பூங் காவினுட்
சூடக முன்கைச் சுடர்க்குழை மகளிரொ
டாடுத லாறு வவரொடு நீங்கி
வனப்பெனப் படூஉந் தெய்வந் தனக்கோர்
உருவுகொண் டதுபோற் றிருவிழை சுடரத்
தன்னமர் தோழி தன்புறத் தசைஇ
அன்ன நாண வண்ணலைக் கவற்றுப்
பொன்னரிக் கிண்கிணி புடைபெயர்ந் தாற்ற
அரிச்சா லேகத் தறைபல பயின்ற
திருக்கிளர் மாடஞ் சேர்ந்துவலங் கொண்டு

(பதுமாபதி தானம் அளித்தல்)

கழிபெருஞ் சிறப்பிற் கன்னி மகளிர்
அழியுந் தான மவ்விடத் தருளி
நான்முகன் மகளிர் நூன்முதற் கிளந்த
ஒழுக்கிற் றிரியா ளூறுபொருள் வேண்டும்
வழுக்கா வந்தணர் வருக யாவரும்
விலக்கவு நீக்கவும் பெறீஇ ரென்றுதன்
தலைத்தாண் முதியர்க்குத் தானே கூறி
நோன்புமுத றுடங்கித் தேங்கமழ் கோதை
தலைநாட் டானந் தக்கவை [1] யளித்தலிற்

(ஒரு மங்கை பாடுதல்)

பலநா ளேற்ற பயனுண் டெனினே

பி - ம். 1 யழிதலிற்.

வளமையும் வனப்பும் வண்மையுந் திறலும்
இளமையும் விச்சையு மென்றிவை பிறவும்
இன்பக் கிழமையு மன்பே ருலகினுள்
யாவர்க் காயினு மடையு மடையினும்
வார்கவுள் யானை வணக்குதற் கியைந்த
வீணை விச்சையொடு விழுக்குடிப் பிறவரிது
விழுக்குடிப் பிறந்திவ் வீறொடு விளங்கிய
வழுக்கா மரபின் வத்தவர் பெருமகன்
உதயண குமரனொ டொப்போன் மற்றிவள்
புதைபூண் வனமுலைப் போகம் பெறுகென
மரபறி மகடூஉப் பரவினள் பாட
அன்ன னாக வென்னயந் தோனெனப்
பொன்னிழை மாதர் தன்மனத் திழைப்பத்
தலைநாட் டான மில்க்கணத் தியைந்தபின்

(பதுமாபதி அரண்மனையை அடைதல்)

மாயிரு ஞாலத்து மன்னவன் மகளே
ஞாயிறு படாமற் கோயில் புகுதல்
இன்றை நன்னாட் கியல்புமற் றறிகெனத்
தொன்றியன் மகளிர் தொழுதனர் கூறச்
செய்வதை யறியலள் வெய்துயிர்ப் பளைஇத்
தெய்வத் தானம் புல்லென வையத்
திலங்கிழை மாத ரேற்ற வேறிப்
பொலந்தொடி மகளிர் பொலிவொடு சூழ
வந்த பொழுதிற் கதுமென நோக்கிய
[1] அந்த ணாளற் கணிநல னொழியப்
பெருநகர் புகழத் திருநகர் புக்கபின்

(பதுமாபதியின் கட்டளை)

இகலடு தானை யிறைமீக் [2] கூறிய
தவலரும் வென்றித் தருசகன் றங்கை
கொங்கலர் கோதை நங்கைநம் பெருமகள்
புகழ்தற் காகாப் பொருவில் கோலத்துப்
பவழச் செவ்வாய்ப் பதுமா பதிதன்
கன்னி நோன்பின் கடைமுடி விதனொடு

பி - ம். 1 அந்தணாளர்க். 2 கூரிய.

முன்னி முற்று மின்ன தீமென
நச்சுவனர் வரூஉ நான்மறை யாளரை
அச்சங் கொள்ள வகற்றன்மி னென்றுதன்
ஆணைவைத் தகன்றனள் யாண ரமைத்தவிஃ
தறிமி னீரெனப் பொறியமை புதவிற்
கடைமுதல் வாயிற் கடுங்காப் பிளையரை
அடைமுது மாக்க ளமைத்தகன் றமையிற்

(உதயணன் நிலை)

கண்டோர் பெயர்த்துக் காண்ட லுறாஉம்
தண்டா வனப்பின் றகைமைய ளாகிய
கன்னி யாகங் கலக்கப் பெறீஇயரெனப்
பன்மலர்க் காவினுட் பகலு மிரவும்
உறையு ளெய்திய நிறையுடை நீர்மை
இளையோ னமைந்த காலை மற்றுத்தன்
தளையவிழ் கோதைத் தைய லிவளெனும்
மைய லுள்ளமொடு பைத [1] லெய்தி

(உதயணன் கூனியை வினவுதல்)

மன்னவன் மடமகள் பின்னொழிந் திறக்கும்
ஏந்திள வனமுலை யெழில்வளைப் பணைத்தோள்
மாந்தளிர் மேனி மடமா னோக்கின்
ஆய்ந்த கோலத் தயிரா பதியெனும்
கூன்மட மகடனைக் கோமகன் குறுகி
யாவளிந் நங்கை யாதிவண் மெய்ப்பெயர்
[2] காவலர் கொள்ளுங் காவினுள் வந்த
காரண மென்னை கருமமுண் டெனினும்
கூறினை செல்விற் குற்ற மில்லென
மாறடு குருசில் வேறிடை வினவ

(கூனியின் விடை)

அந்த ணாள னரும்பொரு ணசையின்
வந்தன னென்னும் வலிப்பின னாகி
இன்பங் கலந்த விந்நகர்க் கிறைவன்
தன்பெரு மாட்டி தலைப்பெருந் தேவி
சிதைவில் கற்பிற் சிவமதி யென்னும்

பி - ம். 1 லெய்திய. 2 காவலற்.

பேருடை மாதர்க் கோரிடம் பிறந்த
உதையை யோடை யென்னு மொண்டொடி
காசி யரசன் காதலி மற்றவள்
ஆசின்று பயந்த வணியிழைக் குறுமகள்
மதுநாறு தெரியன் மகளிருட் பொலிந்த
பதுமா பதியெனப் பகர்ந்த பேரினள்
துன்னருஞ் சிறப்பிற் கன்னி தானும்
வயந்தக் கிழவற்கு நயந்துநகர் கொண்ட
விழவணி நாளகத் தழகணி காட்டி
எழுநாள் கழிந்த வழிநாட் காலை
வேதியர்க் கெல்லாம் வேண்டுவ கொடுக்கும்
போதல் வேண்டா பொருட்குறை யுண்டெனின்
ஏத மில்லை யிவணி ராமினென்

(கூனி உதயணனை வினுதல்)

றிந்நாட் டாரலி ரேனையர் போல்வீர்
எந்நாட் டெவ்வூ ரெக்கோத் திரத்தீர்
யாமு நும்மை யறியப் போமோ
வாய்மை யாக மறையா துரைமினென்
றேயர் குருசிலைத் தூய்மொழி வினவ

(உதயணன் விடை)

நன்றுன் மற்றது கேளாய் நன்னுதல்
கண்டார் புகழுங் கலக்கமில் சிறப்பிற்
காந்தார மென்னு மாய்ந்த நாட்டகத்
தீண்டிய பல்புக ழிரத்தின புரத்துள்
மாண்ட வேள்வி மந்திர முத்தீச்
[1] சாண்டிய னென்னுஞ் சால்புடை யொழுக்கின்
ஆய்ந்த நெஞ்சத் தந்தணன் மகனென்
மாணக னென்பேன் மற்றிந் நாடு
காண லுறலொடு [2] காதலிற் போந்தனென்
என்றது சொல்ல நன்றென விரும்பி
ஆய்புக ழுண்ணலை யறிந்தன ளாகிச்
சேயிழைக் கூன்மகள் சென்றனள் விரைந்தென்.

சூ—பதுமாபதியைக் கண்டது முற்றிற்று.

பி - ம். 1 சாண்டியர். 2 காணலிற்.

௭—கண்ணுறு கலக்கம்.

(சூரியன் அத்தமித்தல்)

சேயிழைக் கூன்மகள் செவ்வனங் கூறிப்
போகிய பொழுதி னாகிய சூழ்ச்சி
அரும்பெறற் றோழரைப் பொருந்தலும் பொருக்கெனப்
பகலிடம் விளக்கிய பருதியஞ் செல்வன்
அகலிடம் வறுவி தாக வத்தத்
துயர்வரை யுப்பாற் கதிர்கரந் தொளிப்ப

(மாலைக்காலம்)

ஆண்கட னகற லதுநோன் றொழுகுதல்
மாண்பொடு புணர்ந்த மாசறு திருநுதற்
கற்புடை மகளிர் கடனெனக் காட்டி
வினைக்கும் பொருட்கு நினைத்துநீத் துறையுநர்
எல்லை கருதிய திதுவென மெல்லியற்
பணைத்தோண் மகளிர்க்குப் [1]பயிர்வன போல
மனைப்பூங் காவின் மருங்கிற் கவினிய
பைந்தார் முல்லை வெண்போது நெகிழ
வெறுக்கைச் செல்வம் வீசுத லாற்றாது
மறுத்துக் கண்கவிழ்ந்த மன்னர் போல
வாச மடக்கிய வாவிப் பன்மலர்
மாசி லொள்ளொளி மணிக்கண் புதைப்பப்
பெருமை பீடற நாடித் தெருமந்
தொக்க வுறுதுய ரோப்புத லுள்ளிப்
பக்கந் தீர்ந்த பரிசில ருந்தவாச்
செறுமுகச் செல்வரிற் சேராது போகி
உறுபொரு ளுள்ள துவப்ப வீசி
வெறுவது விடாஅ விழுத்தகு நெஞ்சத்
துரத்தகை யாளர் சுரத்துமுற் சீறார்
எல்லுறு பொழுதிற் செல்ல லோம்பி
மகிழ்பத மயின்றிசி னுங்கு மல்லிகை
அவிழ்தா தூதி யளிதுயி லமரக்

பி - ம். 1 பயில்வன.

கழனி யாரல் கவுளகத் தடக்கிப்
பழன மருதிற் பார்ப்புவாய் சொரிந்து
கருங்கா ணுரை நரன்றுவந் திறப்பத்
துணைபிரி மக ளிரிணைமலர் நெடுங்கண்
கட்டழன் முத்தங் காலப் பட்டுடைத்
தனிக்கா ழல்குற் பனிப்பசப் பிவர
அழல்புரை வெம்பனி யளைஇ வாடை
[1] உழல்புகொண் டுருஅ தொல்லென் றார்தரச்
செங்கேழ் வானக் கம்பலம் புதைஇ
வெங்க ணீர தாகி வேலிற்
புன்கண் மாலை போழத் தன்கட்

(உதயணன் வருந்துதல்)

டொராக் கற்பிற் றேவியை மறந்து
பேராக் கழற்காற் பெருந்தகை புலம்பிப்
பைவிரி யல்குற் பதுமா பதிவயிற்
கைவரை நில்லாக் காம வேகம்
அன்றுமுத லாகச் சென்றுமுறை நெருங்கப்
பவழமு மணியும் பாங்குபட விரீஇத்
திகழ்கதிர்ப் பசும்பொற் சித்திரச் செய்கை
வனப்பமை வையந் தனக்குமறை யாகிய
கஞ்சிகை கடுவளி யெடுப்ப மஞ்சிடை
வானர மகளிரிற் றானணி சுடர
முகைநலக் காந்தண் முகிழ்விர லேவத்
தகைமலர்ப் பொய்கைத் தண்செங் கழுநீர்
சில்லெனப் பிடித்து மெல்லென விழிந்து
நண்ண வருவோள் போலு மென்கண்
ஆற்றே னவட னஞ்சாந் திளமுலை
நோற்றே யாயினு நுகர்வல் யானெனத்
தெய்வ நல்லியாழ் கையமைத் தியற்றிய
ஐதேந் தல்கு லவந்திகை வீவும்
உறுதுணைத் தோழ னிறுதியு நினையான்
மாண்ட சூழ்ச்சி மந்திர வமைச்சர்
வேண்டுங் கொள்கைய னாகி நீண்ட

பி - ம். 1 உழல்வு.

தடம்பெருங் கண்ணி தகைபா ராட்டி
உறுவகை யண்ண றறுகண் பொருந்தலும்
கைவயிற் கொண்ட கழுநீர் நறும்போது
கொய்மலர்க் கண்ணி கொடுப்போள் போலக்
கனவிற் றோன்றக் கண்படை யின்றி
நனவிற் றோன்றிய நறுநுதற் சீறடி
மைவளர் கண்ணியை யெய்தும் வாயில்
யாதுகொ லென்றுதன் னகத்தே நினைஇ
வெங்கனன் மீமிசை வைத்த வெண்ணெயின்
நெஞ்ச முருக நிறுத்த லாற்றான்
காவினுட் காவலன் கலங்கக் கோயிலுட்

(பதுமாபதி வருந்துதல்)

பாசிழை யல்குற் பாவையும் புலம்பித்
தாயில் கன்றி னுய்நலந் தொலைஇப்
புகையினுஞ் சாந்தினுந் தகைபிதழ் மலரினும்
வாசங் கலந்த மாசி றிருமனை
ஆயஞ் சூழ வமளியு ளேறி
நறுமலர்க் காவினுட் டுறுமிய பூந்துணர்க்
கொடிக்குருக் கத்திக் கொழுந்தளிர் பிடித்து
நாண்மலர்ப் புன்னைத் தாண்முத லணைந்து
[1] பருகு வன்ன நோக்கமொடு மையாந்
துருகு முள்ளமோ டொருமரு னொடுங்கி
நின்றோன் போலவு மென்றோள் பற்றி
அகலத் தொடுக்கி நுகர்வோன் போலவும்
அரிமலர் நெடுங்க ணகவயிற் போகாப்
புரிநூன் மார்பன் புண்ணிய நறுந்தோள்
தீண்டும் வாயில் யாதுகொ லென்றுதன்
மாண்ட சூழ்ச்சி மனத்தே மறுகி
ஆசி லணியிழை தீயயல் வைத்த
மெழுகுசெய் பாவையி னுருகு நெஞ்சினள்
பள்ளி கொள்ளா ளுள்ளுபு வதிய
இருவயி னொத்த வியற்கை நோக்கமொ
டொருவயி னொத்த வுள்ள நோயர்

பி - ம். [1] பருகுவனன்ன.

மல்லற் றானை வத்தவர் மன்னனும்
*செல்வப் பாவையுஞ் செய்திற மறியார்
கொல்வது போலுங் குறிப்பிற் றாகி
எல்லி யாம மேழிருள் போலப்

(சந்திரன் அத்தமித்தல்)

பசுங்கதிர்த் திங்கள் விசும்பளந் தோடிக்
கடுங்கதிர்க் கனலி கக்குபு போகித்
தானொளி மழுங்கி [1] மேன்மலை குளிப்ப

(விடியற்காலம்)

மீன்முகம் புல்லென வா...........னு........கை
தெளிமணி விளக்கு மளிமலர்ப் பள்ளியுட்
புலப்பிற் றீரக் கலப்புறு கணவரை
முயக்கிடை விடாஅச் சுடர்க்குழை மகளிர்
தோண்முதற் புணர்ச்சி யிரியத் துட்கென
வாண்முக மழுங்க வலியற வராவும்
வைவாள் போலும் வகையிற் றாகி
வெள்வேல் விடலையொடு விளங்கிழை மாதர்க்குச்
செந்தீக் கதீஇய வெந்தழற் புண்ணினுட்
சந்தனச் சாந்திட் டன்ன [2] தண்மையொடு
வந்தது மாதோ வைக லின்றென்.

எ—கண்ணுறு கலக்கம் முற்றிற்று.

அ—பாங்கர்க்குரைத்தது.

வைகிய காலை வத்தவ ரிறைவனும்
பைவிரி யல்குற் பதுமா பதியும்
கண்ணுறக் கலந்த காம வேகம்
ஒண்ணிறச் செந்தீ யுண்ணிறைத் தடக்கிய
ஊதுலை போல வுள்ளகங் கனற்ற

(பதுமாபதியின் நிலை)

மறுத்தவற் காணுங் குறிப்புமனத் தடக்கிப்
பண்கெழு விரலிற் கண்கழூஉச் செய்து

பி - ம். 1 மேன்மலைக். 2 தன்மையொடு.

தெய்வம் பேணிப் பையென விருந்தபிற்

(செவிலி முதலியோர் பதுமாபதியிடம் கூறல்)

பாசிழைச் செவிலியும் பயந்த தாயும்
நங்கை தவ்வையும் வந்தொருங் கீண்டிப்
படிநலப் பாண்டியங் கடிதூர்ந் தூரஅய
[1] வையத் திருப்ப மருங்குநொந் ததுகொல்
தெய்வத் தானத்துத் தீண்டிய துண்டுகொல்
பாடகஞ் சுமந்த சூடுறு சேவடி
கோடுயர் மாடத்துக் கொடுமுடி யேற
வாதக் கொப்புளொடு வருத்தங் கொண்டகொல்
அளிமலர்ப் பொய்கையுட் குளிர்நீர் குடையக்
கருங்கண் சிவப்பப் பெருந்தோ ணொந்தகொல்
யாதுகொ னங்கைக் கசைவுண் டின்றெனச்
செவ்வி யறிந்து பையெனக் குறுகி
வேறுபடு வனப்பின் விளங்கிழை வையம்
ஏறின மாகி யிளமரக் காவினுட்
சேறு மோவெனச் சேயிழைக் குரைப்ப

(பதுமாபதி கூற்று)

முற்ற நோன்பு முடியு மாத்திரம்
கொற்றக் கோமான் குறிப்பின் றாயினும்
வினவ வேண்டா செலவென விரும்பி
மெல்லென் கிளவி சில்லென மிழற்றிப்
புனைமாண் வையம் பொருக்கெனத் தருகென
வினைமா ணிளையரை யேவலின் விரும்பி
நாப்புடை பெயரா மாத்திரம் விரைந்து
காப்புடை வையம் பண்ணி யாப்புடை
மாதர் வாயின் மருங்கிற் றருதலிற்

(பதுமாபதியின் செயல்)

கோதை யாயம் பரவ வேறித்
திருமலர் வீதி [2] போதந் தெதிர்மலிர்க்
காவினுட் பொலிந்த வோவக் கைவினைக்
கண்ணார் மாட நண்ணுவன ளிழிந்து

பி - ம். 1 வையகத். 2 போதமுந்தெதிர்,

தேனிமிர் படலைத் திருவமர்மார்பனைத்
தானினி தெதிர்ந்த தானத் தருகே
அன்று மவாவி நோக்கின னன்றியல்

(உதயணன் பதுமாபதியாகிய இருவர் செயல்)

இருவரு மியைந்து பருவரல் காட்டிப்
புறத்தோர் முன்னர்க் குறிப்புமறைத் தொடுக்கிக்
கருங்கண் டம்மு ளொருங்குசென் றாட
வந்தும் பெயர்ந்து மன்றைக் கொண்டும்
காலையும் பகலு மாலையும் யாமமும்
தவலருந் துன்பமொடு கவலையிற் கையற்
றைந்நாள் கழிந்த பின்றைத் தன்மேல்
இன்னா வெந்நோய் தன்னமர் தோழிக்
குரைக்கு மூக்கமொடு திருத்தகு [1] மாதர்
வான்றோய் மண்டபம் வந்தொருங் கேறித்
தேன்றோய் கோதை சில்லென வுராஅய்
இடுகிய கருங்கண் வீங்கிய கொழுங்கவுட்
குறுகிய நடுவிற் சிறுகிய மென்முலை
நீண்ட குறங்கி னிழன்மணிப் பல்கலம்
பூண்ட வாகத்துப் பூந்துகி லல்குல்
அயிரா பதியெனுஞ் செயிர்தீர் கூனியைத்
தடந்தோண் மாதர் கொடுங்கழுத் தசைஇ
நின்ற செவ்வியு ளொன்றா ரட்ட
வாமான் றிண்டேர் வத்தவர் பெருமகன்
கோமாட் கோடிய [2] குறிப்பின னாகித்
திகழ்தரு மதியிற் றிருமெய் தழீஇ
வெள்ளைச் சாந்தின் வள்ளி யெழுதிய
வயந்தக குமரன் வரைபுரை யகலத்
தசைந்த [3] தோள னாகி யொருகையுட்
டாரகம் புதைத்த தண்மலர் நறும்பைந்
தூழறிந் துருட்டா வொருசிறை நின்றுழிப்
பந்தவன் செங்கை [4] பயில்வது நோக்கி

(பதுமாபதி அயிராபதியை வினவல்)

அந்தண வுருவொடு வந்தவ னின்றோன்

பி - ம். 1 மாதரை. 2 குவியின. 3 தோழ. 4 பயிர்வது.

யார்கொ லவனை யறிதி யோவெனப்
பாவை வினவப் பணிந்தவ ளுரைக்கும்

(அயிராபதியின் விடை)

அடிகள் போக யானு மொருநாள்
ஓடியாப் பேரன் புள்ளத் தூர்தர
ஆண முடைத்தாக் கேட்டனெ னவனை
மாணக னென்போன் மற்றிந் நாடு
காண லுறலொடு காதலின் வந்தோன்
மறையோம் பாளன் மதித்தன னாகித்
தானுந் தோழருந் தான நசைஇ
நின்றனர் போகா ரென்றவட் குரைப்பப்

(பதுமாபதி அயிராபதியிடம் கூறல்)

பல்வகை மரபிற் பந்துபுனைந் துருட்டுதல்
வல்லவன் மற்றவன் கைவயிற் கொண்டது
புறத்தோ ரறியாக் குறிப்பி னுணர்த்தி
நமக்கு வேண்டென நலத்தகை கூறக்

(அயிராபதி உதயணனிடம் குறிப்பித்தல்)

கண்ணினுங் கையினுங் கண்ணிய துணர்த்திப்
பெருந்தகை யண்ண றிருந்துமுக நோக்கி
நின்கைக் கொண்ட பூம்பந் தென்கை
ஆய்வளைத் தோளிக் கீக்க வென்ன
அங்கை யெற்றிச் செங்கணிற் காட்டிய

(உதயணன் செயல்)

கூன்மகள் குறிப்புத் தான்மனத் தடக்கித்
தன்வயிற் றாழ்ந்த தைய னிலைமை
இன்னுயிர்த் தோழர்க் கிசைத்தல் வேண்டி

(உதயணன் கூற்று)

மந்திரச் சூழ்ச்சியுள் வெந்திறல் வீரன்
வள்ளிதழ்க் கோதை வாசவ தத்தையை
உள்வழி யுணரா துழலுமென் னெஞ்சினைப்
பல்லிதழ்க் கோதைப் பதுமா பதியெனும்
மெல்லியற் கோமகண் மெல்லென வாங்கித்

தன்பால் வைத்துத் தானுந் தன்னுடைத்
திண்பா னெஞ்சினைத் திரிதலோன் றின்றி
என்னுழை நிறீஇத் திண்ணிதிற் [1] கலந்த
காம வேட்கைய டாமெனக் கூற

(இசைச்சன் மறுத்தல்)

ஈங்கிது கேட்கென விசைச்ச னுரைக்கும்
மன்னிய விழுச்சீர் மகதத்து மகளிர்
நன்னிறை யுடையர் நாடுங் காலை
மன்னவ னணையு மன்ன தொன்றெனுக்
கன்னி தானுங் கடிவரை நெஞ்சினள்
வேட்டுழி வேட்கை யோட்டா வொழுக்கினள்
அற்றன் றுயிற் கொற்றங் குன்றித்
தொடிகெழு [2] தோளி சுடுதீப் பட்டெனப்
[3] படிவ நெஞ்சமொடு பார்ப்பன வேடம்
கொண்டான் மற்றவன் கண்டோர் விழையும்
வத்தவர் கோமா னென்பதை யறிவோர்
[4] உய்த்தவட் குரைப்ப வுணர்ந்தன ளாகிப்
பெறுதற் கரிய பெருமக னிந்நகர்
குறுக வந்தனன் கூறுதல் குணமென
[5] நெஞ்சுநிறை விட்டன ளாகு மன்றெனின்
ஏன மாந்த ரொப்ப மற்றிவர்
தான மேற்ற தகாஅ தென்றுதன்
நுண்மதி நாட்டத்து நோக்கின ளாமது
திண்மதித் தன்றெனத் திரிந்தவன் மறுப்ப

(மற்றைத் தோழரும் மறுத்துக் கூறல்)

ஒருப்பா டெய்தி யுற்றவ ரெல்லாம்
குறிப்பின் வாரா நோக்கெனக் குருசிற்கு
மறுத்த வாயிலொடு வலிப்பன ராக

(உதயணன் கூற்று)

உயிரோன் றாகி யுள்ளங் கலந்தவள்
செயிரின் றாகிய செங்கடை நோக்கம்

2/006

பி - ம். 1 கலந்தாங்கரும. 2 தோழி. 3 படிவ. 4 உய்த்தவற். 5 நெஞ்சிறை.

அணங்கெனக் காயிற் றவட்குமென் னோக்கம்
அத்தொழி லீர்த்தென வெய்த்தன னென்ன
உரைப்பத் தேறு வுயிர்த்துணைத் தோழரைத்
திருச்சேர் மார்பன் றேற்றுதல் வேண்டி
மலரினு மரும்பினுந் தளிரினும் வனைந்த
சந்தக் [1] கண்ணிதன் சிந்தை யறியப்
பூக்குழை மாதர் நோக்கிடை நோக்கிப்
படுகாற் பொய்கைப் பக்க நிவந்த
நறுமலர்ப் பொதும்பர் நாற்றுவனம் போகி
மறைந்தன மிருந்த காலைமற் றவளென்
கண்ணி கொள்ளிற் கலக்கு முள்ளம்
திண்ணி தாகுத றெளிமி னீரென
மன்னவ னுரைத்தனன் மற்றவர்க் கெடுத்தென்.

அ—பாங்கர்க்குரைத்தது முற்றிற்று.

கூ—கண்ணி தடுமாறியது.

மன்னவன் கூற மற்றது நன்றென

(தோழர் கண்ணி கட்டிவைத்தல்)

இன்னுயிர்த் தோழ ரியைந்தனர் போகித்
தண்ணறும் பினமலர் தகைபெரி துடைய
ஒண்ணிறத் தளிரோ டூழ்பட விரீஇக்
கண்விழவு தரூஉங் கண்ணி கட்டி
அன்ன மென்னடை யரிவை காணப்
புன்னையு ஞாழலு மகிழும் பொருந்திய
துன்னரும் பொதும்பிற் றெருத்திடைத் துளங்கத்
தளிர்தரு கண்ணி தம்மு ளறிய
ஒளிபெற வைத்தவ ரொளித்த பின்னர்

(உதயணன் தான் சித்திரித்த வாழைக்குருத்தையும் கட்டிய கண்ணியையும் வைத்தல்)

வளங்கெழு வாழை யிளஞ்சுருள் வாங்கித்
தாமரைப் பொய்கையுந் தண்பூங் கேணியும்

பி - ம். [1] கண்ணிதஞ்.

காமன் கோட்டமுங் கடிநகர் விழவும்
மாமலர்க் கோதை மடமொழி யூரும்
வையக் கஞ்சிகை வளிமுகந் தெடுக்கவத்
தெய்வப் பாவையைத் தேனிமிர் புன்னைத்
தாண்முதல் பொருந்தித் தானவட் கண்டதூம்
காமர் நெடுங்கண் கலந்த காமமும்
இன்னவை பிறவுந் தன்முத லாக
உள்ளம் பிணிப்ப வுகிரிற் [1] பொறித்து
வள்ளிதழ்க் கண்ணி வளம்பெறச் சூட
அரும்பினும் [2] போதினும் பெருந்தண் மலரினும்
முறியினு மிலையினுஞ் செறியக் கட்டி
ஒருங்குபுறம் புதைஇ யுதயண குமரனும்
திருந்திழைத் தோளி விரும்பு நோக்கச்
சிதர்சிறை வண்டின் செவ்வழி [3] புணர்ந்த
ததரிதழ் ஞாழற் றூழ்சினைத் தூக்கிப்
பைந்தாட் பொருந்திச் செஞ்சாந் துதிரத்
திருமலி யகலஞ் சேர முயங்கிப்
பொருமுர ணண்ணலும் போந்த பொழுதின்

(பதுமாபதியின் செயல்)

ஆடுகொம் பன்ன வம்மென் மருங்குற்
பாடகச் சீறடிப் பல்வளை மகளிரைப்
பக்க நீக்கிப் பைந்தொடிக் கோமாள்
நற்பூம் பொய்கை புக்குவிளை யாடும்
உள்ள மூர்தர வொழிநிலத் தோங்கிக்
[4] கொடுக்குஞ் சீர்க்கமு மடுத்தூழ் வளைஇய
முத்த மாலையும் வித்தக மாகிய
உளிப்பெருங் கம்மமு முகத்துமுத லுறீஇத்
திண்டூட் சதுரங் கொண்ட வெல்லையுட்
சியமு மேறுந் திருவும் பொய்கையும்
சேயிதழ் மலருங் காம வல்லியும்
மேயினர் விழைய மேதகப் புணர்ந்த
கோலக் கோயுட் கொண்டுநிறை யமைத்த
சூடமை சாந்து மீடறிந்து புனைந்த

பி - ம். 1 பொலிந்து. 2 பொதியினும். 3 புணர்ந்த. 4 கொடிக்குஞ்.

மதங்கமழ் நறுமலர்ச் சதங்கைத் தாமமும்
சாலக் கொள்கெனத் தன்வயிற் றிரியாக்
கோலக் கூன்மகட் கறியக் கூறிச்
செவிலித் தாயுந் தவ்வையு மாயமும்
அகலப் போகிய வமைய நோக்கி
அன்னம் போல மென்மெல வொதுங்கி
நன்முலைத் தீம்பா றம்மனை கொடுப்ப
ஒருங்குண் டாடிய கருங்கண் மதிமுகத்
தந்த ணுட்டி யாப்பியா யினியெனும்
மந்திரத் தோழியொடு மணங்கமழ் காவின்
அணித்தழை மகளி ரருங்கடிக் கமைந்த
மணிச்சுதைப் படுகான் மருங்கணி பெற்ற
அளப்பருங் குட்டத் தாழ்ந்த பொய்கைத்
தாட்கொ ளெல்லையுள் வாட்கண் சிவப்பக்
குளித்துங் குடைந்துந் திளைத்து விளையாடிக்
கூட்டமை நறும்புகை யூட்டமைத் தியற்றிக்
கண்ணெழிற் கலிங்கந் திண்ணென வசைத்துப்
பார மாகி நீரசைந் தொசிந்த
காரிருங் கூந்த னீரறப் புலர்த்தி
ஏற்ப முடித்துப் பூப்பிறி தணியாள்
[1] முத்தப் பேரணி முழுக்கல மொழித்துச்
சிப்பப் பூணுஞ் செம்பொற் கடிப்பும்
ஏக வல்லியு மேற்பன வணிந்து
தாமரை யெதிர்போது வாங்கி மற்றுத்தன்
காமர் செவ்வியிற் காய்நலம் பெற்ற
நாம மோதிரந் தாண்முதற் செறித்துப்
புனைநறுஞ் சாந்தமுந் துணைமலர்ப் பிணையலும்
மனநிறை கலக்கிய கனல்புரை நோக்கத்துப்
பொன்வரை மார்ப னென்னோ யகலக்
கொள்ளி னன்றென வள்ளிதழ்க் கோதை
மன்னவன் வைத்த சின்மென் போதுடன்
நறுமலர் கமழ்சினை செறியச் சேர்த்தி
நெடுந்தோட் செல்ல றீரச் சிறந்தவன்

பி - ம், 1 முற்றப்.

குறுந்தா ரகவயிற் கூடுபு முயங்கிக்
குவிமுலைச் சாந்த நவிர்முதற் பொறித்தே
இழுமென் காவின தியல்புஞ் செல்வமும்
கொழுமலர்த் தடங்கணிற் குலாஅய் நோக்க
நண்ணியோர் முன்னர்க் கண்ணியது மறைத்து
வண்ண முகிழு மலருந் தளிரும்
நண்ணி யீன்ற நமக்கெனக் கரையா
அரும்பெறற் றோழியு மகன்ற செவ்வியுள
விரும்புவன ளாகி விண்ணவர் மருள
வத்தவர் கோமான் வித்தகம் புனைந்த
இலைவினைக் கம்மத்துப் பலவினை கண்டே
தன்முத லாகலிற் சின்னகை முறுவலொடு
பொற்பூண் முலைமிசை யப்புபு தடாஅக்
கண்ணி கொண்டுதன் சென்னி சேர்த்தி
ஒருங்குகலந் தனள்போற் றிருந்தொளி திகழ்ந்து
பசப்புமீ தடர்ந்து மிகப்பொலிந் திலங்கத்

(யாப்பியாயினி ஐயுற்று வினாதல்)

தன்னமர் தோழியும் பின்னமர்ந் தெய்தி
நீயார் நங்கை நின்னை போலுமெம்
சேயான் றங்கை செல்வப் பாவை
மாயோ டன்னை மலர்த்தகைக் காவினுள்
[1] இன்னினிக் கெடுத்தே னன்னவள் கூறிய
துன்னருந் தோட்டத்திற் றுளங்குவன ளாகி
வேறுபட் டனளென விம்முவன ளிறைஞ்சிக்
கூறுது நாணிய குறிப்புநனி நோக்கி
நின்கட் கிடந்த நீரணி யேஎர்
என்கண் கவற்றிற் றென்றலோ டியலித்

(உருமண்ணுவா மற்றைத் தோழர்க்குக் கூறல்)

தன்னகர் புக்க பின்னர்த் தோழரொடு
மன்ன குமரனும் வந்தவட் குறுகத்
தண்பூங் கண்ணி கொண்டதன் றண்முதல்
ஒண்பூஞ் சாந்தி னுண்பொறி யொற்றிப்
போயினள் புரவலன் பூந்தார் [2] மார்பிற்

பி - ம். 1 இன்னெனிக். 2 மார்பற்.

காகிய பால னிவனென் றறிந்தே
கூறிய கிளவிக் கொத்த தின்றென
உறுபுகழ் நண்பி னுருமண் ணுவாவவர்க்
கறியக் கூற வங்கை மலர்த்தா
வியந்த மனத்த ராகி நிகழ்ந்ததற்
கியாப்புறு கரும மாராய்ந் திருந்துழி

(பதுமாபதிவைத்த பிணையல் முதலியவற்றை வயந்தகன் எடுத்து வந்து கொடுத்தல்)

நீப்பருங் காதல னிறைந்துட னுடல்
பண்புடைத் தென்றத் தண்டலை யணிந்த
காவி னத்த மேவின னாகித்
தேர்வனன் றிரிவுழி வார்தளிர் பொதுளிய
அருகுசிறை மருங்கி னொருமகள் வைத்த
புதுமலர்ப் பிணையலும் புனைநறுஞ் சாந்தமும்
கதிர்மணி யாழியுங் கண்டன னாகி
வலிகெழு மொய்ம்பின் வயந்தக குமரன்
ஒலிகெழு தானை யுதயணற் குய்ப்ப

(உதயணன் அவற்றை அணிந்துகொள்ளுதல்)

அரும்பெறற் சூழ்ச்சி யவனையும் [1] பின்னிணைப்
பெருந்திற லவரையும் பெற்றோன் போல
அன்புபுரி பாவை யாடிய பொய்கையுள்
நம்புபுரி மன்னனு நயந்தன னாடி
உடையு மடிசிலு முருமண் ணுவாவிற்குக்
கடனு வைத்தலிற் கைபுனைந் தியற்றி
அகன்மடி யவன்றா னமர்ந்து கொடுப்ப
வாங்கின னுடுத்துப் பூந்தண் சாந்தம்
எழுவுறழ் தோளு மகலமு மெழுதிப்
புனையிருங் குஞ்சித் தோட்டுக் கிடையே
துணைமலர்ப் பிணைய றொன்றச் [2] சூடிச்
சுடர்மணி யாழி படைபயின் றுபலித்த
செறிவிர லங்கையின் மறைவுகொள வைத்துக்
கழுநீர் நறும்போ துளர்த்துபு பிடித்து
மறங்கெழு வேந்தனு மம்மர் தீரப்

பி - ம். 1 பின்னிணைப், 2 சூட்டுச்.

போந்த பொழுதி னேந்துநிலை மாடத்துப்

(பதுமாபதி உதயணனைக்கண்டு தன்னிடம் செல்லல்)

பக்க நின்ற பொற்பூங் கோதையும்
கண்ணுற நோக்கிச் சின்னகை முகத்தினள்
கண்ணிற் கூட்டமு மன்றி நம்முட்
கண்ணிய மாயினங் கவல லென்றுதன்
நெஞ்சி னகத்தே யஞ்சில மிழற்றிக்
குன்றாக் கோயில் சென்றவள் சேர்ந்தபிற்

(உதயணன் செயல்)

றனக்கவ னுரிமை பூண்டமை தமர்களைச்
சினப்போர் மதலை செவ்வன் றேற்றிப்
பள்ளி கொண்ட நள்ளிருள் யாமத்துப்
போரடு தறுகண் பொருந்தலும் பொருக்கென

(உதயணன் கனாக் காண்டல்)

நீருடை வரைப்பி னெடுமொழி நிறீஇய
பிரியாப் பெருக்கத்துப் பிரச்சோ தனன்மகள்
அரியார் தடங்க ணதிநா கரிகி
மணியிருங் கூந்தன் மாசுகண் புதைப்பப்
பிணியொடு பின்னி யணிபெறத் தாழ்ந்து
புல்லெனக் கிடந்த புறத்தள் [1] பொள்ளென
நனவிற் போலக் காதலன் முகத்தே
கனவிற் றோன்றக் காளையும் விரும்பி
மாசில் கற்பின் வாசவ தத்தாய்
வன்க ணாளனேன் புண்கண் டீர
வந்தனை யோவென வாய்திறந் தரற்றப்
பைந்தளிர்க் கோதை பையென மிழற்றி
ஏதில னன்னாட் டெற்றுறந் [2] திறந்தனை
காதலர் போலுங் கட்டுரை யொழிகெனக்
[3] குறுகா ளகறூறு மறுகுபு மயங்கி
நிற்பெயர்ப் யாள னிப்பதி யுளனெனக்
கற்பயில் பழுவங் கடந்தியான் வந்தனென்
வெகுள னீயெனத் தவளையங் கிண்கிணிச்

பி - ம். 1 பொழிலென. 2 திறந்தும். 3 வைகுறு நாடொறு.

சேவடி சேர்ந்து செறியப் பற்றி
[1] வென்றடு குருசில் வீழ்ந்தன னிரப்ப
மதுநாறு தெரியன் மகதவன் றங்கை
பதுமா பதிவயிற் பசைந்தவள் வைத்த
கோதையுஞ் சாந்துங் கொண்டணிந் தனையென
மாதர்த் தேவி மறுத்து நீங்கத்
தண்மலர்ப் படலைத் தருசகன் றங்கை
பன்மலர்க் கோதைப் பதுமா பதியெனும்
பேருடை மாத ருளண்மற் றென்பது
நேரிழை யரிவை நின்வாய்க் கேட்டனென்
இன்னவும் பிறவுங் கூறி மற்றென்
நன்னர் நெஞ்ச [2] நாடுவை நீயெனப்
பின்னரு மிக்குப் பெருமக னிரப்ப
மடங்கெழு மாதர் மறைந்தன ணீங்கக்
கடுங்கதிர்க் கனலி கால்சீத் தெழுதர
விடிந்தது மாதோ வியலிருள் விரைந்தென்.

௯—கண்ணி தடுமாறியது முற்றிற்று.

௧௦—புணர்வு வலித்தது.

(உதயணன் செயல்)

விடிந்திரு ணீங்கலும் வடிந்த மான்றேர்
உதையண குமரன் புதையிருட் கண்ட
கனவின் விழுப்ப மனமொன் றாகிய
தோழர்க் குரைப்ப வாழ்கென வாழ்த்தி

(தோழர் கூறுதல்)

முற்றிழை யரிவை செற்றங் கொண்டனள்
மற்றிவள் வைத்த மாலையுஞ் சாந்தமும்
அணிந்ததை பொல்லா தருளினை யினியிவட்
கணிந்த காமங் கைவிடல் பொருளென
உயிர்த்துணைத் தோழ ருரைப்பவும் விடாஅன்

பி-ம். 1 யென்ற குருசில். 2 நவையநீ.

(உதயணன் செயல்)

செயிர்த்தொழி லியானைச் செம்ம றெளியான்
ஏற்ற பொழுதே யின்பத் தேவியொடு
வேற்றோன் போல விழைவினை யகற்றித்
தற்கா முற்ற தன்னமர் காதற்
பொற்பூண் மாதரைப் பொருந்த வலிப்ப

(மந்திரிகள் உடன்படல்)

வாமான் றானை வத்தவ னிவனெனக்
[1] கோமாற் குணர்த்திக் கூட்டிய வந்தேம்
ஒருவயி னோக்கி யிருவரு மியைதலின்
ஏயர் பெருங்குடிக் காகுபெய ருண்டென
ஊழ்வினை வலிப்போ டுவந்தன ராகிச்

(உதயணன் துறை இரத்தல்)

சூழ்வினை யாளர்க்குத் தோன்றல் சொல்லும்
[2] ஆருயி ரன்னவென் னற்புவார் கொளீஇக்
காரிகை மத்தினென் கடுவலி கடையும்
வார்வளைத் தோளி வந்தனள் புகுதரு
மாடம் புக்கிருந் தோடுகய லன்ன
பெருங்கண் கோட்டி விரும்புவன னோக்கி
நாணொடு நிற்கு நனிநா கரிகம்
காணலெ னாயிற் கலங்குமென் னுயிரென
உரப்போர் வென்றி யுதயண குமரன்
இரப்போன் போல வினியோர்க் குறைகொளக்

(தோழர் கருதுதலும் சொல்லுதலும்)

குன்றுபல வோங்கிய குளிர்நீர் வரைப்பில்
நன்றுணர் மாந்தர் நாளைக் காலை
இரவல ருருவொடு புரவலற் போக்கி
மாற்றோ ருட்கும் வேற்றுநாட் டகவயிற்
றாழு முன்ன ராகி மற்றவற்
கேம நன்னெறி யீத லாற்றார்
காமங் கன்றிய காவல் வேந்தனைத்
தம்மிற் றீர்த்து வெம்முரண் வென்றி

பி-ம். 1 கோமாற்கோக்கிக். 2 ஆகுயிரன்ன.

மகதவன் றங்கை மணிப்பூண் வனமுலை
நுகர விட்டனர் நுண்ணறி விலரெனின்
ஏத மதனு ளிகழ்பவை யிவையென
நீதியிற் காட்ட நெடுந்தகை [1] யண்ணல்
வேண்டா மற்றிது மாண்டகைத் தன்றென
மற்றவள் புகுதரு மாடம் புகினே
குற்றம் படுவ கூறக் கேண்மதி
காவ லாளர் கடுகுபு வந்தகத்
தாராய்ந் தெதிர்ப்ப ரருநவை யுறுது
போரார் குருசில் போதா வுண்டெனின்
உருவ மாதர் பெருநலம் பெறுதி
நன்று மெய்தும் வாயி லவருணை
என்றே யாயினு [2] மிரவல னென்னார்
வேண்டா வதுவென விதியிற் காட்டி
மாண்ட தோழர் மன்னவன் றன்னை
மறுத்த வாயிலொடு [3] வலிப்பனர் கூற
நிறுக்க லாற்றா நெஞ்சின னாகி
வத்தவர் பெருமக னுத்தர நாடி

(உதயணனது விடை)

அடுமுர ணீங்கி யறுபது கழிந்தோர்
கடுவெயில் வந்த காவ லாளர்கண்
மருள்படு வல்லறை மருங்கணி பெற்ற
இருள்படு மாதவி னெற்காண் குறுதல்
அரிய தவர்க்கெனத் தெரியக் காட்டி
வெற்ற வேலான் மற்றுங் கூறினன்

(பதுமாபதியின் சிறப்பு)

தனக்குநிக ரின்றித் தான்மேம் பட்ட
வனப்பின் மேலும் வனப்புடைத் தாகிக்
கலத்தொடு கவினிக் கண்கவர் வுறாஉம்
நலத்தகு தேற னுணு டோறும்
தலைப்பெரும் புயலாத் தனக்குநகை யுடையதைக்
குலனுஞ் செல்வமு நலனு நாணும்

பி - ம். 1 யண்ணலை. 2 மிகவல. 3 வலிப்பினர்.

பயிர்ப்பு முட்கு மியற்கை யேரும்
மடனு மன்பு மாசில் சூழ்ச்சியும்
இடனுடை யறிவு மென்றிவை பிறவும்
ஒல்காப் பெரும்புகழ்ச் செல்வ முடைய*
* * * *

---

* * * *
* * * *
* * * *.

கஉ—அமாத்தியர் ஒடுங்கியது.

* * * *

.............................வணி தோங்கி
ஆரணங் காகிய வகல்விசும் புகக்கும்
தோரண வாயி றுன்னின னாகி
அருமொழி யுணரும் பெருமொழி யாளனைத்
தாக்கருந் தானைத் தருசக குமரன்
வேட்கும் விச்சை யாதென வினவப்
....

(வாயிலோன் விடை)

பயங்தோன் படைத்த படைப்பரும் வெறுக்கை
இருந்துழி [1] யிசையா னிகந்தயர்த் தொழிந்தனன்
அன்னவை யறிந ருளரெனி னவர்கட்
கின்னுயி ராயினு மீவ னவனென
மன்னவன் மனத்ததை யெல்லா மதித்து
நன்மூ தாளன் பன்னினன் மொழிய

(உதயணன் கூறல்)

[2] வாரி மருங்கற வற்றினு மகவயின்
நீர்வளஞ் சுருங்கா நெற்றித் தாரைக்

---

* இதன் பிற்பகுதியும் கக - ஆவதும், கஉ - ஆவதன் முற்பகுதியும் பிரதியிற் காணப்படவில்லை.

பி - ம். 1 யியா. 2 மாரி.

கூவலும் பொய்கையுங் கோயில் வட்டத்
தெவ்வழி [1] வேண்டினு மவ்வழிக் காட்டும்
ஞான வல்லியத் தரும்பொரு ளுனித்தனென்
ஏனை நூற்கு மேதில னல்லேன்
[2] காரந்துழி யறிய வருங்கல வெறுக்கை
வைத்துழிக் காட்டும் வாய்மொழி விச்சை
கற்றுக்கை போகிக் காணவும் பட்டது
கொற்றவ னிவற்றுக் குறையோன் றுடையது
காணவு மழையுங் காணு னாயினும்
காவ லாளனைக் கட்பட லுறுவேன்
காட்டுதல் குறையெனக் கேட்டவன் விரும்பி
நல்லவை நாப்பட் செல்வனைச் சேர்ந்தவன்
வல்லவை யெல்லாம் வலிதிற் கூறக்

(உதயணன் தருசகனைக் காணல்)

கற்றோர்க் காண்ட லாகுங் காவலிற்
பெற்ற பயனென வெற்ற வேந்தனும்
காண்பது விரும்பி மாண்பொடு புணர்ந்த
பேரத் தாணி பிரித்த பின்றை
நேரத் தாணி நிறைமையிற் காட்டலிற்
பகையறு குருசிலைப் பண்டுபயின் றன்ன
உவகை யுள்ளமொ டொழுக்க மருது
கண்ணினுங் கையினு மன்றி நாவின்
இன்னுழி யிருக்கென விருந்த பின்றைக்
கற்றவை யெல்லாந் தெற்றென வினாஅய்த்
தானே கேட்டு வியந்துதலை துளக்கி
ஆணுக் கட்டுரை கழிந்தபின் மேனாட்
டள்ளா வென்றித் தம்பிறை வைத்த
விள்ளா விழுப்பொரு ளுள்வழி யுணரா
மன்னவன் மற்றிது நின்னி னெய்துவேன்
கற்றறி விச்சையிற் காட்டுதல் குறையென

(தருசகனுக்கு உதயணன் நீதியைக் காட்டல்)

உற்றன னுரைப்ப வுள்வழித் தெரிந்து

பி - ம். [1] வேண்டு. [2] கருந்துழி.

தான்வைத் தனன்போற் காட்டலிற் றருசகன்
ஆனாக் காதலொ டாருயி ரன்ன
தோழ னாகித் தோன்று தோற்றும்
ஞான நவின்ற நல்லோ னிவனென
[1] எனைத்திவன் வேண்டினு மீவ னென்றுதன்
கணக்குவினை யாளரொடு கரண மொற்றி
அகத்தே யுறைகென வமைத்த பின்னர்

(உதயணன் நீரூற்றுள்ள இடத்தைக் காட்டல்)

எப்பான் மருங்கினு மப்பா னாடி
அகத்துநீ ருடைய வதனது மாட்சி
மிகுத்தநூல் வகையின் மேவரக் காட்டக்
கன்னியங் கடிநகர் காணவா வுடைய
இளமரக் காவினுள் வளமைத் தாய
நீர்நல னுணர்ந்து சீர்நலக் குருசிற்
கெழுகோ லெல்லையு ளெழுமிது நீர்மற்
றன்றியு மதனது நன்றி நாடின்
நாவிற்கு மினிதாய்த் தீதற வெறியும்
தண்மையு நுண்மையுந் தமக்கிணை யாவன
தெண்ணீ ரெவ்வழித் தேரினு மில்லை
புகழ்வரை மார்பிற் பூந்தா ரண்ணல்
அகழும் பொழுதி னிகழ்வ கேண்மதி
இருமுழத் தெல்லையுள் வரிமுகம் பொறித்த
பொன்னிறத் தேரை போதரும் பின்னர்
மும்முழத் தெல்லையுட் டெண்ணிறங் குயின்றது
தோற்ற மினிதாய் நாற்ற மின்னாப்
பருமண லுண்டது பண்ணுநர் வீழ
உட்கா ழீன்ற வொருகோ லரையின்
எட்பூ நிறத்தொடு கட்கா முறுத்தும்
விளங்கறல் வெள்ளியின் வீசுறு மென்றதன்
அகம்புக் கனன் [2] போ லகன்ற ஞானத்தின்
உண்ணெறிக் கருத்தி [3] னண்ணிய தாகிய
மண்ணின் சுவையு மின்னதென் றெழியா

பி - ம். 1 எனைத்திவர். 2 போனவின்ற. 3 னன்னிலத்தாதி.

(தருசகன்செயல்)

துரைப்பக் கேட்டே யோங்கிய பெரும்புகழ்த்
திருப்பே ருலகம் பெற்றோன் போல
அகழ்வினை யாளரை யவ்வயிற் றரீஇ
இகழ்வி லத்தொழி லிறைவ னேவப்

(உருமண்ணுவா முதலியோர்செயல்)

பெருமண் வேந்தனைப் பிழைப்பின் றோம்புதற்
குருமண் ணுவாவு முள்ளகத் தொடுங்க
வாய்மொழி யிசைச்சனும் வயந்தக குமரனும்
தேமொழி மாதர் தாய்முதற் கோயிலுட்
டரும நூலுந் தந்துரை கதையும்
பெருமுது கிளவியொடு பிறவும் பயிற்றி
நங்கை விழையு நாளணி கலங்கள்
கொங்கணி மலரிற் கூட்டுவன ருய்த்துச்
சென்றுவந் தாடல் செய்வது வலிப்பப்
பிறவுறு தொழிலொடு மறவோ ரெல்லாம்
ஆய்புக ழரசனை யற்றப் படாமற்
காவல்புரிந் தனராற் கடிமனைக் கரந்தென்.

௧௨—அமாத்தியர் ஒடுங்கியது முற்றிற்று.

௧௩— கோயில் ஒடுங்கியது.

கரந்த வுருவொடு காவல் புரிந்தவர்
ஒடுங்குதல் வலித்துடன் போகிய பின்றை
முனைவெந் துப்பின் மன்னனு முன்போல்
புனைவகை மாடம் புக்குமறைந் திருந்தலிற்

(பதுமாபதியின் செயல்)

றண்டடு திண்டோட் குருசிலைத் தன்னொடு
கொண்டுட் போகுங் குறிப்பின ளாகித்
தீது தீண்டாத் தெரிவொடு புகுதரும்
வாயி ளுடி வைய நீக்கிப்
பல்வகைத் தான நல்குக மின்றென

எல்விற் போதர வியையு மாதலிற்
சிலத மாக்களொடு சிவிகை வருகென

(பதுமாபதி மன்மதன் கோயிலை யடைந்து உதயணனைக் காண்டல்)

அலர்தலை யைம்பா லணியிழை யேறிப்
போந்தன ளாகிப் பூந்தண் கானத்துள்
எழுதுவினை மாடத்து முழுமுத லிழிந்து
தாமகத் திருக்கு மாமணிப் பேரறை
வாயில் சேர்வுற வையம் வைக்கென
அமைத்தன ளாகி யவ்வயி னொடுங்கிய
சினப்போ ரண்ணலொடு [1] வளப்பா டெய்தி
அப்பகல் கழிந்த பின்றை மெய்ப்பட

(பதுமாபதி தானமளித்தல்)

மாண்டரு கிளவி பூண்ட நோன்பிற்
கன்றுகடை யாதலிற் சென்றோர் யார்க்கும்
மணியு முத்தும் பவழமு மாசையும்
அணியு மாடையு மாசி லுண்டியும்
பூவு நானமும் பூசுஞ் சாந்தமும்
யாவை யாவை யவையவை மற்றவர்
வேண்டே மெனினு [2] மீண்ட வீசலின்
இந்நில வரைப்பிற் கன்னியர்க் கொத்த
ஆசி லாசிடை மாசில மாண்பின்
மந்திர நாவி னந்த ணாளரும்
அல்லோர் பிறருஞ் சொல்லுவனர் போயபிற்
கோலக் காமன் கோட்டத் தகவயின்
மாலை யாமத்து மணிவிளக் கிடீஇ
மோகத் தான முற்றிழை கழிந்தபின்

(பதுமாபதி உதயணனுடன் செல்லுதல்)

மரபறி மகளிர் பற்றினர் பாடக்
கரும மமைந்தபிற் கடிமனை புகீஇயர்
திருமதி முகத்தியைச் சேர்ந்து கைவிடாஅ
அருமதி நாட்டத் தந்தணி போந்து

பி - ம். 1 வனப்பாடெய்தி. 2 மீண்டுவ.

பட்டினிப் பாவை கட்டழ லெய்தும்
நீங்குமி னீரெனத் தான்புற நீக்கி
பஞ்சி யுண்ட வஞ்செஞ் சீறடி
ஒதுங்க விடினும் விதும்பும் வேண்டா
வாயி லுள் வைத்த வண்ணச் சிவிகை
ஏற னன்றெனக் கூறி வைத்தலின்
மணங்கமழ் மார்பன் மாடப் பேரறை
இருந்தன னுங்குப் பொருந்துபு பொருக்கெனக்
கட்டளைச் சிவிகையுட் பட்டணைப் பொலிந்த
பூம்பட மறையப் புக்கன ளொடுங்க
வண்டொடு கூம்பிய மரைமலர் போல
ஒண்டார் மார்பனை யுட்பெற் றுவகையின்
மணிவரைச் சாரன் மஞ்ஞை போல
அணிபெற வியலி யடிக்கல மார்ப்பத்
தொய்யில் வனமுலைத் தோழி மாரொடு
பையப் புக்குப் பல்வினைக் கம்மத்துச்
சுருக்குக் கஞ்சிகை விரித்தனர் மறைஇப்
பள்ளிப் பேரறைப் பாயலு ளல்லது
வள்ளிதழ்க் கோதையை வைக்கப் பெறீரென
யாப்புறக் கூறிக் காப்போர் பின்செல
வலிகெழு மொய்ம்பிற் சிலத மாக்கள்
[1] அதிர்ப்பி னுசும்ப மதிற்புறம் பணிந்த
காவும் வாவியுங் காமக் கோட்டமும்
பூவீழ் கொடியிற் பொலிவில வாக
வாழ்த்துப்பலர் கூறப் போற்றுப்பல ருரைப்ப
வழுவில் கொள்கை வான்றோய் முதுநகர்
மணியுமிழ் விளக்கின் மறுகுபல போகிக்
கொடியணி கோயில் குறுகலும் படியணி
பெருங்கடை காவலர் பெருமான் றங்கை
கருங்கடை மழைக்கட் கனங்குழைப் பாவை
முடித்த நோன்பி னெடித்தவகை யறியார்
இருளின் குற்றங் காட்டி நங்கைதன்
உரிமையுள் படுநரைக் கழறுவன ராகி

பி - ம். 1 அதிர்ப்பின் றுசும்ப.

முழுநிலைக் கதவ மகற்றிமுன் னின்று
தொழுத கையர் புகுதுகென் றேத்த
வாயில் புக்குக் கோயில் வரைப்பிற்
கன்னி மாடத்து முன்னறை வைத்தலிற்
பகலே யாயினும் பயிலா தோர்கள்
கவலை கொள்ளுங் கடிநிழற் கவினி
[1] மாடெழு மைந்தரு மூடு சென்றாடா
அணியிற் கெழீஇ யமர ராடும்
பனிமலர்க் காவின் படிமைத் தாகி
இருளொடு புணர்ந்த மருள்வரு மாட்சித்
தன்னகர் குறுகித் துன்னிய மகளிரை
அகல்க யாவிரு மழலு மெனக்கெனத்
திலக முகத்தி திருந்துபடந் திறந்து
கூன்மகள் வீச வாறு வகத்தே
தக்க வெல்லை யிருத்தலின் மிக்க
காழகி னறும்புகை யூழ்சென் றுண்ட
மணிக்காற் கட்டிலுள் வல்லோள் படுத்த
அணிப்பூஞ் சேக்கை யறைமுத லாகப்
பக்கமுந் [2] தெருவும் புக்குமுறை பிழையா
தாராய்ந் தந்தணி யமைத்ததன் பின்றைப்
பேரிசை யண்ணலும் பெருநல மாதரும்
ஆரிருள் போர்வை யாக யாவரும்
அறிதற் கரிய மறையரும் புணர்ச்சியொடு
கரப்பறை யமைத்துக் கைபுனைந் தோர்க்கும்
உரைக்க லாகா வுறுபொறிக் கூட்டத்துப்
[3] புதவணி கதவிற் பொன்னிரை மாலை
மதலை மாடத்து மறைந்தொடுங் கினரென்.

கரு—கோயில் ஒடுங்கியது முற்றிற்று.

பி - ம். 1 மாடமும. 2 திருவும் புக்கமுறை. 3 புதையணிகதவற்.

கச—நலனாராய்ச்சி.

(உதயணன் நிலை)

மதலை மாடத்து மடமொழி மாதரொ
டுதயண குமர னொடுங்கிய வுவகையன்
விண்ணுறை தேவரும் விழையும் போகத்துப்
பெண்ணுறை யுலகம் பெற்றோன் போலவும்
நோக்கருங் கதிரவ னீக்கம் பார்த்துப்
பைங்கதிர் விரிக்கும் பனிமதிக் கிழவன்
அங்கண் ஞாலத் தளவை யாகிய
பன்னாட் பக்கஞ் செல்லாது சின்னாள்
வெண்முக நிலாவொளி சுருங்க மெல்லென
உண்மகி ழுரோணியொ டொளித்தது போலவும்
[1] திகழ்மணி மார்ப னகநக ரொடுங்கப்
பொருள்புரி யமைச்சர் புறநகர் கரப்புழி
இருளறு நுண்மதித் தோழியை யெழுதெனக்

(தோழி எழுதித்தந்த அரண்மனைவடிவமுதலியவற்றைக் கண்டு உதயணன் நினைத்தல்)

கோயில் வட்டமுங் கோணப் புரிசையும்
வாயின் மாடமும் வஞ்சப் பூமியும்
இலவந் திகையு மிளமரக் காவும்
கலவம் புகலுங் கான்கெழு சோலையும்
உரிமைப் பள்ளியு மருமைக் காப்பிற்
படைக்கலக் கொட்டிலும் புடைக்கொட் டாரமும்
நடைப்பெரு வாயிலு முடைக்குறும் புழையும்
அவைமண் டபமு மாடம் பலமும்
வகைமாண் டெய்வம் வழிபடு தானமும்
குதிரைப் பந்தியு மதிர்த லானா
யானைத் தானமுந் தானைச் சேக்கையும்
எயில தகற்றமு மயில்விளை யாடும்
சுதைவெண் குன்றமும் புதையிருட் டானமும்
உடையன வெல்லா முள்வழி யுணர்ந்து

பி - ம். 1 திகழொளிமார்பன்.

தெளிதல் செல்லாத் தெவ்வ னிவனெனின்
அளியியற் செங்கோ லரசுமுதல் வவ்வலும்
எளிதெனக் கென்னு மெண்ணின னாகிப்
பெண்பாற் சூழ்ச்சியிற் பிழைப்புப் பலவெனும்
நுண்பா னூல்வழி நன்கன நாடின்
ஏத மில்லை யிதுவெனத் தேறி
மாதர் மாட்டு மகிழ்ச்சியொடு தெளிதல்
நீதி யன்றென நெஞ்சத் தடக்கிச்
செருக்கய னெடுங்கண் செவ்வி பெற்றுந்,
குரத்தகை யண்ண லுறைவது வலிப்பத்

(பதுமாபதி செவ்வி அரியளாதல்)

தவ்வை யாயினுந் தாயே யாயினும்
செவ்வி யறியார் சென்றுமெய் சாரிற்
காட்டக் காணாள் கதம்பா டேற்றி
வாட்கட் பாவை மருவற் கின்னாக்
காட்சிய ளாகிக் கருதுவ தெதுவெனின்
வீயா நண்பின் வேத மகளுழை
யாழும் பாட்டு மவைதுறை போகக்
கற்றல் வேண்டு மினியெனக் கற்பதற்
கன்புடை யருண்மொழி யடைந்தோ ருவப்ப
நன்பல பயிற்றிய நாவின ளாகி
அமிழ்தி னன்ன வறுசுவை யடிசிலும்
இவணே வருக வின்று முதலெனத்
தமர்வயி னேய தன்மைய ளாகி
மழையயா வுயிர்க்கும் வான்றோய் சென்னி
இழையணி யெழுநிலை மாடத் துயரறை

(கட்டில்)

வாள்வரி வயமான் மூரி நிமிர்வின்
நிலைக்கா லமைந்த நிழறிகழ் திருமணி
யிகற்குரால் வளைஇய கழுத்திற் கவ்விய
பவழ விழிகைப் பத்திக் கட்டத்துப்
பட்டுநிணர் விசித்த கட்டமை கட்டிலுட்
பொழுதிற் கொத்த தொழில வாகி
எழுதுவினைப் பொலிந்த விழுதுறழ் மென்மைய

2/006

முறைமையி னடுத்த குறைவில் கோலமொடு
நிரப்ப மெய்திய நேர்பூம் பொங்கணைப்
பரப்பிற் கொத்த பாய்காற் பிணைஇ
அரக்குவினைக் கம்மத் தணிநிலைத் திரள்காழ்
ஒத்த வூசி குத்துமுறை கோத்த
பவழ மாலையும் பன்மணித் தாமமும்
திகழ்கதிர் முத்தின் றெரிநலக் கோவையும்
வாய்முத றோறுந் தான்முத லணிந்த
அந்தண் மாலையு மகடுதோ றணவரப்
பைம்பொற் புளகம் பரந்துகதி ரிமைப்ப
ஐவே றுருவின் மெய்பெறப் புனைந்த
பொய்வகைப் பூவும் வையெயிற் றகல்வாய்
மகரத் தங்கண் வகைபெறப் போழ்ந்த
காம வல்லியுங் களிறும் பிடியும்
தேமொழிச் செவ்வாய்த் திருமகள் விரும்பும்
அன்ன வீணையு மரிமா னேறும்
பன்மரக் காவும் பாவையும் பந்தியும்
பறவையும் பிறவு முறநிமிர்ந் தோவா
நுண்ணவாப் பொலிந்த கண்ணவா வுறாஉம்
மீமிசைக் கட்டின் வாய்முதற் றூழ்ந்த
வண்ணப் படாஅங் கண்ணுறக் கூட்டிப்

(பாக்குவகை முதலியன)

பைங்கருங் காலிச் செங்களி யளைஇ
நன்பகற் கமைந்த வந்துவர்க் காயும்
மிருங்கண் மாலைக்குப் பெரும்பழுக் காயும்
வைகறைக் கமையக் கைபுனைந் தியற்றிய
இன்றே னளைஇய விளம்பசுங் காயும்
பைந்தளி ரடுக்கும் பலமுத லாகிய
மன்பெரு வாசமொடு நன்பல வடக்கிய
பயில்வினை யடைப்பையொடு படியகந் திருத்தி
உருவொடு புணர்ந்த வுயரணை மீமிசை
இருபுடை மருங்கினு மெழில்பட விரீஇ
ஏமச் செவ்வி யேஎர் நுகரும்
யாமத் தெல்லையுண் மாமறைப் பேரறை

உலாவு முற்றத் தூழ்சென் றாட
நிலாவிரி கதிர்மணி நின்று விளக்கலும்
பள்ளி தன்னுள் வள்ளிதழ்க் கோதையொடு
மன்னய முரைத்து நன்னலங் கவர்ந்து

(சித்திரத்தைக் கண்டு உதயணன் வியத்தல்)

வித்தக ரெழுதிய சித்திரக் கொடியின்
மொய்த்தலர் தாரோன் வைத்துநனி நோக்கிக்
கொடியின் வகையுங் [1] கொடுந்தாண் மறியும்
வடிவமை பார்வை வருத்த வண்ணமும்*
திருத்தகை யண்ணல் விரித்துநன் குணர்தலின்
மெய்பெறு விசேடம் வியந்தன னிருப்பக்

(பதுமாபதி ஊடல்)

கைவளர் மாதர் கனன்றுகனன் றெழுதரும்
காம வேகந் தான்மிகப் பெருகப்
புலவி நெஞ்சமொடு கலவியுட் கலங்கிப்
புல்லுகை நெகிழப் புணர்வுநனி வேண்டாள்
மல்லிகைக் கோதை மறித்தன ளிருந்து
சூட்டுமுகந் திருத்தி வேட்டுநறு நீரின்
மயிரு மிறகுஞ் செயிரறக் கழீஇக்
கோனெய் பூசித் தூய்மையு ணிறீஇப்
பாலுஞ் சோறும் வாலிதி னூட்டினும்
குப்பை கிளைப்பறாக் கோழி போல்வர்
மக்க ளென்று மதியோ ருரைத்ததைக்
கண்ணிற் கண்டே னென்று கைந்நெரித்
தொண்ணுதன் மாத ருருகெழு சினத்தள்
தம்மால் வந்த தாங்கரும் வெந்நோய்
தம்மை நோவ தல்லது பிறரை
என்னது நோவ லேத முடைத்தெனக்
கருங்கே ழுண்கண் கயலெனப் பிறழ்ந்து
பெருங்கயத் தாமரைப் பெற்றிய வாகத்
திருநுதல் வியர்ப்பெழுந் திருநிலத் திழிதர
நிலாவுறு திருமுக நிரந்துடன் மழுங்கிக்

பி - ம். 1 கொழுந்திரண் மறியும் வடிவமைபாவை.

* ருக

கருமயி ரிவர்ந்து காண்டகக் குலாஅய்ப்
புருவம் பலகால் புடைபுடை பெயர
முத்துற ழாலி தத்துவன தவழ்ந்து
பொன்னிறக் குரும்பை நன்னிற மழுங்கத்
தன்னிறங் கரப்பத் தவாஅ வெம்மையொடு
வீழனல் கடுப்ப வெய்துயிர்த் தலைஇக்
காதல்செய் கலங்கள் போதொடு போக்கி
அந்தண் சாந்த மாகத்துத் திமிர்ந்து
பண்புரை கிளவி பையெனத் திரியக்

(உதயணன் பதுமாபதியின் ஊடலைத் தீர்த்தல்)

கரும்பேர் கிளவி கதிர்முகை முறுவற்
பெருந்தடங் கண்ணி பிழைப்பொன் றுணரேன்
வருந்தல் வேண்டா வாழிய நங்கையென்
றிரந்தன னாகி யேற்பக் காட்டிய
[1] இலம்புடை நறுமல ரெழுதுகொடிக் கம்மத்துச்
சிலம்பிடைத் தங்கிய சேவடி யாத்தம்
காரிருங் குஞ்சி கவின்பெறத் திவள
அரவுவாய்க் கிடப்பினு மலர்கதிர்த் தண்மதிக்
குருவுக்கதிர் வெப்ப மொன்று மில்லை
சிறியோர் செய்த சிறுமையுண் டெனினும்
தரியாது விடாஅர் தாமனி பெரியோர்
என்பது சொல்லி யெழில்வரை மார்பன்
பொன்புனை பாவை புறக்குடை நீவிச்
செங்கையிற் றிருத்திப் பைந்தோ டணிந்து
கலம்பல திருத்தி நலம்பா ராட்டிச்
சாந்த மெழுகிச் சாயனெகிழ் பறிந்து
பூம்புறங் கவவப் புனைதா ரோதி
பூண்ட பூணொடு பொறையென் றுற்றேன்
தீண்டன்மின் பெருமவெனத் தீரிய வுரைத்து

(பதுமாபதி ஊடல் தீர்தல்)

மாடத் தகத்தி லாடுவினைக் காவினுட்
கொம்பர் மீமிசைக் கூகைவந் துலாஅய்

பி - ம். 1 இலம்பிடை.

வித்தகக் கைவினைச் சத்தி யேறி
உட்குத்தக வுரைத்தலுங் கட்கின் பாவை
நெஞ்சந் துட்கென நெடுவிடை நின்ற
காற்றெறி வாழையி னுற்ற நடுங்கி
அஞ்சி லோதி யாகத் தசைத்தர
அச்ச முயக்க நச்சுவனன் விரும்பி
மெல்லியன் மாதரொடு மேவன களந்து
புல்லியுந் தளைத்தும் புணர்ந்தும் பொருந்தியும்
அல்குலு மாகமு மாற்றநலம் புகழ்ந்தும்
[1] அமர ராக்கிய வமிழ்தெனக் கினியோள்
தன்முலை யெயிற்றுநீர் தானென வயின்றும்
ஒழுகா நின்ற காலை யொருநாள்

(பதுமாபதி தோழிக்குச் சொல்லல்)

இன்பப் பேரறை நன்பகற் பொருந்தி
அருமறை யறிதற் கமைந்த வார்வத்
தொருதுணைத் தோழியை யொன்றுவனள் கூவித்
திருவிற் கமைந்த தேந்தார் மார்பன்
உருவிற் கமைந்த வுணர்வுநன் குடைமை
அளத்து நாமெனத் துளக்கிலள் சூழ்ந்து
[2] பலர்புகழ் மார்பன் பயின்ற விச்சைகள்
வல்லவை யாய்கென வழிபா டாற்றி

(தோழி வினாக்களும் உதயணன் விடைகளும்.)

நல்லவை யாவென நகைக்குறிப் பூர்தர
வினவிய மகளிர்க்குச் சினவுநர்ச் சாய்த்தவன்
வேத விழுப்பொரு ளோதின ருளரெனின்
எனைத்துங் கரவேன் காட்டுவென் யானென
எமக்கவை யென்செயு மிசையொடு சிவணிய
கருவிக் [3] கரண மருவினை யோவென
நீத்தவர் வேண்டிய [4] துப்புர வல்லால்
பார்ப்பன மக்கள் பரிந்துபிற பயிற்றார்
வேள்விக் குரிய கருவி யாவும்

பி - ம். 1 மம்மராக்கிய. 2 மலர்புகழ். 3 கானமருவியயாவென. 4 துப்புரு.

வாளேர் கண்ணி வல்லேன் யானென
நல்லதொன் றுண்டெனிற் சொல்லலெங் குறையெனத்
தோளுறு துணைவிக்குத் துயரம் வந்தநாள்
[1] சூளுறு கிளவியிற் றொழுதனள் கேட்ப
இடவரை யருவியி னிம்மென விசைக்கும்
[2] குடமுழ வென்பது பயிற்றினென் யானென
அவைக்குரி விச்சை வல்ல வந்தணன்
சுவைத்தொழின் மகனென நகைத்தொழி லாடி
அந்தர மருங்கி னமர ராயினும்
மந்திர மறப்ப மனநனி கலக்கும்
பைந்தொடி பயிற்றும் பண்யாழ் வருகெனத்
தந்துகைக் கொடுக்கலுந் தண்பூங் கொடிபோல்

(பதுமாபதியின் செயல்)

எதிர்முகம் வாங்கி யெழினி மறைஇப்
பதுமா நங்கையும் பையெனப் புகுந்து
[3] கோன்மணி வீணை கொண்டிவ ணியக்கத்
தான மறிந்தி யாப்பி யாயினி
நீநனி பாடென நேரிழை யருளித்
துணைவன் முன்னதன் றுன்னலந் தோன்றக்
கணைபுணர் கண்ணி காட்டுதல் விரும்பி
ஒள்ளுறை நீக்கி யொளிபெறத் துடைத்து
வன்பிணித் திவவு வழிவயி னிறுத்த
மெல்விர னுளைவப் பல்கா லேற்றி
ஆற்று ளாகி யரும்பெறற் றோழியைக்
கோற்றேன் கிளவி குறிப்பிற் காட்டக்

(உதயணனும் யாப்பியாயினியும் உரையாடல்)

கொண்டவள் சென்று வண்டலர் தாரோய்
வீணைக் கேற்ப விசையொடு மற்றிவை
தானத் திரீஇத் தந்தீ கெமக்கெனக்
குலத்தொடும் வாராக் கோறரும் விச்சை
நலத்தகு மடவோய் நாடினை யாகின்
அலைத்தல் கற்றல் குறித்தேன் யானென

பி - ம். 1 சூழுறு. 2 குழமுழ. 3 தோண்மணி.

மற்போர் மார்பவிது கற்கல் வேண்டா
வலியி னுவது வாழ்கநின் கண்ணி
தரித்தர லின்றிய விவற்றை யிவ்விடத்
திருத்த லல்லது வேண்டலம் யாமென
அன்ன தாயி னுமெனிற் காண்கம்
பொன்னிழை மாதர் தாவெனக் கொண்டு
திண்ணிய வாகத் திவவுநிலை நிறீஇப்
பண்ணறி வுறுத்தற்குப் பையெனத் தீண்டிச்
சுவைப்பட நின்றமை யறிந்தே பொருக்கெனப்
பகைநரம் பெறிந்து மிகையுறப் படூஉம்
எள்ளற் குறிப்பினை யுள்ளகத் தடக்கிக்
கோடும் பத்தலுஞ் சேடமை போர்வையும்
மருங்குலும் புறமுந் திருந்துதுறைத் திவவும்
விசித்திரக் கம்மமு மசிப்பில னாகி
எதிர்ச்சிக் கொவ்வா முதிர்ச்சித் தாகிப்
பொத்தகத் துடையதாய்ப் புனனின் றறுத்துச்
[1] செத்த தாருச் செய்தது போலும்
இசைத்திற னின்னு தாகிய திதுவென
மனத்தி னெண்ணி மாசற நாடி
நீட்டக் கொள்ளாண் மீட்டவ ளிறைஞ்சிக்
கொண்ட வாறுமவன் கண்ட கருத்தும்
பற்றிய வுடனவ னெற்றிய வாறும்
அறியா தான்போன் மெல்ல மற்றதன்
உறுநரம் பெறீஇ யுணர்ந்த வண்ணமும்
செறிநரம் பிசைத்துச் சிதைத்த பெற்றியும்
மாழை நோக்கி மனத்தே மதித்தவன்
அகத்ததை யெல்லா முகத்தினி துணர்ந்து
புறத்தோ னன்மை திறப்படத் தெளிந்து
தாழிருங் கூந்தற் றோழியைச் சேர்ந்திவன்
யாழறி வித்தக னறிந்தரு ளென்றலின்
இன்னுஞ் சென்றவ னன்ன னுகுதல்
நன்னுத லமர்தர நாடிக் காண்கெனப்
பின்னுஞ் சேர்ந்து பெருந்தகை யெமக்கிது

பி - ம். 1 செனித்தனமாகிச்.

பண்ணுமை நிறீஇயோர் பாணிக் கீதம்
பாடல் வேண்டுமென் றுடைமைத் தோழி
மறுத்துங் குறைகொள மறத்தகை மார்பன்
என்கட் கிடந்த வெல்லா மற்றிவள்
தன்கண் மதியிற் றன்றெறிந் துணர்ந்தனள்
பெரிதிவட் கறிவெனத் தெருமந் திருந்தி
வல்லுந னல்லே னல்லோய் நானென
ஒருமனத் தன்ன வுற்றார்த் தேற்று
அருவினை யில்லெனை வறிந்தோர் கூறிய
பெருமொழி மெய்யெனப் பிரியாக் காதலொ
டின்ப மயக்க மெய்திய வெம்மாட்
டன்புதுணை யாக யாதொன் றாயினும்
மறாஅ தருளென வுறாஅன் போல

(மாலைக்காலம்)

அலங்குகதிர் மண்டில மத்தஞ் சேரப்
புலம்புமுந் துறுத்த புன்கண் மாலைக்
கருவி வானங் கால்கிளர்ந் தெடுத்த
பருவம் பொய்யாப் பைங்கொடி முல்லை
வெண்போது கலந்த தண்கண் வாடை
பிரிவருங் காதற்குக் கரியா வதுபோல்
நுண்சா லேக நுழைந்துவந் தாட

(உதயணன் பாடிக்கொண்டு யாழ் வாசித்தல்)

ஆராக் காதலிற் பேரிசை கனியக்
குரலோர்த்துத் தொடுத்த குருசி றழீஇ
இசையோர் தேய வியக்கமும் பாட்டும்
நசைவித் தாக வேண்டுதிர் நயக்கெனக்
குன்றா வனப்பிற் கோட பதியினை
அன்றுண்டு நினைத்தஃ தகன்ற பின்னர்
நலத்தகு பேரியாழ் நரம்புதொட் டறியா
இலக்கணச் செவ்விர லேற்றியு மிழித்தும்
தலைக்கட் டாழ்வு மிடைக்க ணெகிழ்ச்சியும்
கடைக்கண் முடுக்குங் கலந்த கரணமும்
மிடறு நரம்பு மிடைதெரி வின்றிப்

பறவை நிழலிற் பிறர்பழித் தியாச்
செவிச்சுவை யமிர்த மிசைத்தலின் மயங்கி

(உதயணனுடைய இசையின் சிறப்பு)

மாடக் கொடுமுடி மழலையம் புறவும்
ஆடமை பயிரு மன்னமுங் கிளியும்
பிறவு மின்னன பறவையும் பறவா
ஆடுசிற கொடுக்கி மாடஞ் [1] சோரக்
கொய்ம்மலர்க் காவிற் குறிஞ்சி முதலாப்
பன்மர மெல்லாம் பணிந்தன குரங்க
மைம்மலர்க் கண்ணியு மகிழ்ந்து [2] மெய்ம் மறப்ப

(பதுமாபதி வியத்தல் முதலியன)

ஏனோர்க் கிசைப்பி [3] னேதந் தருமென
மானேர் நோக்கி மனத்திற் கொண்டு
கண்கவர் வுறாஉங் காமனிற் பின்னைத்
தும்புரு வாகுமித் துறைமுறை பயின்றோன்
இவனிற் பின்னை நயனுணர் கேள்வி
வகையமை நறுந்தார் வத்தவர் பெருமகன்
உதையணன் வல்லனென் றுரைப்ப வவனினும்
மிகநனி வல்லனித் தகைமலி மார்பனென்
றுள்ளங் கொள்ளா வுவகைய ளாகி
ஒள்ளிழை [4] தோழியொ டுதயணற் பேணிக்
கழிபெருங் காமங் களவினிற் கழிப்பி
ஒழுகுவனண் மாதோ வுரிமையின் மறைந்தென்.

கச—நலனாராய்ச்சி முற்றிற்று.

கரு—யாழ்நலந் தெரிந்தது.

(யாப்பியாயினியின் செயல்)

மறையோம் பொழுக்கின் மதலை கேண்மதி
நிறையோம் பொழுக்கி னின்னல முணரேம்
ஒருபே ருலகம் படைத்த பெரியோன்
உருவுகரந் தொழுக வுணரா ராகக்

21006

பி-ம். 1 சோரக். 2 மெய்கறப. 3 னேமங். 4 தோளியோ.

கொன்றையம் பசுங்காய் பெருக்கியும் பயற்றின்
நன்றுவிளை நெற்றினைச் சிறுக்கியுங் குன்றா
இன்றீங் கரும்பினைச் சுருக்கியும் விண்டலைத்
துன்னரும் விசும்புற நீட்டிய நெறியும்
இன்னவை பிறவு மிசைவில வெல்லாம்
படைத்தோன் படைத்த குற்ற மிவையென
எடுத்தோத் துரையி னியம்பி யாஅங்
கியானை வணக்கு மைங்கதி யருவினை
வீணை வித்தகத் தவனினு மிக்கதன்
மாணல முணரே மடவிய னிவனென
நாணக் காட்டு நனித்தொழில் புனைந்தேம்
மாணக் காட்டுநின் மாணுக் கியரேம்
ஆயினெ மினியென வசதி யாடிய
மைதவழ் கண்ணி கைதவந் திருப்பாச்
செவ்வழி நிறீஇச் செவ்விதிற் றம்மெனச்
செதுவன் மரத்திற் சேக்கை யாதலின்
உதவா திதுவென வுதயணன் மறுப்ப
யாணர்க் கூட்டத் தியவனக் கைவினை
மாணப் புணர்ந்ததோர் மகர வீணை
தரிசகன் றங்கைக் குரித்தென வருளிய
கோல நல்லியாழ் கொணர்ந்தனள் கொடுப்பத்

(உதயணன் யாழ்நரம்பின் குற்றங்களைத் தெரிவித்தல்)

தினைப்பக வனைத்தும் பழிப்பதொன் றின்றி
வனப்புடைத் தம்மவிவ் வள்ளுயிர்ப் பேரியாழ்
தனக்கிணை யில்லா வனப்பின தாகியு
[1] நிணக்கொழுங் கோல்க ளுணக்குத லின்மையின்
உறுபுரிக் கொண்டன பிறநரம்பு கொணர்கென
மதுக்கமழ் கோதை விதுப்பொடு விரும்பிப்
புதுக்கோல் கொணர்ந்து பொருக்கென நீட்ட
நோக்கிக் கொண்டே பூக்கமழ் தாரோன்
வகையில விவையெனத் தகைவிரல் கூப்பி
அவற்றது குற்ற மறியக் கூறினை
இவற்றது குற்றமு மெம்மனந் தெளியக்

பி - ம். 1 நிணக்கொழுஞ்சாயல்.

காட்டுதல் குறையென மீட்டவ ளுரைப்ப
நன்னுதன் மடவோய் நன்றல மற்றிவை
முன்னைய போலா மூத்து........தைந்த
வாவி சா.................................ன வாயினும்
பண்ணறச் சுகிர்ந்து பன்னுத லின்மையும்
புகரற வுணங்கிப் புலவற லின்மையும்
குறும்புரிக் கொள்ளாது நெடும்புரித் தாதலும்
நிலமிசை விடுதலிற் றலைமயிர் தழீஇ
மணலகம் பொதிந்த துகளுடைத் தாதலும்
பொன்னே காணெனப் புரிமுறை நெகிழ்த்துத்
துன்னார்க் கடந்தோன் றுன்றக் காட்ட
யாழும் பாட்டும் யாவரு மறிவர்
வீழா நண்பி னிவன்போல் விரித்து
நுனித்துரை மாந்த ரில்லெனை நுவன்று
மன்றப் புகன்று [1] மாமழை நோக்கி
மறித்தும் போகி நெறித்துநீர்த் தொழுகிப்
பொன்றிரித் தன்ன நிறத்தன சென்றினி
தொலித்த லோவா நலத்தகு நுண்ணரம்
பாவன கொடுப்ப மேவனன் விரும்பிக்
கண்டே யுவந்து கொண்டதற் கியைய
ஓர்த்தன னமைத்துப் பேர்த்தனன் கொடுப்ப
வணங்குபு கொண்டு மணங்கம ழோதி
மாதர் கைவயிற் கொடுப்பக் காதல்
உள்ளங் குளிர்ப்ப வூழி னியக்கக்
கூடிய குருசில் பாடலின் மகிழ்ந்து

(உதயணன் பதுமாபதியாகிய இருவர்நிலை)

கோடுயர் மாடத்துத் தோடுயர் தீரக்
குறிவயிற் புணர்ந்து நெறிவயிற் றிரியார்
வாயினுஞ் செவியினுங் கண்ணினு மூக்கினும்
மேதகு மெய்யினு மோத லின்றி
உண்டுங் கேட்டுங் கண்டு நாறியும்
உற்று மற்றிவை யற்ற மின்றி
ஐம்புல வாயிலுந் தம்புலம் பெருக

பி - ம். 1 மாழை நோக்கி.

வைக ரூறு மெய்வகை தெரிவார்
செய்வளைத் தோளியைச் சேர்ந்துநல னுகர்வதோர்
தெய்வங் கொல்லெனத் தெளித லாற்றார்
உருவினு முணர்வினு மொப்போ ரில்லென
வரிவளைத் தோளியொடு வத்தவர் [1] பெருமகன்
ஒழுகினன் மாதோ வொருமதி யளவென்.

௧௫—யாழ்நலந் தெரிந்தது முற்றிற்று.

௧௬—பதுமாபதியைப் பிரிந்தது.

ஒழுகா நின்ற வொருமதி யெல்லையுள்
வழிநா ணிகழ்வின் வண்ணங் கூறுவேன்

(அச்சுவப் பெருமகன் வரவு)

கலக்கமி றாணைக் காசியர் கோமான்
நலத்தகு [2] தேவி நன்னுட் பெற்ற
மின்னுறழ் சாயற் பொன்னுறழ் சுணங்கிற்
பண்ணுறு மின்சொற் பதுமா நங்கை
ஆகந் தோய்தற் கவாஅ நெஞ்சமொடு
பாசிழை நன்கலம் பரிச முந்துறீஇக்
கேழ்கிளர் மணிமுடிக் கேகயத் தரசன்
அளவி லாற்ற லச்சுவப் பெருமகன்
மகதம் புகுந்து [3] மன்னிய செங்கோற்
றகைவெந் துப்பிற் றருசகற் [4] கிசைப்ப
ஏற்றெதிர் கொள்ளு மின்பக் கம்பலை
கூற்றெதிர் கொள்ளாக் கொள்கைத் தாகப்
புரவியும் யானையும் பூங்கொடித் தேரும்
விரவிய படையொடு தருசகன் போதரப்
போதுபிணைத் தன்ன மாதர் மழைக்கண்
நன்றொடு புணர்ந்த நங்கை மணமகன்
இன்றிவண் வருமென வில்லந் தோறும்
எடுத்த பூங்கொடி யிருங்கண் விசும்பகம்
துடைப்ப போல நடுக்கமொடு நுடங்கத்

பி-ம். 1 பெருமகனும். 2 தேவிகனுட். 3 மண்ணிய. 4 இயம் பசைப்ப.

தேர்செலத் தேய்ந்த தெருவுக ளெல்லாம்
நீர்செல் பேரியாறு நிரந்திழிந் தாங்குப்
பல்லோர் மொய்த்துச் செல்லிடம் பெறாஅ
தொல்லென் மாக்கட லுவாவுற் றன்ன
கல்லெ னகரங் காண்பது விரும்பி
மழைநிரைத் தன்ன மாடந் தோறும்
இழைநிரைத் திலங்க வேறி யிறைகொள
மலைத்தொகை யன்ன மாட [1] மாநகர்
தலைத்தலைப் போந்து தலைப்பெய் தீண்டி
இடுமணி யானை யிரீஇ யிழிந்துதன்
தொடியணி தடக்கை தோன்ற வோச்சித்
தாக்கருந் தானைத் தருசகன் கழலடி
கூப்புபு பணிந்த கொடும்பூட் குருசிலை
எடுத்தவன ....
* * * *
* * * *

கஎ—இரவெழுந்தது.

* * * *
* * * *
* * * *

....ச்
செய்வது தெரியுஞ் சிந்தையோ டிருந்துழித்

(தருசகனுடைய பகைமன்னர்)

தகைமலர்ப் பைந்தார்த் தருசகன் றன்னொடு
பகைகொண் டொழுகும் பற்றுக் கொடுந்தொழில்
விடுகணை விற்றொழில் விரிசிக னுள்ளிட்
டடலருந் தோற்றத் தரிமா னன்னவர்
மத்தநல் யானை மதிய வெண்குடை

பி - ம். 1 மானகர், மாணகர்.

* இதன் மேற்பகுதியும், கஎ - ஆம் காதையின் முதற்பகுதியும் பிரதிகளில் எழுதப்படவில்லை; இடங்கள் எழுதாமல் விடப்பெற்றுள்ளன.

வித்தக நறுந்தார் விலங்குநடைப் புரவி
அத்தின புரத்தி னரசரு ளரிமான்
வேண்டியது முடிக்கும் வென்றித் தானை
ஈண்டிய வாற்ற லெலிச்செவி யரசனும்
காண்டற் காகாக் கடன்மருள் பெரும்படைத்
தீண்டற் காகாத் திருந்துமதி லணிந்த
வாரண வாசி வளந்தந் தோம்பும்
ஏரணி நெடுங்குடை யிறைமீக் கூரிய
படைநவி றடக்கைப் பைந்தார்க் கருங்கழல்
அடவி யரசெனு மாண்டகை யொருவனும்
மலைத்தொகை யன்ன மையணி யானை
இலைத்தார் மார்பி னேரணி தடக்கைப்
பொருந்தா மன்னரைப் புறக்குடை கண்ட
அருந்திறற் சூழ்ச்சி யடல்வேற் றானை
அயிர்த்துணைப் பல்படை யயோத்தி யரசனும்
மாற்றோர்த் தொலைத்த கூற்றுறழ் கொடுந்தொழில்
மிக்குயர் வென்றியொடு வேந்தரை யகப்படுத்
தக்களம் வேட்ட வடலருஞ் சீற்றத்துப்
புனைமதி லோங்கிய போதன புரத்திறை
மிலைச்ச னென்னு நலத்தகை யொருவனும்
சீற்றத் துப்பிற் செருவெனப் புகலும்
ஆற்றல் சான்ற வரசரு ளரிமாத்
துன்னரு நீண்மதிற் றுவரா பதிக்கிறை
மன்னரை முருக்கிய மதிய வெண்குடைப்
பொங்குமலர் நறுந்தார்ச் [1] சங்கர வரசனும்
மல்ல னென்னும் வெல்போர் விடலையும்
தானை மன்னரை மானம் வாட்டிய
ஊனிவர் நெடுவே லுருவக் கழற்காற்
பொங்குமயிர் மான்றேர்த் திருநகர்க் கிறைவன்
வெந்திறற் செய்கை வேசா லியுமென
அடற்றகை மன்னர் படைத்தொகை கூட்டிச்

(பகைமன்னர் ஆராய்தலும் போருக்கெழுதலும்)

சங்க மாகி வெங்கணை வீக்கமொடு

பி - ம். 1 சங்கரத்தரசனும்.

பகைநமக் காகிப் பணித்துத் திறைகொளும்
மகத மன்னனை மதுகை வாட்டிப்
புரிபல வியைந்த வொருபெருங் கயிற்றினிற்
பெருவலி வேழம் [1] பிணித்திசி னாஅங்
கிசைந்த பொழுதே [2] யிடங்கெட மேற்சென
றருந்திறன் மன்னனை நெருங்கின மாகித்
தன்னுடை யானையும் புரவியுந் தன்றுணைப்
பொன்னியல் பாவையும் புனைமணித் தேரும்
அணிகதிர் முத்தமு மருங்கல மாதியும்
பணிமொழிச் செவ்வாய்க் கணிகை மகளிரொடு
பிறவு மின்னவை முறைமையிற் றரினும்
இருங்கண் மாதிரத் தொருங்குகண் கூடிய
கருமுகில் கிழிக்குங் கடுவளி போலப்
பொருமுரண் மன்னர் புணர்ப்பிடைப் பிரிக்கும்
அறைபோக் கமைச்சின் முறைபோக் கெண்ணினும்
அங்கண் ஞாலத் தழகுவீற் றிருந்த
கொங்கலர் கோதை யெங்கையைப் பொருளொடு
தனக்கே தருகுவன் சினத்தி னீங்கி
ஊனங் கொள்ளாது தானவட் பெறுகெனத்
தேறு மாந்தரை வேறவண் விடுத்துத்
தனித்தர வொருவரைத் தன்பாற் றூழ்ப்பினும்
என்ன வாயினு மன்னது விழையா
தொடுங்கி [3] யிருந்தே யுன்னியது முடிக்கும்
கொடுங்காற் கொக்கின் கோளின மாகிச்
[4] சாய்ப்பிட மாகப் போர்ப்படை பரப்பி
வலிகெழு வேந்தனை வணக்குது மென்னத்
தெளிவுசெய் தெழுந்து திருமலி நன்னாட்
டெல்லை யிகந்து வல்லை [5] யெழுந்து
கடுந்தொழின் மேவலொ டடங்குவந் திறுத்தலின்

(தருசகன் செயல்)

அகநகர் வரைப்பி னரச னறியப்

பி - ம். 1 பிணித்தினஅங்கு. 2 வடங்கெட. 3 யிருந்து முன்னியது. 4 சாப்பிட. 5 யிழிந்து.

புறநக ரெல்லாம் பூசலிற் றுவன்றி
அச்ச நிலைமை யரசற் கிசைத்தலின்
மெச்சா மன்னரை மெலிவது நாடித்
தருசகன் றமரொடு தெருமா லெய்தி
மாணகற் கண்டிந் நிலைமை கூறென

(அயிராபதி உதயணனிடம் கூறல்)

ஆண நெஞ்சத் தயிரா பதிவந்
தனங்கத் தானம் புகுந்தவற் கண்டு
கூப்பிய கையினள் கோயிலுட் பட்டதும்
கோற்றொடி மாதர் கொள்கையுங் கூற

(உருமண்ணுவாவின் செயல்)

உகவை யுள்ளமொடு பகையிவ ணியைதல்
கரும நமக்கென வுருமண் ணுவாவுரைத்
தின்ன தென்னுன் பொன்னேர் [1] தோழிக்
கிருமதி நாளகத் திலங்கிழை மாதர்
பருவரல் வெந்நோய் பசப்பொடு நீக்குவென்
என்றன னென்பதைச் சென்றனை கூறிக்
கவற்சி நீக்கெனப் பெயர்த்தவட் போக்கிக்
கடுத்த மன்னரைக் கலங்கத் தாக்கி
உடைத்த பின்றை யல்லது நங்கையை
அடுத்தல் செல்லா னரச னாதலின்
அற்ற நோக்கி யவர்படை யணுகி
ஒற்றி மேல்வீழ்ந் துடைக்கு முபாயமா
வாணிக வுருவின மாகி மற்றவர்
[2] ஆணத் தானை யகம்புக் காராய்ந்
திரவிடை யெறிந்து பொருபடை யோட்டிக்
கேட்போர்க் கெல்லாம் வாட்போர் வலித்தொழில்
வளமிகு தானை வத்தவர்க் கிறையைக்
கிளைமை கூறி யுளமை கொளீஇக்
காவினு ணிகழ்ந்தது காவலற் குரைப்பின்
மன்றல் கருதி வந்த மன்னற்
கொன்றுபு கொடாமை யுண்டு மாகும்

பி - ம். 1 தோளிக். 2 ஆணைத்தானை.

ஒன்றின னுயிற் பொன்றுஞ் சிளமுலைத்
தெரியிழை மாத ருரிமையி னேடாள்
அன்ன தாத லொருதலை யதனாற்
பின்னரு மதற்குப் பிறபிற நாடுதும்
இன்னே யெழுகென் றெழுந்தாங் கணைஇச்
சின்னச் சோலை யென்னு மலைமிசைப்
பன்னற் கேள்வி பண்வரப் பாடிட

(தோழர் செயல்)

எண்ணிய கருமத் திடையூ றின்மை
திண்ணிதிற் கேட்டுத் தெளிந்தன ராகி
ஆறு வன்பொடு மேனு ளன்றி
வழிவழி வந்த கழிபெருங் காதற்
பகையடு படைநரைத் தொகையவட் காண்புழி
நூற்றிற முற்றி யாற்றுளி பிழையா
தாற்றி னறிய வத்துணை யுண்மையின்
ஊறின் றினியென வுவகையிற் கழுமிக்
காப்பில் வண்மைப் பிரச்சோ தனன்றன்
சினப்படை யழித்த செம்ம லாளர்க்குக்
கனப்படை காக்கைத் தொகையெனக் கருதும்
அத்திறத் தொன்றி யெத்திறத் தானும்
குவளை யுண்க ணிவளொடு புணர்ந்த
காலை யல்லது கோலக் குருசில்
புலம்பிற் றீரா னுதலிற் பொருபடை
கலங்கவாட் டுதலெனக் [1] கருத்திடை வலித்து
மலையி னிழிந்து விலைவரம் பறியா
அருவிலை நன்மணி போத்தந் தவ்வழிப்
பெருவிலைப் பண்டம் பெய்வது புரிந்து
செழுமணிக் காரர் குழுவினுட் காட்டி
உறுவிலை கொண்டு பெறுவிலை பிழையா
வெண்பூந் துகிலுஞ் செம்பூங் கச்சும்
சுரிகையும் வாளு முருவொடு புணர்ந்த
அணியின ராகிப் பணிசெயற் குரிய
இளையரை யொற்றித் தளைபிணி யுறீஇப்

பி - ம். 1 கருத்தினர்.

(வாசனைப் பொருள்கள்)

பல்லுறைப் பையி [1] னுள்ளறை தோறும்
நாகத் தல்லியு நயந்ததக் கோலமும்
வாசப் பளிதமுஞ் சோணப் பூவும்
குங்குமக் குற்றியுங் கொழுங்காற் கொட்டமும்
ஒண்காழ்த் துருக்கமு மொளிநா குணமும்
காழகி னூறுங் கட்சா லேகமும்
கோழிரு வேரியும் பேரில வங்கமும்
அந்தண் டகீரமு மாக்கு மகிலும்
சந்தனக் குறையொடு சாந்திற் குரியவை
பிறவு [2] மொருவா நிறைய வடக்கி

(உண்பொருள்கள்)

முதிர்பழ மிளகு மெதிர்வது திகழ்ந்த
மஞ்சளு மிஞ்சியுஞ் செஞ்சிறு கடுகும்
தலைப்பெருங் காயமு நலத்தகு சிறப்பிற்
சீரகத் தரிசியு மேலமு மேனைக்
காயமு மெல்லா மாய்வன ரடக்கி

(மருந்திற்குரியவை)

அஞ்சன மனோசிலை யணியரி தாரம்
துத்த மாஞ்சி யத்தவத் திரதம்
திப்பிலி யிந்துப் பொப்புமுறை யமைத்துத்
[3] தாழி மேதை தவாத துவர்ச்சிகை
வண்ணிகை வங்கப் பாவையோ டின்ன
மருத்துறுப் பெல்லா மொருங்குபடுத் தடக்கி
[4] இலைச்சினை யொற்றிய தலைச்சுமைச் சரக்கினர்
நான மண்ணிய நீணிறக் குஞ்சியர்
மணிநிறக் குவளை யணிமலர் செரீஇ
யாப்புற வடக்கிய வாக்கமை சிகையினர்
மல்லிகை யிரீஇ வல்லோர் புணர்ந்த
செம்பொன் மாத்திரை செரீஇய காதினர்
அங்கதிர்ச் சுடர்மணி யணிபெற [5] விரீஇ

பி - ம். 1 னுள்ளுறை. 2 மொருமா. 3 தோழி.
4 இலைச்சுமை. 5 வரீஇ.

மாசின் றிலங்கு மோதிர விரலினர்
வாச நறும்பொடி திமிர்ந்த மார்பினர்

(மகளிர்க்கூரியவை)

மகரிகை நிறைய வெகிர்முக மாக்கிப்
பாடி மகளிர் விழையுஞ் சேடெளிப்
பத்திக் கடிப்பும் பவழத் திரியும்
முத்து வடமு [1] முழுமணிக் காசும்
பன்மணித் தாலியு மென்முலைக் கச்சும்
உத்திப் பூணு முளப்படப் பிறவும்
சித்திரக் கிழியின் வித்தக மாகத்
தோன்றத் தூக்கி யாங்கவை யமைத்து
நாற்றிய கைய ரேற்றிய கோலமொடு
நுரைவிரித் தன்ன நுண்ணூற் கலிங்கம்
அரைவிரித் தசைத்த வம்பூங் கச்சொடு
போர்ப்புறு மீக்கோள் யாப்புறுத் தசைஇப்
பொற்றொடி நிறைக்கோல் பற்றிய கையினர்
கழலுங் கச்சுங் கலிங்கமு மற்றவர்
விழைவன வறிந்து வேறுவே றடக்கிக்
காட்சிமுந் துறுத்த மாட்சிய ராகிப்
படைத்திற மன்னர் பாடி சார்ந்து
விடைப்பே ரமைச்சன் மேனாட் போக்கிய
அறிவொடு புணர்ந்த விசைச்சனு மவ்வழிக்
குறிவயிற் பிழையாது குதிரையொடு தோன்றலும்
அதிராத் தோழனை யவனை யொழித்துக்
[2] குதிரை யாவன கொண்டுவிலை பகரிய
வழுவில் சூழ்ச்சி வயந்தக் குமரனைக்
குழுவினோர் கட்குத் தலையெனக் கூறி
வெம்முரண் வென்றியொடு மேல்வந் திறுத்த
ஒன்னா ராடற் கொருப்பா டெய்தி
வழக்கொடு புணர்ந்த [3] வாசி வாணிகம்
உழப்பே மற்றிவ னென்பதிற் றியாட்டையன்
மண்டமர்த் தானை மகத மன்னனும்
பண்டையன் போலா னுதலிற் படையொடு

பி - ம். 1 மும்மணிக். 2 குதிரைமாவன. 3 வாசிதவாணிகம்,

தொன்னகர் வரைப்பக மெந்நக ராக்க
இருந்தனம் வலித்தனம் யாமெனப் பலவும்
பொக்க முடையவை பொருந்தக் கூறிப்
பகைகொண் மன்ன னகநகர் வரைப்பின்
யாவ ராயினு மறிந்துவந் தடைவது
காணுங் காலைக் கரும நமக்கெனக்
கணங்கொண் மன்னரு மிணங்குவன ராகிப்

(பகைமன்னர் செயல்)

பெரும்பரி சூர மொருங்குட னருளி
அற்ற மவர்மாட் டொற்றின ராகி
அருத்த மருங்கல நிரைத்தனர் தந்திட்
டின்றைக் கொண்டு மிவணி ராமினென்
றொன்றிய காதலொ டுண்ணெகிழ்ந் துரைப்ப

(உதயணன் முதலியோர் செயல்)

வத்தவ ரிறைவனொடு மொய்த்திறை கொண்டு
பாடியுட் டமக்கிடம் பாற்படுத் தமைத்து
வீட்டின தளவும் விறற்படை வீரமும்
கூட்ட மன்னர் குறித்தவும் பிறவும்
இருளும் பகலு மருவின ராராய்ந்
தருந்திற லாள ரொருங்குயி ருண்ணும்
கூற்றத் தன்ன வாற்றல ராகி

(உதயணனுடைய வீரர் இரவிற் போர்புரிதல்)

மண்டில மறைந்த மயங்கிருள் யாமத்
தெண்டிசை மருங்கினு மின்னுழி யெறிதுமென்
றறியச் சூழ்ந்த குறியின ராகி
நூலிற் பரந்த கோல வீதியுட்
படைநகர் வரைப்பகம் பறைக்க ணுருக்கிப்
பாடி காவல [1] ரோடியாண் டெறிந்து
புறக்காப் பமைத்துத் தலைக்காப் பிருக்கும்
வல்வில் விளையர்க் கெல்லை தோறும்
காப்புநன் கிகழன்மின் கண்படை யுறங்கென்
றியாப்புறக் கூறி யடங்கிய பொழுதிற்

பி - ம். 1 ரோடியூண்டெறிந்து.

கலங்கத் தாக்கலின் மெலிந்த தாகி
[1] உடையினு முடையா தாயினும் யாவரும்
அடையுந் தான மறியக் கூறி
நாற்பால் வகுத்து மேற்பா லமைத்துக்
காவலன் றன்னையுங் காவலு ணிறீஇப்
பொற்புடைப் புரவி பொலிய வேறி
நற்படை நலியா நன்மையொடு பொலிந்த
சாலிகைக் கவயங் கோல மாகப்
புக்க மெய்யினர் பூந்தார் மார்பிற்
றுளாண் கடுந் [2] திறல் விரிசிகன் வாழ்கென
மேலாண் மல்லன் பாடி காத்த
நீலக் கச்சை நிரைகழன் மறவரை
வேலிற் சாய்த்துங் கோல மான்றேர்
அடவி வாழ்கென வார்த்தன ருராஅய்த்
தடவரை மார்பிற் றளராச் செங்கோல்
[3] மிலேச்சன் வாழ்கெனத் தலைக்காப் பிருந்த
தண்ட மள்ளரைத் தபுத்துயி ருண்டும்
கொண்ட வார்ப்பொடு கூட வெலிச்செவி
பண்டரும் பல்லியம் பாற்படத் [4] துவைத்தும்
விறல்வே சாலி பாடி குறுகி
அடலருஞ் சீற்றத் தரசுபல கடந்த
விடலரும் பைந்தார் வேந்தருள் வேந்தன்
[5] சங்கரன் வாழ்கெனத் தங்கல ரெறிந்தும்
வத்தவன் கொண்ட மாமுர சியக்கி
அயிலிற் புனைந்த வெயில்புரை யொள்வாள்
உரீஇய கைய ராகி யொரீஇக்
காவன் மறவரைக் கண்படை யகத்தே
வீழ நூறி வேழந் தொலைச்சி
மலையெனக் கவிழ மாமறித் திடாஅக்
கொலைவினைப் படைமாக் கொடியணி நெடுந்தேர்
வத்தவன் மறவர் மொய்த்தன ரெறியக்
கடுவளி யுற்ற கடலி னுராஅய்

பி - ம். 1 உடையும். 2 திறற்றருசகன். 3 மலேச்சன். 4 துவைக்கும்.
5 சங்கமன்.

அடலரும் பெரும்படை யார்ப்பொடு தொடங்கித்
தம்முட் டாக்கிக் கைம்மயக் கெய்தி
மதக்களி யானை வத்தவன் வாழ்கவென்
றுரைப்ப மற்றவ ரறிந்தன ராகி
எம்வயி னெம்வயி னெண்ணினர் கோளெனத்
தம்வயிற் றம்முளுந் தெளியா ராகிப்
பாடி யருங்கலம் பட்டுழிக் கிடப்ப
நீடிரு ளகத்து [1] நீங்குதல் பொருளெனச்
செவிசெவி யறியாச் செயலின ராகித்
தவிர்வில் வேகமொடு தலைவந் திறுத்த
கடுந்தொழின் மன்ன ருடைந்தன ரோடி
அடைந்தனர் மாதோ வரணமை மலையென்.

கஎ—இரவெழுந்தது முற்றிற்று.

கஅ—தருசகனோடு கூடியது.

அரணமை பெருமலை யடைவது பொருளென
முரணமை மன்னர் முடுகிய பின்னர்

(தோழர் செயல்)

ஆளேறு படாமைக் கோளேறு புரிந்த
செம்ம லாளர் தம்முட் கூடி
ஒன்னு மன்னரை யோட்டின மாதலின்
மின்னேர் சாயலை மேயநம் பெருமகற்
காக்க முண்டெனுஞ் சூழ்ச்சியொ டொருபாற்
புலர்ந்த காலை மலர்ந்தவ ணணுகிக்
களங்கரை கண்டு துளங்குபு வருவோர்
மகத மன்னற் குகவை யாகக்
கோடாச் செங்கோற் குருகுலத் தரசன்
ஓடாக் கழற்கா லுதயண குமரன்
கோயில் வேவினு ளாய்வளைப் பணைத்தோட்
டேவி வீயத் தீரா வவலமொடு
தன்னு டகன்று பன்னுடு படர்ந்து

பி - ம். 1 நீக்குதல்.

புலம்பிவட் டீர்ந்து போகிய போந்தோன்
சலந்தீர் பெரும்புகழ்ச் சதானிக வரசனும்
மறப்பெருந் தானை மகத மன்னனும்
சிறப்புடைக் கிழமை செய்ததை யறிதலின்
[1] அகப்பாட் டண்மைய னல்லதை யிகப்பத்
தாதலர் பைந்தார்த் தருசக னமக்கு
வேறல னவனை வென்றியி னீக்கி
மாறுசெயற் கிருந்த மன்னரை யோட்டியது
பண்ணி கார மாகக் கண்ணுற்று
முற்பாற் கிழமை முதலற வின்றி
நற்கியாப் புறீஇப் போது நாமெனச்
சிறந்த தோழர் சிலரொடு சென்று
விரவுமலர்த் தாரோ யிரவெறிந் தகற்றினன்
என்பது கூறென மன்பெருஞ் சீர்த்தி
வயந்தக குமரனை வாயி லாகப்

(வயந்தகன் செயல்)

போக்கிய பின்றையவன் புனைநகர் வீதியுட்
கேட்போர்க் கெல்லாம் [2] வேட்கை யுடைத்தா
மறைத்த லின்றி மறுகுதோ றறைய

(தருசகன் செயல்)

அகன்பெருந் தானை யரசத் தாணியுள்
நிகழ்ந்த திற்றென நெடுந்தகை கேட்டு
நன்னாடு நடுக்க முறீஇத் தன்மேல்
ஒன்னா மன்ன ருடன்றுவரு காலை
வணக்கும் வாயில் காணான் மம்மரொடு
நினைப்புள் ளுறுத்த நெஞ்சமொ டிருந்தோற்கு
வென்றி மாற்றஞ் சென்றுசெவிக் கிசைப்பப்
பூப்புரி முற்றம் பொலியப் புகுந்து
வாய்ப்பொரு ளாக வறிந்துவந் தோர்களைக்
காட்டுக விரைந்தெனக் காவல னருள
நகரங் காடிதொறும் பகர்வன னறையும்
வாட்டொழிற் றடக்கை வயந்தகற் காட்டி

பி - ம். [1] அகப்பாடின்மையன். [2] கேட்டகை.

உட்பட் டதனை யொழிவின் றுணர்ந்துநின்
கட்பட் டுணர்த்துதல் கரும மாக
வந்தன னிவனென வெந்திறல் வேந்தன்
பருகு வன்ன பண்பின னாகி
[1] அருகர் மாற்ற மங்கையி னவித்துக்
கேட்குஞ் செவ்வி நோக்கம் வேட்ப
இருபெரு மன்ன ரிறைவருந் தம்முள்
ஒருபெருங் கிழமை யுண்மை யுணர்த்தலும்
வயந்தகன் வாயது நிற்க வுயர்ந்த
நண்பே யன்றி நம்மொடு புணர்ந்த
கண்போற் கிழமைக் கலப்பு முண்டெனத்
தானை நாப்பட் டானெடுத் துரைத்து
வீணை நவின்ற விறல்வே லுதயணன்
இவண்வரப் பெற்றேன் றவமிக வுடையெனென்
றேத மின்மையு நீதியும் விளைஇய்
இன்னா மன்ன ரிகலடு பெரும்படை
தாக்கிய வாறுந் தகரா றிப்
போக்கிய வாறும் போந்த வண்ணமும்
முறைமையிற் கேட்டு நிறைநீர் வரைப்பிற்
கெட்ட காலையுங் கேட்டோ ருவப்ப
நட்டோர்க் காற்று நன்ன ராளன்
வரவெதிர் கொள்கென வாயிலும் வீதியும்
விரைமலர்ப் பூங்கொடி வேறுபட வுயரி
வனப்பொடு புணர்ந்த வார்கவுள் வேழம்
சினப்போ ரண்ணற்குச் செல்கெனப் போக்கிக்

(தருசகன் உதயணனை எதிர்கொள்ளச் செல்லுதல்)

குலத்திற் றன்னொடு நிகர்க்குந னாதலிற்
கவற்சியொடு போந்த காவலன் முன்னர்ப்
புகற்சியொடு சேறல் பொருத்த மின்றெனப்
போற்றுங் கவரியுங் குடையுங் கோலமும்
மாற்றுவன னாகி மகதவர் கோமான்
இடுமணி யில்லதோர் பிடிமிசை யேறிப்

பி - ம். [1] அருகன்.

படுமணி வாயில் பலரொடும் போதர
வானுய ருலகம் வழுக்குபு வீழ்ந்த
தேனுயர் நறுந்தார்த் திறலோன் போலத்
தோழர் சூழ வேழ மேல்கொண்
டுதையண குமரன் புகுதர வோடிச்

(சிலர் தருசகனைத் தடுத்தல்)

சிதைபொரு டெரியுஞ் [1] செந்நெறி யாளர்
கடல்கண் டன்ன வடலருந் தானையை
இனைய கூட்டமொ டெண்ணா தகம்புக்கு
வினைமேம் பட்ட வென்றி வேந்தனைத்
தெளிவது தீதெனச் சேர்ந்துசென் றிசைப்ப

(தருசகன் உதயணனை எதிர்கொள்ளல்)

நட்புவலைக் கிழமையி னம்பொருட் டாக
உட்குறு பெரும்படை யுலைத்த வொருவனை
வேறெனக் கருதுதல் விழுப்ப மன்றெனத்
தேறக் காட்டித் தெளிவு முந்துறீஇச்
சென்றுகண் ணுற்ற குன்று..........
இடத்தொ டொப்புமை நோக்கி யிருவரும்
தடக்கை பிணைஇச் சமயக் காட்சியர்
அன்பிற் கலந்த வின்பக் கட்டுரை
இருவருந் தம்மு ளேற்பவை கூறித்
திருவமர் கோயில் சென்றுபுக் கவ்வழி

(தருசகன் உதயணனை உபசரித்து இருக்கச்செய்தல்)

உஞ்சையம் பெரும்பதி யுழக்குபு கொல்லும்
வெஞ்சின வேழத்து வெகுட்சி நீக்கிப்
பல்லுயிர்ப் பருவர லோம்பிய பெருமகன்
மல்லற் றானை வத்தவர் கோமாற்
கொன்னா மன்ன ருடல்சின முருக்கி
இன்னா நீக்கலு மேயர் [2] குலத்தோற்
கியைந்துவர் ததுவென வியந்துவிரல் விதிர்த்துப்
பக்க மாக்க [3] டத்தமு ளுரைக்கும்
உறுபுகழ்க் கிளவி சிறிய கேளாத்

பி - ம். 1 சென்னெறி. 2 குலத்தோர்க்கியைந்து. 3 டத்தமுறைக்கும்.

தானு மவனுந் தானத் திழிந்தோர்
மணிக்கான் மண்டபத் தணித்தக விருந்து
தொன்றுமுதிர் தொடர்பே யன்றியுந் தோன்ற
அன்றைக் கிழமையு மாற்ற வளைஇப்
பள்ளி மாடமொடு கோயிலும் பாற்படுத்
தெள்ளி வந்த வின்னு மன்னரைப்
போரடு வருத்தந் தீரப் புகுகெனத்
தாருடை வேந்தன் முன்பின் சென்று
கோயில் புகீஇ வாயிலு ளொழிந்து
விருப்பிற் றீரான் வேண்டுவ வமைத்து
வருத்த மோம்பினன் வத்தவற் பெற்றென்.

௧௮—தருசகனொடு கூடியது முற்றிற்று.

௧௯—படை தலைக்கொண்டது.

(தருசகன் செயல்)

வத்தவற் பெற்ற வலிப்பின னாகி
மத்த யானை மகத மன்னனும்
அருமுர ணடுதொழி [1] லிளமைய னிவனொடு
தரும சாத்திரந் தலைக்கொள் கென்று
பூசனை வழக்கொடு புரையவை நடுவண்
[2] வாசனைக் கேள்வி வழிமுறை தொடங்கலிற்

(ஓடிய பகைமன்னர் மீட்டும் போர்செய்தற்கு வரல்)

பரந்த மன்னர் நிரந்துகண் கூடிக்
கற்ற நூலிற் செற்ற வேந்தன்
வேறுபடக் காட்டிக் கூறுபட வறுப்பத்
தொலைதல் காரண மாகவது துணிந்த
நிலையி னெஞ்சினர் நம்முள் யாரெனத்
தலைக்கூட் டமைத்துத் தம்முள் வினவத்
தெய்வ மிடைநிலை யாக வதன்றிறம்
ஐயந் தீர வறிவம் யாமெனத்

பி - ம். 1 விளைமையினின்னொடு. 2 வாசினை.

தம்பாற் றெளிந்த தன்மைய ராகி
வெம்போர் நிகழ்ச்சி யென்கொன்மற் றிதுவென
வருபடை யொற்றரை வழுக்கி மற்றவன்
பொருபடை போதரப் புணர்த்த தாகுமென்
றதுவும் பிறவு மாய்வுழிச் செவ்விதிற்
பேணி வாழும் பெற்றிய ராகி
வாணிக வுருவொடு வந்திடைப் புகுந்த
வீர ராகுவோர் வேறுதிரிந் தொடுங்கி
ஆரிருண் மறைஇ யருஞ்சின மழித்தோர்
போந்தில ராதலிற் பொருத்த முடைத்தென
வேந்தனில் வந்தோர் வினவுதல் வேண்டா
அமர்மேற் கொண்டோர் யாரே யாயினும்
தமராக் கருதித் தம்வயிற் றெளிதல்
ஏல்வன் றென்ன மேலவை [1] இளவா
இளிவஞ்சு முனிவரே யாயினு மற்றினித்
தெளிவஞ்சு தகைத்தெனத் தெளிவுமுந் துறீஇ
வஞ்சினஞ் செய்து வெஞ்சினம் பெருகக்
கெடுத்த லூற்றமொடு கடுத்தன ராகிப்
பெயர்த்தும் பெரும்படை தொகுத்தனர் கொண்டு

(பகைவர் மகதநாட்டுச் சோலைமுதலியவற்றை அழித்தல்)

நன்னாடு நடுங்க நண்ணித் துன்னிய
ஈர நெஞ்சத் தார்வ லாளர்
பாரந் தாங்கும் [2] பழமை போல
இலைக்கொடிச் செல்வமொடு தலைப்பாரந் தோங்கிய
கணைக்கா லிகணையுங் கமுகும் வாழையும்
சினைப்பெரு மாவும் பணைக்காற் பலாவும்
கொழுமுதற் றெங்கொடு முழுமுத றுலைச்சிக்
கழனி [3] விளைநெற் கணையெரி கொளீஇப்
பழன நன்னாடு படியழித் துராஅய்ச்
செயிர்ப்பிற் சிறந்தவர் பெயர்ச்சி நோக்கிப்

(பகைவர் செயலைத் தருசகன் அறிந்து படைதிரட்டல்)

படையொற் றுளர் கடுகுபு குறுகிக்

பி - ம். 1 இளவாது. 2 புடைமை. 3 விழைசெற்.

காவலற் கிசைத்துக் கண்டுகை கூப்பி
வேக மன்னர் மீட்டும்வந் திறுத்த
வெங்கட் செய்தொழி றன்கட் கூறலும்
மறுநோய் மக்களி னுழ்ந்த மனத்தன்
[1] செறுவேல் வேந்தன் செய்வதை யறியான்
கூட்டம் பெருக்கி மீட்டுவந் தனனெனின்
ஆற்ற லெல்லா மளந்தபி னல்ல
தூக்க மிலனெனத் தூக்க மின்றி
மனத்தி னெண்ணி மற்றது கரந்து
சினத்த நோக்கமொடு சீறுபு வெகுண்டு
செருவுடை மன்னரைச் சென்றுமே னெருங்குதும்
பொருபடை தொகுத்துப் போதுகென் றேவலின்
விருத்தி காரரும் வேண்டியது பெறாஉம்
உரத்தகை யாளரு மொருங்கு [2] வந்தீண்டுக
செருச்செய வலித்தனன் செல்வன் சென்றெனத்
தானை யணியத் தலைத்தா ளணியுள்
யானை யேற்றி யணிமுர சறைதலும்

(உதயணன் செயல்)

வணங்கார் வணக்கிய வத்தவர் பெருமகன்
நுணங்குபொரு ளமைச்சரொ டுணர்ந்தன னாகிக்
கண்ணிய பொருட்குத் திண்ணியது [3] தெரிய
உறுப்போ ரன்ன வுள்பொரு ளமைச்சரும்
மறப்போர் மன்னனு மாணவே றிருந்து
செயற்படு கருமத் தியற்கை யிற்றெனப்
பெயர்த்தும் வருபடை யழிப்பது வலித்து
வயந்தக குமரற் கியைந்தது கூறும்

(தான் போர்செய்யச் செல்வதாகச் சொல்லி உதயணன் வயந்தகனைத் தருசகன்பால் விடுத்தல்)

மயங்கிதழ்ப் படலை மகதவற் கண்டு
செருச்செய் தானைப் பிரச்சோ தனன்றன்
பாவையை யிழந்து பரிவு முந்துறீஇச்
சாவது துணிந்தியான் சேயிடைப் போந்தனென்
மன்னுயிர் ஞாலத் தின்னுயி ரன்ன

பி - ம். 1 செருமேல். 2 வந்தீண்டிச். 3 தெறிய.

அடுத்த நண்புரைத் [1] தெடுத்தனை யாகத்
தன்மேல் வந்த தாக்கரும் பொருபடை
என்மேற் கொண்டனெ னாகி முன்னே
எறிந்தனெ னகற்றி யின்பம் பெருகச்
சிறந்தோர் செய்கை செய்தே னின்னும்
மறிந்துவந் தனரே மாற்றோ ரென்ப
தறிந்தனெ னதன்மாட் டவலம் வேண்டா
என்னி னாதற் [2] கிசைகுவ தாயிற்
பின்ன ரறிய பிறபொருள் வலித்தல்
யான்சென் றிரியினஃ தறிகுந ரில்லைத்
தான்சென் றுறுவழித் தளர்ந்த காலை
மகத மன்னனை மலைந்துவென் றனமென
மிகுதி மன்னர் மேல்வந்து நெருங்கின்
[3] என்னா மன்ன தின்னாத் தரூஉம்
எடுத்துநிலை யரிதென் வேனுக் காட்டி
என்குறை யாக வொழிக வெழுச்சி
தன்படை யெல்லாந் தருக வென்றொடும்
அடற்றொழில் யானைப் படைத்தொழில் பயின்றோர்
[4] எனைவ ருளரவ ரனைவரும் யானும்
ஏறுதற் கமைந்த விருங்கவுள் வேழமும்
வீறுபெறப் பண்ணி விரைந்தன வருக
தன்பாற் படைக்குத் தலைவ னாகியோர்
வன்பார் மன்னன் வரினு நன்றெனக்
கூறினன் மற்றெங் கோமக னென்றவற்
றேறக் காட்டி மாறுமொழி கொண்டு
[5] விரைந்தனை வருகெனக் கரைந்தவற் போக்க

(வயந்தகன் செயல்)

வாயன் றாயினும் வந்துகண் ணுற்றோர்
மேவ வுரைக்கு மேதகு வாக்கியம்
வல்ல னாகிய வயந்தக குமரன்
செல்வன் றலைத்தாட் சென்றுகண் ணெய்தி
இறைவன் மாற்றமுங் குறையுங் கூற

பி - ம். 1 தெடுத்தகரையாக. 2 கிறுக்குவதாயிற். 3 என்னு மன்னரின்னாத். 4 இனைவர். 5 விரைந்தனர்வருக்க.

(தருசகன் செயல்)

மகதவ ரிறைவனுந் தமர்களைத் தரீஇநமக்
குறுதி வேண்டு முதயண னுரையிது
மறுமொழி யாதென மந்திர மாக்கள்
யாதவன் வலித்த தப்பொரு ளறிதல்
நீதன் றுதலிற் றெளிந்து செய்கென
மறுத்தல் செல்லான் வாழி யவர்நிலை
அழிக்கும் வாயி லறியுந் தானென
ஒன்றின னுரைத்ததை யொன்றுவன னாகி
அருஞ்சின யானையும் புரவியு மமைந்த
இருஞ்சின விளையரும் வருகென வேவி

(கேகயத்தரசன் எண்ணுதலும் தெரிவித்தலும்)

வலிகெழு நோன்றாள் வத்தவன் வலித்ததும்
கலிகெழு மைத்துனன் கருத்து நோக்கி
முற்கிளை வேண்டுநர் மற்றவர்க் கியைந்த
[1] அற்றந் தீர்க்கினது பிற்பயம் பெருகும்
அற்று மன்றிப் பற்று மன்னர்
மேல்வந் திறுப்ப வேல்பல படையொடு
மாயா திருப்பிற் கிளையோ மற்றிவன்
வேற்று னெனவு மாற்று னெனவும்
போற்று மன்னர் புறஞ்சொற் படுமெனக்
கேகயத் தரசனுங் கிளந்துபல வெண்ணிக்
காவல் வேந்தனைக் கண்டுகை கூப்பி
வானோர் பெரும்படை வந்த தாயினும்
யானே யமையு மடிக ளென்னை
விடுத்தற் பாற்றென வெடுத்தவ் விசை

(தருசகன் எண்ணல்)

தந்தை பெருங்கிளை காரண மாக
முந்து மப்படை முருங்கத் தாக்கி
வந்த வேந்தன் வலித்ததுந் தங்கைக்குச்
சென்ற குமரன் முந்தைக் கூறிய
மாற்றமு மனத்தே யாற்றுளி புடைபெயர்ந்
தொலிக்குங் கழற்கா லுதயண குமரன்

பி - ம். [1] எற்றம்.

வலிக்கும் பொருண்மேல் வலித்தன னாகித்

(தருசகன் கேகய அரசனைப் போருக்கு விடுத்தல்)

தன்படைத் தலைவ னாக வெம்மொடே
வன்படை யாளன் வருக வென்றனன்
மாண்ட வத்தவ ராண்டகை யாதலின்
நம்மேல் வந்த வெம்முரண் வீரர்
தம்மேற் சென்று தருக்கற நூறுதல்
வத்தவ ரிறைவனும் வலித்தன னவனோ
டொத்தனை யாகி யுடன்றமர் செய்ய
வல்லை யாயிற் செல்வது தீதன்
றென்றவன் விடுப்ப நன்றென விரும்பி
ஒட்டிய குமர னுள்ள நோக்கி

(தருசகன் வயந்தகனுக்குக் கூறலும் அவனை விடுத்தலும்)

மட்டலர் பைந்தார் [1] மகதவன் வயந்தகற்
குற்ற நண்பி னுயிர்போ லுதயணற்
கிற்றிது கூறுமதி யிளையோள் பொருட்டா
வந்திவ ணிருந்த வெந்திறல் வீரன்
தன்னொடு வந்து மன்னரை யோட்டிப்
போதரத் துணிந்தன னேத மின்றி
ஆகும் வாயி லெண்ணி யப்படை
போக நூக்கல் பொருளெனக் கூறி
மீட்டவற் போக்க வேட்பனன் விரும்பியவன்
கூறிய மாற்றங் கோமான் றன்னொடு
வீறிய லமைச்சர் வேறுக் கேட்டுக்
குறையின் வேண்டுங் கரும முறையிற்
றானே முடிந்ததென் றுணு வுவகையன்
யானையும் புரவியு மமையப் பண்ணி
மாண்வினைப் பொலிந்தோர் வருக மற்றோர்
சேனை நாப்பட் சேருக வின்றெனப்
பெயர்த்து மற்றவற் குரைத்தலிற் பெருமகன்
களிற்றுப் பாகனை விளித்தன [2] னிறீஇ
அண்ணல் யானை பண்ணி வருகெனக்

பி - ம். 1 மகவதற்பயந்தகற்கு. 2 னநீஇ.

(யானைகள்)

கண்ணார் தகைய கவுளிழி கடாத்தன
மண்ணார் நுதலின மாசின் மருப்பின
ஆற்ற லமைந்தன [1] நீற்பாற் புறத்தன
அமர்பண் டறிந்தன வச்ச மில்லன
புகரில் வனப்பின போரிற் கொத்தன
கோலங் கொளீஇச் சீலந் தேற்றின
இருபாற் பக்கமு மெய்து மெறிந்தும்
பொருவோர்ச் [2] செருக்கப் புன்படைக் கருவி
அடக்குபு பண்ணித் துடக்குபு காட்டும்
தோட்டி கொளீஇக் கூட்டுபு நிரைத்த
வேல்வ லிளையர் கால்புடை காப்பக்
கோயின் முற்றத் துய்த்தலின் வாய்மொழி
உதயணன் றன்மாட் டுய்க்க விவற்றொடு

(குதிரை முதலியன)

பொருபடைக் குதவும் புரவியும் புரவியொடு
செருவமர் மாந்தருஞ் செல்க விரைந்தென
ஒன்னா [3] ரோட்டிய வுதயணன் கோயிற்
பொன்னார் முற்றம் புகுந்துடன் றுவன்ற

(படைகளின் புறப்பாடு)

அருந்திறல் யானை யமைந்தது நாடி
இரும்பிடர்த் தலையிற் பெருந்தகை மேல்கொள
உயர்ந்த வூக்கத் துருமண் ணுவாவும்
வயந்தக குமரனும் வாய்மொழிந் தாய்ந்த
உயர்ச்சி யுள்ளத் திசைச்சனு மேனைத்
தடவரை மார்பி னிடவக னுளப்பட
எந்நூற் கண்ணு மிடம்பா டுடைய
முந்நூற் றறுவர் மொய்த்தொருங் கீண்டி
வலம்படு நமக்கென வலங்கொண் டேற
ஒழிந்த மாந்தர் [4] பொலிந்துபுறங் காப்ப
இறையுடைச் செல்வ மியையத் தழீஇக்

பி-ம். 1 நாற்பாற். 2 சேர்த்த. 3 ரொட்டியுதயணன். 4 பொழிந்துபுறங்.

[1] குறைபட லில்லாக் கொற்றமொடு போந்து
முரசுஞ் சங்கு முருடு மொலிப்ப
அரசப் பெருங்கொடி யொருவலத் துயரி
எழுந்த பொழுதிற் றழங்குரன் முரசிற்
றருசக குமரன் றுன்பின் வந்து
கேகயத் தரசனைக் காவல் போற்றென
ஓம்படை கூறி [2] யாங்கவ ணொழியப்

(உதயணன் புறப்பாடு)

பவ்வத் தன்ன படையமை நடுவண்
வவ்வற் கெண்ணிய வத்தவ ரிறைவன்
கெடலருஞ் சிறப்பிற் கேகயத் தரசனும்
உடலுநர்க் கடந்த வுருமண் ணுவாவும்
முன்ன ராக முன்னுக வென்னொடு
பின்ன ராவோ ரின்னரென் றுரைத்துக்
கூறுபடப் போக்கி வேறுபடப் பரப்பி
எல்லை யிகந்த விருங்கடல் போலப்
புல்லார் பாடியிற் குறுகலி னொல்லென

(பகைவர் செயல்)

ஒற்றர் மாற்றம் பெற்றுமுன் னிருந்தோர்
வேழமும் புரவியு மூழூழ் விரைஇக்
காழ்மண் டெஃகமொடு காற்படை பரப்பிப்
புண்ணிய முடையம் பொருமிவ னின்னரை
நன்னர்ப் [3] பெற்றே நாமெனக் கூறி
அங்கண் மாதிரத் ததிர்ச்சி யெய்த
வெங்கண் முரசொடு பல்லியங் கறங்க
அறியச் செய்த குறியுடைக் கொடியர்
கூற்றுல கின்று கொள்ளா தாமென
ஆற்றல் கலந்த வார்ப்பின ராகி
மலைத்துமேல் வந்த மகதவன் படையொடு
தலைப்பெய் தன்றாற் பகைப்படை பரந்தென்.

௧௧—படை தலைக்கொண்டது முற்றிற்று.

பி - ம். 1 குறைவுபடவில்லாக், 2 யாங்கவனொழியப். 3 பொறே.

௨௦—சங்கமன்னர் உடைந்தது.

(காலாட்படைகள்)

பரந்த பெரும்படை யெதிர்ந்த காலை
அருங்கணை நிறைந்த வாவ நாழிகை
பெரும்புறத் திட்ட கருங்கச் சீர்ப்பினர்
[1] பிறர்ப்பிறக் கிடூஇச் சிறப்பிகந் தெள்ளி
நகுவன போலத் தொகைகொண் டார்ப்புறும்
பைங்கழ லணிந்து பரிபசை வில்லா
இசைகொ ளேன்று ளசைவி லாண்மையர்
வணங்குசிலைச் சாபம் வார்கணை கொளீஇ
நிணம்பட நெஞ்சமு நெற்றியு மழுத்திக்
கைபுடை பரந்து கலங்கத் தாக்குநர்
புடைநிரைத் தாரைக் கடிநீர்க் கைவாள்
படையு நெருக்கிப்.............................
பாலிகை விளிக்கும் பண்ணமை பற்றினர்
மாலையும் வயிரமு மூழும் பொங்கக்
கால்வ லிளையர் கலங்கத் தாக்கவும்

(குதிரைவீரர்)

படைமிசை நிரைத்த வடிவமை வார்நூற்
சித்திரக் குரத்தின வித்தகக் கைவினைப்
புடைப்பொற் புளகமொடு பொங்குமயி ரணிந்த
அரத்தப் போர்வைய யாப்பமை கச்சின
முற்றுமறை பருமமொடு பொற்பூஞ் சிக்கத்
[2] தாண வட்டத் தியாப்புப் பிணியுறீஇக்
கோண வட்டக் கோல முகத்த
வெண்கடற் றிரையென மிசைமிசை நிவத்தரும்
பொங்குமயி ரிட்ட பொலிவின வாகி
அரிபெய் புட்டி லார்ப்பக் கருவியொடு
மேலோ ருள்ளம் போல நூலோர்
புகழப் பட்ட போர்வல் புரவி
இகழ்த லின்றி யேறிய வீரர்

பி - ம். 1 பிறப்பிறகிடீச். 2 ஆணைவட்டத்,

வெம்முரண் வீரமொடு தம்முட் டாக்கவும்

(யானைவீரர்)

போர்ப்பறை முழக்கினு மார்ப்பினு மழன்று
கார்ப்பெய லருவியிற் கடாஞ்சொரி கவுள
கொலைநவில் பல்படை கொண்ட மாட்சிய
மலைநிமிர்ந் தன்ன மழகளிற் றெருத்திற்
சிலையுங் கணையுஞ் சீர்ப்பமை வட்டும்
மழுவுங் குந்தமு முழு [1] மயிற் பீலியும்
சங்கமுங் கணையமுஞ் சத்தியும் வாளும்
பிண்டி பாலமும் பிறவு மெல்லாம்
தண்டாக் கருவி தாந்துறை போகிய
வண்டார் தெரியன் [2] மறவர் மயங்கி
அருநில மதிரத் திரிதா லோவா
வீதி வட்டமொ [3] டாதிய கதிவயிற்
பாழி பயிற்றி நூழி லாட்டவும்

(போர் நிகழ்ச்சி)

போர்க்கள வட்டங் கார்க்கட லொலியெனக்
கடற்படைக் கம்பலை கலந்த காலை
மடற் [4] பனை யிடைத்துணி கடுப்பப் பல்லூழ்
அடக்கரும் வேழத் தடக்கை வீழவும்
வார்ப்பண் புதைஇய போர்ப்பமை வனப்பிற்
றுடித்தலை போல வடித்தலை யறவும்
சுற்றுர் கருவிற் றுணியெனத் தோன்றி
அற்ற மில்வா லற்றன கிடப்பவும்
சித்திரத் தாமரைப் பத்திரப் பரூஉத்தொடி
நுதிமுக வெண்கோடு முதலற வெறிதலிற்
செக்கர்க் குளிக்கும் வெண்பிறை போல
உட்குவரு குருதியு ளுடன்பல வீழவும்
கார்முகக் கடுமுகி லூர்தி யாக
விசும்பிடைத் திரிதரும் விஞ்சை மாந்தரைக்
கடுந்தொழில் விச்சை கற்ற மாற்றவர்
மறத்தா னெருங்கி மற்றவ ருடனே

பி - ம். [1] மயிர்ப்பீலி. [2] மறவரும். [3] டாகிய. [4] பணை.

நிறத்தே றுண்டு நிலத்துவீழ் வதுபோல்
மார்பின் வெம்படை யார[1] மாந்தி
வீர நோக்கினர் வேழமொடு வீழவும்
பூணேற் றகன்ற புடைகிள ரகலத்துத்
தாமேற் றழுத்திய சத்தி வாங்கிப்
புரைசை யுய்த்த பொருகழற் காலினர்
வரைமிசை [2] மறிநரின் மறப்படை திருத்தி
வெம்முரண் வேழம் வீழ்த்து மாற்றார்
தம்முயிர் நீங்கத் தாழ்ந்தனர் வீழவும்
அடுத்தெழு பெருந்திரை யகன்கட னடுவண்
உடைத்த நாவாய்க் கடைத்தொடை தழீஇ
இடைத்திரைக் கணவரூஉ மெழுச்சி யேய்ப்ப
வாக்கமை பிடிவார் வலித்த [3] கையினர்
ஊற்றமில் புரவித் தாட்கழி வாகிய
குருதிப் புனலிடைக் கருதியது முடியார்
மாவொடு மறிந்து மயங்கி வீழவும்
அலைகடல் வெள்ள மலைய வூழி
உலக மாந்தரிற் கலைகண் காணார்
ஒண்செங் குருதியிற் செங்கணிப் [4] போரால்
நீலக் கொண்மூ நீர்த்திரைப் பெய்வதோர்
கால மேய்ப்பக் கருந்தலை வீழவும்
கால்வல் புரவியுங் கடுங்கண் யானையும்
வேல்வ லிளையரும் விழுந்துகுழம் பாகிய
அள்ளற் செஞ்சே றுள்ளோ ருழக்கலிற்
றுப்புநிலத் தெழுந்த துகளென மிக்கெழுந்
தந்தர விசும்பி னந்தியிற் பரப்பவும்
தெரிவருங் குணத்துத் திசைதொறும் பொருநதப்
போர்வலம் வாய்த்த பொங்கம ரழுவத்து

(உதயணன் முதலியோர் செயல்)

வார்தளிர்ப் படலை வத்தவர் பெருமகன்
எலிச்செவி யரசன் றம்பி யேறிய
கொலைப்பெருங் களிற்றி னெருத்தத்துப் பாய்ந்தவன்

பி - ம். 1 மாந்திய. 2 மரினரின். 3 கையினீருயததமில். 4 போரு.

தம்முன் காணத் தலைதுமித் திடாது
நின்னின் முடியுமெங் கரும மீண்டெனக்
கடுத்த கட்டுரை யெடுத்தனன் கச்சிற்
றிண்டோள் கட்டிய வென்றி நோக்கி
ஒண்டார் மார்பன் கொண்டமை கண்டே
[1] ஒருக்கி நிரல்பொரூஉ முருமண் ணுவாநம்
கருத்துவினை முடிக்குங் கால மிதுவென
வேக வெள்வேற் கேகயத் தரசனை
அடைதர்க வல்விரைந் தமரார் பெரும்படை
உடைவிடம் போல வுண்டென வுரையா
இருவருங் கூடி யெலிச்செவி யரசன்
பொருமுரட் படையொடு மயங்கிய பொழுதவன்
அரணக் கருவி யழிய வாங்கிக்
கரண வகையாற் கண்ணிமைப் பளவில்
மாசில் விழுச்சீர்க் கேகயத் தரசன்
ஆசில் பைந்தலை யரிந்துநிலஞ் சேர
வீசிய வாளினன் விறலோர்ச் சவட்டி
வென்றோ [2] னேறிய வேழஞ் சார்ந்தவன்
ஆற்றற் றன்மைய னுதலிற் றம்பி
சிறைகொளப் பட்ட செல்ல னோக்கி
உறைகழி வாளின னுருமண் ணுவாவின்
மத்த யானை மருங்கிற் குப்புற்
றுள்வா ளோக்கி யெள்ளுந ரோட்டிய
எம்பி யுற்ற வின்னாச் சிறைவிடின்
உய்ந்தனை யாகுதி யஞ்ச னீயென
ஆர்ப்பக் கண்டே யடுதிற லுதயணன்
தாக்கருந் தானைத் தருசகன் றன்னொடு
வேற்றுமை யிலனிவன் போற்றினை யாயிற்
பெறற்கரு நம்பியைப் பெறுதி நீயெனத்
திறப்படக் கூறி மறப்படை நூறக்
கடும்புன னெருங்க வுடைந்துநிலை யாற்றா
உப்புச் சிறைபோ லுண்ணெகிழ்ந் துருகி
வெப்ப மன்னர் வீக்கஞ் சாய

பி - ம். 1 ஒருக்கு. 2 னெய்திய.

உடைந்துகை யகலவவ ருரிமை தழீஇக்
கடந்தலை கழித்துக் கடுவா யெஃகமொ
டிகலாட் படுகளத் தகலம ராயத்
துதயண குமர னுற்றோர் சூழ
விசய முரசொடு வியனக ரறிய
மகத மன்னற் குகவை போக்கலிற்
கேட்டுப்பொரு ணல்கி வேட்டுவிரைந் தெழுந்து
வெற்றத் தானை முற்றத்துத் தோன்றிப்
பகைக்கடன் றீர்த்த தகைப்பொலி மார்பனைப்
பல்லூழ் புல்லி வெல்போர் வேந்த
படைத்தொழின் மாற்றம் பட்டாங் குரைக்கென

(உதயணன் கூறுதல்)

எடுத்த பெரும்படை யெழுச்சியு மிறுதியும்
பரப்புஞ் சுருக்கும் பாழியு மறியான்
[1] விலக்கவு நில்லான் றலைக்கொண் டோடித்
தமரையுந் தீர்ந்து நமரையு நண்ணான்
கேளன் [2] மன்னன் வாள்வாய்த் துஞ்சி
மாக விசும்பி னின்றுயி லேற்றனன்
கேகயத் தரச [3] னெனவது கேட்டே

(தருசகன் கூறுதல்)

என்கடன் றீரே னாயி னேனவன்
தன்கடன் றீர்த்துத் தக்க தாற்றினன்
என்பது கூறி யன்புநெகிழ்ந் துருகிப்
பேரா விடும்பையு ளாராய்ந் தவனைக்
கூரெரிப் படுத்துக் குறைவினை நீக்கி

(தருசகனும் உதயணனும் நகர்புகுதல்)

மகதவ ரிறைவனும் வத்தவ மன்னனும்
அகனகர் புகுந்த காலை முகனக

(நகரமாந்தர் செயல்)

மணிச்சுதைக் குன்றமு மண்டபத் துச்சியும்
அணித்தகு மாடமு மரும்பெறற் புரிசையும்

பி - ம். 1 விலக்குபு. 2 மன்னன்றன. 3 னென்பது.

நிலைக்கா லேணியுந் தலைச்சிறந் தேறி
இரும்பே ருலக மொருங்கியைந் ததுபோற்
றெருவு மன்றமுந் திருமணன் முற்றமும்
மலரணி முகத்து வந்திறை கொண்டு
கீழு மேலுங் கேட்புழி யெல்லாம்

(உதயணனைப் புகழ்வோர்)

வாழ்க மற்றிவ் வத்தவர் பெருமகன்
என்னு டிதுவன் றென்னுன் சென்றுழி
அந்நாட் டிடுக்கணு மச்சமு மகற்றும்
தத்துவ நெஞ்சத் [1] துத்தம னென்மரும்
வனப்பிற் கேற்ற வலியும் விச்சையும்
சினப்போ ரிவற்கே சேர்ந்தவென் போரும்
வஞ்சச் சூழ்ச்சியின் வணக்கி னல்லதை
அஞ்சா திவனை யமர்வென் றழிக்கும்
வெஞ்சின வேந்தரிங் கில்லென் போரும்

(வாசவதத்தையை இகழ்வோர்)

ஆசில் செங்கோ லவந்தியன் மடமகள்
வாசவ தத்தையிவன் வலியொடு புணர்ந்த
செருவடு தோண்மிசைச் சேர்ந்தனள் வைகும்
திருவில ளாதலிற் றீப்பட் டாளெனப்
படுசொன் மாற்றந் தெளிந்த பரிவினர்
தொடிகெழு தோளி திருவிழிப் போரும்

(வாசவதத்தையைப் புகழ்வோர்)

அலைகடன் ஞாலத் தாக்கையொ டாருயிர்
நிலைநின் றமையாது [2] நிரைவளைத் தோளி
துஞ்சியுந் துஞ்சா டோணல னுகர்ந்த
வெஞ்சின வேந்தனவள் விளிவு முந்துறீஇப்
புன்கண் கூரப் புலம்புகொண் டாற்றான்
தன்னகர் துறந்து தலைமை நீக்கிப்
[3] பின்னிவ ணிரங்கப் பெற்றன ளாதலின்
அவளே புண்ணிய முடையளென் போரும்

பி - ம். 1 துத்தமரெனவருஉம. 2 நிறை. 3 பின்னிவணிரங்கட்

(பிறவாறு கூறுவார்)

வலிகெழு நோன்றாள் வத்தவ மன்னற்குத்
தருசகன் றங்கை தகையோர் சாயற்
பத்திப் பைம்பூட் பதுமா நங்கை
தக்கனள் கொடுப்பின் மிக்கதென் போரும்
வேண்டி வந்த வேந்தனும் [1] வீய்ந்தனன்
ஈண்டினி யிவற்கே யிசைந்த பால்வகை
ஆதலு முண்டஃ தறிவோர் யாரென்
வாயின் மிகுத்து வலித்துரைப் போரும்
பொன்னணி மார்பன் முன்ன ராற்றிய
நன்னர்க் குதவும் பின்னுப காரம்
அலைதிரைப் பௌவ மாடை யாகிய
நிலமுழுது கொடுப்பினு நேரோ வென்மரும
நகர மாக்க ளிவைபல பகர
மாசில் செங்கோன் மகத மன்னனொடு
கோயில்புக் கனனாற் கோமகன் பொலிந்தென்.

௨0—சங்கமன்னர் உடைந்தது முற்றிற்று.

௨௧—மகட்கோடை வலித்தது.

(உதயணன் சூழ்தல்)

கோயில் புக்கபி னுய்புக ழுதயணன்
கரந்த வுருவொடு கலந்தகத் தொடுங்கிப்
பிரிந்த பொழுதி [2] னெருங்கவட் டொழிந்த
அருந்தொழிற் றெளிவு மன்பு மென்றிவை
பெரும்புணை யாக விருந்தகத் துறையும்
பொற்றொடிப் பணைத்தோண் முற்றிழை மாதரை
இற்பெருங் கிழமையொடு கற்புக்கடம் பூட்ட
வரையும் வாயி றெரியுஞ் சூழ்ச்சியுள்

(தருசகன் கருதுதல்)

ஈரைம் பதின்மரை யிகல்கெட நூறி

பி ம். 1 வியந்தனன. 2 னெருங்கவடகொழிந்த.

வீர மிக்க விறற்றறு கண்மைக்
குருகுலத் தைவரு ளொருவன் போலத்
[1] தனிப்படச் செய்கை தன்கட் டாங்கிய
மணிப்பூண் மார்பன் வத்தவ மன்னனொடு
சுற்றத் தாரெனுஞ் சொல்லுடை வேந்தர்
முற்றவ முடையரென் றுற்ற வுள்ளமொடு
பகைகொண் மன்னரைப் பணித்ததற் [2] கொண்டு
தகைகொள் வேந்தன் றமரொடு சூழ்ந்து
செங்கடை வேற்கண் வெள்வளைப் பணைத்தோட்
டங்கையைப் புணர்க்குஞ் சிந்தைய னாகி

(தருசகன் அமைச்சனை உதயணன்பால் விடுத்தல்)

உள்பொருள் வலிக்கு முறுதிச் சூழ்ச்சியன்
மல்லற் றானை மறப்பெருஞ் சீற்றத்துச்
செல்பொறி செறித்த பல்புக ழமைச்சனை
வள்ளிதழ் நறுந்தார் வத்தவர் கோமாற்
[3] கங்கண் விட்டு மடுக்கற் [4] பாலதூழ்
இங்க ணிவனை யெளிதுதரப் பெற்றும்
கோல மங்கையைக் கொடாஅ மாகுதல்
கால நோக்கிற் கரும மன்றென
வலித்ததை யுணர்த்தி [5] வருதி நீயெனத
தலைப்பெரு வேந்தன் றனவற் போக்க

(ஒரு முதுமகள் பதுமாபதிக்கு அறிவித்தல்)

மந்திர மறிந்த தந்திர முதுமகள்
செந்தளிர்க் கோதைக்குச் சேட நீட்டிப்
பொலிக நங்கை பொருபடை யழித்த
வலிகெழு நோன்றாள் வத்தவ ரிறைவன்
யானை வணக்கும் வீணை வித்தகன்
துதைமலர்ப் பைந்தா ருதையண குமரற்கு
நேர்ந்தன னின்னை நெடுந்தகை யின்றெனத்
தீர்ந்த கோட்டியுட் டெரிந்தன ளுணர்த்தத்

பி - ம். 1 தனிப்படைச். 2 கொண்டுந். 3 கங்சே. 4 பாலுழி. 5 வம்மினீ.

(பதுமாபதி எண்ணுதல்)

துப்புறழ் 1 செவ்வாய் துளங்குபு நிரைத்த
முத்துறழ் முறுவன் முகிழ்த்த முகத்தள்
மந்திர நாவி னந்தணன் கேண்மை
இருநிலம் பேரினுந் திரித லின்றெனப்
பெருநல மாத ரொருமை யுள்ளமொடு
வாழ்வது வலியாள் சூழ்வன ளிருப்ப

(அமைச்சன் உதயணனை அடைந்து தருசகன் கருத்தைத் தெரிவித்தல்)

அரும்பொரு ளுவி னமைச்சன் சேதியர்
பெரும்பெய ரண்ணலைப் பொருந்துபு வணங்கிக்
காவலன் கருதிய கட்டுரை 2 புணர்தி
பூவலர் தாரோய் புனைகழ னோன்றுள்
எம்மிறை மாற்ற மிசைப்பேன் யானெனத்
தன்னமர் தோழரொடு மன்னவன் கேட்பப்
பயங்கெழு வையத் துயர்ந்த தொல்சீர்
விழுத்திணைப் பிறந்துதம் மொழுக்கங் குன்றாப்
போரடு மன்னர் புலம்பு முந்துறீஇ
ஆரஞ ருழக்க லறிவெனப் படாது
நீர்முதன் மண்ணகஞ் சுமந்த 3 நிறைவலி
தான்முழுது கலங்கித் தளரு மாயின்
மலைமுத லெல்லா நிலைதளர்ந் தொடுங்கும்
அலகைப் பல்லுயிர்க் கச்ச நீக்குநர்
கவலை கொண்டுதங் காவலிற் றளரின்
உலக மெல்லா நிலைதளர்ந் தழியும்
அற்றே யன்றிக் கொற்றக் கோமான்
தானுந் தனிமையொ டென்றலை வந்தனன்
ஆறு வுவகையி னமைந்தபுக ழுடையன்
மேனாட் கொண்ட மிகுதுயர் நீக்கி
மறுத்தல் 4 செல்லாச் சிறப்பு முந்துறீஇ
அற்றமி னண்பின் யாப்பே யன்றியோர்
சுற்றப் பந்தமும் வேண்டினே 5 னென்றனன்

பி - ம். 1 செவ்வாய்த். 2 புணர்த்திப். 3 நிறைவளி. 4 செல்லான். 5 னென்றெங.

கொற்றவன் வலித்த திற்றென வுரைப்பச்

(உதயணன் எண்ணுதல்)

செருவடு குருசி லொருபக ருனும்
மறுமொழி கொடாஅன் மனத்தே நினைஇ
நறுமலர்க் கோதையை நாட்பூங் காவினுட்
கண்ணுறக் கண்டதுங் கரந்தகம் புக்கதும்
திண்ணிதி னறிந்தோர் தெரிந்துதனக் குரைப்ப
ஆராய்ந் ததனை யறிந்ததை யொன்றுகொல்
கருதி வந்த காவல குமரனும்
பொருகளத் தவிந்தனன் பொருளிவற் கீதல்
பின்னன் றுகு மென்பதை நாடி
நன்னர் நோக்கி நயந்ததை யொன்றுகொல்
கோல்வளைப் பணைத்தோட் கொடுங்குழைக் காதின்
நீலத் தன்ன நெறியிருங் கூந்தலைப்
பால்வகை புணர்க்கும் படிமை கொல்லென
இனையவை பிறவு மனவயி னினைஇ
யான்குறை கொள்ளும் பொருளினை மற்றிவன்
தான்குறை கோட றவத்தது வினைவென
உவந்த வுள்ளமொடு கரந்தன னுரைக்கும்

(உதயணன் தன்விருப்பத்தை வெளிப்படுத்தாமல் கபடமாக மறுத்துரைத்தல்)

மண்ணகத் திறைவன் மறமாச் சேனன்
ஒண்ணுதற் பாவை யொருபெருங் கிழத்தி
மண்ணக வரைப்பின் மகளிர் மற்றுத்தன்
வனப்பெடுத் துரைக்கென வயங்கழற் குளிப்ப
மனத்தெழு கவற்சியொடு மண்முத னீக்கி
நயத்தகு மாதரொ டமைச்சனை யிழந்தினி
வாழே னென்று வலித்த நெஞ்சமொடு
போகிய தெல்லாம் பொய்யே போலும்
1 இன்ப மெய்தலெ னன்பவட் கொழிந்தனென்
வாழ்ந்த காலை யல்ல தியாவர்க்கும்
ஆழ்ந்த காலை யன்பு மில்லெனப்

பி - ம். 1 இன்பமெய்தலும்.

21006

புறத்தோ ருரைக்கும் புன்சொற் கட்டுரை
நிறத்தே றெஃகி னனைய வாதலின்
ஒத்த நிலைமையே னல்லே னொழிகென
வத்தவர் கோமான் வஞ்சமொடு மறுப்ப

(அமைச்சன் கூறுதல்)

மிக்க பெருங்குடிப் பிறந்த மாந்தர்க்
கொப்பின் றம்மநின் னுரையென வணங்கி
மத்த யானை வணக்கு நல்லியாழ்
வித்தக வீரவனு பெற்றனென் யானென
மறுத்து மந்திரி குறைக்கொண் டிரப்பத்

(உதயணன் உடன்படல்)

தெரிபொருட் கேள்வித் தெரிசக குமரன்
தானு நீயு மாகல் [1] வேண்டலின்
மாற்று மாற்ற மில்லென மற்றவற்
கருளொடு புணர்ந்த வன்புமிகு கட்டுரை
பொருளொடு புணர்ந்தவை பொருந்தக் கூறலின்

(அமைச்சன் தருசகன்பால் மீளல்)

அமைப்பருங் கரும மமைத்தனன் யானென
அமைச்சன் மீண்டன னகநனி புகன்றென்.

உக—மகட்கோடை வலித்தது முற்றிற்று.

உஉ—பதுமாபதி வதுவை.

(அமைச்சன் தருசகனுக்குக் கூறல்)

அகநனி புகன்றாண் டமைச்சன் போகித்
தகைமிகு தானைத் தருசகற் குறுகி
மாற்றோர்ச் சாய்த்தவன் மறுத்த வண்ணமும்
ஆற்றல் சான்றவவ னன்புகந் தாகத்
தொல்லுரைக் கயிற்றிற் றொடரப் பிணிக்கொளீஇ
வல்லிதி னவனை வணக்கிய வண்ணமும்
பல்பொரு ளாளன் பணிந்தன னுரைப்ப

பி - ம். 1 வேண்டினும்.

(தருசகன் மகிழ்தல்)

உவந்த மனத்தி னிகழ்ந்ததை மதியாக்
கொடுக்கும் [1] கேண்மை கோமகன் புரிய

(உதயணன் எண்ணுதல்)

வடுத்தொழி லகன்ற வத்தவர் பெருமகன்
மாய வுருவொடு மாடத் தொடுங்கிய
ஆய கேண்மைய னந்தண னென்பது
சேயிழை மாதர் [2] தேறல ளாகி
ஒன்றுபுரி யுள்ளமொ டொன்று ளாதலின்
நன்றுபுரி நாட்டத்து நானவ ளுதல்
அறியத் தேற்றுவோ ரயல்வே றில்லென
நெறியிற் கொத்த நீர்மை நாடி

(உதயணன் வயந்தகனைத் தருசகன்பால் அனுப்பல்)

[3] வயத்தகு நோன்றாள் வயந்தகற் றழீஇ
இசைச்ச னென்னு மென்னுயிர்த் தோழன்
அருமறை நாவி னந்தண னவன்றனக்
கிருமுது குரவரு மிறந்தன ராதலின்
வேதத் தியற்கையி னேதந் தீரக்
கிரிசையின் வழாஅ வரிசை வாய்மையோர்
அந்தணன் கன்னியை மந்திர விதியின்
அவன்பாற் படுத்த பின்ன ரென்னையும்
இதன்பாற் படுக்க வெண்ணுக தானென
என்கூற் றாக வினையக் கூறி
முன்கூற் றமைத்து முடித்தனின் கடனென

(வயந்தகன் தருசகன்பாற் சென்று கூறல்)

வயந்தக குமரனு நயந்தது நன்றென
இன்னொலிக் கழற்கான் மன்னனைக் குறுகிப்
பொருத்தம் படவவ னுரைத்ததை யுணர்த்தலின்

(தருசகன் யாப்பியாயினியை இசைச்சனுக்கு மணம் புரிவிப்பதாகச் சொல்லி விடுத்தல்)

விருப்பொடு கேட்டு விறல்கெழு வேந்தன்
நங்கை தோழி நலத்தொடு புணர்ந்த

பி - ம். 1 கொண்மோ. 2 தேர்வன. 3 வயத்தக.

அங்கலும் பணைத்தோ ளாப்பியா யினியெனும்
செழுக்கயன் மழைக்கட் சேயிழை யரிவை
ஒழுக்கினுங் குலத்தினும் விழுப்ப மிக்கமை
சென்றுரை செம்மற் கென்றவ னுருப்பட
வயந்தக குமரன் வந்து கூறத்

(உதயணன் முதலியோர் உடம்படல்)

தோழ ரெல்லாந் [1] தோழிச்சி யாகத்
தாழ்வ ளாமெனத் தாழாது வலிப்ப
நன்னெறி யறிபுநர் நாடெரிந் துரைப்பத்

(தருசகன் தன்தாயின் உடன்பாட்டை அறிதல்)

தன்னெறி வழாஅத் தருசக குமரன்
தற்பயந் தெடுத்த கற்பமை காரிகைக்
கோப்பெருந் தேவிக் கியாப்புடைத் தாகத்
தங்கை திறவயின் வலித்தது மற்றவள்
இன்பத் தோழியை யிசைச்சற் கிசைத்ததும்
தெருளக் கூறி யருள்வகை யறிந்து
வம்பி னென்று தம்பியல் வழாஅப்
பெருமூ தாளரை விடுத்தலிற் கேட்டே
திருமா தேவியுந் தேன்புரை தீஞ்சொற்
கணங்குழை மகளைக் காம னனைய
வணங்குசிலைத் தடக்கை வத்தவர் பெருமகற்
கெண்ணின னெனவே யுண்மலி யுவகையள்
அதி [2] நா கரிகத் தந்தணிக் கணியும்
முற்றணி கலங்கள் கொற்றவி கொடுப்பப்

(பதுமாபதியின் செயல்)

பதுமா நங்கையு மதன்றிற மறிந்து
மாணகற் பிரிந்தவென் மம்மர் வெந்நோய்க்
காண மாகிய வாயிழை தனக்கு
நீங்குதிற னுண்டெனிற் றீங்குதிற னறியேன்
விலக்குத லியல்பு மன்றாற் கலக்கும்
வல்வினை தானே நல்வினை யெனக்கென
ஒள்ளிழை மாத ருள்வயி னினைஇ

பி - ம். 1 தோழிக்கி. 2 நாகரகத்.

மடுத்தணி கலனு மாலையும் பிறவும்
கொடுத்தன ளாகிக் கோமான் பணித்த
வடுத்தீர் வதுவையின் மறந்தனை யொழியாது
வல்லே வாவென [1] மெல்லியற் புல்லிக்
கவற்சி கரந்த புகற்சிய ளாகிச்
சிறுமுதுக் குறைவி யறிவொடு புணர்ந்த
தாய ரியற்கை சேயிழைக் காற்றித்
தானுடை யுழைக்கல மெல்லாந் தரீஇச்
சேயொளிச் சிவிகையொடு சேயிழைக் கீயத்

(தருசகன் செயல்)

தங்கை தலைமை தன்னையு முவந்து
கொங்கலர் கோதையைக் கொடுக்குநா ளாதலின்
இலக்கணச் செந்தீத் தலைக்கையி னிரீஇ
இழுக்கா வியல்பி னிசைச்ச குமரன்
விழுப்பெரு விதியின் வேட்டவட் புணர்கென
முழுப்பெருங் கடிநகர் முழுதுட னுணரக்
கோப்பெரு வேந்தன் யாப்புறுத் தமைத்தபின்

(உதயணன் செயல்)

வதுவைச் செல்வத் தொளிநகைத் தோழனை
நீங்கல் செல்லான் பூங்கழ லுதயணன்
முதற்கோ சம்பியு மொய்புனல் யமுனையும்
சிதர்ப்பூங் காவுஞ் சேயிழை மாதர்
கண்டினி துறைவது காரண மாக
வண்டிமிர் காவின் மகதத் தகவயின்
வந்தனம் யாமென் றந்தணி கேட்ப
இன்னிசைக் கிளவி யிறைமக னிசைத்தலிற்

(யாப்பியாயினி உதயணனே மாணகனென்றுணர்தல்)

சின்னகை முறுவற் சேயிழை கேளா
வாணகை மாதரொடு மனைவயி னொடுங்கிய
மாணகன் வாய்மொழி யிதுவான் மற்றெனத்
தேனார் காந்தட் டிருமுகை யன்ன
கூட்டுவிர லகற்றிக் கொழுங்கயன் மழைக்கண்
கோட்டுவனண் மேலைக் குமரனை நோக்கி

பி - ம். 1 மெல்லியா.

ஐய மின்றி யறிந்தன ளாகி
வையங் காவலன் வத்தவர் பெருமகன்
பார்ப்பன வுருவொடு பதுமா நங்கையை
யாப்புடை நெஞ்ச மழித்தன னறிந்தேன்
ஒப்புழி யல்ல தோடா தென்பது
மிக்கதென் மனனென மெல்லிய னிளைஇ
நகைத்துணைத் தோழிக்கு [1] நன்னலத் தோன்றல்
தகைப்பெரு வேந்த னாகலின் மிகச்சிறந்
தானு நன்மொழி தானவட் கொண்டு
கோட்டிச் செவ்வியுள் வேட்டனள் விரும்பா
உரைத்த லூற்றமொடு திருத்தக விருப்ப

(யாப்பியாயினி பதுமாபதியைக் காணல்)

இயைந்த வதுவை யெழுநா ளீங்கலும்
பசும்பொற் கிண்கிணிப் பதுமா நங்கையும்
நயந்த தோழி நன்னலங் காணும்
விருப்பின ளாகி விரைந்திவண் வருகெனத்
திருக்கிளர் சிவிகையொடு சிலதரை விடுத்தலின்
ஆரா [2] வன்பினொ டகன்ற வெழுநாள்
ஏழாண் [3] டமைந்தன தன்மைய ளாயினும்
நலங்கவர்ந் தகன்ற நண்பனைக் கண்டனென்
புலம்பினி யொழிக புனைவளைத் தோளி
வளங்கெழு தானை வத்தவ னுமென
விளங்கக் கூறும் விருப்பு நாணும்
தேறிய தோழி யேறினள் சென்றுதன்
துணைநலத் தோழிமுன் மணநலக் கோலமொடு

(பதுமாபதி கூறல்)

நாணிநின் றேனைநின் பூணிள வனமுலை
புல்லின துண்மையிற் புல்லேன் யானென
மெல்லியன் மாதர் நகுமொழி பயிற்ற

(யாப்பியாயினி கூறுதல்)

நினக்கு மொக்குமஃ தெனக்கே யன்றென

பி - ம். 1 நன்னலந்தோன்ற. 2 வனப்பினொ 3 டமைந்ததன்ன தன்மையை.

மனத்தி [1] னன்னோண் மறுமொழி கொடுப்பச்
சின்னகை முகத்த ணன்னுதல் வாவென
நுகர்ச்சியி [2] னுகந்த வனமுலை நோவப்
புகற்சியொடு புல்லிப் புணையிழை கேண்மதி
வண்டார் மார்பின் வடிநூல் வயவனைக்
கண்டே னன்ன தன்மைய னாகிக்
கள்ள வுருவொடு கரந்தகத் தொடுங்கிநின்
உள்ளங் கொண்ட வுறுவரை மார்பன்
வசையி னோன்றாள் வத்தவர் பெருமகன்
உதையண குமரன் போலு முணர்கெனச்
சிதைபொரு ளில்லாச் சின்னெறிக் கேண்மை
மணங்கமழ் மாதர் துணிந்தன ளுரைப்ப

(பதுமாபதி கூறுதல்)

நின்னை வேட்ட வந்தண னவற்குத்
துன்னிய தோழனது முன்னே கேட்டனன்
பெருமக னுள்ளத் துரிமை [3] பூண்டவென்
அதிரா நன்னிறை கதுவாய்ப் படீஇத்
தணத்த றகுமோ நினைக்கெனக் கலங்கித்
திருவிழை [4] தெரியா டிட்பங் கூறப்

(யாப்பியாயினியின் செயல்)

பின்னருங் காண்பா மன்ன ளுகுதல்
[5] பொன்னே போற்றெனத் தன்மனைப் பெயர்ந்து
நன்னுத னிலைமை யின்னதென் றுரைக்கவம்

(உதயணன் செயல்)

மாற்றங் கேட்டவட் டேற்றல் வேண்டி
வத்தவர் பெருமகன் வண்ணங் கூட்டிச்
சித்திரக் கிழிமிசை வித்தக மாக
உண்கட் கிழமையுட் பண்பிற் றீராது
மறைப்பியல் வழாஅக் குறிப்புமுத றொடங்கி
ஆங்கப் பொழுதே பூங்குழை புணர
வாக்கமை பாவை வகைபெற வெழுதி

பி - ம். 1 னன்றோண். 2 னுகர்ந்த. 3 பூண்ட வெனறீரா. 4 தெறியா. 5 பொன்றே.

வாணுதன் மாதரொடு மனைவயி னிருப்புழி
உருவக் கோயிலு ளிரவுக் குறிவயின்
வெருவக் குழறிய விழிகட் கூகைக்
கடுங்குர லறியாள் கதுமென நடுங்கினள்
ஒடுங்கீ ரோதி யென்பதை யுணர்த்தென

(யாப்பியாயினி செயல்)

மன்னவ னுரைத்த மாற்றமு மன்னவன்
தன்னொப் பாகிய தகைநலப் பாவையும்
கொண்டனள் போகிக் கோமகட் குறுகி
வண்டலர் படலை வத்தவன் வடிவிற்
பாவை காட்டிப் பைங்கொடி யிதுநம்
ஆய்பூங் காவி னந்தண வுருவொடு
காந்துநலங் கவர்ந்த காவலன் வடிவெனத்

(பதுமாபதி செயல்)

திருந்திழை மாதர் திண்ணிதி னோக்கி
இன்னுயிர்க் கிழவ னெழுதிய பாவை
என்னும் வேற்றுமை யில்லை யாயினும்
ஓராங் கிதனை யாராய்ந் தல்லது
தீண்டலுந் தேறலுந் திருத்தகைத் தன்றெனப்
பூண்டயங் கிளமுலைப் புனைவளைத் தோழி
உள்ளே நினைஇக் கொள்ளா ளாக
நள்ளென் யாமத்து நன்னுதல் வெரீஇய
புள்ளி னற்குறி யுரைத்தலும் பொருக்கெனப்

(பதுமாபதியின் மகிழ்ச்சி)

பெருவிறற் கொழுந னின்னுயிர் மீட்டுப்
பெற்ற வொழுக்கிற் பெரியோள் போலச்
செங்கடை மழைக்கட் சேயிழைத் தோழியை
அங்கை யெறிந்து தங்கா விருப்பமொடு
காமக் காதலன் கைவினைப் பொலிந்த
ஓவியப் பாவையை யாகத் தொடுக்கி
நீண்ட திண்டோ ளண்டுவன ணக்கு
நெஞ்சங் கொண்ட நெடுமொழி யாள
வஞ்ச வுருவொடு வலைப்படுத் தனையெனப்

புலவி நோக்கமொடு நலமொழி நயந்து
கோமான் குறித்ததுந் தோழி கூற்றும்
தானொருப் பட்ட தன்மைய ளாகிச்
செல்லா நின்ற சின்னா ளெல்லை

(மணத்துக்குரியன செயப்படுதல்)

நன்னாட் டலைப்பெய னன்றென வெண்ணிக்
கோட்டமி லுணர்விற் கொற்றவன் குன்றாச்
சேனைப் பெருங்கணி செப்பிய நன்னாட்
டாணைத் தலைத்தாட் டானறி வுறுத்தலின்
வையக விழவிற் றானுஞ் செய்கையின்
அழுங்க னன்னக ராவணந் தோறும்
செழும்பல் யாணர்ச் சிறப்பின் வழாஅது
வண்ணப் பல்கொடி வயின்வயி னெடுத்தலின்
விண்வேய்ந் தன்ன வியப்பிற் றாகிப்
பெருமதி லணிந்த திருநகர் வரைப்பின்
ஆய்ந்த கேள்வி மாந்தரு மகளிரும்
ஆரா வுவகைய ராகிய காலைச்
சோரார்க் கடந்த சேதியர் மகனையும்
மதுநா றைம்பாற் பதுமா பதியையும்
மரபிற் கொத்த மண்ணுவினை கழிப்பிய
திருவிற் கொத்துத் தீதுபிற தீண்டா
நெய்தலைப் பெய்து மையணி யுயர்நுதல்
இருங்களிற் றியானை யெருத்திற் றந்த
பெருந்த ணறுநீர் விரும்புவன ராட்டிப்
பவழக் கொட்டைப் பொற்செருப் பேற்றித்
திகழ்செய் கோலத் திருமணை யிரீஇச்

(பதுமாபதியைக் கோலஞ்செய்தல்)

செங்கயற் கண்ணியை நங்கை தவ்வையர்
கோல மீத்தக வாலணி கொளீஇத்
திருந்தடி [1] வணங்கி வருந்த லோம்பிப்
பீடத் திரீஇய பாடறிந் தேற்றி
நறுநீர்த் துவர்க்கை வயின்வயி னுரீஇக்
கறைமாண் காழகிற் கொழும்புகை கொளீஇ

பி - ம். 1 வணங்கிரீ.

நெறித்து நெறிப்பட வாருநர் முடித்து
மங்கல நறுஞ்சூட்டு மரபி னணிந்து
வல்லோன் வகுத்த நல்வினைக் கூட்டத்
தியவனப் பேழையு ளடைந்தோ ரேந்திய
தமனியப் பல்கலந் தளிரியன் மாதர்
ஆற்றுந் தகையன வாற்றுளி வாங்கி
வெண்சாந்து [1] வரித்த வஞ்சி லாகத்
திணைமுலை யிடைப்பட் டிலங்குபு பிறழும்
துணைமலர்ப் பொற்கொடி துளங்கு நுசுப்பினை
நிலைபெற விசிப்பது போல [2] வேர்ப்ப
மேற்பாற் பிறையென விளங்க வமைந்த
தொருகா ழார மொளிபெற வணிந்து
திருக்கேழ்க் களிகை செவ்வனஞ் சேர்த்திப்
பைம்பொற் றிலகமொடு பட்ட மணிந்த
[3] ஒண்கதிர் மதிமுக மொளியொடு சுடரச்
செம்பொ ன்னோலை சேடுபடச் சுருக்கி
ஐவகை வண்ணத் தந்நுண் மேகலை
பையர வல்குற் பரப்பிடை யிமைப்பக்
கொய்துகொண் டுடீஇய கோடி நுண்டுகில்
மைவளர் கண்ணி மருங்குல் வருத்தக்
கடுங்கதிர் முத்துங் கைபுனை மலரும்
தடந்தோட் கொப்ப வுடங்கணிந் தொழுகிய
சின்மயிர் முன்கைப் பொன்வளை முதலாக்
கண்ணூர் கடகமொடு கைபுனைந் தியற்றிய
சூடகத் தேற்ற சுடரொளிப் பவளமொடு
பாடக நூபுரம் பரட்டுமிசை யாற்ற
ஆடமைத் தோளியை யணிந்துமுறை பிறழாது
வதுவைக் கேற்ற மங்கலப் பேரணி
[4] அதிநா கரிகியை யணிந்தன ரமைய

(உதயணனைக் கோலஞ் செய்தல்)

ஓங்கிய பெரும்புக ழுதயண குமரனைத்
தாங்கருந் தோழர் தாம்புனைந் தணியக்
கடிநாட் கோலத்துக் காம னிவனென

பி - ம். 1 விரித்த. 2 வேற்ப. 3 வெண்கதிர். 4 அதிநாகரகியை

நெடுநகர் மாந்தர் நெஞ்சந் தெளியக்
காட்சிக் கமைந்த மாட்சி யெய்த

(உதயணன் மணமண்டபம் புகுதல்)

வெற்ற வேந்தன் கொற்றப் பெருங்கணி
கூறிய முழுத்தங் குன்றுத லின்றி
ஆர்வச் செய்தொழி லகன்பெருங் கோயிலுள்
ஆயிரம் பொற்றூ ணணிமணிப் போதிகைக்
காய்கதிர் முத்தங் கவினிய வணிமின்
அத்தூ ணடுவ ணொத்த வுருவின
சந்தனப் பெருந்தூ ணொன்பது நாட்டிய
மைந்த ரழகிற் கேற்ற........................
....
அழன்மணி நெடுமுடி யரசரு ளரசன்
நிலமமர் செங்கோ ணித்தில மோர்தரத்
தலைமலை படலைத் தருசகன் புகுந்து
தீவேள் சாலை திறத்துளி மூட்டிப்
புகுதுக வத்தவ னென்றலிற் பூந்தார்
அரசிளங் குமரரொ டண்ணல் புகுதரக்

(பதுமாபதி வருகை)

கதிர்மதி முகத்தியைக் [1] காவல் கண்ணி
ஆயிரத் தெண்மர் பாங்கிய ரன்னோர்
பாசிழைத் தோழியர் பாடகஞ் சுடரத்
தண்பெரும் பந்தருட் கண்பிணி கொள்ள
உயர்வினு மொழுக்கினு மொத்தவழி வந்த
மங்கல மன்னற்கு மந்திர விழுநெறி
ஆசான் முன்னின் றமையக் கூட்டித்
தீமாண் புற்ற திருத்தகு பொழுதிற்
புதுமலர்க் கோதைப் பூந்தொடிப் பணைத்தோட்
பதுமா நங்கையைப் பண்புணப் பேணி
மணநல மகளிர் மரபிற் கொத்தவை
துணைநல மகளிரொடு துன்னிய காதல்
மூதறி மகளிர் முடித்த பின்றை

பி - ம். 1 காவலன்.

(உதயணன் பதுமாபதியை மணம்புரிந்து கொள்ளல்)

ஏதமில் காட்சி யேயர் பெருமகன்
நன்னுதன் மாதரை நாட்கடிச் செந்தீ
முன்முத விரீஇ முறைமையிற் றிரியா
விழுத்தகு வேள்வி யொழுக்கிய லோம்பிச்
செம்பொற் பட்டம் பைந்தொடிப் பாவை
மதிமுகஞ் சுடர மன்னவன் சூட்டித்
திருமணிப் பந்தருட் டிருக்கடங் கழிப்பி
ஒருமைக் கொத்த வொன்றுபுரி யொழுக்கின்
வல்லோர் வகுத்த வண்ணக் கைவினைப்
பல்பூம் பட்டிற் பரூஉத்திரட் டிருமணிக்
காலொடு பொலிந்த கோலக் கட்டிற்
கடிநாட் செல்வத்துக் காவிதி மாக்கள்
படியிற் றிரியாது படுத்தனர் வணங்கப்
பட்டச் சின்னுதற் பதுமா பதியொடு
கட்டிலே றினனாற் கருதியது முடித்தென்.

௨௨—பதுமாபதி வதுவை முற்றிற்று.

௨௩—படையெழுச்சி.

(உதயணன் செயல்)

கட்டி லேறிய காவல் வேந்தன்
ஒட்டிய நண்பி னுருமண் ணுவாவினை
விடுத்தல் வேண்டும் வல்லே விரைந்தெனத்
தடுத்த பெரும்புகழ்த் தருசகற் குணர்த்தித்
தெய்வமும் விழையு மைதவழ் கோயிலுள்
ஆடல் கண்டும் பாடல் கேட்டும்
மிசையுல கெய்திய வசைவி லாக்கத்
தண்ண னெடுமுடி யமரிறை போலப்
பண்ணொலி [1] யரவத் துண்மகிழ் வெய்திக்
கழுமிய காதலொடு கவவுக் கைவிடா
தொழுகுங் காலை நிகழ்பொருள் கூறுவேன்

பி - ம். 1 யரவத்தின்மகிழ்.

(தருசகன் எண்ணுதல்)

தம்முறு கருமந் தாஞ்சேர்ந் ததுவெனப்
பின்னிது முடித்தல் பெருமை யன்றால்
முன்னுப காரத்து நன்ன ராற்றிய
நட்பு மன்றி நம்மொடு கலந்த
சுற்ற மாதலிற் சுடர்ப்பூ ணுதயணன்
அற்ற மெல்லா [1] மறிந்தன மாகிக்
கொற்றநன் ஞடு கொண்டனங் கொடுத்தல்
கடனமக் கதுவென விடனுறு சூழ்ச்சியுன்

(தருசகன் உதயணனுடன் அமைச்சர்முதலியோரை விடுத்தல்)

தாமே சென்று தம்வினை முடிக்கும்
மாமாத் தியருண் மதிமீக் கூறிய
பகைப்புலந் தேய்க்கும் படைத்திறற் றடக்கை
வகைப்பொலி மான்றேர் வருட காரனும்
வீர வென்றி விறல்வெந் துப்பிற்
றூரணி மார்பிற் றூர காரியும்
செருமிகு சேனைச் செய்தொழி னவின்ற
பொருமா ணூக்கத்துத் தரும தத்தனும்
பத்திப் பைம்பூட் சத்திய காயனொடு
வேல்வருந் தானை நால்வரு முதலா
இருநூ றானையு மிராயிரங் குதிரையும்
அறுநூற் றிரட்டி யடன்மணித் தேரும்
அறுபதி னாயிர ரெறிபடை மள்ளரும்
திருமணிச் சிவிகையும் பொருவினைப் படாகையும்
[2] செங்காற் பாண்டிய னன்று பூண்ட
பைம்பொ னார்தியும் பவழக் கட்டிலும்
படாஅக் கொட்டிலும் பண்டிபண் டாரமும்
கடாஅக் களியானைக் காவலற் கியைந்த
பணைத்தோட் சிலசொற் பதுமா நங்கைக்
கமைக்கப் பட்ட வகன்பரி யாளமும்
அன்னவை யெல்லா மங்கிலை நல்கி
மன்ன குமரனொடு செல்கெனச் செப்பாச்

பி - ம், 1 மறிந்தனனாகி, 2 செங்கோற்,

செயற்படு கரும மெல்லா மற்றவற்
கியற்பட வீவலென் றமைச்சரொடு கிளந்து
வேறுவே றுகத் தேறக் காட்டி
நினக்கே யவனை நிறுத்துதல் கடனென

(தருசகன் கூற்று)

அவர்க்கே யவர்க்கே யருளுரை யளைஇ
வடுத்தொழி லகன்ற வருட கார
உடற்றுநர்க் கடந்த வுதயண குமரன்
அடைக்கல நினக்கென வவன்வயிற் கையடுத்
தோம்படைக் கிளவி பாங்குறப் பயிற்றி
நிலைமை யறிய நீட்ட மின்றி
மறைபுறப் படாமை மனத்தே யடக்கி
ஒற்றொற் றியவரை யொற்றி னாய்ந்து
முன்னங் கொள்ளு முபாய முயற்சியொடு
நாவாய் தொகுத்து நளிபுனற் பேரியாற்
றார்மடி கங்கு னீர்நெறி போகி
மலையர ணடுங்க நிலையர ணடுங்க
ஒற்றி னுமுபாயத் தானும்
ஆற்றல் சான்ற வாருணி தொலைச்சிக்
கோற்றொழிற் கொற்றங் கொடுத்துநீர் பெயர்மினென்
றேற்றுரி முரசி னிறைமகன் பணித்த

(படை எழுதல்)

மாற்ற மெல்லா மனத்தகம் புகற்றக்
1 கூற்றிய றகையர் கொற்ற மஃகென
ஓங்கிய தோற்றத் துதயணற் றழீஇச்
செழுங்கோ சம்பிச் செம்முக முன்னி
எழுந்தது மாதோ பெரும்படை யிருளென்.

௨௫—படையெழுச்சி முற்றிற்று.

பி - ம். 1 கூற்றியல்கையா.

௨௪—மேல்வீழ் வலித்தது.

(உதயணனுக்குத் தருசகன் விடைகொடுத்தல்)

இருளிடை யெழுந்த விகலடு பெரும்படை
அருளுடை வேந்தன் வழிதொடர்ந் தொழியான்
வான்றோய் பெரும்புகழ் வத்தவ ரிறைவற்குத்
தேன்றோய்த் தன்ன திருமொழி யளைஇ
இடையற வில்லா வின்பமொ டுயர்ந்த
நன்குடைக் கேள்விமுத னின்கட் டோன்றிய
கலக்கமி னிலைமையுங் கைம்மா றில்லதோர்
கிளைப்பெருந் தொடர்ச்சியும் பயந்தவின் றெமக்கென
அற்புத்தளைக் கிளவி பற்பல பயிற்றிப்
பீடுகெழு தானைப் பிரச்சோ தனற்குக்
கூடிய கிளைமைக் குணம்பல கூறி
ஓடுகா விளையரை யோலையொடு போக்கின்
நாடுவ தல்ல தவனு நம்மொடு
தீது வேண்டா நிலைமைய னாகும்
மலைத்தலைத் தொடுத்த மல்லற் பேரியாற்றுத்
தலைப்பெயன் மாரியிற் றவிர்த லின்றி
நிலைக்களந் தோறுங் கொலைப்படை விடுத்தபின்
யானும் வேண்டின் வருகுவ னேனைச்
சேணில மன்னர் கேண்மை யுடையோர்க்
கறியப் போக்கி னவர்களும் வருவர்
செறியச் செய்த குறியினி ராமின்
நிலம்படக் கிடந்தநின் னேமியந் தடக்கை
வலம்படு வினைய வாகெனப் பல்லூழ்
பொய்யா வாய்ப்புண் மெய்பெறக் கிளந்து
திருவள ரகல மிருவருந் தழீஇப்
பிரிய லுற்ற தரிசகற் குரைக்கும்

(உதயணன் தருசகன்பாற் கூறுதல்)

இருமண மெய்திய வின்ப மெல்லாம்
உருமண் ணுவாவினை யுற்றதற் பின்னை
ஐம்மூன் நாளி னவனைச் சிறைவிடுத்

தெம்முன் ஞகத் தருதனின் கடனென
அமைச்சன் பெருமையு மரசன தார்வமும்
மனத்தி னுவந்து மகதவர் கோமான்
அது [1] வொருப் பட்டாங் ககன்ற பின்னர்

(உதயணன் செயல்)

உதயண குமர னுரிமை தழீஇ
[2] அடற்பே ரியானையு மலங்குமயிர்ப் புரவியும்
படைக்கூழ்ப் பண்டியும் பள்ளி வையமும்
நடைத்தே ரொழுக்கு [3] நற்கோட் டூர்தியும்
இடைப்படப் பிறவு மியைந்தகம் பெய்து
கொடிப்படை போக்கிப் படிப்படை நிறீஇப்
புடைப்படை புணர்த்துப் [4] புள்ளிற் போகி
மள்ளரொடு புணர்ந்த மாண்பிற் றாகிக்
கள்ளரொடு புணர்ந்த கட்டரண் குறுகிப்
போர்மேற் கொண்ட புகற்சியன் புரவலன்
ஆர்மேற் போங்கொ லஞ்சுதக வுடைத்தெனச்
சேனை மன்னர் சிந்தையுட் டேம்ப
வலிப்பது தெரிய வொலித்துடன் குழீஇ
விட்டன னிருந்த காலை யொட்டிய

(தம்பியருடைய வரவை வயந்தகன் கூறல்)

எழுச்சி வேண்டி யூகி விட்ட
அருமறை யோலை யாய்ந்தன னடக்கி
வரிமலர்ப் படலை வயந்தக னுரைக்கும்
பின்னிணைக் குமரர் பிங்கல கடகர்
இன்னுக் காலை யெள்ளி வந்த
பருமு யானைப் பாஞ்சால ராயன்
அருமுர ணழிய நூறலி னவனமர்க்
காற்று ருடைந்து நோற்றே ரொடுங்கும்
குளிர்நீர் யமுனைக் குண்டுகயம் பாய
வளியியற் புரவி வழிச்செல விட்டவர்
பொன்னியற் புரிசையோர் பெண்ணுறை பூமி

பி - ம். 1 வொருபொருட்டாங்கு. 2 அடற்பெயர். 3 நற்கட்டேர் இ. புனலிற்.

அவணெதிர்ப் பட்டாஅங் கிவணகம் விரும்பா
தீரா றிங்க ளிருந்த பின்றை
[1] ஆரா ணகர மாண்டன னெழுகும்
ஆருணி யரசன் வார்பிணி முரசம்
நிலனுட னதிர நெருப்பிற் காய்ந்து
தலமுதற் கெடுநோய் தரித்த லாற்றார்
போந்தனர் போலும் புரவல மற்றுநம்
ஓங்கிய பெருங்குல முயர்தற் குரித்தென்

(உதயணன் செயல்)

றுங்கவ னுரைப்ப வமர்படக் கடந்த
தடக்கை கூட்டித் தாங்கா வுவகையொடு
படைப்பெரு வேந்தன் பல்லூழ் புல்லி
இருவயி னுலக [2] மியையப் பெற்ற
பெருமகன் போலு வுவகையுட் கெழுமிப்
பொருமுர ணண்ணல் புகன்ற பொழுதிற்

(படைகள் ஈண்டுதல்)

பாடுபெறு சிறப்பிற் பைந்தார் மன்னன்
சேடுபடு வத்தஞ் சேர்வது பொருளென
அறியக் கூறிய குறிவயிற் [3] றிரியார்
[4] முன்னீ ராயினு முகந்துடன் புகுவோர்
பன்னீ ராயிரம் படைத்தொழி லிளையரொ
டற்றக் காலைக் கமைக்கப் பட்ட
கொற்றத் தானையுங் குழூஉக்கொண் டீண்டத்

(தம்பியர் உதயணனை இறைஞ்சிப் புலம்பிக் கூறுதல்)

தப்பினெ ரென்ற தம்பியர் வந்தவன்
பொற்கழற் சேவடி பொருந்தப் புல்லி
ஓர்த்தனந் தேறி யுறுதிநோக் காது
[5] சேர்த்தியில் செய்கையொடு சிறைகொளப் பட்டுப்
பெருங்குடி யாக்கம் பீடற வெருளி
அருங்கடம் பூண்ட வவியாக் காதலொடு
பயந்தினி தெடுத்த படைப்பருங் கற்பினம்

பி - ம். 1 வாராணகர. 2 மெய்தப். 3 றெறியார். 4 முந்நீர். 5 சேர்ச்சியில்.

கொற்ற விறைவிக்குக் குற்றேல் பிழையா
தொருங்கியா முறைத லொழிந்தது மன்றி
இருங்கடல் வரைப்பி னினியோ ரெடுத்த
இறைமீக் கூறிய விராமன் றம்பி
மறுவொடு பெயரிய மதலைக் கியைந்த
ஆணைப் பெரும்புகழ் யாமு மெய்தத்
தேனார் தாமரைத் திருந்துமலர்ச் சேவடி
வழிபா டாற்றலும் வன்கணி னீத்தனெம்
கழிபெருஞ் சிறப்பிற் காவல் வேந்தே
இம்மை யென்ப தெமக்குநெறி யின்மையின்
முன்னர்ப் பிறப்பின் மூத்தோர்ப் பிழையா
துடன்வழிப் படூஉ [1] முறுதவ மில்லாக்
கடுவினை யாளரேம் யாமெனக் கலங்கிப்
பொள்ளெனச் சென்னி பூமி தோய
உள்ளழல் வெம்பனி யுகுத்தரு கண்ணீர்த்

(உதயணன் தம்பியரைத் தழுவிக் கூறுதல்)

துன்பமொ டிறைஞ்சிய தம்பியர்த் தழீஇ
இருபான் மருங்கினுந் திரிதருங் கண்ணின்
அழறிரண் டன்ன வாலி சோர்ந்தவர்
குழறிரண் டணவருங் கோல வெருத்திற்
பல்லூழ் தெறித்தெழப் புல்லி மற்றுநும்
அல்லல் காண்பதற் கமைச்சுவழி யோடாப்
புல்லறி வாளனேன் செய்தது நினைஇக்
கவற்சி வேண்டா காளைக ளினியென
அகத்துநின் றெழுதரு மன்பிற் பின்னிக்
குளிர்நீர் நெடுங்கடற் கொண்ட வமிழ்தென
அளிநீர்க் கட்டுரை யயனின் றோர்க்கும்
உள்ளம் பிணிப்ப வொன்ற வுரைத்தினி
எள்ளு மாந்த ரெரிவாய்ப் பட்ட
பன்னறப் பஞ்சி யன்ன ராகென
வெகுளித் தீயிற் கிளையறச் சுடுதல்
முடிந்த திந்நிலை முடிந்தன ரவரெனச்

பி - ம். 1 வுறுதவ.

செப்பிய மாற்றம் பொய்ப்ப தன்றாற்
[1] பொரக்குறை யிலமென [2] விரப்ப வின்புற்
றிளையோர் தம்மோ [3] டன்றவட் கிரங்கிக்
களைக ணாகிய காதலந் தோழனை
வளையெரிப் பட்ட தெளிபே ரன்பிற்
றளையவிழ் கோதையொடு தருதலும் பொருளோ
நும்மைத் தந்தென் புன்மை நீக்கிய
உம்மைச் செய்த செம்மைத் தவத்தனென்த்
தம்பியர் தாமரைத் தடங்கண் சொரியும்
வெம்பனி துடைத்துப் பண்புளி பேணிக்
கண்ணுற வெய்திய கருமம் போல
மண்ணுறு செல்வ நண்ணு நமக்கென

(உதயணன் அமைச்சர்களுடன் ஆராய்தல்)

அன்னவை கிளந்த பின்னர்த் தன்னோ
டொன்றுற் கொள்ளு முபாய நாடி
வருட காரனொ டிடவகற் றழீஇ
அளப்பருங் கடுந்திற லாருணி யாருயிர்
கொளப்படு முறைமை கூறுமி னெமக்கென

(வருடகாரன் கூற்று)

வருட காரன் வணங்கினன் கூறும்
இருளிடை மருங்கின் விரைவன ரோடி
அற்ற மிதுவென வொற்றர் காட்டிய
நீணிலை நெடுமதி லேணி சாத்தி
உள்ளகம் புக்கு நள்ளிரு ளடுநாள்
முதுநீர்ப் பௌவங் கதுமெனக் கலங்கக்
கால்வீழ் வதுபோன் மேல்வீழ் மாத்திரம்
விள்ளாப் படையொடு வேறுநீ யிருப்பக்
கொள்ளா வேந்தனைக் கோயிலொடு முற்றிச்
சேவக நிலைஇக் காவ ரேறும்
ஆறீ ராயிர மறியப் பட்ட
வீரரை விடுத்துப் போர்செயப் போக்கித்
துயிலும் பொழுதிற் றுளங்கக் குப்புற்

பி - ம். 1 போர்க்குறை. 2 வீர்ப்ப. 3 டன்றவர்க்.

றயிலுறு வெம்படை யழல வீசிக்
கதுவா யெஃகமொடு கடைமுத றோறும்
பதுவாய்க் காப்புறு படைத்தொழி லிளையரைப்
பாய லகத்தே சாய நூறி
மாவும் வேழமு மாமணித் தேரும்
தானைக் கொட்டிலொ டாணைக் காப்பமைத்
தொன்னார்க் கடந்த வுதயணன் வாழ்கென
இன்னாச் செய்தெம் மெழினகர் வெளவிய
குடிப்பகை யாள ரடைத்தகத் திராது
பெண்பாற் பேரணி நீக்கித் திண்பாற்
போரொடு மொன்றிற் போதுமின் விரைந்தெனக்
காரொலி முழக்கிற் கடுத்தன மார்ப்பக்
கதுமென நிகழ்ந்த கலக்கமொடு கல்லென
மதிதவழ் புரிசை வளநகர் கலங்கப்
பெருமழை நடுவ ணிருளிடை யெழுந்ததோர்
கடுவன் போலக் காவல னாறி
மகிழ்ச்சி யெய்தி மாற்றோ ரில்லெனும்
இகழ்ச்சி யேதந் தலைத்ததெனக் கின்றெனக்
[1] கவலை கூராக் கலங்கின னெழவும்

(பட்டத் தேவியின் கலக்கம்)

எழுந்த மன்னன் செழும்பூ ணகலத்
தீர்நறுஞ் சாந்தந் தாரொடு குழையப்
பாரத்தையர்த் தோய்ந்தநின் பருவரை யகலம்
திருத்தகைத் தன்றாற் றீண்டுத லெமக்கெனப்
புலவியி னடுங்கிப் பூப்புரை நெடுங்கண்
தலையளிச் செவ்வியி னமர்ப்பன விமைப்ப
ஆற்றா வனந்தரொ டசைந்த வின்றுயிற்
கூற்றார்ப் பிசைப்பிதென் னென்றனள் வெரீஇ
விசைப்புள் வெங்குர லிசைப்பக் கேட்ட
நாகப் பெதும்பையி னடுங்கி யாகத்
துத்தியுந் தொடரு முத்தொடு புரள
ஒளிக்கா சொருபாற் றோன்றத் துயிற்பதத்
தசைந்த வந்துகில் கையகத் தசைய

பி - ம். 1 கவராக கூறக்

நெகிழ்ந்த நீரிற் கண்கை யாக
முகிழ்ந்த முலைமுதன் முற்றத் தியைந்த
தருப்பை பொற்கொடி யாக விரக்கமோ
டோருயிர்க் கணவற்கு நீருகுப் பனள்போல்
முகங்கொள் காரிகை மயங்கல் கூராச்
சீரலங் காரச் சித்திர முடிமிசைத்
தாரணி கோதை தாழ்ந்துபுறத் தசைய
உற்றதை யறியா டெற்றென விரங்கி
ஆவி வெய்துயிர்ப் பளைஇயக முளைவனள்
தேவி திருமகன் றுணை பற்றி
ஆகுலப் பூசலி னஞ்சுவன ளெழவும்

(குற்றேவல் மகளிரின் துயரம்)

அருமணி திகழு மாய்பொன் மாடத்துத்
திருமணிக் கட்டிற் பாகத் தசைந்த
உழைக்கல மகளி ருள்ளழ லூர்தரக்
குழைக்கணி கொண்ட கோல வொண்முகத்
தரிபரந் தலமரு மச்சுறு கண்ணினர்
வெருவுறு பிணையின் விம்மாந் தெழாஅப்
பட்டதை யறியார் பகைப்புல வேந்தன்
கெட்டகன் றனனுன் மற்றி தென்னெனக்
கோயின் மகளி ராகுலப் பூசலொடு
வாயிலுந் தகைப்பு மறியார் மயங்கவும்

(நகரத்தார் மகிழ்ச்சி)

நகர மெல்லா முழுவது மறிந்து
திருவார் மார்பினெம் பெருமா னுதயணன்
கூற்றிடம் புக்கு மீட்டும் வந்தனன்
நம்பொருட் டாக நகர முற்றனன்
அமைச்சருந் தானு மமைத்த கருமம்
முடித்தன னாகலின் முற்றவ முடையம்
அன்றியின் வாரா ரதலி னெங்கோன்
வென்றி யெய்துதல் வேண்டுது நாமென
வெருப்பறை கொட்டி யுருத்துவந் தீண்டி
நமக்குப்படை யாகி மிகப்புகுந் தெற்றவும்

இன்றோ ரனையன வின்னு வெய்துற
ஒன்று மன்னனை யுயிருடன் பருகுதும்
இந்நிலை யருளென வெண்ணின னுரைப்ப
அந்நிலை நோக்கி மன்னனு முவந்து
பொருத்த முடைத்தென வொருப்பா டெய்திப்
புள்ளு மில்லா வொள்ளொளி யிருக்கையுள்
மறைபுறப் படாஅச் செறிவின ராகி
உளைப்பொலி மான்றே ருதயண னோடு
வலித்தனர் மாதோ வளைத்தனர் கொளவென்.

உச—மேல்வீழ் வலித்தது முற்றிற்று.

உரு—அரசமைச்சு.

வளைத்தனர் கொள்வது வலித்தன ரிருந்துழி
ஒளித்தகத் தொடுங்கிய வொற்ற ரோடிச்
சிலைப்பொறித் தடக்கையிற் சேதியர் பெருமகற்
கிசைத்தனர் புக்குநின் [1] றேத்தினர் கூறுவர்

(பகைப்புலன் அறிந்துவந்த ஒற்றர் கூற்று)

தாழ்ச்சி யின்றித் தருசகன் றமரோ
டேழ்ச்சியு மெறிபடை யளவுமெம் பெருமான்
சூழ்ச்சியுஞ் சூழ்பொருட் டுணிவு மெல்லாம்
படிவ வொற்றிற் பட்டாங் குணர்ந்து
கொடியணி வீதிக் கோநகர் வரைப்பிற்
படியணி வாயிலும் பரப்பு நாயிலும்
அற்றம் பட்டுழித் தெற்றெனத் திருத்திக்
குறும்புழை யெல்லாங் கூடெழுக் கொளீஇச்
செறிந்த பல்படை யறிந்தவ ணடக்கி
வாயின் மாடமொடு நாயி லுள்வழி
இரவும் பகலு மிகழாக் காப்பொடு
முரவுந் தூம்பு முழங்குபு துவைப்ப
ஆண்டகை யமைத்துப் பாம்புரி திருத்தி

பி - ம். 1 றேற்றனர்.

[1] அருஞ்சுழி நீத்தத் தாறுபுக வமைத்த
சுருங்கை வாயிற் பெருங்கத வொடுக்கிக்
கொடுந்தாழ் நூக்கி நெடும்புணை களைந்து
நீணீர்க் கிடங்கினுட் டோணி போக்கிக்
கல்லிடு கூடை பல்லிடத் தியற்றி
வில்லுடைப் பெரும்பொறி பல்வழிப் பரப்பிப்
பற்றறத் துறந்த படிவத் தோரையும்
அற்ற மின்றி யாராய்ந் தல்ல
தகம்புக விடாஅ திகந்துசே ணகற்றி
நாட்டுத் தலைவரை நகரத்து நிறீஇ
நகர மாந்தரை நாட்டிடை நிறீஇ
ஊரூர் தோறு முளப்பட் டோவா
ஆர்வ மாக்களை யருஞ்சிறைக் கொளீஇ
ஆணை கேட்ட வகலிடத் தெல்லாம்
ஓலை போக்கி யொல்லைவந் தியைகெனப்
பேணார்க் கடந்த பிரச்சோ தனற்கு
மாணாச் செய்தொழின் மனமுணக் காட்டி
அவமதித் தொழுகி யாணை யெள்ளி
மிகைசெய் திருந்ததன் மேலு மீட்டினி
மகத மன்னனு மதுகை யாகப்
பகைசெய வலித்தன னென்பது பயிற்றி
மந்திர வோலை போக்கிய வண்ணமும்
வெந்திறல் கலந்த விறல்வே சாலியொடு
[2] சங்க மன்னர்க்குத் தம்படை கூட்டி
விரைந்தனர் வருகென நினைந்துவிட் டதுவும்
மன்னடு நெடுவேன் மகத மன்னற்
கின்னது தருவே னென்றொடும் புணர்கெனத்
தன்னொடு பழகிய தமர்களை விட்டதும்
இன்னவை பிறவும் பன்னின பயிற்றிய
அறிந்தவொற் றாளர் செறிந்தன ருரைப்ப

(உதயணன் வருடகாரனுக்குக் கூறுதல்)

ஒற்று மாக்களை யொற்றறி றுயா
முற்றனக் குரைத்த மூவர் [3] வாயவும்

பி - ம். 1 அஞ்சுழி. 2 சங்கமன்னற்கு. 3 வாயவுள்.

ஒத்தது நோக்கி மெய்த்தகத் தேறி
இரவே றொளித்துச் செருமேந் தோன்ற
வளைத்திருந் தழிக்குவ மெனினே மற்றவன்
வலித்தது நாடி நலத்தகு நண்பின்
மிலேச்ச மன்னருங் கூடித் தலைத்தலை
வந்தவ னிதிப்பயங் கருதி முந்துற
முற்றுபு விடுப்பி னற்ற மீனும்
வேண்டா வஃதிவண் மீண்டிது கேட்கென
வாங்குசிலைத் தடக்கை வருட காரற்
கோங்குபுகழ் வென்றி யுதயண னிசைக்கும்
நின்னொ டென்னிடை [1] நீப்பிவ னுண்டெனத்
துன்னிய நமர்கட்குத் தோன்றக் கூறி
அவற்குப்பாங் காகிய வார்வல ருளரெனின்
மிகச்செறி வுடையையாய் விடுமதி விடூஉம்
மாற்றந் தன்னையு மோர்த்தனை கேண்மோ
ஆசில் செங்கோ லவந்தியன் மடமகள்
வாசவ தத்தையை வலிதிற் கொண்ட
மேனாட் காலை யானே [2] யவனைப்
பற்றுபு நம்பதி தருகுவே னென்றசொல்
முற்றல கெல்லா மொய்த்தொருங்கு தருதலின்
வத்தவ மன்னனு மெய்த்தகக் கேட்டுக்
கனலிரும் புண்ட நீரின் விடாது
மனவயி னடக்கி மறைந்தன னொழுகித்
தன்குறை முடிதுணைத் தானரு டோற்றி
நன்கினி துரைக்குமவ னுரைக்கு மாயினும்
வெஞ்சொன் மாற்றம் வேந்தனை யுரைத்தோர்
அஞ்சுக வென்னுந் தொன்மொழி யுண்மையின்
நெஞ்சுநீ நெகிழ்ந்தவற் றெளியலை செல்லென
மணித்தகைப் பைம்பூண் மகதவர் கோமான்
பணித்தது மறுமையிற் படையென வந்தனென்
மற்றது மன்னவ னுற்றிவண் செய்ததோர்
முன்னுப கார முடைமையி னாகும்
அன்னவன் மதித்துத் தன்மிகத் தருக்கும்

பி - ம். 1 நீப்பிவனுண்மையை. 2 யவனே.

பெருமீக் கூற்றமும் பேணுன் பிறரொடு
செருமீக் கூற்றமுஞ் செய்கையும் வேண்டான்
ஒருதலை யாக வாற்றலன் மற்றிவண்
பழிதலை நம்மேல் வருதலு மின்றி
நாமு மெண்ணி விட்டன மாகத்
தானே சென்று தன்வலி யறியான்
அழியினு நமக்குக் கழிவதொன் றில்லை
ஆணிலைப் படாஅ தீனிலைக் கண்ணே
பற்று மன்னர் படையொடு புணரின்
அற்றப் படீஇய ரதனினு முவத்துமென்
றின்னவை யெல்லாந் திண்ணிதி னுரைத்தனன்
தன்னொடு தொடர்ந்த மன்னரைத் தொகுத்துத்
தானிவண் வாரா னாயினும் யானிவட்
செய்வதை யெல்லா மெய்யெனக் கருதுமென்
றைய மின்றி யவ்வனுழை விட்டபின்
மெய்யெனத் தெளிந்து மீட்டவன் விட்ட
கரும மாக்களை யொருவயி னோம்பிச்
செறியச் செய்தெமக் கறிய விடுக்கபின்
பற்றிக் கொண்டு பற்று மன்னன்
ஒற்ற ரிவரென வுரைத்தறி வுறீஇக்
குற்றங் காட்டிக் கொலைக்கடம் பூட்டுதும்
தெற்றென நின்வயிற் றெளிந்தன ராகி
உறுபெரும் பகைமை யுற்றோ ருணர்ந்து
செறிவுகொள் வதற்குச் சென்றன ரிசைப்ப
இதுகா ரணத்தி [1] னிகத்தல் பொருந்தும்
அதுகா ரணத்தின் யாமுந் தெளிவேம்
பாரப் பண்டியும் பாடிக் கொட்டிலும்
ஆரெரி கொளீஇ யஞ்சினே மாகி
மலையர ணல்லது நிலையர ணில்லெனத்
தவதி சயந்தம் புகுதும் புக்கபின்
மிகுதி யச்ச மீட்டவற் குணர்த்தி
வருக வேந்தன் பெருவிறல் பீடறக்
கலக்கப் பொழுதே கடிது நாமென

பி - ம். 1 னிதக்கல்.

விலக்க நில்லா வேட்கைய ஞகித்
தான்புறப் படுதலிற் றன்னே போலும்
மாண்புறு வேந்தரை மதிலகத் தொழித்துப்
புறமதிற் கண்ணும் பொருபடை நிறீஇ
எறிபடை சிறிதினெ டணுகிய பின்றைச்
சவரர் புளிஞர் கவர்வுறு கடுந்தொழில்
எழுச்சி கூறி யிகலடு பெரும்படை
[1] மாட்டல் வேண்டுமென் ருேட்டியெத் திசையும்
கூட்டத் துள்ளே கூறுபடப் போக்கிச்
சிறுபடை யாகிய பொழுதிற் கதுமென
உறுபடை யழித்துமென் றுடன்றுமேல் வந்தென
முன்னும் பின்னும் பக்கமு நெருக்கியவன்
கொண்முரா ணிரிப்பிற் கோளெளி தாமென
உண்முரா ணுதயண னுரைத்தனன் வணங்கி

(வருடகாரன் செயல்)

நன்றெனப் போகித் தன்றமர்த் தழீஇ
முன்ன னுரைத்த வின்ன வெவ்வுரைக்
கொன்ன ரோட்டிய வுதயண னுள்ளத்
[2] துவர்த்த லன்றியுஞ் சிவக்கு மென்னைப்
பழியாக் கொண்டன னழியின னடையெனைப்
பகலு மிரவு மகலி ராகிக்
காப்புநன் கிகழன்மின் கரும முடிதுணை
ஒப்புற வொருவனை யுறப்பெறி னவனெடு
[3] தீக்குழி வலித்தியாந் தீரினுந் தீர்தும்
யாதுசெய் வாங்கொலென் றஞ்சினம் பெரிதெனக்
காவ லாளர்க்குக் கவன்றன னுரைப்பப்

(சேனபதிமகன் கூறுதல்)

பலர்புகழ் விழுச்சீர்ப் பாஞ்சால ராயனெடு
[4] செலவயர் வுடைய சேன பதிமகன்
[5] என்னுழை விடுத்தன னிருநா ளியானையும்
பொன்னணி புனைதார்ப் புரவி பூண்ட

பி - ம். 1 வாட்டல். 2 துவத்தல். 3 தீக்குறி. 4 செலவுயர்வுடைய. 5 என்னுமை

ஐம்பது தேரு மாயிரங் குதிரையும்
தன்பெயர் கொளீஇத் தானினி தாள்கென
மன்பெருஞ் சிறப்பிற் கொன்னூ ரறுபதும்
பாவடி மடப்பிடி பதினைந் திரட்டியும்
மாவடி மடக்கண் மாதர் மென்முலை
நாடக மகளிர் நாலிரு பதின்மரும்
அடுத்து விழுநிதி பலவும் பிறவும்
[1] ஆண முடைத்தாக் கொடுப்பன் மற்றவ்
வாண்மிகு தானை வத்தவற் கைவிட்
டென்னொடு கூடி யொருவ னாகப்
பின்னைச் செய்வ பிறவும் பலவென
அன்னவும் பிறவு மறிந்தவு மல்லவும்
ஆருணி யுரைத்தவு முரையா தனவும்
ஆராய் வாள னகமுணக் கிளந்தவன்
காரியக் கிளவியிற் காரணங் காட்டலின்

(வருடகாரன் கூற்று)

ஆய்பெருங் குருசி லதுநனி விரும்பி
நீயே சென்றவன் வாயது கேட்டு
வலிப்பதை யெல்லா மெளித்தனை யுணர்ந்து
வல்லே வருதி யாயி னெமக்கோர்
செல்சார் வாகிச் சிறந்தோய் நீயென

(சேனுபதிமகன் ஆருணியிடம்சென்று அறிவித்தல்)

எல்லிருள் விடுப்ப வெழுந்தனன் போகி
வஞ்சச் சூழ்ச்சி வருட காரன்
தன்சொல் லெல்லாஞ் சென்றவ னுரைப்பக்

(ஆருணியின் செயல்)

கெடலூ ழாதலிற் கேட்ட பொழுதே
அடலருஞ் சீற்றத் தாருணி தெளிந்து
முகனறிந் துரைத்து முன்னியது முடிக்குஞ்
சகுனி கௌசிகன் வருகெனத் தரீஇ
ஒட்டா மன்ன னுதயண குமரனை
நட்டா னாகி நாட்ட வந்த

பி - ம். 1 மாணமுடைத்தா.

21006

தண்டத் தலைவன் றளர்வி லூக்கத்து
வண்டளிர்ப் படலை வருட காரன்
நம்பாற் பட்டன னவன்வலித் ததையெலாம்
திண்பாற் றுகத் தெளிந்தன னிவனெனச்
சென்றவற் காட்டி......................
ஒன்றிய கருமத் துள்பொரு ளெல்லாம்
சென்றறிந் தின்னும் வம்மி னீரென
நன்றறி வாளர் நால்வரைப் பணிப்ப
அருளிய தெல்லா மாகென வடிபணிந்
திருளிடைப் போந்தவற் குறுகினர் மறைந்தென்.

உரு—அரசமைச்சு முற்றிற்று.

உசா—பாஞ்சாலராயன் போதரவு.

(வருடகாரன் செயல்)

மறைந்தனர் வந்து மாற்றோன் றாதுவர்
செறிந்த சூழ்ச்சியிற் செய்வது கூறலும்
உவந்த மனத்த னூன்பாற் படுவளை
ஒடுங்கினீ ரிருக்கென வொளித்தனன் வைத்துத்
தார காரியைத் தரீஇ நீசென்
றார்கடற் றானை யுதயணற் குறுகி
எண்ணிய கரும மெல்லாந் திண்ணிதிற்
றிரித லின்றி முடிந்தன வதனால்
பரிதல் வேண்டா பகைவன் றாதுவன்
சகுனி கௌசிகன் றன்னை யன்றியும்
விசயவில் லாளரை விடுத்தனன் விரைந்தென்
றேடினை சொல்லென நீடுத லின்றி

(தாரகாரியின் செயல்)

வகைமிகு தானை வத்தவற் குறுகித்
தகைமிகு சிறப்பிற் றார காரி
உணர்த்தா மாத்திர மனத்தகம் புகன்று

(உதயணன் செயல்)

பிங்கல சார மாணி முதலாப்

பைங்கழன் மறவர் பதின்மரைக் கூஉய்
ஆடியல் யானை யாருணி தூதுவர்
[1] மாடியந் தானை வருட காரனொடு
கூடிய வந்தனர் கொணர்மின் சென்றென

(மறவர் செயல்)

நிறைநீ ரகவயிற் பிறழுங் கெண்டையைச்
சிறுசிர லெறியுஞ் செய்கை போல
உறுபுக ழுதயணன் றறுகண் மறவர்
பற்றுபு கொண்டுதங் கொற்றவற் காட்ட

(உதயணன் செயல்)

இடவகன் கையு ளிருக்க விவரெனத்
தடவரை மார்பன் றலைத்தா ளுய்ப்ப

(இடவகன் செயல்)

அந்தி கூர்ந்த வந்தண் மாலைச்
செந்தீ யீமஞ் செறியக் [2] கூட்டி
அகணி யாகிய வாய்பொருட் கேள்விச்
சகுனி கௌசிகன் றன்னொடு மூவரை
இடுமி னென்றவன் கடுகி யுரைப்ப
நொடிபல வுரைத்து நோக்குதற் காகா
அடலெரி யகவயி னார்த்தன ரிடுதலும்

(உதயணன் செயல்)

உள்ளுடைக் கடும்பகை யுட்குதக் கன்றென
நள்ளிரு ளகத்தே பொள்ளென வுராஅய்
இன்கட் பம்பை [3] யெருஉக்குர லுறீஇ
இருந்த குரம்பை யெரியுண வெடுப்பிக்
கருவியு முரிமையுங் காப்புறத் தழீஇ
அருவி மாமலை யரணென வடைதலின்

(வருடகாரனது நடிப்பு)

மறஞ்சால் பெரும்படை வருட காரனும்
அறஞ்சால் கெண்ணிய தவப்பட் டதுவெனக்
கைவிரல் பிசைந்து செய்வதை யறியான்

பி - ம். 1 மாடிவந். 2 கூட்டிக்ககணி. 3 யெருக்குரல்.

வந்தோர் தெளிய நொந்தன னுவல

(பிழைத்தோர் ஆருணியரசன்பாற் சென்று கூறுதல்)

உய்ந்தோ ரோடி யூரகங் குறுகிப்
பைந்தார் வேந்தனைக் கண்டுகை கூப்பி
அகலா தாகிய வரும்பெறற் சூழ்ச்சிச்
சகுனி கௌசிகன் சார்ச்சியை முன்னே
உதையண னுணர்ந்து புதைவனர்த் தம்மெனத்
தமர்களை யேவலி னவர்வந் தவரைக்
கொண்டனர் செல்ல வண்டலர் தாரோன்
விடைப்பே ரமைச்சனுழை விடுத்தலின் மற்றவன்
கண்டவர் நடுங்கத் தண்டந் தூக்கி
இன்னுயிர் தபுக்கென வெரியகத் திட்டதும்
பின்னர் மற்றவன் பெருமலை யடுத்ததும்
[1] நம்மொடு புணர்ந்த நண்புடை யாளன்
எம்மொடு போதந் திப்பாற் பட்டதும்
இன்னவை நிகழ்ந்தவென மன்னவற் குரைப்ப

(ஆருணியரசன் செயல்)

அயிர்த்தவ னகன்றன னுதலி னிவனொடு
பயிர்ப்பினி வேண்டா பற்றுத னன்றெனப்
பெயர்த்தவன் மாட்டுச் செயற்பொரு ளென்னென
அகத்தர ணிறையப் பெரும்படை நிறீஇப்
புறப்படப் போந்தெற் புணர்க புணர்ந்தபின்
செறப்படு மன்னனைச் சென்றன நெருக்குதும்
என்றனன் விடுத்தலி னன்றென விரும்பிக்
கோயிலு நகரமுங் காவலு நிறீஇக்
காழா ரெஃகமுதல் கைவயிற் றிரீஇயர்
ஏழா யிரவ ரெறிபடை யாளரும்
ஆறா யிரவ ரடுகடு மறவரும்
வீறார் தோன்றலொடு விளங்குமணிப் பொலிந்தன
ஆயிரந் தேரு மடர்பொன் னோடையொடு
சூழியிற் பொலிந்தன பாழியிற் பயின்றன
ஐந்நூ றியானையு மகினு றகற்சிய

பி - ம். 1 தம்மொடு.

ஆர்க்குந் தாரொடு போர்ப்படை பொலிந்தன
மிலைச்ச ரேறித் தலைப்படைத் தருக்குவ
ஒருபதி னாயிரம் விரைபரி மாவும்
முன்ன வாகத் தன்னொடு கொண்டு
நாவாய்ப் பெருஞ்சிறை நீர்வாய்க் கோலிச்
சாந்தார் மார்பிற் சாயனுஞ் சாயாக்
காந்தா ரகனுங் கலக்கமில் பெரும்படைச்
சுருங்காக் கடுந்திறற் சூர வரனெனும்
பெரும்பேர் மறவனும் பிரம சேனனும்
அரும்போ ரண்ணலு மவர்முத லாகப்
பெரும்படைத் தலைவரும் பிறருஞ் சூழப்
பூரண குண்டல னென்னு மமைச்சனொ
டாருணி யரசன் போதர [1] வறிந்தபின்

(வருடகாரன் செயல்)

அடக்கருஞ் சீற்றத் தாருணி கழலடி
வடுத்தீர் வருடகன் வணங்கினன் காண

(ஆருணி வருடகாரனுக்குச் சிறப்புச் செய்தல்)

எடுத்தனன் றழீஇ யின்னுரை யமிர்தம்
கொடித்தேர்த் தானைக் கோமான் கூறி
இருக்கென விருந்த பின்றை விருப்போ
டாய்தார் மார்ப னீர்வயி னிரைத்த
நாவாய் மிசையே மேவா ருட்கப்
பதினா றாயிர ரடுதிறன் மறவரும்
அதிராச் செலவின வாயிரங் குதிரையும்
முதிரா யானை முந்நூற் றறுபதும்
காணமும் வழங்கி நாளு டோறும்
ஊனிடை யறாமை யுணாத்தந் திடூஉம்
சேனை வாணிகஞ் செறியக் காக்கென
வல்வினைக் கடுந்தொழில் வருட காரன்
செல்படைக் குபாயஞ் செறியக் கூறி
மறுகரை மருங்கிற் செறியப் போக்கிப்
பாஞ்சால ராயனைப் பாங்குறக் கண்ணுற்

பி - ம். 1 வகைந்தபின்.

ளும்பாற் கரும மாண்புறக் கூற
அருஞ்சிறைத் தானை யாருணி யரசனிற்
பெருஞ்சிறப் பெய்தி யிருந்தன னினிதென்.

௨௬—பாஞ்சாலராயன் போதரவு முற்றிற்று.

௨௭—பறை விட்டது.

(கால்வல் இளையர் ஆருணிக்குக் கூறுதல்)

பெருஞ்சிறப் பெய்தியவ னிருந்த செவ்வியுள்
வண்டார் தெரியல் வருட காரனிற்
பண்டே பயிர்குறிக் கொண்டுநன் கமைந்த
[1] கால்வ லிளையர் பூசல் [2] வாயா
வேல்வல் வேந்தன் விரும்புபு கேட்ப
வடுவில் பெரும்புகழ் வத்தவன் மந்திரி
இடவகன் பணியி னேழா யிரவர்
சவரர் புளிஞருங் குவடுறை குறவரும்
குறுநில மன்னரு நிறைவன ரீண்டி
வஞ்ச காந்தையொடு கந்த வதியெனும்
குளிர்புனற் பேரியாறு கூடிய வெல்லையுள்
நளிபுன னாட்டக நடுங்கக் கவர்ந்தாண்
டொளிதரு மிருக்கையி னொடுங்கினர் தாமெனப்

(வருடகாரன் செயல்)

பைந்தளிர்ப் படலைப் பாஞ்சால ராயற்கு
வந்துகண் கூடிய வருட காரன்
அருளிக் கேண்மெனத் தெருளக் கூறும்
மாரிப் பெரும்புனல் வருவா யடைப்பின்
ஏரிப் பெருங்குள நீர்நிறை யிலவாம்
அற்றே போலப் பற்று மன்னற்குத்
தலைவரும் பெரும்படை தொலைய நூறிற்
சுருக்க மல்லது பெருக்க மில்லை
கல்லிடை யிட்ட காட்டகங் கடந்து
வெள்ளிடைப் புகுந்த வேட்டுவப் படையினை

பி - ம். 1 காவல். 2 வாயர்.

[1] ஆட்டுதுஞ் சென்றெனை வத்திசை மருங்கினும்
வாட்படை வகுத்துச் சேட்படப் போக்கி
மறுத்து முரைத்தனன் மன்னவன் கேட்ப
வெறுத்த வேந்தனை வெற்பிடை முற்றி
நாற்பெரும் படையு நம்புறஞ் சூழ
மேற்படை நெருங்கு காலை மாற்றவன்
சில்படை யாளரொடு செல்படை யின்றிக்
கூழ்பட வறுப்பப் பாழ்படப் பாய்ந்து
பற்றிய படைஞரு மப்பாற் படர்தர
உற்றது செய்த லுறுதி யுடைத்தென

(ஆருணியின் உட்கோள்)

இயற்கை யாக வென்றெழின் மாட்டிவன்
முயற்சி யுடைமையின் முடிக்குவன் றனெனப்
பெயர்த்து மவற்கோர் பெருஞ்சிறப் பியற்றிச்
சொல்லிய வெல்லா நல்குவ னாகித்
தன்படை சிறிதே யாயினு மிவன்படை
என்படை யென்னு மெண்ண முண்மையின்
எழுது மென்றவன் மொழியா மாத்திரம்

(வருடகாரன் செயல்)

கருதிய தெல்லாங் கால்வ லிளையரின்
உருவ வெண்குடை யுதயணற் குணர்த்த

(உதயணன் செயல்)

அடற்கரும் பெரும்படை யற்றப் படாமைப்
படுப்பதோர் வாயில் பாங்குற நாடி
வெம்பரி மான்றேர்த் தம்பியர்த் தழீஇ
மதில்வடி வாகிய மலைப்புடை மருங்கே
அதிர்குரல் வேழமும் புரவியு மடக்கி
அவற்றுமுன் மருங்கே யகற்றுதற் கரிய
ஒள்வாட் பெரும்படை யுள்ளுற வடக்கி
அப்படை மருங்கே யயிற்படை நிரீஇத்
தரும தத்தனைப் பெருமுகம் பெய்தவற்
கெருத்துப்புடை யாக விடவகற் கொளீஇயவன்

பி - ம். 1 வாட்டுஞ்.

* ருரு

உருத்தெழு பெரும்படைக் கோடுபுறங் காட்டிப்
படைத்தொழு வாரியி னிடைப்படப் புகுத்தி
உருள்படி போல வருட காரன்
போக்கிட மின்றி யாப்புற வடைப்ப
இருங்கணி கார னெண்ண மாக
வரம்பணி வாரியுள் வந்துடன் புகுந்த
அருந்திற லாருணி யென்னும் யானையைப்
படைக்கலப் பாரம் பற்பல சார்த்தி
இடுக்கண் யாஞ்செய விளைந்த தின்றென
வாரிப் பெரும்படை மற்றவண் வகுத்து
நேரா மன்னனை நீதியிற் றரீஇப்
போரிற் கோடற்குப் புரிந்துபடை புதையா
வார்கழ லோன்றுள் வத்தவ னிருப்ப

(ஆருணியின் மனநிலை)

வாய்த்த சூழ்ச்சி வருட காரனொ
டியாத்த நண்பினன் யானென வாருணி
மேற்சென் றழித்தன் மேயினன் விரும்ப

(தீய நிமித்தங்கள்)

அந்தமி லாற்ற லவந்தியன் யானை
வெந்திற னளகிரி தன்படி யாகும்
மந்தர மென்னு மத்த யானை
நீல நெடுவரை நெற்றித் தாகிய
கோலக் கோங்கின் கொழுமலர் கடுப்புறு
சூறைக் கடுவளி பாறப் பறந்தெனப்
பட்ட மடுத்த கொட்டையொடு பாறவும்
உருமுறழ் முரசின் கண்கிழிந் ததனொடு
சக்கர நெடுங்கொடி யற்றன வாகி
இருநில மருங்கிற் சிதைவன வீழவும்
புள்ளு நிமித்தமும் பொல்லா வாக

(பூரணகுண்டலன் கூற்று)

விள்ளா நண்பின் விறலோ னமைச்சன்
பூரண குண்டலன் முரணி மார்ப
பெயர்த்து நகரம் புகுது மிந்நாள்

அகைத்த தறிந்தனை யருண்மதி நீயேன்
றடையார்க் கடந்து [1] தடைபா டகற்றிய
அறிந்துபடை விடுப்ப தன்னது பொருளெனச்
செறிந்த தாகச் செப்பலிற் சீறிக்

(வருடகாரன் கூற்று)

கொள்ளா ரழிவினைக் கூறு மிவையென
வள்ளிதழ் நறுந்தார் வருட காரன்
ஊக்கங் [2] கொளுவ வாக்கங் கருதி

(ஆருணியின் செயல்)

ஆருணி யரச னடற்களிறு கடாஅய்க்
காரணி முகிலிடைக் கதிரொளி கரந்து
மங்கு மருக்கனின் மழுங்குபு தோன்றச்
சங்கமு முரசுஞ் சமழ்த்தன வியம்பப்
பொங்குநூற் பதாகையொடு வெண்கொடி நுடங்க
நிரந்த பெரும்படை பரந்தெழுந் தோடி
மாற்றோ ரிருந்த மலையக மடுத்துக்

(போர் நிகழ்ச்சி)

கூற்றா யெடுத்த கோல விற்படை
நாற்றிசை மருங்கினுங் கார்த்துளி கடுப்பக்
கடுங்கணை சிதறிக் கலந்துடன் றலைப்பெய
நடுங்கின ராகி யுடைந்துபுறங் கொடுத்துப்
பொறிப்படை புதைந்த குறிக்களம் புகலும்
எண்டிசை மருங்கினு மியமரத் தொலியொடு
விண்டோய் வெற்பொலி விரவுபு மயங்கி
ஆர்ப்பிசை யரவமும் போர்க்களிற் றதிர்ச்சியும்
கார்க்கட லொலியெனக் கலந்துடன் கூடித்
திமிரம் பாய்ந்த வமர்மயங் கமயத்துச்
சிலைத்தன தூசி மலைத்தன யானை
ஆர்த்தனர் மறவர் தூர்த்தனர் பல்கணை
விலங்கின வொள்வா ளிலங்கின குந்தம்
விட்டன தோமரம் பட்டன பாய்மாத்
துணிந்தன தடக்கை குனிந்தன குஞ்சரம்

பி - ம். 1 கடைபா. 2 கொழுவ.

அற்றன பைந்தலை யிற்றன பல்கொடி
சோர்ந்தன பல்குடர் வார்ந்தன குருதி
சுழிந்தது போர்க்கள மெழுந்தது செந்துகள்
அழிந்தன பூழி விழுந்தனர் மேலோர்

(உதயணன் செயல்)

இப்படி நிகழ்ந்த காலை வெப்பமொடு
பெரும்படைச் செற்றத் திருங்கடன் மாந்திக்
குஞ்சரக் கொண்மூக் குன்றடைந்து சூழீஇக்
காலிய லிவுளிக் கடுவளி யாட்ட
வேலிடை மிடைந்து வாளிடை மின்னக்
கணைத்துளி பொழிந்த கார்வரைச் சாரல்
ஒருபெருஞ் சிறப்பி னுதயண குமரன்
பொருபடை யுருமிற் பொங்குபு தொடரத்

(ஆருணியின் செயல்)

தாரணி மார்ப னாருணி யரசனும்
காந்தா ரகனுங் [1] கழற்காற் சாயனும்
தேந்தார்ச் [2] சூரனுந் திறற்பம சேனனும்
இந்நாற் றலைவரு மெரிகான் றெதிர்ப்பச்
[3] செந்நே ராகச் செல்வுழி யெதிரே

(கடகபிங்கலர் செயல்)

காந்தா ரகனைக் கடக பிங்கலர்
தேந்தார் மார்பந் திறப்ப வெய்ய
ஆழ்ந்த வம்போ டழிந்தன னாகி
வீழ்ந்தன னவனும் வீழ்ந்த பின்னர்

....

(ஆருணியின் கூற்று)

பெய்கழ லாருணி பிறந்த நாளுட்
செவ்வாய் விருச்சிகஞ் சென்றுமே னெருங்க
ஆற்றல் சான்ற வடல்வே லாருணி
ஏற்றோர் யாவ ரீண்டுவந் தெதிர்க்கெனச்

பி - ம். 1 கழற்கதிர்நாயன். 2 சானுவுந்திறற் பரிசேனனும்.
3 செந்நேராக.

(உதயணன் செயல்)

சீற்றத் துப்பிற் சேதியர் பெருமகன்
கழலணி காலினன் கரண யாப்பினன்
நிழலணி நல்வா [1] ளழல வீசித்
தாங்கருங் காதற் றம்பியர் சூழப்
பூங்கழற் றோழர் புடைபுடை [2] யார்தர
ஒன்னாப் பகையா னுதயண னென்பேன்
இன்னா மன்ன நின்னுயி ருணீஇய
வந்தனெ னென்றே சென்றுமே னெருங்க

(ஆருணியின் செயல்)

இடுக்ளி யானை யெதிர்கண் டாங்குருத்
தடுதிற லாருணி யவனுரை பொறாஅன்
பன்மயி ரணிந்த பத்திச் சேடகம்
மின்னொளிர் வாளொடு பின்னவன் [3] வாங்கக்

(உதயணன் செயல்)

காதி வெவ்வினை கடையறு காலைப்
[4] போதி பெற்ற புண்ணியன் போல
வீதல் சான்ற வெகுளி முந்துறீஇ
எதிர்த்த மன்னனைச் செயிர்த்தனன் றலைப்பெய்
தியாவரும் வேண்டா விதன்பின் மற் றிவனை
வீய நூறி வெஞ்சினந் தணிகென
ஏயர் பெருமக னெதிர்வது விரும்ப

(தருமதத்தன் ஆருணியரசனைக் கொல்லல்)

வேற்று [5] வேந்தனை வீழ நூறுதல்
மாற்றா தெனக்கு மன்ன வருளெனக்
கரும மாதல் காரணங் காட்டித்
தரும தத்த னென்னுங் கடுந்திறல்
அருமுரட் [6] கலுழனி னூர்த்துமே லோடிப்
பொருமுரா ணழிக்கும் புனைபடை பயிற்றி
இமைப்போர் காணா [7] விகற்றொழிற் றிரிவொடு
பலர்க்குப் பதமின்றிப் பாஞ்சால ராயனைத்

பி - ம். 1 ணலவலம். 2 யாத்தர. 3 வாங்கிய. 4 போதிற் பெற்ற. 5 வேந்தரை. 6 கலுழனூர்த்து. 7 விற்றொழிற்.

தனக்குப் பதமாகத் தலைப்பெய் தேற்றலின்
வார்கவுள் வேழமும் வசத்த தன்றியவன்
ஊர்வழிச் செல்லா தொல்குபு நிற்றரக்
கூர்கெழு வச்சிரங் கொண்டு வானவன்
கார்கெழு மாமலைக் கவினழித் ததுபோற்
றாரணி மார்பன் யானையை வீழாக்
கனல்சொரி மலையிற் கவிய நூறித்
தார்கெழு மார்புந் தலையுந் தகர
முடியணி யார முத்துநிரை துளங்கத்
தொடியணி திண்டோ டுணிந்துநிலஞ் சேரப்
பணிவில னெறிதலிற் படைக்கலஞ் சோரத்
தறுக ணிமையான் றருக்கினொ டுறுதியேய்
பிறமுனை மருங்கி னேடுபடத் திருகி
மான்முதல் வகையி னான்மறை யாளன்
மழுவே றுண்ட மன்னவன் போலக்
கொழுநிணக் குருதியுட் குஞ்சரத் தோடும்
அழிவுகொண் டாருணி யவிந்தனன் வீழ்தலிற்

(உதயணன் செயல்)

கொற்றம் பெற்றனன் குருகுலத் திறையென
வெற்ற முரசம் வேழ மேற்றி
நகரினு நாட்டினும் பகர்வன [1] ரறைகெனப்
பின்னுரை போக்கி யொன்னாற் குறுகிப்
படைத்தொழில் வதுவை நம்மாட் டெய்த
முடித்தன னென்று சமழ்த்தன னோக்கி
நடுக்கமில் வேந்தனை நாமு முன்னின்
றடக்கற் பாலமென் றியாழறி வித்தகன்
அமரார் புகழத் தமரி னடக்குவித்
தீம மேற்றியவ னுரிமைச் சனத்திற்
கேம மீகென் றிடவகற் போக்க

(வருடகாரன் செயல்)

வரிகழ னோன்றாள் வருட காரன்
இரியற் படையொ டியைந்தொருங் கீண்டிக்

பி - ம். 1 ரறைந்தெனப்.

கொடிக்கோ சம்பிக் கொற்ற வாயில்
அடுத்தனன் குறுகி யஞ்சன்மின் யாவிரும்
வடுத்தீர் பெரும்புகழ் வத்தவர் கோமான்
படுத்தனன் கண்டீர் பாஞ்சால ராயனை
அடைத்தனிர் வையா தகற்றுமின் கதவென

(நகரமாந்தர் கூறுதல்)

நகரத் தாளர் புகரறக் கூறுவர்
தொல்வழி வந்தவெம் பெருமக னெழுதிய
வெல்பொறி யோலை விடுத்தபி னல்லது
புகுதர விடோமிந் நகர்வயின் யாமென

(யாவரும் நகர் புகுதல்)

உடனயிர்ப் பிரிய வுதயணன் மந்திரி
இடவகன் வந்தமை யிசைத்தலும் விரும்பிக்
கொடியும் படாகையும் வடிவுபட வுயரிச்
செறிந்த கதவந் திறந்தன ரெதிர்கொள
வென்றியொடு புக்கு நின்ற மறவருட்
டலைவ னாகிய தொலைவில் விழுச்சீர்ப்
பாடுசால் சிறப்பிற் பாஞ்சால ராயன்
கண்மணி யன்ன திண்ணறி வாளன்
கும்பனென் போனை வெம்ப நூறி
இன்று மற்றிங் கிவன்றம ருளரெனிற்
குன்றா ரவரைக் கோறு நாமெனக்
கழிப்புறு வெள்வாட் டெழித்தன ரீஇ
ஒழுக்கஞ் சான்றோர் பிழைப்பில ரோம்ப
மலைத்தொகை யன்ன மாட வீதியுட்
சிலைப்பொலி தடக்கைச் சேதியன் வாழ்கென
அலைகடல் வைய மறிய வெங்கும்
பிறைமருப் பியானைப் பிணரெருத் தேற்றிப்
பறைவிட் டன்றாற் பகைமுத லறுத்தென்.

௨௭—பறை விட்டது முற்றிற்று.

மூன்றாவது
மகத காண்டம் முற்றுப்பெற்றது.

ஆக காண்டம் மூன்றினாற் காதை, ௧0௫.

நான்காவது

வத்தவ காண்டம்.

க—கோற்றங் கொண்டது.

(உதயணன் வருடகாரன் முதலியோர்க்குச் சிறப்புச் செய்தல்)

பகைமுத லறுத்துப் பைங்கழ னோன்றாள்
வகைமிகு மான்றோர் வத்தவர் கோமான்
வருட காரன் பொருடெரி சூழ்ச்சி
பொய்யாது முடித்தலின் மெய்யுறத் தழீஇ
ஏறிய யானையுந் தன்மெய்க் கலனும்
கூறுபட லின்றிக் கொடுத்தனன் கூறி
அறைபோ மிவனென வாருணி யுரைத்த
குறையா விழுப்பொரு ளன்றே கொடுத்துத்
தரும தத்தனைத் தோண்முதல் பற்றிப்
பரும யானையொடு பாஞ்சால ராயனை
வெங்களத் தட்ட வென்றி யிவையென
நெய்த்தோர்ப் பட்டிகை யாக வைத்துப்
பத்தூர் கொள்கெனப் பட்டிகை கொடுத்து
நன்னாட் கொண்டு துன்னினர் சூழ
வெங்கண் யானைமிசை வெண்குடை கவிப்பப்
பொங்குமயிர்க் கவரி புடைபுடை வீசக்
கங்கை நீத்தங் கடன்மடுத் தாங்குச்
சங்கமுந் தூரமு முரசினோ டியம்ப
மன்பெரு மூதூர் மாசன மகிழ்ந்து
வாழ்த்து மோசை மறுமொழி யார்க்கும்
கேட்பதை யரிதாய்ச் சீர்த்தகச் சிறப்ப
ஊழி தோறு முலகுபுறங் காத்து
வாழிய நெடுந்தகை யெம்மிடர் தீர்க்கெனக்
கோபுரந் தோறும் பூமழை பொழியச்
சேயுயர் மாடத்து வாயில் புக்குத்
தாம மார்ப னாருணி தன்னை

டம மேஞ் வியல்புடை யமைதியர்க்
கேம மீத்த வியல்பின ளுகிக்
கழிந்தோர்க் கொத்த [1] கடந்தலை கழிக்கென
ஒழிந்தோர்க் கெல்லா மோம்படை சொல்லி
வேறிடங் காட்டி யாறறிந் தோம்பி
வியலக வரைப்பிற் கேட்டோர் புகழ

(உதயணன் சிங்காதனமேறி வீற்றிருத்தல்)

உயர்பெருந் தானை யுதயண குமரன்
அமைச்சினு நண்பினுங் குலத்தினு மமைதியிற்
பெயர்த்துநிலை யெய்திப் பேருந் தழீஇ

....

முதற்பெருங்[*] கோயின் முந்துதனக் கியற்றி
மணிப்பூண் கண்ணியர் மரபறி மாந்தர்
முட்டில் கோலமொடு கட்டில் படுப்ப
நோற்ருர் விழையு நாற்பான் மருங்கினும்
முழவொலிச் சும்மையொடு முரசங் கறங்க
[2] விழவியல் சும்மையொடு வியனகர் துவன்றிக்
குடியுங் குழுவு [3] மடியுறை செய்ய
ஏவல் கேட்குங் காவல ரெல்லாம்
பெருந்திறைச் செல்வமொ டொருங்குவந் திறுப்பக்
களம்படக் கடந்து கடும்பகை யின்றி
வளம்படு தானை வத்தவர் பெருமகன்
மாற்ருர்த் தொலைத்த மகிழ்ச்சியொடு மறுத்தும்
வீற்றிருந் தனனல் விளங்கவை யிடையென்.

க—கொற்றங் கொண்டது முற்றிற்று.

பி - ம். 1 கடந்தலைக் கிழக்கென. 2 விழவொலிச். 3 மடிமுறை.

* ௫௪

உ—நாடு பாயிற்று.

(உதயணன் செங்கோற் சிறப்பு)

விளங்கவை நடுவண் வீற்றினி திருந்த
வளங்கெழு தானை வத்தவர் பெருமகன்
வெங்கோல் வேந்தன் வேற்றுநா டிதுவெனத்
தன்கோ லோட்டித் தவற்றி னாட்டிய
புன்சொற் படுநுகம் புதியவை நீக்கிச்
செங்கோற் செல்வஞ் சிறப்ப வோச்சி
நன்னக ரகத்து நாட்டக வரைப்பினும்
தொன்மையின் வந்த தொல்குடி யெடுப்பிப்
படிறு நீக்கும் படுநுகம் பூண்ட
குடிகட் கெல்லாங் குளிர்ப்பக் கூறித்
திருந்திய சிறப்பிற் [1] றேவ தானமும்
அருந்தவர் பள்ளியு [2] மருகத் தானமும்
திருந்துதொழி லந்தண ரிருந்த விடனும்
தோட்டமும் வாவியுங் கூட்டிய நல்வினை
ஆவணக் கடையு மந்தியுந் தெருவும்
தேவ குலனும் யாவையு மற்றவை
சிதைந்தவை யெல்லாம் புதைந்தவை புதுக்கென்
றிழந்த மாந்தரு மெய்துக தமவெனத்
தழங்குரன் முரசந் தலைத்தலை யறைகெனச்
செல்வப் பெரும்புனன் மருங்கற வைகலும்
நல்கூர் கட்டழ னலிந்துகை யறுப்ப
மானம் வீட லஞ்சித் தானம்
தளராக் கொள்கையொடு சால்பகத் தடக்கிக்
கன்னி காமம் போல வுள்ள
இன்மை யுரையா விடுக்க னாளிரும்
ஊக்கமும் வலியும் வேட்கையும் விழைவும்
மூப்படர்ந் துழக்க முடங்கி னீரும்
யாப்பணி [3] நன்னலந் தொலைய வசாஅய்த்
தீப்பிணி யுற்றுத் தீரா தீரும்

பி - ம். 1 றேவர். 2 மருகர் தானமும். 3 நன்கலந் தொலைவசாஅய்த்.

இடுமண்ணன் முற்றத் தின்னியங் கறங்கக்
குடுமிக் கூந்தலு ணறுநெய் நீவி
நல்லவை நாப்பட் பல்சிறப் பயர்ந்து
கொண்டோன் றுறந்து கண்கவிழ்ந் தொழுக
வாழ்த லாற்றாச் [1] சால்பணி மகளிரும்
நிறைப்பெருங் கோலத்து நெறிமையின் வழாஅ
உறுப்புக்குறை பட்டோ ருட்படப் பிறரும்
வந்தனிர் குறுகி நுங்குறை யுரைத்துத்
துன்ப நீங்க வின்பம் பயப்ப
வேண்டின கொள்ளப் பெறுதிர் நீரென
மாண்ட வீதியொடு மன்ற மெல்லாம்
ஆர்குரன் முரச மோவா ததிரக்
கோடி முற்றி நாடொறும் வருவன
நாடு நகரமு நளிமலை முட்டமும்
உள்கண் டமைந்த கொள்குறி நுகும்பிற்
கணக்கருந் திணைகளு மமைக்குமுறை பிழையாது
வாயிற் செல்வங் கோயிலுட் கொணரப்
போரின் வாழ்நரும் புலத்தின் வாழ்நரும்
தாரின் வாழ்நருந் தவாஅப் பண்டத்துப்
பயத்தின் வாழ்நரும் படியிற் றிரியா
ஓத்தின் வாழ்நரு மொழுக்கின் வாழ்நரும்
யாத்த சிற்பக் கயிற்றின் வாழ்நரும்
உயர்ந்தோர் தலையா விழிந்தோ ரீறா
யாவர்க் காயினுந் தீதொன் றின்றி
மறனி னெருங்கி நெறிமையி னொரீஇக்
கூற்றுயிர் கோடலு மாற்றா தாக
உட்குறு செங்கோ லூறின்று நடப்ப
யாறுந் தொட்டவு மூறுவன வொழுகக்
காடும் புறவுங் கவின்றுவளஞ் சிறப்பப்
பொய்யா மாரித் தாகி வைகலும்
தண்டா வின்பந் தலைத்தலை சிறப்ப
விண்டோய் வெற்பின் விளைகுர லே...
குறவ ரெறிந்த கோலக் குளிர்மணி

பி - ம். 1 சால்பிணியீரு மகளிரும்.

முல்லை தலையணிந்த முஞ்ஞை வேலிக்
[1] கொல்லை வாயிற் குப்பையுள் வீழவும்
புன்புல வுழவர் படைமிளிர்த் திட்ட
ஒண்கதிர்த் திருமணி யங்கண் யாணர்
மருத மகளிர் வண்டலுள் வீழவும்
வயலோ ரெடுத்த கௌவைக் கிருங்கழிக்
கயல்கொள் பொலம்புள் கதுமென வெருவவும்
[2] திணைவிராய் மணந்து திருவிழை தகைத்தாக்
களவு மரம்புங் கனவினு மின்றி
விளைத லோவா வியன்பெரு நாட்டொடு
பட்டி நியமம் பதிமுறை யிரீஇ
முட்டின்று நிரம்பிய காலை யொட்டாப்
பகைப்புலந் தேயப் பல்களிற் றியானையொடு
தகைப்பெருந் தம்பியர் தலைச்சென் றகற்ற
ஆணை கேட்ட வகலிடத் துயிர்கட்
கேம வெண்குடை யின்னிழற் பரப்பி

(உதயணன் செயல்)

வீணை வேந்தன் வியனாடு கெழீஇ
மகத மன்னவன் றானையொடு வந்த
பகையடு மறவரைப் பதிவயிற் போக்கி
அருவிலை நன்கல மமைந்தவை பிறவும்
தருசகன் கொள்கெனத் தமரொடு போக்கிப்
பட்ட மெய்திய பதுமா பதியொடு
முட்டில் செல்வத்து முனிதல் செல்லான்
மட்டுவிளை கோதையொடு மகிழ்ந்துவிளை யாடிச்
செங்கதிர்ச் செல்வ னெழுச்சியும் பாடும்
திங்களு நாளுந் தெளிதல் செல்லான்
அந்தளிர்க் கோதையை முந்துதா னெய்திய
இன்பக் கிழவ னிடவகை யன்றி
மன்பெரு மகதன் கோயிலுள் வான்றோய்
கன்னி மாடத்துப் பன்முறை யவளொடு
கழிந்தவும் பிறவுங் கட்டுரை மொழிந்து

பி - ம். 1 கொல்லையாயின. 2 திண்ணைமணந்து.

பொன்னிழை மாதரொ டின்மகிழ் வெய்திப்
பெருநகர் வரைப்பிற் றிருமனை யிருந்து
தீயன நீக்கித் திருவிழை தகைத்தாப்
பாயினன் மாதோ பயந்தநன் னாடென்.

உ—நாடு பாயிற்று முற்றிற்று.

௩—யாழ் பெற்றது.

(பத்திராபதியின் என்பு முதலியவற்றைக் கொணரும்படி உதயணன் சிலரை அனுப்பல்)

பாயநன் னாடு பைத றீர்ந்தபின்
ஏயர் பெருமகன் சேயது நோக்கி
விசையுடை யிரும்பிடி வீழ்ந்த தானம்
அசைவி லாளர்க் கறியக் கூறி
என்புந் தோலு முள்ளவை யெல்லாம்
நன்கன நாடிக் கொண்டணிர் வம்மினென்
றங்கவர்ப் போக்கிய பின்றை யப்பால்

(பத்திராபதி வீழ்ந்த இடத்தில் அதன் வடிவமெடுப்பித்துப் பூசை முதலியவற்றை நிகழ்த்துவித்தற்கு உதயணன் முயலுதல்)

வெங்கட் செய்தொழில் வேட்டுவத் தலைவரொடு
குன்றச் சாரற் குறும்பரைக் கூஉய்
அடவியுள் வீழ்ந்த கடுநடை யிரும்பிடி
நம்மாட் டுதவிய நன்னர்க் கீண்டொரு
கைம்மா றாற்றுத லென்று மின்மையின்
உதவி செய்தோர்க் குதவா ராயினும்
மறவி யின்மை மாண்புடைத் ததனாற்
கோடுயர் வரைப்பினோர் மாட மெடுப்பித்
தீடமை படிவ மிரும்பிடி யளவா
ஏற்ப வெடுப்பித் தெல்லியுங் காலையும்
பாற்படல் பரப்பிப் பணிந்துகை கூப்பி
வழிபா டாற்றி வழிச்செல் வோர்கட்
கழிவுநன் ககல வரும்பத மூட்டாத்

தலைநீர்ப் பெருந்தளி நலனணி கொளீஇ
எனைவ ராயினு மினையோர்க் கெல்லாம்
முனைவெந் துப்பின முன்னவ ணீகென
விருத்தி கொடுத்துத் திருத்தகு செய்தொழிற்
றச்ச மாக்களொடு தலைநின்று நடாஅம்
அச்ச மாக்களை யடையப் போக்கிப்
பத்திரா பதியின் படிம மிடூஉஞ்
சித்திர காரருஞ் செல்கெனச் சொல்லி
ஆராக் கவலையி னதுபணித் ததற்பின்

(பத்திராபதியின் என்பு முதலியன கொணர்ந்தார்க்கு உதயணன் பொருளளித்தல் முதலியன)

ஊரக வரைப்பி[1] னுள்ளவை கொணர்ந்தார்க்
கின்னுரை யமிழ்தமொடு மன்னவ னீத்துக்
கோப்புக வமைத்த கொற்ற வாயிலும்
யாப்புற வதன்பெயர் பாற்படக் கொளீஇ
வாயின் முன்றி லவைப்புற மாகச்
சேயுயர் மாடஞ் சித்திரத் தியற்றி
உயிர்பெற வுருவ மிடீஇ யதனைச்
செயிர்தீர் சிறப்பொடு சேர்ந்தவண் வழிபடு

....

நான்மறை யாளர் நன்றுண் டாகெனத்
தாமுறை பிழையார் தலைநின் றுண்ணும்
சாலையுந் தளியும் பாலமைத் தியற்றிக்
கூத்திய ரிருக்கையுஞ் சுற்றிய தாகக்
காப்பிய வாசனை கலந்தவை சொல்லி
எண்ணிய துண்ணு மேண்டொழி லறாஅக்
குழாஅ மக்களொடு திங்க டோறும்
விழாஅக் கொள்கென வேண்டுவ கொடுத்துத்
தன்னகர்க் கடப்பா டாற்றிய பின்னர்

(அருஞ்சுகன் இயல்பு)

மதிலுஞ் சேனையுண் மாணி யாகிய

பி - ம். [1] னுள்ளது.

அதிர்வில் கேள்வி [1] யருஞ்சுக னென்னும்
அந்த ணாளன் மந்திரம் பயின்றநல்
வகையமை நன்னூற் பயனனி பயிற்றித்
தலமுத லூழியிற் றானவர் தருக்கறப்
புலமக ளாளர் புரிநரம் பாயிரம்
வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச்
செலவுமுறை யெல்லாஞ் [2] செய்கையிற் றெரிந்து
மற்றை யாழுங் கற்றுமுறை பிழையான்
பண்ணுந் திறனுந் திண்ணிதிற் சிவணி
வகைநயக் கரணத்துத் தகைநய நவின்று
நாரத கீதக் கேள்வி நுனித்துப்
பரந்தவெந் நூற்கும் விருந்தின னன்றித்
தண்கோ சம்பிதன் றமர்நக ராதலிற்
கண்போற் காதலர்க் காணிய வருவோன்
[3] சதுவகை வேதமு மறுவகை யங்கமும்
விதியமை நெறியிற் பதினெட் டாகிய
தான விச்சையுந் தான்றுறை போகி
ஏனைக் கேள்வியு மினைதனக் கில்லவன்
கார்வளி முழக்கி னீர்நசைக் கெழுந்த
யானைப் பேரினத் திடைப்பட் டயலதோர்
....

(அருஞ்சுகன் வேங்கை மரத்திலேறி நோக்குதல்)

இமையோ ருலகிற் கேணி யாகிய
கான வேங்கைக் கவர்சினை யேறி
அச்ச மெய்தி யெத்திசை மருங்கினும்
நோக்கின னருகே யாக்க மின்றி

(உதயணனது யாழின்நிலை)

இறைவற் பிரிந்த வில்லோள் போலவும்
சுருங்கக ஞெகிழ்ந்து......................
....
பத்தற் கேற்ற பசையமை போர்வை

பி - ம். 1 யரிஞ்சயனென்னும்., 2 செல்கையிற். 3 வேங்கைச் சுவேதமும்.

செத்துநிறங் கரப்பச் செழுவளங் கவினிய
[1] கொய்தகை கொடியொடு மெய்புற நீடிய
[2] கரப்பமை நெடுவேய் நரப்புப்புறம் வருடத்
தாஅந் தீமெனத் தண்ணிசை முரலத்
தீந்தொடைத் தேனினஞ் செற்றி யசைதா
வடிவேற் றானை வத்தவர் பெருமகன்
படிவ விரதமொடு பயிற்றிய நல்லியாழ்
கடிமிகு கானத்துப் பிடிமிசை வழுக்கி
வீழ்ந்த வெல்லை முதலா வென்றும்
தாழ்ந்த தண்வளி யெறிதொறும் போகா
அந்தர மருங்கி னமரர் கூறும்
மந்திரங் கேட்குஞ் செவிய போலக்
கையுங் காலு மாட்டுதல் செய்யா
மெய்யொடு மெய்புறக் குழீஇ மற்றவை
பிறப்புணர் பவைபோ லிறப்பவு நிற்ப
...........................வேழ மெல்லாம்
சோர்ந்து கடுங்கதஞ் சுருங்குபு நீங்கக்

(அநுஞ்சுகன் செயல்)

கிடந்தது கண்டே நடுங்குவன னாகி
யானை நீங்கலுந் தானவட் குறுகிக்
கின்னர ரிட்டன ராயினு மியக்கர்
மெய்ம்மறந் தொழிந்தன ராயினு மேலைத்
தேவ ருலகத் திழிந்த தாயினும்
யாவ தாயினும் யான்கொள றுணிந்தனென்
வலியா தெனக்கு வம்மி [3] னீரெனப்
பலியார் நறுமலர் பற்பல தூஉய்
வழுக்கா மரபின் வழுத்தினன் கொண்டு
கான நீந்திச் சேனை வேந்தன்
அழுங்கலி லாவணச் செழுங்கோ சம்பி
மன்னவன் கோயி லுன்னிய வொருசிறை
இன்பல சுற்றமொடு நன்கனங் கெழீஇத்
தண்கெழு மாலைத் தன்மனை வரைப்பில்

பி - ம். 1 கொய்தகைக் 2 காப்பமை நெடுவேய் கதுப்புப்புறம், 3 னீயெனப்.

இன்ப விருக்கையுள் யாழிடந் தழீஇ
மெய்வழி வெங்நோய் நீங்கப் பையெனச்
செவ்வழி யியக்கலிற் சேதியர் பெருமகன்

(உதயணன் ஆராய்ந்து துணிதல்)

வழிப்பெருந் தேவியொடு வான்றோய் கோயிற்
பழிப்பில் பள்ளியுட் பயின்றுவிளை யாடி
அரிச்சா லேக மகற்றின னிருந்துழி
ஈண்டையெம் பெருமகன் வேண்டா யாகி
மறந்தனை யெம்வயின் வலிதுநின் மனனென
இறந்தவை கூறி யிரங்குவ தொப்பத்
தொடைப்பெரும் பண்ணொலி துவைத்துச்செவிக் கிசைப்பக்
கொடைப்பெரு வேந்தன் குளிர்ந்தன னாகியென்
படைப்பரும் பேரியாழ்ப் பண்ணொலி யிதுவென
ஓர்த்த செவியன் றேர்ச்சியிற் றெளிந்து

(உதயணன் செயல்)

[1] மெய்காப் பாளனை யவ்வழி யாய்வோன்
மருங்கறைக் கிடந்த வயந்தக குமரன்
விரைந்தனன் புக்கு நிகழ்ந்ததை யென்னெனக்
கூட்டமை வனப்பிற் கோட பதிக்குரல்
கேட்டனன் யானுங் கேண்மதி நீயும்
விரைந்தனை சென்றுநம் மரும்பெறற் பேரியாழ்
இயக்கு மொருவனை யிவட்டர னீயென

(வயந்தகன் செயல்)

மயக்கமில் கேள்வி வயந்தக னிழிந்து
புதிதின் வந்த புரிநூ லாளன்
எதிர்மனை வரைப்பக மியைந்தனன் புக்கு
வீறமை வீணைப் பேறவன் வினவ
நருமதை கடந்தோர் பெருமலைச் சாரற்
பெற்ற வண்ண மற்றவ னுரைப்பக்
கொற்றவன் றலைத்தாட் கொண்டவன் குறுகி
வேற்றோன் பதிநின் றுற்றலிற் போந்த
அன்றை நள்ளிரு ளரும்பிடி முறுகக்

பி - ம். 1 மெய்காப்பாளவ்வழி.

குன்றகச் சாரற் றென்றிசை வீழ்ந்த
பேரியா ழிதுவெனப் பெருமகற் குரைப்பத்

(உதயணன் செயல்)

தாரார் மார்பன் றுங்கா வுவகையன்
வருகவெ னல்லியாழ் வத்தவ னமுதம்
தருகவென் றனித்துணை தந்தோய் நீயிவண்
வேண்டுவ துரையென் றுண்டவன் வேண்டும்
அருங்கல வெறுக்கையொடு பெரும்பதி நல்கி
அந்நக ரிருக்கப் பெறுஅய் நீயெனத்
தன்னக ரகத்தே தக்கவை நல்கி
உலவா விருப்பொடு புலர்தலை காறும்
உள்ளியு முருகியும் புல்லியும் புணர்ந்தும்
பள்ளிகொண் டனனாற் பாவையை நினைந்தேன்.

௫—யாழ் பெற்றது முற்றிற்று.

௪—உருமண்ணுவா வந்தது.

(உதயணன் நிலை)

பள்ளி யெய்திய நள்ளிரு ணீங்கலும்
விளியா விருப்பினொ டொளிபெறப் புதுக்கி
மாசில் கற்பின் மருந்தேர் கிளவி
வாசவ தத்தையை வாய்மிக் கரற்றி
எனக்கணங் காகி நின்றநீ பயிற்றிய
வனப்பமை வீணை வந்தது வாராய்
நீயே யென்வயி னினைந்திலை யோவென
வகைத்தார் மார்ப னகத்தே யழல்சுடத்
தம்பியர்ப் பெற்றுந் தனியாழ் வந்தும்
இன்பம் பெருக வியைந்துண் டாடான்
செல்லுங் காலை மல்லன் மகதத்துச்
செருமுன் செய்துழிச் சிறைகொளப் பட்ட
உருமண் ணுவாவிற் குற்றது கூறுவென்

(தருசகன் செயல்)

சங்க மன்னர் தந்த முரிமை
புன்கண் டீரப் புறந்தந் தோம்பி
வாட்டொழிற் றருசகன் மீட்டனன் போக்கி
மன்னர் சிறையும் பின்னர்ப் போக்குதும்
உருமண் ணுவாவை விடுக விரைந்தெனக்
கரும மாக்களைப் பெருமகன் விடுத்தலிற்

(சங்கமன்னர் உருமண்ணுவாவைச் சிறைவிடுத்தல்)

பகைகொண் மன்னர் மிகவுவந் தொன்றி
இழிந்த மாக்களொ டின்ப மார்தலின்
உயர்ந்த மாக்களொ டுறுபகை யினிதென
மகிழ்ந்த நெஞ்சமொடு மன்னவற் புகழ்ந்து
செயப்படு கருமஞ் செறியச் செய்ய
மயக்கமி லமைச்சனை மன்னர் விட்டபின்

(உருமண்ணுவாவின் செயல்)

திருவலக் கருமந் திண்ணிதிற் செய்துவந்
துருமண் ணுவாவுந் தருசகற் கண்டு
சிறைநனி யிருந்த சித்திராங் கதனைப்
பொறைமலி வெங்நோய் புறந்தந் தோம்பிப்
போக்கிய பின்றை வீக்கங் குன்றுத்
தலைப்பெருந் தானைத் தம்மிறைக் கியன்ற
நிலைப்பா டெல்லா நெஞ்சுணக் கேட்டு
வரம்பி லுவகையொ டிருந்த பொழுதின்

(சாதகன் செயல்)

இயைந்த நண்பி னியூகியோ டிருந்த
பயன்றெரி சூழ்ச்சிப் பதின்ம ரிளையருட்
டீதில் கேள்விச் சாதக னென்போன்
உருமண் ணுவாவும் யூகியுந் [1] தறியாக்
கரும மேற்கோ டெரிநூ லாகப்
பாவிடு குழலி னூயிடைத் திரிதர

(யூகி சாதகனை உருமண்ணுவாவிடம் விடுத்தல்)

முனிவில ளுதலின் முன்னு ளெண்ணிய

பி - ம். [1] திரியாக்.

செய்வினை முடித ேலைக்கித் தேவியைக்
கைவயிற் கொடுத்தல் கரும மென்றுதன்
அருமறை யோலை யரும்பொறி யொற்றி
உருமண் ணுவாவினைக் கண்டிது காட்டென

(சாதகன் செயல்)

விரைவனன் போந்து தருசகன் காக்கும்
இஞ்சி யோங்கிய விராச கிரியத்து
வெஞ்சின வேந்தன் கோயின் முற்றத்துக்
குஞ்சரத் தானத்து நின்றேற் குறுகிக்
[1] குறியிற் பயிர்ந்து மறையிற் போகி
ஓலை காட்ட வுள்ளம் புகன்று

(உருமண்ணுவா சாதகனை வினவல்)

மேலை பட்டவுந் தேவி நிலைமையும்
வாசனை யகத்தே மாசற வுணர்ந்தும்
எம்வயிற் றீர்ந்தபிற் செய்வகை யெல்லாம்
வாயி னுரைக்கெனச் சாதகன் கூறும்

(சாதகன் கூற்று)

அற்பழ லூர்தர வடல்வே லுதயணன்
ஒற்கம் படாமை யுணர்ந்தன மாகி
அரும்பெறற் றேழி யாற்றும் வகையிற்
பெருந்தண் கானம் பிற்படப் போகிப்
பற்றின் மாதவர் பள்ளியு ளிருப்பின்
[2] அற்றந் தருமென வதுநனி வலீஇத்
தண்புனற் படப்பைச் சண்பைப் பெரும்பதி
மித்திர காம னற்பெருங் கிழத்தியொ
[3] டாப்புற விரீஇய பிற்றை யாருணி
காப்புறு நகர்வயிற் கரந்துசென் றுறழுகும்
கழிபெரு நண்பிற் காள மயிடனென்
றழிவி லந்தண னவ்விடத் துண்மையிற்
புறப்படு மிதுவெனத் திறப்படத் தெரிந்து
செட்டி மகனொ டொட்டினம் போகிப்
பண்டம் பகரும் பட்டினம் பயின்ற

பி - ம். 1 குறிப்பிற். 2 அற்கக். 3 டொப்புறவிரீஇயபின்றை.

புண்டரம் புகீஇப் புதைத்த வுருவொடு
பொருத்தஞ் சான்ற புரைதபு நண்பின்
வருத்த மானன் மனைவயின் வைத்தபின்
வருத்த மானற் கொத்த [1] தம்முன்
இரவி தத்த னென்னு முரவோன்
பெரும்படை தொகுத்துவந் தரம்புசெய் தலைத்தலின்
இருந்த நகரமுங் கலங்க மற்றவன்
அருந்தொழின் மலையர ணடைந்தன னாகி
இருந்த [2] பொழுதி விப்பா லரசற்கு
நிகழ்ந்ததை யெல்லா நெறிமையிற் கேட்டுப்
பொன்னிழை மாதரைப் புணர்த்தல் வேண்டும்
இன்னே வருகென நின்னுழைப் பெயர்த்தந்
தாங்கவ ணிருந்தன னாதலி னீங்கினிச்
செய்வதை யெல்லா மெய்பெற நாடெனத்
தூதுசெல் லொழுக்கிற் சாதக னுரைப்ப

(உருமண்ணுவாவின் செயல்)

ஆற்றல் சான்ற தருசகற் கண்டவன்
மாற்ற மெல்லா மாற்றுளிக் கூறி
அவனுழைப் பாட்டகத் ததிபதி யாகிய
தவறில் செய்தொழிற் சத்தி யூதியை
வேண்டிக் கொண்டு மீண்டனன் போந்துழி
அப்பா லின்று முற்பால் விருந்தாய்ப்
புண்டர நகரம் புகுந்தன னிருந்த
மண்டமர்க் கடந்தோன் விரைந்தனன் வருகென
எதிர்வரு தூதனொ டதிரக் கூடிச்
சத்தி யூதி முதலாச் சண்பையுள்
மித்திர காமனைக் கண்டுமெலி வோம்பி
வருத்தந் தீர்ந்தபின் வருத்த மானன்
பூமலி புறவிற் புண்டரங் குறுகித்
தேமொழித் தேவியொடு தோழனைக் கண்டு
தலைப்பா டெய்தித் தாங்கா வுவகையொடு
நலத்தகு நாகத் துறைவோர் போல
இன்ப மகிழ்ச்சியொடு நன்கனம் போந்து

21006

பி - ம். 1 தம்முனோன், 2 பொழுதியிப்பால்.

புகழ்க்கோ சம்பிப் புறத்துவந் தயர்வறும்
மகிழ்ச்சி யெய்தி மனம்பிணி வுறாஉம்
மதுகாம் பீர வனமெனுங் காவினுட்
புகுதந் தவ்வழிப் புதுவதின் வந்த
விருந்தின் மன்ன ரிருந்துபயன் கொள்ள
இயற்றப் பட்ட செயற்கருங் காவினுள்
மறைத்தன னவர்களைத் திறப்பட விரீஇயபின்
உவந்த வுள்ளமொ டுருமண் ணுவாவும்
புகுந்தனன் மாதோ பொலிவுடை நகரென்.

௪—உருமண்ணுவா வந்தது முற்றிற்று.

௫—கனாவிறுத்தது.

(உதயணன் நிலை)

பொலிவுடை நகர்வயிற் புகலருங் கோயிலுள்
வலிகெழு நோன்றாள் வத்தவர் பெருமகன்
புதுமணக் காரிகை பூங்குழை மாதர்
பதுமா தேவியொடு பசைந்துகண் கூடி
அசையுஞ் சீரு மளந்துநொடி போக்கி
இசைகொள் பாடலி னிசைந்துட னொழுக
விசைகொள் வீணை விருந்துபடப் பண்ணி
வசைதீ ருதயணன் மகிழ்ந்துட னிருந்துழி

(பதுமாபதியின் கூற்று)

நெடியோ னன்ன நெடுந்தகை மற்றுநின்
கடியார் மார்பங் கலந்துண் டாடிய
வடிவேற் றடங்கண் வாசவ தத்தை
வழிபா டாற்றி வல்ல ளாகிய
அழிகவுள் வேழ மடக்கு நல்லியாழ்
யானும் வழிபட் டம்முறை பிழையேன்
காண லுறுவேன் காட்டி யருளென
முள்ளெயி றிலங்கச் செவ்வாய் திறந்து
சில்லென் கிளவி மெல்லென மிழற்றி
நகைநயக் குறிப்பொடு தகைவிரல் கூப்ப

(வாசவதத்தையை நினைந்து உதயணன் கலங்கல்)

முற்றிழை பயிற்றிய முற்பெரு நல்லியாழ்
கற்பே னென்றசொற் கட்டழ லுறீஇ
வேலெறிந் தன்ன வெம்மைத் தாகிக்
காவல குமரற்குக் கதுமென விசைப்ப
மாசி றாமரை மலர்கண் டன்ன
ஆசில் சிறப்பி னமரடு தறுகண்
இளநல முண்ட விணையி றோகை
வளமயிற் சாயல் வாசவ தத்தையை
நினைப்பி னெகிழ்ந்து நீர்கொள விறைஞ்சிச்
சினப்போ ரண்ணல் சேயிழை மாதர்க்கு
மனத்தது வெளிப்பட மறுமொழி கொடாஅன்

(உதயணனுடைய குறிப்பறிந்து பதுமாபதி
தன்னிடஞ் செல்லுதல்)

கலக்க மறிந்த கனங்குழை மாதர்
புலத்தல் யாவதும் பொருத்த மின்றென
எனக்கு மொக்கு மெம்பெரு மான்றன்
மனத்தகத் துள்ளோ ளின்னும் விள்ளாள்
விழுத்தவ முடையள் விளங்கிழை பெரிதென
ஒழுக்க மதுவா முயர்ந்தோர் மாட்டே
என்றுதன் மனத்தே நின்றுசில நினையா
அறியாள் போலப் பிறிதுநயந் தெழுந்துதன்
ஆயஞ் சூழ வரசனை வணங்கி
மாவீ ழோதிதன் கோயில் புக்கபின்

(வயந்தகன் உதயணனிடம் கூறுதல்)

கவன்றன னிருந்த காவன் மன்னற்கு
வயந்தக குமரன் வந்து கூறும்
வாலிழைப் பணைத்தோள் வாசவ தத்தைக்கும்
பாசிழை யல்குற் பதுமா பதிக்கும்
சீர்நிறை கோல்பொற் றூனடு வாகி
நின்றி பேரன் பின்றிவட் டாழ்த்து
நீங்கிற் றம்ம நீத்தோ ணினைந்தென
ஆங்கவ னுரைப்ப வதுவுங் கேளான்

(உதயணன் வாசவதத்தையை நினைந்து வருந்தித் துயிலல்)

முதிர்மலர்த் தாமமொடு முத்துப்புரி நாற்றிக்
கதிர்மணி விளக்கங் கான்றுதிசை யழல
விதியிற் புனைந்த வித்தகக் கைவினைப்
பதினைந் தமைந்த படையமை சேக்கையுட்
புதுநலத் தேவியொடு புணர்தல் செல்லான்
நறுந்த ணிருங்கவு ளளகிரி வணக்கியதன்
இறும்புபுரை யெருத்த மேறிய ஞான்று
கண்டது முதலாக் கான நீந்திக்
கொண்டனன் போந்தது நடுவாப் பொங்கழல்
விளிந்தன ளென்ப திறுதி யாக
அழிந்த நெஞ்சமொ டலமர லெய்தி
மேனா ணிகழ்ந்ததை யானா தரற்றி
இகலிடை யிமையா வெரிமலர்த் தடங்கண்
புகழ்வரை மார்பன் பொருந்திய பொழுதிற்
கொள்ளென் குரலொடு கோட்பறை கொளீஇ
உள்ளெயிற் புரிசை யுள்வழி யுலாவும்
யாமங் காவல ரசைய வேமம்
வாய்ந்த வைகறை வையக வரைப்பின்

(உதயணன் கனவு காண்டல்)

நாற்கட லும்பர் நாக வேதிகைப்
பாற்கடற் பரப்பிற் பனித்திரை நடுவண்
வாயுங் கண்ணுங் குளம்பும் பவளத்
தாயொளி பழித்த வழகிற் றாகி
விரிகதிர்த் திங்களொடு வெண்பளிங் குமிழும்
உருவொளி யுடைத்தா யுட்குவரத் தோன்றி
வயிரத் தன்ன வைந்நுனை மருப்பிற்
செயிர்படு நோக்கமொடு சிறப்பிற் கமைந்ததோர்
வெண்டா ரணிந்த வெள்ளே றுகிடந்த
வண்டார் தாதின் வெண்டா மரைப்பூ
அங்கண் வரைப்பி னமரிறை யருள்வகைப்
பொங்குநிதிக் கிழவன் போற்றவு மணப்ப
மங்கலங் கதிர்த்த வங்கலு ழாகத்துத்

தெய்வ மகடூஉ மெய்வயிற் பணித்துப்
பையு ஊரக் கைவயிற் கொடுத்தலும்

(உதயணன் எழுதல்)

பயில்பூம் பள்ளித் துயிலெடை மாக்கள்
இசைகொள் ளோசையி னின்றுயி லேற்று
விசைகொண் மான்றேர் வியல்கெழு வேந்தன்
கனவின் விழுப்ப மனவயி னடக்கி

(முனிவரைக் கண்டு உதயணன் வினாதல்)

அளப்பரும் படிவத் தறிவர் தானத்துச்
சிறப்பொடு சென்று [1] சேதியம் வணங்கிக்
கடவது திரியாக் கடவுளர்க் கண்டு
நின்றிடை யிருள்யாம நீங்கிய வைகறை
இன்றியான் கண்ட தின்னது மற்றதை
என்கொ ருமென நன்கவர் கேட்ப
உருத்தகு வேந்த னுரைத்ததன் பின்றைத்

(ஒரு முனிவன் கனாப்பயன் உரைத்தல்)

திருத்தகு முனிவன் றிண்ணிதி னாடி
ஒலிகடற் றானை யுஞ்சையர் பெருமகன்
மலிபெருங் காதன் மடமொழிப் பாவை
இலங்குகதி ரிலைப்பூ ணேந்துமுலை யாகத்து
நலங்கிளர் நறுநுத ஞறிருங் கூந்தல்
மாசில் கற்பின் வாசவ தத்தை
முழங்கழன் மூழ்கி முடிந்தன ளென்பது
மெய்யெனக் கொண்டனை யாயின் மற்றது
பொய்யெனக் கருது புரவ லாள
இந்நா ளகத்தே சின்மொழிச் செவ்வாய்
நன்னுதன் மாதரை நண்ணப் பெறுகுவை
பெற்ற பின்றைப் பெய்வளைத் தோளியும்
கொற்றக் குடிமையுட் குணத்தொடும் விளங்கிய
விழுப்பெருஞ் சிறப்பின் விஞ்சைய ருலகின்
வழக்கில் சக்கரம் வலவயி னுய்க்கும்

பி - ம். 1 சேதியன்.

* ருசா

திருமகற் பெறுதலுந் திண்ணிது திரியா
காரணங் கேண்மதி தாரணி மார்ப
[1] ஆயிர நிரைத்த வாலிதழ்த் தாமரைப்
பூவெனப் படுவது பொருந்திய புணர்ச்சிநின்
தேவி யாகுமதன் றூதக டிரிஞ்சி
முன்றுண் முடக்கிப் பின்றா ணிமிர்த்துக்
கொட்டை மீமிசைக் குளிர்மதி விசும்பிடை
எட்டு மெய்யோ டிசைபெறக் கிடந்த
விள்ளா விழுப்புகழ் வெள்ளே றென்பதை
முகனமர் காதனின் மகனெனப் படுமது
பரந்த வெண்டிரைப் பாற்கட லாகி
விரும்பப் படுமது வெள்ளியம் பெருமலை
வெண்மை மூன்றுடன் கண்டதன் பயத்தாற்
றிண்மை யாழி திருத்தக வுருட்டலும்
வாய்மை யாக வலிக்கற் பாற்றென
நோன்மை மாதவ னுண்ணிதி னுரைப்ப

(உதயணன் செயல்)

அன்று மின்று மறிவோ ருரைப்பதை
என்றுந் திரியா தொன்றே யாதலின்
உண்டுகோ லெதிர்தலென் றுள்ளே நினையாப்
பெருந்தண் கோயிலு ளிருந்த பொழுதில்
உருகெழு மந்திரி [2] வரவதை யுணர்த்தலிற்
புகுதக வென்றுதன் புலம்பகன் றொழிய
இகல்வேல் வேந்த னிருத்த லாற்றான்
ஆனா வுவகையொடு தானெதிர் செல்லத்
தேனார் தாமரைச் சேவடி வீழ்தலிற்
றிருமுயங்கு தடக்கையிற் றிண்ணிதிற் பற்றி
உரிமைப் பள்ளி புக்கனன் மாதோ
பெருமதி யமைச்சனைப் பிரிந்துபெற் றனென்.

௫—கனாவிறுத்தது முற்றிற்று.

பி - ம். [1] ஆயிதழ். [2] யாவது.

௬—பதுமாபதியை வஞ்சித்தது.

(உதயணன் உருமண்ணுவாவை வினவல்)

பிரிந்துபின் வந்த பெருந்திற லமைச்சனொ
டருந்திறல் வேந்த னமைவரக் கூடி
இருந்த பின்றை நிகழ்ந்தது கூறெனச்

(உருமண்ணுவா நிகழ்ந்தவற்றை உதயணனுக்குக் கூறல்)

செருச்செய் மன்னன் சிறையிடைச் [1] செய்தலும்
தருசகன் றன்வயின் விடுத்த தன்மையும்
பொருவகை புரிந்தவர் புணர்ந்த நீதியும்
தெரிய வெல்லாம் விரியக் கூறி

(உருமண்ணுவா வயந்தகனிடம் கூறல்)

அந்நிலை கழிந்த பின்னிலைப் பொழுதின்
இன்புறு செவ்வியு ளின்னது கூறென
வன்புறை யாகிய வயந்தகற் குணர்த்த

(உதயணன் செயல்)

உருமண் ணுவாவினொ [2] டொருங்குகண் கூடித்
தருமணன் ஞெமிரிய தண்பூம் பந்தருட்
டிருமலி மார்பன் றேவி பயிற்றிய
வீணை பெற்றது விரித்தவற் குரைத்துத்
தேனேர் கிளவியைத் தேடி யாற்ற

(வயந்தகன் உதயணனைக் கேட்டல்)

மானங் குன்றா வயந்தகன் கூறும்
நயந்துநீ யாற்று நன்னுத லரிவையும்
பயந்த கற்பிற் பதுமா பதியுமென்
றிருவ ருள்ளுந் தெரியுங் காலை
யாவர் நல்லவ ரறிவினு மொழுக்கினும்
யாவரை யுவத்தி யாவதை யுணரக்
காவ லாளா கரவா துரையென

பி - ம். 1 செய்தவும். 2 டொருங்குடன்.

(உதயணன் விடை கூறுதல்)

முறுவல் கொண்டவ னறியு மாயினும்
பல்பூட் சில்சொற் பட்டத் தேவியைச்
சொல்லாட் டிடையுஞ் செல்ல றீர்தலிற்
பீடுடை யொழுக்கிற் பிரச்சோ தனன்மகள்
வாடிடை மழைக்கண் வாசவ தத்தை
கண்ணகன் ஞாலத்துப் பெண்ணருங் கலமவள்
செறுந ருவப்பச் செந்தீ யகவயின்
உறுதவ மில்லேற் கொளித்தன டானென
மறுகுஞ் சிந்தை மன்னனை நோக்கி

(வயந்தகன் கூற்று)

வெங்கண் வேந்தர் தங்கட் குற்ற
தங்கண் ஞாலத் தாமே யாயினும்
அகலிடத் துரைப்பி னற்றம் பயத்தலின்
அவரின் வாழ்வோ ரவர்முன் னின்றவர்
இயல்பி னீர்மை யிற்றென வுரைப்பின்
விம்ம முறுதல் வினவது முடைத்தோ
அற்றே யாயினு மிற்றுங் கூறுவென்
நயக்குங் காத னல்வளைத் தோளியைப்
பெயர்க்கும் விச்சையிற் [1] பெரியோற் கண்டவன்
உவக்கு முபாய மொருங்குடன் விடாது
வழிபா டாற்றி [2] வல்லிதிற் பெறீஇய
கழிபெருங் காதலொடு சென்றபி னவ்வழிக்
காசி யரசன் பாவையைக் கண்டே
வாசவ தத்தையை மறந்தனை யாகிப்
பரவை யல்குற் பதுமா பதியோ
டிரவும் பகலு மறியா வின்புற்
றட்குவரு கோயிலு ளொடுங்குவனை யுறைந்தது
மீற்போர் மார்ப மாண்புமற் றுடைத்தோ
அன்னது மாக வதுவே யாயினும்
திண்ணிதி னதனையுந் திறப்படப் பகராய்
பின்னிது நினைக்கும் பெற்றியை யாதலின்

பி - ம். 1 பெரியோர்க். 2 வலிதிற்பெரிய.

ஒருபாற் பட்ட தன்றுநின் மனனெனத்

(உதயணன் கூற்று)

திருவார் மார்பன் றெரிந்தவற் குரைக்கும்
வடுவாழ் கூந்தல் வாசவ தத்தையோ
[1] டிடைதெரி வின்மையி னவளே யிவளென
நயந்தது நெஞ்ச நயவா தாயினும்
பால்வகை வினையிற் படர்ந்த வேட்கையை
மால்கடல் வரைப்பின் மறுத்தன ரொழுகுதல்
யாவர்க் காயினு மாகா ததுவென
மேவரக் காட்டலு மீட்டுங் கூறுவன்

(வயந்தகன் கூற்று)

அறியா னிவனென னெறியிற் கேண்மதி
அன்றுநாங் கண்ட வரும்பெற லந்தணன்
இன்றுநாங் காண விந்நகர் வந்தனன்
மானேர் நோக்கி மாறிப் பிறந்துழித்
தானே யாகத் தருகுவெ னென்றனன்
பனிமலர்க் கோதைப் பதுமையை நீங்கித்
தனியை யாகித் தங்குதல் பொருளெனக்

(உதயணன் பதுமாபதி முதலியோரை வஞ்சித்து அகற்றிச் சென்று துயிலல்)

கேட்டே யுவந்து வேட்டவன் விரும்பி
மாற்று மன்னரை மருங்கறக் கெடுப்பதோர்
ஆற்றற் சூழ்ச்சி யருமறை யுண்டெனத்
தேவி முதலா யாவிரு மகன்மினென்
றுய்மணி மாடத் தவ்விடத் தகன்று
திருமணக் கிழமைப் பெருமக ளுறையும்
பள்ளிப் பேரறை யுள்விளக் குறீஇ
மயிரினுந் தோலினு நூலினு மியன்ற
பயில்பூஞ் சேக்கையுட் பலரறி வின்றி
உழைக்கலச் சுற்றமு மொழித்தன னாகி
விழுத்தகு வெண்டுகில் விரித்தன னுடுத்துத்

பி - ம். 1 டிடைதெரிவின்மையளே.

தூய னாகி வாய்மொழி பயிற்றித்
தோட்டுணை மாதரை மீட்டனை பணியென
வாட்படை மறவன் காட்டிய வகைமேற்
சேட்புலம் பகலச் சிந்தை நீக்கி
வீணை கைவலத் திரீஇ விதியுளி
ஆணை வேந்த னமர்ந்தனன் றுயிலென்.

௬—பதுமாபதியை வஞ்சித்தது முற்றிற்று

௭—வாசவதத்தை வந்தது.

(அமைச்சர் வாசவதத்தையை உதயணன்பால் விடுத்தல்)

ஆணை வேந்த னமர்ந்துதுயில் பொழுதின்
வாணுதன் மாதரை மதியுடை யமைச்சர்
அன்பியாத் தியன்ற தன்பாற் கணவன்
மண்பாற் செல்வ மாற்றி மற்றோர்
பெண்பாற் செல்வம் பேணுத லின்மையும்
எரிசின மொய்ம்பிற் றரிசகன் றங்கை
பண்பொடு புணர்ந்த பதுமா பதியையும்
பொருபடை வேந்தனை வெரீஇப் புணர்த்த
கருமக் காம மல்ல தவண்மாட்
டொருமையி னோடாது புலம்பு முள்ளமும்
இரவும் [1] பகலு மவண்மாட் டியன்ற
பருவர னோயோ டாற்றும் படியும்
இன்னவை பிறவு நன்னுத றேற
மறப்பிடைக் காட்டுதல் வலித்தன ராகிச்
சிறப்புடை மாதரைச் சிவிகையிற் றரீஇப்
பெறற்கருங் கொழுநன் [2] பெற்றி காண்கென
ஆய்மணி விளக்கத் தறையகம் புகுத்தலின்

(உதயணனுடைய நிலை)

மாமணித் தடக்கை மருங்கிற் றாழ்தரத்
தன்பாற் பட்ட வன்பின னாகிக்
கரண நல்லியாழ் காட்டுங் காலை

பி-ம். 1 பகலுந் தன்மாட்டு. 2 பெற்றியிற்.

மரணம் பயக்கு மதர்வைத் தாயநின்
கடைக்க ணோக்கம் படைப்புண் ணகவயின்
அழனெய் பெய்தென் [1] ரூற்றே னென்னை
மழலையங் கிளவி மறந்தனை யோவென
வாய்சோர்ந் தரற்று வாசங் கமழும்
ஆய்பூந் தட்டத் தகத்தோடு தெற்றிய
தாமம் வாட்டுங் காம வுயிர்ப்பினன்
கனவி னினையுங் கணவனைக் கண்டே

(வாசவதத்தையின் செயல்)

நனவினு மிதுவோ நறுந்தார் மார்பன்
தன்னல தில்லா நன்னுதன் மகளிவை
மறுதர வில்லாப் பிரிவிடை யாற்றுதல்
உறுகடல் வரைப்பி னுயர்ந்தோற் கியல்பெனல்
கண்டனெ னென்னுந் தண்டா வுவகையள்
றானெறி வழாஅ நுனிப்பொழுக் குண்மையின்
ஏனை யுலகமு மிவற்கே யியைகெனக்
கணவனை நோக்கி யிணைவிரல் கூப்பி
மழுகிய வொளியின ளாகிப் பையெனக்
கழுமிய காதலொடு கைவலத் திருந்த
கோட பதியின் சேடணி கண்டே
[2] மகக்காண் டாயின் மிகப்பெரிது விதும்பிச்
சார்ந்தன ளிருந்து வாங்குபு கொண்டு
கிள்ளை வாயி னன்ன வள்ளுகிர்
நுதிவிரல் சிவப்பக் கதியறிந் தியக்கலிற்
காதலி கைந்நயக் கரணங் காதலன்
ஏதமில் செவிமுத லினிதி னிசைப்ப

(உதயணனுடைய செயல்)

வாசவ தத்தாய் வந்தனை யோவெனக்
கூந்தன் முதலாப் பூம்புற நீவி
ஆய்ந்த திண்டோ ளாகத் தசைஇ
என்வயி னினையா தேதிலை போல
நன்னுதன் மடவோய் நாள்பல கழிய

பி - ம். [1] ரூற்றுனென்னை. [2] மகத்தாண்டாயின்.

ஆற்றிய வாறெனக் கறியக் கூறென

(வாசவதத்தை வாளா விருத்தல்)

மாற்றுரை கொடாஅண் மனத்தோ டலமரீஇக்
கோட்டுவன ளிறைஞ்சிக் கொடுங்குழை யிருப்ப

(மீட்டும் உதயணன் அரற்றல்)

மயங்குபூஞ் சோலை மலைவயி னாடிப்
பெயர்ந்த காலை நயந்தனை யொருநாள்
தழையுங் கண்ணியும் விழைவன தம்மென
வேட்டம் போகிய போழ்திற் கோட்டம்
கூரெரி கொளுவ வாரனா றெய்தி
இன்னுயிர் நீத்த விலங்கிழை மடவோய்
நின்னணி யெல்லா நீக்கி யோராப்
பின்னணி கொண்டு பிறளே போன்றனை
எரியகப் பட்டோ ரியற்கை யிதுவோ
தெரியே னெனக்கிது தெரியக் கூறென
ஆனா வுவகையொ டவண்மெய் தீண்டியும்
தேனார் படலைத் திருவளர் மார்பன்
கனவென வறியான் காதலின் மறுத்தும்
சினமலி நெடுங்கண் சேர்த்திய [1] பொழுதின்

(அமைச்சர் வாசவதத்தையை உதயணனிடமிருந்து பிரித்தல்)

வழுக்கில் சீர்த்தி வயந்தக னடைஇ
ஒழுக்கிய றிரியா யூகியொ டுடனே
நாளை யாகு நண்ணுவ தின்றுநின்
கேள்வ னன்பு கெடாஅ னாகுதல்
துயிலுறு பொழுதிற் றோன்றக் காட்டுதல்
அயில்வேற் கண்ணி யதுநனி வேண்டித்
தந்தே மென்பது கேளெனப் பைந்தொடி
புனைகோல் கரையி னினைவனள் விம்மி
நிறையில ளிவளென வறையுநன் கொல்லென
நடுங்கிய நெஞ்சமொ டொடுங்கீ ரோதி
வெம்முலை யாகத்துத் தண்ணெனக் கிடந்த

பி - ம். 1 தொழுதின்.

எழுப்புரை நெடுந்தோண் மெல்லென வெடுத்து
வழுக்கில் சேக்கையுள் வைத்தனள் வணங்கி
அரும்பெறல் யாக்கையி னகலு முயிர்போற்
பெரும்பெயர்த் தேவி பிரிந்தனள் போந்துதன்
ஈனுத் தாயோ டியூகியை யெய்தப்

(உதயணன் விழித்து அரற்றல்)

போரார் குருசில் புடைபெயர்ந் தூராஅய்
மறுமொழி தாராய் மடவோ யெனக்கென
உறுவரை மார்பத் தொடுக்கிய புகுவோன்
காணு னாகிக் கையற வெய்தி
ஆனு வின்றுயி லனந்தர் தேறிப்
பெருமணி பெற்ற நல்குர வாளன்
அருமணி குண்டு கயத்திட் டாங்குத்
துயிலிடைக் கண்ட துணைநலத் தேவியை
இயல்புடை யங்கி ணேற்றபிற் காணு
தாற்று மன்னனை யருமறை நாவின்

(வயந்தகன் உதயணனிடம் கூறல்)

வயத்தகு வயந்தகன் வல்விரைந் தெய்தி
இருளும் பகலு மெவ்வமோ டிரங்குதல்
பொருளஃ தன்றே [1] புரவலர் மாட்டெனக்
காரணக் கிளவி கழறுவனன் காட்டத்

(உதயணன் கூற்று)

தேரணி சேனைத் திறன்மீக் கூரிய
பிடிமகிழ் யானைப் பிரச்சோ தனன்மகள்
வடிமலர்த் தடங்கண் வாசவ தத்தையென்
பள்ளிப் பேரறை பையெனப் புகுந்து
நல்லியா ழெழீஇ நண்ணுவன ளிருப்ப
வாச வெண்ணெ யின்றி மாசொடு
பிணங்குபு கிடந்த பின்னுச்சேர் புறத்தொடு
பணங்கமழ் நுதலு மருங்குலு நீவி
அழிவுநனி தீர்ந்த வாக்கையே னாகிக்
கழிபே ருவகையொடு கண்படை கொளளும்

பி - ம். 1 புலவர்.

* ருள

மறுத்தே நீங்கினள் வயந்தக வாராய்
நிறுத்த லாற்றே னெஞ்ச மினியெனக்

(வயந்தகன் கூற்று)

[1] கனவிற் கண்டது நனவி னெய்துதல்
தேவர் வேண்டினு மிசைதல் செல்லாது
காவ லாளர் கற்றோர் கேட்பிற்
பெருநகை யிதுவெனப் பேர்த்துரை [2] கொடாஅது
ஆடலு நகையும் பாடலும் விரைஇ
மயக்கமி றேவி வுண்ணங் கொண்டோர்
இயக்கி யுண்டுண் டுறைவதை யதற்கோர்
காப்பமை மந்திரங் கற்றனென் யானென
வாய்ப்பறை யறைந்து வாழ்த்துப்பல கூறி
ஒருதலைக் கூற்றொடு திரிவில னிருப்பப்

(உதயணன் செயல்)

பண்டே போலக் கண்படை மம்மருட்
கண்டே னென்னே கனவன் றுயின்
மாறி [3] நீங்குமோ மடமொழி தானெனத்
தேறியுந் தேறான் றிருவமர் மார்பன்
நள்ளிரு ணீங்கலும் பள்ளி யெழுந்து
காமர் சுற்றங் கைதொழு தேத்தத்
தாமரைச் செங்கண் டகைபெறக் கழீஇக்
குளம்புங் கோடும் விளங்குபொன் னழுத்திச்
சேடணி சேதா விலையன வின்னே
கோடி முற்றிக் கொண்டணிர் வருகெனத்
தெரிமலர்க் கோதைத் தேவியை யுள்ளி
அருமறை யாளர்க் கெழுமுறை வீசி
நனவிற் கண்ட நன்னுதன் மாதரைக்
கனவெனக் கொண்டலி னினியோர்க்கு முரையான்
காமுறு நெஞ்சிற் காதலர்ப் பிரிந்தோர்க்
கேமுறு வேட்கை யாகு மென்ப
தீதுகொ லென்னப் பற்பல நினைஇ

பி - ம். 1 கனவு. 2 கொடாஅன். 3 நீங்குமோர்.

(வயந்தகன் உதயணனிடம் கூறுதல்)

இருந்த செவ்வியுள் வயந்தகன் குறுகி
ஆனாச் செல்வத் தந்தணன் மற்றுநாம்
மேனா ணிகழ்ந்த மேதகு விழுமத்
தறம்பொரு ளின்ப மென்ற மூன்றினும்
சிறந்த [1] காதலி சென்றுழித் தரூஉம்
மகதத் தெதிர்ந்த தகுதி யாளன்
மதுகாம் பீர வனமெனுங் காவினுட்
புகுதந் திருந்து புணர்க்கு மின்றவட்
சேறு மெழுகெனச் சிறந்தன னாகி

(உதயணன் செயல்)

மாறா மகிழ்ச்சியொடு மன்னவன் விரும்பிக்
கொடுஞ்சி நெடுந்தேர் கோல்கொள வேறி
நெடுங்கொடி வீதி நீந்துபு போகி
வித்தக வினைஞர் சித்திர மாக
உறழ்படச் செய்த வொண்பூங் காவின்
எறுழ்மிகு மொய்ம்ப னிழிந்தகம் புகவே

(யூகியினிலைமை)

நோயற வெறியு மருந்தோ ரன்ன
வாய்மொழிச் சூழ்ச்சித் தோழற் குணர்த்தலிற்
குழன்ற குஞ்சி நிழன்றெருத் தலைத்தரக்
கழுவாது பிணங்கிய வழுவாச் சடையினன்
மறப்போ ராணையின் மதந்தவ நெருக்கி
அறப்பே ராண்மையி னடக்கிய யாக்கையன்
கல்லுண் கலிங்கங் கட்டிய வரையினன்
அல்லூ ணீத்தலி னஃகிய வுடம்பினன்
வெற்ற வேந்தன் கொற்றங் கொள்கெனச்
செற்றந் தீர்ந்த செய்தவச் சிந்தையன்

(வாசவதத்தையின்நிலைமை)

நன்னுத லரிவையும் பொன்னெனப் போர்த்த
பசலை யாக்கையொடு பையு ளெய்தி

பி - ம். [1] காதலிற்.

உருப்பவிர் மண்டிலத் தொருவயி னோடும்
மருப்புப் பிறையின் மிகச்சுடர்ந் திலங்காது
புல்லெனக் கிடந்த நுதலினொ டலமந்
தியல்பிற் றிரியா வின்பெருங் கிழவனை
வியலக வரைப்பின் மேவர வேண்டி
விரத விழுக்கலம் விதியுளி யணிந்து
திரித லில்லாச் செந்நெறிக் கொள்கையள்
பொன்னிறை சுருங்கா மண்டிலம் போல
நன்னிறை சுருங்கா ணாடொறும் புறந்தரூஉத்
தன்னெறி திரியாத் தவமுது தாயொடும்
விருத்துக் கோயிலுட் காப்பறை யிருப்ப

(உதயணன் யூகியை அறிந்துகொண்டு தழுவல்)

யாப்புடைத் தோழ [1] னரசனொ டணுகிக்
காப்புடை [2] முனிவனைக் காட்டின னாக
மாசின் மகதத்துக் கண்டோ னல்லன்
யூகி மற்றிவ னொளியல தெல்லாம்
ஆகா னாகலு மரிதே மற்றிவன்
மார்புற முயங்கலும் வேண்டுமென் மனனென
[3] ஆராய் கின்றோற் ககலத்துக் கிடந்த
பூந்தண் மாலையொடு பொங்குநூல் புரள
இதுகுறி காணென விசைப்பது போல
நுதிமருப் பிலேகை நுண்ணிது தோன்ற
ஐயந் தீர்ந்து வெய்துயிர்த் தெழுந்துநின்
றாறில் சூழ்ச்சி யூகந்த ராய
நாறிருங் கூந்தலை மாறிப் பிறந்துழிக்
காணத் தருகுறு முனிவனை நீயினி
யாணர்ச் செய்கை யுடைத்தது தெளிந்தேன்
வந்தனை யென்றுதன் சந்தன மார்பிற்
பூந்தார் குழையப் புல்லினன் பொருக்கெனத்
தீந்தேன் கலந்த தேம்பால் போல
நகையுருத் தெழுதரு முகத்த னாகித்
துறந்தோர்க் கொத்த தன்றுநின் சிறந்த
அருள்வகை யென்னா வகலுந் தோழனைப்

பி - ம். [1] னரசனையணுகி. [2] முனிவற்குக். [3] ஆராய்க்கின்றோர்க்கு.

பொருள்வகை யாயினும் புகழோய் நீயினி
நீங்குவை யாயி னீங்குமென் னுயிரெனப்

(வாசவதத்தையின் வருகை)

பூங்குழை மாதரைப் பொருக்கெனத் தம்மென்
றாங்கவன் மொழிந்த வல்ல னோக்கி
நன்னுதன் மாதரைத் தாயொடு வைத்த
பொன்னணி கோயில் கொண்டனர் புகவே

(வாசவதத்தையின் செயல்)

காரிய மிதுவெனச் சீரிய காட்டி
அமைச்ச ருரைத்த திகத்த லின்றி
மணிப்பூண் மார்பன் பணித்தொழி லன்மை
நல்லா சார மல்லது புரிந்த
கல்லாக் கற்பிற் கயத்தியேன் யானென
நாண்மீ தூர நடுங்குவன ளெழுந்து
தோண்மீ தூர்ந்த துயர நீங்கக்
காந்த ணறுமுகை கவற்று மெல்விரல்
பூண்கல மின்மையிற் புல்லெனக் கூப்பிப்
பிரிவிடைக் கொண்ட பின்னணி கூந்தல்
செருவடு குருசி றாண்முதற் றிவள
உவகைக் கண்ணீர் புறவடி நனைப்பக்
கருவி வானிற் கார்த்துளிக் கேற்ற
அருவி வள்ளியி னணிபெறு மருங்குலள்
இறைஞ்சுபு கிடந்த சிறந்தோட் டழீஇச்
செல்ல றீரப் பல்லூழ் முயங்கி

(உதயணன் சாங்கியத்தாயை நோக்கிக் கூறல்)

அகல நின்ற செவிலியை நோக்கித்
துன்பக் காலத்துத் துணையெமக் காகி
இன்ப மீதற் கியைந்துகை விடாது
பெருமுது தலைமையி னொருமீக் கூறிய
உயர்தவக் கிழமைநும் முடம்பி னாகிய
சிற்றுப காரம் வற்றல்[1] கெல்லா

பி - ம். 1 சொல்லாது.

[1] தால வித்திற் பெருகி ஞாலத்து
நன்றி யீன்ற தென்றவட் கொத்த
சலமி லருண்மொழி சாலக் கூறி

(யாவரும் நகர் செல்லல்)

[2] இரவிடைக் கண்ட வண்ணமொ டிலங்கிழை
உருவ மொத்தமை யுணர்ந்தன னாகி
ஆய்பெருங் கடிநக ரறியக் கோயிலுள்
தேவியை யெய்திச் சிறப்புரை பரப்ப
இருங்கண் முரசும் பெருந்தெரு வறைதலின்
மாணக ருவந்து மழைதொட நிவந்த
சேணுயர் மாடத்து மீமிசை யெடுத்த
விரிப்பூங் கொடியொடு விழவயர்ந் தியற்றி
அமைச்ச னாற்றலு நண்பின தமைதியும்
நயத்தகு நன்னுத லியற்பெரு நிறையும்
வியத்தன ராகி மதித்தனர் பகரப்
பஞ்ச வண்ணத்துப் படாகை நுடங்கக்
குஞ்சர வெருத்திற் குடைநிழற் றந்த
புண்ணிய நறுநீர் துன்னினர் குழீஇ
அரசனுந் தேவியுந் தோழனு மாடி
விலைவரம் பறியா விழுத்தகு பேரணி
தலைவரம் பானவை தகைபெற வணிந்து
கூறுதற் காகாக் குறைவி லின்பமொடு
வீறுபெற் றனரான் மீட்டுத்தலைப் புணர்ந்தென்.

எ—வாசவதத்தை வந்தது முற்றிற்று.

அ—தேவியைத் தெருட்டியது.

(உதயணன் செயல்)

மீட்டுத்தலைப் புணர்ந்த காலை மேவார்
கூட்டம் வெளவிய கொடுஞ்சி நெடுந்தேர்
உருவ வெண்குடை யுதயண குமரன்
ஒருநலத் தோழன் யூகந் தராயற்

பி - ம். 1 கால. 2 இருளிடை.

கருளறம் படாஅ னகத்தே யடக்கி
முகனமர் கிளவி முன்னின் றுரைப்பின்
[1] ஏதின்மை யீனு மேனோர் மாட்டெனக்
காதற் றேவிக்குக் கண்ணோ டொழுகும்
தவமுது மகட்குத் தாழ்ந்தருள் கூறிப்
பயனுணர் கேள்விப் பதுமா பதியைத்
தாங்கருங் காதற் றவ்வையை வந்து
காண்க வென்றலுங் கணங்குழை மாதரும்

(பதுமாபதி வாசவதத்தையைக் காணல்)

அரியார் தடங்க ணவந்திகை யவன்றனக்
குயிரோர் கிழத்தி யாகலி னுள்ளகத்
தழிதல் செல்லாண் மொழியெதிர் விரும்பிப்
பல்வகை [2] யணிகளு ணல்லவை கொண்டு
தோழிய ரெல்லாஞ் சூழ்வன ரேந்தச்
சூடுறு கிண்கிணி பாடுபெயர்ந் தாற்றக்
காவல னீக்க நோக்கி வந்து
தாதலர் கோதைத் தையலுக் கிசைத்தவள்
அணங்கருஞ் சீறடி வணங்கலின் வாங்கிப்
பொற்பூண் வனமுலை பொருந்தப் புல்லிக்
கற்புமேம் படீஇயர் கணங்குழை நீயென
ஆசிடைக் கிளவி பாசிழை பயிற்றி
இன்பஞ் சிறந்த பின்றை யிருவரும்
விரித்தரி தியற்றிய வெண்கா லமளிப்
பழிப்பில் பள்ளி பலர்தொழ வேறித்
திருவிரண் டொருமலர் சேர்ந்தவ ணுறையும்
பொருவரு முருவம் பொற்பத் தோன்றி

....

(உதயணன் யூகியை வினவுதல்)

பேரத் தாணியுட் பெரியோர் கேட்ப
ஒன்னார்க் கடந்த யூகியை நோக்கி
வென்வே லுதயணன் விதியுளி வினவும்
முன்னு னெய்திய முழுச்சிறைப் பள்ளியுள்

பி - ம். 1 ஏதின்மையினும். 2 யணிதனல்லவை.

இன்ணு வெந்துய ரெண்க ணீக்கிய
பின்னுட் பெயர்த்துநின் னிறுதியும் பிறைநுதற்
றேவியைத் தீயினுண் மாயையின் மறைத்ததும்
[1] ஆய கார ண மறியக் கூறெனக்
கொற்றவன் கூற மற்றவ னுரைக்கும்

(யூகி கூற்று)

செங்கா னுரையொடு குருகுவந் திறைகொளப்
பைங்காற் கமுகின் குலையுதிர் படுபழம்
கழனிக் காய்நெற் கவர்கிளி கடியும்
பழன் வைப்பிற் பாஞ்சால ராயன்
ஆற்றலின் மிக்க வாருணி மற்றும்
ஏற்றலர் பைந்தா [2] ரேயர்க் கென்றும்
நிலத்தொடு தொடர்ந்த குலப்பகை யன்றியும்
தலைப்பெரு நகரமுந் தனக்குரித் தாக்கி
இருந்தனன் மேலு மிகழ்ச்சியொன் [3] றிலனுய்ப்
பிரச்சோ தனனே டொருப்பா டெய்தும்
ஓலை மாற்றமுஞ் சூழ்ச்சியுந் துணிவும்
காலம் பார்க்குங் கருமமு மெல்லாம்
அகத்தொற் றாளரி னகப்பட வறிந்தவன்
மிகப்பெரு [4] முரட்சியை முருக்கு முபாயம்
மற்றிக் காலத் தல்லது மேற்சென்று
வெற்றிக் காலத்து வீட்டுத லரிதென
அற்புப் பாச மகற்றி மற்றுநின்
[5] ஒட்ப விறைவியை யொழித்தன் மரீஇக்
கருமக் கட்டுரை காணக் காட்டி
உருமண் ணுவாவோ டொழிந்தோர் பிறரும்
மகதநன் ஞடு கொண்டுபுக் கவ்வழி
இகலடு நோன்ற ளிறைமகற் கிளைய
பதுமா பதியொடு வதுவை கூட்டிப்
படைத்துணை யவனுப் பதிவயிற் பெயர்ந்தபின்
கொடைத்தகு குமரரைக் கூட்டினே னிசையக்
கொடித்தலை மூதெயில் கொள்வது வலித்தனென்
மற்றவை யெல்லா மற்றி மின்றிப்

பி - ம். 1 ஆதத. 2 ரேயற். 3 றிலனும். 4 முயற்சியை. 5 ஒற்க.

பொய்ப்பொருள் பொருந்தக் கூறினு மப்பொருள்
தெய்வ வுணர்விற் றெரிந்துமா றுரையா
தைய நீங்கியெம் மறிவுமதித் தொழுகிய
பெருமட மகடூஉப் பெருந்தகை மாதால்
நின்னினு நின்மாட்டுப் பின்னிய காதற்
றுன்னிய கற்பிற் றேவி தன்னினும்
எண்ணிய வெல்லாந் திண்ணிய வாயின
இருநிலம் விண்ணே டியைந்தனர் கொடுப்பினும்
பெருநில மன்ன ரேயதை யல்லது
பழமையிற் றிரியார் பயன்றெரி மாக்கள்
கிழமையிற் செய்தனன் கெழுதகை தருமெனக்
கோனெறி வேந்தே கூறுங் காலை
நூனெறி யென்றியா னுன்னிடைத் துணிந்தது
பொறுத்தனை யருளென நெறிப்படுத் துரைப்ப

(உதயணன் கூற்று)

வழுக்கிய தலைமையை யிழுக்க மின்றி
அமைத்தனை நீயென வவையது நடுவண்
ஆற்றுளிக் கூற வத்துணை யாயினும்
வேற்றுமைப் படுமது வேண்டா வொழிகென
உயிரொன் றுதல் செயிரறக் கூறி

(வாசவதத்தை பதுமாபதியாகிய இருவர்செயல்)

இருவரு மவ்வழித் தழீஇயின ரெழுந்துவந்
தொருபெருங் கோயில் புகுந்த பின்னர்
வாசவ தத்தையொடு பதுமா பதியை
ஆசி லயினி மேவரத் தரீஇ
ஒருகலத் தயில்கென வருடலை நிறீஇயபின்
வளங்கெழு செல்வத் திளம்பெருந் தேவி
அரும்பெறற் காதலன் றிருந்தடி வணங்கிப்
பெருந்தகு கற்பினெம் பெருமக டன்னொடு
பிரிந்த திங்க ளெல்லாம் பிரியா
தொருங்கவ ணுறைதல் வேண்டுவ லடிகள்
அவ்வர மருளித் தருதலென் குறையெனத்
திருமா தேவியொடுந் தீவிய மொழிந்துதன்
முதற்பெருங் கோயிற்கு விடுப்பப் போயபின்

(உதயணன் கூறுதல்)

பாடகச் சீறடிப் பதுமா பதியொடு
கூடிய கூட்டக் குணந்தனை நாடி
ஊடிய தேவியை யுணர்வினு மொளியினும்
நாடுங் காலை நன்னுதன் மடவோய்
நின்னொ டொத்தமை நோக்கி மற்றவள்
தன்னொடு புணர்ந்தேன் றளரியல் யானென

(வாசவதத்தை சினத்தல்)

ஒக்கு மென்றசொ லுள்ளே நின்று
மிக்குநன் குடற்ற மேவல ளாகிக்
கடைக்கண் சிவப்ப வெடுத்தெதிர் நோக்கி
என்னை யென்ற மின்னேர் சாயலைப்

(உதயணன் வாசவதத்தையைத் தெருட்டி மகிழ்தல்)

பருகுவனன் போலப் பல்லூழ் முயங்கி
உருவி னல்லது பெண்மையி னின்னொடு
திருநுதன் மடவோய் தினையனைத் தாயினும்
வெள்வேற் கண்ணி யொவ்வா ளென்றவள்
உவக்கும் வாயி னயத்தகக் கூறித்
தெருட்டியுந் தெளித்து மருட்டியு மகிழ்ந்தும்
இடையற வில்லா வின்பப் புணர்ச்சியர்
தொடைமலர்க் காவிற் படையமை கோயிலுள்
ஆனாச் சிறப்பி னமைதி யெல்லாம்
ஏனோர்க் கின்றென வெய்திய வுவகையர்
அறைகடல் வையத் தான்றோர் புகழ
உறைகுவனர் மாதோ வுவகையின் மகிழ்ந்தென்.

அ—தேவியைத் தெருட்டியது முற்றிற்று.

கூ—விருத்தி வகுத்தது.

(உதயணன் உருமண்ணுவாவுக்கு விருத்தி யளித்தல்)

உவகையின் மகிழ்ந்தாண் டுறையுங் காலை
உயர்பெருந் தொல்சீ ருருமண் ணுவாவிற்
கெழுநா ளோறு முழுநகர் புகழப்

படிவ முத்தீக் கடிகைக் [1]கணனும்
ஐம்பெருங் குழுவு மத்தி கோசமும்
மன்பெருஞ் சிறப்பின் மனைப்பெருஞ் சனமும்
தேனேர் தீஞ்சொற் றேவி மார்களும்
தானையுஞ் சூழத் தானே யணிந்துதன்
நாம மோதிர நன்னாட் கொண்டு
சேனா பதியிவ னாகெனச் செறித்துப்
பன்னா றுயிரம் பழுதின்று வருவன
மன்னூர் வேண்டுவ மற்றவற் கீத்துக்
குதிரையுந் தேருங் கொலைமருப் பியானையும்
எதிரிய சிறப்போ டனைப்பல நல்கிப்
பண்பார் சாயற் பதுமா பதிதன்
கண்போற் றோழி காண்டகு காரிகை
இயைந்த வேற்க ணிராசனை யென்னும்
வயங்கிழை மாதரொடு வதுவை கூட்டிப்
பெருங்கடிச் சிறப்பும் பெயர்த்தொருங் கருளி
இருங்கடல் வரைப்பி னிசையொடு விளங்கிய
சயந்தியம் பதியும் பயம்படு சாரல்
இலாவா ணகமு நிலாவ நிறீஇக்
குரவரைக் கண்டவர் பருவர றீர
ஆண்டினி திருந்தியாம் வேண்ட வருகென
விடுத்தவற் போக்கிய பின்றை யடுத்த

(யூகியின் பேறு)

ஆதி யாகிய சேதிநன் னாடு
யூகிக் காகென வோலை போக்கி

(இடவகன் பெற்றவை)

இடவகற் கிருந்த முனையூ ருள்ளிட்
டடவி நன்னா டைம்பது கொடுத்து
விறற்போர் மன்ன ரிறுக்குந் துறைதொறும்
புறப்பது வாரமொடு சிறப்புப்பல செய்து
புட்பகம் புக்குநின் னட்புட னிருந்து
விளித்தபின் வாவென வளித்தவற் போக்கி

பி - ம். 1 கண்ணும்.

(வயந்தகனுக்கு அளித்தவை)

வயந்தகன் றனக்கு வழக்குப்புற மாகெனப்
பயம்படு நன்னகர் பதினொன் றீத்து
வைக லாயிரங் கைவயிற் கொடுத்துப்
பிரியா துறைகென வருடலை நிறீஇ

(இசைச்சன் முதலாயினோர் பெற்றவை)

இசைச்சன் முதலா வேனோர் பிறர்க்கும்
பயத்தின் வழாஅப் பதிபல கொடுத்துப்
பெயர்த்தனன் போக்கிப் பிரச்சோ தனனுட்
டருஞ்சிறைக் கோட்டத் திருந்த காலைப்
பாசறை யுழந்த படைத்தொழி லாளரை
ஓசை முரசி னொல்லெனத் தரூஉ
....
னெச்சத் தோர்கட் கியன்றவை யீத்து
நிச்ச மாயிர முற்றவை நல்கிப்
பக்கற் கொண்டு பாற்படுத் தோம்பி
இலாவா ணகவழிச் சாதக னென்னும்
குலாலற் கேற்பப் பெருங்குய மருளி
இருந்தினி துறைகென விரண்டூ ரீத்து
மகதத் துழந்த மாந்தர்க் கெல்லாம்
தகுநல் விருத்தி தான்பாற் [1] படுத்துத்
தத்த மூர்வயிற் சென்றுவரப் போக்கி
ஆய்ந்த சிறப்பி னுதித்திய தருமற்
கோங்கிய சிறப்பி னோரூர் நல்கி
அத்தறு வாயி லாருயிர் வழங்கிய
சத்திய காயன் மக்களைக் கூஉய்த்
தந்நிலைக் கெல்லாந் தலைமை யியற்றித்
தொன்றிற் கொண்டு தொடர்ச்சியிற் பழையோர்
ஒன்றிற் குதவா ரென்றுபுறத் திடாது
நன்றி தூக்கி நாடிய பின்றை
யூகி தன்னோ டொழிய வேனைப்
பாகியல் படைநர் பலரையும் விடுத்து
மாசின் மாணக்க் கோயில் குறுகிக்

பி - ம். 1 கொடுத்து.

குடிப்பெருங் கிழத்திக்குத் தானஞ் செய்கென
நடுக்கமில் சேம நன்னா டருளி

(உதயணன் தன் தேவிமார்க்கு விருத்தியளித்தல்)

வாசவ தத்தைக்கும் பதுமா பதிக்கும்
தேவி விருத்தி யாவன வருளி
ஆடலும் பாடலு மணியினு மிக்கோர்
சேடி மாரையு மிருகூ றாக்கிக்
கொள்கென வருளிக் குறைபா டின்றி
நாணா டோறு மாணா வுவகையொடு
காட்சி பெருமுத லாகக் கவினிய
மாட்சி நீரின் மாண்சினை பல்கிய
வேட்கை யென்னும் விழுத்தகு பெருமரம்
புணர்ச்சிப் பல்பூ விணர்த்தொகை யீன்று
நோயி லின்பக் காய்பல தூங்கி
யூழ வற்புக்கனி யூழுறிந் தேந்த
ஓவாது நுகர்ந்து தாவாச் செல்வமொ
டொழிவின் மாநக ரறக்கடந் தாங்கி
ஒழுகுப மாதோ வொருங்குநன் கியைந்தென்.

கூ—விருத்திவகுத்தது முற்றிற்று.

௧௦—பிரச்சோதனன் தூதுவிட்டது.

(வாயில் காவலன் தூதர் வந்தமையைத் தெரிவித்தல்)

ஒருங்குநன் கியைந்தவ ருறைவுழி யொருநாள்
திருந்துநிலைப் புதவிற் பெருங்கத வணிந்த
வாயில் காவலன் வந்தடி வணங்கி
ஆய்கழற் காலோ யருளிக் கேண்மதி
உயர்மதி லணிந்த வுஞ்சையம் பெருநகர்ப்
பெயர்வில் வென்றிப் பிரச்சோ தனனெனும்
கொற்ற வேந்தன் றூதுவர் வந்துநம்
முற்றம் புகுந்து முன்கடை யாரென
அந்தளிர்க் கோதையைப் பெற்றது மற்றவள்
தந்தை தந்த மாற்றமுந் தலைத்தாள்

இன்பம் பெருக வெதிர்வனன் விரும்பி

(பதுமையென்னுந் தூதி)

வல்லை வருக வென்றலின் மல்கிய
மண்ணியன் மன்னர்க்குக் கண்ணென வகுத்த
நீதி நன்னூ லோதிய நாவினள்
கற்றுநன் கடங்கிச் செற்றமு மார்வமும்
முற்ற நீங்கித் தத்துவ வகையினும்
கண்ணினு முள்ளே...............
குறிப்பி னெச்ச நெறிப்பட நாடித்
தேன்றோய்த் தன்ன கிளவியிற் றெளிபடத்
தான்றெரிந் துணருந் தன்மை யறிவினள்
உறுப்புப்பல வறுப்பினு முயிர்முத றிருக்கினும்
நிறுத்துப்பல வூசி நெருங்க வூன்றினும்
கறுத்துப்பல கடிய காட்டினுங் காட்டாது
சிறப்புப்பல செயினுந் திரிந்துபிறி துரையாள்
பிறைப்பூ ணகலத்துப் பெருமக னவன்மாட்டுக்
குறித்தது கூறுதல் செல்லாக் கொள்கையள்
இன்னது செய்கென வேவ லின்றியும்
மன்னிய கோமான் மனத்ததை யுணர்ந்து
முன்னியது முடிக்கு முயற்சிய ளொன்னார்
சிறந்தன பின்னுஞ் செயினு மறியினும்
புறஞ்சொ லாற்றாது புகழுந் தன்மையள்
புல்லோர் வாய்மொழி யொரீஇ நல்லோர்
துணிந்த நூற்பொருள் செவியுளங் கெழீஇப்
பணிந்த தீஞ்சொற் பதுமை யென்னும்
கட்டுரை மகளொடு கரும நுனித்து
விட்டுரை விளங்கிய விழுப்புக ழாளரும்
கற்ற நுண்டொழிற் கணக்கருந் திணைகளும்
காய்ந்த நோக்கிற் காவ லாளரும்
தேன்றார் மார்பன் றிருநகர் முற்றத்துக்
கைபுனைந் தோருங் கண்டு காணார்

(வாசவதத்தைக்குப் பிரச்சோதனன் அளித்த பொருள்கள்)

ஐயைந் திரட்டி யவன வையமும்

ஒள்ளிழைத் தோழிய ரோரா யிரவரும்
சேயிழை யாடிய சிற்றிற் கலங்களும்
பாசிழை யல்குற் றூய ரெல்லாம்
தம்பொறி யொற்றிய தச்சுவினைக் கூட்டத்துச்
செம்பொ னணிகலஞ் செய்த செப்பும்
தாயுந் தோழியுந் தவ்வையு மூட்டுதல்
மேயல ளாகி மேதகு வள்ளத்துச்
சுவைபொழி தீம்பா லுரைதெளித் தாற்றித்
தன்கை சிவப்பப் பற்றித் தாங்காது
மகப்பா ராட்டுந் தாயரின் மருட்டி
முகைப்புரை மெல்விரல் பானய மெய்த
ஒளியுகிர் கொண்டு வளைவா யுறீஇச்
சிறகர் விரித்து மெல்லெல்ன நீவிப்
பறவை கொளீஇப் பல்லூழ் நடாஅய்த்
தன்வாய் மழலை கற்பித் ததன்வாய்ப்
பீரத கீதம் பாடுவித் தெடுத்த
மேதகு கிளியு மென்னடை யன்னமும்
அடுதிரை முந்நீர் யவனத் தரசன்
விடுநடைப் புரவியும் விசும்பிவர்ந் தூரும்
கேடில் விமானமு நீரியங்கு புரவியும்
கோடி வயிரமுங் கொடுப்புழிக் கொள்ளான்
சேடிள வனமுலைத் [1] தன்மக ளாடும்
பாவை யணிதிறை தருகெனக் கொண்டுதன்
பட்டத் தேவிப் பெயர்நனி போக்கி
எட்டி னிரட்டி யாயிர மகளிரும்
அணங்கி விழையவு மருளான் மற்றென்
வணங்கிறைப் பணைத்தோள் வாசவ தத்தைக்
கொருமக ளாகெனப் பெருமகன் பணித்த
பாவையு மற்றதன் கோயிலுஞ் சுமக்கும்
கூனுங் குறளு மேனுங் கூறிய
நருமதை முதலா நாடக [2] மகளிரும்
ஆன்வீற் றிருந்த வரும்பெற லணிகலம்
தான்வீற் றிருத்தற்குத் தக்கன விவையென

2/006

பி - ம். 1 தன்மகளோடும். 2 மகளிரும்வான்.

முடியுங் கடகமு முத்தணி யாரமும்
தொடியும் பிறவுந் தொக்கவை நிறைந்த
முடிவாய்ப் பேழையு முரசுங் கட்டிலும்
தவிசுங் கவரியுந் தன்கை வாளும்
குடையுந் தேரு மிடையற வில்லா
இருங்களி யானை யினமும் புரவியும்
வேறுவே றாகக் கூறுகூ றமைத்துக்
காவ லோம்பிக் காட்டினிர் கொடுமினென்
றாணை வைத்த வன்னோர் பிறரும்
நெருங்கிமேற் செற்றி யொருங்குவந் திறுப்பப்
பழியி லொழுக்கிற் பதுமை யென்னும்
கழிமதி மகளொடு கற்றோர் தெரிந்த
கோல்வ லாளர் கொண்டனர் புக்குத்தம்
கால்வ லிவுளிக் காவலற் காட்டத்

(பதுமை ஓலையை உதயணனிடம் அளித்தல்)

தொடித்தோள் வேந்தன்முன் றட்கென் றிறைஞ்சினள்
வடிக்கே ழுண்கண் வயங்கிழை குறுகி
முகிழ்விரல் கூப்பி யிகழ்வில ளிறைஞ்சி
உட்குறு முவண முச்சியிற் சுமந்த
சக்கர வட்டமொடு சங்குபல பொறித்த
தோட்டுவினை வட்டித்துக் கூட்டரக் குருக்கி
ஏட்டுவினைக் கணக்க னீடறிந் தொற்றிய
முடக்கமை யோலை மடத்தகை நீட்டி
மூப்பினு முறையினும் யாப்பமை குலத்தினும்
அன்பினுங் கேளினு மென்றிவை பிறவினும்
....
மாசனம் புகழு மணிபுனைந் தியற்றிய
ஆசனத் திழிந்த வமைதிகொ ளிருக்கையன்

(உதயணன் ஓலையை வாங்குதல்)

சினைக்கொடிற் றன்ன செங்கேழ்ச் செறிவிரல்
தனிக்கவின் கொண்ட தகைய வாக
அருமறை தாங்கிய வந்த ணாளரொடு
பொருணிறை செந்நாப் புலவ ருளப்பட
ஏனோர் பிறர்க்கு நாணு டோறும்

கலனிறை பொழியக் [1] கவியி னல்லதை
இலமென மலரா வெழுத்துடை யங்கையின்
ஏற்றனன் கொண்டு வேற்றுமை யின்றிக்
கோட்டிய முடிய னேட்டுப்பொறி நீக்கி
மெல்லென விரித்து வல்லிதி னோக்கிப்

(ஓலையிலெழுதிய செய்தி)

பிரச்சோ தனனெனும் பெருமக னோலை
உரைச்சேர் கழற்கா லுதயணன் காண்க
இருகுல மல்ல திவணகத் தின்மையிற்
குருகுலக் கிளைமை கோடல் வேண்டிச்
சேனையொடு சென்று செங்களம் படுத்துத்
தானையொடு தருத லொனெனக் கருமையிற்
பொச்சாப் போம்பிப் பொய்க்களிறு புதைஇ
இப்படித் தருகென வேவினே னமர்களை
அன்றைக் காலத் தந்நிலை நினையா
தின்றைக் காலத் தெற்பயந் தெடுத்த
கோமா னெனவே கோடல் வேண்டினேன்
ஆமா னோக்கி யாயிழை தன்னொடு
மகப்பெறு தாயோ டியானு முவப்பப்
பெயர்த்தென் னகரி யியற்பட வெண்ணுக
தன்னல திலளே தையலுந் தானும்
என்னல திலனே யினிப்பிற னாகலென்
பற்று மன்னனைப் பணிய நூறிக்
கொற்றங் கொண்டதுங் கேட்டனென் றெற்றென
யான்செயப் படுவது தான்செய் தனனினிப்
பாம்பு மரசும் பகையுஞ் சிறிதென
ஆம்பொரு ளோதின ரிகழா ரதனாற்
றேம்படு தாரோன் றெளிதலொன் றிலனாய
ஓங்குகுடை நீழ லுலகுதுயின் மடியக்
குழவிகொள் பவரி னிகழா தோம்பிப்
புகழ்பட வாழ்க புகழ்பிறி தில்லை
ஆகிய விழுச்சீ ரரும்பெற லமைச்சன்

பி - ம். 1 கவினியனல்லதை.

பூகியை யெமரொடு முடனே விடுக்க
கரும முண்டவற் காணலுற் றனெனன
ஒருமையிற் பிறவு முரைத்தவை யெல்லாம்
பெருமையிற் கொள்கெனப் பிரியாது புணர்த்த
மந்திர விழுப்பொருண் மனத்தே யடக்கி
வெந்திறல் வீரன் விளங்கிய முறுவலன்

(உதயணன் பதுமையை வினவுதல்)

ஆருக் காத [1] லவந்திகை தன்னகர்
மேனாட் காலை வெவ்வழற் பட்ட
தீயுண் மாற்றம் வாயல வெனினும்
உரையெழுதி வந்தவிவ் வோலையு [2] ளுறுக்குறை
பழுதா லென்று பதுமையை நோக்கப்

(பதுமை விடையளித்தல்)

பவழச் செவ்வாய் படிமையிற் றிறந்து
முகிழ்விரல் கூப்பி முற்றிழை யுரைக்கும்
பரும யானையிற் பற்று ரோட்டிய
பெருமையின் மிக்கவெம் பெருமகன் றன்னே
டொருநாட்டுப் பிறந்த வுயிர்புரை காதற்
கண்ணுறு கடவுண் முன்னர் நின்றென்
ஒண்ணுதற் குற்றது மெய்கொலென் றுள்ளிப்
படுசொன் மாற்றத்துச் சுடர்முகம் புல்லெனக்
குடைகெழு வேந்தன் கூறுது நிற்பச்
சினப்போர்ச் செல்வ முன்ன மற்றுநின்
அமைச்சரோ டதனை யாராய்ந் தனன்போல்
நூனெறி மரபிற் றுனறிவு தளரான்
தொடுத்த மாலை யெடுத்தது போல
முறைமையின் முன்னே தெரிய வவனெம்
இறைமகற் குரைத்தன னித்துணை யளவவள்
மாய விருக்கைய ளாய்வ தாமென
நீட்ட மின்றவ ணியள விடினே
கூட்ட மெய்து நாளு மிதுவென
இன்றை நாளே யெல்லை யாகச்

பி - ம். 1 லவந்தியை 2 ளுறுகுறை.

சென்ற திங்கட் செய்தவ னுரைத்தனன்
ஆண மாகிய வருந்தவன் வாய்மொழி
பேணு மாதலிற் பெருமகன் றெளிந்தனன்
ஒத்த தோவது வத்தவ வந்தென
வாழ்த்துபு வணங்கிய வயங்கிழை கேட்பத்

(உதயணன் கூறுதல்)

தாழ்த்துணைத் தலைப்பொறிக் கூட்டம் போலப்
பொய்ப்பின் றொத்தது செப்பிய பொருளென
உறுதவற் புகழ்ந்து மறுவில் வாய்மொழி
மனத்தமர் தோழரொடு மன்னவன் போந்து
திருக்கிளர் முற்றம் விருப்பொடு புகுந்து

(உதயணன் பண்ணிகாரங்களைக் காணுதல்)

பல்வகை மரபிற் பண்ணி காரம்
செல்வன வெல்லாஞ் செவ்விதிற் கண்டு

(உதயணன் வந்தோரை உபசரித்தல்)

வந்தோர்க் கொத்த வின்புறு கிளவி
அமிர்துகலந் தளித்த வருளின னாகித்
தமர்திறந் தேவி தானுங் கேட்கென
வேறிடம் பணித்தவர் வேண்டுவ நல்கி
யாறுசெல் வருத்த மூறின் றோம்பி

(உதயணன் யூகிக்குக் கூறுதல்)

அவந்தியர் கோமா [1] னருளிட னூனெறி
இகழ்ந்துபிழைப் பில்லா வியூகி சென்றிவண்
நிகழ்ந்ததுங் கூறிநின் னீதியும் விளக்கி
நெடித்தல் செல்லாது வாவென வழிநாள்
விடுத்தன னவரொடு விளங்கிழை நகர்க்கென்.

௧௦—பிரச்சோதனன் தூதுவிட்டது முற்றிற்று.

பி - ம். 1 னருளிய.

கக—பிரச்சோதனற்குப் பண்ணிகாரம் விட்டது.

விளங்கிழை பயந்த வேந்துபுறங் காக்கும்
வளங்கெழு திருநகர் வல்லே செல்கென

(உதயணன் பிரச்சோதனனுக்கு ஓலை அனுப்புதல்)

நாடுதலை மணந்து நாமுன் னாண்ட
காடுகெழு குறும்புங் கனமலை வட்டமும்
எல்லை யிறந்து வல்லை நீங்கி
அழிந்த காலை யாணை யோட்டி
நெருங்கிக் கொண்ட நீர்கெழு நிலனும்
இவையினி [1] யெங்கோ லோட்டி னல்லதை
தமர்புகத் தரியா வென்றுதா னெழுதிய
வழிபாட் டோலையொடு வயவரை விடுத்துக்

(யூகிக்குக் கூறியன)

கரும மெல்லா மவனொடு நம்மிடை
ஒருமையி னொழியா துரைக்கென வுணர்த்தி
ஏற்றோர்ச் சாய்த்தவிக் குருகுலத் தகத்தோர்
ஆற்றலி லாளன் றோற்றினு மவந்தியர்
ஏழ்ச்சி யின்றிக் கீழ்ப்பட் டொழுகினும்
இகத்த லில்லை யிருதிறத் தார்க்கெனப்
பயத்தொடு புணர்ந்த பழிப்பில் செய்கையின்
நளிபுன னாட்டொடு நகர மறியத்
தெளிவிடை யிட்ட திண்ணிதிற் செய்கெனப்
பல்பொருட் கருமஞ் சொல்லிய பின்னர்

(பிரச்சோதனனுக்கு அனுப்பிய பொருள்கள்)

அருமலை யடுக்கத் தயிரா பதமெனும்
பெருமலைப் பிறந்து பெறுதற் கரிய
தீதுதீர் சிறப்பிற் சிங்கச் சுவணமென்
றோசை போகிய வொண்பொற் கலங்களும்
கலக்கமில் சிறப்பிற் காம்போ சத்தொடு
நலக்காந் தாரமென் னாட்டுப் பிறந்த

பி - ம். 1 யெங்கோவாட்டி.

இலக்கணக் குதிரை யிராயிரத் திரட்டியும்
ஆருணி வேந்தை வென்றுகைப் படுத்தின
தாரணி புரவி தகைபெறப் பூண்டன
இருநூற் றைம்பதிற் றிரட்டி தேரும்
ஒருநூ றாகிய வுயர்நிலை வேழமும்
[1] கோல மான கோபத்திற் பிறந்தன
பாலவா வேறொடு பதினா றாயிரம்
காவல் வேந்தற்குக் காட்டுபு கொடுக்கெனப்

(வாசவதத்தையின் தாய்க்கு அனுப்பிய மகளிர்)

பாய்புனற் படப்பைப் பாஞ்சா லரசன்
உரிமைப் பள்ளியுட் டெரிவனன் கொண்ட
ஏற்ற கோலத் திளமையொடு புணர்ந்தோர்
நூற்றொரு பதின்மர் கோற்றொடி மகளிருட்
....ட் பணைமுலை மகளிரைப்
*பாசிழை யாயத்து வாசவ தத்தையைப்
பயந்தினி தெடுத்த வயங்கிழைப் பணைத்தோட்
கோப்பெருந் தேவிக்குக் கொடுக்கெனப் பணித்தே

(கோபாலகன் தாய்க்கு விடுத்த மகளிர்)

ஓரிரு பதின்மரை யாரமர்க் கடந்து
[2] கோல்கொள வென்ற கோபா லகனைச்
சால்புளிப் பயந்த சாயாக் கற்பின்
நீல வேற்க ணிரைதொடிக் கீகெனப்

(கோபாலகற்கும் பாலகுமாரற்கும் அனுப்பிய மகளிர்)

பொற்கோங் கேய்ப்ப நற்கல னணிந்த
மூப்பதி னிரட்டி முற்றிழை மகளிரைப
பால குமாரற்குங் கோபா லகற்கும்
பால்வே றிவர்களைக் கொடுக்கெனப் பணித்து

(பாதகற்கு அளித்த பொருள்கள்)

முற்பாற் கூறிய வெற்பினுட் பிறந்த
எட்டுநூ றாயிர மெரிபுரை சுவணம்
பட்டாங் கிவற்றைப் பரதகற் கீகென

பி - ம். 1 கோலமாண. 2 கோள்கொள.

(மற்றத்தம்பியர்க்கு அளித்தன)

மற்றவன் றம்பியர்க் கத்துணைப் போக்கிப்

(சிவேதனுக்கு அளித்த பொருள்கள்)

பதினா றாயிரஞ் [1] சிவேதற் கீத்துப்
பிறவு மின்னவை பெறுவோர்க் கருளி

(யூகியின் புறப்பாடு)

வனப்பொடு புணர்ந்த வையாக் கிரமெனும்
சிலைப்பொலி நெடுந்தேர் செவ்விதி னல்கி
வீயா வென்றி விண்ணாத்த ராயனோ
டூகியுஞ் செல்கென வோம்படுத் துரைத்து

(யூகிமுதலியோரை விடுத்தல்)

வினைமேம் படூஉ [2] மேற்றசை நாளுள்
நிகழ்ந்த நன்னா ளறிந்தனர் கொடுப்ப
அப்பா லவர்களைப் போக்கி யிப்பால்

(வாசவதத்தையின் வருணனை)

யாற்றற லன்ன கூந்தல் யாற்றுச்
சுழியெனக் கிடந்த குழிநவில் கொப்பூழ்
வில்லெனக் கிடந்த புருவம் வில்லின்
அம்பெனக் கிடந்த செங்கடை மழைக்கண்
பிறையெனச் சுடருஞ் சிறுநுதல் பிறையின்
நிறையெனத் தோன்றுங் கறையில் வாண்முகம்
அரவென நுடங்கு மருங்கு லரவின்
பையெனக் கிடந்த வைதேந் தல்குல்
கிளியென மிழற்றுங் கிளவி கிளியின்
ஒளிபெறு வாயி னன்ன வொள்ளுகிர்
வாழையந் தாளுறழ் குறங்கின் வாழைக்
கூம்புமுகி ழன்ன வீங்கிள வனமுலை
வேயெனத் திரண்ட மென்றோள் வேயின்
விளங்குமுத் தன்ன துளங்கொளி முறுவற்
காந்தண்முகி ழன்ன மெல்விரல் காந்தட்
பூந்துடுப் பன்ன புனைவளை முன்கை

பி - ம். 1 சிவேகற்கு. 2 மேற்றிசை.

அன்னத் தன்ன மென்னடை யன்னத்துப்
புணர்வி னன்ன தண்டாக் காதல்
அணிக்கவின் கொண்ட [1] வதிநா கரிகத்து
வனப்புவீற் றிருந்த வாசவ தத்தையும்

(பதுமாபதி)

பழிப்பில் காரிகைப் பதுமா பதியுமென்
றிரண்டுணைக் காத லொருதுணைத் தேவியர்
முட்டில் செல்வமொடு முறைமையின் வழிபட

(உதயணன் வாசவதத்தையோடும் பதுமாபதியோடும் பொழுது போக்கல்)

[2] மதுக மதிர முதலாக் கூறும்
பதனுறு நறுங்கள் பட்டாங்கு மடுப்ப
உண்டுமகிழ் தூங்கித் தண்டா வின்பமொடு
பண்கெழு முழவின் கண்கெழு பாணியிற்
கண்கவ ராடல் பண்புளிக் கண்டும்
எல்லெனக் கோயிலுள் வல்லோன் வகுத்த
சுதைவெண் குன்றச் சிமைபரந் திழிதரும்
அந்தர வருவி வந்துவழி நிறையும்
பொற்சுனை தோறும் புக்குவிளை யாடியும்
அந்தர மருங்கி னிந்திரன் போலப்
புலந்தும் புணர்ந்துங் கலந்துவிளை யாடியும்
நாணு டோறும் நாள்கழிப் புணரா
தாணுது நுகர்பவா லன்புமிகச் சிறந்தென்.

கக—பிரச்சோதனனுக்குப் பண்ணிகாரம் விட்டது முற்றிற்று.

கஉ—பந்தடி கண்டது.

(வாசவதத்தையும் பதுமாபதியும் பந்தடி காணுதல்)

அன்புமிகச் சிறந்தாண் டமருங் காலை
மன்பெருஞ் சிறப்பின் மறப்போ ருதயணன்
அருமை சான்ற வாருணி யரசன்

பி - ம். 1 வதிநாகரகத்து. 2 மதூஉமதுகம்.

உரிமைப் பள்ளியுட் டெரிவனன் கொண்ட
ஆயிரத் தெண்ம ரரங்கியன் மகளிர்
மாசி றாமரை மலர்மக ளனையோர்
ஆடலும் பாடலு நாடொறு நவின்ற
நன்னுதன் மகளிரை மின்னேர் நுண்ணிடை
வாசவ தத்தைக்கும் பதுமா பதிக்கும்
கூறுநனி செய்து வீறுயர் நெடுந்தகை
கொடுத்த காலை யடுத்த வன்போ
டரச னுலாவெழு மற்ற நோக்கித்
தேவிய ரிருவரு மோவியச் செய்கையின்
நிலாவிரி முற்றத்துக் குலாவொ டேறிப்
பந்தடி காணிய நிற்ப விப்பால்

(வயந்தகன் உதயணனுக்குக் கூறுதல்)

வெங்கோ லகற்றிய வென்றித் தானைச்
செங்கோற் சேதிபன் செவிமுதற் சென்று
வயந்தக னுரைக்கு நயந்தனை யருளின்
மற்றுநின் றேவியர் பொற்றொடிப் பணைத்தோட்
டோழியர் தம்மோ டூழூ ழிகலிப்
பந்துவிளை யாட்டுப் பரிந்தன ரதனாற்
சிறப்பின் றுலாப்போக் கறத்தகை யண்ணனின்
மாண்குழைத் தேவிய ரிருவரு மிகறலிற்
காண்டகை யுடைத்தது கரந்தனை யாகி
வடிவேற் றடக்கை வத்தவ ரிறைவ
பிடிமிசை வந்து பிறவுரு வாகிச்

(உதயணன் மறைந்துசென்று பந்தடி காணல்)

சென்றனை காண்கென நன்றென விரும்பிப்
படையுலாப் போக்கி யிடைதெரிந் திருந்தாங்
கியாவரு மறியா வியல்பிற் கரந்து
காவலன் பிடிமிசைக் காண்டக வேறிப்
பல்வகை மகளிரொடு பையெனச் சென்றுதன்
இல்லணி மகளிரொ டியைந்தன னிருப்ப
இகலும் பந்தி னிருவரும் விகற்பித்
தடிநனி காண்புழி யணங்கோர் சாயற்

(இராசனை)

கொடிபுரை நுண்ணிடைக் கொவ்வைச் செவ்வாய்
மதுநாறு தெரியன் மகதவன் றங்கை
பதுமா பதிதன் பணியெதிர் விரும்பி
விராய்மலர்க் கோதை யிராசனை யென்போள்
கணங்குழை முகத்தியை வணங்கினள் புகுந்து
மணங்கமழ் கூந்தலும் பிறவுந் திருத்தி
அணங்கெனக் குலாஅ யறிவோர் புனைந்த

(பந்துகள்)

இடையும் பூளையு மிடைவரி யுலண்டும்
அடையப் பிடித்தவை யமைதியிற் றிரட்டிப்
பீலியு மயிரும் வாலிதின் வலந்து
நூலினுங் கயிற்றினு நுண்ணிதிற் சுற்றிக்
கோல மாகக் கொண்டனர் பிடித்துப்
பாம்பின் றோலும் பீலிக் கண்ணும்
பூம்புன னுரையும் புரையக் குத்திப்
[1] பற்றிய நொய்ம்மையிற் பல்வினைப் பந்துகள்
வேறுவே றியற்கைய கூறுகூ றமைத்த
வெண்மையுஞ் செம்மையுங் கருமையு முடையன
தண்வளி யெறியினுந் தாமெழுந் தாடுவ
கண்கவ ரழகொடு நெஞ்சக லாதன
ஒண்பந் தோரேழ் கொண்டன ளாகி
ஒன்றொன் றொற்றி யுயரச் சென்றது
பின்பின் பந்தொடு வந்துதலை சிறப்பக்

(இராசனை பந்தடித்தல்)

கண்ணிமை யாம லெண்ணுமி னென்று
வண்ண மேகலை வளையொடு சிலம்பப்
பாடகக் கான்மிசைப் பரிந்தவை விடுத்தும்
சூடக முன்கையிற் சுழன்றுமா றடித்தும்
அடித்த பந்துக ளங்கையி னடக்கியும்
மறித்துத் தட்டியுந் தனித்தனி போக்கியும்
பாயிர மின்றிப் பல்கல னொலிப்ப

பி - ம். 1 பாறிய.

ஆயிரங் கைநனி யடித்தவ ளகல

(காஞ்சனமாலையின் பந்தடி)

அன்ன மென்னடை யவந்திகை யுவந்தவள்
கண்மணி யனைய வொண்ணுதற் பாவை
காஞ்சன மாலை வாங்குபு கொண்டு
பிடித்த பூம்பந் தடித்துவிசும் பேற்றியும்
அடித்த பந்தால் விடுத்தவை யோட்டியும்
குழன்மேல் வந்தவை குவிவிரற் கொளுத்தியும்
நிழன்மணி மேகலை நேர்முகத் தடித்தும்
கண்ணியிற் சார்த்தியுங் கைக்குட் போக்கியும்
உண்ணின்று திருத்தியும் விண்ணுறச் செலுத்தியும்
வேயிருந் தடந்தோள் வெள்வளை யார்ப்ப
ஆயிரத் தைந்நூ றடித்தன ளகலச்

(அயிராபதியின் பந்தடி)

செயிர்தீர் பதுமைதன் செவிலித் தாய்மகள்
அயிரா பதியெனு மம்பணைத் தோளி
மானேர் நோக்கிற் கூனி மற்றவள்
தானேர் வாங்கித் தனித்தனி போக்கி
நாற்றிசைப் பக்கமு நான்கு கோணமும்
காற்றினுங் கடிதாக் கலந்தன ளாகி
அடித்தகைத் தட்டியுங் குதித்துமுன் புரியா
அகங்கை யொட்டியும் புறங்கையிற் புகுத்தியும்
தோண்மேற் பாய்ச்சியு மேன்மேற் சுழன்றும்
கூன்மேற் புரட்டியுங் குயநடு வொட்டியும்
வாக்குறப் பாடியு மேற்படக் கிடத்தியும்
நோக்குநர் மகிழப் பூக்குழன் முடித்தும்
பட்ட நெற்றியிற் பொட்டிடை யேற்றும்
மூற்றது புறங்கையிற் றட்டினை ளெற்றியும்
முன்னிய வகையான் முன்னீ ராயிரங்
கைந்நனி யடித்துக் கையவள் விடலும்

(விச்சுவலேகையின் பந்தடி)

பேசிய முறைமையி னேசா நல்லெழில்
வாசவ தத்தைக்கு வலத்தோ ளனைய

அச்சமில் காரிகை விச்சுவ லேகையென்
றுற்ற நாமப் பொற்றொடிக் குறளி
யாலிவ ணிற்பக் கூனியைப் புகழ்தல்
ஏலா தென்றவள் சேலந் திருத்திக்
கருவிக் கோனனி கைப்பற் றினளாய்
முரியுங் காலைத் தெரிய மற்றதிற்
றட்டின ளொன்றொன் றற்றன ளெழுப்பிப்
பத்தியிற் குதித்துப் பறப்பன வாகியும்
வாங்குபு கொண்டு வானவிற் போல
நீங்கிப் புருவ நெரிவுட னெற்றியும்
முடக்குவிர லெற்றியும் பரப்புவிரற் பாய்ச்சியும்
தனித்துவிரற் றரித்து மறித்தெதி ரடித்தும்
குருவிக் கவர்ச்சியி னதிரப் போக்கியும்
அருவிப் பரப்பின் முரியத் தாழ்த்தியும்
ஒருபாற் பந்தி னொருபாற் பந்துற
இருபாற் றிசையு மியைவன வாகிப்
பாம்பொழுக் காக வோங்கின வோட்டியும்
காம்பிலை வீழ்ச்சியி னுங்கிழித் திட்டும்
முன்னிய வகையான் முன்னீ ராயிரத்
தைந்நூ றடித்துப் பின்னவள் விடலும்

(ஆரியையின் பந்தடி)

சீரியல் பதுமைதன் சிந்தைக் கொப்பெனும்
காரியை மயிலன வாரியை புகுதா
நுணங்குகொடி மருங்கு நோவ வசைஇ
மணங்கமழ் கூந்தல் வகைபெற முடித்தும்
சூடக மேற்றியும் பாடகந் திருத்தியும்
நாடக மகளிரி னன்கன முலாவியும்
இருகையு மடிப்ப விசும்பொடு நிலத்திடை
திரிபுவீழ் புட்போ லொருவயி னில்லா
தெழுந்துவீழ் பந்தோ டெழுந்துசெல் வனளாப்பாற
கருதரு முரிவொடு புருவமுங் கண்ணும்
வரிவளைக் கையு மனமு மோட
அரியார் மேகலை யார்ப்பொடு துளங்கவும்
வருமுலை துளும்பவுங் கூந்த லவிழவும்

அரிமலர்க் கோதையொ டணிகலஞ் சிதறவும்
இருந்தன ணின்றன ளென்பதை யறியார்
பரந்த பஃறேருள் வடிவின ளாகித்
திரிந்தன ளடித்துத் திறத்துளி மறித்தும்
முரியுந் தொழிலொடு மூவாயி ரங்கை
முறையி னேற்றிப் பந்துநிலத் திடலும்

(வாசவதத்தை தன்றோழியரை நோக்கல்)

வரிநெடும் பந்து வந்தெதிர் கொள்ளுநர்
ஒருவரு மின்றி நின்றுழிப் பொருவரும்
வாளேர் தடங்கண் வாசவ தத்தை
கோளேர் மதிமுகங் கோட்டி நோக்கக்

(கோசல நாட்டின் பெருமை)

கடையோர் போலக் காமத்திற் கழுமா
திடையோ ரியல்பின தாகி யில்ல
துடையோர்க் குரிய வுதவி நாடி
ஆறுச் சிறப்பின் யாவர்க் காயினும்
தானப் பெரும்பயந் தப்புத லின்றி
ஓசை யோடிய வுலவாச் செல்வத்துக்
கோசல வளநாட்டுக் கோமாற் பிழையாத்

(கோசலத்தரசன்மகள் வருணனை)

தேவியர்க் கெல்லாந் தேவி யாகிய
திருத்தகு கற்பிற் றீங்குயிற் கிளவி
வரிக்குழற் கூந்தல் வசுந்தரி தன்மகள்
மானே யன்ன மயிலே மால்வரைத்
தேனே பவளந் தெண்கட னித்திலம்
கயலே காந்தள் புயலே பொருவிற்
பையே பொற்றுடி படைநவில் யானைக்
கையே குரும்பை கதிர்மதி வேயே *
நோக்கினு மொதுக்கினு மாக்கே ழணிந்த
சாயல் வகையினுஞ் சால்புடை மொழியினும்
ஆசில் வாயினு மணிபெற நிரைத்த

* இதன்பின், "என்ன வின்னவற் றேரழித் தன்ன" என ஓரடி ஒரு பிரதியிற் காணப்படுகின்றது.

பல்லினுங் கண்ணினு மெல்விரல் வகையினும்
நறுமென் குழலினுஞ் செறிநுண் புருவத்
தொழுக்கினு மிழுக்கா வல்குற் றடத்தினும்
மெல்லிய விடையினு நல்லணி குறங்கினும்
குற்றமின் முலையினு முகத்தினுந் தோளினும்
மற்றவை தொலையச் செற்றொளி திகழத்
தனக்கமை வெய்திய தவளையங் கிண்கிணி
வனப்பெடுத் துரைஇ வையகம் புகழினும்
புகழ்ச்சி முற்றாப் பொருவரு வனப்பிற்
றிருக்கண் டன்ன வுருக்கிளர் கண்ணி
கோசலத் தரசன் கோமகட் பூவணி
வாசச் சுரிகுழன் மாணிழை யொருத்தியென்
றுங்கொரு காரணத் தவள்வயி னிருந்தோள்

(கோசலத்தரசன் மகளின் பந்தடி)

பூங்குழை தோற்றது பொறாஅ நிலைமையள்
எழுந்தன டேவியைப் பணிந்தனள் புகுந்து
மடந்தைய ராடலை யிகழ்ந்தன ணகையா
வந்தரி வையரெதிர் [1] வாசதி வகையாற்
பந்தா டிலக்கண நின்றுபல பேசி
இளம்பிறைக் [2]கோடெனக் குறங்கிரு பக்கமும்
விளங்கியோர் பிறழ வேற்கணி யிருந்து
முரண்டெழு வனப்பின் மூவே ழாகிய
திரண்டவொண் பந்து தெரிவன ளாகி
ஓங்கிய வாடலி னொன்றிது வாகலிற்
றன்சம நின்று பாங்குறப் பகுந்து
மண்டல மாக்கி வட்டணை முகத்தே
கொண்டனள் போக்கிக் குறிவயிற் பெயர்த்துப்
பூவீழ்த் தெழுப்பிப் புறங்கையின் மற்றவை
தான்மறித் தடித்துத் தகுதியி னெழுவெழக்
காம தேவியர் காண்பன ருவப்பப்
[3] பூமி தேவியிற் புறம்போ வனள்போற்
பைய வெழுவோள் செய்தொழிற் கீடாக்

பி - ம். 1 வாசந்திவகை. 2 கொண்டெனக். 3 பூமதேவி.

கையுங் காலு மெய்யு மியையக்
கூடுமதி முகத்திடைப் புருவமுங் கண்ணும்
....
ஆடன் மகளி ரவிநயம் வியப்பவும்
பேசிய விலயம் பிழையா மரபிற்
பாடன் மகளிர் பாணி யளப்பவும்
மருவிய கதியிற் கருவிக் கூற்றோர்
இருபதம் பெயர்க்கு மியல்கொண் டாடவும்
சிந்தை பெயராத் திறத்திற மவையவை
பந்தாட் டியலோர் தந்தமி லுவப்பவும்
ஓதிய முறைமையின் யாதுங் காணார்
தேவிய ரிருவருந் திகைத்தன ரிருப்பவும்
காந்தண் முகிழ்நனி கவற்றுமெல் விரலின்
ஏந்தின ளெடுத்திட் டெறிவுழி முன்கையிற்
பாய்ந்தவை நிலத்தினும் விசும்பினுமோங்கிச்
சூறை வளியிடைச் சுழலிலை போல
மாறுமா றெழுந்து மறிய மறுகி
ஏறுப விழிபவா காய நிற்பன
வேறுபடு வனப்பின் மும்மைய வானவை
ஏர்பொலி வளைக்கை யிரண்டே யாயினும்
தேர்க்கா லாழியிற் சுழன்றவை தொழில்கொள
ஓடா நடவா வொசியா வொல்காப்
பாடாப் பாணியி னீடுயிர்ப் பினளாய்க்
கண்ணின் செயலினுங் கையின் றொழிலினும்
விண்ணவர் காணினும் வீழ்வர்கொல் வியந்தெனப்
பாடகத் தரவமுஞ் சூடகத் தோசையும்
ஆடுபந் தொலியுங் கேட்பி னல்லதை
ஐயபந் தெழவெழ வதனுட னெழுதலிற்
கையுங் காலு மெய்யுங் காணார்
மண்ணினள் விண்ணின ளென்றறி யாமை
ஒண்ணுதன் மாதரை யுள்ளுழி யுணரும்
தன்மையு மரிதெனத் தனித்தனி மயங்கி
மாயங் கொல்லிது மற்றொன் றில்லென
ஆய நவின்றமை யறிந்தன ளாகிச்
சொல்லிய மகளி ரெல்லாங் காணச்

சில்லரிக் கண்ணி மெல்லென முரியாச்
செந்தளிர் பொருவச் சிவந்த கையாற்
கந்துக மேந்திக் கசிந்த கோதைக்கு
மிகைக்கை கா்ணார் நகைப்படு மவளென
உகைத்தெழு பந்தி னுடனெழு வனபோற்
சுழன்றன தாமங் குழன்றது கூந்தல்
அழன்றது மேனி யவிழ்ந்தது மேகலை
எழுந்தது குறுவிய ரிழிந்தது சாந்தம்
ஓடின தடங்கண் கூடின புருவம்
அங்கையி னேற்றும் புறங்கையி னோட்டியும்
தங்குற வளைத்துத் தான்புரிந் தடித்தும்
இடையிடை யிருகா றெரிதர மடித்தும்
அரவணி யல்குற் றுகினெறி திருத்தியும்
நித்திலக் குறுவியர் பத்தியிற் றுடைத்தும்
பற்றிய கந்துகஞ் சுற்றுமுறை யுரைத்தும்
தொடையுங் கண்ணியு முறைமுறை யியற்றியும்
அடிமுதன் முடிவரை யிழைபல திருத்தியும்
படிந்தவண் டெழுப்பியுங் கிடந்தபந் தெண்ணியும்
தேமலர்த் தொடைய றிறத்திறம் பிணைத்தும்
பந்து [1] வர னோக்கியும் பாணிவர நொடித்தும்
சிம்புளித் தடித்துங் கம்பிதம் பாடியும்
ஆழியென வுருட்டியுந் தோழியொடு பேசியும்
சாரிபல வோட்டியும் வாழியென வாழ்த்தியும்
அந்தளிர்க் கண்ணி யவந்திகை வெல்கெனப்
பைந்தொடி மாதர் பற்பல வகையால்
எண்ணு யிரங்கை யேற்றின ளேற்றலும்

(வாசவதத்தையின் எண்ணம்)

கண்ணார் மாதர் மதிமுகங் காணிற்
காவன் மன்னன் கலங்கலு முண்டெனத்
தேவியு முணர்வா டெனெ நினைஇ

(உதயணன் கோசலத்தரசன்மகளை விரும்பல்)

நின்ற வளவிற் சென்றவண் முகத்தே

பி - ம். 1 வரநோக்கியும்.

2106

ஒன்றிய வியல்போ டொன்றுக் கொன்றவை
ஒளித்தவும் போலுங் களித்தவும் போலும்
களித்தவு மன்றி விளித்தவும் போலும்
வேலென விலங்குஞ் சேலென மிளிரும்
மாலென நிமிருங் காலனைக் கடுக்கும்
குழைமே லெறியுங் குமிழ்மேன் மறியும்
மலருங் குவியுங் கடைசெல வளரும்
சுழலு நிற்குஞ் சொல்வன போலும்
கழுநீர் பொருவிச் செழுநீர்க் கயல்போல்
மதர்க்குந் தவிர்க்குஞ் சுருக்கும் பெருக்கும்
இவைமுத லினியன வவிநயப் பல்குறி
நவையற விருகண் சுவையொடு தோன்ற
நீலப் பட்டுடை நிரைமணி மேகலை
கோலமொ டிலங்கத் தானுயிர்ப் பாற்றி
ஓடரிக் கண்ணி யுலாவர நோக்கிப்
பூண்டிகழ் கொங்கைப் புயலேர் கூந்தல்
மாண்குழை புதுநலங் காண்டகச் சென்ற
உள்ளந் தன்னை யொருப்படுக் கல்லா
வெள்ளத் தானை வேந்தன் பெயர்ந்து
பிடிமிசைத் தோன்றலும் பேதையர் தத்தம்
இடவயிற் பெயர்ந்தன ரெழுந்தனர் விரைந்தென்.

க௨—பந்தடி கண்டது முற்றிற்று.

க௩—முகவெழுத்துக் காதை.

(உதயணன் செயல்)

விரைந்தனர் பெயர வேந்தன் காம
சரம்பட நொந்து தளர்வுட னவனோர்
பள்ளி யம்பலத் துள்ளினி திருந்து
மேவத் தகுமுறைத் தேவியர் வருகென
ஏவற் சிலதியர் தாமவர்க் குரைப்பக்

(தேவியர் இருவரும் உதயணன்பால் வருதல்)

காவல் வேந்தன் கரைந்ததற் கயிர்த்து

மேவுகந் துகத்தியைக் கோயிலுண் மறைத்து
மறுவி றேவிய ரிருவரும் வந்து
திருவமர் மார்பனைத் திறத்துளி வணங்கலிற்

(தோழியரை உதயணன் வருவித்து வினாதல்)

பெருகிய வனப்பிற் பேணுந் தோழியர்
புகுதுக வென்றலும் புக்கவ ரடிதொழச்
சுற்றமும் பெயருஞ் சொல்லுமி னீரென
முற்றிழை மாதரை முறைமுறை வினவலின்
மற்றவ ரெல்லா மறுமொழி கொடுப்பக்

(உதயணன் வாசவதத்தையை வினாதல்)

கொற்றவ னுரைக்கும் பொற்றொடித் திரளினைப்
பாரான் பார்த்தொரு பைந்தொடி நின்னொடு
வாரா தொழிதல் கூறெனக் கூறலும்

(வாசவதத்தை சினந்துரைத்தல்)

[1] ஒழிந்த மாதர்க் குரைப்பதை யுண்டெனிற்
றனித்துநீ கண்டரு ளவைக்கு ளென்னெனப்

(உதயணன் கூறுதல்)

படைமலி நயனங் கடைசிவப் பூரும்
திறனவண் மொழியொடு தெளிந்தன னாகிப்
பற்றா மன்னன் படைத்தவும் வைத்தவும்
உற்றவ ளறியு முழையரிற் றெளிந்தேன்
மதிவே றில்லென வாசவ தத்தையும்
கரும முன்னிக் குருசில்................
....

(உதயணன் மானனீகையை வினாதல்)

பூக்கமழ் குழலி புகுந்தடி வணங்கலின்
நோக்கின னாகி வேற்படை வேந்தன்
பைந்துணர்த் தொடையற் பாஞ்சா லரசற்கு
மந்திர வோலையும் வழக்கறை காவலும்
தந்திர நடாத்தலுந் தகையுடைக் கோலம்
அந்தப் புரத்திற் கணிதலு *மெல்லாம்

பி - ம். 1 ஒழித்த.

நின்னைச் சொல்லுவர் நன்னுதல் பெயரும்
துன்னருஞ் சுற்றமு முன்னுரை யென்றலும்

(மானனீகை கூறல்)

வாட்டிறல் வேந்தனை வணங்கித் தன்கை
கூட்டின ளாகி மீட்டவண் மொழிவோள்
கோசலத் தரசன் மாபெருந் தேவி
மாசில் கற்பின் [1] வசுந்தரி யென்னும்
தேனிமிர் கோதை சேடி யென்யான்
மான னீகை யென்பதென் னாமம்
எம்மிறை படையை யெறிந்தன னோட்டிச்
செம்மையிற் சிலதியர் தம்மொடுஞ் சேரப்
பாஞ்சா லரசன் பற்றிக் கொண்டு
தேன்றேர் கூந்தற் றேவியர் பலருளும்
தன்னமர் தேவிக் கீத்த பின்றை
வண்ண மகளா யிருந்தனெ னன்றி
அருளிய தியாது மறியே னியானெனக்
கடல்புரண் டெனப்பயந் தழுதன ணிற்ப

(உதயணன் செயல்)

வாகை வேந்தன் மதித்தன னாகிக்
கேளுடை முறையாற் கிளரொளி வனப்பின்
வாசவ தத்தைக்கும் வண்ண மகளாய்
நாளும் புனைகென நன்னுதல் பெயர்ந்தவள்

(மானனீகை செயல்)

அடிமுதற் றொட்டி முடியள வாகப்
புடவியி னறியாப் புணர்ப்பொடு பொருந்தி
ஓவிய ருட்கு முருவக் கோலம்
தேவியைப் புனைந்தபின் மேவிய வனப்பொடு

(உதயணன் செயல்)

காவலற் காட்டக் கண்டன னாகி
அழித்தலங் கார மறியா ளிவளெனப்
பழித்தியான் புனைநெறி பாரெனப் புனைவோன்

பி - ம். 1 வசுந்தரை.

பற்றிய யவன பாடையி லெழுத்தவள்
கற்றன ளென்றெடுத் துற்றவ ருரைப்பக்
கேட்டன னுதலிற் கோற்றொடி நுதன்மிசைப்
பூந்தா தோடு சாந்துறக் கூட்டி
ஒடியா விழுச்சீ ருதயண னோலை
கொடியேர் மருங்குற் குயின்மொழிச் செவ்வாய்
மான னீகை காண்க சேணுயர்
மாட மீமிசை மயிலிறை கொண்டென
ஆடன் மகளிரொ டமர்ந்தொருங் கீண்டி
முந்துபந் தெறிந்தோர் முறைமையிற் பிழையாப்
பந்துவிளை யாட்டினுட் பாவைதன் முகத்துச்
சிந்தரி நெடுங்கணென் னெஞ்சகங் கிழிப்பக்
கொந்தழற் புண்ணொடு நொந்துயிர் வாழ்தல்
ஆற்றே னவ்வழ லவிக்குமா மருந்து
கோற்றேன் கிளவிதன் குவிமுலை யாகும்
பந்தடி தானுறப் பறையடி யுற்றவென்
சிந்தைபு நிலையுஞ் செப்புதற் கரிதெனச்
சேம மில்லாச் சிறுநுண் மருங்குற்
காதார மாகி யதனொடு தளரா
அருந்தனந் தாங்கி யழியுமென் னெஞ்சிற்
பெருந்துயர் தீர்க்கு மருந்து தானே
துன்றிய வேற்கட் டொழிலுமெய் யழகும்
பைங்கொள் கொம்பாப் படர்தரு மிந்நோய்
ஆழ்புனற் பட்டோர்க் கரும்புணை போலச்
சூழ்வளைத் தோளி காமநற் கடலிற்
றாழ வுறுமற் கொள்க தளர்ந்துயிர்
சென்றுறச் செயன்முறை யொன்றுமி லன்றியும்
அடுக்கிய [1]விளமை தலைச்செலி னுந்தாக்
கிடைப்பதி விரப்போர்க் களிப்பது நன்றென
நினைத்த வாசக நிரப்பின் றெழுத
இடத்தள வின்மையிற் கருத்தறி வோர்க்குப்
பரந்துரைத் தென்னை. பாவை யிக்குறை
இரந்தனெ னருளென விற்றமக னெழுதி

பி - ம். 1 வின்மை.

மெல்லியற் கொத்த விலைவயெனப் புகழ்ந்து
புல்லினன் றேவியைச் செல்கென விடலும்

(வாசவதத்தையின் முகவெழுத்தை மானனீகை காணல்)

கோயில் குறுக வாய்வளை யணுகலும்
காவலன் புனைந்தது காணெனக் கண்ட
காசறு சிறப்பிற் கோசலன் மடமகள்
வாசக முணராக் கூசின ளாகிப்
1 பெருமக னெழுதிய பேரலங் காரத்
திருமுக மழகுடைத் தெனமருட் டினளாய்
உட்கு நாணு மொருங்குவந் தடைய
நற்பல கூறி யப்பகல் கழிந்தபின்

(மானனீகை எழுதிவிடுத்தல்)

வழிநாட் காலைக் கழிபெருந் தேவியைப்
பழுதற வழகொடு புனைநலம் புனையாக்
குங்கும மெழுதிக் கோலம் புனைஇ
அங்கவ ளுதன்மிசை முன்பவ னெழுதிய
பாடை கொண்டுதன் பெயர்நிலைக் கீடா
நீல நெடுங்க ணிரைவளைத் தோளி
மறுமொழி கொடுக்கு நினைவின ளாகி
நெறிமயிர்க் கருகே யறிவரி தாக
முழுதிய லருள்கொண் டடியனேன் பொருளா
எழுதிய திருமுகம் பழுதுபட லின்றிக்
கண்டேன் காவல னருள்வகை யென்மாட்
டுண்டே யாயினு மொழிகவெம் பெருமகன்
மடந்தையர்க் கெவ்வா றியைந்தவை யியையும்
பொருந்திய பல்லுரை புயர்ந்தோர்க் காகும்
சிறியோர்க் கருளிய வுயர்மொழி வாசகம்
இயைவ தன்று லிவ்வயி னொருவரும்
காணா ரென்று காவலு ளிருந்து
பேணா செய்தல் பெண்பிறந் தோருக்
கியல்பு மன்றே யயலோ ருரைக்கும்
புறஞ்சொலு மன்றி யறந்தலை நீங்கும்

௯ - ம். 1 பெருமகள்.

திறம்பல வாயினுங் குறைந்தவென் றிறத்து
வைத்ததை யிகழ்ந்து மறப்பது பொருளென
உற்றவண் மறுமொழி மற்றெழு தினளாய்
அடியேற் கியைவ திதுவென விடலும்

(மானனீகை எழுதியதைக்கண்டு உதயணன் மீட்டும் எழுதிவிடல்)

வடிவே லுண்கண் வாசவ தத்தை
திண்டிற லரசனைச் சென்றனள் வணங்கலும்
கண்டன னாகிக் கணங்குழை யெழுதிய
இயனோக் கினனா யியையா வாசகம்
தழலுறு புண்மேற் கருவி பாய்ந்தெனக்
கலங்கின னாகி யிலங்கிழைக் கீதோர்
நலங்கவின் காட்ட நண்ணுகென வணுகிக்
கண்ட முறைமையிற் [1] பண்டிய லாக்கவல்
கொண்டன னாகி யொண்டொடி யாகம்
இன்றை யெல்லையு ளியையா தாயிற்
சென்றதென் னுயிரெனத் தேவிமுகத் தெழுதி
வாட்டிறல் வேந்தன் மீட்டனன் விடுத்தலிற்

(உதயணன் எழுதியதை மானனீகை உணர்தல்)

பெருமகள் செல்லத் திருமகள் வாசகக்
கரும மெல்லா மொருமையி னுணர்ந்து
வயாத்தீர் வதற்கோ ருயாத்துணை யின்றி
மறுசுழிப் பட்ட நறுமலர் போலக்
கொட்புறு நெஞ்சினைத் திட்பங் கொளீஇ
விளைக பொலிக வேந்த னுறுகுறை
களைகுவ லின்றெனுங் கருத்தொடு புலம்பி

(மானனீகை மறுமொழி யெழுதி விடுத்தல்)

அற்றை வைகல் கழிந்தபி னவ்வளை
மற்றுய ரணிநலம் வழிநாட் புனைஇக்
கூத்தப் பள்ளிக் குச்சரக் குடிகையுட்
பாற்படு வேதிகை சேர்த்தன ளாகி
அரவுக் குறியி னயலவ ரறியா
இரவுக் குறியி னியல்பட வெழுதி

பி - ம். 1 பண்டியாக்கவின்.

மாபெருந் தேவியை விடுத்தபின் மற்றவள்

(மானனீகை யெழுதியதைக் கண்டு உதயணன் உவத்தல்)

தீவிய மொழியொடு சேதிபற் குறுகி
நோன்றாள் வணங்கித் தோன்ற நிற்றலுந்
திருநுதன் மீமிசைத் திறத்துளிக் கிடந்த
அருளோர் வாசகந் தெருளுற வறிந்து
மற்றவள் பயந்தனள் பொற்புற வெழுதிய
இற்றைப் புதுநல மினிதென வியம்பி
மாதர் நோக்கின் மான னீகைகட்
காமம் பெருகிக் காதல் கடிகொள
மாமனத் தடக்கித் தேவியொ டினியன
கூறியப் பகல்போ யேறிய பின்றை

(மானனீகை மறைந்திருத்தல்)

மான னீகை வாசவ தத்தையைத்
தான்மறைந் தறைகுறி மேவின ளிருப்ப

(உதயணன் செயல்)

வென்வேற் றலைவனும் வேட்கை யின்றித்
தேவிய ரிருவர்க்கு மாறுதுயில் [1] கூறக்

(வாசவதத்தை உதயணன் செயலை அறியும்படி காஞ்சன மாலையை விடுத்தல்)

கயிற்பூண் கோதை யயிர்த்தன ளிருப்பப்
பெயர்த்தன ளொதுங்கிப் பெயர்தரக் கண்டே
காஞ்சன மாலையைக் கைவயிற் பயிர்ந்து
பூந்தார் மார்பன் புகுமிட னறிகென
ஆய்ந்த வேந்த னுடற் பேரறை
சார்ந்தபி னொருசிறை சேர்ந்தன ளிருப்பத்

(உதயணன் மானனீகையுடன் அளவளாவல்)

திருத்தகு மார்பன் கருத்தொடு புகுந்து
விருப்பொடு தழுவி நடுக்கந் தீரக்
கூடிய வேட்கையி னொருவர்க் கொருவர்
ஊடியுங் கூடியு நீடுவிளை யாடியும்

பி - ம். 1 கூரக்.

இருந்த பின்றை யிருவரு முறைமுறை
திருந்திய முகத்துப் பொருந்திய காதலொ
டெழுதிய வாசக மெல்லா முரைத்து
வழுவுத லின்றி வைகலு மீங்கே
குறியெனக் கூறிச் சிறுவிரன் மோதிரம்
கொடுத்தன னருளிக் கோயிலு ணீங்க

(காஞ்சனமாலை தான் அறிந்ததை வாசவதத்தைக்கு உணர்த்தல்)

விடுத்தவ ளேகி யடுத்தது முரைத்தலும்
தன்னுட் பொருமலொடு தனித்தனி தெரிய
இன்னதென் றெடுத்து நன்னுதற் குரைப்ப

(வாசவதத்தை உதயணனைக் கண்டு கூறல்)

முறுவல் கொண்டு செறுவகத் தடக்கிப்
பொறையாற் றளரா யிறையுயிர்த் தாற்றிப்
புலர்ந்த காலை புரவலற் குறுகி
நலங்கிளர் மலர்கொண் டிறைஞ்சின ளிருந்தியான்
இரவு கண்டே னொருகன வதனின்
புதுமை கேட்கிற் புரைதீர்ந் ததுவெனச்

(உதயணனன் வினாதல்)

செவ்வாய் வெண்ணகைத் திருந்திழை கண்ட
தெவ்வா றோவென வியம்பினன் கேட்பநின்

(வாசவதத்தை கூறல்)

மனத்துழைப் பெயரா வெனைக்கரந் தெழுந்தனை
தனித்துப் போயோர் தடந்தோண் மடந்தையொ
டாடரங் கேறி யணைந்திருந் தவளோ
டூடியு முணர்ந்துங் கூடிவிளை யாடியும்
தேறினி ராகித் தெளிவுட னிருவிரும்
மாறுமா றெழுதிய வாசகங் கூறி
மாதரு நீயு மயலுமைத் தெழுந்து
போதரும் போதையின் மோதிர மருளிப்
பெயர்ந்தனை நயனமு மலர்ந்தன வாங்கே
புலர்ந்தது கங்குலும் புரவல வாழ்கென

(உதயணன் கூற்று)

வண்டலர் கோதாய் மனத்தினு மில்லது
கண்டனை யாதலிற் கலங்கினை மற்றுநின்
உள்ளத் துள்ளே யுறைகுவே னாகவும்
கள்வ னென்று கருதினை யன்றியும்
நெறியுடை மகளிர் நினைப்பவுங் காண்பவும்
இவையிவை போலுங் கணவர்தந் திறத்தெனக்

(வாசவதத்தை கூற்று)

கனவிற் கண்டது பிறரொடு பேசக்
குறைபோ மென்றலிற் கூறினே னன்றியும்
யாவை காணினுங் காவலற் கன்றிப்
பேசுவ தெவரொடு பெரியோ யென்று

(வாசவதத்தை உதயணனை நீங்கல்)

மாணூர் நோக்கி மனத்தொடு நகையா
ஆணு நினைவுட [1] னகறர வேந்தன்

(உதயணன் செயல்)

தேவியை யையந் தெளித்தன மொருவகை
யாரு மில்லென வினிதிருந் துவப்பப்
பானுவுந் தேரொடு படுவரை யிடைபுக

(வாசவதத்தையின் செயல்)

மான னீகையைக் காவல்வைத் தனளாய்
மாந்தளிர் மேனியுங் காஞ்சன மாலையொடு
நேர்ந்தவக் குறியிற் றான்சென் றிருப்ப

(உதயணன் செயல்)

நிகழ்ந்ததை யறியா னெழுந்து மெல்லென
நடந்தவன் சென்றவ ளிடந்தலைப் படலும்
வேந்தன் செய்வது காண்குவ மென்று
காம்பேர் தோளி கையி னீக்கலும்
மான னீகைதா னூடின ளாகி
மேவல ளாயினள் போலுமென் றெண்ணி

பி-ம். 1 னகறேர்.

முரசுமுழங்கு தானை யரசொடு வேண்டினும்
தருகுவ னின்னே பருவர லொழியினி
மானே தேனே மானனீ காயெனக்
காணோர் பற்றத் தானது கொடாஅ
துரைப்பது கேட்ப மறுத்தவ ளொதுங்கி
நிலைப்படு காமந் தலைப்படத் தரியான்
புதுமை கூறியிவண் முகம்பெறு கேனென
மதித்தன னாகி யொருமொழி கேளினி
முகைக்கொடி முல்லை நகைத்திரு முகத்துத்
தகைக்கொடி யனையோள் வாசவ தத்தை
இயைந்த நெஞ்சுடை யாமிரு வர்க்கும்
கழிந்த கங்குலி னிகழ்ந்ததை யெல்லாம்
கனவது முந்திய வினைய தாதலின்
அதனிற் கண்டெனக் [1]கொளியா துரைப்ப
அதற்கொரு வழியான் மனத்தினு மில்லெனத்
தெளித்த நிலைமையுந் தெளிந்திலை யேயெனப்
பெயரப் பெயர முறைமுறை வணங்கி
இயனிலை மான னீகா யருளென்
றடுத்தடுத் துரைப்பவு மாற்றா னாகவும்
இதச்சொற் சொல்லவும் வணக்கஞ் செய்யவும்

(வாசவதத்தையின் செயல்)

பெட்ப வருதலிற் பிடித்தல் செல்லாள்
நக்கன ளாகி மிக்கோய் கூறிய
மானுந் தேனு மான னீகையும்
யானன் றென்பெயர் வாசவ தத்தை

(உதயணன் செயல்)

காணெனக் கைவிட் டோடின னோடி
அடுத்த காட்சியிற் றனித்தொரு மண்டபத்
தொளித்தன னாகித் திகைத்தன னிருப்பச்

(வாசவதத்தையின் செயல்)

சினங்கொ ணெஞ்சொடு பெயர்ந்தவள் வதியப்
புலர்ந்தது கங்குலும் பொருக்கெனப் பொலிந்தென்

கரு—முகவெழுத்துக் காதை முற்றிற்று.

பி - ம். 1 கொழியா.

கச—மணம்படு காதை.

(வாசவதத்தை மானனீகையின் தலைமயிரைக் குறைக்கப் புகுதல்)

புலர்ந்த காலைப் புதுமண மாதரை
மாபெருந் தேவி கூவினள் சீறி
ஓவிய வெழினித் தூணொடு சேர்த்துக்
கொற்றவன் றன்னொடு கூத்தப் பள்ளியுட்
சொற்றது சொல்லெனக் கச்சினின் யாத்தனள்
அருகொரு மாதரை யிவண்மயி ரரிதற்
கொருகத் தரிகைதருகென வுரைப்ப

(வயந்தகன் உதயணனைத் தேடுதல்)

மறையக் கண்ட வயந்தக னவ்வயின்
விரைவிற் சென்று வேந்தைத் தேட

(உதயணன் நிகழ்ந்ததை வயந்தகனுக்குக் கூறல்)

அறிந்து வேந்த னறிபயிர் காட்டப்
பரிந்தன னாகிப் பட்டதை யுரைப்ப
மற்றவ ளொருமயிர் கருவி தீண்டின்
இற்ற தென்னுயி ரிதுநீ விலக்கென
நிகழ்ந்த தென்னென நீகடைக் கூட்ட
முடிந்த தென்ன மடந்தையர் விளையாட்

(வயந்தகன் கூறல்)

டன்றியுங் கரவொடு சென்றவள் புதுநலம்
கொண்டொளித் தருளக் கூறலு முண்டோ
கொற்றத் தேவி செற்றந் தீர்க்கும்
பெற்றிய ரெவரே யாயினும் பெயர்வுற்
றூறேழ் நாழிகை விலக்குவ லத்துணை
வேறொரு வரைநீ விடுத்தரு ளென்று

(வயந்தகன் வாசவதத்தையைக் காணல்)

வென்றி வேந்தன் விடுப்ப விரைவொடு
சென்றறி வான்போற் றேவியை வணங்கிக்
கொற்றவற் றேடக் கோபமென் னொருத்தி
கைத்தலத் தமைப்பக் காண்டுங் கினன்போற்
குறையிவட் கென்னெனக் கோமக ளறியா

(வாசவதத்தை கூற்று)

வார்ப்பொலி கழற்கான் மன்னவ ருருவிற்
றூர்த்தக் கள்வன் பாற்போய்க் கேளென

....

(வயந்தகன் கூறல்)

குறையிவட் குண்டேற் கேசங் குறைத்தற்
கறிவேன் யானெனக் குறையெனக் கூறலும்
[1] மற்றதற் கேற்ற வகைபல வுண்டவை

(கத்தரிகைகளின் வகை)

பத்திக ளாகியும் விற்பூட் டாகியும்
அணில்வரி யாகியு மான்புற மாகியும்
மணியற லாகியும் வயப்புலி வரிபோல்
ஒழுக்கத் தாகியு முயர்ந்துங் குழிந்தும்
கழுக்கொழுக் காகியுங் காக்கையடி யாகியும்
துடியுரு வாகியுஞ் சுழலா றாகியும்
பணிவடி வாகியும் பாத்திவடி வாகியும்
இருப்பவை பிறவுமா மெடுத்ததை யருளுநின்
திருக்கா மலர்மயிர் தீண்ட றகாதால்
ஒருகத் தரிகை தருகென வாங்கி

(வயந்தகன் செயல்)

ஒருபுல் லெடுத்தன னதனள வறியா
நான்மையின் மடித்தொரு பாதி கொண்டதன்
காதள வறிந்தணி யாணியும் பிறவும்
மதிப்பொடு பல்காற் புரட்டினன் னோக்கி
எடுத்திரு கையுஞ் செவித்தலம் புதையாக்
கண் [2] சிம் புளியாத் தன்றலை பனித்திட்

(வயந்தகன் கூறுதல்)

டிங்கித னிலக்கண மெளிதோ கேளினி
நீர்மையுங் கூர்மையு நெடுமையுங் குறுமையும்
சீர்மையுஞ் சிறப்புஞ் செறிந்துவனப் பெய்திப்
பூத்தொழின் மருவியது புகர்வயி னணைந்தோர்க்
காக்கஞ் செய்யு மணங்கொடு மருவிய

பி - ம். 1 மற்றவற். 2 சும்புளியாத்.

இலக்கண முடைத்தீ திவண்மயிர் தீண்டின்
நலத்தகு மாதர்க்கு நன்று மதனால்
மற்றென் றுளதேற் பொற்றொடி யருணீ
இத்தகைத் தீதென வெடுத்தன னெறிய

(உதயணன் யூகியை வருவித்துக் கூறல்)

ஆகிய துணரும் வாகை வேந்தன்
யூகியை வருகெனக் கூவினன் கொண்டு
புகுந்ததை யெல்லாங் கணந்தனிற் புகல

(யூகி விடையளித்தல்)

வயந்தகன் மொழிபொழு திழிந்த தென்செயல்
யானு மவ்வள வானவை கொண்டு
தேனிமிர் கோதை கேசந் தாங்குமென்
மற்றறி யேனென வணங்கினன் போந்து

(யூகி பித்தர் வேடந் தரித்தல்)

கற்றறி வித்தகன் பொற்பணி வெண்பூக்
கோவைத் தந்த மேவரச் சேர்த்திக்
கூறை கீறிச் சூழ்வர வுடீஇ
நீறுமெய் பூசி நெடிய மயிர்களை
வேறுவே றுகும் விரகுளி முடித்துக்
கண்டோர் வெருவக் கண்மல ரடக்கம்
கொண்டோ னாகிக் குறியறி யாமற்
கைத்தல மொத்தாக் கயிட [1] படை கொட்டிப்
பித்த ருருவிற் றட்கெனத் தோன்றலும்

(தோழியர் யூகியின் வேடத்தைக்கண்டு ஓடல்)

ஏழை மாதரைச் சூழ்வர நின்ற
பாவையர் பலரும் பயந்திரிந் தோடி
விழுநரு மெழுநரு மேல்வர நடுங்கி
அழுநருந் தேவிபின் பணைநரு மாகத்
தேன்றோர் கூந்த ருனது நோக்கி
மேன்மே னகைவர விரும்பின னிற்ப

(வயந்தகன் சிலதியை உதயணன்பால் அனுப்புதல்)

நின்ற வயந்தக னிகழ்ந்ததை யுணர்ந்தென

பி - ம். 1 பஷை.

அங்கொரு சிலதியை யரசற் குய்ப்பப்

(உதயணன் பதுமாபதியை வருவித்தல்)

புதுமான் விழியிற் புரிகுழற் செவ்வாய்ப்
பதுமா பதியை வருகெனக் கூஉய்
வில்லேர் நுதல்வர வேந்தன் சென்றெதிர்
புல்லினன் கொண்டு மெல்லென விருந்தோன்
றுரைப்ப வெண்ணி மறுத்துரை யானுய்த்

(பதுமாபதி உதயணனை வினவுதல்)

திகைப்ப வாயிழை கருத்தறிந் தனளாய்
[1] அடிக ணெஞ்சிற் கடிகொண் டருளுமக்
கரும மெம்மொ டுரையா தென்னென

(உதயணன் பதுமாபதியை வாசவதத்தையின்பால் விடுத்தல்)

யானுரை செய்யக் கூசுவென் றவ்வை
தானே கூறு நீயது தாங்கியென்
செயிர்கா ணுத தெய்வ மாதலின்
உயிர்தந் தருளென வரசேவான் விடுப்ப

(பதுமாபதி வாசவதத்தையை வேண்டிக்கோள்ளல்)

முறுவல்கொண் டெழுந்து முன்போந் தாயிழை
தகும்பதந் தாழத் தானவட் கறியப்
புகுந்ததை யுணர்த்த வருந்திவள் பொருளாச்
சீறி யருளுதல் சிறுமை யுடைத்திது
வீறுயர் மடந்தாய் வேண்டா செய்தனை
அன்புடைக் கணவ ரழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை
அறியார் போலச் சிறியோர் தேஎத்துக்
குறைகண் டருளுதல் கூடா தன்றியும்
பெற்றேன் யானிப் பிழைமறந் தருளென
மற்றவள் பின்னரும் வணங்கின ணிற்பக்

(கோசலத்தரசனுடைய தூதுவர்வருகையைக் காவலர்
உதயணனுக்குரைத்தல்)

கோமகற் கவ்வயிற் கோசலத் தவர்புகழ்க்
காவலன் றூதுவர் கடைத்தலை யாரெனக்

பி - ம். [1] அடிகொனெஞ்சிற்.

கடைகாப் பாளன் கைதொழு துரைப்ப

(தூதுவரை உதயணன் அழைத்துவரச் செய்தல்)

விடைகொடுத் தவரைக் கொணர்மி னீரெனப்
பொன்றிகழ் கோயில் புகுந்தனர் தொழுதொரு

(தூதுவர் ஓலையை அளித்தல்)

மந்திர வோலை மாபெருந் தேவிக்குத்
தந்தனன் றனியே வென்றி வேந்தன்
கோவே யருளிக் கொடுக்கென நீட்டலும்
ஏயமற் றிதுவு மினிதென வாங்கி

(ஓலையைச் சிலதி மூலமாக வாசவதத்தைக்கு உதயணன் அனுப்பல்)

ஏவற் சிலதியை யாவயிற் கூஉய்த்
தேவிகட் [1] போக்கத் திறத்துமுன் கொண்டு

(வாசவதத்தை ஓலையைப் பதுமாபதியைக் கொண்டு
படிக்கச் செய்தல்)

பதுமா பதியைப் பகருகென் றளிப்ப
எதிரெழுந் தனளா யதுதான் வாங்கிக்

(ஓலையில் எழுதப்பட்ட செய்தி)

கோசலத் தரச னோலை மங்கை
வாசவ தத்தை காண்கதன் றங்கை
மாசின் மதிமுகத்து வாசவ தத்தை
பாசவற் படப்பைப் பாஞ்சா லரசன்
சோர்விடம் பார்த்தென் னூரெறிந் தவளுடன்
[2] ஆயமுங் கொண்டு போயபின் பவனை
நேர்நின் றனனுய் நெறிபடப் பொருதுகொல்
வத்தவர் பெருமான் மங்கையர் பலருடன்
பற்றினன் கொண்டு நற்பதிப் பெயர்ந்து
தனக்குந் தங்கை யியற்பது மாபதி
அவட்குங் கூறிட் டளிப்பத் தன்பால்
இருந்ததுங் கேட்டேன் வசுந்தரி மகளெனப்
பயந்த நாளொடு பட்டதை யுணர்த்தாள்
தன்பெயர் கரந்து மான னீகையென்

பி - ம். 1 போகத். 2 நாமமுங்.

றங்கொரு பெயர்கொண் டிருந்ததுங் கேட்டேன்
அன்புடை மடந்தை தங்கையை நாடி
எய்திய துயர்தீர்த் தியான்வரு காறும்
மைய லொழிக்க தைய ருன்மற்
றிதுவென் குறையென வெழுதிய வாசகம்

(பதுமாபதி ஓலையை வாசவதத்தையிடம் கொடுத்தல்)

பழுதின் றாக முழுவது முணர்ந்து
வாசக முணரேன் வாசிமி னடிகளென்
றாசி றவ்வை தன்கையிற் கொடுப்ப

(வாசவதத்தை ஓலையைப் படித்துத் தான் செய்ததற்கு வருந்துதல்)

வாங்கிப் புகழ்ந்து வாசகந் தெரிவாள்
ஏங்கிய நினைவுட னினைந்தழு துகுத்த
கண்ணீர் கொண்டு மண்ணினை நோக்கிப்
பெண்ணீர் மைக்கியல் பிழையே போன்மெனத்
தோயு மையலிற் றுண்ணெ னெஞ்சமோ
டாயிழை பட்டதற் காற்று ளாயவள்

(வாசவதத்தை மானனீகையின்கட்டை அவிழ்த்து இரங்கல்)

கையிற் கட்டிய கச்சவிழ்த் திட்டு
மைவளர் கண்ணியை வாங்குபு தழீஇக்
குழூஉக்களி யானைக் கோசலன் மகளே
அழேற்கவெம் பாவா யரும்பெறற் றவ்வை
செய்தது பொறுவெனத் தெருளாள் கலங்கி
எழுதரு மழைக்க ணிரங்கிநீ ருகுப்ப
அழுகை யாகுலங் கழுமின ளழிய
விம்மி விம்மி வெய்துயிர்த் தென்குறை
எம்முறை செய்தே னென்செய் தேனென
மாதர்க் கண்ணீர் மஞ்சன மாட்டி
ஆதரத் துடைந்தனள் பேதைகண் டுடைத்துக்
கெழீஇய வவரைக் கிளந்துடன் போக்கித்

(மானனீகையை வாசவதத்தை அலங்கரித்தல்)

தழீஇக் கொண்டு தாமெதி ரிருந்து
தண்ணென் கூந்த றன்கையி னாற்றிப்
பண்ணிய நறுநெயு மெண்ணெயும் பெய்து

நறுநீ ராட்டிச் செறிதுகி லுடீஇப்
பதுமையுந் தானு மினியன கூறிப்
பொருவில் பக்கத்துப் பொற்கல மேற்றி
வருகென மூவரு மொருகலத் தயில

(வயந்தகன் உதயணனுக்குத் தெரிவித்தல்)

வரிநெடுந் தொடையல் வயந்தக னவ்வயின்
விரைவிற் சென்று வேந்தற் குரைப்ப

(உதயணன் மகிழ்தல்)

முகிழேய் மாமதி புகர்நீங் கியதெனத்
திருமுக மலர முறுவல்கொண் டெழுந்து
வருகெனத் தழீஇ முகமன் கூறி
ஒருபுட் பெற்றே னெருந வினிதென

(உதயணன் மானனீகையை மணஞ்செய்து கொள்ளல்)

அதுநிகழ் வேலையிற் புதுமண மாதரை
வதுவைக் கோலம் பதுமை புனைகென்
றங்கொரு சிலதியைச் செங்கோல் வேந்தன்
தன்பான் மணநிலை சாற்றென் றுரைப்பப்
பிணைமலர்த் தொடையற் பெருமக னவ்வயிற்
பணைநிலைப் பிடிமிசைப் பலர்வரச் சாற்றி
விரைபரித் தேரொடு படைமிடைந் தார்ப்ப
முரசுமுழங்கு முற்றத் தரசுவந் திறைகொளக்
கோலத் தேவியர் மேவினர் கொடுப்ப
ஓவிய ருட்கு முருவினை யுதயணன்
நான்மறை யாளர் நன்மணங் காட்டத்
தீவலஞ் செய்து கூடிய பின்றை
முற்றிழை மகளிர் மூவரும் வழிபடக்
கொற்ற வேந்தர் நற்றிறை யளப்ப
நல்வளந் தரூஉம் பல்குடி தழைப்பச்
செல்வ வேந்தன் செங்கோ லோச்சித்
தானு தரவு மேன்மேன் முற்றவும்
ஆனு தொழுகுமா லல்லவை கடிந்தென்.

கச—மணம்படு காதை முற்றிற்று.

கரு—விரிசிகை வரவு குறித்தது.

(விரிசிகையின் இயல்பு)

ஆறு தொழுகுங் காலை மேனாள்
இலைசேர் புறவி னிலாவா ணத்தயற்
கலைசேர் கானத்துக் கலந்துட னாடிய
காலத் தொருநாட் சீலத் திறந்த
சீரை யுடுக்கை வார்வளர் புன்சடை
ஏதமில் காட்சித் தாபதன் மடமகள்
பூவிரிந் தன்ன போதமர் தடங்கண்
வீழ்ந்தொளி திகழும் விழுக்கொடி மூக்கிற்
றிருவிற் புருவத்துத் தேன்பொதி செவ்வாய்
விரிசிகை யென்னும்* விளங்கிழைக் குறுமகள்
அறிவ தறியாப் பருவ நீங்கிச்
செறிவொடு புணர்ந்த செவ்விய ளாதலிற்
பெருமகன் சூட்டிய பிணைய லல்லது
திருமுகஞ் சுடரப் பூப்பிறி தணியாள்
உரிமை கொண்டன ளொழுகுவ தெல்லாம்

(விரிசிகையின் தந்தை உதயணனை அடைதல்)

தரும நெஞ்சத்துத் தவம்புரி தந்தை
தெரிவன னுணர்ந்து விரைவனன் போந்து
துதைதார் மார்பி னுதையணற் குறுகிச்
செவ்விக் கோட்டியுட் சென்றுசேர்ந் திசைப்பித்
தவ்வழிக் கண்ணுற் றறிவி னாடிப்

(முனிவன் கூற்று)

பயத்தொடு புணர்ந்த பாடி மாற்றம்
இசைப்பதொன் றுடையே னிகழ்தல்செல் லாது
சீர்த்தகை வேந்தே [1] யோர்த்தனை கேண்மதி
நீயே நிலமிசை நெடுமொழி நிறீஇ
வீயாச் சிறப்பின் வியாதன் முதலாக்
கோடா துயர்ந்த குருகுலக் குருசில்

பி - ம். 1 பேர்த்தனை

* கூ௩

வாடா நறுந்தார் வத்தவர் பெருமகன்
தேனார் மார்ப தெரியின் யானே
அந்தமில் சிறப்பின் மந்தர வரசன்
யாப்புடை யமைச்சொடு [1] காப்புக்கடன் கழித்தபின்
உயர்ந்த வொழுக்கோ டுத்தர நாடிப்
பயந்த புதல்வரைப் படுநுகம் பூட்டி
வளைவித் தாரும் வாயி னாடி
விளைவித் தோம்புதும் வேண்டிய தாமென
ஒடுக்கி வைக்கு முழவன் போல
அடுத்த வூழிதோ றமைவர நில்லா
யாக்கை நல்லுயிர்க் கரண மிதுவென
மோக்க முன்னிய முயற்சியே னாகி
ஊக்கஞ் சான்ற வுலகிய றிரியேன்
உம்மைப் பிறப்பிற் செம்மையிற் செய்த
தானப் பெரும்பயந் தப்புண் டிறத்தல்
ஞானத் தாளர் நல்லொழுக் கன்றென
உறுதவம் புரிந்த வொழுக்கினென் [2] மற்றினி
மறுவி லேனமர் மாபத் தினியும்
காசி யரசன் மாசின் மடமகள்
நீல கேசி யென்னும் பெரும்பெயர்க்
கோலத் தேவி குலத்திற் பயந்த
வீயாக் கற்பின் விரிசிகை யென்னும்
பாசிழை யல்குற் பாவையைத் தழீஇ
மாதவம் புரிந்தே மான்கண மலிந்ததோர்
வீதகை கானத்து விரதமோ டொழுகும்
காலத் தொருநாட் காவகத் தாடிப்
பள்ளி புகுந்து பாவங் கழூஉம்
அறநீ ரத்தத் தகன்றியான் போக

(உதயணன் விரிசிகைக்கு மாலை சூட்டியது)

மறுநீங்கு சிறப்பிற் புண்ணியத் திங்கட்
கணைபுரை கண்ணியைக் கவான்முத லிரீஇப்
பிணையல் சூட்டினை பெருந்தகை மற்றிது
புணைதனக் காகப் புணர்திற னுரைஇ

பி - ம். 1 காப்புடன். 2 மற்றெனு.

(விரிசிகையின் முதுக்குறைவு)

உற்றது முதலா வுணர்வுவந் தடைதரப்
பெற்றவற் கல்லது பெரியோர் திரிப்பினும்
கோட்டமில் செய்கைக் கொள்கையின் வழாஅள்
வேட்கையிற் பெருகினின் மெய்ப்பொருட் டமைந்த
மாட்சி நெஞ்ச மற்றுநினைக் கல்லது
மறத்தகை மார்ப திறப்பரி ததனால்

(விரிசிகையின் தந்தை தன் மகளை மணஞ்செய்துகொள்ளும்படி உதயணனுக்குக் கூறல்)

ஞாலம் விளக்கு ஞாயிறு நோக்கிக்
கோலத் தாமரை கூம்பவிழ்ந் தாங்குத்
தன்பாற் பட்ட வன்பி னவிழ்ந்த
நன்னுதன் மகளி ரென்ன ராயினும்
எவ்வந் தீர வெய்தின ரளித்தல்
வையத் துயர்ந்தோர் வழக்கால் வத்தவ
யாமகட் டருதுங் கொள்கெனக் கூறுதல்
ஏம வையத் தியல்பன் றாயினும்
வண்டார் தெரியல் வாண்முகஞ் சுடரப்
பண்டே யணிந்தநின் பத்தினி யாதலிற்
பயந்தனர் கொடுப்ப வியைந்தன ராகுதல்
முறையே யென்ப விறைவ வதனால்
யானே முன்னின் றடுப்ப நீயென்
தேனேர் கிளவியைத் திருநா ளமைத்துச்
செந்தீக் கடவுண் முந்தை யிரீஇ
எய்துத னன்றெனச் செய்தவ னுரைப்ப

(விரிசிகையின் வதுவையை வாசவதத்தைக்கு உணர்த்தல்)

மாதவ னுரைத்த வதுவை மாற்றம்
காவற் றேவிக்குக் காவல னுணர்த்த

(வாசவதத்தை உடன்படல்)

மணிப்பூண் வனமுலை வாசவ தத்தை
பணித்தற் கூடாள் பண்டே யறிதலின்
உவந்த நெஞ்சமொடு நயந்திது நன்றென
அரிதிற் பெற்ற வவந்திகை யுள்ளம்

(உதயணன் விரிசிகையை மணஞ்செய்து கொள்ளல்)

உரிதி னுணர்ந்த வுதயண குமரன்
ஓங்குபுகழ் மாதவ னுரைத்ததற் குடம்பட்டு
வாங்குசிலை பொருதோள் வாழ்த்துந ராரா
அரும்பொருள் வீசிய வங்கை மலரிப்
பெரும்பொரு ளாதலிற் பேணுவனன் விரும்பி
நீரிற் கொண்டு நேரிழை மாதரைச்
சீரிற் கூட்டுஞ் சிறப்பு முந்துறீஇ
நாடு நகரமு மறிய நாட்கொண்டு
பாடிமிழ் முரசம் பல்லூ ழறைய
மாக விசும்பின் வானோர் தொக்க
போக பூமியிற் பொன்னகர் பொலிய

(நகரமாந்தர் விரிசிகை வரவு காண விரும்பல்)

நாற்பான் மருங்கினு நகரத் தாளர்
அடையாக் கடையர் வரையா வண்மையர்
உடையோ ரில்லோர்க் குறுபொருள் வீசி
உருவத் தண்டமைத் தாபதன் மடமகள்
வருவழிக் காண்டு நாமென விரும்பித்
தெருவிற் கொண்ட பெருவெண் மாடத்துப்
பொற்பிரம்பு நிரைத்த நற்புற நிலைச்சுவர்
மணிகிளர் பலகை வாய்ப்புடை நிரைத்த
அணிநிலா முற்ற மயலிடை விடாது
மாத்தோய் மகளிர் மாசில் வரைப்பிற்
பூத்தோய் மாடமும் புலிமுக மாடமும்
கூத்தா டிடமுங் கொழுஞ்சுதைக் குன்றமும்
நாயின் மாடமு நகரநன் புரிசையும்
வாயின் மாடமு மணிமண் டபமும்
ஏனைய பிறவு மெழினகர் விழவணி
காணுந் தன்மையர் காண்வர வேறிப்
பிடியுஞ் சிவிகையும் பிறவும் புகாஅள்
இடுமணல் வீதியு ளியங்குநள் வருமெனப்
பெருமக னருளினன் பெறற்கரி தென்று
கழிபெருங் காரிகை..............................
....

........................மொழிந்தழி வோரும்
சேரி யிறந்து சென்று காணும்
நேரிழை மகளி ரெல்லா நிலையெனப்
பேரிள மகளிரைப் பெருங்குறை யாகக்
கரப்பி னுள்ளமொடு காத னல்கி
இரப்புள் ளுறுத்தல் விருப்புறு வோரும்
வண்ட லாடிய மறுகினுட் காண்பவை
கண்டினிது வரூஉங் கால மன்றெனக்
காவல் கொண்டன ரன்னையர் நம்மென
நோவன ராகி நோய்கொள் வோரும்
எனையோர் பிறரும் புனைவன ரீண்டி
விரைகமழ் கோதை விரிசிகை மாதர்
வருவது வினவிக் காண்பது மால்கொளக்
காண்பதொன் றுண்டெனக் கைத்தொழின் மறக்கும்
மாண்பதி யியற்கை மன்னனு முணர்ந்து
தடந்தோள் வீசித் தகைமாண் வீதியுள்
நடந்தே வருக நங்கை கோயிற்
கணியில் யாக்கை மணியுடை நலத்திற்
றமிய ளென்பது சாற்றுவனள் போலக்
காவ லின்றிக் கலியங் காடியுள்
மாவும் வேழமும் வழக்குநனி நீக்கி
1 வல்லென மணிநிலை முழுமை வாயில்
எல்லை யாக வில்லந் தோறும்
மெல்லென நறுமலர் நல்லவை படுக்கென
உறுதொழி லிளையரை யுதயண னேவா
மறுவின் மாத ரொழியநங் கோயில்
நறுநுதன் மகளிரொடு நன்மூ தாளரும்
நண்பிற் றிரியாது பண்பொடு புணர்ந்த
காஞ்சுகி 2மாந்தருந் தாஞ்சென்று தருகென
நடந்தே வருமா னங்கைநந் நகர்க்கென
நெடுந்தேர் வீதியு மல்லா விடமும்
கொடைநவில் வேந்தன் கொடிக்கோ சம்பி
நிலையிடம் பெறாது நெருங்கிற் றுற் சனமென்.

கரு—விரிசிகை வரவு குறித்தது முற்றிற்று.

பி - ம். 1 யொல்லென. 2 மாதருந்.

௧௬—விரிசிகை போத்தரவு.

(விரிசிகையின் தமர் அவளைக் கொணர்தல்)

நெருங்கிய பல்சனம் விரும்புபு நோக்க
ஒள்ளிழை மாதரைப் பள்ளியு ணின்று
திருவமர் சிவிகையுட் சுமந்தனர் கொணர்ந்து
பெருநகர் நெடுமதிற் புறமருங் கியன்ற
தேவ குலத்தொரு காவினு ளிரீஇ

(விரிசிகையைப் புனைதல்)

வேரியுந் தகரமும் விரையு முரிஞ்சி
ஆர்கலி நறுநீர் மேவர வாட்டித்
துய்யறத் திரண்டு தூறலு மிலவாய்
நெய்தோய்த் தன்ன நிறத்த வாகிக்
கருமையிற் கவினிப் பருமையிற் றீர்ந்த
சில்லென் கூந்தலை மெல்லென வாரிக்
கானக் காழகிற் றேனெய் தோய்த்து
நறுந்தண் கொடிப்புகை யறிந்தளந் தூட்டி
வடித்து வனப்பிரீஇ முடித்ததன் பின்னர்த்
தளிரினும் போதினு மொளிபெறத் தொடுத்த
சேடுறு தாமஞ் சிறந்தோன் சூட்டிய
வாடுறு பிணையலொடு வகைபெற வளாஅய்க்
குளிர்கொள் சாதிச் சந்தனக் கொழுங்குறைப்
பளிதம் பெய்த பருப்பிற் றேய்வையின்
ஆகமு முலையுந் தோளு மணிபெறத்
தாரையுங் கொடியுந் தகைபெற வாங்கி
இருந்தா ளிளம்பனை விரிந்திடை விடாஅ
முளைநுகும் போலை முதலீர்க்கு விரித்துத்
தளையவி ழாம்பற் றுஅள் வாட்டி
நீல நெடுமயி ரெறியுங் கருவிக்
காலென வடிந்த காதணி பெறீஇச்
சில்லெ னரும்பு வல்லிதி னமைத்து
நச்சர வெயிற்றி னல்லோன் புனைந்த
நெற்சிறு தாலி நிரல்கிடந் திலங்கக்

கடைந்துசெறித் தன்ன கழுத்துமுதற் கொளீஇ
உடைந்துவே யுகுத்த வொண்முத் தொருகாழ்
அடைந்துவில் லிமைப்ப வணிபெறப் பூட்டிக்
கல்லுண் கலிங்க நீக்கிக் காவலன்
இல்லின் மகளி ரேந்துவன ரீத்த
கோடி நுண்டுகில் கோல மாக
அவ்வரி யரவின் பையெனப் பரந்த
செல்வ வல்குற் றீட்டிவைத் ததுபோல்
வல்லிதின் வகைபெற வுடீஇப் பல்லோர்
காணச் சேற லாற்று மகட்கு
நாணுத் தரீகந் தாங்கிக் கையுளோர்
நீணீர் நறுமலர் நெரித்துக் [1]கொடுத்து
மலரினும் புகையினு மாத்தொழில் கழிப்பி

(விரிசிகையை விடுத்தல்)

உரையினு மோத்தினு முவப்பக் கூறிய
சாங்கிய மடமக டலையாச் சென்ற
காஞ்சுகி மாந்தர்க் கோம்படை கூறி
அடுத்த காதற் றுயர் தவ்வையர்
வடுத்தீர் தந்தை வத்தவர் கோவென
விடுத்தனர் மாதோ விரிசிகை தமரென்.

கசு—விரிசிகை போத்தரவு முற்றிற்று.

கஎ—விரிசிகை வதுவை.

(விரிசிகையின் தந்தை தவம்புரியச் செல்லல்)

விடுத்தனர் போகி விரிசிகை தன்றமர்
அடுத்த காதற் றந்தைக் கிசைப்ப
மாதவன் கேட்டுத்தன் காதலி தனைக்கூஉய்
வடுத்தீர் பெரும்புகழ் வத்தவர் பெருமாற்
கடுத்தனெ னங்கையை நின்னை யானும்
விடுத்தனென் போகி வியனுல கேத்த

பி - ம். 1 தொடுத்து

வடுத்தீர் மாதவம் புரிவேன் மற்றெனக்
கேட்டவள் கலுழ வேட்கையி னீக்கிக்
காசறு கடவுட் படிவங் கொண்டாங்
காசறச் சென்றபின் மாசறு திருநுதல்

(விரிசிகையின் தமர் அவள் விளையாடிய பொருள்களைக் கொண்டு உடன்செல்லல்)

விரிசிகை மாதர் விளையாட்டு விரும்பும்
பள்ளியுட் டன்னொடு பலநாள் பயின்ற
குயிலு மயிலுங் குறுநடைப் புறவும்
சிறுமான் பிணையு மறுநீங் கியூகமும்
காப்பொடு பேணிப் போற்றுவன ளுவப்பிற்
றந்த பாவையுந் தலையாத் தம்முடை
அந்தணர் சாலை யருங்கல மெல்லாம்
அறிவனர் தழீஇத் தகைபா ராட்டிப்
பூப்புரி வீதி பொலியப் புகுந்து
தேற்று மென்னடைச் சேயிழை தன்னொடு
செல்வோர் கேட்பப் பல்லோ ரெங்கும்

(கண்டோர் கூற்று)

குடிமலி கொண்ட கொடிக்கோ சம்பி
வடிநவில் புரவி வத்தவர் பெருமகற்
காக்கம் வேண்டிக் காப்புடை முனிவர்
அஞ்சுதரு முதுகாட் டஞ்சா ரழலின்
விஞ்சை வேள்வி விதியிற் றந்த
கொற்றத் திருமகண் மற்றிவ டன்னை
ஊனுர் மகளி ருள்வயிற் றியன்ற
மானேர் நோக்கின் மடமக ளென்றல்
மெய்யன் றம்மொழி பொய்யென் போரும்
[1] மந்திர மகளிரிற் றோன்றிய மகளெனின்
அந்தளிர்க் கோதை வாடிய திருநுதல்
வேர்த்தது................................ ......
..............பெருமைப் பயத்தாற் பயந்த
மாதவன் மகளே யாகுமிம் மாதர்

பி - ம். 1 மந்தர.

உரையன்மி னிம்மொழி புரையா தென்மரும்
அறுவி றெண்ணீ ராழ்கய முனிந்து
மறுவில் குவளை நாண்மலர் பிடித்து
நேரிறைப் பணைத்தோள் வீசிப் போந்த
நீரர மகளிவ ளீர்மையு மதுவே
வெஞ்சினந் தீர்ந்த விழுத்தவன் மகளெனல்
வஞ்ச மென்று வலித்துரைப் போரும்
கயத்துறு மகளெனிற் கயலேர் கண்கள்
பெயர்த்தலு மருட்டி யிமைத்தலு முண்டோ
வான்றோய் பெரும்புகழ் வத்தவர் பெருமகன்
தேன்றோய் நறுந்தார் திருவொடு திளைத்தற்
கான்ற கேள்வி யருந்தவன் மகளாய்த்
தோன்றிய தவத்த டுணிமினென் போரும்
பரவை மாக்கடற் பயங்கெழு ஞாலத்
துருவின் மிக்க*வுதயணற் சேர்ந்து
போக நுகர்தற்குப் புரையோர் வகுத்த
சாபந் தீர்ந்து தானே வந்த
கயக்கறு முள்ளத்துக் காமங் கன்றிய
இயக்கி யிவளே யென்மக ளென்று
மாதவ முனிவன் மன்னற்கு விடுத்தல்
ஏத மாங்கொலிஃ தென்றுரைப் போரும்
ஈரிதழ்க் கோதை யியக்கி யிவளெனின்
நேரடி யிவையோ நிலமுத றோய்வன
அணியும் பார்வையு மொவ்வா [1] மற்றிவள்
மணியணி யானை மன்னருண் மன்னன்
உதயண குமர னுறுதா ருறுகென
நின்ற வருந்தவ நீக்கி நிதானமொடு
குன்றச் சாரற் குறைவின் மாதவர்
மகளாய் வந்த துகளறு சீர்த்தி
நாறிருங் குழல்பிற கூறன்மி னென்மரும்
இமிழ்திரை வையத் தேயர் பெருமகன்
தமிழியல் வழக்கினன் றணப்புமிகப் பெருக்கி
நிலவரை நிகர்ப்போ ரில்லா மாதரைத்

பி - ம். 1 மாரிவண்.

* கூச

தலைவர விருந்தது தகாதென் போரும்
சொல்லியல் பெருமான் மெல்லிய றன்னைக்
கண்டோர் விழையுங் கானத் தகவயின்
உண்டாட் டமர்ந்தாங் குறையுங் காலைத்
தனிமை தீர்த்த திருமக ளாதலின்
இனிய ளுதனன் றென்றுரைப் போரும்
பவழமு முத்தும் பசும்பொன் மாசையும்
திகழொளி தோன்றச் சித்திரித் தியற்றிய
அணிகல மணிவோ ரணியி லோரே
மறுப்பருங் காட்சி யிவள்போன் மாண்டதம்
உறுப்பே யணிகல மாக வுடையோர்
பொறுத்தன் மற்றுச்சில பொருந்தா தென்மரும்
யாமே போலு மழகுடை யோமெனத்
தாமே தம்மைத் தகைபா ராட்டி
நாணிகந் தொரீஇய நாவுடைப் புடையோர்
காணிக மற்றிவள் கழிவனப் பென்மரும்
ஏதமி லொழுக்கின் மாதவ ரிற்பிறந்
தெளிமை வகையி னெளிபெற நயப்பப்
பிறநெறிப் படுதல் செல்லாள் பெருமையின்
அறநெறி தானே யமர்ந்துகை கொடுப்ப
அம்மை யணிந்த வணிநீர் மன்றல்
தம்முட் டாமே கூடி யாங்கு
வனப்பிற் கொத்த வினத்தின ளாகலின்
உவமமி லுருவி னுதயணன் றனக்கே
தவமலி மாதர் தக்கன ளென்மரும்
இன்னவை பிறவும் பன்முறை பகர

(விரிசிகை அரண்மனையை அடைதல்)

ஆய்பெருஞ் சிறப்பி னருந்தவர் பள்ளியுட்
பாயற் கிடந்த பன்மலர் மிதிப்பினும்
அரத்தங் கூருந் திருக்கிளர் சேவடி
சின்மலர் மிதித்துச் சிவந்துமிகச் சலிப்ப
மென்மெல வியலி வீதி போந்து
கொடிபட நுடங்குங் கடிநகர் வாயில்
முரசொடு சிறந்த பல்லியங் கறங்க

அரச மங்கல மமைவர வேந்திப்
பல்பூம் படாகை பரந்த நீழல்
நல்லோர் தூஉ நறுநீர் நனைப்பச்
சேனையு நகரமுஞ் சென்றுட னெதிர்கொள
ஆனாச் சிறப்போ டகன்மனை புகுதலிற்

(உதயணன் விரிசிகையை மணந்து இன்புறல்)

றானை வேந்தன் றானெறி திரியான்
பூவிரி கூந்தற் பொங்கிள வனமுலைத்
தேவியர் மூவருந் தீமுன் னின்றவட்
சூரிய வாற்றி மரபறிந் தோம்பி
அருவிலை நன்கல மமைவர வேற்றிக்
குரவர் போலக் கூட்டுபு கொடுப்பக்
கூட்டமை தீமுதற் குறையா நெறிமையின்
வேட்டவட் புணர்ந்து வியனுல கேத்த
அன்புநெகிழ்ந் தணைஇ யின்சுவை யமிழ்தம்
பனியிருங் கங்குலும் பகலு மெல்லாம்
முனிவில னுகர்ந்து முறைமுறை பிழையாது
துனியும் புலவியு மூடலுந் தோற்றிக்
கனிபடு காமங் கலந்த களிப்பொடு
நற்றுணை மகளிர் நால்வரும் வழிபட
இழுமென் செல்வமொ டின்னுயி ரோம்பி
ஒழுகுவனன் மாதோ வுதயண னினிதென்.

கஎ—விரிசிகை வதுவை முற்றிற்று.

நான்காவது
வத்தவ காண்டம் முற்றிற்று.

ஆகூ காண்டம் நான்கிற்குக் கூடிய காதை, கஉஉ

ஐந்தாவது

நரவாண காண்டம்.

க—வயாக் கேட்டது.

உதையண குமர னுவந்துண் டாடிச்
சிதைவில் போகமொடு செங்கோ லோச்சி
ஒழுகுங் காலை யோரிடத் தொருநாட்
கழிபெருங் கேள்விக் கண்போன் மக்களொடு
பேரத் தாணியுட் பொருந்தச் சென்றபின்

(உதயணன் வணிகருடைய வழக்கைக் கேட்டலும தீர்த்தலும்)

வாரமி லொழுக்கின் வாணிக ரீண்டி
முறையொடு சென்று முறைமையிற் பிழையாக்
கறைதீர் செங்கோற் காவலற் கிசைத்து
முறையிது கேட்கெனக் கேட்பது விரும்பி
உருமண் ணுவாவினைப் பெருமகன் பணியா
வினவவன் றற்கு வினவெதிர் வழாமை
மூவ ராவா ரொருமகற் கொருத்திகண்
மேவரத் தோன்றிய மக்களம் மூவரும்
ஆன்ற கேள்வியொ டறநெறி திரியார்
மூன்றுதிறம் பட்ட விருப்பின ரவருள்
எறிதிரை முந்நீ ரூடுசென் றவ்வழி
உறுவிலைப் பண்டத்தி னொருவனு வாழும்
கடையகத் திருந்துதன் னுடையது பெருக்கிப்
பிரிவிலன் வாழு மொருவ னொருவன்
அரிய பண்ட மெளிதி னடக்கியவை
உரிய காலத் துற்றது பகரும்
இன்னவை மற்றவ ரியற்கை முன்னோன்
பொலம்படு தீவிற்குக் கலந்தலைப் பெயர்ந்துழிச்
சூழ்வளி சுழற்ற வாழ்கயத் தழுந்தினன்
அழுந்தின னென்பது கேட்டே யறிவயர்ந்
தொழிந்த விருவரு முறுகடன் கழிப்பித்

தவ்வையைச் சேர்ந்து கவ்விதின் மொழியச்
சென்றது நின்றதுஞ் சிதைவின் றெண்ணி
நன்றுசெய் வாழ்க்கை யென்றெடுத் திற்றென
ஒன்று முரையா [1] ளொருமைக் கோடலின்
வென்றித் தானை வீர வேந்தநின்
அடிநிழ லடைந்தன மதுவெங் குறையென
முடிவுநனி கேட்டலு முன்னோற் கமைந்த
கழிபெருங் காதலி மறுமொழி யெதுவெனச்
சுற்ற மாந்தர் [2] சொல்லுவார் மாறல
உற்றவ ருரைத்தவை யொக்கு மவனொடு
சென்றோ ரொருவருஞ் சிதைகலத் துய்ந்து
வந்தோ ரில்லை [3] மாந்தளிர் மேனிக்குக்
கருவு முண்டே திருவமர் மார்ப
தெய்வம்..
..........................படுத்த மாற்றமுந் தெளியாள்
ஐயத் துள்ளமொ டதுவும் படாளென
இருவர் மாற்றமுந் தெரிகவென் றேவலின்
உருமண் ணுவாவதற் குறுவழக் குரைத்தனன்
வருக வப்பொருள் வந்தபி னவ்வழி
இருவரு மிலைச்சித் தீரறு திங்கட்
கொருவன் கையகத் திருக்க விருந்தபின்
மிக்கோண் மாற்ற மெய்யெனின் மேலை
இயல்பே யாகு மதுதா னன்றி
மறுவில் கொள்கையோர் சிறுவனைப் பெறினே
உறுபொருண் மற்றிவ ருரைக்கவும் பெறாஅர்
வெண்குடை நிழற்றிய வேந்தே பெண்பெறிற்
புறநடை யொழித்திவர் திறவதி னெய்துப
நூனெறி யிதுவென நுழைந்தவ னுரைத்தலும்
ஆன வவாவ ரகத்திறத் தடைதர

(உதயணன் மகப்பேறு விரும்பல்)

அவையம் போக்கி நவையறு நெஞ்சினன்
மக்க ளின்றெனின் மிக்குயிர் சிறப்பின்

பி-ம். 1 ளொறுமைக். 2 சொல்லியமாற்றம். 3 யந்தளிர்.

என்குல மிடையறு மெனநினைந் தாற்றான்
கொற்றத் தேவியைக் குறுகலு மவளும்

(வாசவதத்தையின் செயல்)

பொற்றொடித் தோழியர் புரிந்துபுறங் காப்பத்
திருவொடு பூத்த நாள்வரை யிறந்தபின்
பெருவிற லோன்பிகட்குப் பெலிக்கொடை யாற்றி
ஆசிடைக் கிளவி யவரி னெய்தி
மாசில் கற்பின் மங்கலக் கோலமொ
டுருவமை மாடத்தோரிடத் திருந்தோள்
விரிகொடிப் பவழத்தின் விரிந்த சேவடிக்
காழகிற் புகைநிறங் கடுக்குந் தூவிப்
பல்சிறைப் புறவம் பரிந்துட னாடி
அவ்வாய்க் கொண்ட வாரிரை யமிழ்தம்
செவ்வாய்ப் பார்ப்பிற்குச் சேர்ந்தவண் சொரிதலின்
உறுபசி வருத்தமு மன்பினது பெருமையும்
திறவதி னோக்கித் தெரியா நின்றுழி

(உதயணன் செயல்)

வேந்தனும் வினவியவள் வேட்கை விரும்பித்
தாம்படு மாந்தர்க்குத் தண்ணீர் போலும்
காம்படு தோளியொடு கலந்துமகிழ் வெய்திய

(உதயணன் கனவுகாண்டல்)

துயிலிடை யாமத்துத் துளங்குபு தோன்றி
அயில்வே னெடுங்கணோ ராயிழை யணுகி
அருளு மெம்மிறை யெழுபுவி யளித்தற்குப்
பொருளு மதுவே போதுக [1] வென்றலின்
யாரவன் கூறென வவ்வழி யிறைஞ்சிப்
பேரவ ளுரைத்தலிற் பெருமக னோக்கித்
துன்பமு மின்பமுந் துறக்க லாற்றா
முன்பெருந் தேவியொடு செலவுள மமர்தலின்
மற்றதை யுணர்த்தி முற்றிழை யெழுகெனப்
பற்றின ளுடனே பறந்துவிசும் பிவர
மேலுங் கீழு மேவர நோக்கி

பி - ம். 1 வென்றபின்.

மாசறு மகளிர் மம்ம ரெய்தி
ஆனாக் கனவிடை மாநிதிக் கிழவன்
விளங்கவை நாப்பட் டுளங்கினர் புகுதலின்
அரிமா சுமந்த வமளி காட்டத்
திருமா ணாகத்துத் தேவியொ டேறி
இருந்த பொழுதிற் பொருந்திய வல்லியுள்
வெள்ளே று கிடந்த வெண்டா மரைப்பூக்
கொள்வழி யெழுதிய கொடுஞ்சி யுடைத்தேர்ப்
பொன்னிய றுடரிற் புதல்வ னிருத்தலிற்
பின்னரப் பூவின் பிக்க நோக்கிப்
பிறழ்ந்த வாழியிற் பெருநடு வாக
உறழ்ந்துகனி யழுத்திய வுறுபொன் னல்லியின்
ஒருமுடி பிறழ்தலி னருமையொடு விரும்பிக்
கொண்டது வாவெனக் கோமகள் கொண்டு
வண்டவிழ் நறுந்தார் வத்தவற் கருளி
நெடித்தனெ னெழுகென விடுத்தனள் போகக்
கொடிக்கோ சம்பி குறுகித் தமரிடை
முடிக்கல மெல்லா முறைமையி னோக்கிக்
கைவினைக் கம்மத்துக் கதிர்ப்புநனி புகழ்ந்து
வேண்டுக விதுவென விளங்கிழைக் கோமகட்
கீயக் கொண்டுதன் னிடைமுலைச் சேர்த்தலும்
காய்கதிர்க் கனலியிற் கதுமெனப் போழ்ந்து
புக்கது வீழ்தலும் பொருக்கென வெரீஇ
எழுந்த மாதரொ டிறைவனு மேற்றுக்

(உதயணன் கனாப்பயன் அறிதல்)

கழிந்த கங்குற் கனவினை வியந்து
நூனெறி மரபின் வல்லோற் பேணிக்
கோலத் தேவியொடு கோமகன் வினவக்
கனவது விழுப்ப மனவயி னாய்ந்து
விளங்கொளி விஞ்சையர் வெள்ளியம் பெருமலைத்
துளங்கா வாழி தோன்ற வேந்தும்
வெய்யோற் பெறுதலும் விறலவ னெய்தலும்
ஐய மில்லையென் றாய்ந்தவ னுரைப்பப்
புதல்வனஃ தெதிர்மை பொருளென விரும்பித்

திதலை யல்குற் றேவியொடு மகிழ்ந்து
செல்லா நின்ற சின்னா ளெல்லையுட்

(வாசவதத்தையின் கருப்பம்)

பல்கதிர் மதியமொடு பரந்துவிசும் போடும்
வியந்த நற்கோ ளுயர்ந்துழி நோக்கிப்
பெயர்ந்துவரு நாளிற் பெருமையின் வழாத
நன்னா ளமயத்து மின்னென நுடங்கி
விஞ்சைய ராழி யுருட்டும் வேட்கையொ
டஞ்செந் தாமரை யகவயி னிறைந்த
வெண்பாற் [1] புள்ளின் விழையுந் தன்மையொ
டவந்தியன் மடமக ளணிவயிற் றங்கண்
வியந்துதலை பனிக்கும் வென்றி வேட்கையொடு
சேட்படு விசும்பிற் சென்றவ னவ்வழிப்
போய்ப்படு குருசில் பொலிவொடு பட்டென
முயக்கமை வில்லா நயப்புறு புணர்ச்சியுள்
அணிநிற வணிச்சம் பிணியவிழ்ந் தலர்ந்த
அந்த ணறுமல ரயர்ப்பிற் றுங்கும்
செந்தளிர்........................வருந்த வசாஅய்
நிலாவுறழ் பூந்துகி னெகிழ்ந்திடைத் தோன்றக்
கலாவப் பல்காழ் கச்சுவிரிந் திலங்கத்
திருநுதற் றிலகமுஞ் சுமத்த லாற்றாள்

(வாசவதத்தை ஒரு கனவுகண்டு அரசனுக்கு உரைத்தல்)

பெருமதர் மழைக்க ணின்றுயில் பேணிய
இன்ப யாம மியைந்த வைகறை
நன்பெருங் கனவி னடுங்குவன ளேற்று
வெள்ளத் தானை வியலக வேந்தன்
பள்ளி யேற்றபின் பதனறிந்து வணங்கி
என்னைகொ லடிக ளின்றியான் கண்டது
விண்ணக மருங்கில் வெண்முகில் புரைவதோர்
அண்ணல் யானையென் கண்ணுற வந்துதன்
ஆய்வலித் தடக்கை சுருட்டுபு முறுக்கியென்
வாய்புக் கடங்கிய பொழுதிற் சேய்நின்

பி - ம். [1] புள்ளியின்.

றந்தர மருங்கிற் றுந்துபி கறங்கப்
புகழ்ந்து பல ரேத்தப் பொருக்கெனப் பெயர்த்தே
உமிழ்ந்தனெ னுமிழப் பரந்திறகு தோற்றிப்
பல்லோர் மருளப் பறந்துசென் றுயர்ந்ததோர்
வெண்மலை மீமிசை யேறி வேட்கையின்
விண்மிசை ஞாயிறு விழுங்கக் கண்டனென்
என்னைகொ லிதனது பயமென வினவிய
நன்னுதல் கேட்ப மன்னவ னுரைக்கும்

(கனவின்பயனை உதயணன் கூறல்)

மறுவின்று விளங்கு மறப்போ ராற்றலோர்
சிறுவனைப் பெறுதி சேயிழை மற்றவன்
உறுதிரைப் பக்கமும் வானமும் போகி
அச்சமி லாற்றலோர் விச்சா தரரிடை
ஆழி யுருட்டுமென் றறிந்தோ ருரைத்த
வீழா விழுப்பொருண் மெய்பெறக் கண்டனை
தீதின் றாகித் திருவொடு புணர்கென
மாதாங்கு குருசிலு மதுவே யிறுப்பப்
போதேர் கண்ணியும் புகன்றன ளொழுக

(வாசவதத்தையின் கருப்பம் முதிர்தல்)

மங்குல் விசும்பின் வளர்பிறை போலவும்
பொங்குநீர்ப் பொய்கையிற் பூவே போலவும்
நாளினு நாளினு நந்திவனப் பெய்தித்
தோளுந் தாளு முடம்புந் தலையும்
உகிரு மயிரு மொருங்குகுறை வின்றி
ஓதிய வளப்போ டுயர்நெறி முற்றி
அருவினை விச்சை யவனூ டுறைதலிற்
பெருமலை யுலகம் பேணு மவாவொடு
பறத்த லூற்றம் பிறப்பப் பைம்பூட்
சிறப்பொடு புணர்ந்த சேயிழை மாதர்
குடர்வயிற் கிடந்த குழவிய துள்ளத்
திடர்வகை யறியா ளவ்வ மெய்தி
உணர்ந்தோ ருரைப்ப வுரையிற் கேட்கும்

(வாசவதத்தைக்கு உண்டான விருப்பம்)

இருவகை யிமயமும் பெருகுபுனல் யாறும்
நீலப் பருப்பமுந் தீபமு மப்பாற்
கோல வருவியஞ் சிகரியு ளாலத்
தொருநடு வாகிய வுயர்பெருங் குன்றமும்
பெருமலை பிறவு மருமையொடு புணர்ந்த
இறுவரை யேறி யிமையோ ராடும்
நறுமலர்ப் பொய்கையு நந்தா வனமும்
உத்தர குருவினோ டொத்தவை பிறவும்
ஆண்டுபோந் தெழுந்து காண்டலுற விழையா
ஐவகைச் சோதிட ரணிபெறு கற்பம்
கைவைத் தொழியக் கடந்துசென் றுப்பால்
அமரா பதியு மந்தரத் தெல்லையும்
நுகர்பூங் காவு நோக்குபு வருதற்
குற்றதென் மனனெனு முணர்வின ளாகி
மற்றுப்பிறர்க் குரையாண் மனத்தே யடக்கி
ஈர்க்கொடு [1] பிறந்த விளந்தளிர் போல
மாக்கே ழாகமு மருங்குலும் வருந்த
முலைக்கண் கறுப்பத் தலைக்கவி னெய்தி
வளம்பாற் றன்மையின் வந்துபுடை யடுத்த
இளம்பாற் கெதிர்ந்த விடத்த வாகிய
முலைபொறை யாற்றா முனிவின் றலையும்
மலைபொறுத் தென்ன மகனையுந் தாங்கி
நொந்துபுற மெலிந்த தன்றியு மந்தரத்
தியங்கல் வேட்கைய ளிருக்குந ளாதலின்
அயங்கவ னழற்ற வசைவு முந்துறீஇ
முக்கூட் டாரத்த வொண்பசை விலங்கி
நெய்க்கூட் டிலங்கு நித்தில நிகர்த்துக்
கூரிய வாகிய நேரியன் முறுவற்
செவ்வாய் திறந்து சில்லென மிழற்ற
ஐதேந் தல்குலு மாகமு மசைஇ
மைதோய் கண்ணி மதியின் மெலியப்

பி - ம். 1 பிளந்த.

(உதயணன் வாசவதத்தையின் விருப்பத்தை வினவல்)

பசைவுறு காதற் பட்டத் தேவி
அசைவுறு வெந்நோ யறிந்த வரசன்
அசாஅ வரும்பொருள் யாதென வுசாஅய்க்
கேட்பவஃ துரையாள் வேட்பது விளம்பின்
நயந்தோர்க் காயினு நாணுத் தகன்றென
உயர்ந்தோர் கொள்கையி னொண்டொடி யொதுங்க
மன்னவன் மறுத்து மடவோய் மற்று
....
நின்னுயிர் மதியா யாயி னென்னுயிர்
யானும் வேண்டே னாயிழை கேண்மோ
கூடிய கொழுநன் கொழுங்குடர் மிசைசுற
ஓடிய வுள்ளத் துயர்துணைத் தேவியைக்
குறையிற் கேட்டுக் கொடுத்துநோய் தணித்த
மறையில் பெரும்புகழ் மன்னவன் போல
என்ன தாயினு மீகுவன் மற்றுநின்
இன்னா வெந்நோ யெத்திறத் தாயினும்
ஒடுங்கா வுள்ளமொ டகற்றுவல் யானெனக்
கடுஞ்சூ ளுறைஇக் காவலன் கேட்ப

(வாசவதத்தை தன் விருப்பத்தைக் கூறல்)

ஒழுக்கினுங் கற்பினு மிழுக்க மின்றெனப்
பசைஇய கேள்வனைப் பைந்தொடி வணங்கி
அசையா வூக்கத் தடிகளென் னுள்ளம்
விசைகொ ணோன்றாள் [1] விச்சா தரர்போல்
மிசையே சென்று மேன்மே னெருங்கும்
இசையா வரும்பொரு ளிற்றென வுரைத்தல்
வசைதீர் வையத்து நகைய தாதலிற்
சொல்லிய திலனென மெல்லியன் மிழற்ற

(உதயணன் அமைச்சரோடு ஆராய்தல்)

எளிதெனக் கென்ன வமைச்சரோ டாராய்ந்
தொளிமலர்க் கோதா யுற்றபி னறியெனத்

பி - ம். 1 விச்சாதிரர்.

துன்ப நீக்குந் தோழரோ டியைந்தே
இன்பக் கோட்டியு ளினிதி னிருந்து
போராக் கழற்காற் பெருந்தகை வேந்தன்
ஆர்வவேய்த் தோளி யசாநோய் தீரிய
ஆராய்ந் தனனு லமைச்சரோ டொருங்கென்.

க—வயாக் கேட்டது முற்றிற்று.

உ—இயக்கன் வந்தது.

(உருமண்ணுவா வருதல்)

ஆராய் தோழரொ டரச னதன்றிறம்
ஓரா விருந்துழி யுருமண் ணுவாவும்
ஆரா ணமைத்து வாணடு நீண்மதில்
ஏரணி யுடைய விலாவா ணகமெனும்
ஊர்வயி னின்றும்வந் துதயணற் குறுகி

(உதயணன் உருமண்ணுவாவுக்கு உரைத்தல்)

வணங்கின னிருந்துழி மணங்கமழ் கோதை
கருத்தினை யெல்லாம் விரித்தவற் குரைப்பப்

(உருமண்ணுவா ஓர் இயக்கனைப்பற்றிக் கூறுதல்)

பொறியுடை மார்பவது புணர்க்கும் வாயில்
அறிவல் யானஃ தருளிக் கேண்மதி
வெற்றத் தானையும் வேழமு நீக்கி
உற்றோர் சிலரோ டொருநா ளிடைவிட்டு
வேட்டம் போகி வேட்டுநீர் பெறாஅ
வெம்பர லழுவத் தெம்பரு மின்மையின்
மதிமயக் கெய்திப் புதுமலர்க் காட்டுட்
டெய்வதை யுண்டெனிற் கையற [1]லோம்புகெனப்
பாற்படு பலாசி ஞெக்கமை கொழுநிழற்
குரவம் பாவைக் குறுமலர் நசைஇ
அரவ வண்டினம் யாழென வார்ப்பத்

பி - ம். 1 லோம்பென.

தெறுகதிர்ச் செல்வன் முறுகிய நண்பகல்
அசைந்தியாங் கிடந்தன மாக வவ்வழி
இசைந்த வெண்டுகி லேற்ற தானையன்
கைந்நுண் மீக்கோள் கச்சினோ டணவர
அந்நுண் சாந்த மெழுதிய வாகத்தன்
காசுகண் ணரிந்து கதிரொளி சுடரும்
மாசில் வனப்பினன் மறுமதித் தேய்வென
ஏக வார மிலங்கு கழுத்தினன்
நிழல்படு வனப்பி னீலத் தன்ன
குழல்படு குஞ்சியுட் கோல மாக
ஒண்செங் கழுநீர்த் தெரிய லடைச்சித்
தண்செங் கழுநீர்த் தகைமலர்த் தாரினன்
ஆயிர நிறைந்த வணிமலர்த் தாமரைச்
சேயொளி புரையுந் திகழொளிக் கண்ணினன்
கனைக ணாகியோ ரிளையவன் றோன்றி
யாவிர் மற்றுநீ ரசைவுபெரி துடையீர்
ஏக லாற்றீ ரென்னுற் றீரென
....
........................போத றேற்றும்
தெய்வ மகனெனு மையுற வகல
அறிய வேண்டி நெறிமையி னாடி
முன்னுப காரத்தின் முழுப்பய னிகர்ப்பதோர்
பின்னுப காரம் பெயர்த்தல் விரும்பி
என்னருங் கருதா னிறந்த பின்னர்
....
நன்னர் நெஞ்சத்து நயம்பா ராட்டி
எம்மி னாகா விடர்கண் கூடின்
உம்மை யாமு நினைத்தன மொழுகுதும்
அன்ன மாண்பே [1]மறிகபின் யாமென
உண்மை யுணரிய வொருங்குநாங் குறைகொள
வச்சிர வண்ணனை வழிபட் டொழுகுவேன்
நச்சு [2] நண்பி னஞ்சுக னென்னும்
இயக்க னென்னை மயக்கற வுணர்ந்து

பி - ம். 1மறிந்தபின். 2 நண்பினஞ்சுதன்.

மறப்பின் றெழுகு நயப்பொடு புணர்ந்த
நன்னட் பாளனேன் யானினி நுமக்கென
என்னட் பறிமி னென்று மென்வயின்
எள்ள லில்லா துள்ளிய காலை
ஓதியி னோக்கி புணர்ந்தியான் வருவேன்
ஈதியன் மந்திர மென்று கூறி
என்பெயர் நினைந்தா லெவ்விடத் தாயினும்
துன்ப நீக்குவெ னென்றவன் றந்த
மந்திர மறந்திலேன் மறங்கனல் வேலோய்
வல்லை யாகி யொல்லை யவனைப்
பொழுதொடு நினையென வெழுதினன் கொடுப்ப

(உதயணன் இயக்கனை நினைந்தது)

வடிவேன் மன்னனும் படிவமொ டிருந்து
வாய்மையின் வழாஅத் தூய்மைய னாகி
நினைப்பிற் றிரியா நெறிமையி னோதி

(இயக்கன் வந்தது)

இமைப்போன் கண்மிசை யிலங்கிய வொளியொ
டன்றவன் கண்ட யாக்கையுங் கோலமும்
இன்றிவ னுணரு மியல்பின னாகி
நயப்புறு நெஞ்சமொடு நண்புமீக் கூரி
இயக்க னவ்வழி யிழிந்தன னினிதென்.

உ—இயக்கன் வந்தது முற்றிற்று.

௩—இயக்கன் போனது.

இயக்க னவ்வழி யிழிந்தனன் றோன்றி
மயக்கந் தீர்த்த மாசறு நண்பின்
அலகை யாகிய வரச குமரனை
உலகுப சாரத் துறைமுறை கழித்துக்

(இயக்கன் கூற்று)

கிளையின் மன்னர் கேளிர் சூழத்
தளையகப் பட்ட காலையுந் தளையவிழ்

வண்ணக் கோதை வாசவ தத்தையொடு
பண்ணமை பிடிமிசைப் படைநரு மொழியத்
தனியே போந்தோர் கனிகவர் கானத்துக்
கூட்டிடைப் பட்ட கோட்புலி போல
வேட்டிடைப் பட்ட வெவ்வப் பொழுதினும்
அருந்திற லமைச்ச னறிவி னாடித்
திருந்திழை யல்குற் றேவியைப் பிரிப்ப
வருந்திய நெஞ்சமொடு மகத நன்னாட்
டாசிகந் தடர்த்த வாறு வெகுளித்
தருசகன் றங்கையைத் தலைப்பட் டெய்திய
துயரக் காலத்துத் தொன்னக ரெய்திய
பகைகொண் மன்னனைப் பணித்த பொழுதினும்
துயரந் தீர்க்குந் தோழனென் றென்னைப்
பெயராக் கழலோய் பேணா யாகி
ஒன்றிய செல்வமொ டுறுக ணில்லா
இன்று நினைத்த தென்னெனப் படுமென
வெஞ்சின வீரனை நெஞ்சுறக் கழறப்

(உதயணன் கூற்று)

பட்டவை யெல்லா.....................மெங்களின்
மாறடு வேலோய் மற்றவை தீர்தலின்
எம்மிற் றீரா விடர்வரி னல்லதை
நின்னை நினைத்த னீர்மைத் தன்றென
உள்ளிய தில்லென வுள்ளங் குளிர்ப்பத்
தருவன நாடி முகமன் கூறி
அஞ்சொன் மழலை யவந்திகை யென்னுநின்
நெஞ்சமர் தோழி நிலைமை கேண்மதி
மிசைச்செல வசாஅ விழும வெந்நோய்
1 தலைச்செலத் தானுந் தன்மனத் தடக்கி
ஏறுக் கரும மிதுவென வெண்ணிக்
கூறுண் மறைப்ப வூறவ னாடி
உற்றியான் வினவு விற்றென விசைத்தனள்
மற்றியாந் தீர்க்கு மதுகை யறியேம்
நயந்த நண்பி னன்னர் நோக்கி

பி - ம். 1 தலைச்செலருனுந்.

உடையழி காலை யுதவிய கைபோல்
நடலை தீர்த்த னண்பன தியல்பென
உரத்தகை யாள வுள்ளினே னென்னத்
திருத்தகு மார்வன் றிறவதிற் கிளப்பத்

(நஞ்சுகன் கூற்று)

தாரணி மார்ப காரணங் கேண்மதி
மெச்சார்க் கடந்த மீளி மொய்ம்பின்
விச்சா தாருறை யுலகம் விழையும்
திருமக னாநின் பெருமனைக் கிழத்தி
வயிற்றகத் துறைந்த நயப்புறு புதல்வன்
அன்ன னாகுத றிண்ணிதி னாடி
மெய்ப்பொரு டெரியு மிடைதார் மன்னவ
பொய்ப்பொரு ணீங்கிய விப்பொருள் கேண்மதி
உள்ளிய வசாஅவஃ தொளியின்று கிளப்பின்

(பிடியின் பண்டைவரலாறு)

மஞ்சுசூழ் நெடுவரை விஞ்சத் தடவித்
திருமலர் கெழீஇய தெண்ணீர்ப் படுவின்
நருமதைப் பெயர்யாற் றிருகரை மருங்கின்
எண்ணரும் பருப்பத மென்னு மலைமிசை
ஒண்ணிதிக் கிழவ னுரிமையொ டிருந்துழிக்
கண்ணணங் குறாஉங் காரிகை நீர்மைப்
பத்திரை மேனகை திலோத்தமை யொருத்தி
பத்திரா பதியோ டுருப்பசி [1] யரம்பைமுதற்
பாடகஞ் சுமந்த சேடுபடு சேவடி
நாடக மகளிர் நாலிரு பதின்மருட்
பல்வளைப் பணைத்தோட் பத்திரா பதியெனும்
மெல்லிய றன்னை வேந்தன் விடுக்கவப்
பணியொடு சென்று பனிமலர் பொதுளிய
ஆலங் கானத் தாற்றயன் மருங்கின்
இணருந் தளிரு மிருஞ்சினைப் போதும்
பிணர்படு தடக்கையிற் பிறவு மேந்தி
ஒண்ணுத விருட்பிடி யொன்றே போலக்

பி - ம். 1 யரம்பையெனப்.

கண்ணயற் கடாஅத்துக் களிவண் டோப்ப
மாறுதனக் கின்றி மறமீக் கூரி
ஆறுதனக் காணா [1] வணிகல நுகர்ந்து
மருப்பிடைத் தாழ்ந்த பருப்புடைத் தடக்கை
செருக்குடை மடப்பிடி சிறுபுறத் தசைஇ
நறுமலர் நாகத் தூழ்முதிர் வல்லிப்
பொறிமலர் கும்பம் புதைய வுதிர
அஞ்சாப் பைங்கணோர் வெஞ்சின வேழம்
எழுவகை மகளி ரின்ப மெய்தி
அகமகிழ்ந் தாடு மண்ணல் போல
நின்ற வின்ப நேயங் காணூ

(பத்திராபதி யானைப்பிறப்பை விரும்பல்)

விழுநிதிக் கிழவன் விழையுங் காதலின்
நாடக மகளிர் நலத்தொடு புணர்ந்த
பாடகச் சீறடிப் பத்தி ராபதி
தான மகளிரொடு தண்புனல் யாற்றயற்
கானத் தாடிக் கடவா நின்றோள்
ஊழுலர்ச் சோலையூ டுவந்துவிளை யாடும்
வேழப் பிறவும் விழைதக் கதுவென
உள்ளம் பிறழ்ந்ததை யுள்ளகத் தடக்கி

(பத்திராபதி குபேரன் முன்செல்லுதல்)

வள்ளிதழ் நறுந்தார் வச்சிர வண்ணன்
அடிநிழல் குறுகிய காலை மற்றென்
மனத்ததை யியைகென நினைத்தனள் செல்லா
....

(குபேரன் அவளைச் சபித்தல்)

பிடியெழி னயந்து பெயர்ந்தன ளிவளென
ஓன்றிய வுறுநோ யோதியி னோக்கிச்
செயிர்த்த வுள்ளமொடு தெய்வ வின்பம்
பொறுத்தல் செல்லாது வெறுத்தனை போன்மென
வேழ நினைஇ வேட்கை மீதூர்ந்
தாழ்வினை வகையி னுடம்பிட் டேகி

பி - ம். 1 வணிகலங் கர்ந்து.

நன்றியில் விலங்கின் பிறவி நயந்துநீ
கானஞ் செய்தது காரண மாக
மலைக்கணத் தன்ன மாசில் யானையுள்
இலக்கண மமைந்ததோ ரிளம்பிடி யாகிப்
பிறந்த பின்றைச் சிறந்துநீ நயந்த
வேக யானையொடு விழைந்துவிளை யாடிப்
போக நுகர்கெனப் போற்றா னாகிச்
சாவ மற்றவ னிடுதலுஞ் சார்ந்து

(பத்திராபதி வினாதல்)

தேவ வாய்மொழி திரியா தாகலின்
நீடுபெற லரிதா நெடுங்கை விலங்கின்
வீடுபெறல் யாதென விளங்கிழை வினவ

(சாபவிடை)

அண்ண னற்றா ளவந்தியர் கோமான்
பண்ணமை வாரியுட் பண்ணுப் பிடியாப்
பற்றப் படுதி பட்ட பின்னாள்
அலகை யாகிய வைம்பெருங் குலத்துக்
கொலைகெழு செவ்வேற் குருகுலக் குருசில்
உலகம் புகழு முதயண குமரனைப்
பிறைமருப் பியானைப் பிரச்சோ தனன்றமர்
சிறைகொளப் பட்டுச் செல்லா நின்றுழி
மண்ணமை நெடுந்தோண் மறமாச் சேனற்குப்
பண்ணமை பிடியாய் நீயு மவற்றுள்
யானை வித்தகர் தானத்தின் வடிப்ப
நடையொடு நவின்ற காலை யவ்வழிப்
படையுடை வேந்தன் பனிநீர் விழவினுட்
குடைகெழு வேந்தன் குருகுலக் குருசில்
ஒண்ணறுந் தெரிய லுதயண னேறப்
பண்ணிச் செல்க பத்திரா பதியென
வீர வேந்தன் விளங்கிழைக் குறுமகள்
வார்வளைப் பணைத்தோள் வாசவ தத்தையை
ஆர்வ வுள்ளத் தவனுட னேற்றி
ஊரப் படுநீ யோரிரு ளெல்லையுள்
உலப்பரு நீளதர் தலைச்செல வோடிக்

கால கூட மென்னும் வெந்நோய்
சாலவும் பெருக மேன்மே னெருங்கி
விலக்குவரை நில்லாது வெம்பசி நலிய
வீழ்ந்த காலை மேயவ னத்தலை
ஆய்ந்த வுள்ளமொடு சேர்ந்தன ளாகி
அஞ்சா தைம்பத நினைமதி நீயென
எஞ்சா தவணீ யியல்பினிற் றிரியாது
சிந்தையொடு முடிந்தது காரண மாக
ஊனமை விலங்கி னுடம்பவ ணொழிய

(பத்திராபதி பழைய உருப்பெற்றுக் குபேரனை அடைந்து வணங்கல்)

ஈனமில் யாக்கையோ டிவ்வழி வந்துநின்
முன்னைப் பேரொடு பெண்ணுரு வெய்தி
இத்துணை வாழ்தியென் றுரைக்கப் பட்ட
அன்ன தன்மையோ டிறந்த வாயிழை

(பத்திராபதி குபேரனை வரம் வேண்டிக் கோள்ளல்)

மன்னருண் மன்ன நின்னரு ணிகர்க்கும்
மாற்றுப கார மனத்தி னெண்ணி
நிச்ச நிரப்பி னிலமிசை யுறைநர்க்
கெச்சம் பெறாத லின்ப மாதலின்
மற்றது முடிக்கு முயற்சியோ டுற்றதன்
வளநிதிக் கிழவனை வாழ்த்துவனள் வணங்கி
அளவி லின்பத் தாடலிற் பணிந்து
பெருவரம் பாகிய பொருவில் செல்வவோர்
சிறுவரம் வேண்டுவென் றிரியா தீமென
நிவந்த வன்பி னுவந்தது கூறெனக்
கவிழ்ந்த சென்னியள் கைவிரல் கூப்பி
வன்க ணுள்ளத்து மன்னர்க் கொவ்வா
அங்கவ னுள்ளமோ டருண்முந் துறீஇ
என்குறை முடித்தே னினியென் னாது
துன்புறு கிளவியிற் றொன்னல மழுங்கத்
திருமலர் நெடுங்கண் டெண்பனி யுறைத்தந்
தருமணி யாகத் தகல நனைப்ப
எவ்வ வுள்ளமோ டிரத்த லாற்றான்
தைவந் தளித்துத் தக்கது செய்தோய்

படர்கூ ரியாக்கையுட் பற்று விட்டகன்
றிடர்தீர்ந் தினியை யாகவென் குறையெனக்

(உதயணனுக்காக மகப்பேறு வேண்டல்)

கடவது கழித்த காவலன் றனக்கோர்
மறுவில் சிறப்பினோர் மகனை வேண்டுவென்
பெறுதற் கொத்த பிழைப்பில னாயினும்
அரூஅ வருநிதிக் கிழவ னதனை
மரூஅ தருளென மடமொழி யுரைப்பப்
பெரிதவ னுணர்ந்து பெற்றனை நீயெனச்

(குபேரன் சௌதர்மேந்திரனை ஏத்தல்)

சொரிதரு விசும்பிற் சோதமற் குறுகிப்
பாத்தில் பெருமைப் பரதன் முதலாச்
சேய்த்தின் வந்தநின் குலமுஞ் செப்பமும்
வைத்த காட்சியும் வல்லிதிற் கூறிச்
சிதைவில் செந்நெறி சேர்ந்துபின் றிரியா
உதையண குமரற் குவகையிற் றோன்றுமோர்
சிறுவன் வேண்டுமது சிறந்ததென் றேத்தப்

(சௌதர்மேந்திரன் சோதவனுக்குக் கட்டளையிடுதல்)

பின்னை மற்றவன் மன்னிய வேட்கையொடு
விச்சை யெய்தி வெள்ளியம் பெருமலை
அச்சமி லாழிகொண் டரசுவீற் றிருத்தற்கு
நச்சி நோற்றவோர் கச்சமில் கடுந்தவச்
சோதவ னென்னு மிருடி யுலகத்துத்
தேவ யாக்கையொடு போக மெய்திய
நிதான வகையி னினைத்தினி திருந்தன்
நாவலந் தண்பொழி னலத்தொடு தோன்றிப்
பாவ நீக்கிய பரதன் பிறந்த
ஆய்பெருந் தொல்குடித் தோன்றி யிப்பால்
மாசில் விஞ்சையர் மலையகந் தழீஇ
ஆழி யுருட்டி யென்வயின் வருஉம்
ஊழி யிதுவென வுணரக் கூறி
ஆய வெள்ளத் தவனை யழைத்தே
குறையா விருந்தவக் கிழவனை நோக்கி

மன்னிய வத்தவன் றேவி வயிற்றுள்
துன்னினை படுநா ளின்ன தாதலின்
....
.......................னூலவ னுரைப்ப

(சௌதர்மேந்திரன் சோதவனை விடுத்தல்)

மேலையம் பாற்கடல் வெள்ளேறு கிடந்த
[1] வாலிதழ் நறுமலர் வைகறை யாமத்துக்
கனவின் மற்றவன் கையிற் கொடுத்து
வினையி னெதிர்பொருள் விளங்கக் காட்டென
இந்திரன் விடுத்த காலை வந்தவன்

(சோதவன் பத்திரையை உதயணன்பால் அனுப்பல்)

பைந்தளிர்க் கோதைப் பத்திரைக் களிப்ப
ஒள்ளரி மழைக்கட் டேவியை யுள்ளிநீ
பள்ளி கொண்டுழிப் பரிவுகை யகல
வெள்ளிய நறும்பூத் தந்தனள் விளங்கிழை
ஆர்வ வுள்ள முடையோர் கேண்மை
தீர்வதன் றம்ம தேர்ந்துணர் வோர்க்கே
ஆயினு மக்குறை முடித்த லாற்றுவென்

(பத்திராபதியின் நன்றியறிவு)

தானவட் டந்தன டளிரிய லாதலின்
இதுவு நன்னயஞ் சிறிதென வதனைத்
தான்வெளிப் படாஅ ளின்னு நுனக்கோர்
வான்வெளிப் படூஉம் வாரி விழுப்பொருள்
தருதல் வேட்கை யொருதலை யுடையள்

(இயக்கன் பத்திராபதியைத் தியானிக்கும்படி கூறல்)

ஆனுக் கடுந்திற லண்ண லதனால்
மேனாட் கிழமை விண்ணவர் மகளை
மனத்தி னுள்ளி மந்திரங் கூறி
நினைத்த பொழுதி னின்முனர்த் தோன்றும்
தோன்றிய பின்னர்த் தோன்றலைத் தந்த
மகனது வரவு முறைமையி னுணர்த்துநீ
அகனமர்ந் துரைத்த வயாஅ வரும்பொருள்

பி - ம். 1 வாலிதினறுமலர்.

இற்றென வுரைத்தலு முற்றிழை தீர்க்கும்
மற்றிது முடியா[1] தாயின் மறித்தும்

(இயக்கன் ஒரு மந்திரத்தை உபதேசித்தல்)

வருவல் யானென[2] வொருபதங் கொடுத்துக்
குறிகொண் மாற்றங் கொள்ளக் கூறிச்
சென்றியான் வருவல் செம்மல் போற்றெனக்
குன்று நன்மொழி யொன்றல பயிற்றிக்
கடிகமழ் மார்ப கவல லென்று

(இயக்கன் செல்லுதல்)

தொடியுடைத் தடக்கையிற் றோழனைப் புல்லிப்
பசும்பொற் பல்கலம் பல்லூ ழிமைப்ப
விசும்பின் மின்னென மறைந்தனன் விரைந்தென்.

ரு—இயக்கன் போனது முற்றிற்று.

ச—வயாத் தீர்ந்தது.

(உதயணன் செயல்)

விசும்பின் மின்னென விரைந்தனன் மறைந்தபின்
பசும்பொற் பைந்தார்ப் பனிமதி வெண்குடை
ஒன்றிய வொழுக்கி னுதயண மன்னன்
குன்றகச் சாரற் குளிறுபு வீழ்ந்த
இரும்பிடித் தோற்றமு மிறுதியுங் கேட்டு
விரும்பிய வுள்ளமொடு விரைந்தின னிருந்தபின்
அருமறை விச்சைப் பெருமறை தொடங்கி
வடிக்கண் மாதர் வருத்த நோக்கி
நெடிக்கு மவாவென நெஞ்சி னினைஇ
உள்ளத் தன்னுட் குள்ளழிந் துயிரா
வள்ளிதழ் நறுந்தார் வத்தவ னுரைப்பத்

(அமைச்சர் செயல்)

தீரும் வாயி றேர்தும் யாமெனப்

பி - ம். 1 தாயினும், 2 வரும்பதங்,

பெரிய லாளர் பிறிதுதிறங் காணார்
முயற்சியின் முடியாக் கரும மில்லென
நயத்தகு நண்பி னுடுதொறு நாடித்
தச்ச மாக்களை யெச்சார் மருங்கினும்
ஆணையிற் றரீஇ யரும்பெறற் றேவி
பேணிய வசாநோய் தீர [1] வேண்டிச்
சேயுயர் விசும்பிற் செல்லு மெந்திரம்
வாய்மையிற் புணரும் வல்விரைந் தென்றலின்

(தச்சர் மறுத்தல்)

நீர்சார் பாக வூர்பவு மரத்தொடு
நிலஞ்சார் பாகச் செல்பவு மலங்குசினை
இலைசார் பாக வியல்பவு மென்றிந்
நால்வகை மரபி னல்லதை நூல்வழி
ஆருயிர் கொளினு மதுவெமக் கரிதெனச்
சார்புபிறி தின்மையிற் சாற்றுவன ரிறைஞ்ச

(பத்திராபதி தச்சவுருவங்கொண்டு வருதல்)

அந்தர விசும்பி னறிவன னோக்கி
இவருரு வாகி யிவ்வினை முடிப்பலென்
றமருரு வொழித்துச் சென்றனள் குறுகிக்
களைக ணீகுவென் கையற லொழிகெனத்
தளையவிழ் தாமமொடு தச்சுவினைப் பொலிந்தவோர்
இளையனிற் றோன்றி யிவர்களை யலைத்தல்
வேண்டா விடுக விரைந்தென வுரைத்தலிற்

(உதயணனுக்கு உருமண்ணுவா அறிவித்தல்)

பூண்டாங் ககலத்துப் புரவலற் குறுகி
உருமண் ணுவாவும் பெருவிதுப் பெய்திக்
கண்ணியன் கழலினன் கச்சினன் றாரினன்
வண்ண வாடையன் வந்திவட் டோன்றித்
தச்சுவினைப் பொலிந்த விச்சையின் விளங்கி
என்னை மற்றிவ [2] ரறியா ரொழிகெனத்
துன்னிய துயரந் துடைப்பான் போன்றனன்
மன்னருண் மன்னன் மறுமொழி யாதென

பி-ம். 1 வேண்டிற். 2 ரறியாதொழி.

(உதயணன் உடம்படல்)

விருப்புறு நெஞ்சின் வியந்துவிர னொடித்தவன்
உரைப்பவை யெல்லா மொழியா தாற்றி
நொடித்தல் செல்லா தரியவை யாயினும்
கொடுத்தல் குணமெனக் கோமக னருளி

(உருமண்ணுவாவின் செயல்)

விடுத்தலிற் போந்து வேணவா முடித்தற்
குரிய முறைமையி னுரிய கொடுப்ப

(பத்திராபதி எந்திரம் அமைத்துத் தருதல்)

நிறையுடன் கொண்டோர் மறைவிடங் குறுகிச்
சின்னாள் கழிந்த பின்னா ளெல்லையுள்
அமைவுநனி காண்கென் றாங்கவ னுரைப்ப

(உதயணன் முதலியோர் எந்திரத்திலேறிச் செல்லல்)

உமையொடு புணர்ந்த விமையா நாட்டத்துக்
கண்ணணங் கவிரொளிக் கடவுளைப் போலத்
தடவரை மார்பன்.......................
தானுந் தேவியுந் தகைபெற வேறி
வானோர் கிழவனின் வரம்பின்று பொலியத்
தேனார் கோதையொடு திறவதி னிருப்ப
உருமண் ணுவாவுட னேறு மதற்குத்
தெருமா லெய்திச் செய்திற மறியான்
என்றுணைக் குற்ற நோயு மிதுவென
வென்றடு தானை வேந்தன் விரும்பித்
தச்சனை நோக்கி மெச்சுவ னாகி
ஏறுக விருவரு மென்றவ னுரைத்தலின்
வீறுபெறு விமானத்து விரைந்தவ ரேறலும்
மற்றை மூவருங் கொற்றவற் குறுகி
விசும்பா டூசலின் வேட்கை தீர்க்கெனப்
பசும்பொற் கிண்கிணிப் பாவைய ரெல்லாம்
ஒல்லா நிலைமைகண் டுரைத்தனம் யாமென
வெல்போர் வேந்தனும் விரும்பின னாகித்
தச்ச னயவன் றன்னை நோக்கி
அச்சி னமைதி யறியக் கூறென

உலக மெல்லா மேறினு மேறுக
பலர்புகழ் வேந்தே யென்றவன் பணிதலும்
உவந்த வுள்ளமொடு நயந்துட னிவர
வடுத்தீர் குருசிற் கறிய மற்றவன்
கடுப்புந் தவிர்ப்புநி னுளத்துள் ளனவென
தோடலர் தாரோன் றோன்றக் கூறி
ஏறு மிடமு மிழியும் வகையும்
ஆறுந் தீபமு மடையா விடனும்
கூறுவன னோக்கிக் குறிக்கொளற் கமைந்த
இலக்கண வகையு மிதுவென விளக்கி
நலத்தக மறையாது நன்கனம் விரித்தபின்
விளங்கொளி விமானம் வெங்கதிர்ச் செல்வன்
துளங்கொளி தவிர்க்குந் தோற்றம் போல
நாளு நாளு நன்கன மேற்றி
ஊழி னூழி னுயர வோட்டிக்
கோளுங் குறியுங் கொண்டன னாகி
முகிலுளங் கிழிய வகலப் போகி
வடக்கு மேற்கும் வானுற நிமிர்ந்து
தொடக்கொடு தொடர்ந்த தாமந் துயல்வர
ஏற்றரு மலையுஞ் செலற்கருந் தீவும்
[1] நோற்றவ ருறையு மாற்றயற் பள்ளியும்
பதினா றாயிரம் பரந்த செல்வத்து
விதிமாண் [2] டந்தை வியனா டெய்தலும்
ஐயமோ டிவனா [3] மமரரூ ராமெனக்
கைவயிற் கொண்டு காழகி னறும்புகை
பலிவீ டெய்திப் பரவுவன ளேத்துக்
கலிகொன் மன்னன் [4] கழலடிக் கணவாக்
கணையிற் றேறிக் கலந்துகண் ணுறாது
பணைவேய் மென்றோட் பதுமா தேவி
நன்னகர் குறுகலி னயந்துமுக நோக்கிப்
பொன்னிழை யிந்நகர் புகுது மோவென
வேண்டா வென்றபின் மீண்டுமேக் கோங்கி
நாளு நாளு நன்கன மோட்,

பி - ம். 1 தோற்றூ. 2 டத்தை. 3 மாரூரா மென்னக். 4 கழலடிகவர்க.

யாழின் கிழவ னிங்ஙன நினைஇ
ஊழி னூழி னுள்ள மூக்கிக்
கோளுங் குறியுங் கொண்டன னாகி
முகிலுளங் கிழிய வகல்விசும் பேறி
எழுச்சி யெல்லை முனிந்த பின்னர்
விழுச்சீர் விசும்பி னியங்குதற் கறிதலின்
மூரிப் பசும்பொன் மால்வரை கண்ணுற்
றேசனை யிழிந்து முகடுவலஞ் செய்து
துகடீர் பெருமைச் [1] சேதியந் தொழுது
விதியிற் போதன் மேவின னாகி
எறிவளி யெடுப்ப வெழுந்துநிலங் கொள்ளும்
வெதிரிலை வீழ்ச்சியின் வேண்டிடத் தசைஇ
வினைகொள் விஞ்சை வீரிய ருலகிற்
புனைவமை நகரமும் பூந்தண் காவும்
நிறைப்பருங் காட்சி யியற்கைய வாகிச்
சென்றுசே ணோங்கிய சேதி யெங்கணும்
ஒன்றே போல்வன வொருநா றாயிரம்
வந்தனை செய்குநர் பூசனைக் களரியும்
கிளர்சே ணிமயமுங் கெங்கையுஞ் சிந்துவும்
வளமலர்க் கயமு மணிநிலப் பூமியும்
மேதகு மேருவு மதன்மிசைக் காவும்
சிந்துவுஞ் சீதையுஞ் சீதோ தகையும்
அந்தமில் விதையமு மணிதிக ழந்தியும்
தேவ குருவு முத்தர குருவும்
[2] ஈரைந் திரதமு மிறுதி யாக
மனத்தினும் வளியினு மிசைப்பி னோட்டி
எச்சார் மருங்கினு மினிதி னுறையும்
[3] விச்சா தரரின் விதியினைக் காட்டி
விராய்மலர்க் கோதைய ருராஅ வூக்கமொ
டொருங்குபல கண்டு விரும்புவ னாகி
அசும்புசோர் முகிலுடை விசும்புபோழ்ந் தியங்கிய
அப்பா லெல்லை முடிந்தபி னிப்பால்
அவந்திகை நாடு மணியுஞ் சேனையும்

பி - ம். 1 சேதியன்றொழுது. 2 ஈராந்திரதமு. 3 விச்சாதிரரின்.

மலைமருங் குறையு மழகளிற் றீட்டமும்
கலைமா னேறுங் கவரியுங் களித்த
[1] அருவித் தலையு மணிமலை யிடமும்
குளிர்பொழிற் சோலையுங் குயிற்றுறைப் பரப்பும்
மயில்விளை யாட்டு மான்கண மருட்சியும்
புயல்வளம் படுக்கும் பொருவில் வளமை
அவந்தி நாடு மிகந்துமீ தியங்கித்
தண்டா ரணியமுந் தாபதப் பள்ளியும்
வண்டார் சோலையும் வளங்கெழு மலையும்
மயிலாடு சிமையப் பொதியிலு மதன்மிசைக்
குளிர்கொள் சந்தனத் தொளிர்மலர்க் காவும்
காவி னடுவண வாவியுங் கதிர்மணித்
தேவ குலனுந் தென்பா லிலங்கையும்
................காண்டகப் பொலிந்த
அராஅந் தாணமு மணிமணற் றெண்டிரைக்
குமரித் துறையு மமர்வனர் நோக்கி
விண்ணவு மலையவு மேவன பிறவும்
ஒண்ணுதன் மாத ருவப்பக் காட்டி
நற்றுணைத் தோழர் [2] நால்வருந் தானும்
பொற்றொடி மாதரும் போதுபல போக்கித்
தன்னகர்க் காகிய வருங்கலந் தழீஇ
நன்னகர்ச் செல்வமு மெலிவு நோக்கி
உரிமைத் தேவி யுறுநோய் நீக்கிப்
பொன்னகர் புக்கனன் புகழ்வெய் யோனென்.

ச—வயாத் தீர்ந்தது முற்றிற்று.

ரு—பத்திராபதி உருவுகாட்டியது.

(உதயணன் தச்சவுருவங்கொண்ட பத்திராபதியை அழைத்துக் கூறல்)

பொன்னகர் புக்கபின் புகழ்மீக் கூறி
மின்னிலங் கவிரொளி வெய்யோன் மேவும்
வைய மியற்றிய கைவினை யாளன்

பி - ம். 1 வருவிக்கலையு. 2 மூவருந்.

வருக வென்றுதா னருளொடு பணிப்ப
நயந்துவந் திறைஞ்சிய வையத் தலைவனை
வியந்த விருப்பொடு நயந்துமுக நோக்கித்
தொல்லைச் செய்த நன்னரு மறியேம்
எல்லையில் பெருந்துய ரெய்தின மகற்றினை
அரசி னாகா தானையி னாகாது
விரைசெல விவுளியொடு வெங்கண் வேழம்
பசும்பொ னோடைப் பண்ணொடு கொடுப்பினும்
விசும்பிடைத் திரிதரும் வேட்கை வெந்நோய்
பொன்னிறை யுலகம் பொருளொடு கொடுப்பினும்
துன்னுபு மற்றது துடைக்குந ரின்மையின்
உறுகண் டீர்த்தோய்க் குதவியொன் றுற்றுப்
பெறுகுவம் யாமெனப் பெயர்ப்பதை யறியேம்
நல்வினை யுடைமையிற் றொல்வினை தொடர்ந்த
எந்திரந் தந்து கடவுளை யொத்தியென்

(தச்சனுக்குச் சிறப்புச் செய்தல்)

றன்புகலந் தொழுகு மறிவிற் பின்னி
அருளுரை யளைஇப் பொருளுரை போற்றித்
தானணி பெருங்கலந் தலைவயிற் களைந்து
தேனணி தாரோன் பெருஞ்சிறப் பருள

(பத்திராபதி தன்வரலாறு கூறுதல்)

அருளெதிர் வணங்கி யதுவுங் கொள்ளான்
பொருளெனக் கென்செயும் புரவல போற்றென
என்முதல் கேளெனத் தொன்முத றொடங்கிச்
சுருங்கா [1]வாகத் தரம்பை தன்மையும்
கருங்கோட்டுக் குறவர் கணமலை யடுக்கத்
திரும்பிடி யாயங் கிற்ற வண்ணமும்

(உதயணன் எண்ணுதல்)

[2] ஒன்று மொழியாது நன்றியின் விரும்பி
மயக்குறு நெஞ்சின் மன்னவன் முன்னா
இயக்கன் கூறிய திவளுங் கூறினள்
உள்ள முருக்கு மொள்ளமர்க் கிளவி

பி - ம். 1 வாகததரமமை. 2 ஒன்றுமொழிமாது.

ஆரா வுள்ள முடையோர் கேண்மை
தீரா தம்ம தெளியுங் காலெனை

(பத்திராபதி தன் உருவத்தைக் காட்டி மீளல்)

மேனீ செய்த வுதவிக் கியானோர்
ஐயவி யனைத்து மாற்றிய தில்லென
முன்றனக் குரைத்தன முறைமுறை கிளந்து
நீயும் யானும் வாழு மூழிதொறும்
வேறல மென்று விளங்கக் கூறி
அன்றுதான் கொண்ட வுருவு நீக்கித்
தன்னம ருருவ மன்னவன் காணக்
காட்டின ளாகி வேட்கையின் விரும்பி
விஞ்சை மகளவ் விழைபிடி யாகி
எழிலி மீதாங் கினிதி னடப்ப
வளம்படு வாயினு மவள்பெயர் கொளீஇ
வாயி லாளரொடு வத்தவன் வழிபடப்
போயினண் மாதோ புனையிழை நகர்க்கென்.

ரு—பத்திராபதி உருவுகாட்டியது முற்றிற்று.

சா—நரவாணதத்தன் பிறந்தது.

(நரவாணதத்தன் பிறத்தல்)

புனையிழை தன்னகர் புக்கபி னிப்பால்
துனைசேர் நெடுந்தேர் துவன்றிய தானை
வத்தவர் பெருமகன் வானோர் விழையும்
அத்தகு சிறப்பி னவந்தியன் மடமகள்
உசாவி னன்ன நுண்ணிடை யுசாவினைப்
பேதைக் குரைப்போன் பிழைப்பிற் றாகிய
பொற்பமை சூணங்கிற் பொம்மல் வெம்முலைப்
பட்டத் தேவியைப் பதுமையி னீக்கி
முட்டில் செல்வமொடு முறைமையிற் பிழையா
தொழுகா நின்ற வழிநாட் காலைப்
பிறைபுரை திருநுத லங்கைப் பிறையின்
குறைவிடந் தீர்ந்த கொள்கை போலத்

திருவயிற்று வளர்ந்த திங்க டலைவர
ஒருமையிற் றீயவை நீங்கப் பெருமையின்
முழுநோக் காக வைம்பெருங் கோளும்
வழுவா வாழ்நாண் மதியொடு பெருக்கிப்
பெருஞ்சிறப் பயர்வர நல்கி யொழிந்துழி
நோக்கி மற்றவை யாக்கம் பெருகப்
பகைமுதல் சாயப் பசிபிணி நீங்க
மாரியும் விளையுளும் வாரியுஞ் சிறப்ப
வழுக்கா வாய்மொழி வல்லோர் வாழும்
விழுத்தகு வெள்ளி வியன்மலை விளங்கத்
திருத்தகு தேவி வருத்த மின்றிப்
பொய்கைத் தாமரைப் பூவி னுறையும்
தெய்வத் திருமகள் சேர்ந்துமெய் காப்பப்
பொய்யில் பொருளொடு புணர்ந்த நாளாற்
றெய்வ விளக்கந் திசைதொறும் விளங்க
ஐவகைப் பூவும் பல்வகை பரப்ப
மதியுறழ் சங்க நிதியஞ் சொரிய
அந்தர விசும்பி னாழிக் கிழவன்
வந்துடன் பிறந்தனன் பிறந்த பின்றைச்

(பிறந்தநாட் சிறப்புக்கள்)

சிறந்தோர் நாப்பட் சேதியர் பெருமகற்
கறஞ்சேர் நாவி னவந்திகை திருவயிற்
றரியவை 1 வேண்டிய வசாவொடு தோன்றிப்
பெரியவ ரேத்தப் பிறந்த நம்பிக்
குதையண குமரன் றுதைதார்த் தோழரும்
அகனம ரவையு மைம்பெருங் குழுவும்
நகரமு நாடுந் தொகைகொண் டீண்டி
ஆயுட் டானம் யாவையென் னாது
மேயவை யெல்லாங் காவலன் வீசி
முத்துமணற் பரந்த நற்பெருங் கோயில்
முற்றந் தோறு முழங்குமுர சியம்பப்
பொலிகெனு மாந்தர்க்குப் பிறங்கடை தோறும்
மலிபொன் மாசையு மணியு முத்தும்

பி - ம். 1 வேண்டியசாவொடு.

ஒலியமை தாரமு மொளிகால் கலங்களும்
கோடணை யியற்றிக் கொடையொடு புரிகென
ஆய்புகழ் வேந்த னேயின னாகிக்
கொலைச்சிறை விடுக தளைச்சிறை போக்குக
கொற்றத் தானையொடு கோப்பிழைத் தொழுகிய
குற்ற மாந்தருங் கொடிநகர் புகுதுக
அருங்கடி நகரமு நாடும் பூண்ட
பெருங்கடன் விடுக விருங்கடல் வரைப்பின்
நல்குர வடைந்த [1] நசைசா லாடவர்
செல்ல நீரவந் துள்ளியது கொள்க
பொருந்தா மன்னரும் பொலிகெனுங் கிளவி
பெருந்திறை யாக விரைந்தனர் வருக
நிலைஇய சிறப்பி னுட்டுளுங் காட்டுளும்
கொலைவினை கடிக கோநக ரெல்லாம்
விழவொடு புணர்ந்த வீதிய வாகெனப்
பெருங்கை யானைப் பிணரெருத் தேற்றி
இருங்க ணதிரப் பொற்கடிப் போச்சிப்
பெருங்கண் வீதிதொறும் பிறபுல மறிய
இன்னிசை முரச மியமர மெருக்க
மன்னிய சும்மையொடு மகாஅர் துவன்றி
வல்லோர் வகுத்த மாடந் தோறும்
நல்லோ ரெடுத்த பல்பூம் படாகை
ஈர்முகி லுரிஞ்சி யெறிவளிக் கெழாஅச்
சீர்மைய வாகிச் சிறந்துகி லெழுந்த
நேர்துகி ளவித்து நிரந்துடன் பொலிய
மையார் யானை மன்னிரொடு மயங்கி
நெய்யாட் டரவமு நீராட் டரவமும்
மறப்போ ருதயணன் மகிழ்ந்த பின்னர்ப்

(சாதகர்மம்)

பிறந்த நாளும் பெற்ற மூர்த்தமும்
சிறந்த நற்கோ ளுயர்ந்துழி நின்று
வீக்கஞ் சான்றதும் விழுப்ப மருத
ஆக்கஞ் சான்ற வாருயி ரோகையும்

பி - ம். 1 நகைசால்.

நோக்கி யவரு நுகருஞ் செல்வத்
தியாண்டுந் திங்களுங் காண்டகு சிறப்பிற்
பக்கமுங் கோளு முட்கோ ளாஇ
இழிவு மிவையென விசைய நாடி
வழியோ ரறிய வழுவுத லின்றிச்
சாதகப் பட்டிகை சாலவை நாப்பண்
அரும்பொறி நெறியி னாற்ற வமைத்த
பெருங்கணிக் குழுவுக்குப் பெறுதற் கொத்த
ஈரெண் கிரிசை யியல்புளி நடாஅய்

(யாவருக்கும் பரிசளித்தல்)

ஆரிய லமைநெறி யாசான் றன்னுரை
ஏத்திய லாளருங் கூத்தியர் குழுவும்
கோயின் மகளிருங் கோப்பெரு முதியரும்
வாயின் மறவருஞ் சாயாச் செய்தொழிற்
கணக்கருந் திணைகளுங் காவிதிக் கணமும்
அணித்தகு மூதூ ராவண மாக்களும்
சிறப்பொடு புணரு மறப்பெருங் குழுவும்
ஏனோர் பிறர்க்கு மிவையென வகுத்த
அணியு மாடையு மணியு நல்கித்

(உதயணன் தன் தம்பி முதலியோர்க்குச் செய்திகூறி விடுத்தல்)

தணியா வின்பந் தலைத்தலை பெருகத்
தம்பியர் தமக்குந் தருசகன் றனக்கும்
நங்கையைப் பயந்த நலத்தகு சிறப்பின்
உரத்தகு தானைப் பிரச்சோ தனற்கும்
உவகை போக்கி யூகியும் வருகெனத்
தவிர்வில் செல்வந் தலைவந் தீண்ட
ஆசான் முதலா வந்த னாளரும்
மாசில் வேள்வி மகிழ்ந்தனர் தொடங்கி
ஏனை வகையின் மேனிலை திரியாது
பன்னிரு நாளும் பயத்தொடு கழிப்பிப்

(பெயரிடல்)

பெயர்நிலை பெறீஇய பெற்றி நாடி
உயர்நிலை யுலகி னுலோக பாலன்

நயமிகு சிறப்பொடு நகர்மிசைப் பொலிந்த
பலர்புகழ் செல்வன் றந்தன னாதலின்
உருவாண மாகிய வோங்குபுகழ்ச் செல்வன்
நரவாண தத்த னென்றுபெயர் போக்கி

(உருமண்ணுவா முதலியவரின் புதல்வர்களுக்குப் பெயரிடல்)

உறுவிறற் றானை யுருமண் ணுவாவும்
அறிநரை வழிபட் [1] டன்றே பெயர்தலின்
....
பொருவின் மாக்கள் பூதியென் றுரைஇ
ஒழிந்த மூவ ருருவார் குமரருட்
கழிந்தோ ரீமத்துக் கட்டழல் சேர்ந்த
[2] கரியக லேந்திக் காவயிற் பெற்றோன்
அரிசிக னாகப் பெயர்முதல் கொளீஇப்
பயந்தலை நிற்கும் பல்கதிர்ச் செல்வன்
நயந்துதரப் பட்டோன் [3] றவந்தக னாமெனத்
தாயர் போலத் தக்கது நாடிய
ஆவழிப் படுதலி னாகிய விவனே
கோமுக னென்று குணங்குறி யாக
மற்றவர் மகிழ்ந்து.......................

(நகரமாந்தர் மகிழ்ந்து கூறல்)

.........................தொன்னக ராளரும்
பெற்றனம் பண்டே பெருந்தவ மென்மரும்
இன்னோ ரன்ன வெடுத்துரை சொல்லித்
தன்னோ ரன்ன தன்மைய னாகி
மதலை மாண்குடி தொலைவழி யூன்றும்
புதல்வற் பெற்றா னெனப்புகழ் வோரும்
உதவி நண்ணரு முதயண குமரன்
போகமும் பேரும் புகழ்மேம் பட்டதும்
ஆகிய வறிவி னரும்பெறற் சூழ்ச்சி
யூகியி னன்றோ வெனவுரைப் போரும்
குறிகோட் கூறிய நெறிபுகழ் வோரும்
வெண்முகி லொழுகிய வெள்ளியம் பெருமலை

பி - ம். 1 டன்றுபெற்றோற்குப். 2 கரிகாலேந்திக். 3 நலப்பந்தக.

* ௯௮

உண்முத லுலகிற் கொருமீக் கூறிய
தெய்வ வாழி கைவலத் துருட்டலும்
பொய்யா தாத லுறுபொரு ளென்மரும்
இவையும் பிறவு மியைவன கூறி
நகரத் தாளரொடு நாடுபுகழ்ந் தேத்த
நிகரில் செல்வத்து நிதியந் தழீஇ
யாப்புடை மகன்வயிற் காப்புடன் புரிகென
விதியறி மகளிரொடு மதிபல நவின்ற
மருந்துவகுப் பாளரைப் புரந்துறப் பணித்துத்
தளர்வி லூக்கந் தலைத்தலை சிறப்ப
வளரு மாதோ வைகலொறும் பொலிந்தென்.

ரு—நரவாணதத்தன் பிறந்தது முற்றிற்று.

எ—யூகி பிரச்சோதனனைக் கண்டு வந்தது.

(பிரச்சோதனன் நரவாணதத்தன் பிறந்ததை அறிதல்)

பொலிந்த செல்வமொடு புகழ்மீக் கூரி
மலிந்த திருவின் வத்தவர் பெருங்குடி
உண்மகி ழுவகை யூக்க மிமிழப்
பண்மகிழ் பேரியாழ் பயிற்றிய கேள்வி
உலைவில் வென்றி யுதயண குமரற்கு
நலமிகு புதல்வ னன்னாட் பிறந்த
உகவை மாற்ற முஞ்சையம் பெருநகர்ப்
பகையடு வேந்தற்குப் பணிந்தன னுரைப்பத்
தன்மைக் கேற்ற தலைப்பே ரணிகலம்
புன்மை தீர முன்னிலை நல்கிப்
பழன மணிந்த பதினா றாயிரம்
கழனி நன்னகர் கலக்க மில்லன
மன்ன னருளி மன்னரு மறவரும்
இன்னே வருகென் றியமர மறைகென
முறைசெறி முதியற்குப் பெறுவன நல்கி
விரைசெல லிவுளி வேந்த னேவ

(முரசறைதல்)

ஓடை யணிந்த வொண்பொ னெற்றிக்
கோடுடை வேழம் பாடுபெறப் பண்ணி
எருத்தின் மீமிசைத் திருத்தக விரீஇத்
துகின்மடி யணைமிசைத் துளக்க மின்றிப்
பாற்படு வென்றி நாற்புடை மருங்கினும்
கண்டோர் விழையுந் தண்டாக் கோலமொடு
நீத்தியாற் றன்ன நெடுங்கண் வீதியுட்
போத்தர வமைந்து புகுவழி யெல்லாம்
கனைபொற் கடிப்பிற் காண்டக வோச்சிப்
புனைபொற் பூந்தார்ப் புரவலன் காக்கும்
கன்னி மூதெயி னன்னகர் கேட்ப
மதிமரு ணெடுங்குடை மறமாச் சேனற்குப்
பதினா றாயிரம் பட்ட மகளிருள்
முதற்பெருந் தேவி திருநா ளீன்ற
மதுக்கமழ் கோதை வாசவ தத்தை
வடதிசை மீனிற் கற்புமீக் கூறி
வடுவில் செய்தொழில் வத்தவர் பெருமகன்
குறிப்பறிந் தொழுகிக் கோடாக் குணத்தொடு
பொறிப்பூண் மார்பிற் புதல்வற் பயந்தனள்
கோமகற் பெற்று..............................
சேய்முதல் வந்த சிறப்பின ராகி
.....................யக்கடம் பூண்டபின்
வருபரி சார மணிநீர்ப் பேரியாற்
றிருகரை மருங்கினு மிங்கில மேத்தச்
சீர்மையொடு பொருந்திச் சிறப்பு முந்துறீஇ
அறிவி னமர்வார் நெறிமையிற் றிரியா
இருபான் மாக்களு மொருபாற் றிருந்த
ஊர்திரை நெடுங்கட லுலப்பி னாளொடு
வாழ்கநங் கோமான் வையக மெல்லாம்
பகையும் பிணியும் பசியு நீங்கித்
தகையுஞ் செல்வமுந் தாம்படு கென்ன
மிகைபல புகழ்ந்து தொகைஇ யாற்றிய
இன்ப மொழியவன் பன்முறை யறைந்தபிற்

(நகரை அலங்கரித்தல்)

....................யொண்புக ழுவந்தன ரேத்தி
வரைநிரைத் தன்ன மாடந் தோறும்
திரைநிரைத் தன்ன படாகையுங் கொடியும்
காட்சிக் காகா மாட்சிய வாகி
அணிபெற வுயரிப் பணிவிலர் மறல
இந்திர வுலக மிழுக்குபு வீழ்ந்து
வந்திருந் தன்றெனக் கண்டவ ரேத்த
வேனல வேந்தன் விழுப்பெருங் கோயிலுட்
பன்னூ றுயிரம் பண்முர சார்ப்ப

(பிரச்சோதனன் விழாக்கொண்டாடல்)

நன்னீர் விரவிய செந்நிறச் சுண்ணம்
குலநல மகளிரொடு கோமக ளாடி
ஐந்நூற் றிரட்டி யருங்கடை தோறும்
பசும்பொன் மாசையும்....................
பிடிப்புவிலை யறியாப் பெருங்கல முட்படக்
கொடித்தேர் முற்றத்துக் குறையுடை யோர்கட்
கீகென வருளி யெண்டிசை மருங்கினும்
ஆய்படை வேந்தற் கரும்பெறற் றிருமகள்
வாசவ தத்தை தீதில் சிறப்பொடு
புத்திரற் பெற்றனள் பொலிவு முந்துறீஇ
மொய்த்த மாநகர் முறைமுறை வருகென
அதர்கடி தோடுறு மமைதி யாளரைப்
பொறியொற் றோலையொ டறியப் போக்கி
ஆராக் காதலொ டணிபா ராட்டி
நீராட் டயர்ந்து பல்கல னணிந்து
சீரார் செல்வமொடு செவ்வி கொடீஇத்
தெரிமா ணாளர் திறவதிற் சூழ
அரிமா சுமந்த வாசனத் திருந்து

(யூகியைப் பிரச்சோதனன் வருவித்தல்)

பொன்றுப் புகழோன் போக்கல் வேண்டி
ஒன்று ரட்ட யூகியைத் தரீஇ
இன்றியா னெய்தினெ னெனின்............

பிரச்சோ தனனவ னுரைத்ததன் பின்னர்ப்

(யூகியும் சாலங்காயனும் தர்க்கஞ்செய்தல்)

பாற்பட் டெய்திய பதினா றுயிரம்
தூப்பா லமைச்சர் மேற்பா லறிவிற்
றலைக்கை யாகிய நலத்தகு நாட்டத்து
ஞாலம் புகழுஞ் சாலங் காயன்
ஏற்ற சிறப்பி னியூகி தன்னொடு
மாற்றங் கொடுத்தல் வலித்தன னாகி
முதல்வன் செவ்வி [1] முகமுத னோக்கிச்
சிதைபொரு ளின்றிச் செந்நெறி தழீஇ
உதையத் திவரு மொண்சுடர் போல
எல்லா மாந்தர்க்கு மிருளற விளங்கும்
செல்லா றிதுவெனச் சொல்லுதல் வேண்டிச்
சாலவை நாப்பட் சலத்திற் றீர்ந்த
கேள்வி யாளரை வேறுதெரிந் தமைத்து
வாதம் வேண்டிய சாலங் காயன்
மாற்றம் பகுத்தற் காற்றி னாடி
மேற்கொண் டுரைக்கு மெய்த்துறை மருங்கின்
னூற்பாற் றழீஇய குற்ற மிவையெனக்
கேட்டோர் மனமுணக் கிளந்தவன் கடாவ
மெய்த்தகு நுண்பொருண் மெத்தப் பன்னி
உத்தர வாக்கியம் யூகியு நிறீஇக்
கழிபே ருவகையொடு காவல் வேந்தன
ஒழிக நாமிவற் காற்றே முரையெனச்
சாலங் காயனைத் தோல்வினை யேற்றி
உரைத்த கிளவிக் கொன்றே போல
விரித்துப்பல குற்றம் விளங்கக் காட்ட

(பிரச்சோதனன் யூகியின் விசேடகுணங்களை வியத்தல்)

ஏற்ற முகத்தி னிறைவனும் விரும்பி
நண்பின் மாட்சியுங் கல்விய தகலமும்
பண்பின் றொழிலும் படைத்தொழின் மாண்பும்
காயு மாந்த ராயினும் யாதும்

பி - ம். 1 முகமுகநோக்கிச்.

தீயவை கூறப் படாத திண்மையும்
இவற்கல தில்லை யிவனுற் பெற்ற
அவற்கல தில்லை யரசின் மாட்சியென

(பிரச்சோதனன் யூகிக்குச் சிறப்புச் செய்தல்)

மன்னிசை நிறீஇய நன்ன ராளனொடு
நுண்ணெறி நுழையு நூற்பொரு ளொப்புமைத்
தன்வயின் மக்களை யவன்வயிற் காட்டி
வேண்டற் பால வெறுக்கை நாடி
வேண்டா ரட்டோன் வேண்டா னாயினும்
அற்பிற் பிணித்த வருண்மறுப் பரிதா
நற்பல கொடுத்து நம்பி பிறந்த
திருநாட் டானம் பெருநாட் காலை
ஏற்போர்க் கீக வின்றே போன்மெனக்
கோப்பெருங் கணக்கரைக் குழுவிடை விளங்கக்
கடைப்பிடி நுகும்பினு ளிடைப்பட வெழுதுகென்
றியூகியு முணர வேயின னாகிப்

(யூகிக்கு இருவரை மணம்புரிவித்தல்)

பாதகன் றங்கை பரந்தரி சிந்திய
மதரரி மழைக்கண் மடம்படு காரிகைத்
திலகமா சேனையென் றுலகறி பவளையும்
சாலங் காயற் கிளையோ ளாகிய
நீல வுண்க ணிலவுவிடு கதிர்நுதற்
பாக்கிய மமைந்த பார்ப்பியாப் பினையும்
ஆகிய வறிவி னரும்பொருட் கேள்வி
யூகிக் கீத்துப் பாகுபட லின்றி
யாதே யாயினு மாகவினி யெனக்கென
மாதாங்கு திண்டோண் மகிழ்ந்தன னேக்கி

(பிரச்சோதனன் யூகியைப் பாராட்டல்)

அங்கண் ஞாலத் தரசிய லமைதி
எங்கட் கெல்லா மின்றி யுதயணன்
தன்கட் டங்கிய தகைமை நாடின்
நின்கண் மாண்பி னெடுமொழி யாள
ஆயிற் றென்றுபல வருளொடும் புணர்ந்த

யூகிக் குரையா வொருங்குட னிழற்றிப்
....
கனவினு நனவினு மின்ப மல்லது
நுனைவேற் றடக்கைநம் புனைமுடி வேந்தன்
காணலன் கண்டோர் மாணல மியைந்த
நல்வினை யுடையன் பெரிதெனப் பல்லோர்
இகழ்தல் செல்லார் புகழ்வனர் புகன்று
வாசவ தத்தையும் வத்தவ மன்னனும்
ஏசினன..............................
நவிற்றொறு மினிய ஞானம் போலப்
பயிற்றொறு மினியநின் பண்புடைக் கிழமை
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள மின்புறப்

(யூகியை விடுத்தல்)

பிரிவுறு துன்ப மெம்மாட் டெய்த
எரியுறு நெடுவே லேய ரிறைவன்
வருக வென்றனன் சென்மதி நீயெனப்
பருகுவனன் போலப் படைப்பெரு வேந்தன்
அவணே யிருப்ப னிவணே னெனவே
கருதல் வேண்டுமெனக் கைவிரல் பற்றி
விடுக்கும் பொழுதி னெடுத்தவ னின்னோர்
உண்டோ வொழுக்கி னென்றுபின் விடுப்ப
அருங்கலம் பிறவு மொருங்கு முந்துறீஇ
வேந்துறை முதுநகர் வியன்மலை யாகப்
போந்துகடன் மண்டும் புண்ணிய நீர்த்துறைப்
பேரியா றென்ன வார்பெருஞ் செல்வமொடு
நன்ப னாட்டகம் பின்பட நீந்தி
வளங்கவி னெய்திய வத்தவ னிருந்த
நலம்பெறு நகரம் புக்கன னினிதென்

எ—யூகி பிரச்சோதனனைக் கண்டு வந்தது முற்றிற்று.

அ—மதனமஞ்சிகை வதுவை.

(யூகி உதயணனுக்குக் கூறல்)

நலம்பெறு நகரம் புக்கன னாகி
நிலம்பெறு திருவி னெடுமுடி யண்ணலைக்
கண்டுகண் கூடிக் கழலுறப் பணிந்து
மண்டமர்க் கடந்த மறமாச் சேனன்
உள்ளத் தன்ன வுவகைசெய் தனவும்
வள்ளற் றனமும் வகுத்தனன் கூறி
அவந்தி நாடு மணியுஞ் சேனையும்
இயைந்து முந்துறீஇ யிருபாற் குலனும்
தெம்மு னிழியாத் தெளிவிடை யாகச்
செம்மையிற் செய்த செறிவுந் திண்மையும்
நம்பிக் கீத்த நன்புகழ் நாடும்
இன்னவை யென்று பன்முறை பயிற்றி

(உதயணன் செயல்)

நாட்டு வாயுளுங் [1] காட்டு வாயுளும்
காத்த லின்றிப் பாத்த னன்றெனத்
தாமுடை நாடு நகரமுந் தரீஇ
வாய்முறை வந்த வழக்கியல் வழாமை
ஏட்டுமிசை யேற்றி யியல்பினின் யாப்புறுத்
தாற்றல் சான்ற வரும்பெறற் சுற்றமொடு
கூற்றமும் விழையக் கோலினி தோச்சிக்
கோட்ட மின்றிக் குடிபுறங் காத்து
வாட்டொழிற் றானை வத்தவர் பெருமகன்
அன்புடைத் தோழரோ டின்புற் றொழுகச்
சிறந்த திருவொடு செல்வம் பெருகப்
பிறந்த நம்பி திறங்கிளந் துரைப்பேன்

(நரவாணதத்தனுடைய இளமைப் பருவம்)

குலக்குவிளக் காகத் தோன்றிக் கோலமொடு
நலத்தகு சிறப்பி னல்லோர் நாப்பண்
இலக்கணம் பொறித்த வனப்புடை யாக்கையன்

பி-ம். 1 கோட்டு.

விசும்பிற் கவாவும் வேட்கைய னாகிப்
பசும்பொற் பல்படை யிலங்குங் கழுத்தினன்
திருவா ளுய தேங்கமழ் மார்பன்
நரவாண தத்த னொடொரு நந்தி
உலம்பொரு மார்பி னுதயண குமரன்
நலம்பெறு தோழர் நால்வரும் பெற்ற
வலம்பெறு சிறப்பின் வனப்பொடு புணர்ந்த
நலம்பெறு கோமுக னும வரிசிகன்
தகைமிகு பூதி தவந்தக னென்னும்
நன்ன ரமைந்த நால்வருஞ் சூழத்
தளர்நடைக் காலத் திளமை யிகந்து
நல்லா சாரமொடு நல்லோர் காட்ட
நற்பொருண் ஞான நவின்றுதுறை போகி
விற்பொரு ணன்னூல் விதியி னுனித்துப்
படைக்கலக் கரணம் பல்வகை பயிற்றிக்
கொடைக்கடம் பூண்ட கொள்கைய னாகிக்

(நரவாணதத்தனது கௌமாரப் பருவம்)

குறைவில் செல்வமொடு குமார காலம்
நிறையுற வுய்த்து நீர்மையின் வழாஅ
ஏமஞ் சான்ற விந்நில வரைப்பிற்
காம னிவனெனக் கண்டோர் காமுறத்
தாளுந் தோளுந் தருக்கி நாளும்
நடவா நின்ற காலை மடனார்ந்

(கணிகையர் இயல்பு)

தீற்று மந்தி யிற்றெழு பூங்கொடி
புற்புல முதிரக நற்றுற விக்கே
போல்வ ரென்னுஞ் சால்புடை யொழுக்கிற்
கலைதுறை போகிய கணிகா சாரத்துப்
பலதுறை பயின்று பல்லுரைக் கேள்வியொடு
படிவங் குறிக்கும் பாவனை மேற்கொண்

(கலிங்கசேனை)

டடிமையிற் பொலிந்த வகன்பரி யாளத்துத்
தலைக்கோற் சிறப்பி னலத்தகு மகளிர்

* சூகூ

ஆயிரத் திரட்டி யைந்நூற் றுவர்களுட்
காசில் சிறப்பிற் கலிங்க சேனையென்
றோசை போகிய வொளியின ளாகிய

(மதனமஞ்சிகை பந்தாடுகையில் பந்து கீழே விழுதல்)

மாசில் கற்பின் மடமொழி மடமகள்
வானோ ருலகி னல்லது மற்றவட்
கீனோ ருலகி னிணைதா னில்லெனக்
கண்டோ ராயினுங் கேட்டோ ராயினும்
தண்டாது புகழுந் தன்மைய ளாகித்
துதைபூங் கோதை சுமத்த லாற்றா
மதர்மா னோக்கின் மாதரஞ் சாயற்
பதரில் பணிமொழிப் பணைத்தோட் சின்னுதல்
மதர்வை நோக்கின் மதனமஞ் சிகைதன்
மலைபுரை மாடத் துயர்நிலை மருங்கின்
அணிச்சா லேகத் தணித்தகு துளையூ
டெறிபந் திழுக்குபு விழுதலி னோக்கிச்

(நரவாணதத்தன் உலாவரல்)

செறிவளைத் தோளி செம்முக மாக
வேகத் தானை வேந்த னொருமகன்
போகுகொடி வீதியிற் புகழ்ந்துபல ரேத்த
அருவரை மருங்கி னருவி போல
இருகவுண் மருங்கினுஞ் சொரிதரு கடாத்ததோர்
இடுமணி யானை யெருத்த மேறிப்
படுமுகின் மீமிசைப் பனிமதி போல
உலாவெனப் போந்தோ னிலாவீற் பூந்துகிற்

(நரவாணதத்தன் மதனமஞ்சிகையைக் கண்டு விரும்பல்)

றானைப் படுதலிற் றானே கொண்டிஃ
திட்டோ ளார்கொலென் றெட்டி நோக்கினன்
நிறைமதி வாண்முகத் துறழ்வன போல
நீளரி யொழுகி நிகர்தமக் கில்லா
வாள்புரை தடங்கண் வலைத்தவள் வாங்கி
நெஞ்சகம் படுப்ப வெஞ்சின வீரன்
அறியா மையின் மறுகுறு சிந்தையன்

பந்துவலி யாகப் பையெனப் போகியோர்
அந்தண் காவினு ளசைந்தன னிருந்து

(நரவாணதத்தன் கோமுகனை வினாதல்)

கொய்மலர்ப் படலைக் கோமுகற் கூஉய்க்
கைபுனை வனப்பிற் கணிகையர் சேரியிற்
செய்பந் தீதுடைச் சேயிழை மாதரை
ஐய மின்றி யறிதி யாயின்
மெய்பெற வுரையென மேயினன் வினவக்

(கோமுகன் மதனமஞ்சிகையின் உருவத்தை எழுதுதல்)

கையிற் கொண்டோன் கண்டன னதன்மிசை
ஒற்றிய வொற்றைத் தெற்றெனத் தெரிந்து
நறுவெண் சாந்தம் பூசிய கையாற்
செறிவுறப் பிடித்தலிற் செறிவிர னிரைவடுக்
கிடந்தமை நோக்கி யுடங்குணர் வெய்தி
விரலும் விரலிற் கேற்ற வங்கையும்
அங்கைக் கேற்ற பைந்தொடி முன்கையும்
முன்கைக் கேற்ற நன்கமை தோளும்
தோளிற் கேற்ற வாளொளி முகமும்
[1] மாப்படு வடுவுறழ் மலர்நெடுங் கண்ணும்
துப்பன வாயு முத்தொளி முறுவலும்
ஒழுகுகொடி மூக்கு [2] மெழுதுநுண் புருவமும்
சேடமை செவியுஞ் சில்லிருங் கூந்தலும்
ஒல்குமயி ரொழுக்கு மல்குற் பரப்பும்
மருங்கி னீளமு நிறங்கிளர் சேவடித்
தன்மையு மெல்லா முன்முறை நூலின்
அளந்தனன் போல வளம்பட வெழுதிப்
பாவை யிலக்கணம் பற்றி மற்றதன்
நிறமு நீளமும் பிறவுந் தெரியாச்
செறிதா ளண்ணலைச் செவ்வியின் வணங்கி
இதன்வடி வொப்போ ளிந்நகர் வரைப்பின்
மதன மஞ்சிகை யாகுமென வலித்துப்

பி - ம். 1 மாம்படு. 2 மெழுது நன்புருவம்.

(கோமகன் மதனமஞ்சிகை வீடு சென்று பரிசங்காட்டல்)

பந்துணைக் கொண்டு மைந்தன் போகிக்
காழார் வனமுலைக் கணிகையர் சேரித்
தோழ னுள்ளத் தாழ்நனி கலக்கிய
மாதர் மனைவயிற் றாதுவ னாகிப்
பல்காற் சென்று மெல்லெனச் சேர்ந்து
குறிப்புடை வெந்நோய் நெறிப்பட நாடிய
பாசிழை நன்கலம் பரிய மாக
மாசில்பந் தறிவு படுமேல் வைத்தாண்
டூன்ற தாய்முதற் றோன்றக் காட்டிப்

(பரத்தையர் செயல்)

பட்டது கூறலி னொட்டிய வுவகையள்
வழிபடு தெய்வம் வரந்தரு கின்றென
மொழிவன ளாக முகத்தின் விரும்பித்
தாயுந் தவ்வையுந் தம்மொடு பயின்ற
ஆய்வளை மகளிரு நிகழ்ந்ததை யறிந்து
சீரின மதித்துச் சிற்றின மொரீஇப்
பேரினத் தவரொடு பெருங்கிளை பிரியாத்
தலைக்கோன் மகளிர் தன்மை கூறிக்
கற்கெழு கானவன் கைக்கோ லுமிழ்ந்த
எற்படு சிறுதீ யெழுச்சியிற் காமம்
மிகுமனத் துவகையி னெல்லை விரும்பம்
முறையின் முறையின் முறுக மூட்டிக்
கொடித்தேர்க் கோமான் குறிப்பி னல்லதை
அடித்தியை யருளுதல் யாப்பின்றெமக்கெனப்
படிற்றுரை மகளிர் பரிய மறுப்ப

(கோமகன் கூறல்)

இருங்கண் வையகத் தேந்தலு முரியன்
மருந்தேர் கிளவி மதனமஞ் சிகைதன்
காமரு நோக்கங் காணக் கூடும்
ஏம வைக லியல்வதா மெனினென்னை

(உதயணன் மதனமஞ்சிகைக்குப் பொன் விடுத்தல்)

அன்றுணை நில்லாது சென்ற வுள்ளமொடு

பகன்மதி போலப் பசந்த குமரன்
இகன்மிசை யுள்ளத் தெவ்வங் கேட்டுத்
தலைப்பெருந் தேவியுந் தந்தையுங் கூடிக்
குலப்பெருந் தேவியாக் கோடி விழுநிதி
சிறப்பின்விட் டிருந்து நலத்தகு கிழமைக்
கியாவரு முரியோ ரிவளி னில்லெனக்
காவல் வேந்தன் காணங் காண்டலின்

(நரவாணதத்தன் மணம்)

உறாஅர் போல வுற்ற காதலொடு
மறாஅ மாதர் வதுவை வலித்தபின்
மதிபுரை முகத்தியை மன்னவ னொருமகன்
வதுவைச் செல்வமொடு வான்றோய் வியனகர்
விதியி னெய்தி விழவு முந்துறீஇப்
பதனறிந்து நுகருமாற் பண்புமிகச் செறிந்தென்.

அ—மதனமஞ்சிகை வதுவை முற்றிற்று.

௯—மதனமஞ்சிகை பிரிவு.

(திருவிழா)

பதனறிந்து நுகரும் பருவத் தொருநாட்
கோல நீண்மதிற் கொடிக்கோ சம்பி
ஞால மெல்லா நயந்துடன் காண
முழவொடு பல்லிய மூன்றிற் றதும்ப
விழவொடு பொலிந்த வழகிற் றாகித்
திசைதிசை தோறுந் திருக்கண் கூடிய
வசையறு திருநகர் வந்துடன் றுவன்றிப்
பொன்றா வேட்கைப் புலங்களை நெருக்கி
வென்றா ராயினும் விழையும் விழவணி
காணும் வேட்கையொடு சேணுய ருலகிற்
றேவ கணமும் மேவர விழிதர
விறல்கெழு சிறப்பின் விச்சா தரரும்
இறைகொண் டிழிதர விப்பாற் சேடியின்

(மானசவேகன் வருதல்)

நுணங்குவினை விச்சையொடு நூற்பொரு ணுனித்த
மணங்கமழ் நறுந்தார் மானச வேகனென்
றாற்றல் சான்ற நூற்றொரு பதின்மர்
அரைச ருள்ளு முறைசெல விளங்கிய
மின்னார் மணிமுடி மன்னனு மிழிந்து

(மானசவேகன் கண்டகாட்சி)

பத்திப் படாகையும் பல்பூங் கொடியும்
சித்திரித் தெழுதிய வித்தக விமானமும்
இருநிலத் தியங்கு மியந்திரப் பாவையும்
அருவினை நுட்பத் தியவனப் புணர்ப்பும்
பொத்தகை யானையும் பொங்குமயிர்ப் புரவியும்
சித்திர மாலையு மக்கடந் தொட்டிலும்
வெண்டா ரொழுக்கும் விளக்குறு பூதமும்
தெரிவுற லரிய பலகலக் குப்பையும்
கைந்நிமிர் விளக்கு..........................ம்
எண்ணரும் பல்பொறி யெந்திரப் பொருப்பும்
வண்ண.......................................களும்
கண்ணு ளாளர் கைபுனை கிடுகும்
நாடு நகரமு மாடுநர் பாடுநர்
ஆடலும் பாடலு மன்னவை பிறவும்
கூடிக் காணு மாடத் தோங்கிய
தண்கோ சம்பிப் பெண்சன நோக்கி
விண்மிசை யவரும் விழையுங் காரிகை
மண்ணியன் மகளிரு ளுளள்கொன் மற்றெனச்
சேணெடுந் தெருவுஞ் சிற்றங் காடியும்
நாணொடு புணர்ந்த நலம்புணர் மகளிர்
நெரியுந் தெருவு நிரம்பிய மறுகும்
மன்றமுங் கோணமுஞ் சென்றுசென் றுலாஅய்
யாறுகிடந் தன்ன வீறுசால் வீதிதொறும்
ஆனாது திரிதரு மானச வேகன்

(மானசவேகன் மதனமஞ்சிகையைக் காணல்)

கோலக் கோயிலு நால்வகை நிலனும்
புடைசூழ் நடுவட் பொன்மலர்க் காவின்

இடைசூ ழருவி யேந்துவரைச் சென்னி
ஆய்மயி லகவு மணிச்சுதைக் குன்றின்
மீமிசை மருங்கின் மின்னென நுடங்கிப்
பழவிறன் மூதூர் விழவணி நோக்கி
மும்மணிக் காசும் பன்மணித் தாலியும்
பொன்மணிக் கொடியும் பூணுஞ் சுடர
மதன மஞ்சிகை நின்றோட் கண்டு
சென்றன னணுகி நின்றினி து நோக்கி
வெள்ளி விமானம் விதிர்விதிர்த் தேறி
வள்ளி மருங்கி னொள்ளிழை யேழையைக்
கச்சார் வனமுலை விச்சா தரியே
ஆவளென் னு மையமோ டயலோர்
தேவ மாடஞ் சேர்ந்தன னிருந்து

(மதனமஞ்சிகை பூதவடிவமொன்றைக் கண்டு அஞ்சுதல்)

வருவோர்ப் பற்றி வாங்குபு விழுங்கும்
இனைய நுட்பத் தியவன ரியற்றிய
பெருவலிப் பூதத் துருவுகண் டுணரார்
இன்னுயி ருண்ணுங் கூற்ற மிதுவெனப்
பொன்னிழை சுடரப் பொம்மென வுராஅய்
மைகொள் கண்ணியர் வெய்துயிர்த் திரிய
மாவீ ழோதி மதனமஞ் சிகையும்
ஏயென வஞ்சுஞ் சாய னோக்கி

(மானசவேகன் எண்ணுதல்)

விச்சை மன்ன னச்சுவன னாகி
விறல்கெழு விஞ்சையர் வெள்ளியம் பெருமலை
இறைகொண் டிருந்த வெழிலுடை மகளிருள்
யாவரு மில்லைமற் றிவளோ ரனையார்
யாவ ளாயினு மெய்துவென் யானென
ஒருதலை வேட்கை யுண்ணின் று நலியப்
பெருவினை விச்சையிற் றெரிய நோக்கி

(நரவாணதத்தனும் மதனமஞ்சிகையும் இன்புறுதல்)

உயர்நிலை யுலகத் தவரும் பிறரும்
மேனிலை யுயர்ச்சியின் மெய்யா மதிக்க

வளமை நன்னிலத் திளமுளை போந்து
கல்வி நீரிற் கண்விட்டுக் கவினிச்
செல்வப் பல்கதிர் செறிந்துவனப் பேறி
இன்பம் விளைந்த நன்பெரு நெல்லின்
ஆண மடையிற் காண்வரப் பற்றித்
துப்புர வடிவி........தோயினும்
வேட்கை நாவின் விருப்பொடு சுவைக்கும்
மாற்ற வில்லா மனத்தின ராகி
வலியும் வளமையு....க்கு........யும்
பொலிவும் புகழும் பொருந்திய சிறப்பிற்
குவம மாகு முதயண னொருமகன்
அவமில் சூழ்ச்சி யாய்தா ரண்ணலும்
ஆணு முட்கு மச்சமும் பயிர்ப்பும்
பேணுங் கோலமும் பெருந்தகைக் கற்பும்
வாணுதன் மகளிர் மற்றுப்பிறர்க் கின்றித்
தானே வவ்விய தவளையங் கிண்கிணி
மானேர் நோக்கின் மதனமஞ் சிகையும்
ஆணுக் காதலோ டமர்ந்துவிளை யாடிக்
காமர் பள்ளியுட் கட்டளை பிழையாத்
தாமரை நெடுங்கண் டந்தொழி றுடங்கப்
பள்ளி கொண்ட பொழுதிற் பையென

(மானசவேகன் மதனமஞ்சிகையை எடுத்துச் செல்லல்)

ஒள்வினை மாட முள்குவன னாகி
விச்சை மறைவி னச்சமொன் றின்றி
இகன்மிகு குமரனைத் துயின்மிசைப் பெருக்கிக்
கயன்மிகு கண்ணியைக் கவவுப்பிணி நீக்கிப்
புகலு முள்ளமோ டகலத் தடக்கி
இகல்கொள் வீரிய னிகழ்தல் செல்லா
மண்மிசை வந்தனென் மயக்கற வின்று
விண்மிசை யுலகிற்கு விழுப்பொருள் பெற்றேன்
என்னு முவகையின் மின்னேர் நுடங்கிட
மிளிருங் கச்சையோ டொளிவிசும் பெழுந்து
பொ..

21006

செய்யுட்களின் முதற் குறிப்பகராதி.

[எண் - பக்க எண்.]

அகநனி புகன்று ... ௩௮௬
அசைந்த விரும்பிடி ... ௧௪௫
அரசவை விடுத்த ... ௫
அரணமை பெரு ... ௩௬௪
அறம்புரி யாட்டி ... ௨௩௫
அன்புமிகச் சிறந்து ... ௪௭௧
ஆங்கினி திருந்த ... ௨௯௦
ஆடுதலானு ... ௨௫௫
ஆணை வேந்தன் ... ௪௪௬
ஆராய் தோழர் ... ௫௧௬
ஆனு தொழுகுந் ... ௪௯௭
இயக்கனவ்வழி ... ௫௧௮
இருளிடை மருங் ... ௧௩௨
இருளிடை யெழுந்த ... ௩௯௯
இன்புற்றிருவரு ... ௨௦௯
உதையணகுமரன் ... ௫௦௮
உவகையின் ... ௪௫௮
உள்ளியது முடித்த ... ௨௭௩
உள்ளுதலானு ... ௩௦௩
எண்ணமொடிருந் ... ௯௧
எய்தியிகந்த ... ௧௩௮
எரிதலைக் கொண் ... ௯௭
ஏற்றெழுந்ததன் ... ௨௭௭
ஒருங்கு நன் ... ௪௬௧
ஒழுகா நின்ற ... ௩௫௪
ஓசை போக்கிய ... ௨௪௭
கட்டிலேறிய ... ௩௯௬
கடிகமழ் செல்வம் ... ௧௯௧
கரந்தவுரு ... ௩௩௮
கரந்தனரொ ... ௧௫௨
கருதியது ... ௧௯௬
கழிக்குங்காலை ... ௨௬௬
கார்நீர் நருமதை ... ௧௪௧
கைவைத்த ... ௨௦
கோயில் புக்க ... ௩௮௨
கோலவர் ... ௪௦
சயந்தியம் ... ௧௮௦
...செய்வது தெரியும் ... ௩௫௫
செய்வினை யறியா ... ௧௧௭
சேயிழைக்கூன் ... ௩௧௮
தீருநகரகவயிற் ... ௧௦௬
துணிவுடையாளர் ... ௨௮௫
தெரிவுறு சூழ்ச்சியர் ... ௧௬௧
நம்பியர் கூடிய ... ௬௨
நலம்பெறு நகரம் ... ௫௪௪
நீராட்டரவம் ... ௮௨
நெருங்கிய ... ௫௦௨
பகைமுத லறுத்து ... ௪௨௪
பதனறிந்து ... ௫௪௯
பரந்த பெரும்படை ... ௩௭௬
பரந்த விழவினுள் ... ௭௭
பரவுக்கடன் ... ௨௧௫
பள்ளி யெய்திய ... ௪௩௪
பாய நன்னுடு ... ௪௨௯
பிரிந்து பின்வந்த ... ௪௪௩
புரிந்த சுற்றமொடு ... ௬௪
புலர்ந்த காலைப் புது ... ௪௯௦
புலர்ந்த காலைப் பூங் ... ௧௫௬
புறநகர் போந்த ... ௨௨௬
புனைமலர்ப் ... ௨௬௨
புனையிழைதன் ... ௫௩௩
பெருஞ் சிறப் ... ௪௧௬
பெருந்தகை ... ௧௦௨
பெருவழி முன்னி ... ௨௯௭
பொருபடை ... ௧௭௧
...பொருள்புரி நூலும் ... ௧
பொருள்புரி யமைச் ... ௩௦௭
பொலிந்த சும்மை ... ௧௮௩
பொலிந்த செல்வ ... ௫௩௮
பொலிவுடை ... ௪௩௮

பொழிறலைப் ... ௧௨
பொன்னகர் ... ௫௩௧
போகம் புணர்ந்த ... ௨௨௦
மதலை மாடத்து ... ௩௪௨
மயிர்வினைக்கம்ம ... ௨௦௩
மறைந்தனர் வந்து ... ௪௧௨
மறையோம் ... ௩௫௧
மன்பெருஞ் ... ௨௬௬
மன்னவன் கூற ... ௩௨௯
மின்னிழை ... ௨௮
மீட்டுத்தலைப் ... ௪௫௪
மைந்தரு மகளிரு ... ௨௫௨
வண்டார் சோலை ... ௨௫௭
...வணி தோங்கி ... ௩௩௫
வத்தவற் பெற்ற ... ௩௯௮
வளைத்தனர் ... ௪௦௯
வாயில் புக்க ... ௩௧௧
விசும்பின் ... ௫௨௯
விடிந்திருள் ... ௩௩௨
விடுத்தனர் ... ௫௦௩
விரைந்தனர் கொண்ட ... ௫௦
விரைந்தனர் பெயர ... ௪௮௦
விரைந்தனளு ... ௧௩௯
விலாவணை ... ௨௪௧
விழவணி ... ௧௨௯
விளங்கவை ... ௪௨௯
விளங்கிழை பயந் ... ௪௯௮
விறற்படை ... ௧௭௫
வைகிய காலை ... ௩௨௧

அரும்பத அகராதி.

அ - அழகு.
அகக் கோளாளர்-அகம்படிப் பெண்கள்.
அகணி - உட்பட்டவன்.
அகத்தரண் - அரணின் உள்ளிடம்.
அகத்தோடு - உள்ளிதழ்.
அகப்பாட்டண்மையன் - மிக நெருங்கியவன்.
அகம் - உள்ளிடம், மனம்.
அகமணைத்தட்டு - தேருக்கு உள்ளிடத்துள்ள ஆசனப்பலகை.
அகல் - ஒரு பாத்திரம்.
அகல்வு - அகலம்.
அகலம் - மார்பு.
அகவல் - மயிலின் குரல்.
அகவை - ஒருவகை ஆடை.
அகழ்கடல் - கீழ்கடல்.
அகழ்வினையாளர் - நிலத்தைத் தோண்டும் தொழிலுடையோர்.
அகற்சி - நீங்குதல்.
அகற்றம் - அகலம்.
அகன் - மனம்.
அகன்மடி - அகன்ற ஆடை.
அகன்ற ஞானம் - விரிந்த அறிவு.
அகிற்குறை - அகிலின் துண்டம்.
அகிற் புகையகல் - அகிலைப் புகைத்தற்குரிய ஒருவகைப்பாத்திரம்.
அகைதல்-தளிர்த்தல், வருந்துதல்.
அங்கண்-அவ்விடம்,அழகிய இடம்.
அங்காங்கு - அங்கங்கு.
அங்காடி - கடை.
அங்காத்தல் - வாயைத் திறத்தல்.
அங்குலி - கைவிரல்.
அங்கையின் அவித்தல் - கையைக் காட்டி அடக்கல். [தட்டுதல்.
அங்கையெற்றல்(எறிதல்)-கையைத்
அங்கை விதிர்த்தல் - கைகளை உதறுதல். [விக் கொள்ளல்.
அச்சமுயக்கம் - பயத்தினால் தழு
அச்சு - அச்சம்.
அச்சுயிர்ப்பு - அச்சத்தினால் உண்டாகும் பெருமூச்சு.
அசதிக்கிளவி - பரிகாசச் சொல்.
அசதியாடல் - நகையாடல்.
அசா - விருப்பம்.

அசாஅய் - மெலிந்து, வருந்தி.
அசிப்பு - அவமதித்தல்.
அசுணம் - இசையறிவதொரு விலங்கு. [தல், நீரறுதகுழி.
அசும்பு - ஊற்று, துளி, துளித்
அசைஇ-அசைந்து, தங்கி, வருந்தி.
அசைத்தல் - கட்டுதல்.
அசைதல் - தங்குதல், மெலிதல்,
அசைவு - தளர்ச்சி. [வருந்தல்.
அஞ்சிறை - அகஞ்சிறை.
அஞ்சுதக - அஞ்சும்படி.
அஞர் - துன்பம்.
அட்டில் - உணவுசமைக்கும் இடம்.
அட்டேண் கம்பல் - உண்போர் ஆர
அடங்க - இல்லையாம்படி. [வாரம்.
அடங்கார் - பகைவர்.
அடர் - இதழ், தகடு.
அடர்மை - நொய்ம்மை.
அடல் - காய்ச்சுதல், வன்மை.
அடிக்கலம் - பாதத்திலணியும் ஆபரணம்.
அடிகள் - பெரியோரையும் துறவியர்களையும் குறிக்கும் சொல்.
அடிச்சுவடு - பாதத்தின் அடையாளம்.
அடிச்செருப்பாதல் - அடிமையா
அடிசில் - உணவு. [தல்.
அடிசிற் குழிசி - சோற்றுப்பானை.
அடிசிற் பள்ளி - உணவு சமைக்கும்
அடித்தி - அடியாள். [இடம்.
அடித்துகளாற்றல் - கால்கழுவல்.
அடிதொடை - அடிவைத்து நிற்றலும் அம்புகளைத் தொடுத்தலும்.
அடிநிலைச் சாத்து - அங்கவடி.
அடிமுதல் - பாதம். [தொண்டு.
அடியுறை - அடியவர், அடியவன்,
அடுக்கம் - தொடர், பரப்பு.
அடுமடை - சமைக்கும் உணவு.
அடை - இலை.
அடைஇ - அடைந்து.
அடைச்சல் - செருகுதல்.
அடையாண் கிளவி - அடையாள
அடையார் - பகைவர். [வார்த்தை.
அடையாள் - அடையாளம்.

அண்டை - பக்கம்.
அண்ணுதல் - நெருங்கல்.
அணங்கு - தெய்வப் பெண், வருத்
அணங்குதல் - வருத்துதல். [தம்.
அணவருதல் - மேலெழுதல்.
அணி - அழகு, ஆபரணம், படை
அணிகம் - அணிவோம். [வகுப்பு.
அணிகலப்பேழை - ஆபரணப் பெட்டி.
அணித்தக இருத்தல் - அருகில் இருத்தல், அழகு பெற இருத்
அணித்து - அருகிலுள்ளது. [தல்.
அணிப்புக்கோர் - அணிமையிற் சென்றோர்.
அணிமாராட்டம் - அழகிய மகாராஷ்டிர தேசத்து அலங்காரம்.
அணில்வரி - கத்தரிகையின் ஒரு
அத்தம்-அத்தமயகிரி, வழி. [வகை.
அத்தவத்திரதம் - ஒருவகை மருந்துப் பொருள். [லக்கம்.
அத்தாணி - ஆஸ்தானம், திருவோ
அத்திகோசம் - யானையெடுத்தற்குரிய செல்வம்.
அத்து - சிவப்பு, துவர்.
அத்தை : அசை.
அதர் - வழி.
அதர்வை - ஒருகொடி, வழி.
அதன்மி - குலவொழுக்கத்துக்கு மாறானவள்.
அதிங்கு - அதிமதுரம்.
அதிர்கண் - முழங்குகின்ற ......
அதிர்தல் - கலங்கல், நடுங்கல்.
அதிரல் - புனலிக் கொடி.
அதுக்கல் - அடித்தல். [கிணறு.
அந்தக் கேணி - உள்ளே மறைந்த
அந்தக் கோட்டி - இரகசியமாகக் கூடும் கூட்டம்.
அந்தணி - அந்தணப் பெண்பால்.
அந்தப் போதிகை - யானைகளின் பின்னங்காற் சங்கிலி.
அந்தம் - இரகசியம்.
அந்தரச் செலவு - ஆகாயவழியே செல்லுதல்.
அந்தரம் - ஆகாயம், வேறுபாடு.

அந்திச் சங்கம் - மாலைக் காலத்துக் கூடும் கூட்டம்.
அநங்கத்தானம் - காமன் கோயில்.
அப்புப் புதை - அம்புக்கட்டு.
அம்பலம் - பொதுவிடம்.
அம்பி - ஓடம்.
அம்மை - அமைதி.
அமர்தல் - ஒத்தல், விரும்புதல்.
அமரன் - தேவன், போர்செய்தற் குரியவன். [பார்வை.
அமரா நோக்கம் - பொருந்தாத
அமராபதி - அமராவதி; இந்திரன் அரசிருக்கை நகர்.
அமராமன்னன் - பகையரசன்.
அமரார் - பகைவர்.
அமரிய - விரும்பிய. [வன்.
அமரிறை - இந்திரன், தேவர் தலை
அமலல் - நெருங்கல், பெருகல்.
அமலை - திரள். [க்கை.
அமளிப்படை - படுத்தற்குரிய படு
அமிர்தம் (அமிர்து) - அமுதம், கனி, பால். [பால், மணம்.
அமிழ்தம் (அமிழ்து)-உணவு, பழம்,
அயங்குதல் - அசங்குதல்.
அயர்த்தல் - மறத்தல்.
அயர்தல் - வருந்துதல், விரும்பிச்
அயற்புலம் - வேற்றுநாடு.[செய்தல்.
அயறு - புண்வழலை.
அயாஅநோய்- வருத்தமாகிய நோய்.
அயாம் - வருந்தும்.
அயாவுயிர்த்தல் - இளைப்பாறுதல்.
அயிர் - நுண்மணல்.
அயிர்ப்பு - ஐயம்.
அயிராணி - அருந்ததி.[னது யானை.
அயிராபதம் (ஐராவதம்) - இந்திர
அயிரை - ஒருவகை மீன்.
அயில் - கூர்மை.
அயினி - ஆலத்தி, சோறு.
அரக்கல் - துடைத்தல்.
அரக்குறு நறுநீர் - சாதிலிங்க நீர்.
அரங்கம் - ஆடும் அவை. [மதில்.
அரண் (அரணம்) - பாதுகாப்பு,
அரணக்கருவி - கவசம். [டம்.
அரணகம் - அரண்களின் உள்ளி
அரணி - தீக்கடை கோல்.
அரத்தக்கஞ்சிகை - சிவப்புத்திரை.
அரத்தகம் - செம்மைநிறம்.
அரத்தப்பஞ்சி - செம்பஞ்சு.
அரத்தம் - சிவப்பு.
அரம்பு - குறும்பு.
அரம்பை - தேவமகள்.
அரமகளிர் - தெய்வமகளிர்.
அரவு - நாகமரம், பாம்பு.
அராவ - முழங்குபவை.
அராந்தாணம் = அருகஸ்தானம் - அருகக்கடவுளாலயம்.
அரி - உள்ளிடுபரல், கண்ணிலுள்ள வரி, கோடு, சிலம்பின் உண்மணி, தவளை, மான்.
அரிக்கிண்கிணி - தவளைவாய்போன்ற வாயையுடைய கிண்கிணி.
அரிச்சாலேகம் - மான்கண்போன்ற சாளரம்.
அரிச்சிறு பறை - அரித்தெழுங் குரலையுடைய சிறுபறை.
அரிதாரம் -ஒரு வாசனைப்பொருள்.
அரிபெய்புட்டில் - உள்ளே பரலைப் பெய்த கெச்சை.
அரிமா (அரிமான்) - சிங்கம்.
அரியல் - கள்.
அரில் - பிணக்கு.
அருகத்தானம் - அருகக்கடவுளது கோயில்.
அருகர் (அருகல்) - பக்கத்தில்.
அருங்கடிவாயில் - காவலையுடைய வாயில். [முடி, கப்பல்.
அருங்கலம் - அரிய ஆபரணங்கள்,
அருத்தம் - உரை, செல்வம்.
அருப்பம் - அருமை.
அரும்பதம் - அரிய உணவு.
அருமைக்காலம் - நல்வினையில்லாத
அரை - அடி, இடை. [காலம்.
அரைப்பு - அரைத்தல், எண்ணெய் போகத் தேய்த்துக்கொள்ளும் பொருள். [குசம்.
அரைமதி யிரும்பு - ஒருவகை அங்
அரையிருள் நடுநாள் - இடையா
அல்கிரை - மிக்க இரை. [மம்.

அல்கூணமையம் - இரவில் உணவை உண்ணுகின்ற சமயம்; இட்டுவைத்த உணவை உண்ணுங்காலமுமாம்.
அல்லதை - அல்லது.
அல்லி - அகவிதழ்.
அல்வழி - இருளில்.
அலகை - உரையாணி, தலையளவு.
அலங்குதல் - அசைதல்.
அலத்தல் - இளைத்தல்.
அலமரல் - கலங்கல், சுழலுதல்.
அலர் - பழிமொழி, மலர்.
அலவலை நீர்த்து - அலமருந்தன்மையுள்ளது.
அலவன் - நண்டு.
அலைத்தல் - வருத்தல்.
அவணை - அவ்விடம்.
அவந்திகை - அவந்தி, வாசவதத்தை.
அவந்தியன் - பிரச்சோதனன்.
அவரபக்கம் - கிருஷ்ணபக்ஷம்.
அவல் - ஒருவகைத் தின்பண்டம், பள்ளம்.
அவலம் - துன்பம்.
அவவு - அவா.
அவி - அவிப்பாகம், தேவருணவு.
அவிதல் - அழிதல்.
அவிழ் - சோறு.
அவிழ்த்தல் - வெளியிடுதல்.
அவிழ்தல் - மலர்தல்.
அவிழ்பதம் - மலருஞ்செவ்வி.
அவைப்பரிசாரம் - சபையைவணங்கல்.
அழல் - கோபம், தீ, வெப்பம்.
அழல்மாட்டல் - தீயை மூட்டல்.
அழலார்த்தல் - தீப்பெய்தல்.
அழற்கொடி - தீக்கொழுந்து.
அழற்சி - கொதிப்பு, கோபம்.
அழற்செல்வன் - சூரியன்
அழித்து - மீட்டு.
அழிதல் - வருந்துதல்.
அழிவு - மெலிவு.
அழுங்கல் - வருந்தல்.
அழுவம் - பரப்பு.
அழைஇ - அழைத்து.
அள்ளல் - சேறு.
அள்ளிலை - செறிந்த இலை.
அளக்குநர் - அளப்போர்.
அளகம் - முன்னுச்சிமயிர்.
அளத்தல் - நுகர்தல்.
அளப்பு - நுகர்ச்சி.
அளறு - சேறு.
அளி - அன்பு, இரக்கம், வண்டு.
அளித்தல் - அருளுதல்.
அளை - தயிர், புற்று.
அளைஇ - கலந்து.
அற்பு - அன்பு.
அற்றக்காலை - சோர்வடையும் காலம்.
அற்றம் - அறுதி, சமயம், சோர்வு.
அற்று - அத்தகையது.
அறச்சோற்றட்டில் - தருமசத்திரம்.
அறத்தாறு - அறநெறி.
அறத்தியல்கொட்டில் - தருமசாலை.
அறப்பெறுதல் - முற்றப்பெறுதல்.
அறம் - கற்பு, தருமம்.
அறல் - கருமணல், நீர்.
அறவாசிரியன் - மதகுரு.
அறவை - முற்பிறப்பில் அறஞ்செய்த உயிர்கள்.
அறவோர்பள்ளி - துறவியரிருக்கும் ஆச்சிரமம்.
அறிபயிர் - சங்கேதவொலி.
அறிபு - அறிதல்.
அறிவர் - ஞானியர்.
அறுகை - அறுகம்புல்.
அறுவில் தெண்ணீர் - வற்றுதல் இல்லாத தெள்ளிய நீர்.
அறுவை - ஆடை.
அறை - துண்டு, பாத்தி, பாறை, வீட்டின் ஒரு பகுதி.
அறைஇ - மொழிந்து.
அறைதல் - முழங்கல்.
அறைபோதல் - கீழறுதல், வஞ்சித்தல்.
அறையுண்ணுமை - பிறராற் கீழறுக்கப்படாமை.
அன்மை - அல்லாமை.
அன்று - கெட்டது.
அன்னர் - அத்தகையவர்.
அன்னுழி - அவ்விடம்.
அனந்தர் - தூக்க மயக்கம்.
அனித்தம் - அனிச்சம்.
அனுக்கல் - வருத்தல்.
ஆ - ஆச்சாமரம், பசு.

ஆக்கம் - ஆகுதல், செல்வம், வளர்
ஆக்கை - யாக்கை. [ச்சி.
ஆகரித்தல் - சேர்த்தல்.
ஆகியர் - ஆக.
ஆகு - ஆவேன். [கம்.
ஆகுலம் - ஆரவாரம், துன்பமுழக்
ஆசிடை (ஆசிஷை) - ஆசீர்வாதம்.
ஆசினி - பலா.
ஆசு - குற்றம், விரைவு.
ஆட்டல் - வருத்தி ஓட்டல்.
ஆட்டியர் - பெண்கள்.
ஆட்டு - விழவு.
ஆட்டுதும் - வருத்துவேம்.
ஆடகம் - ஒருவகைப் பொன்.
ஆடல் - வெல்லல்.
ஆடவர் - வீரர்.
ஆடி - கண்ணடி.
ஆடூஉ - ஆண்.
ஆண் - ஆணமென்பதன் விகாரம்.
ஆண்டொழில் - ஆண்மைச் செய்
ஆணம் - அரணம், அன்பு. [கை.
ஆணி - மேற்கோள்.
ஆத்தல் - கட்டல்.
ஆத்தி - ஒரு மரம்.
ஆத்திரை - யாத்திரை.
ஆதிமுற்றம் - விவாக முதலியவை நடத்தற்குரிய முதல் முற்றம்.
ஆப்பு - யாப்பு.
ஆய்ந்த - மெலிந்த.
ஆய்மலர் - அழகிய மலர்.
ஆயம் - கூட்டம், மகளிர் திரள்.
ஆயினும் : ஒரெண்ணிடைச்சொல்.
ஆயுட்டானம் - ஆயுளைத்தரும் கொ
ஆயொளி - அழகிய ஒளி. [டை.
ஆர்கலி - ஆரவாரம்.
ஆர்த்தல் - கட்டல், முழங்கல்.
ஆர்பதம் - உணவு.
ஆர்வலர் - அன்புடையார்.
ஆர்வு - நிறைவு.
ஆரத்துணி - சந்தனத்துண்டம்.
ஆரம் - ஆரக்கால், சந்தனம், மாலை, முத்து.
ஆரல் - ஒருவகை மீன்.
ஆராட்டு - நீராடுதல்.
ஆரியச்செப்பு - ஆரியதேசத்தில் இயற்றிய செப்பு.
ஆரியர் - பெரியோர்.
ஆலவட்டம் - ஒருவகை விசிறி.
ஆலி - நீர்த்துளி.
ஆவணம் - கடைவீதி.
ஆவது - ஆக்கம், பயன்.
ஆவதை - அதனை.
ஆவநாழிகை - அம்பறாத்தூணி. [ல்.
ஆவிக்கொள்ளல்-கொட்டாவி விட
ஆவித்தல் - பெருமூச்செறிதல்.
ஆழமை - ஆழம். [மோதிரம்.
ஆழி - கடற்கரை, கரை, சக்கரம்,
ஆள் - ஆண்மை, வீரர்.
ஆற்றுளி - முறையாக. [வோர்.
ஆறலைஇளையர் - வழிப்பறி செய்
ஆறாட்டு - ஆற்றில் நீராடுதல்.
ஆன் - அங்கே, பசு.
ஆனம் - ஆணம், பாதுகாப்பு.
ஆனிலை - அந்த நிலை.
ஆனெய் - பசுவின் நெய்.
ஆனைந்து - பஞ்ச கவ்வியம்.
இகக்கல் (இகத்தல்) - நீங்கல்.
இகணை - ஒரு கொடி; ஒருமரமு
இகல் - பகை, மறம். [மாம்.
இகலல் - பகைத்தல்.
இகுத்தல் - அறைதல்.
இகுப்பம் - தாழ்வு.
இங்கண் - இவ்விடம்.
இங்கல் - தங்கல்.
இசின் : ஓர் இடைச்சொல்.
இசையோர் தேய இயக்கம் - கந்
இஞ்சி - மதில். [தர்வ மார்க்கம்.
இட்டிகை - செங்கல்.
இட்டிடர் - மிக்க துன்பம்.
இட்டிடை கழி - இடுகிய இடை
இட்டு - சிறிது. [கழி.
இடன் - இடம், சமயம்.
இடி - மா.
இடீஇ - இட்டு, எழுதுவித்து.
இணர் - பூங்கொத்து.
இணை - ஒப்பு.
இதண் - பரண்.
இதயவாசனை - ஓராபரணம்.

இந்திரவில் - வானவில்.
இமிழ்த்தல் - கட்டுதல்.
இமிழ - மிக. [விளங்கல்.
இமைத்தல் - மின்னுதல், விட்டு
இமையோர் - தேவர்.
இயக்கம் - இயங்குதல்.
இயக்கி - ஒரு பெண்பாற் றெய்வம்.
இயம் (இயமரம்) - வாத்தியம்.
இயலல் - நடத்தல்.
இயற்கை - இயல்பு.
இயூகி - யூகி.
இர - இரா. [தானவகையுள் ஒன்று.
இரணியகருப்பம் - அரசர்செய்யும்
இரலை - ஆண்மான்.
இரவு - இருள்மரம்.
இரிதல் - கெட்டோடுதல்.
இரீஇ - இருத்தி.
இருங்கண் - கரியகண்.
இருப்பகல் - இரும்பினுற் செய்யப் பட்ட அகலென்னும் பாத்திரம்.
இருப்பை - ஒருமரம்.
இருள் - இரவென்னும் மரம்.
இரைதல் - முழங்குதல்.
இல் - தேற்றுமரம்.
இலஞ்சி - குளம்.
இலமலர் - இலவமலர்.
இலவந்திகை - எந்திரவாவி. [ணம்.
இலேகை - சித்திரம், தழும்பு, வண்
இலைச்சித்தல் - முத்திரைவைத்தல்.
இவர்தல் - பரத்தல்.
இவறல் - பேராசைப்படுதல்.
இவுளி - குதிரை.
இழிகை - கைச்சுரிகை.
இழுக்கு - வழுக்குதல்.
இழுது - நெய்.
இழை - ஆபரணம், நூல்.
இழைப்பு - செய்தொழில்.
இளகல் - வழுக்கல்.
இளி - இழிவு.
இற்று - இன்னும்.
இறக்கல் - கடத்தல்.
இறடி - தினை.
இறுஅல் - தேனடை.
இறுங்கு - சோளம்.
இறுத்தல் - தங்குதல்.
இறுதி - மரணம்.
இறுபு - இறத்தல்.
இறும்பு - குறுங்காடு.
இறுவரை - பெரியமலை.
இறை - அரசன், கப்பம், கையின் சந்து, சிறிது, சிறை, தங்குதல்,
இன்றிய-இல்லாத. [தலைமை,மூலை.
இனி - இப்பொழுது.
ஈடு - இடுதல், எளிவரவு.
ஈம் - ஈயும்.
ஈரம் - அன்பு.
ஈன் - இவ்விடம்.
ஈனுத்தாயர் - செவிலித்தாயர்.
உக்கம் - சிற்றுலவட்டம்.
உகவை - மகிழ்ச்சி.
உகிர் - நகம்.
உசா - கேள்வி.
உசிர் - உயிர்.
உஞ்சேனை - உச்சைனிநகரம்.
உட்கு - அச்சம்.
உடங்கு - சேர.
உடீஇ - உடுத்து.
உடு - நாணைக்கொள்ளுய யூடம.
உண்ணம் - உஷ்ணம்.
உணுஅ - உண்டு.
உத்தரம் - விடை.
உத்தி - ஓராபரணம், படப்பொறி.
உதள் - ஆடு.
உந்தி - கொப்பூழ்.
உம்பல் - தொகை.
உம்மை - முற்பிறப்பு.
உமிழ்தல் - புறப்படுதல்.
உயர்பு - உயர்ச்சி.
உயரி - உயர்த்தி.
உயிர் - மூச்சு.
உயிர்வைத்தல் - இறத்தல்.
உரம் - வன்மை
உரற்றல் (உரறல்) - முழங்குதல்.
உராய் - பெயர்ந்து.
உரிஞ்சல் - தேய்த்தல்.
உரிது - உரித்து.
உரிமை - மனைவி.
உரீஇ - உருவி.

உரு - அச்சம்.
உருத்தல் - கோபித்தல், தோன்று
உருப்பு - தோற்றம்,வெம்மை.[தல்.
உரும் - இடி.
உருவி - உருவமுடையாள்.
உருவு - வடிவம்.
உருள்படி - ஒருவகைச்சோபானம்.
உரை - புகழ்.
உரைஇ - உரைத்து.
உரைத்த - தேய்த்த.
உரைத்ததை - சொல்லும் செய்தி.
உரைம் - சொல்லும்.
உரோணி - உரோகிணி.
உலகபுராணம்-உலகத்தின் பழைய வரலாற்றைக் கூறும் நூல்.
உலப்பு - அழிதல்.
உலம் - திரண்டகல்.
உலம்பல் - முழங்கல்.
உலவை - ஒருவகை மரம்.
உலாப்புறுத்தல் - அழித்தல்.
உலைவு - அழிவு.
உவணம் - கருடன்.
உவல் - தழை.
உவலைக்கேணி - தழையால் மூடப்
உவா - பூரணை. [பட்ட கிணறு.
உவாத்தி - உபாத்தியாயன்.
உவாமதி - கலைநிரம்பிய சந்திரன்.
உவாவ - நிறைய.
உழலை - இரண்டு மரங்களை நட்டு அவற்றின் துவாரங்களில் மூங்கிலைப் புகுத்தி வைத்திருக்கும் இடம். [டர்ந்துவந்த அன்பு.
உழுவலன்பு - எழுபிறப்பிலும் தொ
உழுவை - புலி.
உழை - பக்கம், மான்.
உழைக்கலம் - பக்கத்தில்வைத்துக் கொள்ளும் பாத்திரம்.
உள்ளம் - ஊக்கம், மனம், மன
உள்ளழல் - பசித்தீ. [வெழுச்சி.
உள்ளுதல் - நினைத்தல்.
உளமை - உள்ளமை.
உளர்த்துபு - வலிய அலர்த்தி.
உளர்தல் - வகிர்தல்.
உளி - ஓராயுதம்.
உளை - குதிரையின் தலையாட்டம்.
உற்றது - துன்பம்.
உறத்தல் - செறிதல், மிகுதல்.
உறீஇ - உறுவித்து.
உறுகண் - துன்பம்.
உறுகண் வெந்தொழில் - மரணம்.
உறுத்தல் - ஒத்தல்.
உறுநர் - உற்றார், தோழர்.
உறுபுரி - மிக்க முறுக்கு.
உறுவு - உறுதல்.
உறைத்தல் - துளித்தல்.
ஊக்கம் - உள்ளக்கிளர்ச்சி.
ஊக்கு - அசைத்தல்,ஊக்குதல்.
ஊகி - யூகி.
ஊர்கோள் - பரிவேடம்.
ஊர்ச்சி - ஊர்தல்.
ஊர்தரல் - பரத்தல்.
ஊர்தி - வாகனம்.
ஊராண்குறிப்பு -உபகாரக்குறிப்பு.
ஊழ் - முறைமை, விதி.
ஊழி - யுகம்.
ஊற்றம் - முயற்சி, வன்மை.
ஊறல் - கள்.
ஊறு - துன்பம்.
ஊனம் - குற்றம்.
எஃகு - வேற்படை.
எக்கர் - இடப்பட்ட மணல்.
எக்கல் - மேலே கிளர்தல்.
எஞ்சல் - உயிர்நீத்தல்.
எட்டிப்பட்டம் - வணிகர்களுக்கு அளிக்கப்படுவதொருபட்டம்.
எடுத்தல் - நீக்குதல்.
எண்கு - கரடி.
எதிர்மை - தோன்றுதல்.
எதிர்வினை - வருஞ்செயல்.
எம்பரும் - எவ்விடமும்.
எமரன் - எம்மவன்.
எயில் - மதில்.
எயினர் - வேடர்.
எரிமலர் - தாமரைமலர்.
எருக்கல் - அடித்தல்.
எருத்தம் - பிடர், புறக்கழுத்து.
எருஉக்குரல் - தாக்குதலால் உண்
எல்லி - இரவு. [டாகும் குரல்.

எல்லொளி - மிக்க ஒளி.
எவ்வம் - இளிவரவு, துன்பம்.
எழாஅ - எழுந்து.
எழிலி - அழகுடையவள், மேகம்.
எழினி - திரைச்சீலை.
எழீஇ - எழுந்து, எழுப்பி.
எழு - உழலைமரம், தூண்.
எழுதுதல் - பண்ணுதல்.
எழுந்தன்று - எழுந்தது.
எழுமை - ஏழுபிறப்பு.
எள்கல் - மெலிதல்.
எற்றல் - தாக்கல்.
எறுழ் - வலி.
என்முதல் - என்னுடைய வரலாறு.
என்னது - எத்தகையது.
என்னதும் - சிறிதும்.
என்னரும் - எதுவும்.
என்னின் - எதனால்.
என்னும் - சிறிதும்.
எனைவர் - எவ்வளவுபேர்.
ஏ - அம்பு, இரக்கக்குறிப்பு.
ஏஎய் - ஏவி.
ஏஎர் - அழகு.
ஏஎல் - எழுதல்.
ஏகாவலி - ஒற்றை வடம்.
ஏடு - பனையேடு.
ஏண் - வலி.
ஏதிலன் - அயலான்.
ஏதின்மை - அயலானதன்மை.
ஏது - காரணம்.
ஏப்பாடு - அம்பு வீழ்தல். [பொன்.
ஏமம் - பள்ளியறை, பாதுகாவல்,
ஏமாத்தல் - கலக்கமுறுதல்.
ஏமாப்பு - பாதுகாப்பு.
ஏமுறவு - மயக்கம்.
ஏயது - ஏவியது.
ஏயர் - ஹேஹயர்.
ஏர் - அழகு, எழுச்சி.
ஏல்வு - பொருத்தம்.
ஏலொளி - எழுச்சியையுடைய ஒளி.
ஏழ்ச்சி - எழுச்சி. [விழித்தல்.
ஏற்றல் - எழுதல், தர்க்கமிடுதல்,
ஏற்று - ஏற்றம், ஏறுதல், துயி
லுணர்ந்து.

ஏற்றோர் - போரை மேற்கொண்
ஏறு - விலங்கின் ஆண். [டோர்.
ஏன்ற - பொருந்திய.
ஏனவை - மற்றையவை.
ஐங்கணைக் கிழவன் - மன்மதன்.
ஐது - அழகியது, வியப்புடையது.
ஐயர் - முனிவர்.
ஐயவி - வெண்சிறுகடுகு.
ஐவகைச்சோதிடர் - சந்திரன், சூரி
யன், மற்றக்கோள்கள், 27 நக்ஷத்
திரங்கள், தாரகைகள்.
ஐவகை வாசம் - இலவங்கம் முத
ஐவனநெல் - மலைநெல். [லிய ஐந்து.
ஐவாய் - ஐந்து வாய்.
ஒக்கல் - சுற்றத்தார்.
ஒசிதல் - துவளல்.
ஒட்டல் - சேர்தல்.
ஒட்டார் - பகைவர்.
ஒட்டு - சேர்ந்து உறைதல்.
ஒடிவு - ஒழிதல்.
ஒண்மை - இயற்கையழகு.
ஒத்தன்று - ஒத்தது.
ஒதுங்கல் - நடத்தல்.
ஒப்புரவு - உலகநடையறிந்து செய்
ஒய்தல் - செலுத்தல். [தல்.
ஒய்யென - விரைய.
ஒராஅ - நீங்காத.
ஒரீஇ - நீங்கி.
ஒருக்கல் - ஒருசேர ஆக்கல்.
ஒருகாழ் - ஒற்றைவடம்.
ஒருத்தல் - விலங்கின் ஆண்.
ஒருதலை - நிச்சயம்.
ஒருப்பாடு - ஒருப்படுதல்.
ஒல்கல் - தளர்தல்.
ஒல்லை - விரைய.
ஒல்வன் - பொருந்துவேன்.
ஒலிப்பு - ஒலித்தல்.
ஒழுக்கம் - ஆசாரம், வரிசை.
ஒழுக்கு - ஒழுக்கம், செலவு, வரி
ஒழுகல் - நீண்டு வளர்தல். [சை.
ஒள்ளொளி - மிக்க ஒளி.
ஒளிக்களம் - மறைவிடம்.
ஒளியவர்கள் - தேவர்கள்.
ஒளியின்று - ஒளியாமல்.

ஒற்கம் - தளர்ச்சி, வறுமை.
ஒற்றுவர் - ஒற்றியுணர்வார்.
ஒன்றார் - பகைவர்.
ஒன்று - சிறிதும்.
ஒன்னுதோர் - பகைவர்.
ஓக்கம் - உயர்ச்சி.
ஓச்சல் - அடித்தல், உயர்த்தல், செலுத்தல், வீசுதல்.
ஓசனை -யோசனை.
ஓடாத தானை - முதுகிடாத படை.
ஓடை - யானையின் முகபடாம்.
ஓத்து - வேதம்.
ஓதி - கூந்தல், ஞானம்.
ஓப்பல் - ஓட்டல்.
ஓம்படுத்தல் (ஓம்படை) - அடைக்கலங் கொடுத்தல், பாதுகாக்கச் செய்தல்.
ஓம்பல் - ஒழிதல், பாதுகாத்தல்.
ஓமாவிகை - தூபத்திரவியம்.
ஓமை - ஒரு மரம்.
ஓர்த்தல், (ஓர்ப்பு) - எண்ணுதல், கூர்ந்து கேட்டல்.
ஓரன்ன - ஒத்த.
ஓரை - மகளிர் விளையாட்டு. [டல்.
ஓலுறுத்தாடல் - முழங்கிவிளையா
ஓலை - காதோலை, திருமுகம், பனை
ஓவம் - சித்திரம். [யோலை.
ஓவவினையாளர், (ஓவியர்) - சித்திர காரிகள்.
ககணி - ஆகாயத்திலுள்ள பொருள்களின் கதியை அறிபவன்.
கச்சம் - ஒரு பேரளவு, கச்சை.
கச்சை - வீரர்கள் இடையிற் கட்
கசிவு - துன்பம். [டும் வார்.
கஞ்சிகை - உருவுதிரை, திரை, முகமூடி. [மூட்டுவாய்.
கஞ்சிகைக்கொளு - திரையின்
கஞ்சிகைச் சிவிகை - மூடுபல்லக்கு.
கஞ்சிகை வையம் - திரையால் மூடிய வண்டி.
கஞலுதல் - நெருங்குதல்.
கட்கம் - ஒரு புண்ணிய மிருகம்.
கட்டகக்கம்மம் - சிற்றறைகளாகச் செய்யப்பட்ட வேலைப்பாடு.

கட்டளை - உவமையாகச் செய்த உருவம், முதன்மை.
கட்டறிமகடூஉ - கட்டுவிச்சி.
கட்டி - நேர்கட்டி, வெல்லம்.
கட்டில் - அரசுகட்டில், ஒருவகை இருக்கை. [டுக் குறிபார்த்தல்.
கட்டு - காவல், முறத்தில் நெல்லிட்
கட்டுரை - பொருள் பொதிந்த உரை. [கலைவகை.
கட்டுரை வகை - நன்றாகப் பேசும்
கடகம் - பரிசை, வளை. [தல்.
கடங்கழித்தல் - கடமையைச் செய்
கடத்தல் - வஞ்சியாது எதிர்நின்று அடுதல், வெல்லுதல்.
கடம் - கடமை, காடு.
கடவது - செய்யவேண்டியது.
கடவல் - செலுத்தல்.
கடவுட்காட்டல் - தெய்வாவேச முறுதல்.
கடவுட்டானம் - கடவுள் கோயில்.
கடவுட்பள்ளி - கோயில், முனிவர் ஆச்சிரமம்.
கடவுள் - தேவன், முனிவர்.
கடவோன் - செலுத்துவோன்.
கடறு - காடு.
கடன் - கடமை. [யுடைய யானை.
கடாஅக்களியானை - மதக்களிப்பை
கடாஅய் - செலுத்தி.
கடாரம் - பர்மா தேசம்.
கடாவல் - செலுத்தல்.
கடி - காவல், மணம், வேகம்.
கடிகை - துண்டம்.
கடிகையாரம் - பவளமாலை; நாழிகை எந்திரமுமாம்.
கடித்தகம் - யானையின் பின்புறத்தே தொங்கக் கட்டியிருக்கும் கேடகம் போன்றதொரு படை; உறையென்றும் கூறுவர்.
கடிது - விரைவு.
கடிப்பிணை - காதில் அணியும் ஆபரணங்கள் இரண்டு.
கடிப்பு - குறுந்தடி.
கடிறு - களிறு.
கடு - கடுக்காய்.

கடுக்கம் - விரைவு.
கடுங்கூட்டு - மருந்து.
கடுத்தல் - கோபித்தல்.
கடுத்தனர் - மிக்கனர்.
கடுநடை - விரைவான நடை.
கடுப்பு - வேகம்.
கடும்பகை - உட்பகை.
கடுமை - வேகம்.
கடுவளி - வேகமான காற்று.
கடுவன் - ஆண் குரங்கு. [வாயில்.
கடை - இடம், இறுதி, தாழ்வு,
கடைஇ - செலுத்தி, வினவி.
கடைசியர் - உழத்தியர்.
கடைத்தலை - வாயில். [ப்பு.
கடைப்பகச்செப்பு - கடைந்த செ
கடைமணை - வண்டியின் முன்னுறு
கடைமுகம் - வாயில். [ப்பு.
கடையெழுத்து - கையொப்பம்.
கண் - அழகு, அறிவு, இடம், கண்ணோட்டம், கணு, மூட்டுவாய், வாத்தியத்தின் அடிக்கும் பக்கம்.
கண்டம் - கண்டத்திரை, திரைச்
கண்ணுறுத்தல் - பார்த்தல். [சீலை.
கண்ணி - கருதி, தலையிலணியும் மாலை, வலை.
கண்ணியம் - பெருமை.
கண்ணுளர் - சித்திரகாரர்.
கண்ணுளாளர் - சிற்பிகள்.
கண்ணென - விரைய.
கண்படை - கண்மூடித் தூங்கல்.
கண்பனி - கண்ணீர்த்துளி.
கண்பாடு - தூங்குதல்.
கண்பு - ஒருவகைக் கோரை.
கணக்குவரி - கணக்கெழுதிய வரி
கணங்குழை - திரண்டகுழை. [சை.
கணங்கொள்மன்னர் - சங்கமன்
கணங்கொள்ளல் - கூடுதல். [னர்.
கணம் - கூட்டம், க்ஷணம்.
கணி - சோதிடன். [கம்.
கணிகாசாரம் - கணிகையர் ஒழுக்
கணிச்சங்கம் - சோதிடர்களின் சங்கம்.
கணிவாய் வேங்கை - கணியின் தன்மையுள்ளவேங்கைமரம்,

கணை - அம்பு, திரட்சி.
கணையம் - அம்பு, யானையைத் தடுக்
கத்திகை - மாலை. [கும் மரம்.
கதம் - கோபம்.
கதலிகை - கொடி.
கதழ்தல் - விரைதல்.
கதழ்வு - வேகம்.
கதழ - சிறப்ப.
கதிய - கதுவிய.
கதிர் - ஒளி, கிரணம், சூரியன்.
கதிர்ச்செல்வன் - சூரியன்.
கதிர்த்தல் - வளப்படல்.
கதிரகம் - கீழ்த்திசை.
கதிரம் - கருங்காலி.
கதுப்பு - கூந்தல்.
கதுமென - விரைவாக.
கதுவாய் - குற்றம்.
கந்திரம் = கந்தருவம் - இசை.
கந்து - தூண்.
கந்துகம் - பந்து.
கப்பணம் - இரும்பாற்செய்யப்பட்ட
கப்பு - கிளை. [யானை நெருஞ்சிமுள்.
கபாலப்பள்ளி - கபாலிகமதத்தினர்
கபிலை - பசு. [உறையும் ஆச்சிரமம்.
கபோதம் - வீட்டின் ஓருறுப்பு.
கம்பல் (கம்பலை) - முழக்கம்.
கம்பிதம் - நடுக்கமுள்ள பாட்டு.
கம்புள் - சம்பங்கோழி.
கம்மம் = கர்மம் - சிற்பம், வேலைப்
கம்மர் (கம்மியர்) - சிற்பிகள். [பாடு.
கமர்தல் - விலக்கல்.
கயக்கம் - கலக்கம்.
கயக்கோழி - நீர்க்கோழி.
கயத்தி - இழிவுடையவள்.
கயந்தலை - யானைக்கன்று.
கயம் - குளம், பள்ளம், யானை.
கயமரம் - இழிந்தமரம், விறகுக் காம் மரம். [ஒருவகை மீன்.
கயல் - எட்டு மங்கலங்களில் ஒன்று,
கயில் - மூட்டுவாய்.
கரகம் - குடம். [பாத்திரம்.
கரண்டம் - சுண்ணம்பு வைக்கும்
கரணச்சேடகம் - போர்த்தொழிலுக்குரிய கேடகம்,

கரணம் - செயல்.
காணயாப்பு - போர்க் கவசம்.
காந்துறைகோள் - மறைந்துறை
யும் கிரகங்கள்.
காந்தை - பசுக்களை மீட்டல்.
காப்பறை - பிறரறியாதபடி ஒளித்
காம் - வரி. [தற்குரிய அறை.
காம்பு - பாழ்நிலம்.
கரீஇ - கருவி.
கருப்பாசம் - ஒரு காடு.
கரும்பின் ஊறல் - கருப்பஞ் சாற்
றிலிருந்து உண்டாகும் கள்.
கருமக்கட்டுரை-காரியத்தை விளக்
கும் சொல்.
கருமக் கடுக்கம் - காரிய விரைவு.
கருவி - கடிவாளம், கூட்டம், வாத்
தியத் தொகுதி.
கருவிக்கரணம் - யாழ்வாசித்தல்.
கருவினை - விளையும் செயல்.
கரை - ஆடையின் கரை, நீர்நிலை
கரைதல் - சொல்லுதல்.[யின் கரை.
கல் - மலை. [ய்த்த ஆடை.
கல்லுண்கலிங்கம் - காவியில் தோ
கலங்கொடை - ஆபரணத்தைக்
கொடுத்தல்.
கலப்பேழை - ஆபரணப் பெட்டி.
கலப்பை - கலங்களை வைத்திருக்
கும் பை, கலவைச்சாந்து, பல
பொருட்டொகுதி.
கலம்-ஆபரணம், கப்பல், பாத்திரம்.
கலம்பூச்சரவம் - பாத்திரம் தேய்க்
கும் ஓசை
கலவம் - மயிலின் தோகை.
கலாஅம் - கலவும்.
கலாஅய் - கலந்து. [கலை, தோகை.
கலாபம் (கலாவம்) - ஒருவகை மே
கலாவேல் - போரிற் சிறந்த வேல்.
கலி - ஆரவாரம்.
கலிங்கம் - ஆடை. [ட்டி
கலிங்க வட்டி-ஆடைவைக்கும் பெ.
கலித்துறை - முழக்கத்தையுடைய
நீர்த்துறை.
கலிழ்ச்சி (கலிழ்தல்) - கலங்கியழு
கலினம் - கடிவாளம். [தல்.

கலுழன் - கருடன்.
கலுழி - வெள்ளம்.
கலை - ஆடை, ஆண் மான், கலவிக்
குரிய கரணம், சாஸ்திரம், மே
கவ்வை - முழக்கம். [கலை.
கவடு - கிளை.
கவயம் - கவசம்.
கவர்தல் - விரும்புதல்.
கவரி-ஒருவகை உபசாரப்பொருள்,
கவலை - கவர்த்த வழி. [கவரிமான்.
கவவல் - அகத்திடுதல், அணைத்தல்.
கவவு - தழுவுதல்.
கவற்சி - கவலை.
கவற்றல் - கவலையடையச்செய்தல்,
மயக்குதல், விரும்பச்செய்தல்.
கவற்றுவினை - சூதாடு தொழில்.
கவறு - கைம்மரம், சூதாடுகாய்.
கவாஅன் (கவான்) - தொடை.
கவிகை - இடக்கவிந்தகை, குடை.
கவிர் - முள்ளுமுருங்கை.
கவைஇ - பொருந்தி.
கவைஇய - சூழ்ந்த.
கவைமுட்கரீஇ - யானையை அடக்
கும் கருவிகளில் ஒன்று.
கழகம் - சூதாடும் இடம்.
கழங்கு - கழற்சிக்காய்.
கழஞ்சு - நிறுத்தலளவையுள்ஒன்
கழல் - பாதம், வீரக்கழல். [று.
கழறல் - இடித்துக் கூறுதல், கூறு
கழனி - வயல். [தல்.
கழி - கயிறு, கோல், மிகுதி.
கழி நுண்ணோர் - மிக நுண்ணிய
அறிவுடையோர்.
கழிப்பட மாடம் - கால்களையுடைய
கழிப்பி - கழித்து. [கூடாரம்.
கழீஇ - கழுவி.
கழு - மூங்கிற் பிளப்பு.
கழுக்குநிரை - கழுகின் வரிசை.
கழுக்கொழுக்கு- கழுகின் செலவு.
கழுமல் - பொருந்தல்.
கழூஉச் செய்தல் - கழுவுதல்.
கழை - கரும்பு, மூங்கில்.
கள்ளடு மகடூஉ - கள்ளைக் காய்ச்
சும் பெண்.

களம் - நெற்களம், போர்க்களம்.
களமர் - நெற்களத்தில் வேலைசெய்வோர்.
களர் - கரம்பு நிலம்.
களி - களிப்பு, மதம், மயக்கம்.
களிகை - கழுத்திலணியும் ஓர் ஆபரணம்.
களைஇயர் - களைக.
களைகண் - பற்றுக்கோடு.
கற்சிறைக் கோட்டம் - கல்லாற் செய்யப்பட்ட மதில் சூழ்ந்த கோயில்.
கற்படை - கல்லாலமைத்த சுவர்ப்படை.
கற்பம் - கற்ப லோகம்.
கற்புடை விழுமீன் - அருந்ததி நக்ஷத்திரம்.
கற்றோய் கலிங்கம் - காவியில் தோய்த்த ஆடை.
கறங்கல் - சுழலல்.
கறவை - பசு.
கறுவுகொளாளர் - பகைமையையுடையோர்.
கறை-உரல், கருமை.
கறையடி - உரலைப்போன்ற அடியுள்ள யானை.
கன் - கல், தொழில்.
கன் முரம்பு - பருக்கைக்கல் நிறைந்த நிலம்.
கன்றிய மன்னர்-கோபித்த அரசர்.
கன்னற்றுழவை - துழாவியட்ட இனிய அன்னம்.
கன்னிமை - கன்னித் தன்மை.
கன்னியாயம் - கன்னியர்களின் கூட்டம்.
கனங்குழை - கனவிய குழை.
கனலி - சூரியன், நெருப்பு.
கனற்றல் - சுடுதல், வருத்துதல்.
கனைதல் - மிகுதல்.
கா - சோலை, தோட்சுமை.
காஅய் - சுமந்து.
காஅழ் - மேகலை.
காசு - குற்றம், பொற்காசு, மணி, மேகலை.
காஞ்சியத் தெளிவு - காடியிலிருந்து உண்டாக்கும் கள்.
காஞ்சிரம் - எட்டி.
காஞ்சுகி மாந்தர் - சட்டையிட்ட காவலாளர்.
காட்சி - அறிவு, காணப்படுவது.
காட்டல் - அறிவித்தல், கற்பித்தல், காணச் செய்தல்.
காட்டு - குப்பை.
காட்டுமா வல்சியர் - வனவிலங்கு களை உண்போர்.
காடி-புளிங்காடி.
காண்பு - காட்சி.
காணம் - பொன்.
காணி - உரிய நிலம்.
காணிக - காண்க.
காணுதல் - செய்தல்.
காதலர் - அன்புடையோர், கணவர், பிள்ளைகள்.
காதலி - மனைவி.
காதி - வினை.
காப்பர் - காவலாளர்.
காப்பியக்கோசம் - புஸ்தகங்கள் வைக்கும் பை.
காப்பிய வாசனை - காப்பியத்தை வாசித்தல்.
காப்புக்கடம்-காத்தலாகிய கடமை.
காப்புப்பொறி - காப்பாக இடும் முத்திரை.
காம்பு - மூங்கில்.
காமசரம் - மன்மத பாணம்.
காமர் - அழகு, விருப்பம்.
காமரு - விருப்பம் மருவிய.
காமன் கோட்டம் - மன்மதன் கோயில்.
காய்த்துணர் - காய்க்கொத்து.
காயம் - ஆகாயம், உடல்.
காயா - ஒரு மரம்.
கார்வளம் - மேகத்தினால் உண்டாகும் வளம்.
காரிகை - அழகு, நங்கை.
கால் - அடிப்பாகம், காம்பு, காற்று, சக்கரம், மழைக்கால், முளைக் கால், வண்டி.
கால்கடியாளர் - காற்றுப்போன்ற வேகமுடையவர்.
காலகூடம் - கூடபாகல மென்னும் பெயருடையதும் யானைக்கு வருவதுமாகிய ஒரு நோய்.
காலவிசில்லதர் - காலைவருத்தும் சிறிய வழி.
காலேந்திரம் - காலத்தைப் புலப் படுத்தும் இயந்திரம்.
காவலாட்டியர் - காவல்புரியும் மகளிர்.
காவிதிக்கணம் - காவிதிப் பட்டம் பெற்றவர் கூட்டம்.
காவிதிப்பட்டம் - உழுவித்துண் போர்களிற் சிறந்தோர் அரசனாற் பெறுவதொரு பட்டம்; இதனை மகளிரும் பெறுவதுண்டு.

காழ் - ஆரம், காம்பு, குத்துக்
கோல், கைம்மரம், கொட்டை,
தூண், முத்துவடம், வடம், வயி
ரம், விதை.
காழ்ப்படல் - வயிரமுறுதல்.
காழகம் - கரிய ஆடை.
கான் - காடு, வாசனை.
கானம் - இசை, காடு, சோலை.
கானல் - கடற்கரை, மலையைச்
சார்ந்த சோலை.
கிடங்கில் (கிடங்கு) - அகழி.
கிடுகு - கேடகம், மேற்றட்டி.
கிடை - கல்விச்சாலை, நெட்டி.
கிண்கிணி - காலில் அணியும் ஓர்
ஆபரணம்.
கிம்புரி - குவளை, யானைத்தந்தத்
கிரந்தம் - நூல். [துக்கிடும் குவளை.
கிரிகை (கிரிசை) - கிரியை, தொ
கிழி - படம். [ழில்.
கிளத்தல் - வெளியாகச் சொல்லல்.
கிளரி - சொல்லி.
கிளவி - சொல்.
கிளைத்தல் - தோண்டல்.
கிளையில் மன்னர் - பகையரசர்.
கீத சாலை - ஸங்கீத சாலை.
குங்கும ஊறல் - குங்குமப்பூ ஊ
றிய செந்நீர். [திருக்கும் பரணி.
குங்குமக்குவை - குங்குமம் வைத்
குங்குமக்குழங்கல் - குங்குமக் குழ
ம்பு. [வைக் குழைத்த குழம்பு.
குங்குமக்குழையல் - குங்குமப் பூ
குச்சரக்குடிகை - கூர்ச்சரதேயத்
துச் சிற்பம் அமைந்த குடிசை.
குசைத்தொழில் - குதிரைக் கயிற்
றைப் பிடித்து ஓட்டும் செய்கை.
குஞ்சம் - ஈயோட்டி.
குஞ்சரவேட்டம் - யானைவிருப்பம்,
யானை வேட்டையுமாம்.
குஞ்சரவேற்று - யானையேற்றம்.
குட்டம் - ஆழம், குளம். [கை.
குடங்கை - உள்ளங்கை, வளைந்த
குடம் - சிவிகையின் ஒருறுப்பு,
தூணின் ஒருறுப்பு.
குடம்பை - கூடு.

குடவரை - அஸ்தகிரி. [இழுக்கு.
குடிக்கதுவாய் - குடிக்குண்டாகும்
குடிஞை - குடிசை, தூலாமண்ட
குடுமி - உச்சி, தலை. [பம்.
குண்டகழ் - ஆழமான கிடங்கு.
குண்டலம் - ஒருவகைக் காதணி.
குண்டிகை - கமண்டலம்.
குண்டு - ஆழம்.
குத்திய - குத்துக் கோலுடனே
குந்தம் - கைவேல். [செய்த.
குப்பாயம் - கவசம், சட்டை.
குப்புறுதல் - குதித்தல்.
குப்பை - குவியல், மிகுதி.
கும்பம் - குடம், யானை மத்தகம்.
குமாரகாலம் - மகளிருடைய மனத்
தைக் கவரும் கட்டழகு மிக்க
காலம்.
குமிழ் குமிழ்த்தல் - பிறருக்குத்
தோன்றாமல் மறைத்தல்.
குமிழ்த்தல் - கொப்புளித்தல்.
குமைத்தல் - அழித்தல். [தார்.
குய்ம்மனத்தாளர் - வஞ்சமனத்
குய்வளம் - தாளிதத்தின் சிறப்பு.
குயம் - குசம்.
குயிலல் - அமைத்தல், இழைத்தல்,
குயிற்றல் - அமைத்தல். [பதித்தல்.
குரங்கல் - தாழல், வளைதல்.
குரம் - குதிரையின் குளம்பு.
குரம்பை - குடிசை.
குரல் - கதிர், கொத்து.
குரவம்பாவை - குராமரத்தின் பா
வைபோன்ற காய்.
குரவு - குராமரம்.
குரவை - ஒருவகைக் கூத்து.
குரால் - குராற் பசு.
குருகு - குருக்கத்தி, நாரை, பற
குருந்து - குருந்த மரம். [வை.
குரை : அசை.
குரைத்தல் - முழங்கல்.
குல்லை - தஞ்சங்குல்லை, துளவம்.
குலம் - கோயில், பரம்பரை.
குலா - வளைவு.
குலாஅய் - குலாவி, வளைந்து.
குலிகம் - சாதிலிங்கம்.

குவை - பரணி.
குவைக்களம் - கூட்டத்தையுடைய
குழுங்கல் - சேறு. [இடம்.
குழல் - கூந்தல், கூந்தல் முடிக்கும்
வகைகளுள் ஒன்று, வேய்ங்குழல்.
குழிசி - பானை.
குழீஇ - குழுவி, கூடி.
குழை - காதணி, தளிர்.
குழையல் - குழம்பு.
குளவி - காட்டு மல்லிகை.
குளிரி - செங்கழுநீர், பூந்தடுக்கு.
குளிவை - குளுவையென்னும் பற
குளிறல் - முழங்கல். [வை.
குற்ற - பறித்த.
குற்றி - குறியவாயையுடைய பாத்
குற்று - பறித்து. [திரம்.
குற்றேல் - குற்றேவல்.
குறங்கு - துடை.
குறளி - குறிய வடிவமுடையவள்.
குறிப்புடை வெந்நோய் - காமநோய்.
குறிப்பெழுத் தோலை - சங்கேத
மாக எழுதிய வாக்கியங்கள் அட
ங்கிய திருமுகம்.
குறுக்கை புக்க கொளு - புலி வடி
வமைந்த மூட்டுவாய்.
குறுகல் - அடைதல்.
குறும்பர் - குறுநில மன்னர், வேடர்.
குறும்பு - சிற்றரண், பாலைநிலத்
தூர்.
குறும்பொறை - சிறிய பாறைகள்
குறுவியர் - சிறியவேர்வைத்துளி.
குறை - காரியம், குற்றம், துண்
குன்றி - குன்றி மணி. [டம்.
கூகை - கோட்டான். [ருத்துவாய்.
கூட்டம் - கூடுதல், புணர்ச்சி, பொ
கூட்ட மன்னர் - சங்க மன்னர்.
கூட்டு - கொள்ளை. [டின் ஒருபகுதி.
கூடம் - கப்பலின் மேற்றளம், வீட்
கூத்தப்பள்ளி - நாடகமாடும் இடம்.
கூத்தி - கூத்தாடுபவள்.
கூந்தற் பிச்சம் - மயிற் பீலியாற்
கட்டப்பட்ட ஒருவகை விருது.
கூப்புதல் - கைகுவித்தல்.
கூம்பு - பாய்மரம்.

கூய் - கூவி.
கூர்ப்பு - மிகுதி.
கூரல் (கூருதல்) - மிகுதல்.
கூரி - மிக்கு. [பண்டம்.
கூலம் - அங்காடி வீதி, கரை, பல
கூல வாழ்நர் - பல பண்டம் விற்
கூவல் - கிணறு. [கும் வணிகர்.
கூவைச்சுண்ணம் - கூவைக் கிழ
கூழ் - உணவு. [ங்கு.
கூழ்படல் - கலக்கமுண்டாகல்.
கூழை - மயிர்.
கூற்பாதிரி - வளைவுள்ள பாதிரி
கூற்றம் - யமன். [மலர்.
கூற்று - சொல், யமன்.
கூறுடாயம் - கூறுகூறாக நின்று
விளையாடும் கூட்டங்கள்.
கூறை - ஆடை.
கெடிறு - ஒருவகை மீன்.
கெடுத்தல் - இழத்தல், தப்புதல்
கெழீஇ - கெழுவி.
கெழுமல் - மயங்கல்.
கேண்ம் - கேளும்.
கேழ் - நிறம்.
கேள்வி - வீணை, வேதம்.
கேளன் மன்னன் - பகைமன்னன்.
கை - ஒப்பனை, காம்பு, பக்கம், பந்
தடிக்குரிய பரிபாஷை.
கைதவம் - கபடம். [கும் சமயம்.
கைதுவமயம் - கையொழிந்திருக்
கைப்புழி - செலுத்துமிடம்.
கைபுனைதல் - அலங்கரித்தல், செப்
பஞ் செய்தல்.
கைபோகல் - தேர்ச்சி பெறுதல்.
கைம்மாறல் - இடம் மாறுதல்.
கைம்முதல் - கை, கையின் அடிப்
கையகலல் - நீங்கல். [பக்கம்.
கையது வீழ்தல் - உறங்கல்.
கையரித்தல் - கையால் அரித்தல்.
கையறல் (கையறவு) - செயலறு
கையாப்பு - கைக்கட்டு. [தல்.
கையிகத்தல் - நீங்குதல்.
கைவரை - செயலின் அளவு, யானை.
கைவிதிர்த்தல் - கையை அசைத்
தல்.

கைவினை - கைத்தொழில், சிற்பத்தொழில்.
கொகுடி - ஒருவகை முல்லை.
கொங்கு - தேன், பூந்தாது, மணம்.
கொட்டம் - ஒருவகைப் பெட்டி, ஒருவகை மரம், ஒழுகுதல்.
கொட்டாரம் - தானியக் களஞ்சியம்.
கொட்டில் - கூடாரம்.
கொட்டுமடி - கொட்டிமடித்த மடி.
கொட்டை - குமிழ், தாமரையினுட் கொட்டை, யானையின் அணிவிசேடம்.
கொட்பு - சுழற்சி.
கொடி - ஒழுங்கு, ஓராபரணம், கொழுந்து, வரிசை.
கொடிஞ்சி (கொடுஞ்சி) - தாமரை மொட்டின் வடிவமாகச் செய்யப்பட்டுத் தேரின்முன் நடப்பட்டுள்ளதோருறுப்பு.
கொடிப்படை - முன்படை.
கொடுக்கு - மண்டபத்திலுள்ள சிற்ப விசேடம்.
கொடுங்குழை - வளைந்த குழை.
கொடுப்பு - கொடுத்தல்.
கொடைக்கடம் - கொடுத்தலாகிய கடமை.
கொடையகத்தோன் - பொருளை வழங்கும் உள்ளத்தவன்.
கொண்டல் - கொள்ளுதல், மேகம்.
கொண்டு - தொடங்கி.
கொண்டோன் - கணவன்.
கொண்மூ - மேகம்.
கொந்து - கொத்து.
கொப்புள் - கொப்புளம்.
கொம்மை - குவிதல்.
கொய்யல் - கொய்யாமரம்.
கொல்லி - துடைக்குந் துணி.
கொல்லை - முல்லை நிலம்.
கொழுநன் - கணவன்.
கொள்கை - மேற்கோள், விரதம்
கொள்ளாவேந்தன் - பகைவேந்தன்.
கொள்ளை - மிகுதி.
கொளீஇ - கொண்டு, கொளுத்தி.
கொளு - பொருத்துவாய்.
கொளுத்தல் - பொருத்தல்.
கொளுவல் - கொளுத்தல், பொருத்தல்.
கொளை - நாண்கட்டு.
கொற்றம் - அரசுரிமை.
கொற்றவி - அரசி.
கொற்றவை - துர்க்கை.
கோ - அரசன், மேன்மை.
கோங்கந்தட்டம் - கோங்கின் தட்டுப்போன்ற மலர்.
கோசம் - புத்தகம்.
கோசிகம் - பட்டு.
கோட்டகம் - குளம்.
கோட்டம் - கோயில், வளைவு.
கோட்டி - கூட்டம், கூடுமிடம்.
கோடணை - கோஷம்.
கோடல் - காந்தள், கொள்ளுதல், வாங்குதல்.
கோடி - முனை.
கோடிகம் - பூந்தட்டு.
கோடிகர் - ஆடை நெய்வோர்.
கோடித்தல் - அலங்கரித்தல்.
கோடியல் ஊர்தி - யானைத் தந்தத்தாற் செய்த வாகனம்.
கோடு - கரை, கொம்பு, நீர் வீசும் கொம்பு, யானைத் தந்தம்.
கோணச் சந்தி - வளைந்து கூடும் இடம்.
கோணம் - குறுந்தெரு, வளைவு.
கோணவட்டம், (கோணுவட்டம்) - ஒருவகை விருது.
கோணை - வன்மை.
கோதை - கூந்தல், மாலை.
கோப்பு - வரிசை.
கோப்பெருந்தேவி - பட்டமகிஷி.
கோபம் - இந்திர கோபப்பூச்சி.
கோம்பி - பச்சோந்தி.
கோமகன் - அரசன், தலைவன்
கோமாள் - அரசி, தலைவி.
கோய் - பரணி.
கோயில் - அரண்மனை, ஆலயம்.
கோல் - அம்பு, குத்துக்கோல், கொம்பு, செங்கோல், தடி, திரட்சி, யாழ்நரம்பு.
கோலம் குயிற்றல் - அலங்கரித்தல்.
கோலவர் - கையிற் கோல்கொண்டு நிற்கும் ஏவலாளர்.
கோவம் - இந்திர கோபப்பூச்சி, கோபம்.

கோள் - கிரகம், குலை, கொள்கை, கொள்ளுதல்.
கோற்றேன் - கொம்புத் தேன்.
கோற்றொடி - திரண்ட வளை.
கோறும் - கொல்வோம்.
கௌவை - முழக்கம்.
சக்கரம் - ஆணை.
சங்க படவம் - ஒரு வாத்தியம்.
சங்கம் - கூட்டம், சங்கு.
சட்டகம் - சட்டம், வடிவு.
சண்டவேந்தன் - பிரச்சோதனன்.
சணை - கடலை.
சத்தி - கொடிநாட்டும் குழி, மாடத்திலுள்ள சூலம். [குடம்.
சத்திக்குடம் - சூலம் நாட்டிய
சத்திமுகம் - நிலத்திலெழுதும் சித்திரங்களுள் ஒன்று.
சதங்கைத்தாமம் - சதங்கைமாலை.
சதி - தாளவொற்று.
சதிரம் - சதுரம்.
சதுக்கம் - நாற்சந்தி.
சதுர்த்தியிருத்தல் - மணம்செய்து நான்கு நாள் விரதம் இருத்தல்.
சதுரச்சந்தி - நாற்சந்தி.
சந்தப்பேழை - ஆடைப் பெட்டி.
சந்தம் - அழகு, சந்தனம். [தளிர்.
சந்தனக்குழை - சந்தனமரத்தின்
சந்தனக்குறை - சந்தனக் கட்டை.
சந்தனச் சார்வணை - சந்தனத்தாற் செய்த சாய்பலகை. [தனம்.
சந்தனத் தேய்வை - அரைத்த சந்
சந்தனப்பீடிகை - சந்தனப் பலகையாற் செய்த ஆசனம்.
சந்தி - சந்து, தெருக்கள் கூடுமிடம், முடக்கு.
சந்து - ஆபரணத்தின் மூட்டுவாய், [சந்தனம்.
சமம் - போர்.
சமரம் - போர்.
சமழ்த்தல் - நாணுதல்.
சமழ்ப்பு - ஒளி மழுங்கல்.
சமிதை - ஓமத்துக்குரிய விறகு.
சலம் - குற்றம், துக்கம்.
சவட்டல் - அழித்தல்.
சவரர் - வேடர்களில் ஒரு சாதியார்.

சனம் - மனிதர்கள்.
சாஅய் - மெலிவுற்று. [டம்.
சாத்து - கூட்டம், வணிகர் கூட்
சாத்துக்கோய் - சந்தனம் வைக்கும் பரணி.
சாத்துவினைக் கம்மியன் - வாசனைச் சந்தனத்தை அமைக்கும் கைவினையுடையோன்.
சாதகப்பட்டிகை - சாதகமெழுதிய
சாதம் - பிறப்பு. [பத்திரிகை.
சாதர் - சாதராவென வழங்கும் உயர்ந்த ஆடை.
சாதனை - சாதித்தல், பயிற்சி.
சாதிங்குலிகம் - சாதிலிங்கம்.
சாந்தம் (சாந்து) - சந்தனம்.
சாந்தம்மி - சந்தனக்கல்.
சாந்தாற்றி - ஒருவகை விசிறி.
சாபம் - வில்.
சாம்பல் - வாடல்.
சாய்ஞ்சு - சாய்ந்து.
சாய் - சாயல், மென்மை.
சாயல் - மென்மை.
சார் - பக்கம்.
சார்ங்கம் - மான், வில்.
சார்ச்சி - சார்தல்.
சார்வணை - சார்தற்குரிய அணை.
சாரணர் - ஒருவகைத் தேவசாதி
சாரி - உலாவுதல். [யார்.
சாரியை - கதி.
சாரியை விலக்கு - பகைவருடைய கதியை விலக்குதல்.
சால் - படைச்சால்.
சால்பு (சால்வு) - தகுதி.
சாலி - அரிசி, ஒரு நாடு, நெல்.
சாலிகை - கவசம். [சோறு.
சாலி யாழ்பதம் - நெல்லரிசிச்
சாலேகம் - சாளரம், சிறுதேக்கு.
சாற்றல் - அமைத்தல், அறைதல்,
சாறு - விழா. [கூறுதல்.
சீக்கம் - உறி.
சிக்கரத் தெளியல் - உசலம்பட்டை அல்லது முருங்கைப்பட்டையிலிருந்து உண்டாக்கிய கள்.
சிகழிகை - மயிர்முடி.

சிகை - முச்சி, மயிர்.
சிங்கச்சுவணம் - உயர்ந்த ஒரு வகைப் பொன்.
சித்திக்கிழவன் - ஜினதேவன்.
சித்திரக்கண்டம் - சித்திரமெழுதிய திரை.
சித்திரக் கம்மம் - ஓவிய வினை.
சித்திரக் கிழி - சித்திரப் படம்.
சித்திரக் குரம் - அதிசய நடையினையுடைய குளம்பு.
சித்திரக் குலா - அழகிய வளைவு.
சித்திரக்கூடம் - சிற்பவினையமைந்த வீட்டின் பகுதி.
சித்திரம் - அலங்காரம், இரகசியம், ஓவியம், சிற்பம், விசித்திரம்.
சிதர் - வண்டு.
சிதர்தல் - சிதறுதல்.
சிந்துவாரம் - ஒருவகை நொச்சி.
சிப்பம் - சிற்பம்.
சிம்பு - சிலாம்பு.
சிம்புள் - சரபம்.
சிம்புளித்தல் - கண்ணை மூடுதல்.
சிரமம் - இளைப்பு.
சிரல் - மீன்கொத்திக் குருவி.
சில்கி - குறைந்து, சிலவாகி.
சில்லை - இழிவு.
சிலதர் - ஏவலாளர்.
சிலதி - ஏவன் மகள்.
சிலம்பல் - முழங்குதல். [கம்.
சிலம்பு - காலணி, மலை, மலைப்பக்
சிலை - மலை, வில், வில்லின் தழும்பு.
சிலைச்சாபம் - சிலையென்னும் மரத்தாற் செய்த வில்.
சிலைத்தல் - ஒலித்தல்.
சிலைப்பொறி - வில்விரேகை.
சிவணல் - ஒத்தல், கலத்தல்.
சிவிகை - பல்லக்கு. [ளுள் ஒன்று.
சிவிறிப் பொறி - நீர்வீசு கருவிக
சிற்பக்கயிறு - சிற்ப சாஸ்திரம்.
சிற்றாண் - சிற்றுண்டி.
சிறுக்கி - சிறுகச் செய்து. [கொடி.
சிறு செங்குரலி - கருந்தாமக்
சிறு சேடம் - ஒரு மலர்மரம்.
சிறுநன்று - சிறிய உபகாரம்.
சிறுமுதுக் குறைவி - இளம்பிராயத்திலேயே பேரறிவு வாய்க்கப் பெற்றவள். [பக்கம், வேலி.
சிறை - அணை, சிறகு, சிறைச்சாலை,
சிறைக்கோட்டம் (சிறைப்பள்ளி) - சிறைச்சாலை.
சின்னம் - பொற்பொடி.
சினம் - கோபம், வெம்மை.
சினவுநர் - கோபிப்போர்.
சினை - உறுப்பு, கருப்பம், கிளை,
சீத்தல் - ஒழித்தல். [முட்டை.
சீதம் - கருப்பஞ் சாற்றிலிருந்துண்டாக்கும் கள், குளிர்ச்சி.
சீதை - ஒரு நதி.
சீதோதகை - ஒரு நதி.
சீப்பு - கதவுக்கு வலியாக உள்வாயிலே இடப்படும் மரம், மயிர்
சீயம் - சிங்கம். [வாரும் கருவி.
சீர் - அழகு, கனம், சிறப்பு, புகழ்.
சீர்க்கம் - சிறப்ப விசேடம்.
சீர்ப்பு (சீர்மை) - சிறப்பு.
சீரை - மரவுரி.
சீலம் - உயர்ந்த ஒழுக்கம், யானை
சீறடி - சிறிய அடி. [யின் இயல்பு.
சூட்டி - முன்றலையில் அணியும் ஓராபரணம்.
சுட்டிச்சுண்ணம் - உடம்பைத் தூய்மை செய்தற்குரிய வாசனைப் பொடி. [வெயில்.
சுடர் - ஒளி, சூரியன், விளக்கு,
சுடர்தல் (சுடரல்) - ஒளி விடுதல்.
சுடர் மாட்டல் - விளக்கேற்றல்.
சுண்ணம் - சூர்ணம், வாசனைப்
சுணங்கு - தேமல். [பொடி.
சுதை - சுண்ணம்பு.
சும்மை - முழக்கம்.
சுமடு - சும்மாடு. [கவர்த்த வழி.
சுரக்கவலை - பாலைநிலத்திலுள்ள
சுரம் - பாலைநிலம்.
சுரிகை - உடைவாள்.
சுரிதல் - சுழிதல்.
சுருங்கை - சுரங்கம், நிலத்தினுட் செல்லும் வழி.
சுரும்பு - ஒருவகை வண்டு.

சுரை - உட்டுளையாகிய பொருள், சுரத்தல். [பழக்கம்.
சுவடு - அடையாளம், உபாயம்,
சுவணம் - பொன்.
சுவணர் - பொன்னணியுடையோர்.
சுவல் - பிடர்.
சுவேகம் - உறை.
சுழற்றி - சுழற்சி.
சுள்ளி - ஆச்சாமரம், மராமரம்.
சுளிதல் - கோபித்தல்.
சுறுமீன் - மகரம்.
சூட்டு - உச்சிக்கொண்டை, தலையில் அணியும் ஆபரணம், வட்
சூடகம் - கைவளை. [டை.
சூர் - அச்சம், சூரபன்மா, தெய்வ
சூரல் - பிரம்பு. [மகளிர்.
சூல் - கர்ப்பம்.
சூழ்ச்சி - இண்டை, உபாயம், யோ
சூழி - தலையணி. [சனை, வஞ்சனை.
சூளாமணி - முடிமணி.
சூறை (சூறைவளி) - சுழல்காற்று.
செக்கர் - செவ்வானம். [குழம்பு.
செங்களி - பாக்கை ஊறவைக்கும்
செங்குலிகம் - சாதிலிங்கம்.
செங்கேழ் - சிவந்த நிறம்.
செங்கொடுவேரி - ஒரு பூடு, ஒரு மலர் மரம். [படைச்சால்.
செஞ்சால் - நேராகச் சென்ற
செஞ்சிவப்பு - மிக்க சிவப்பு.
செண்ணம் - வடிவு.
செத்து - மழுங்கி.
செதும்பல் - சின்னீர்.
செதும்பு - சேறு.
செதுவல் மரம் - பட்டமரம்.
செந்தீ முதல்வர் - அந்தணர்.
செந்நூற் பாரம்-செந்நூலாற் செய்யப்பட்ட ஒருவகைக்கேடகம்.
செப்பகல் - செம்பாலாகிய அகல்.
செப்படர் - செம்பாலாகிய தகடு.
செப்பு-ஓர் உலோகம்,பாத்திர வகையுள் ஒன்று, பூஞ்செப்பு. [மை.
செம்மல் - தலைமை, தலைவன், பெரு
செம்மாந்திருத்தல் - இறுமாந்திருத்தல்.

செம்முகம் - எதிர்முகம், சிவந்த முகம்.
செய்கைச் சூழ்ச்சி - மறைவாகச் செய்யும் செயலை ஆலோசித்தல்.
செய்வினை மடிந்தோர் - செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமற் சோம்பினவர்கள்.
செயலை - அசோகு.
செயிர் - குற்றம், கோபம். [தல்.
செயிர்த்தல் (செயிர்ப்பு) - கோபித்
செருக்கல் - கர்வங்கொள்ளல், மய
செருத்தல் - பசுவின் மடி.[ங்குதல்.
செருந்தி - ஒரு மரம்.
செருமல் - செருகல்.
செல்கதி மந்திரம் - நற்கதியிற் செல்லுதற்குக் காரணமான மந்
செல்சார்வு - பற்றுக்கோடு. [திரம்.
செல்லல் - துன்பம்.
செல்லா வாழ்க்கை - வறிய வாழ்க்
செல்வன் - அருகதேவன். [கை.
செல்வு - செல்வம்.[டான இளைப்பு.
செலவயா - பிரயாணத்தால் உண்
செலற்பாணி - செல்லும் காலம்.
செவ்வி - சமயம், செம்மை, புதுமை.
செவி புதைத்தல் - காதைப் பொத்
செவி முதல் - கர்து. [துதல்.
செற்றம் - நெடுங்காலம் நிகழும்
செற்றல் - நெருங்கல். [பகை.
செற்றி - செறித்து.
செறிப்பு - அடக்கம்.
செறு - கோபம், வயல்.
செறுநர் - பகைவர்.
சென்றீ - செல்.
சே - ஒரு மரம்.
சேக்கை - தங்குமிடம், படுக்கை.
சேடகம் - கேடகம்.
சேடம் - நிர்மாலியம்.
சேடி - தோழி, வித்தியாதர உல
சேடு - பெருமை. [கம்.
சேண் - நெடுந்தூரம்.
சேத்தல் - சிவத்தல், தங்குதல்.
சேதடி - சிவப்பாகிய அடி.
சேதா - செவ்விய பசு.

சேதி - சமவசரணம், சினாலயம்.
சேதியம் - சினாலயம்.
சேபாலிகை - நீர் நொச்சி.
சேமம் - பாதுகாப்பு.
சேய் - நெடுந்தூரம், பிள்ளை.
சேயோன் - முருகன்.
சேரார் - பகைவர்.
சேரி - தெரு.
சேலம் - ஆடை
சேவகம் - காப்பு, வீரம்.
சேவல் - ஆண் பறவை.
சேறல் - செல்லுதல், தங்கல்.
சோத்து - பொன்.
சோர்தல் - நழுவல்.
ஞமலி - நாய்.
ஞாட்பு - போர், போர்க்களம்.
ஞாண் - நாண்.
ஞாயில் - எய்துமறையும் சூட்டு.
ஞாழ் - யாழ்.
ஞாழல் - குங்கும மரம், புலிநகக் கொன்றை.
ஞானவல்லியம் - அறிவின் ஆற்றல்.
ஞிமிறு - வண்டு.
ஞெமிடல் - நெருடல்.
ஞெமிரிய - பரந்த.
ஞெமை - ஒரு மரம்.
தக்கணம் - தெற்கு.
தக்கணை - தட்சிணை.
தக்கோலம் - ஒருவகை வாசனைப் பொருள்.
தகரம் - ஒருவகை மரம், ஒருவகை வாசனைப் பொருள், மயிர்ச் சாந்து.
தகை - அழகு, தகுதி.
தகைப்பு - தடுத்தல், வீடுகளின் கட்டு.
தகை மலர் - கட்டிய மலர்.
தட்டம் - தட்டு.
தட்டை - கிளிகடி கருவி.
தட்ப - தடுக்க.
தட்பம் - குளிர்ச்சி.
தடம் - தடாகம், விரிவு, விளிம்பு.
தடவு - ஓமகுண்டம், வளைவு.
தடாஅக்கண்ணி - வளைந்தகண்ணி.
தடி - இறைச்சி.
தடைஇய - தடுத்த.
தண்கதிர் - சந்திரன்.
தண்டம் - அபராதம், சேனை, பிராயச்சித்தம்.
தண்டல் - அலைத்தல்.
தண்டாரணியம் - தண்டகாரணியம்.
தண்டிகை - சிவிகையில் ஒருவகை.
தண்டு - கதையென்னும் ஆயுதம்.
தண்ணுமை - ஒரு தோற் கருவி.
தண்பணை - மருத நிலம்.
தணக்கம் - ஒருவகை மரம்.
தணத்தல் - நீங்கல்.
தணி - தண்மை.
தத்தை - வாசவதத்தை.
ததர்தல் - சிதறல்.
ததும்பல் - ஒலித்தல்.
தந்திரம் - உபாயம், சேனை.
தந்தீக - தருக.
தப்பல் - இறத்தல்.
தப்புதல் - கொல்லுதல்.
தம் - தாரும்.
தம்மனை - தாய்.
தம்முன் - தமையன்.
தம - தம்பொருள்கள்.
தமரன்மாக்கள் - பகைவர்.
தமனியம் - பொன்.
தமாலம் - பச்சிலை மரம்.
தயங்கல் - ஒளிவிடல்.
தரீஇ - வருவித்து.
தருப்பணக் கிழி - அவல்முடிப்பு.
தலைக்கடை - முதல் வாயில்.
தலைக்கை - தலைமை.
தலைத்தது - தோன்றியது.
தலைத்தலை - இடந்தோறும், மேன்மேலும்.
தலைத்தாள் - முன்னிலை.
தலைதுளக்கல் - சிரக்கம்பம் செய்தல்.
தலைவூரல் - நிரம்பல்.
தலைவைத்தல் - ஏற்பித்தல்.
தவ்வை - தமக்கை.
தவல் - நீங்கல்.
தவனியம் - தமனியம்.
தவிர்தல் - தங்குதல்.
தவிர்ப்பு - நிறுத்தல்.
தழை - ஓர் உடை விசேடம், தழை விரவித் தொடுத்த மாலை.
தளவு - செம்முல்லை.
தளி - துளி.
தளைத்தல் - கட்டல்.

தறுவாய் - சமயம்.
தன்னையர் - தமையன்மார்.
தா - நீக்கம்.
தாஅம் - தாகம்.
தாங்கல் - தடுத்தல்.
தாபதப்பள்ளி - முனிவர் ஆச்சிரமம்.
தாமவல்லி - மாலைகளையுடைய கொடி.
தாயம் - உரிமை.
தாயின் மாட்டம் - தாய் வீடு.
தார் - இலேகை, கிண்கிணி மாலை, பறவைகளின் கழுத்திலுள்ள வரை, மார்பின் மாலை.
தாரம் - பல பண்டம்.
தாரை - நீர்த்தாரை, நீர்வீசு கருவி.
தாலம் - தட்டு.
தாவகம் - காட்டுத் தீ.
தாவம் - வெப்பம்.
தாழ் - கதவின் தாழ்.
தாழ்த்தல் - தங்கச் செய்தல்.
தாழும் - தாழ்தல்.
தாழம்பறை - தாழ்ந்த ஓசையை யுடைய பறை.
தாழல் - துன்புறல்.
தாழி - பெரிய மண் பானை.
தாள் - அடி, மரத்தின் அடி, முயற்சி.
தான்றி - ஒரு மரம்.
தானகம் - தானம்.
தானம் - இடம், கொடை, மதம்.
தானவர் - வித்தியாதரர்.
தானை - ஆடை, படை.
திகிரி - சக்கரம், சிறு மூங்கில்.
திகை - திகைத்தல்.
திகைப்ப - திகைப்ப.
திடர் - மேடு.
திணை - ஒழுக்கம், குலம், பிரிவு, வீடு.
திணைகள் - உத்தியோகப் பிரிவினர்.
தித்தி - தேமல்.
திதலை - தேமல்.
திமிசு - ஒருவகை மரம்.
திமிர்தல் - பூசுதல்.
திரங்கல் - உலர்தல்.
திரிமருப்பிரலை - முறுக்கிய கொம்பையுடைய ஆண்மான்.
திருத்தல் - அணிதல்.
திருந்தடி - இலக்கணம் நிரம்பிய அடி, பிறக்கிடாத அடி.
திருப்பேருலகம் - சித்த பதவி.
திருமண்ணு நறுநீர் - திருமஞ்சன நீர்.
திருமணுத்தானம் - நீராடியபின் செய்யும் தானம்.
திருவன் - ஸ்ரீமான்.
திருவாணுய மார்பன் - திருமகளுக்குப் புகலிடமாகிய மார்பையுடையவன்.
திருவில் - இந்திரவில்.
திருவிழிப்போர் - செல்வத்தைப் பழிப்பவர்.
திரை - அலை, திரைச்சீலை, வெற்றிலை.
தில்லை - ஒருவகை மரம்.
திலகம் - ஓராபரணம், மஞ்சாடி மரம்.
திலதம் - நெற்றிப்பொட்டு.
திவவு - யாழ், நரம்புக் கட்டு.
திவளல் - அசைதல்.
திளைத்தல் - அளவளாவுதல், இன்புறல்.
திறம் - ஆற்றல், இயல்பு, பண்ணின் விருந்து பிறக்கும் இசை வகை, வகை.
திறை - கப்பம்.
தின்மை - தீமை.
தீ - நெருப்பு, விடம்.
தீயழற்செல்வன் - சூரியன்.
தீர்க்கு - தீர்ப்பேன்.
தீரம் - கரை.
தீரிய - விடும்படி.
தீவயிரூர்த்திய திறலோன் - அருச்சுனன்.
தீவிய - இனிய.
தீவினையாளர் - அக்கினி காரியம் செய்வோர்.
தீவேள் சாலை - யாகசாலை.
துகள் - குற்றம்.
துச்சில் - ஒதுக்கிடம்.
துஞ்சரித்தல் - விழித்துக்கொள்ளல்.
துஞ்சு - தூக்கம்.
துடக்கல் - கட்டல்.
துணர் - பூங்கொத்து.
துணி - துண்டம்.
துணை - இரண்டு, கணவன், மனைவி.
துத்தம் - ஒரு மருந்துப் பொருள்.
துப்பு - பவழம், தூய்மை, வன்மை.
துப்புரவு - நுகர் பொருள்கள்.

துமித்தல் - துணித்தல்.
துய்க்கடை - பஞ்சின் நுனி.
துயல்வருதல் - அசைதல்.
துயிலெடை மாக்கள் - பள்ளி
யெழுச்சி பாடுவோர்.
துயிலேற்றல் - கண்விழித்தெழு
துயிற்பதம் - துயிலும் காலம். [தல்.
துரம் - ஒருவகை இசைக் கருவி.
துருக்கம் - வாசனைப்பொருள்
விசேடம். [வகை.
துருத்தி - நீர்வீசு கருவிகளுள் ஒரு
துரூஉ - துரு. [உறுப்பு.
துலாம் - கட்டிடத்தின் ஒருவகை
துவர்க்காயும்பல் - பாக்குத் தொ
துவர்க்கை - செந்நிறம். [குதி.
துவர்ச்சிகை - ஒருவகை மருந்துப்
பொருள்.
துவரை - தானியங்களுள் ஒன்று.
துவன்றல் - பொருந்தல்.
துவைத்தல் - ஒலித்தல்.
துழவை - துழாவியட்ட அன்னம்.
துளக்கம் - நடுக்கம். [பச் செய்தல்.
துளுப்பிடுதல் - கலக்குதல், துளும்
துறக்கக் கிழவன் - இந்திரன்.
துறக்கம் - சுவர்க்கம்.
துறத்தல் - இறத்தல், நீத்தல்.
துறுகல் - உருண்டைக்கல்.
துறும்புபு - நெருங்கி.
துறுமல் - செறிதல்.
துன்னார் - பகைவர்.
துனி (துனிப்பு) - முதிர்ந்த பிண
துனிவு - துன்பம், வெறுப்பு. [க்கு.
தூசக் குடிஞை - வெள்ளிய ஆடை
யாலாகிய சிறு குடிசை.
தூசு - ஆடை, குற்றம்.
தூதை - ஒருவகைப் பாத்திரம்.
தூப்பதம் - ஊனாகிய உணவு.
தூம்பு - பெருவங்கியம்.
தூமம் - புகை.
தூய் - தூவி.
தூய்மை - வெண்மை.
தூவி - மெல்லிய இறகு.
தெங்கினூறல் - தென்னங்கள்.
தெய்வத்தானம் - கோயில்.
தெய்வதை - தேவதை.
தெரியல் - மாலை.
தெரிவு - தெரிதல்.
தெருட்டல் - தெளியச் செய்தல்.
தெருமரல் - மயங்கல்.
தெருவம் - தெரு.
தெவ்வப்படுதல் - கைக்கொள்ளு
தெளியல் (தெளிவு) - கள். [தல்.
தெற்றி - திண்ணை.
தெற்றிய - பிணைத்த.
தென்மலை - பொதியில்.
தேசிககுமரன் - ஆசிரியனாகிய
அரசகுமரன்.
தேசிகச்சேரி (தேசிகப்பாடி) - பல
தேயத்து வணிகர் இருக்கும்
தெரு. [ஒளி, கௌரவம்.
தேசிகம் - இசைவகையுள் ஒன்று,
தேம் - தேன்.
தேம்பல் - வருந்துதல்.
தேய்வை - அரைத்தது.
தேர்க்காலாழி - தேர்ச் சக்கரம்.
தேவகுலம் - தேவாலயம்.
தேவதானம் - தேவாலயம்.
தேற்றா - ஒரு மரம்.
தேறல் - கள், தெளிதல், தேன்.
தேன் - கள், வண்டு.
தேனெய் - தேன்.
தேனெய் விதவை - தேனோடு கல
ந்த பாற்சோறு.
தொட்டிமை - அழகு.
தொடக்கு - பிணைப்பு.
தொடர் - ஓராபரணம், சங்கிலி,
வரிசை.
தொடரி - விடத்தேதொடரியென்
னும் மரம்.
தொடி - தோள் வளை, பூண், வீர
தொடுத்தல் - தொடங்கல். [வளை.
தொடை - கட்டு, தொடுத்தல், நர
ம்பு, மாலை.
தொடைப் பெருவாயில் - கோபுர
தொத்து - கொத்து. [வாயில்.
தொய்யில் - தோளில் சந்தனக்குழ
ம்பு முதலியவற்றால் எழுதுங்
தொலைச்சி - நீக்கி. [கோலம்

தொழில் நுகம் - தொழிலாகிய கடமை.
தொழுதி - தொகுதி.
தொறு - நிரை.
தொன்று - பழமை.
தோட்டி - அங்குசம்.
தோடு - தொகுதி, பூவிதழ்.
தோம் - குற்றம்.
தோமரம் - எறியும் ஆயுதம்.
தோரை - வடம்.
தோன்றி - செங்காந்தள்.
நக்கிரப்பலகை - முதலை வடிவமாகச் செய்யப்பட்ட பலகை.
நகர் - அரண்மனை, கோயில்.
நகர்காணேணி - ஏறி நகர் முழுதையும் பார்த்தற்குரிய ஏணி.
நகரி - நகரம்.
நகாஅர் - நகார்.
நகுமலர் - மலர்ந்த மலர்.
நகுமொழி - பரிகாச மொழி.
நகூஉம் - சிரிக்கும்.
நகை - ஒளி, சிரிப்பு, மகிழ்ச்சி, முத்து.
நகைத்தாமம்-முத்துவடம்.
நகைப்பதம் - மலரும் பருவம்.
நச்சுநர் - விரும்புபவர்.
நசை - விருப்பம்.
நசைஇ - விரும்பி.
நசைஇய - விரும்பிய.
நட்டு - நட்டம், நட்பு.
நடம் - கூத்து.
நடாஅம் - நடத்துகின்ற
நடாஅய் - நடத்தி.
நடு - இடை.
நடுக்கு - நடுக்கம்.
நடுகல் - இறந்த வீரர்க்குநடப்பட்ட கல்.
நடுவண் - நடு.
நடைப்படம் - நடைப் பாவாடை.
நண்ணார் - பகைவர்.
நத்து - சங்கு.
நந்தல் - குறைதல், பெருகல்.
நந்தி - நந்தியாவட்டம், வளர்ந்து.
நந்திவட்டம் - நந்தியாவட்டம்.
நமர் - நம்மவர்.
நயக்கும் வாய் - விரும்பும் வழி.
நயப்பு - விருப்பம்.
நயம் - ஈரம்.
நயவர - விருப்பம் வர.
நயனம் - கண்.
நரந்தை - நாரத்தம்புல்.
நரலல் - ஒலித்தல்.
நல்குரவு - வறுமை.
நல்கூர் கட்டழல் - வறுமையாகிய மிக்க நெருப்பு.
நல்லவை - சான்றோர் சபை.
நல்விலைச்சேரி - வணிகர் தெரு.
நலத்தகு கிழமை - நன்மை தக்க உரிமை.
நலம் - அழகு.
நவியம் - கோடாலி.
நவிர் - கூந்தல்.
நவிலல் - பயிலுதல்.
நள்ளென்யாமம்-நள்ளென்ற ஓசையுள்ள யாமம்.
நளி - செறிவு, பெருமை.
நற்கு - நன்கு.
நற்பு - நன்மை.
நறவம் - ஒரு மரம்.
நறவிளை தேறல் - தேனிலிருந்து விளைந்த தெளிவு.
நறவு - கள், தேன், நறவமென்னும் மரம்.
நறுநீர் - பனிநீர்.
நறை - ஒரு மரம், மணம்.
நன்கனம் - நன்றாக.
நன்பல - நன்றாகிய பல.
நன்பு - நன்மை.
நன்றி - நன்மை.
நன்னர் - உபகாரம், நன்றியுடையோர்.
நாகத்தல்லி - நாகப்பூவின் அகவிதழ்.
நாகம் - ஒருவகை மரம், நாகலோகம், பாம்பு.
நாகு - இளமை.
நாகுணம் - ஒரு மருந்துச் சரக்கு.
நாசி - மாடத்தின் ஓர் உறுப்பு.
நாண் - ஓராபரணம், கயிறு, நாணம்.
நாண்மகிழ் - காலையில் உண்ணும் காமபானம்.
நாண்மலர் - அன்றலர்ந்த மலர்.
நாண்மீன் - நட்சத்திரம்.
நாப்பண் - நடு.
நாமமோதிரம் - பெயர் பொறித்த மோதிரம்.
நாமாவளி - ஒருவகை யாபரணம்.
நாய் - சூதாடு கருவியாகிய நாய்.

நாய்கன் - வணிகன்.
நாயில் - ஞாயில்.
நாரத கீதம் - நாரத சிக்ஷை.
நாராசம் - இருப்புக் கம்பி.
நால்புறல் - தொங்குதல்.
நாலல் - தொங்குதல்.
நாவலந் தண்பொழில் - சம்புத்தீவு.
நாவாய் - கப்பல்.
நாழிகை - அம்பறுத் தூணி.
நாழிகைத் தூம்பு - நீர்வீசு கருவி.
நாளணி - காலையிற் செய்யப்படும் அலங்காரம்.
நாளிரை - காலையிலுண்ணும் இரை.
நாற்றல் - தொங்கவிடுதல்.
நாறல் - தோன்றுதல்.
நாறு - நாற்று.
நானம் - கஸ்தூரி, புழுகு, வாச
நிகர் - ஒப்பு. [வெண்ணெய்.
நிகழ்த்தல் - சொல்லுதல்.
நிச்ச நிரப்பு - நித்திய தரித்திரம்.
நிணத்தல் - கட்டுதல்.
நிணம் - கொழுப்பு.
நிணர்தல் - பிணித்தல்.
நிணவை - பிணிப்பு, பின்னல்.
நிதிக்கிழவன் - குபேரன்.
நிம் - நும்.
நிமிடல் - நெருடல்.
நிமித்தி - நிமித்திகன்.
நியமவிஞ்சனம் - நியமிக்கப்பட்ட
நிரத்தல் - ஒத்தல். [உபகரணங்கள்.
நிரப்பம் - நிரம்புதல்.
நிரல் - வரிசை.
நிருமிதம் - நிருமிக்கப்பட்டது.
நிரை - வரிசை.
நிரைஇ - வரிசைப்படுத்தி.
நிலப்பெருந் தவிசு - நடைப் பாவா
நிலம் - இடம், தளம். [டை.
நிலைஇ - நிலைபெற்று.
நிலைப்பாடு - நிலைமை.
நிவத்தல் (நிவப்பு) - மேலெழுதல்.
நிழல் - ஒளி.
நிழலுமிழ் செல்வன் - சந்திரன்.
நிழற்றல் - நிழல் செய்தல்.
நிறம் - உயிர்நிலை, மார்பு, வர்ணம்.
நிறீஇ - நிறுத்தி.
நிறுத்தல் - சித்தாந்தம் செய்தல்.
நிறூஉம் - நிறுவும்.
நிறை - ஒப்பு, சால், மனத்தை
நிறைக்கோல் - தராசு. [நிறுத்தல்.
நிறைமை - நிறையின் தன்மை.
நினைஇ - நினைந்து.
நீஇர் - நீர்.
நீத்தம் (நீத்து) - நீந்துதல், வெள்
நீந்தல் - கடத்தல். [ளம்.
நீப்பிடம் - நீங்கும் இடம்.
நீப்பு - நீக்குதல், நீங்குதல்.
நீப்புறவு - நீங்குதல்.
நீயான் - மாலுமி.
நீர்த்தளி - தண்ணீர்ப்பந்தல்.
நீரணி - நீர் விளையாட்டுக்குரிய அலங்காரம். [மகளிர்.
நீரர மகளிர் - நீரில் வாழும் தெய்வ
நீராத்திரை - நீர்விழாவின்பொருட்டுச் செல்லுதல்.
நீருடை - நனைந்த ஆடை. [ஆடை.
நீலக்கட்டி - நீலநிறமுள்ள ஒருவகை
நீலக்காழ் - நீலமணியாலாகியகாம்பு.
நீலப்பருப்பம் - இந்திரநீல பர்வதம்.
நீலம் - ஒரு நிறம், நீலமணி, நீலோற்
நீளி - நீட்சி. [பலம்.
நீறு - சாம்பல், புழுதி.
நீனிறம் - நீல நிறம்.
நுகம் - பாரம், வண்டியின் ஓருறு
நுகர்ச்சி - அனுபவம். [ப்பு.
நுகுப்போலை - குருத்தோலை.
நுகும்பு - பனையோலை.
நுசுப்பு - இடை.
நுடக்கம் - துவட்சி. [வினர்.
நுண்டுறையாளர் - நுண்ணூலறி
நுண்ணோர் - நுண்ணறிவுடையோர். [ருள்.
நுணங்கு பொருள் - நுண்பொ
நுணங்குதல் - நுண்ணியதாதல்.
நுணுகல் - நுண்ணியதாதல்.
நுதலல் - கருதல், கூறுதல்.
நுதி - நுனி.
நும்மோய் - உன் தாய்.
நுன் - நின்.

நுனித்தல் (நுனிப்பு) - ஆராய்தல்.
நுனித்துரை மாந்தர் - கூரியதாக எடுத்துரைக்கும் மனிதர்கள்.
நுனை - நுனி.
நூக்கல் - செலுத்தல், தள்ளுதல்.
நூபுரம் - சிலம்பு.
நூல் நிணவை - நூற் பின்னல்.
நூலேந்திரம் - நூலாற்செய்த ஓர் அலங்காரப் பொருள்.
நூழிலாட்டல் - கொன்று குவித்தல்.
நூற்கிரந்தம் - புத்தகம்.
நூற்புரிப் பந்தம் - நூலினாற் கட்டிய கட்டு.
நூறல் - அழித்தல், கொல்லுதல்.
நூறு - பொடி.
நெஞ்சகம் - நடுவிடம், நெஞ்சம்.
நெடித்தல் - தாமதித்தல்.
நெடியவன் - திருமால்.
நெடுமொழி - புகழ்.
நெய்[3] - எண்ணெய், தேன்.
நெய்த்தோர் - இரத்தம்.
நெய்தல் - சாப்பறை, நெய்தற்பூ, நெய்தற்றிணை.
நெய்யாட்டு - எண்ணெய் விழவு.
நெருநல் - நேற்று.
நெற்றி - உச்சி.
நெறிமை - தன்மை.
நேமி - சக்கரம்.
நேமிவலவன் - சக்கரவர்த்தி.
நேயம் - நட்பு, நெய்ப்பு.
நேர்க்குநர் - எதிர்த்துப் பொருவோர்.
நேர்தல் - உடன்படல், ஒத்தல், நுணுகுதல்.
நேர்மை - நுண்மை.
நேரார் - பகைவர்.
நொசிதல் - துவளுதல்.
நொடி - பரிகாச மொழி.
நொடித்தல் - கையால் நொடித்தல்.
நொடிவனர் - சொல்லுபவர்.
நொதுமல் - அயல்.
நொய்ம்மை - கனமின்மை, நுண்மை.
நொவ்விதின் - விரைவில்.
நோற்றல் - தவம்புரிதல்.
நோன்மை - வன்மை.

பஃறகைவு - பல தையல்.
பகடு - எருது.
பகர்தல் - விற்றல்.
பகல் - நாள், முகூர்த்தம்.
பகலோன் - சூரியன்.
பகழி - அம்பு.
பகன்றை - சிவதைக் கொடி.
பங்கி - குடுமி.
பச்சை - தோல்.
பசப்பு - பசலை.
பசுங்கதிர் - இளஞ்சூரியன்.
பசும்பொற் பல் படை - பொன்னாலாகிய ஐம்படை.
பசைஇய - அன்பு பூண்ட.
பசைதல் - அன்பு வைத்தல்.
பஞ்சி - செம்பஞ்சுக்குழம்பு, பஞ்சு.
பட்டிகை - பத்திரிகை.
பட்டி நியமம் - ஆராயும் மண்டபம்.
பட்டிமாக்கள் - வாயடக்கமில்லாதார்.
பட்டிமை - வஞ்சனை.
பட்டினம் - கடற்கரை நகர்.
பட்டுச்சுவேகம் - பட்டாலாகிய உறை.
பட்டுரை - இரங்கற் சொற்கள், பண்டுள்ள உரை.
படப்பு - தோட்டக் கூறுகள்.
படப்பை - தோட்டம்.
படம் - ஆடை.
படர் - துன்பம், நினைத்தல்.
படர்தல் - செல்லுதல்.
படல் - மதிற்படல்.
படலம் - பரப்பு.
படலை - இலை மாலை.
படவம் - படகம்.
படாஅக் கொட்டில் - கூடாரம்.
படாகை - கொடி, பெருங்கொடி.
படாம் - போர்வை.
படாள் - இணங்காதவள்.
படி - தன்மை, பகை, பூமி, மெய்.
படிப்படை - கூலிப்படை.
படிமம் - தவவேடம், வடிவம்.
படிமை - பிரதிமை.
படிவம் - தவவேடம், விரதம்.
படிறு - வஞ்சகம்.
படு - படுகை, மடு.

படுகால் - படி, மேகலை.
படுத்தல் - பரப்பல்.
படுதல் - உண்டாதல், ஒலித்தல்.
படுமுறை - தண்டம்.
படை - ஆயுதம், கொல்லுதல், சேனை, படுக்கை.
படைத்தோன் - பிரமதேவன்.
படைப்பாடி - சேனைகள் தங்கியிருக்கும் இடம்.
படை வழக்கு - ஆயுதப்பிரயோகம்.
படைவீடு - சேனை தங்குமிடம்.
பண் - அலங்காரம், செப்பம்,ஜனகராகம்.
பண்டாரம் - களஞ்சியம்.
பண்டி - வண்டி.
பண்ணவர் - தவஞ்செய்வோர்.
பண்ணிகாரம் - காணிக்கை.
பண்ணுமை - பண்ணின் தன்மை.
பணதி - கதவின் உறுப்புக்களுள் ஒன்று.
பணி - கட்டளை.
பணித்தல் - தாழ்த்தல்.
பணை - பருமை, மூங்கில், வயல்.
பத்தல் - யாழின் உறுப்பு.
பத்தி - கீற்று, வரிசை.
பத்திரச் சுரிகை - உடைவாள்.
பத்திரச்சேதம் - இலைகளைப் பல உருவமாக நறுக்குதல்.
பத்திரம் - அழகு, இலை, வாள்.
பதம் - உணவு, காலம், நுகர்ச்சி, பக்குவம்.
பதர் - குற்றம்.
பதர்ச்சொல் - பயனற்ற சொல்.
பதலை - பத்தல்.
பதன் - செவ்வி.
பதுக்கை - கற்குவியல்.
பந்தம் - கட்டு, சந்தி.
பந்து - நீர்வீசு கருவிகளுள் ஒன்று.
பம்பை - ஒருவகை வாத்தியம்.
பயந்த - பயனளித்தன.
பயப்ப - பசப்ப.
பயப்பு - பயன்.
பயம் - நீர், பயன், பால், பிரயோசனம்.
பயம்பு - பள்ளம், வசம்பு.
பயமரம் - பழமரம்.
பயலை - பசலை.
பயவர் - பயனளிப்போர்.
பயிர் - அழைக்கும் ஒலி, ஒருவகைப் பறவை, பேச்சு.
பயிர்தல் - அழைத்தல், குறிப்பித்தல்.
பயிர்ப்பு - பயிலாத பொருட்கண் வந்த அருவருப்பு, மனங்கொள்ளாதிருக்குந் தன்மை.
பயிலுதல் - கற்று அடிப்படல்.
பயிற்றல் - கற்பித்தல், பலமுறை சொல்லல்.
பயின் - ஒருவகை மரம், பிசின்.
பரடு - கணுக்கால்.
பரப்பு - செண்டு வெளி.
பரல் - பருக்கைக்கல்.
பரவை - பரப்பு.
பரி - நடை.
பரிசாரக் கைவினை - சேடியர் செய்யுந் தொழில்.
பரிசனம்- ஏவலாளர்.
பரிசாரம் - வழிபடுதல்.
பரிதல் - அறுத்தல்.
பரியம் - பரிசம்.
பரியாளம் - பரிவாரம்.
பரிவு - வருத்தம்.
பரீஇ - பருத்தி.
பரீஇய - அறுத்த.
பருப்பம் = பருப்பதம் - மலை.
பருப்பு - பருமை.
பருமம் - சேணம்.
பருவரல் - துன்பம்.
பருவி - பருத்தி.
பல்லவர் - பலர்.
பலவு - பலாமரம்.
பலி - நிவேதனம்.
பவ்வம் - கடல்.
பவணம் - நாகலோகம்.
பவழ விழிகை- பவழத்தாற் செய்த கைச்சுரிகை.
பழனம் - மருதம், வயல்.
பழிச்சல் - துதித்தல்.
பழுக்காய் - பாக்கு.
பழுவம் - பரப்பு.
பழுனிய - பழுத்த.
பள்ளி - இடம், கோயில், படுக்கை.
பளிக்காய் - பச்சைக் கருப்பூரம் விரவிய பாக்கு.

பளிதம் - பாற்சோறு.
பற்கூட்டரத்தம் - தாம்பூலம்.
பற்றுமன்னர் - பகையரசர்.
பற்றூர் - பகைவர்.
பற்றியது - உட்கொண்டது.
பற்று - நீங்காத அன்பு.
பறவை - பறத்தல்.
பறி - ஒருவகைப் பெட்டி.
பறைதல் - தேய்தல்.
பன்னல் - ஆராய்தல், சுகிர்தல், பலமுறை கூறல்.
பன்னூறுயிரம் - பதினூறுயிரம்.
பனிச்சை - முன்னுச்சி மயிர்.
பனித்தல் - நடுங்குதல்.
பனுவல் - நூல்.
பாக்கம் - பக்கத்திலுள்ள இடங்கள், மலைப்பக்கத்திலுள்ள ஊர்.
பாகம் - பக்கம்.
பாக வெண்மதி - அங்குசம்.
பாகு - பகுதி, பாக்கு, பாகன், பிளவு, வெல்லப்பாகு.
பாசடை - பசிய இலை.
பாசண்டியர் - பாஷண்டியர்.
பாசத்தொடக்கு-கயிற்றூற்கட்டல்.
பாசப்பாண்டில் - கயிற்றிற் கோத்த வட்டக்காசு.
பாசம் - ஒருவகைப் போர்க்கருவி, கயிறு.
பாசுணம் - பக்கம்.
பாட்டு - ஓசை.
பாடகம் - ஒருவகைக் காலணி.
பாடலி - பாடலிபுத்திர நகரம்.
பாடி - பாசறை, வீதி.
பாடு - அத்தமித்தல், ஓசை, பெருமை.
பாடை - பாஷை.
பாண்டியம் - எருது. [காசு,வட்டம்.
பாண்டில் - கால்விளக்கு, வட்டக்
பாணி - காலம், கை, தாளம், தேரிலுள்ள கையென்னும் உறுப்பு.
பாத்தி - பகுத்த இடம்.
பாத பீடிகை-கால்வைக்கும் பீடம்.
பாம்புரி - மதிலின் புறத்தேயுள்ள ஆளோடி.
பாய்த்து (பாய்த்துள்)-பாய்தல்.
பாய - பரவிய.
பாயல் - படுக்கை.
பாயினன் - பரப்பினுன்.
பார் - பாறை, பூமி, வன்னிலம்.
பார்ப்பு - குஞ்சு.
பார்வல் - பார்வை.
பார்வை - பார்வை மிருகம்.
பாரம் - கவசம், கனம்.
பால் - ஊழ்வினை, பகுதி.
பாலிகை - முளையிடற்குரிய மண் பாத்திரம். [வெப்பம்.
பாலை - பாலைப்பண், பாலைவனம்,
பாவடி - பரவிய கால்கள்.
பாவை - ஆண் பிரதிமை,பிரதிமை.
பாவை விளக்கு - பிரதிமை கையிலமைந்ததாகச் செய்த விளக்கு.
பாழி - இடம், போர்க்களம், வலி.
பானு - சூரியன்.
பிக்கம் - பின்புறம்.
பிச்சம் - மயிற் பீலியாற் செய்யப்பட்ட ஒருவகை விருது.
பிசி - விடுகதை.
பிட்ட - பிளவுபட்ட.
பிடகை - பூந்தட்டு. [செடி.
பிடவம் (பிடவு) - பிடா வென்னும்
பிடிகை - ஒருவர்மட்டும் இருத்தற்குரிய பீடத்தையுடைய ஊர்தி, கைப்பிடி. [தொகுதி.
பிண்டம் - சோற்றுத் திரளை,
பிண்டி - அசோக மரம்.
பிண்டிகை - செம்பஞ்சியின் திரட்சி.
பிண்டி பாலம் - ஓராயுதம்.
பிணங்கல் - ஊடுதல், சிக்கல்.
பிணர் - சருச்சரை.
பிணவல்(பிணு) - பெண் விலங்கு.
பிணி - கட்டு, நோய், பூவிதழின் முறுக்கு.
பிணிவு - பிணித்தல்.
பிணை - பெண்மான்.
பிணைஇ - சேர்த்து. [ணைத்த மாலை.
பிணையல் - மலர்களை நெருக்கிப்பி
பித்திகம் (பித்திகை) - பிச்சி.
பித்தை - தலைமயிர்.
பிரசம் - தேன்.
பிரப்பு - குறுணியளவானபொருளைக் கொள்ளும் பாத்திரம்.

பில்கல் - துளித்தல்.
பிலிற்றல் - ஊறுதல்; ஒழுகுதல்.
பிழைப்பு - குற்றம், கேடு, தவறு.
பிளிற்றல் - முழங்குதல்.
பிறக்கு - பின்பு.
பிறங்கல் - குவியல்.
பிறவு - பிறத்தல்.
பின் - பின்னல்.
பின்றுதல் - பிற்படல்.
பின்றை - பிறகு.
பின்னிணைக்குமரர் - இரண்டு தம்பியர்.
பின்னு - பின்னல்.
பீடிகை - பீடம்.
பீதகப்பிண்டம் - பொன்னுடை.
புகர் - ஒரு நிறம், குற்றம்.
புகலல் - சொல்லுதல், மகிழ்தல், விரும்பல்.
புகவு - புகுதல்.
புகற்சி - விருப்பம்.
புகீஇ - புகுந்து.
புஞ்சம் - தொகுதி.
புட்டில் - கெச்சை.
புடைப்படை - சுற்றுப் படை.
புண்ணியப் புல் - தருப்பை.
புணர்ப்பு - கூட்டுதல், கூடுதல், சூழ்ச்சி.
புணர்வி - பொருந்தியவள்.
புணை - தெப்பம்.
புதல் - செடிகளின் அடர்த்தி.
புதவகம் (புதவு) - கதவு, வாயில்.
புதா - பெருநாரை, மரக்கால்நாரை.
புதுக்கோள் யானை - புதிதாகப் பிடிக்கப்பட்ட யானை.
புதை - அம்புக்கட்டு, உறை.
புதைஇ - புதைத்து, மறைத்து.
புதைத்தல் - பொத்துதல், மறைத்தல்.
புய்த்தல் - பிய்த்தல்.
புரக்கூட்டு - நகரத்திற் கூட்டுதல்.
புரந்தரகுமரன் - தேவகுமரன்.
புரி - கயிறு, நூல்.
புரிசை - மதில்.
புரிதல் - செய்தல், மிகுதல், விரும்புதல்.
புரிநூல் - பூணூல்.
புரிவு - அன்பு.
புரை - உயர்வு, குற்றம்.
புரைசை (புரோசை) - யானைக் கழுத்திற்கட்டும்கயிறு.
புரைமீன் - உச்ச நக்ஷத்திரம்.
புரையவை - உயர்ந்தோர் சபை.
புரையோர் - மேலோர்.
புரைவு - உயர்வு.
புல்லகம் - தலையணிகளுள் ஒன்று.
புல்லதர் - புல் நிறைந்த வழி, புல்லிய வழி.
புல்லார் - பகைவர்.
புல்லிதழ் - புறவிதழ்.
புல்லென் - பொலிவழிந்த.
புல்வாய் - மான்.
புல - புலவு நாற்றம்.
புலத்தல் - ஊடுதல், சினத்தல்.
புலப்பு - தனிமை, புலவி.
புலம் - அறிவு, இடம், இந்திரிய நுகர்பொருள்.
புலம்பு - தனிமை, வருத்தம்
புலமகள் - கலைமகள்.
புலர்த்தல் - உலர்த்துதல்.
புலர்தல் - விடிதல்.
புலவி - ஊடல்.
புழகு - மலை யெருக்கு.
புழல் - உட்டுளை.
புழுக்கல் (புழுக்கு) - புழுக்கிய உணவு, பொங்கல்.
புள் - நிமித்தம், பறவை, வாய்ச்சொல்.
புள்வீச்சு - பறவையின் ஒலி.
புள்ளம் - கொடுவாள்.
புளகத்தண்டம் - கண்ணுடி தைத்த கேடகம்.
புளகம் - கண்ணுடி.
புளிஞர் - வேடர்.
புறக்குடை - முதுகு.
புறங்கடை - முன்வாயில்.
புறப்பதுவாரம் - ஒருவகை மானியம்.
புறம் - முதுகு, வெளி.
புறம்பணைச்சேரி - புறநகரிலுள்ள சேரி.
புறம்பு - முதுகு.
புறவம் - புறு.
புறவடி - பாதத்தின் புறம்.
புறவு - சிறுகாடு, சோலை, புறு.
புன்கண் - துன்பம்.
புன்கு - ஒரு மரம்.
புன்சடை - சிவந்த சடை.

புன்புலம் - முல்லை நிலம்.
புன்னை - ஒரு மரம்.
புனற்படு நெருப்பு - வடவைத் தீ.
புனிறு - ஈன்றணிமை.
புனை - அலங்காரம், புனல்.
புனைதல் - அலங்கரித்தல்.
பூ - பொலிவு, மலர்.
பூக்.குறுதல் - மலர் பறித்தல்.
பூங்கழல் - பூத்தொழில் புனைந்த கழல்.
பூசல் - பேரொலி, போர்.
பூசனை - பூசை.
பூசனைக்களரி - பூசை செய்யும் கொட்டில்.
பூணி - ஒரு பறவை, வண்டியிற் பூட்டப்படும் விலங்கு.
பூதி - விபூதி.
பூம் பந்து - நீர்வீசு கருவிகளுள் ஒன்று, மலராகிய பந்து.
பூமகள் - திருமகள்.
பூவடர் - பூவிதழ்.
பூவை - நாகணவாய்ப்புள்.
பூழி - புழுதி, விபூதி.
பேட்டல் - விரும்பல்.
பெண்ணிலி - பெண் தன்மையில்லாதவள்.
பெண்ணை - பனை.
பெதும்பை - பெண்கள் பருவங்களில் இரண்டாவது.
பெய்வோர் - இடுவோர், வழங்குவோர்.
பெயர் - புகழ், பொருள்.
பெயர்ச்சி - நீங்குதல்.
பெயர்த்தும் - மீட்டும்.
பெயர்வரி வாசனை - பெயர்களின் வரிசையை வாசித்தல்.
பெருங்கணிச் சங்கம் - பெரிய சோதிடர்களின் கூட்டம்.
பெருங்கோ நங்கை - பட்டமகிஷி.
பெருஞ் செண்பகம் - செண்பக வகையில் ஒன்று.
பெருந்திசை - கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கென்பன.
பெருந்தேவி - பட்டமகிஷி.
பெருமான் - கணவன், தலைவன்.
பெற்றி - இயல்பு.
பெற்று - பெருக்கம்.
பேடாய் - பேடையே.
பேணார் - பகைவர்.
பேதை - மகளிர் பருவத்தில் முதலாவது.
பேய்த்தேர் - கானல்.
பேர்தல் - நீங்குதல்.
பேரணி - பெரிய அலங்காரம்.
பேரியாழ் - ஒருவகை யாழ்.
பேரெழுத்தோலை - பெயரை எழுதிய ஓலை.
பேழ்வாய் - ஆழமான வாய்.
பேழை - பெட்டி.
பை - படம்.
பைதல் - துன்பம்.
பைந்தளிர் - வெற்றிலை.
பைந்து - பந்து.
பைய - மெல்ல.
பையாத்தல் - துன்பமுறல்.
பையுள் - துன்பம்.
பையென - மெல்ல.
போக்கம் - பொய்.
பொக்கரணி - புஷ்கரிணி.
பொங்கல் - துள்ளுதல், பெருகுதல்.
பொச்சாப்பு - சோர்வு, பொல்லாங்கு.
பொடித்தல் - துளித்தல்.
பொத்தகம் - புத்தகம்.
பொத்தகை - துளையையுடைய கை.
பொத்தல் - மறைத்தல், மூட்டல்.
பொத்து - பொந்து.
பொதி - சுமை, பொதிந்த பொருள், மலரும் பருவத்திலுள்ள மொட்டு.
பொதியறை - வாயிலில்லாத அறை.
பொதியில் - பொதிய மலை.
பொதும்பர் (பொதும்பு) - சோலை, மரச் செறிவு.
பொதுளல் - பொருந்தல்.
பொம்மல் - மிகுதி.
பொய்கைக் குட்டம் - பொய்கையாகிய ஆழ்ந்த நீர் நிலை.
பொய்தல் - விளையாட்டு.
பொய்ந் நிலம் - உள்ளே வெறுவிதாக வைத்து மேலே நிலம் போலத் தோற்றும்படி மூடி வைத்த இடம்.
பொய்ந்நொடி - கட்டுக்கதை.

பொரு - ஒப்பு.
பொருக்கென - விரைவாக.
பொருந்தாமன்னர் - பகையரசர்.
பொருள் - காரியம், செல்வம், தருமம். [பொன்னாலாகிய பாத்திரம்.
பொலங்கலம் - பொன்னுபரணம்,
பொலம்புள் - சிரல்.
பொலிமை - பொலிவு.
பொழில் - சோலை, பூமி.
பொள்ளல் - துவாரம்.
பொற்குறு சுண்ணம் - பொன் முதலியவற்றை இடித்த சுண்ணம்.
பொற்கொடி - ஓரணி.
பொற்புரி - பொன்னூல்.
பொற்பு - பொலிவு.
பொறி - அடையாளம், இந்திரியம், இலச்சினை, உத்தம இலக்கணம், எந்திரம், எழுத்து, ஒளி, புள்ளி, விலங்குகளை அகப்படுத்தும் கருவி.
பொறை - சிறுகுவடு, பொறுமை.
பொறைமை - பொறுத்தற்றன்மை.
பொறையுயிர்த்தல் - பெறுதல்.
பொன் - தங்கம், திருமகள், பொ
பொன்னாண்-பொற்கொடி. [லிவு.
பொன்மாசை - உழுந்தளவுள்ள ஒருவகைப் பொற்காசு.
பொன்றல் - அழிதல்.
பொன்னகர் - அமராவதி.
பொன்னடர் - பொற்றகடு.
போக்கல் - இல்லாமற் செய்தல்.
போகக் கலப்பை-நுகரும் பொருள்களின் தொகுதி.
போக பூமி - புண்ணியப் பயன்களை நுகரும் உலகம்.
போகம் - இன்பம், நுகர்ச்சி.
போகிய புகழ் - பரவிய புகழ்.
போகுகொடி - நீண்ட கொடி.
போத்து - பறவை விலங்கு இவற்
போதகம் - யானை. [றின் ஆண்.
போதம் - அறிவு. [ஒருறுப்பு.
போதி (போதிகை) -கட்டிடத்தின்
போந்து (போந்தை) - பனை.
போர் - போர்வை.
போர்ப்புளகம் - இரட்டைக் கண்ணாடி.
போர்ப்பெருங் கதவு - இரட்டைக்
போழ் - தகடு, பிளப்பு. [கதவு.
போழ்வை - பிளப்பு.
போற்றாமாக்கள் - பகைவர்.
போனகம் - உணவு.
பௌவம் - கடல்.
மக - குழந்தை.
மகட்கிளை - மருகன்.
மகட்கொடை - கன்னிகாதானம்.
மகடூஉ - பெண்.
மகரகுண்டலம் - சுறாமீன் வடிவமான ஒருவகைக் காதணி.
மகரம் - சுறாமீன், தோளணி.
மகரவாய்-ஒருவகைக் கால்விரலணி.
மகர வீணை - ஒருவகை வீணை.
மகரிகை - மகரவடிவமாகச் செயப்பட்ட பெட்டி. [ஒன்று.
மகன்றில் - நீர்வாழ் பறவைகளில்
மகனெனன் - மகனாக உள்ளேன்.
மகாஅர் - குழந்தைகள்.
மகாஅர் மருந்தாளர் - குழந்தையின் பொருட்டுத் தாம் மருந்துண்ணுந் தாய்மார்.
மகிழ் - கள், கள்ளையுண்ட களிப்பு, மகிழ்ச்சி, மகிழமரம்.
மங்கலக்கருவி - யாழ்.
மங்கலப்புல் - அறுகம்புல்.
மங்கலம் - நற்காரியங்கள், நன்மை.
மங்கலவயினி - ஆலத்தி.
மங்கல வேள்வி - மணம்.
மஞ்சிகை - ஒருவகைப் பெட்டி.
மஞ்சு - மேகம்.
மட்டம் - நேர்மை.
மட்டித்தல் - குழைத்தல்.
மட்டு - கள், தேன்.
மட்டூண் - கட்குடி.
மடவியன்-அறியாதவன்.
மடவை - பேதை.
மடி - ஆடை, ஓலைச்சுருள்.
மடிந்தோர் - சோம்புதலுற்றோர்.
மடியுறை - பிறழ்ச்சியை யுறுத்தும் விம்மிதம்.

மடை - உணவு, மூட்டுவாய்.
மடைத்த - பொருந்திய.[தொழில்.
மடைத்தொழில் - சமைக்கும்
மடையர் - சமையற்காரர்.
மண் - உலகம், கோபி முதலியன, மார்ச்சனை.
மண் கூட்டாளன் - குயவன்.
மண்டப வெழினி - கூடாரம்.[லல்.
மண்டல் - நெருங்கல், மேற்செல்
மண்டலம் (மண்டிலம்) - வட்டம்.
மண்ணல் - ஸ்நானம் செய்தல்.
மண்ணுதல் - பண்ணுதல்.
மண்ணுநீர் - அபிடேக ஜலம்.
மண்ணுமணி - சாணையிட்ட மாணி
மணத்தல் - கலத்தல். [க்கம்.
மணி - அழகு, ஒலிக்கும் மணி, கருவிழி, சமவசரணம், நீலமணி, பளிங்கு, மாணிக்கம்.
மணிச்சை - ஒரு மரம்.
மணிநிறப் பறவை - வண்டு.
மணிப்பன்னகை - முத்தவடம்.
மணை - ஆசனப் பலகை.
மத்தகம் - தலை, யானையின் தலை.
மத்தம் - மதம்.
மத்திகை - சாட்டை.
மதர் - கதிர்ப்பு, மயக்கம்.
மதர்வை-மயக்கம். [தூண், பிள்ளை.
மதலை - குழந்தை, கொடுங்கை,
மதி - பூர்ணசந்திரன், பிறை,புத்தி.
மதிப்பாகு - பிறை.
மதிரம் - ஒருவகைக் கள்.
மதுகம் இருப்பை மரத்தி ள்.
மதுகை - வலி.
மதுரம் - இனிமை.
மந்தணம் - இரகசியம்.
மந்தமா மலை - மந்தரமலை.
மந்திர ஓலை - இரகசியச் செய்தி எழுதிய ஓலை, செய்திகளை எழுதும் ஓலை.
மந்திரக்கோட்டி - ஆலோசனை செய்யும் கூட்டம், அக்கூட்டம் கூடும் இடம்.
மந்திரச்சாலை - மந்திரங்களை உருவேற்றும் இடம்.
மந்திரச் சூழ்ச்சி - இரகசிய ஆலோசனை.
மந்திரத் துணைவர் - மந்திரிகள்.
மந்திரம் - ஆலோசனை, இரகசியம்.
மந்திர மகளிர் - தெய்வ மகளிர்.
மந்திரமாக்கள் (மந்திரமாந்தர்) - மந்திரிகள்.
மந்திர மாடம் - இரகசியங்களைப் பேசுவதற்கு இடமான மாளிகை.
மந்திர வாய்ப்பு - மந்திர சித்தி.
மம்மர் - மயக்கம்.
மயங்கல் - கலத்தல்.
மயரிவனள் - மயங்குபவள்.
மயர்வு - மயக்கம்.
மயன் - அசுரத்தச்சன். [கேடகம்.
மயிர் வட்டம் - மயிராற் செய்த
மயிர்வினைச் சிப்பம் - மயிருக்குச் செய்யும் அலங்காரத் தொழில்.
மயிலை - இருவாட்சி.
மரக்காற் கூத்தர் - மரத்தாற் செய்யப்பட்ட கால்களின் மேலே நின்று ஆடும் கூத்தர். [யானை.
மரக்கூட்டியானை-மரத்தாற் செய்த
மரப்பொதும்பு - மரங்கள் செறிந்த
மரபுளி - முறைப்படி. [இடம்.
மரம் - மரப்புணை.
மரல் - பாலை நிலத்திற்குரிய ஒரு
மரா - ஒரு மரம். [மரம்.
மருங்கு - இடை, குலம், பக்கம்.
மருட்கை - வியப்பு.
மருட்டல் - மயங்கச்செய்தல்.[பண்.
மருதம் - மருதத்திணை, மருதப்
மருது - ஒரு மரம். [மூலிகை.
மருந்து - அமிர்தம், ஔஷதம்,
மருப்பியலூர்தி - தந்தச் சிவிகை.
மருப்பு - யானைக் கொம்பு, விலங்குகளின் கொம்பு.
மருப்புக்கை - யானைத் துதிக்கை.
மருளி - மயக்கம்.
மரையா - ஒருவகை விலங்கு.
மல்லம் - பள்ளியறை.
மல்லர் - உடம்பைப் பிடித்துவிடுவோர், மல் யுத்தம் புரிவோர்.
மல்லல் - வளம்.

மலிதல் (மலிர்தல்) - நிறைதல்.
மலைக்குநர் - எதிர்ப்போர்.
மலைதல் - அணிதல், பொருதல், மாறுபடல், மேற்கொள்ளல்.
மலையரண் - மூவகை அரண்களுள் ஒன்று.
மழலை - இளமை, மழலைச்சொல்.
மழுக்கல் - மங்கச்செய்தல்.
மழுகல் (மழுங்கல்)-மங்கல். [வீரர்.
மள்ளர் - இளைய வினைஞர், பள்ளர்,
மறமாச்சேனன் - பிரச்சோதனன்.
மறலல் - ஊசலை யாட்டுதல், மாறுபடுதல்.
மறவர் - ஒரு சாதியார், வீரர்.
மறவோன் - பிரச்சோதனன்.
மறி - குட்டி.
மறித்தும் - மறுபடியும்.
மறு - களங்கம், வடு.
மறுகல் - சுழலல், வருந்தல்.
மறுகு (மறுகை)-குறுந்தெரு, வீதி.
மறுத்தும் - மீட்டும்.
மறுதரவு - மீளுதல்.
மறுமனம் - வேறு கருத்து.
மறுமொழி - விடை. [தம்.
மறை - இரகசியம், மந்திரம், வே
மறையோலை - இரகசியச் செய்திகளை யெழுதிய திருமுகம்.
மன்றம்-சபை, மரத்தினடியிற் பலர் கூடும் இடம்.
மன்றல் - கல்யாணம், நறுமணம்.
மன்னகுமரன் - அரசகுமரன்.[த்தி.
மன்னருண் மன்னன் - சக்கரவர்
மனக்கோள் - உள்ளக் கருத்து.
மனமுண - மனம் பொருந்த.
மனோசிலை - மருந்திற்குரியதொரு பொருள். [வண்டு, விலங்கு.
மா - குதிரை, பெருமை, மாமரம்,
மாசனம் - மகா ஜனங்கள்.
மாசில் கற்பு - அறக்கற்பு.
மாஷை - உழுந்தளவுள்ள ஒருவகைப் பொன் நாணயம்,பொன்.
மாஞ்சி - ஒரு மருந்துப் பொருள்.
மாட்டல் - ஏற்றுதல், மாளச்செய்தல், மூட்டல்.

மாடச் சிவிகை - மாடம் போன்று அமைத்த பல்லக்கு.
மாடம் - கோயில், மாளிகை.
மாடியம் - கவசம்.
மாடு - பக்கம், பெருமை, பொன்.
மாணி - பிரமசாரி, மாணக்கன்.
மாத்திரம் - அளவு.
மாத்திரை - ஒருவகைக் காதணி, ஒருவகை மருந்து, ஒலியின்
மாதங்கம் - யானை. [அளவு.
மாதர் - விருப்பம்.
மாதிரம் - ஆகாயம், திசை.
மாநிதிக் கிழவன் - குபேரன்.
மாமாத்தியர் - பேரமைச்சர்.
மாமை - மகளிர்பாலுள்ள அழகு
மாயம் - பொய். [பயக்கும் நிறம்.
மாயிகாஞ்சனம் - கபட வித்தை.
மாயை - வஞ்சனை.
மாயோள் - அழகியவள், மாமைநிற
மார்வன் - மார்பன். [முடையோள்.
மாராட்டம் - மகாராஷ்டிர தேசம்.
மாரோடம் - செங்கருங்காலி.
மாலையணி நகை - முத்து மாலை.
மாலையாமம் - முதல் யாமம்.
மாழ்கல் - மயங்கல், வருந்தல்.
மாழாத்தல் - மயங்கல்.[க்கு,மாவடு.
மாழை - ஒருவகைமான், செரு
மாற்றம் - கூற்று, தருக்கம், விடை.
மாற்றவர் - பகைவர்.
மாற்றுபகாரம் - பிரதியுபகாரம்.
மாற்று மொழி - சனங்களினதிரளை விலக்குதற்குரிய சொற்கள், வெவ்வேறான பாஷை.
மாற்றுரை - விடை.
மாறு - பகைமை, வேறு, வேறுபாடு,
மான் - குதிரை, மானென்னும்
மானவர் - மனிதர். [விலங்கு.
மானவன் - பெருமையையுடை
மிச்சில் - எஞ்சியது. [யோன்.
மிஞிறு - ஒருவகை வண்டு.
மிதிதோல் - துருத்தி.
மிலைச்சர் - ஒருவகை வீரர்.
மிலைச்சல் - அணிதல்.
மிளிர்தல் - பிறழ்தல்.

மிளை - காட்டரண், காவற்காடு.
மீக்கூரல் - மேம்படல். [படுதல்.
மீக்கூறல் - மேலாகச் சொல்லப்
மீக்கோள் - போர்வை, மேலாடை.
மீளி - பெருமை.
முக்குழிக்கூட்டம் - மூன்று வகையான அக்கினிகளுக்குரிய குண்டங்களின் சேர்க்கை.
முக்கூட்டமிர்து - தாம்பூலம்.
முக்கூட்டரத்தம் - பாக்கு வெற்றிலை சுண்ணும்பு என்னும் மூன்றும் கூடுதலால் உண்டாகும் செம்மை நிறம்.
முகஞ்செய்தல் - தோன்றுதல்.
முகம் - முன்னிலை.
முகம்பெறுதல் - காணப்பெறுதல்.
முகிழ்ப்பு - அரும்பு.
முகைந்த - அரும்பிய.
முசு - குரங்கில் ஒரு சாதி.
முசுண்டை - முசுட்டைக் கொடி.
முஞ்ஞை - முன்னையென்னும் மரம்.
முட்டம் - முட்டாயிருக்கும் இடம்.
முட்டிகைச்சேரி - குயச்சேரி, கொல்லர் சேரி.
முட்டிணை வட்டு - ஒன்றையொன்று சேர்த்துள்ள இரட்டை வட்டு; நீர்வீசு கருவி.
முட்டு - குறைவு, முட்டான இடம்.
முடிக்குரல் - கூந்தற் கொத்து.
முடுக்கு - வளைந்த இடம்.
முத்த வள்ளி - முத்துக்கோத்த கொடிபோல்வதோர் அணி.
முத்துக்காழ் - முத்துமாலை.
முதல் - அடி; இடம், காரணம், முதன்மை.
முதலறவு - முதலற்றுப் போதல்.
முதிர்வை - முதிர்ந்தது.
முதுகண் - பாதுகாப்பாக இருக்கும் முதியவர்.
முந்தை - முன்பு.
முந்நீர் - கடல், கடு நெல்லி தான்றி என்னும் மூன்றும் ஊறிய நீர்.
மும்மணி - புருடராகம் வைடூரியம் கோமேதகமென்பன.
முயக்கம் - தழுவுதல்.
முரம்பு - பருக்கைக் கல்லையுடைய நிலம்.
முரவு - முரசு.
முரற்சி - வண்டின் ஒலி.
முரிதல் (முரிவு) - வளைதல்.
முருங்கல் - அழிதல்.
முருடு - ஒருவகைத் தோற்கருவி.
முழீஇ - முழுவி; முத்தாடி.
முழுத்தம் - முகூர்த்தம்.
முள்கல் - அழுந்தல்.
முள்குவநர் - முழுகுவோர்.
முள்ளி - ஒரு மரம்.
முளரி - விறகு.
முளவு - முள், முள்ளிமரம், முள் முருங்கை.
முற்றல் - சூழ்தல்.
முற்றித்தல் - முடித்தல்.
முறைவர் - பாகர்,
முன்னம் - குறிப்பு.
முன்னீர் - கடல்.
முன்னுறு கிளவி - குறிப்பு மொழி.
முன்னையர் - பழையவர், முன்னுள்ள தன்மையினர்.
முனது - முன்பு, வெறுமல்.
முனை - போர்.
முனைவர் - முதல்வர்.
மூசல் - மொய்த்தல்.
மூய - மூடிய.
மூர்த்தம் - முகூர்த்தம்.
மூரிக்கொள்ளல், (மூரிநிமிர்தல்) - சோம்பு முறித்தல்.
மூவகையோகம் - திரியோக மருந்து.
மூழ்த்தனர் - சுற்றினர்.
மேச்சார் - பகைவர்.
மெய்க்கோள் மள்ளர் - மெய்காப்பாளர்.
மெய்த்தது - உண்மையானது.
மேடகம் - ஆட்டுக் கிடாய்.
மேதை - அறிவு.
மேலை - முன்பு.
மேன்மலை - அத்தகிரி.
மை - அஞ்சனம், குற்றம், மேகம்.
மைத்துன மங்கை - மணஞ்செய்தற்குரியவள்.
மைத்துன மன்னன் - விளையாடுதற்குரிய அரசகுமரன்.

மைத்துன மைந்தர் - பரிகாச மொழிகளைக் கூறுவோர்.
மொக்குள் - கொப்புளம்.
மொசிதல் - மொய்த்தல்.
மோடு - உடம்பு.
மோய் - தாய்.
மௌவல் - செம்முல்லை.
யவனம் - ஒரு தேசம்.
யாத்தல் - கட்டுதல், செய்தல்.
யாப்பிலாளர் - மனப்பொருத்தம் இல்லாதவர். [பொருத்தம்.
யாப்பு - கட்டு, தொடர்பு, பற்று,
யாப்புறுத்தல் - பொருத்துதல்.
யாமக்கோட்டம் இரவில் மகளிருடன் இன்புறும் இடம்.
யாமங்காவலர் - இராக்காவலர்.
யாவதும் - சிறிதும்.
யானைவாரி - யானை கட்டும் இடம்.
யானைவித்தகர்-யானைநூலறிந்தவர்.
யூகந்தராயணன் (யூகந்தராயன்) -
யூகம் - கருங்குரங்கு. [யூகி.
யோகம் - மருந்து.
யோசனை - ஒரு நீட்டலளவை.
வகீஇய - வகுத்தற்கு.
வகுந்து - வழி.
வகையுளி - வகையாக.
வங்கம் - கப்பல், வங்காளம்.
வச்சிரவண்ணன் - குபேரன்.
வஞ்சகாந்தை - ஓராறு.
வஞ்சப்பூமி - பொய்ந்நிலம். [அணை.
வட்டணை - வட்டம், வட்டமாகிய
வட்டம் - ஆடை, மண்டிலம், வட்டமான இடம், வடிவங்களில் ஒரு வகை.
வட்டி - ஒருவகைப் பெட்டி,தாலம்.
வட்டிகை - எழுதுகோல், சித்திரம், பரிசில்.
வட்டிணை - இரட்டை வட்டுக்களை யுடையதொரு கருவி.
வட்டித்தல் - குழைத்தல்.
வட்டு - ஒருவகை ஆயுதம், நீர்வீசு கருவிகளுள் ஒன்று.
வட்டுடை - வீரர் முழந்தாளளவாக உடுக்கும் உடை, சல்லடம்.
வடகம் - மேற்போர்வை.
வடம் - நூல், முத்துமாலை. [வளி.
வடி - அழகு, மாவடுவின் பிளப்பு,
வடித்தல் - பயிற்றல், வடியச் செய்
வடிமை - வடிவம். [தல்.
வண்டல் - மகளிர் விளையாட்டு, மகளிர் விளையாடிடம்.
வண்ணமகடூஉ (வண்ணமகள்) - அலங்காரம் செய்யும் பெண்.
வண்ணிகை - மருந்திற்குரிய ஒரு விதப் பொருள்.
வணர்தல் - வளைதல்.
வதி - வழி.
வம் - வாரும்.
வம்பப் படம் - புதிய படம்.
வம்பலர் - அயலார், புதியவர்,வழிச் செல்வார்.
வம்பு - கச்சு, புதுமை, நறுமணம்.
வயந்தக் கிழவன் - மன்மதன்
வயவர் - வீரர்.
வயவன் - மரங்கொத்திப் பறவை.
வயவு - வலி, விருப்பம்.
வயிர் - கொம்பு.
வயிரச்சாத்து - வயிர வியாபாரம் செய்யும் வாணிகர் திரள்.
வரம் - மேன்மை, தவப்பயன்.
வரன்றி - வாரிக்கொண்டு.
வரித்தல் - கோலஞ்செய்தல்.
வரிமான் - புலி.
வருக்கை - பலா.
வருட்டல் - வயமாக்கல்.
வரைப்பகம் - எல்லை.
வரைப்பு - எல்லை, எழுதுதல்.
வரைவு - அளவிடல்.
வல்சி - உணவு.
வல்லி - கொடி.
வல்லியம் - வல்லபம்.
வல்வில் - ஒரே சமயத்தில் பல இலக்குக்களைத் தொளைக்கும் அம்பையுடைய வில்.
வலத்தல் - கட்டுதல், சூழ்தல்.
வலவன் - தேர்ப்பாகன்.
வலி - பற்றுக்கோடு.
வலிக்க - வன்மையை யடைக.

வலிக்கல் (வலித்தல்) - துணிதல்.
வலிமின் - இழுமின்.
வலீஇ - நினைந்து.
வழக்கியல் - மரபு.
வழக்கு - நடத்தல், வழங்குதல்,
வழாமை - பிழையாமை. [விவாதம்.
வழிநாள் - மறுநாள்.
வழிப்பெருந் தேவி - பட்டமகிஷிக்குப் பின் மணந்த தேவி.
வழிமொழி - பணிந்த மொழி, வழிபாடு கூறும் சொல்.
வழியடை - பின்னுரிமை.
வழை - சுரபுன்னை.
வள்ளம் - ஒருவகைப் பாத்திரம்.
வள்ளற்றனம் - வள்ளன்மை.
வள்ளி - ஒரு கிழங்கு, கொடி.
வள்ளிப்போர்வை - கொடிகளின் வடிவமெழுதிய போர்வை.
வள் - கூர்மை, வளப்பம்.
வள்ளுவன் - நிமித்தங் கூறுவோன், முரசறைவோன்.
வள்ளை - உலக்கைப் பாட்டு, நீர்வாழ் கொடியுள் ஒன்று.
வள்பு - வார். [அளவளாவுகை.
வளப்பாடு - மிக்க மகிழ்வுடன்
வளவு - இருப்பிடம்.
வளாய் - விரவி.
வளை - குகை, கைவளை, சங்கு, தோள்வளை.
வளையம்-ஒருவகைக் கால் விரலணி, பாராவளைய மென்னும் படை.
வற்றல் - காய்ந்த மரம், வற்றுதல்.
வறண்மரம் - ஒருவகை மரம்,
வறப்பு - வறுமை. [காய்ந்த மரம்.
வன்புறை - வற்புறுத்துபவன்.
வனம் - அழகு, காடு.
வாக்கு - திருத்தம், பேச்சு.
வாகு - தோள், வகை.
வாங்கல் - நீக்கல், வளைதல்.
வாசத்திரை - வாசனைப்பொருள் கலந்த வெற்றிலை.
வாசம் - முகவாசம், வாசனை.
வாசவெள்ளை - வாசனைச் சந்தனம்.
வாசனை - வாசித்தல்.

வாசி வாணிகம் - குதிரை வியாபா
வாசு - நீர். [ரம்.
வாதிகர் - வாசனைப் பொருள்களைக் கூட்டுவோர்.
வாய் - உண்மை, சமயம், புகுமிடம்.
வாய்ப்பு - சித்தி.
வாய்ப்புள் - நிமித்தமாகிய சொல்.
வாய்மை - சத்தியம், மந்திரம்.
வாரம் - அன்பு, பக்ஷபாதம்.
வாரி - கடல், செண்டுவெளி, யானையை அகப்படுத்துமிடம், வருவாய்.
வாவல் - தாவுதல், வௌவால்.
வானோர் கிழவன் - இந்திரன்.
விச்சை - கல்வி.
விச்சை மன்னன் - வித்தியாதர
விசையம் - வெற்றி. [அரசன்.
விசைத்தல் - விசையாகச் செல்லு
விசைப்புள் - கருடன். [தல், வீசுதல்.
விஞ்சம் - விந்த மலை.
விஞ்சனம் - உபகரணம்.
விஞ்சை - மந்திரம், வித்தை. [ளிர்.
விஞ்சை மகளிர் - வித்தியாதர மக
விட்டேறு - இகழ்ந்து கூறும் சொல். [வன்.
விடலை - தலைவன், பாலைநிலத் தலை
விடை - விடுத்தல்.
விண்டல் - மூங்கில்.
வித்தகம் - ஓவியம் சிற்பம் முதலிய நுண்கலைத் திறமை, விவேகம். [கள்.
வித்தகர் - நுண்கலைஞர், விவேகி
விதவை - பாற்சோறு.
விதியுளி - முறைப்படி.
விதிர்த்தல் - தெறித்தல்.
விதிர்ப்பு - நடுக்கம்.
விதுப்பு - நடுக்கம், விரைவு.
விம்மம் (ப்ரமம்) - இரங்குதல், மயக்கம், விம்முதல்.
விம்மல் - அரற்றல், பொருமல்,
விம்மாந்து - பொருமி. [வருந்தல்.
விரற்சுற்று - கால்விரலணி வகையுள் ஒன்று.
விராய் மலர் - ஒருவகை மலர்.

விரீஇய - விரித்த.
விருத்தி - ஆசனம், ஜீவிதம்.
விருத்துக்கோயில் - புதிய அரண்மனை.
விரைஇ - விரவி, விரைந்து.
விரைவதின் - விரைவில்.
விரைவிரியாளர் - கந்தப்பொடிக்காரர்.
வில்லேப்பாடு - அம்புவீழும் எல்லை.
வில்லேருழவர் - வில்வீரர்.
விலக்கு - ஒருவகைப் பாட்டு.
விலங்கல் - தடுத்தல், மாறுபடல், விளங்கல்.
விலங்கறுத்தல் - குறுக்கிடுபவைகளை நீக்குதல்.
விலாவணை - அழுகை.
விலைச்சேரி - வணிகர் தெரு.
விழாவாத்திரை - நீர்விழாவின்பொருட்டுப் புறப்படுதல்.
விழிப்பு - இமைப்பொழுது.
விழுக்கு - மூளை.
விழுப்பம் - சிறப்பு.
விழுமம் - துன்பம்.
விள்ளல் - கூறல், நீங்கல்
விளி - ஓசை.
விளித்தல் - பாடுதல்.
விளையுள் - விளைவு.
விற்பூட்டு - சுத்திரிகைகளின் உருவங்களில் ஒன்று.
விற்பொருள் நன்னூல் - தனுர்வேதம்.
விறப்பு - மிகுதி.
விறல் - சத்துவம், வலி, வீரம்.
வினை - கைத்தொழில், பாவம்.
வினைவர், வினைவலர் - தொழில் செய்வோர்.
வீக்கம் - பெருமை, மிகுதி.
வீச்சு - பறவையின் ஒலி, வீசுதல்.
வீடு - தேற்றாமரம், படைவீடு, மோட்சம்.
வீதி - செலவு, தெரு.
வீரியம் - நிலவளம், வன்மை, வீரம்.
வீளை - சீழ்க்கை.
வீற்றிருத்தல் - கவலையின்றி யிருத்தல்.
வீறு - வன்மை, வேறு, வேறொன்றற்கில்லாத சிறப்பு.
வெஃகு - விருப்பம்.
வெகுட்சி - வெகுளி.
வெகுட்டல் - வெகுளச் செய்தல்.
வெகுர்முகம் - பஹிர்முகம்; வெளிமுகம்.
வெடிபடல் - ஒலியுண்டாதல், தோற்றமிகல்.
வெண்மலை - வெள்ளி மலை.
வெதிர், வெதிரம் - சிறு மூங்கில்.
வெய்துறல் - வருந்துதல்.
வெய்யோன் - சூரியன், விரும்பத்தக்கவன்.
வெருளி - வெருளுதல்.
வெள்ளி-ஓர்உலோகம், வெண்மை.
வெள்ளில் - விளாமரம்.
வெள்ளேடு - எழுதாத ஓலை.
வெள்ளை - அறிவின்மை, வெண்மைநிறம்.
வெள்ளைமை - பேதைமை.
வெற்றம் - வெற்றி.
வெறுமை - அறியாமை.
வென் - வெற்றி.
வேஎண்ம் - விரும்பும்.
வேகப்புள் - கருடன்.
வேகம் - கோபம், விரைவு.
வேட்டம் - விருப்பம், வேட்டை.
வேதி (வேதிகை) - திண்ணை, மேடை.
வேம்பு - வெறுப்பு.
வேமானியர் - விமானத்திற் சஞ்சரிக்கும் தேவர்.
வேயுள் - வேய்ந்த இடம்.
வேர்வு - சினம்.
வேலி - எல்லை, காப்பு; முள்வேலி.
வேவு - வேதல்.
வேற்றவர் - பகைவர்.
வேறல் - வெல்லுதல்.
வேறிடை - தனித்த இடம்.
வேனல் - வெம்மை.
வைகிய தாலை - விடிந்தபொழுது.
வையம் - தேர், பூமி, வண்டி, வாகனம், விமானம்.

Kesari Printing Works, Madras.

21006